# இரண்டாவது மலர்

## 1

வசுந்தரா தன் அறையிலிருந்த அழகு மேஜையை ஒட்டிய ஆளுயரக் கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தாள்.

பனிச்சென்று சூரியன் புறப்பட்டு சிறிது நேரம்தான் சென்றிருந்தது. வழக்கம்போல நேரத்திலே எழுந்து குளித்து முடித்துவிட்டு வெளியே செல்ல ஆயத்தமாகிய படி தன் அலங்காரத்தைக் கண்ணாடியில் சரிபார்த்துக் கொண்டிருந்தாள்.

நாற்பது வயதைத் தாண்டியவள் என்று யாரும் கண்டு கொள்ள முடியாததொரு தோற்றம்.

கண்களின் கடை ஓரங்களில்கூட லேசாகத் திரை விழாது இளமைப் பொலிவு சிறிதும் அழியாத முகம். கச்சிதமான உடல் கட்டு. சாயம் தேவைப்படாத கருத்த அடர்ந்த கருண்ட கூந்தல். அவளது தாய் வழி பாரம்பரியமாக வந்த சொத்து.

Vennila

சிறிது நாக்கி நின்றார் போன்ற முகவாயில் தெரிந்த ஆணவத்தையும் கோடிபெறுமான சொத்துக்களையும் தந்தை அவளுக்குவிட்டு போயிருந்தார் என்பது ஊர் அறிந்த உண்மை.

கஞ்சியில் விறைத்து—பெட்டி போடப்பட்ட வங்கா ளத்து நூல் சேலையின் மாராப்பை இழுத்து முந்தா னையை ஒழுங்கு செய்து கொண்டாள்.

நெற்றியில் பளிச்சிட்ட குங்குமப்பொட்டை இடது கை மோதிர விரல் நகத்தால் சரிசெய்து கொண்டாள்.

லேசான ஒப்பனையில் பொலிவுடன் தெரிந்த தன் முகத்தை இன்னொரு தடவை நன்றாகப் பார்த்துக் கொண்டாள்.

தொழிற்சாலைக்கும்—அலுவலகத்து மேற்பார்வைக் கும் அவள் அன்றாடம் சாதாரண நூல் சேலையைத் தான் உடுத்திச் செல்வது வழக்கம். திருமணம்—புது மனை புகுவிழா போன்ற வைபவங்களில் கலந்து கொள்ளச் செல்லும்போது காஞ்சீபுரப்பட்டு சேலையை அணிந்து கொண்டு செல்வாள்.

ஆனால் வங்கியில் லாக்கரில் பல ஆண்டுகளாக உறங்கிக் கொண்டிருக்கும் வைர நகைகளை வாரித் தன் மீது போட்டுக்கொண்டு போவதை நிறுத்தி எத்த னையோ காலமாகி விட்டது.

கழுத்தில் தங்கத் தாலிச்சரடும்—காதில் சிறு வைரத் தோடும் வலது கையில் இரண்டு தங்க வளையல்களும் இடது கையில் கடிகாரமும்தான் அவளது நித்தியப்படி ஆபரணங்கள்.

ஆனாலும் அவள் முகத்தில்தான் எத்தனைப் பணக் காரக்களை. பரம்பரை பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளாச்சே... அந்த துடுக்கு மறைந்து போகாதே, பேச்சில் எத்தனை அழுத்தம்? எத்தனை அதிகாரம்?...



மாடியில் அவளது அறைக்கதவு திறக்கப்படும் ஓசை கேட்டதும் பங்களாவிலிருந்த அத்தனை ஆட்களும் எப்படி அடங்கி ஒடுங்கிப் போனார்கள்!

தன்னால் தனியே எல்லாவற்றையும் சமாளிக்க முடியும் என்ற துணிவுடன் அவள் நிமிர்ந்து நடந்தாள்—யாருக்கும் அஞ்சாத ஒரு துணிவு நெஞ்சு முழுவதும் நிறைந்திருந்தது...

முதல் நாள் இரவே அவள் மனதில் மறுநாள் கவனிக்க வேண்டியவை பற்றி ஒரு அட்டவணை உருவாகிவிடும்.

அலாரம் கடிகாரம் தேவையில்லை அவளுக்கு. குறித்த நேரத்தில் எழுந்துவிடுவாள். அவர்கள் வீட்டில் அப்பா இருந்த காலத்திலிருந்து தொடர்ந்த பழக்கங்கள் பல இன்னமும் அமுலில் இருந்தன.

அவளது தந்தைக்கு தமது வியாபாரத்தை கவனிக் கவே பொழுது இருக்கவில்லை. ஆனாலும் தெய்வ பக்தி நிறைந்தவர் என்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்வதில் ஒரு ஆசை. திருச்சியில் அவர்கள் வசித்த காலத்தில் அவர்களது வீட்டில் ஒரு பெரிய பூஜையறை இருந்தது. அதில் எல்லாத் தெய்வப் படங்களும் தேக்குச் சட்டத்தில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

நாள் பூராவும் எரிந்த பெரிய இரண்டு வெண்கல குத்துவிளக்குகள் இடையே சலவைக்கல் பீடத்திலே விநாயக பெருமான் சிலை வடிவில் வீற்றிருந்தார்.

தினசரி படங்களைத் துடைத்து—சந்தனகுங்குமப் பொட்டு வைத்து கூடை நிறைய குவியலாக வேலை யாள் கொண்டு வந்து வாயிற்படியருகே வைத்து விட்டுப் போகும் மலர் சரங்களை எடுத்து அணிவித்து—அர்ச்சனை செய்து— சமையல் ஆள் பய்யமுடன் கொண்டு வந்து வைக்கும் பாலை நிவேதனம் செய்து

Vennila

வீட்டு கற்பூரத் தட்டுடன் வீட்டு எஜமானருக்காக காத்துக்கொண்டு நிற்க ஒரு அர்ச்சகர் அமர்த்தப் பட்டிருந்தார்.

மாடியிலிருந்து அப்பா இறங்கி வந்ததும் நேரே பூஜை அறைக்குத்தான் செல்வார். அர்ச்சகர் கற்பூர ஜோதியைக் காட்டியதும் தெய்வப் படங்களை வணங்கி —ஜோதியைக் கும்பிட்டு திருநீற்றை வாங்கி நெற்றியில் அப்பிக்கொள்வார். பின்னர் காப்பி பலகாரம்—அதற்குப் பின்னர் வியாபாரத்தை கவனிக்க வெளிப்புறப்பாடு...

அந்தப் பழக்கத்திலே வளர்க்கப்பட்டவள் அப்பாவின் ஒரே மகளான வசுந்தரா.

இங்கே பட்டணத்திலும் அவளது பங்களாவில் ஒரு பெரிய பூஜையறை இருந்தது.

அதே விநாயகர் சிலை-விளக்குகள்-தெய்வப்படங்கள்-ஆனால் தரையும் சுவர்களும் சலவைக் கற்களால் இழைக்கப்பட்டு... பார்க்க மிக அழகாக இருந்தது. நித்திய பூஜைக்கு அவளும் ஒரு அர்ச்சகரை சம்பளத்திற்கு அமர்த்தியிருந்தாள். திருச்சி அர்ச்சகரைப் போல கரகரத்த குரலில் அவர் ஓங்கி கத்தி பூஜை செய்யவில்லை... வசுந்தராவுக்கு அதிக ஓசை பிடிக்காத சங்கதி. நாளின் பெரும் பகுதியை தொழிற்சாலையின் சத்தத்திலும்-அலுவலகத்து டைப் இயந்திரங்களின் ஓசையிலும்-கழித்துவிட்டு வீடு திரும்புவதாலோ என்னவோ வீட்டில் அவள் அமைதியைப் பெரிதும் விரும்பினாள். அவளது பிரியமான அல்சேசன் நாய் மகி அதிக சத்தத்துடன் குரைத்தால்கூட கோபம் கொண்டு அடக்குவாள்.

அதனால் அவர்கள் வீட்டு பூஜையறையில் அர்ச்சகர்... மெல்லப் பொழியும் மழை ஜன்னல் கண்ணாடியைத் தட்டுவதுபோன்று சன்னமான குரலில் அர்ச்சனை செய்து முடித்து விட்டு அம்மாவின் வரவிற்காக அமைதியாகக் காத்துக்கொண்டிருந்தார்.



படுக்கையருகே கிடந்த மேஜை மேல் வைத்திருந்த தனது தோள்பையை எடுத்துக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள் வசுந்தரா.

அந்தப் பைக்குள் அவள் படிக்க உபயோகிக்கும் கண்ணாடிக் கூண்டு. தேவைப்பட்ட சில்லரைகள் கொண்டதொரு சிறு மணிபர்ஸ், பேனா, பென்சில்-கைகுட்டைகள், இடைவேளையின்போது முகம் கழுவித் தன்னை சீராக்கிக் கொள்ள சோப்பு-சீப்பு-பவுடர் காம்பாக்ட்-உதட்டுச் சாயம்... இத்தியாதிகள் கொண்டதொரு பூப்போட்ட அழகான சிறிய பிளாஸ்டிக் பை... அவளுடைய அன்றாட அலுவல்களைப் பற்றிய குறிப்புகள், முக்கியமான தொலைபேசி எண்கள் கொண்டதொரு டைரி... காலை பத்துமணி அளவில் அவள் தேநீருக்குப் பதில் பழரசத்துடன் சாப்பிடும் வைட்டமின் மாத்திரைகள் கொண்ட சிறுடப்பா முதலியன இருந்தன.

இரவு படுக்கப்போகுமுன்— அவள் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, தவறி விட்டுப் போனதை எடுத்து வைத்துவிட்டுதான் உறங்கச் செல்வது வழக்கம்...

அடடா! வைட்டமின் மாத்திரை டப்பாவை வீட்டில் வைத்துவிட்டு மறந்து வந்திருக்கிறேனே... கைகுட்டைகளை மறந்து விட்டேனே... என்று ஆதங்கப்பட சந்தர்ப்பமே அவள் ஏற்படுத்தியதில்லை.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும்... ஒழுங்கானதொரு கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வாழத் தெரிந்தவள்.

தொழிற்சாலையிலிருந்து வீட்டுக் காரியங்கள்வரை எல்லாம் ஒழுங்காக எண்ணையிட்ட யந்திரமாக தங்குதடையின்றி நடக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பவள்.

மெல்ல ஓசைப்படாது அறைக்கதவைத் திறந்து வெளியே வந்தாள். அடுத்த அறையின் மூடியிருந்த கதவை மெல்ல விரல்களால் தட்டினாள்.

Vennila

அம்மா! தயாராகிட்டேன்... என்றதொரு குரல் இனிமையாக உள்ளேயிருந்து ஒலித்தது.

கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே சென்றாள் வசுந்தரா.

அன்று தன் மகள் சம்யுக்தாவுடன் அவள் தங்களது தொழிற்சாலைக்குப் போவது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பரீட்சை முடிந்ததும் நிம்மதியாகத் தன் அறையில் கை விரல் நகங்களைக் கடித்துக்கொண்டு நாவல் புத்தகங்களுடன் படுக்கையில் சாய்ந்து கொண்டு பொழுதைக் கழிக்க விரும்பிய மகளுக்கு அதிர்ச்சியைத் தந்தாள் தாய்.

முதல் நாள் இரவு சாப்பாட்டின் போதே வசுந்தரா சொல்லிவிட்டாள்.

"பி.ஏ. பரீட்சை முடிவடைந்து விட்டது. அதன் விளைவு என்ன என்று தெரிய நீ வீட்டோடு தங்கியிருக்கத் தேவையில்லை..."

"தனியா நான் இருப்பேன்னு கவலைப்படுறீங்களா அம்மா... கூட துணைக்கு ரத்னா இருக்காங்களே?"

வசுந்தரா குழந்தையாக இருந்த போது வீட்டில் வேலைக்காரியாக சேர்ந்தவள் ரத்னா. இன்னமும் அந்த வீட்டவர்களுடனேயே ஒட்டிக் கொண்டிருக்கிறவள், ஆரம்ப நாளில் அடுக்களையில் உதவியாளாக அமர்ந்திருந்தவள்... படிப்படியாக வேலை உயர்ந்து குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் ஆயாவாக மாறி... இப்போது வீட்டின் எல்லா வேலைகளையும் மேற்பார்வை செய்யும் ஹவுஸ் கீப்பர் தகுதியை எட்டி விட்டிருக்கிறவள். அத்துடன் வயசுப் பெண் சம்யுக்தா கல்லூரியிலிருந்து திரும்பியதும்... கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டவள்.



"மேஜராகிவிட்ட பெண் நீ. மேலும் படிச்சவள். உன்னையே நீ காத்துக்கொள்ள தெரிஞ்சுகொண்டிருப்பே - துணையைப்பத்தி நான் நினைக்கலை...உன் பிற்காலத்தைப் பத்திதான் எனது இப்போதைய அக்கறை!"

"அதைப்பத்தி இப்போ ஏன் கவலைப்படணும் அம்மா ?"

"உன் வயசிலே அப்பா எனக்குக் கொடுத்த பயிற்சியாலத்தான் இப்போ என்னால இந்த தொழிற்சாலை—அலுவலகம்—வீடு எல்லாத்தையும் நிர்வகிக்க முடிகிறது...அதனால உனக்கு நான் நாளையிலிருந்து பயிற்சி தரப்போரேன்...!"

"அம்மா!" முனகினாள் சம்யுக்தா...

"சோம்பேறித்தனம் எனக்குப் பிடிக்காத சங்கதி, தெரியுமில்லையா? நாளை காலையில் ஆறு மணிக்கே நீ எழுந்து தயாராகிடணும். மாக்ஸி, கஃப்த்தான்... பாண்ட் சட்டை.. சூரிதார், குர்த்தா இதுகளையெல்லாம் வீட்டில் வச்சுக்கோ...ஆபிசுக்குப் புடவை கட்டிக் கொண்டு...வரணும்-எளிமையா உடுத்திகிட்டு வரணும். வெய்யல் கொளுத்தரது அதனாலே நூல்சேலையை உடுத்திக்கோ...கண்களை அறையராப்பல கலர் புடவைகளை அலுவலகத்துக்கு உடுத்தக்கூடாது ..இதமான வண்ணத்தில் சேலையும்—லேசான ஒப்பனையுமா வரணும். தொழிலாளிகளும் அலுவலக ஊழியர்களும் பார்த்தால் உன்னைத் தங்கள் பிற்காலத்து யஜமானியாக மதிக்கிறாப்போல கவுரவமா நடந்துக்கணும்... அசட்டு சிரிப்பு அனாவசிய பேச்சு எதுவும் கூடாது... தெரியுமா?" படபடத்தாள் அன்னை.

தலையை ஆட்டினாள் சம்யுக்தா—நினைவு தெரிந்த நாளிலிருந்து அவள் தன் தாயின் ஆதிக்கத்தில்தான் வளர்ந்தவள்.

"தயாராட்டியா?" கேட்டபடி உள்ளே நுழைந்தவள் மகளை ஏற இறங்கப் பார்த்தாள்.

Vennila

இதயத்து நரம்பினை யாரோ சுண்டி, இழுப்பது போன்ற வேதனை கலந்ததொரு இன்ப உணர்வு நெஞ்சை நிறைப்பதை உணர்ந்தாள். சம்யுக்தா உயரமான ஒடிசலான தோற்றமுடைய பெண். ரோஜா வண்ண வாயல் புடவையில் அவள் இன்னமும் கொஞ்சம் உயரமாக வளர்ந்து விட்டது போன்று, தோட்டத்து சுவர் ஓரமாக வளர்ந்து நிற்கும் ரோஜாச் செடியில் மலர்ந்து நிற்கும் கொத்துப் பூவில்ஒன்று... தென்றலுடன் மெல்ல அசைவது போன்று—மிக அழகாகத் தெரிந்தாள்.

பெற்றவளுக்கு உள்ளூர மகா திருப்திதான்.

நல்ல வேளை—தோற்றத்தில் மகள் அந்த மனிதனைக் கொள்ளாது...அந்த மனிதன் என்பவர் அவளது கழுத்தில் மூன்று முடிச்சுகள் போட்ட அப்பாவி...அவரை எண்ணி அடிக்கடி பெருமூச்சுடன் பற்களைக் கடிப்பாள் அவள்...

மகள் தன் சாயலைக்கொண்டு வளர்ந்து நிற்பதைப் பார்த்து மனதிற்குள் பூரித்துப் போனாள்.

குணத்தில் எங்கேயாவது அவரைக்கொண்டு விடப் போகிறாளே என்று உள்ளூர ஒரு துளி கவலை அவளுக்கு எப்பொழுதும் இருந்தது.

அதை மாற்றவா முடியாது? கொட்டி கொட்டி புழுவைக்கூட குளவியாக்கிவிட முடியும் என்பார்களே... அவளது ஆலோசனையில்...இன்னும் கொஞ்ச நாளில் சம்யுக்தா அம்மாவின் மகளாகிவிட மாட்டாளா என்ன?

மகளுடன் கீழே இறங்கி வந்தாள். அர்ச்சகர் தீபாராதனை காட்டி தட்டை அவர்கள் முன் நீட்டினார்.

கற்பூர ஜோதியை அம்மா வணங்கிய பின் மகள் தொட்டு கண்களில் ஒத்திக்கொண்டாள்.



வழக்கமாகத் தமக்குக் கிடைக்கும் பிரசாதப் பொருள்களை துணிப்பையில் திணித்துக் கொண்டு அர்ச்சகர் பெரியதொரு கும்பிடு போட்டுவிட்டு கிளம்பினார்.

சாப்பாட்டறையில் வந்து இருவரும் உட்கார்ந்து கொண்டனர். அங்கேகூட கடுமையானதொரு கட்டுப்பாடு அனுசரிக்கப்பட்டது.

வசுந்தரா உட்காரும் நாற்காலியில் மகள் கூட தப்பி தவறி உட்கார்ந்து விடக்கூடாது. அவளது தட்டு, தேநீர் கோப்பை-தம்ளர் எல்லாம் தனியானவை-வேறு யாருக்கும் தவறிப்போய் சமையல் ஆள் வைத்துவிடக் கூடாது.

சமையற்கார குப்புசாமி இட்லி-சட்னி-சாம்பார் பாத்திரங்களை மரத்தட்டில் சுமந்துகொண்டு விரைவாக வந்தார்.

கடைக்கண்ணால் அவரை கவனமாகப் பார்த்தாள் வசுந்தரா.

அவர் சமையலறையில் அரைக்கை பனியனும்-மடித்துக் கட்டப்பட்ட கரிக்கறைபடிந்த வேட்டியுமாக அலங்கோலமாக இருந்தால்கூட அவள் அக்கறை கொண்டதில்லை.

ஆனால் உணவைப் பரிமாறும் போது பளிச்சென்று சுத்தமான வெள்ளைச் சட்டையும் வேட்டியுமான அலங்காரத்திலே இருக்க வேண்டும். கை நகங்களில் அழுக்கும் கரியுமாக வந்து நிற்கக்கூடாது... அப்படியொரு கண்டிப்பான உத்திரவு.

சூடான இட்லிகளை வைத்து... நெய்யை ஊற்றி... சாம்பார் கிண்ணங்களை அருகில் நகர்த்தி வைத்து—சட்னியை அளவோடு பரிமாறினார் அவர்.

"ரெண்டு போதும்னு நான் சொல்லியிருக்கிறப்போ மூணு இட்லி வச்சிருக்கீங்களே? எதுக்கு...?" வசுந்தரா அதட்டினாள்.

Vennila

ரொம்ப சின்னதா வாத்துட்டேன். அம்மாவுக்கு. சீக்கிரம் பசிக்குமேன்னுட்டு—'' மென்று விழுங்கினார் குப்புசாமி.

''என் வீட்டு சாப்பாட்டை எனக்கு உபகாரம் செய்து போடத்தேவையில்லை. சொன்னதை செய் யும்...'' என்றபடி அதிகமான அந்த ஒரு இட்லியை எடுத்து மகளது தட்டில் போட்டாள். ''சம்யுதாவுக்கும் இரண்டு போதும்... உடம்பை கச்சிதமாக வச்சுக்கணும். ளர்பட்டதைத் தின்னுட்டு பருத்துப் போகக்கூடாது ..''

அவள் சொன்னபடியே செய்துவிட்டு—காப்பியை மிதமான சூட்டில் ஆற்றி எடுத்துவர அவர் அடுக் களைக்குச் சென்றுவிட்டார்.

''வீட்டு வேலையாட்கள் அனைவரையும்...விரட்டி யடித்துக் கடுமையாகப் பேசி வேலை வாங்கும் இந்த அம்மா தொழிற்சாலையில் எப்படி தொழிலாளிகளை நடத்தறாங்க...?'' எண்ணியபடி இட்லியைப் பிட்டு சாம்பாரில் தோய்த்து விழுங்கினாள் சம்யுக்தா...

யாரும் அருகில் இல்லாதபோது அம்மாவிடம் அதைச் சொல்ல வேண்டுமென்றதொரு துடிப்பு ஏற் பட்டது...

''அம்மா போன ஞாயிற்றுக்கிழமை என்னைப் பார்க்க இங்கே என் கல்லூரி தோழி ஒருத்தி வந்தாளே, நினைவிருக்கா?''

''ஒட்டடைக்குச்சு போல ஒரு கருத்த பெண் வந் தாளே, அவளைத்தானே சொல்கிறே?''

''அவள் என்னிடம் பேச்சுவாக்கிலே அன்னிக்கு கேட்ட ஒரு கேள்வி என் மனசை உறுத்திக்கிட்டே யிருக்கம்மா.''

''என்ன கேட்டாள்...?'' அதட்டினாள் வசுந்தரா.

"உன் அப்பா உங்களோட இல்லேன்னு கேள்விப் பட்டேன் உண்மையான்னு கேட்டா...''



''நீ என்ன சொன்னே?''

''அவர் இருக்கிற இடமே எங்களுக்குத் தெரியாது. கோவிச்சுகிட்டு வீட்டை விட்டு அவர் வெளியே போய் பல ஆண்டுகளாச்சுன்னு சொன்னேன்.''

''அவசியம் அவளுக்கு நம்ப வீட்டு சங்கதி தெரிஞ் சாகணுமா? இந்த மாதிரி வம்பிகளோட சிநேகிதம் உனக்குத் தேவையில்லைன்னு நான் எச்சரிச்சிருக் கேனே மறந்து போச்சா?''

''அம்மா வந்து...''

''வந்துமில்லை–போயுமில்லை... இந்த வீட்டுக் குள்ளே கல்லூரித் தோழின்னு உறவு வச்சுகிட்டு யாரும் இனி நுழையக்கூடாது தெரிஞ்சுக்கோ!''

''அம்மா!...''

''சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு என்னோட கிளம்பற வழியைப் பாரு!'' என்று தாய் அதட்டியபோது...சம்யுக் தாவின் நெஞ்சை அழுகை அழுத்தியது...

'இந்த அம்மாவுக்கு அன்பாக– இதமாதப் பேசவே தெரியாதா? எப்பொழுதும் அதட்டி உருட்டி–மிரட்டித் தான் பேசணுமா?''

அம்மாவுக்குத் தெரியாது. அவள் ஒளித்து வைத்துக் கொண்டிருந்த அப்பாவின் புகைப்படம் கொண்ட மணிபர்சினை... மார்பு ரவிக்கையின் இடையே மெல்லத் தடவிப் பார்த்தாள்.

நான் இருக்கேன் பயப்படாதே... என்று காதருகில் அப்பா கிசுகிசுப்பது போன்றதொரு பிரமை...

ஆமாம், அவள் அப்பாவை வாழ்க்கையில் சந்திக் கவே மாட்டாளா?...

கண்களில் திரையிட்ட கண்ணீரைக் காப்பியுடன் வேகமாக விழுங்கினாள்.

Vennila

# 2

கோடை சூரியன் கோபத்துடன் எரிச்சலை காலை வேளையிலேயே காட்டத் துவங்கிவிட்டிருந்தது.

நடைபாதையில் மக்கள் பெருமூச்சு விட்டபடி முகத்தில் வழிந்த வியர்வையைத் துவாலையாலும் கைகுட்டையாலும் துடைத்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தனர்.

பச்சை வண்ண பென்ஸ் காரின்பின் ஆசனத்தில் தாயும் மகளும் அமர்ந்திருந்தனர். இருவரும் மவுனமாக அவரவரின் சிந்தனைக்குள் ஆழ்ந்துவிட்டிருந்தனர். இயல்பாகவே வசுந்தரா காரில் சவாரி செய்யும்போது டிரைவர் காதுபட எதுவும் பேசமாட்டாள்.

சாலையில் வழுக்கிக்கொண்டு போன காரின் உள்ளே குளிர்சாதனம் குளுமையைக் கொட்டிக் கொண்டிருந்த போதிலும் சம்யுக்தா மனதில் ஒரே எரிச்சல்.

நாய்க்குட்டியின் கழுத்தில் சங்கிலியைப் பிணைத்து அதைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு போவது போல... அம்மா அவளை இப்போது வியாபாரப் பயிற்சிக்கு தள்ளிக் கொண்டு போகிறாள். வயதில் மேஜராகி விட்ட ஒரு பெண்ணுக்கு விருப்பு வெறுப்பு என்ற உணர்வுகள் ஏதும் இருக்காதா?...

வசுந்தரா என்றுமே மகளிடம் மனம்விட்டுப் பேசியவள் அல்ல. வீட்டிலே கத்தி கூச்சல்போட்டு அதிகாரம் தூள்பறக்க ஆர்ப்பாட்டம் செய்தவள்... தன் தொழிற்சாலையில் மிகவும் மாறுபட்டவளாகத்தான் நடந்து கொண்டாள். இரும்பு போன்ற கண்டிப்புதான்—



ஆனால் அதில் கரும்பு போன்ற பேச்சு... லேசான புன்னகை... மெல்லிய தலையாட்டல் இத்யாதிகள்.

அப்பப்பா... அம்மா பெரிய ராஜதந்திரி... அவளுக்குத் தெரியும் தொழிலாளிகளின் நல்லெண்ணந்தான் அவளது வியாபாரத்தின் வளர்ச்சிக்கு அடிகால்.

அம்மாவுடன் அரைமணி நேரம்கூட உட்கார்ந்து பேச வாய்ப்பு இல்லாவிடினும்... அம்மாவின் சில நடப்புகளிலிருந்து சம்யுக்தா தன் தாயை ஓரளவு புரிந்து கொண்டிருந்தாள்.

திருச்சியில் கட்டடப்பொருள்கள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தாத்தா சேனாபதி காலமானதும் அம்மா, திருச்சியிலிருந்த வீட்டையும் வியாபாரத்தையும் விற்றுவிட்டு சென்னைக்குக் குடிபெயர்ந்தாள். அப்போது சம்யுக்தாவுக்கு ஏழு வயது.

தாத்தா காலமாவதற்கு சில நாட்களுக்கு முன் வீட்டை விட்டுப் போன அப்பா திரும்பவே இல்லை.

'அப்பா ஏன் ஊரிலிருந்து வரலை...?' என்று அவள் பன்னிப் பன்னி கேட்டதற்கு, அம்மாவிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. மகளைப் பார்வையால் சுட்டு அந்த கேள்விக்கே இடம் இல்லாது செய்துவிட்டாள் தாய். கேட்கக் கூடாத ஒரு கேள்வியைக்கேட்டு விட்டோமோ என்று பயந்துபோன சிறுமி... அதற்குப் பின்னர் அப்பாவைப்பற்றி வாயைத் திறக்கவில்லை...

ஆனால் மனம் அவரை நினைத்துப் புலம்பியதும்... இரவில் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து அப்பா அருகில் இல்லாததை அறிந்த போது ஏற்பட்டதொரு ஏக்கமும்—நடுக்கமும் பற்றி இன்றுவரை தாய் அறிய மாட்டாள்...

உறவினர்களும் – நண்பர்களும் – தெரிந்தவர்களும் வசுந்தரா வியாபாரத்தை மாற்றிக்கொண்டு சென்னைக்கு வந்து குடியேறியதைப்பற்றி அதிசயப்பட்ட



Vennila

ளர். இது நல்லதில்லை... அழிவு காலம் வந்து விட்டது...
அதனால்தான் இப்படி ஒரு முட்டாள் காரியத்தை செய்
கிறாள் என்று சிலர் வெளிப்படையாகப் பேசினர்.
வசுந்தரா எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.
யாருடைய யோசனையையும் ஏற்கவில்லை... அவளாக
எடுத்த முடிவு அது.

அம்பத்தூரின் தொழிற் பேட்டையிலிருந்த பார்வதி
எலக்ட்ரிக்கல்ஸ் என்ற மின்விசை துணைபொருள் உற்
பத்தி தொழிற்சாலை... சரிந்துகொண்டு போகிறது
கழுத்து மட்டும் கடனில் தத்தளிக்கிறது என்று கேள்விப்
பட்டு தரகர் மூலம் அதை விலைபேசத் தொடங்கினாள்.

'பைத்தியக்காரத்தனம். ஊரைவிட்டு ஊர் கிளம்பி
ஒரு ஓட்டைத் தொழிற்சாலையை விலைக்கு வாங்க
வேண்டிய அவசியமே இல்லை. இங்கேயே நாம் வேறு
ஒரு புது தொழிலை ஆரம்பித்துக் கொள்ளலாமே?'

அப்பாவின் காரியதரிசியாக இருந்தவர்... அவ
ளுக்கும் ஆலோசனை வழங்கும் அந்தரங்க செயலாள
ராகப் பணி புரிந்து கொண்டிருந்த சாம்பசிவம் எத்த
னையோ சொல்லியும் அவள் கேட்கவில்லை.

ஆழம் தெரியாத இடத்தில் காலை வைத்தால் அது
நம்மையும் கூட இழுத்துக்கொண்டு போய்விடும்.!
குடும்ப வக்கீல் கோதண்டம் சொல்லியும் கேட்க
வில்லை.

அவளுக்கு அந்த தொழிற்சாலையின் பெயர் மிகவும்
பிடித்திருந்தது. பார்வதி அவளது தந்தைவழி பாட்டி.
அவள் தொட்டதெல்லாம் பொன்னாகும் என்ற ராசி
யினைப் பெற்றிருந்ததாகப் பெருமையாகப் பேசப்
பட்டவர்...

சென்னைக்குச் சென்று ஒரு தொழிலை ஆரம்பித்து
ஓகோ என்று வாழ வேண்டுமென்ற வீம்பு அவளுக்கு...
அப்பா விட்டுப் போன பணம் வங்கியில் கனத்துக்
கொண்டிருந்தது.



'பார்வதி எலக்ட்ரிகல்ஸ்' என்பதை அவள் அத
னுடைய கடன்–லாபம்—என்ற எல்லாவற்றுடன் கூட
இருந்த பல தலைவலிகளுடன் வாங்கிக் கொண்டாள்...
அதேபோல அண்ணாநகர் பத்தாவது அவென்யூவிலிருந்த
வீட்டையும் வாங்கி முழுவதும் இடித்துத் தள்ளி தன்
மனதிற்கு உகந்தபடி மிகவும் நாகரீகமாகப் பல வசதி
களுடன் ஒரு பெரிய பங்களாவைக் கட்டிக் கொண்டு
விட்டிருந்தாள்.

தன் குடும்பத்துடன்...புதிய வீட்டில் குடியேறினாள்.
தன்னந்தனியாக அந்த புதிய தொழிற்சாலையை
நடத்த முன்வந்தாள்... கடனில் மூழ்கிக் கொண்டிருந்த
'பார்வதி எலக்ட்ரிகல்ஸ்' ஒரு சில ஆண்டில்.. மளமள
வென்று முன்னேறி விட்டது... தொழிலாளிகளிடமும்...
தொழில் வட்டாரத்திலும் அவளுக்கு ஒரு தனி மதிப்பு
தானாகவே வளர்ந்து விட்டது.

சுபாவத்திலேயே கர்வம் பிடித்தவள். இப்பொழுது
கேட்கவேண்டுமா?...

அகம்பாவத்தின் சிகரத்திலே அழுத்தலாக அமர்ந்து
கொண்டிருந்தாள்.

சம்யுக்தாவை அவள் தாய் அதிகம் வெளியில் தன்
னுடன் அழைத்துக் கொண்டு செல்லும் பழக்கம்
கிடையாது.

படிக்கும் காலத்தில் தாயுடன் கூட பல இடங்
களுக்குப் போய் வர மகளுக்கு பொழுது இருந்ததே
இல்லை.

காலையில் எழுந்ததும்... டென்னிஸ் பயிற்சி...
பின்னர் பள்ளிக்கூடம். மாலையில் வீடு திரும்பியதும்...
ஒருநாள் கணக்கு டியூஷன்—அடுத்த நாள் பிரஞ்சு
மொழிக்கு டியூஷன்... வாரத்திற்கு இருமுறை வீணை
பயிற்சி என்று விடிந்ததிலிருந்து இரவு படுக்கப்போகும்
வரை சம்யுக்தாவுக்கு பொழுது படிப்பிலேயே கழிந்து
கொண்டிருந்தது.

Vennila

தாய்க்குத் தன் மகளை ஒரு சகலகலா வல்லியாக்க வேண்டுமென்ற ஆர்வம். ஆனால் சம்யுக்தாவுக்கு வீணை-டென்னிஸ் முதலியவற்றைக் கற்றுக்கொள்ள நாட்டம் இருக்கவில்லை... சங்கீதத்தை ரசிக்க மட்டுமே தான் அவள் விரும்பினாள்—மற்றவர்கள் டென்னிஸ் விளையாடுவதைக் கண்டுகளிக்கத்தான் ஆசைப்பட்டாள். அவை எதிலும் தான் பங்குகொள்ள விரும்பவில்லை.

"உன் வயதில் நான் மேடையில் வீணை கச்சேரிகள் செய்திருக்கிறேன்... என் தாயார்—பாட்டி அவங்க அம்மா எல்லாருக்குமே சங்கீதம் பரம்பரை சொத்து..." என்று கூறிவிட்டு வசுந்தரா பற்களைக் கடித்தாள். மேலே என்ன சொல்ல வந்தாள் என்பதை சம்யுக்தாவால் நன்றாக ஊகிக்க முடிந்தது.

"உன் அப்பா சங்கீதம் என்றால் வீசை என்ன விலை என்று கேட்பார்... நீ சில சங்கதிகளில் உன் அப்பனைக் கொண்டிருக்கிறாய்."

அம்மா தன்னுள்ளே கோபத்தில் பொங்கிக்கொண்டு முனகுவது அவளுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

ஒரே ஒரு முறைதான் சம்யுக்தா அம்மாவுடன் தங்களது தொழிற்சாலைக்குச் சென்றிருக்கிறாள்.

ஆயுதபூஜையை தொழிலாளிகள் சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். அன்று வீட்டு வேலைகளின் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்த ரத்னாவுக்குக் காய்ச்சல். இருமலும்—தலை நோவுமாக அவள் முனகிக் கொண்டு தன் அறைக்குள்ளே முடங்கிக் கிடந்தாள்.

சமையல் ஆளையும்—வீட்டு வேலைக்காரியையும் நம்பித் தன் இளம் பெண்ணை வீட்டில் தனியே விட்டுக் கிளம்ப வசுந்தராவுக்கு விருப்பம் இருக்கவில்லை.



வேறு வழியின்றி மகளைத் தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தாள்.

"அங்கே வந்து அசட்டுத்தனமாக யாருடனும் பேசி சிரித்துக்கொண்டிருக்கக் கூடாது. நான் உட்காரச் சொன்ன இடத்தை விட்டு நகரக் கூடாது"—முன்னதாகவே எச்சரித்து விட்டிருந்தாள் தாய்.

அப்பொழுது சம்யுக்தா பள்ளி மாணவி. அந்த வயதுக்கேற்ற கூச்சமான சுபாவம்.

தொழிற்சாலையின் முன்னால் பசுமையாகப் பரவிக் கிடந்த புல் தரையில் போடப்பட்டிருந்த நாற்காலிகளின் முன் வரிசையில் ஒன்றில் அம்மா காட்டிய இடத்தில் அசையாது அமர்ந்து கொண்டாள்.

"இந்தாங்க அவல் பொரிகடலை...!" என்று ஒரு தொழிலாளி கூடைக்குள்ளிருந்த பொட்டலம் ஒன்றை அவளிடம் கொடுத்தபோது அவள் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டாள்.

"கூல்டிரிங் சாப்பிடுங்க!" என்று உபசரித்தபடி ஒரு குளிர்பான பாட்டிலில் உறிஞ்சு ஸ்ட்ராவைச் சொருகிக் கொண்டு வந்து இன்னொருவர் கொடுத்தபோது—அதை பயத்துடன் பெற்றுக் கொண்டாள்.

யந்திரங்களுக்கு தூபம்காட்டி... தொழிலாளிகளுக்கு இனிப்பு வழங்கிவிட்டு அம்மா வரும்வரை அவள் லாடம் கட்டிய குதிரை போல இந்தப்பக்கம், அந்தப்பக்கம் திரும்பாது அப்படியே அசையாது உட்கார்ந்திருக்கப் பட்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல...

துங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலிருந்த அவர்களது அலுவலகத்திற்குக்கூட அவள் ஒரு தடவைக்குமேல் போனதில்லை.

Vennila

பள்ளி சீருடைத் துணி வாங்க கடைத்தெருவுக்கு மகளைக் கூட்டிக்கொண்டு செல்ல நேரிட்ட அம்மா அப்படியே தங்கள் அலுவலகத்தைப் பார்வையிட விரும்பினாள். கீழே கட்டடத்தின் முன் பக்கத்து தோட்டத்தில் காரில் டிரைவருடன் மகளைத் தனியே உட்கார வைக்க விருப்பமின்றி கூடவே மூன்றாவது மாடியிலிருந்த தங்கள் அலுவலகப் பகுதிக்கு அழைத்துச் சென்றாள்.

லிஃப்ட்டில் ஏறும்போதே அம்மா எச்சரித்து விட்டிருந்தாள்.

"யாரையும் பார்த்து பல்லைக் காட்டாதே—பேச முயலாதே!"

பெண் ரிஸப்ஷனிஸ்ட் வரிசை பற்கள் பளிச்சிட முறுவலித்தபடி "ஹலோ! நீங்கதானே அம்மாவோட ஒரே செல்லப்பெண் சம்யுக்தா?" என விவரம் விசாரித்த போது... முகம் சிவந்து போய்... நெஞ்சு படபடக்க... மவுனமாகத் தலையை அசைத்துவிட்டு...மறுபக்கத்து சுவற்றைப் பார்க்கத் தொடங்கினாள்...

அம்மா உள்ளேயிருந்து வரும்வரை முள்மேல்அமர்ந்திருப்பது போல ரொம்பவே சங்கடப்பட்டுப் போனாள்.

பலவும் தன்னுள் எண்ணிக்கொண்டு ஆசனத்தில் சாய்ந்தபடி இருந்த சம்யுக்தா...திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

கார் அவர்களது தொழிற்சாலை கேட்டைத்தாண்டி கற்கள் பரவிய பாதைமீது வேகமாக ஊர்ந்து சென்று கட்டிடத்தின் முன் வாயிலில் நின்றது.

சாம்பசிவம் தயாராக அவர்களை வரவேற்க வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். வியாபாரத்தைப்பற்றி அம்மாவிடம் பேச அவர் சிலசமயம் அவர்களது பங்களாவுக்கு வருவதுண்டு.



"நன்னா படிக்கிறாயா அம்மா?" என்று அவர் விசாரித்தால் தலையை ஆட்டி விட்டு... உள்ளே ஓடிப் போய் விடுவாள்.

அவர்கள் திருச்சியிலிருந்து சென்னைக்கு மாறிய போது சாம்பசிவமும் கூடவே வந்து திருவல்லிக்கேணியில் குடியேறிவிட்டிருந்தார். ஒடிசலான கன்னங்கள் ஒட்டிப் போன தோற்றத்தில் கருப்புக் கோட்டும், வெள்ளைப் பாண்டுமாகக் காணப்பட்டவர் இப்போது மிகவும் மாறி விட்டிருந்தார்.

வயது அவரது தலையை வழுக்கையாக்கி விட்டிருந்தது. கம்பளி பூச்சிகள் போன்ற அவரது புருவங்களில் நரை இழையோடியது. முன்னால் தள்ளிக்கொண்டு வந்த தொந்தியை வெள்ளை சபாரி ஸூட்டில் அடக்கிவிட்டு கச்சிதமான பருமனில்.. வாட்டசாட்டமாகத் தெரிந்தார். அவரது கால் ஷூக்கள் பளபளத்தன.

அம்மாவின் அந்தரங்க காரியதரிசியாகிவிட்ட தகுதியின் மிடுக்கு முகத்திலே வழிய நின்றுகொண்டிருந்தார்.

டிரைவர் இறங்கி வந்து பின் ஆசனக் கதவை பவ்யமாகத் திறந்து விட்டார்...

புடவைத் தலைப்பை சரிசெய்துகொண்டு முதலில் வசுந்தரா இறங்கினாள். பின்னால் இறங்கிய மகளுக்கு ஓரக்கண்ணால் ஜாடை காட்டிவிட்டு காரியதரிசியுடன் அம்மா தொழிற்சாலைக்குள் புகுந்தாள்.

அன்று தொழிற்சாலையின் உற்பத்தி பகுதியை மேற்பார்வையிட ஒரு அலுவலரை நேர்முகத் தேர்வு செய்யும் பெரியதொரு பொறுப்பு முதலாவதாக அவளுக்கு இருந்தது.

அந்தப் பகுதியில் வேலைபார்த்த அலுவலர் மாரடைப்பால் இறந்துபோகவே...காலியான இடத்தை சீக்கிரம் நிரப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

Vennila

பத்திரிக்கையில் அவர்கள் கொடுத்திருந்த விளம்பரத்தைக் கண்டு விண்ணப்பித்துக் கொண்ட இளைஞர்கள் பலர்.. நேர்முக தேர்வுக்கு பத்து வாலிபர்களைத்தான் பொறுக்கி எடுத்திருந்தனர்.

வரவேற்பறையிலே வரிசையாக இருக்கைகளில் அமர்ந்திருந்த அவர்களைக் காணாதவள் போல வசுந்தரா தன் அறையை நோக்கி வேகமாகச் சென்றாள்.

பின்னால் மெல்ல நடந்த சம்யுக்தாவின் பார்வை அந்த வரிசை மீது படர்ந்தது...

ஒரு குறிப்பிட்ட இளைஞன்மீது பட்ட அவளது பார்வை அப்படியே நிலைத்து நகர மறுத்ததை உணர்ந்து அவள் திடுக்கிட்டுப் போனாள்.

நெஞ்சு படபடவென்று துடிக்கத் தொடங்கியது.

விடுக்கென்று திரும்பிப் பார்த்த தாயின் பின்னால் ஆட்டுக்குட்டியாக நடந்தாள்...

கொஞ்சதூரம் சென்றதும் மெல்ல தன் பார்வையை அந்த பக்கம் மீண்டும் பரவ விட்டாள்.

அந்த இளைஞனும் அவளை வியப்புடன் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்து காதும் மூக்கும் சிவக்க...மார்பு வேகமாகத் துடிக்க அம்மாவின் பின்னால் அவசரமாக நடந்தாள்.

## 3

தொழிற்சாலையின் வரவேற்பறையை ஒட்டியிருந்த பெரிய அறைக்குள் தாயும் மகளும் நுழைந்தனர்.

வசுந்தரா தொழிற்சாலையைச் சுற்றி பார்வையிட்டு விட்டு ஓய்வாக இருக்கவும், தனது அந்தரங்க செயலாளரிடம் வியாபார சம்பந்தமான கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் உபயோகித்த அறை அது.

சம்யுக்தா அங்கு வருவது முதல் முறையாகும்... எனவே வியப்புடன் அறையைச் சுற்றிலும் பார்த்தாள். ஏறக்குறைய வரவேற்பறையைப் போன்றதொரு பெரிய அறை அது. மெல்லிய நீலச்சாயம் பூசிய சுவர்கள். மூடப்பட்டிருந்த ஜன்னல் கண்ணாடிகளை மறைத்தபடி... நேர்த்தியான பழுப்பு வண்ணத்திரைச் சீலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. வெய்யிலின் கொடுமையே தெரியாது அறைக்குள் குளிர்சாதனம்... குளுமையைக் கொட்டிக் கொண்டிருந்தது.

முகம் தெரியுமளவு பளபளத்த தேக்குமர மேஜைக்குப் பின்னாலிருந்த பெரிய சுழல்நாற்காலியில் வசுந்தரா சாய்ந்தபடி அமர்ந்துகொண்டாள். அவள் அருகே போடப்பட்டிருந்த மெத்தை தைத்த நாற்காலியொன்றில் மகளை உட்காரும்படி... சைகை செய்தாள், தாய்.

கால் புதைந்த ரத்ன கம்பளத்தின்மீது மெல்ல நடந்துவந்த மகள் அம்மாவின் அருகில் அமர்ந்தபடி கண்களை ஓட விட்டாள். மேஜைமேல் ஒருபக்கம் சில ஃபைல்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பக்கத்திலே சிவப்பும்—வெள்ளையுமான

Vennila

நிறந்திலே இரண்டு தொலை பேசிகள் காணப்பட்டன. இடது பக்கத்து சுவர் ஓரமாகக் கூரையைத் தொட்டுக் கொண்டு ஒரு பெரிய அலமாரியிருந்தது. முதுகில் பொன் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தடிமனான பல புத்தகங்கள் அதற்குள் வரிசையாக நிற்பது ..கண்ணாடி கதவின் ஊடே தெரிந்தன.

அத்தனையும் தொழில் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், அம்மா இவைகளில் எதையாவது படித்திருப்பாங்களா? அல்லது வெறும் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்றனவா?

சிந்தித்தபடியே நிமிர்ந்தவள் கண்களில் தாத்தா சேனாபதி சந்தனச் சட்டத்திற்குள் அடங்கியதொரு புகைப்படத்திலிருந்து மென்மையாக அவளைப் பார்த்தார்—

முகம் சிறுத்துப்போனாள் சம்யுக்தா.

சுவற்றிலே அத்தனை இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ள தாத்தாவுக்கு இருந்த உரிமை அவளது தந்தையின் படத்திற்கு ஏன் இருக்கவில்லை? வீட்டில் வைக்காது போகட்டும். சம்பிரதாயத்திற்காகவாவது ஒரு சிறு படத்தை அம்மா... மேஜையின் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டிருக்கலாமே? படத்தில்கூட கணவனை பார்க்கமுடியாத அளவுக்கு வெறுப்பு கொள்ள... அப்பா என்ன குற்றம் செய்துவிட்டார்?

லேசாக இடது கரத்தால்... நெஞ்சைத் தடவிக் கொண்டாள். மார்பின் இடுக்கிலே சொருகிக் கொண்டிருந்த மணிபர்ஸ் கை விரல்களில் பட்டதும் மனதை வருடிய துயரப் புண்ணுக்கு மருந்து போல... கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

மகளின் சிந்தனைகள் தாயின் அதட்டல் குரலில் கலைந்து போயின.

"இப்போ முதல்வேலையா உற்பத்தி பெருக்கப்பகுதியின் மேற்பார்வையாளராக ஒருவரைத் தேர்ந்தெடுக்க



வேண்டும்... ஒவ்வொருவரைப் பற்றியும் செயலாளர் எழுதி வைத்திருக்கும் குறிப்புகள் இரண்டு பிரதிகளாகடைப் அடிக்கப்பட்டு... நம் இருவரது பார்வைகளுக்கும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அழைக்கப்படுமுன் ஒருமுறை நீ அவர்களது தகுதிகளைப் பற்றி வாசித்து உனக்குள்ளே கணிப்பு செய்து கொள்..."

—அம்மா அதட்டலாகப் பேசினாள்.

கதவு மெல்ல விரலால் தட்டப்பட்டது.

'உள்ளே வரலாம்' என்று அவள் உத்திரவு கொடுத்ததும் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் பையன் ஒருவன்— காரின் டிக்கியிலிருந்த பிரம்புக் கூடையைத் தூக்கி வந்து அறைக்குள் ஒரு பக்கம் வைத்தான். வீட்டில் குப்புசாமி சிரத்தையாகப் பிழிந்து—பத்திரமாக பாட்டிலில் நிறைத்து வைத்திருந்த பழரசமும்... இரண்டு டம்ளர்களும்—ஒரு சிறு பிஸ்கட் பொட்டலமும் அதில் இருந்தன.

'தாங்க்ஸ்' என்று வசுந்தரா முணு முணுத்ததும் பையன் அறையைவிட்டு மாயமானான்.

"அஞ்சு நிமிஷம் அவகாசம் தரேன்—குறிப்புகளைப் படிச்சுட்டு நீ மவுனமா நான் இந்தத் தேர்வை எப்படி கையாள்கிறேன்னு பார்த்துகிட்டு இரு போதும்..." உத்திரவிட்டாள் தாய்.

சம்யுக்தா பொங்கிவந்த எரிச்சலை விழுங்கிக் கொண்டு அம்மா தன்முன் நகர்த்திய குறிப்புக் காகிதங்களை எடுத்து வேகமாக தனக்குள்ளேயே கவனமாக ஒவ்வொன்றையும் படித்தாள்.

வேலையைத் தேடிக்கொண்டு நேர்முகத் தேர்வுக்கு வந்திருக்கும் அத்தனை பேரும் பட்டதாரிகள். இளைஞர்கள்... குறிப்புத்தாளுடன் இவர்களைப் பற்றிய சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட்டிருந்தன...

Vennila

'முடிச்சுட்டியா?! வினவிய தாய் மேஜை ஓரத்திலிருந்த வெள்ளைப் பொத்தானை அழுக்கினாள்.

வினாடிப் பொழுதில் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு செயலாளர் சாம்பசிவம் உள்ளே வந்து நின்றார்.

"அந்த இரண்டு நாற்காலிகளையும் இழுத்து இப்படி போடுங்க! ஒன்றில் நீங்க உட்கார்ந்து கொள்ளுங்க... மற்றொன்றில் தேர்வுக்கு வரும் நபர் உட்காரட்டும்..." என்றாள்.

கைகட்டி வாய்பொத்தி நிற்காத குறையாக அவள் முன் கூனிக்குழைந்து கொண்டு நின்ற செயலாளர்... எஜமானியின் சொற்படியே ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

"வரிசையாக உள்ளே வர ஏற்பாடு செய்துவிட்டீங்க இல்லையா?"

"விண்ணப்பதாரரின் பெயரை வரிசைப்படுத்தாது—அவர்கள் அனுப்பிய தேதிவாரியாக வரிசைப் படுத்தியிருக்கிறேன். சரிதானே...?" என்று இருக்கையினின்று எழுந்து வகுப்பு மாணவன் ஆசிரியருக்கு பதில் அளிப்பது போன்று பணிவுடன் சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

வயதிலும்—அனுபவத்திலும் மூத்தவரான அவர் வசுந்தரா முன் குறுகிப்போய் உட்கார்ந்திருப்பதைக் கண்ட சம்யுக்தாவுக்கு வியப்பாக இருந்தது— இப்படியும் ஒரு ஆண்பிள்ளை... ஒரு பெண்ணைக் கண்டு நடுங்குவாரா?

தான், முன்னால் ராணிபோல் நடக்கத் தன் பின் கை கட்டி வாய் மூடியவராக செயலாளர் ஓடிவந்து கொண்டிருக்க வேண்டும் என்று அம்மா எதிர்பார்ப்பது நியாயமா?

பாவம் அந்த மனிதரின் சுய கவுரவம் என்னாவது?



அவள் யோசித்து முடிக்குமுன் கையில் ஒரு சிறு தோல் பெட்டியுடன் ஒரு இளைஞன் கதவை மெல்லத் தட்டிவிட்டு உள்ளே வந்தான்.

செயலாளர் அவனுக்கு எதிரே கிடந்த நாற்காலியை சுட்டிக் காட்டினார். குளிர்சாதன அறையின் குளுமையிலும் அந்த வாலிபன் வியர்த்து விறுவிறுத்துப் போய் விட்டிருந்தான்.

வசுந்தராவின் கேள்விகளுக்கு பதிலளிக்க அவன் தடுமாறிப் போய் விட்டான். ஆங்கிலத்தில் சரளமாக பேச முடியாது உளறிக் கொட்டினான்.

இரண்டே நிமிஷத்தில் வந்தவனைப் போகச் சொல்லி தலையாட்டி விட்டாள் அவள்.

பின்னர் வந்தவர்கள் அத்தனை பேருடைய கதியும் அப்படியேதான் இருந்தன.

பட்டம் பெற்ற வாலிபர்கள்—பார்க்க கச்சிதமாக உடுத்திக் கொண்டு சான்றிதழ்களைச் சுமந்த பெட்டியுடன் வந்து கொலை வழக்கில் தீர்ப்புக் கூறப்போகும் நீதிபதி முன் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் கைதிகளைப் போல் வசுந்தராவைப் பார்த்து பயந்து நடுங்கிப் போனார்கள். மிகவும் அழுத்தலாக கடுமையான குரலில் வசுந்தரா சரமாகத் தொடுத்த கேள்விகளுக்கு சிலர் பதில் சொல்ல முடியாது திணறிப் போனார்கள்,

கடைசியாக அவன் வந்தான்.

மணிக்கட்டுவரை நீண்ட கையுடைய வெளிர்நீல சட்டையும்... கருநீல வண்ணப் பாண்டும் அணிந்து கொண்டிருந்தான். சீராக வாரப்பட்ட சுருண்ட கிராப்பு முடி அவன் முகத்திற்கு மிகவும் களையாக இருந்தது. மாநிறத்திற்கு சிறிது தூக்கலான நிறம்... அழகான

Vennila

மீசை...துருதுருவென்ற கண்களில் கொள்ளை புத்தி சாலித்தனம்...சம்யுக்தா...குறிப்புத் தாளைப் படிப்பது போல ஓரக்கண்ணால் அவனை காலோடு தலை... நன்றாகவே பார்த்தாள்.

"பெயர் என்ன சொன்னீங்க?"

"நான் எதுவும் என்னைப்பற்றி சொல்ல இன்னும் ஆரம்பிக்கலையே... என்னைப் பற்றிய குறிப்பின் முதலில் பெயர் இருக்கும். கவனிச்சிருப்பீங்களே அருணாசலம் என்ற பெயரைப் பள்ளி நாட்களிலேயே சுருக்கி அருண் என்று வைத்துக்கொண்டு விட்டேன்..." வரிசைப் பற்கள் பளிச்சிட மென்மையாக முறுவலித்தான்.

கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு சிறிது கோபத்துடன் அவனை வெறித்தாள் வசுந்தரா.

"படிப்பு...? முந்தய வேலை அனுபவங்கள்?"

"பி.ஏ. பொருளாதாரம், பின்னர் எம்.பி.ஏ. இதுதான் முதல் முதலாக நான் வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்ட இடம்...முந்தய அனுபவம் ஏதும் கிடையாது..."

"இந்த வேலையை ஏற்று நீங்க திறமையா நடத்துவீங்கன்னு நான் உங்களை எப்படி தேர்ந்து எடுக்க முடியும்?"

"இவன் இந்த வேலையை திறமையுடன் செய்வான் என்ற நம்பிக்கை பேரில்தான் நீங்க என்னை தேர்ந்தெடுக்க முடியும். இந்த பட்டத்தையும்...இந்த வேலைக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய தகுதிகளையும் நான் என் சொந்த முயற்சியால் தேடிக் கொண்டவன்—அதைப்போல வேலை கிடைத்தால் என் திறமையை நிருபிக்க முடியும் என்கிற அபார நம்பிக்கை எனக்கு இருக்கிறது..."

அவள் கேட்ட கேள்விகளுக்கு நறுக்குத் தெரித்தார் போல பதிலளித்தான். அச்சம் சிறிதும் இன்றி—



தடுமாற்றமின்றி அவன் பேசியதை கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள் சம்யுக்தா...

லேசாக அவ்வப்பொழுது அவன் உதடுகளில் நெளிந்த புன்னகை—கண்களில் பளிச்சிட்ட பொலிவு... துணிவான பதில்கள் எல்லாம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தன...

மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தபோது அவனும் அவளைப் பார்த்து புன்னகைத்தான். குப்பென்று முகம் சிவந்து போனாள் அவள்—நெஞ்சு தீவிரமாகத் துடித்துக் கொண்டது. தாய் தன்பக்கம் திரும்புமுன் அவள் மேஜை மேலிருந்த குறிப்புத் தாளை கவனிப்பதுபோல தலையைக் கவிழ்த்துக் கொண்டு விட்டாள்.

வசுந்தரா... சாம்பசிவத்தை உற்றுப் பார்த்தாள்... ப்!... என்றாள்.

அவர்—மேற்கொண்டு கேட்க வேண்டிய கேள்விகளை தொடங்கினார்.

அவனது படிப்பு சம்பந்தமான சில கேள்விகளை அவர் வேகமாகக் கேட்டார். சளைக்காது அவன் சொன்ன பதில்கள் அவருக்கு மிகவும் திருப்தியாக இருந்தன.

"முதல் ஆண்டு இந்த வேலை தற்காலிகமானதாக இருக்கும். அதற்குள் உங்களுக்கு வேலை பிடிக்கா விட்டாலும் சரி—எங்களுக்கு உங்களது வேலைத் திறமை திருப்தியளிக்கா விட்டாலும் சரி...ஒரு மாத முன்னறிக்கை இருசாராருக்கும் போதும்...உங்கள் வேலையில் எங்களுக்கு திருப்தி ஏற்பட்டால் ஓராண்டு காலத்திற்கு பிறகு அதை நிரந்தரமாக்க முடியும்... சம்பளம் மற்ற சலுகைகள் எல்லாம்..." அவர் முடிக்கு முன் அருண் பதிலளித்து விட்டான்.

"விளம்பரத்திலேயே எல்லாம் விவரமாகக் கொடுத்திருந்தீங்களே—தெரியும்."

Vennila

அதற்குமேல் பேச எதுமில்லாது அவர் தம் எஜமானியைப் பார்க்க...வசுந்தரா...மெல்ல தலையை அசைத்தாள்.

“சரி! நீங்க போகலாம். எங்கள் பதில் உங்களுக்கு தபாலில் வந்து சேரும்” என்றார் செயலாளர்.

கொஞ்சமும் பதட்டமின்றி... அருண் எழுந்து கை கூப்பி வணங்கிவிட்டு தன் கையோடு கொண்டுவந்த பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே நடந்தான்.

அவனது நிமிர்ந்த மிடுக்கான நடை சம்யுக்தாவுக்குப் பிடித்திருந்தது. வந்தவர்கள் அத்தனை பேரில் அருண் ஒருவன்தான் அம்மாவுக்கு அஞ்சாது...பதில் அளித்தான்.

பணம் இருக்கிறது—அந்தஸ்து இருக்கிறது என்ற திமிரை அவனிடம் அம்மாவால் காட்ட முடியவில்லை... என்பதைப் பற்றி அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சி.

“நீங்க என்ன நினைக்கிறீங்க...?” வசுந்தரா செயலாளரைக் கேட்டாள்.

“வந்தவங்களில் இந்த இளைஞனிடம்தான் நாம் எதிர்பார்க்கும் தகுதிகள் அத்தனையும் இருக்கிறதாக எனக்குத் தோணுது...” வார்த்தைகளை மென்று விழுங்கினார் சாம்பசிவம்.

“எனக்கும் அப்படித்தான் தோணுது. ஆனால் கொஞ்சம் கர்வம் பிடிச்சவன்போலத் தெரியுது. வேலைக்கு வரட்டும். இவன் ஜம்பம் இங்கே செல்லாதுங்கிறதைப் புரிஞ்சுக்குவான். உடனடியாக வேலைக்கு வேண்டிய உத்திரவை டைப்பண்ணி என் கையெழுத்தை வாங்கி அருணுக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பிச்சுடுங்கோ—மத்தவங்களுக்கு...வருத்தம் தெரிவிச்சு...பதில் போட்டுவிடுங்கோ...!”

லேசாகத்தொண்டையைச் செருமினாள், வசுந்தரா.



நீங்கள் போகலாம் என்று சொல்லாமல் அவள் சொன்னதைப் புரிந்து கொண்டு சாம்பசிவம் இருக்கையைவிட்டு எழுந்திருந்தார்.

அப்போது தொழிற்சாலையின் காலை தேநீர் வேளை—வெளியே அதன் அறிவிப்பு மணி அலறியது... பையன் மெல்ல கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தான். கூடைக்குள்ளிருந்த பழரச பாட்டிலை திறந்து இரண்டு டம்ளர்களிலும் நிறைத்து மேஜை மேல் வைத்தான். கூடைக்குள்ளிருந்த தொரு தட்டில் பிஸ்கட் பொட்டலத்தை அவிழ்த்து கொட்டி... டம்ளர்கள் அருகே மேஜை மேல் வைத்துவிட்டு வேகமாக வெளியேறி விட்டான். செயலாளர் தேநீர் சாப்பிட வரவேற்பறை பக்கம் நழுவி விட்டார்.

நேர்வுத்தேர்வு நடத்தவிதம் எப்படி இருந்தது...?” மகளைக் கேட்டபடி ஒரு பிஸ்கட்டை எடுத்து மெல்ல சிறிது கடித்து விழுங்கினாள் வசுந்தரா.

“ஏதோ பெரிய பரீட்சை நடந்தது போல எனக்கு பிரமிப்பாக இருந்தது!” கூறிவிட்டு சம்யுக்தா பழரசத்தைத் துளி உறிஞ்சினாள்.

‘ முடிவில் என்தேர்வு எப்படி?” தாய் கேட்டபோது மகளின் மார்பு வேகமாக அடித்துக்கொண்டது. உடல முழுவதும் உஷ்ணம் பரவுவதை உணர்ந்தாள்.

‘அருணை எனக்குப் பிடிச்சிருக்கம்மா...! எத்தனை புத்திசாலித்தனமாகப் பேசினார்—? அவரது அறிவின் கூர்மை கண்களில் பிரதிபலிக்கிறதே... அவருக்கும் என்னைப் பிடிச்சிருக்கு... நீங்க ஃபைலை புரட்டிக் கொண்டிருந்தப்போ என்னைப் பார்த்து லேசாக புன்னகை செய்தார்... அம்மா அவர் பார்க்கவும் நன்றாக இருக்கார்...!’

—சொல்லவேண்டும் போல மனதில் எண்ணங்கள் குமிழியிட்டன.



Vennila

இந்த அம்மாவிடம் மனம்விட்டுப் பேசி அவள் வெற்றி பெற்றுவிட முடியுமா?

"உங்க முடிவு கட்டாயம் சரியானதாகத்தான் இருக்கும். வியாபாரம் என்கிறதைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாதே அம்மா..."

"இந்த பயிற்சி உனக்கு அலுப்பாக இல்லையா?"

'அலுப்பா? இனிமையான அனுபவமாக அமைஞ்சுட்டதே அம்மா' என்று சொல்ல முடியாது...தலையை மெல்ல அசைத்துவிட்டு பழரசத்தை ஒரே மூச்சாகக் குடித்து முடித்தாள்.

குப்புசாமி அன்று கூடவே சர்க்கரையைக் கொஞ்சம் பழரசத்தில் கலந்துவிட்டாரா? அல்லது அவளது உடலில் பரவியிருந்த அந்த இன்ப உணர்வு நாக்கையும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டதா?

அவளுக்குப் புரியவில்லை..

பழரசம் மிகவும் இனித்தது... அன்று காலைப் பொழுது ரொம்பவே அவளுக்கு இனித்தது...

## 4

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையின் அருகே உள்ளே ஒடிய தொரு தெருவின் முடிவில் இன்னமும் எஸ்டேட் ஏஜண்டுகளின் கண்களில் படாது அடக்கமாக இருந்த



சிவானந்தன் தெரு என்ற சந்துக்குள் கோதை நுழையும் முன் மாலைப்பொழுது மங்கத்தொடங்கிவிட்டிருந்தது.

காலை ஏழு மணிக்கு வீட்டை விட்டுப்புறப்பட்டாள் அவள். உடல் சோர்ந்து கால்கள் தள்ளாட வீட்டு வாசலை நெருங்கினாள். கதவில் காத்ரஜ் பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது.

அப்படியென்றால் அவள் மகன் இன்னமும் வீடு திரும்பவில்லையா? இரண்டு நிறுவனங்களிலிருந்து நேர்முக தேர்வுக்கு அழைப்பு வந்திருக்கிறது என்றான். பாவம் குழந்தை. பட்டினியோடு வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிறான். முன்பு நான்கு இடத்திலிருந்து நேர்முக தேர்வுக்கு அழைப்பு வந்தது. ஆனால் என்ன பயன்?" ஒன்றிலும் வேலை கிடைக்கவில்லை...இந்த முறையாவது கிடைத்தால் —

கிடைக்காவிட்டால் கூட'போகட்டும்...பாஸ் செய்து நீண்ட காலம் ஆகிவிடவில்லையே...எத்தனையோ இளைஞர்கள் இரண்டு மூன்று ஆண்டு காலம் வேலை கிடைக்காது அலைகிறார்களே ..

அருணுடைய தகுதிகளுக்கு... எங்கேயாவது ஒரு இடத்தில் வேலை கிடைத்துவிடும்.

தனக்குள்ளே பலவும் எண்ணியபடி கோதை,கையில் பிடித்திருந்த துணிப்பையை வாயிற்படி ஓரமாக வைத்து விட்டு இடுப்பிலிருந்த சாவிக்கொத்தை எடுத்துப் பூட்டைத் திறந்தாள்.

உள்ளே நுழைந்ததும் கதவைத் தாளிட்டுக்கொண்டு —வராந்தாவின் விளக்கையும் கூடத்து குழல் விளக்கையும் எரிய விட்டாள். துணிப் பையில் வைத்திருந்த அதிரசப் பொட்டலத்தை எடுத்து முக்காலி மீது வைத்தாள்.

Vennila

எண்ணைச் சட்டி அருகே வெகுநேரம் உட்கார்ந்து அதிரசம் சுட்டு எடுத்த களைப்பில் உடம்பு ஆடியது. உடல் முழுவதும் அனல் அடிப்பது போன்று ஒரு எரிச்சல்—ஆறாக வழிந்த வியர்வையில் நனைந்துவிட்டி ருந்த புடவை கசகசத்தது. அதிரசப் பொட்டலத்தைத் தொட்ட கையில் எண்ணை பிசுபிசுத்தது.

அருணுக்கு அதிரசம் என்றால் ரொம்பவும் பிடிக்கும். மாதம் முதல்தேதி சம்பளம் வாங்கியதும் வீட்டுச் செலவு களுக்கென்று பணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு பின்னர் மீதியை அலமாரியிலிருந்த பிளாஸ்டிக் டப்பாவுக்குள் போட்டு வைத்திருப்பது அவள் வழக்கம்.

அந்த மீதி பணத்தில்தான் அவ்வப்போது மகனுக்குப் பிடித்தமான-வாய்க்கு ருசியான பொருள்களை கொஞ்சம் வாங்கிக்கொண்டு வருவாள். பத்து ஆண்டு காலமாகத்தான் அவள் பத்திராசலம் பலகாரக் கடையில் வேலை செய்கிறாள்.

அதுவும் அவள் தோழி மீனாவின் யோசனை.

பத்திராசலம் சிறிய அளவிலே ஒரு பலகாரக் கடையை நெடுஞ்சாலையருகே-பஸ் நிலையத்தின் சமீபத்தில் ஆரம்பித்தார். இப்போது அது ஓகோ என்ற அளவில் பெரிய வியாபாரமாகி விட்டிருந்தது.

கடையின் முகப்பில் கண்ணாடி பெட்டிக்குள்ளே ஓமப்பொடி, அதிரசம், சீடை முறுக்கிலிருந்து மைசூர் பாகு, சோன்பப்படி, டில்லிதர்பார் என்று வடநாட்டு பலகாரங்களும்...தென்நாட்டுத் தின்பண்டங்களுடன் அணி செய்தன.

அவைகளை வாங்கிப்போக வாசலில் எப்பொழுதும் ஒரு கூட்டம். டோக்கன் முறையிலே பலகார விற்பனை காலையிலிருந்து இரவு எட்டுமணி வரை பிரமாதப் பட்டது.

உள்ளே பின் பக்கத்தில் குழல்விளக்கு வெளிச்சத் தில் கால்வாய் அடுப்பில் கணகணவென்று விறகு



எரிய அங்கங்கே எண்ணை சட்டியுடன்...முறுக்கும், அதிரசமும், தேன் குழலும், சீடைகளும் தயாரிக்கும் பெண்கள் பலர், தங்கள் வேலையில் கவனமாக இருந் தனர். இன்னொரு பக்கத்தில் ஆண்கள் சிலர்...டில்லி தர்பாரையும் அல்வாவையும் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தனர்.

அதிரசமோ-முறுக்கோ – மைசூர்பாகோ அடுக்கி தட்டில் வைக்கும்போது தவறி கீழே விழுந்து ஒன்று உடைந்து விட்டால் கூட அந்த தூளை எடுத்து வேலை யாட்கள் யாரும் வாயில் போட்டுக் கொண்டுவிட முடி யாது. அவைகளைத் தனியே ஒரு தட்டில் பொறுக்கி எடுத்து வைத்துவிட வேண்டும். அப்படி ஒரு கண்டிப் புடன் அவர்கள் அனைவரையும் ஒருமேற்பார்வையாளர், கூட்டத்தை அளந்தபடி கண்காணித்துக்கொண்டிருந்தார்.

உடைந்த தூள்களை ரகவாரியாகப் பிரித்து பிளாஸ்டிக் பையில் போட்டு...வாயை மூடி கால்விலைக்கு வாடிக்கைக்காரர்களுக்கு பத்திராசலம் விற்றுக் காசாக் கிக் கொண்டார். கடை ஊழியர்கள் சில சமயம் அவைகளை தங்கள் வீட்டுக்கு காசு கொடுத்து வாங்கிச் செல்வது உண்டு. முறுக்கை உடைத்துத்தானே தின்னப்போகிறோம்... அதனால் உடைந்த முறுக்கை வாங்குவதில் தவறு என்ன என்பது அவர்களது விவாதம். ஆனால் கோதை தன் மகனுக்கு எல்லோரையும் போல கடை முகப்பில் கச்சிதமாகக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்களைத்தான் முழு விலை கொடுத்து வாங்கி வருவது வழக்கம்...

மாதம் முன்னூறு ரூபாய் சம்பளமும் - தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகையின் போது ஒரு மாத போனசும் வழங்கினார் பத்திராசலம். அதைத் தவிர அவர் ஊழியர் யாருக்கும் பண்டிகை என்ற காரணத் திற்காக ஒரு வில்லை மைசூர்பாகைக்கூட இனாமாக வழங்கியவர் அல்ல... அத்தனை ஒரு கண்டிப்பானவர்...

Vennila

கோதை சென்னைக்கு வந்து குடியேறி சமையல்காரி வேலையை ஏற்றுக்கொண்டதே ஒரு தனிக்கதை.

மதுரைப் பக்கத்து கிராமத்துப்பெண் அவள். இரண்டாவது வகுப்புக்கு மேல் பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்க்காதவள். வரதட்சணை கொடுக்க சக்தியின்றி அவள் தந்தை அவளை ஐம்பது வயதுக்கு மேற்பட்டவருக்கு இரண்டாம் தாரமாகக் கட்டிக்கொடுத்து விட்டிருந்தார்.

மதுரையில் சொந்தமாக ஒரு வீடும்... மளிகைக் கடையும் அவளது கணவருக்கு இருந்தன. கண்நிறைந்த இளைஞனைக் கட்டிக்கொண்டு வறுமையில் திண்டாடுவதைவிட வயதானவனுக்கு வாழ்க்கைப்பட்டு... நிற்க நிழலும்... உடுக்கத் துணியும் வயிறு நிறைய சோறுமாக நிம்மதியாக வாழலாம் என அவள்... அமைதியோடு தான் கழுத்தை நீட்டினாள்.

ஆனால் மூத்தவள் விட்டுப்போன மகன் இருபத்து நான்கு வயது இளைஞன்... அவளுக்கு பல இடைஞ்சல்களை விளைவித்தான். அவனுக்குத் திருமணம் செய்வித்து தனிக்குடித்தனம் அமைத்துவிட்டால் தொல்லைகள் தீரும் என்று அவள் கணவர் விரைவாக அதைச் செய்துமுடித்தார். அப்பொழுதும் பலன் இருக்கவில்லை.

அவர்கள் வசித்த வீடு தாய்வழி வந்த சொத்து. அதைத் தன் மேல் எழுதி வைக்கவேண்டுமென்று அடம் செய்து தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். அருண் ஐந்து வயது குழந்தையாக இருக்கும்போது ஒரு நாள் மாலை கடையை மூடிவிட்டு வீட்டுக்கு சாப்பிட வந்த அவன் தந்தை நெஞ்சுவலி என்று படுத்தவர் எழுந்திருக்கவில்லை.. தந்தையின் மறைவுக்குப் பின் மூத்தவள் மகன் அவளைப் பாடாய் படுத்த ஆரம்பித்து விட்டான்.

முதலில் அப்பா விட்டுப்போன கடையை அழி விலைக்கு விற்று அவளுக்கு சொற்ப தொகையை தம்பி



யின் பங்காகக் கொடுத்தான். தொடர்ந்து அவள் தன் மகனுடன் அந்த வீட்டில் வசிக்கக்கூடாது. வேறு இடம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நிர்பந்தித்தான்.

பிறந்த வீட்டிலும் அவளுக்கு யாரும் இருக்கவில்லை. மகளைக் கல்யாணம் செய்து கொடுத்த பின் தம் கடமை முடிந்து விட்டது என்பது போல பெற்றவர்கள் இருவரும் ஒருவருக்கு பின் ஒருவராக சில ஆண்டுகளில் மறைந்து விட்டனர்.

அக்கா ஒருத்தி அவளைப் போலவே இரண்டாம் தாரமாக கட்டி கொடுக்கப்பட்டவள். ஆனால் தங்கையைவிட கொஞ்சம் அதிர்ஷ்டக்காரி. பிள்ளை தலையெடுத்த பின்தான் விதவையாகிப் போனாள். வேலைக்குப் போகும் பெண்ணை மணந்து கொண்டு கல்கத்தாவில் நெருக்கமானதொரு குடியிருப்பில் வசித்துக்கொண்டிருந்த அக்கா மகன் அம்மாவை தங்கள் வீட்டு வேலைக்காக வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருந்தான்... அந்த நெருக்கத்தில் கோதை தன் மகனுடன் போய் வாழ இடம் கேட்க முடியுமா?

என்ன செய்வது? எங்கே போவது? என்று இரவும், பகலும் புலம்பிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தவளை யதேச்சையாக மீனா, கோவிலில் சந்தித்தாள்.

மீனா அவர்களது கிராமத்தைச் சேர்ந்தவள். தன் நிலைமை முழுவதையும் சொல்லி அழுத கோதைக்கு அவள் தான் அந்த யோசனையைத் தந்தவள்.

"கவலைப்படாதே கோதை. நானும் ஏறக்குறைய உன் நிலைமையில்தான் இருக்கேன் – ஒரு வித்தியாசம்– எனக்கு குழந்தை ஏதும் கிடையாது. நம் கிராமத்திலிருக்கும் மளிகைக்கடை மன்னார்சாமி மகள் பட்டணத்தில் பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். என்னைக் கூட அழைத்துக்கொண்டு போய் தன் வீட்டில் சமை

Vennila

யல் ஆளாக வேலைக்கு வச்சுக்கொண்டு நல்லா கவனிச்சுக்கிறா. நாலு நாள் லீவிலே கிராமத்திற்கு வந்திருந்தேன். அப்படியே நம்ம மதுரை கோவிலையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்—உன்னையும் பார்த்துட்டேன்... நாளைக்கு நான் பட்டணம் போறேன் நீயும் கூட வந்துவிடேன்...'' ஆறுதலாக சொன்னாள்.

அந்தச் சந்திப்பு அவர்களது வாழ்க்கையில் பெரிய திருப்பமாக இருந்தது.

மீனாவை நம்பிக்கொண்டு தன் ஐந்து வயது மகனுடன் புறப்பட்டு விட்டாள். பின்னர் அவள் சென்னை நகர் தனது சொந்த ஊர் போல எண்ணி அத்துடன் ஒன்றிப் போய் விட்டாள். மூத்தவள் மகன் தன் மனைவியுடன் பம்பாய்க்கு வேலை தேடிக்கொண்டு போய் விட்டதாகக் கேள்விப்பட்டாள். ஆனால் அவர்களது உறவு அத்துடன் அறுந்துபோனது.

நுங்கம்பாக்கம் சிவானந்தம் தெருவிலிருந்த அந்த ஓட்டுக்கூரை வீட்டில் குடியேறினாள்.

ஆரம்பத்தில் வாடகை மூப்பது ரூபாயாக இருந்தது... இப்போது நூற்றைம்பதாக அதிகரித்து விட்டிருந்தது. தன் பங்குக்காக கிடைத்த பணத்தை வங்கியில் போட்டு வந்த வட்டியில் ஒருவாறு வீட்டு வாடகையை சமாளித்தாள். தோழியின் உதவியால் அருகேயிருந்த விக்டோரியா அவன்யூவில் ஒரு பெரிய மனிதர் வீட்டு சமையற்காரியாக வேலைக்கு அமர்ந்தாள்.

வீட்டுக்கார அம்மா அவளை மிகவும் அன்போடு கவனித்துக்கொண்டாள். அருண் படிக்க ஆரம்ப காலத்தில் வெகுவாக உதவி செய்தாள்... அருண் ரொம்பவும் புத்திசாலிப் பிள்ளை-அம்மாவிடம் உயிர். வகுப்பில் முதல் மாணவன் என்ற தகுதியில் உபகாரச் சம்பளம் பெற்று... அவளுக்கு சிரமம் அதிகம் தராது படித்தான்...

சில ஆண்டுகளுக்குப்பின்னர் மீனாவின் யோசனைப்படி அவள் பத்திராசலம் பலகாரக் கடையில் அதிரசம் சுட்டுத்தரும் ஆளாக வேலைக்கமர்ந்தாள். மாதம் மூன்



றூறு ரூபாய் சம்பளம் ஏற்றமான விலைவாசி காலத்தில் போதாததாக இருந்தது. அதைத் தவிர்க்க விக்டோரியா அவன்யூ வீட்டில் பகுதி சமையல் ஆளாக... காலை வேளை சமையலை செய்து வைத்துவிட்டு நகர்ந்துவிடும் வேலைக்காரியாக மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் வேலை ஏற்றாள்.

விக்டோரியா அவன்யூ பங்களாவில் இப்போது பிள்ளைகள் பெரியவர்களாகி திருமணமாகி... அமெரிக்கா... ஆஸ்திரேலியா என நாடு பெயர்ந்து விட்டிருந்தனர். அத்தனை பெரிய பங்களாவில் வீட்டு எஜமானரும் அவர் மனைவியும் மட்டுமேதான் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

வயதும் வியாதியுமாகிவிட்ட அவர்கள் பத்திய சாப்பாட்டில் வாழ்ந்து கொண்டிருந்ததால் அந்த வீட்டு சமையல் வேலை அவளுக்கு சிரமமாக இருக்கவில்லை. தொடர்ந்து பல ஆண்டுகள் ஒரே வீட்டில் உழைக்கிறோம் என்ற நன்றி உணர்வு மனதிற்கு திருப்தியாக இருந்தது.

விக்டோரியா அவன்யூ அம்மாவின் உதவியால் காஸ் அடுப்பிக்கு விண்ணப்பித்துக் கொண்டு... உரிய காலத்தில் பெற்றுக்கொண்டாள். வீடு கொள்ளாது கிடந்த சாமான்களை அவர்கள் விற்றபோது பழைய இரும்பு பீரோ ஒன்றையும்- சிறு மேஜை ஒன்றையும் அவளுக்கு இனாமாகத் தந்தனர் - குறைந்த விலையில் இரண்டு நாற்காலிகளை அவள் தானே வாங்கிக் கொண்டாள்.

பீரோவுக்கு புதுச்சாயம் பூசி, மேஜை நாற்காலிகளைப் பழுது பார்த்து வீட்டில் கொண்டுவந்து போட்டுக் கொண்டாள். கூடத்து அறைக்குள் சுவர் ஓரமாக நின்ற அந்த இரும்பு பீரோவில்தான் அவர்களது சொத்து அத்தனையும் அடங்கியிருந்தன.

விக்டோரியா அவன்யூ அம்மாவின் அமெரிக்க பெண் பெற்றோர்களைப் பார்க்க[illegible]போது... [illegible]

Vennila

காய், மிளகாய்ப் பொடி இத்தியாதிகளை சேகரித்துக் கொண்டு திரும்புவது வழக்கம். அவைகளைத் தயாரித்துக் கொடுக்க உதவும் கோதைக்கு அந்தப் பெண்ணுருக்குப் போகுமுன் காஞ்சிபுர நூல் சேலை ஒன்றை தன் பரிசாக வாங்கித் தந்துவிட்டுப் போவது வழக்கம்... அப்படிச் சேகரித்த சில சேலைகளையும்... ரவிக்கைகளையும் அவள் பத்திரமாக பீரோவுக்குள் வைத்திருந்தாள். மகனது உடைகள் பலவற்றையும் ஒரு தட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள்.

வேறு பீரோவின் லாக்கருக்குள் வைக்க அவளிடம் நகைகள் ஏதும் கிடையாது. காதுகளில் சிவப்புக் கல்லால் ஆனதொரு சிறு தோட்டைத் தவிர கழுத்தும் கையும் நெற்றியும் வெறுமையாக இருந்தன.

அம்மா தன்னை வாழவைக்கும் பொருட்டு ஓடாகத் தேய்ந்து கொண்டிருந்தது மகனுக்குப் பிடிக்கவில்லை.

நாற்பத்தைந்து வயதிற்குள் தலையின் முன் பக்கத்தில் பட்டையாக நரை தெரிய முகத்தில் சுருக்கத்துடன் அவள் ஐந்து வயது கூடுதலாகவே தெரிந்தாள்.

“எனக்கு வேலை கிடைத்த உடனேயே நீங்கள் வீட்டோட இருக்கப் போறீங்க... உங்களுக்கு ஓய்வு ரொம்பத் தேவை...”

—மகன் கண்டிப்பாக சொல்லிவிட்டிருந்தான்.

பாவம் அவன் பட்டம் பெற்ற கையோடு பல இடங்களில் முயன்றுதான் பார்த்தான். என்ன காரணமோ... வேலை கிடைக்கவில்லை...

சமீபகால விலைவாசி உயர்வால் சில சமயம் அவள் மாதாந்திர செலவைச் சமாளிக்க இயலாது தத்தளித்தாள். ஆனாலும் வீட்டில் உப்பு இல்லை... பருப்பு தீர்ந்துவிட்டது என்று அவள், மகனிடம் இல்லாப் பாட்டுப் பாடியதில்லை .. தான் ஒருவேளை பட்டினி கிடந்தாலும்



சரி... மகன் சாப்பிட வேண்டும். நன்றாக உறங்க வேண்டும். வெளியே செல்லும்போது நன்றாக உடுத்திச் செல்ல வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டாள்.

மகனுக்கு வெகுவிரைவில் வேலை கிடைத்துவிடும். அதற்குப் பின் இல்லாமை என்பதே அவர்கள் வீட்டில் தலை காட்டாது என்றதொரு நம்பிக்கை அவளுக்கு...

கூடத்து கொடியில் காய்ந்து கொண்டிருந்த சேலையையும், ரவிக்கையையும் இழுத்து எடுத்துக்கொண்டு பின் வராந்தாவுக்கு விரைந்தாள். விளக்கைப் போட்டாள்... மங்கலாக தெரிந்த வெளிச்சத்திலே... வராந்தாவின் கோடியிலிருந்த குளியலறைக்குள் புகுந்து காலையில் வெளியே கிளம்பு முன் நிரப்பி வைத்திருந்த அண்டா தண்ணீரிலிருந்து இரண்டு செம்பு தண்ணீரை முகர்ந்து அவசரமாகக் குளித்தாள். சில்லென்ற தண்ணீர் எரிச்சலில் தவித்த உடலுக்கு இதமாக இருந்தது.

மாற்றுடை அணிந்துகொண்டு... தலையை வாரி முடிச்சிட்டுக் கொண்டு நெற்றியில் திருநீற்றை அப்பி முடித்து விட்டு... அலமாரியிலிருந்த தெய்வப் படத்துக்கு முன்னிருந்த சிறு விளக்கை ஏற்றுமுன்—வாயிற் கதவு இடிபட்டது.

ஓடிச்சென்று திறந்தாள். கையில் பெட்டியுடன் கிராப்பு முடி கலைந்து...களைத்த முகத்துடன் மகன் வெளியே நின்று கொண்டிருந்தான்.

காலையில் அவன் உடுத்திக்கொண்டு சென்ற அந்த சுத்தமான சட்டை இப்போது கசங்கி தோள் பட்டையில் அழுக்குடன் தெரிந்தது.

“என்னம்மா அப்படி பார்க்கிறீங்க...பஸ்லே வாரைப் பிடிச்சுக்கொண்டு நிக்கிறதுக்கு பதிலா ஒரு வயதானவர் என் தோளைப் பிடிச்சுக்கொண்டு விட்டார். அவர் கையிலே இருந்த அழுக்கெல்லாம் என் தோள் பட்டை சட்டை மேலே அப்பிக்கிட்டது...” மகன் சிரித்தான்.

Vennila

"பரவாயில்லை. நான் தோச்சு சுத்தப்படுத்தி விடுவேன்—முதல்லே நீ குளிச்சிட்டு—உடை மாத்திக்கோ... நான்... சாப்பாட்டை சூடு செய்யறேன்" என்றாள்.

குளியலுக்குப்பின் லுங்கி பனியன் அணிந்துகொண்டு—அலமாரியில் அடங்கியிருந்த தன் அப்பாவின் படத்தை வணங்கி விட்டு... நெற்றியில் திருநீற்றுக் கீற்றுடன் கூடத்துத் தரையில் தட்டின் முன் அவன் உட்கார்ந்தான். காலையில் தயாரித்து வைத்துப்போன சாப்பாட்டை நொடிப் பொழுதில் சூடாக்கி மகனுக்கு தாய் பரிவுடன் பரிமாறினாள்.

சாப்பிட்டு முடித்து கை கழுவி துவாலையில் அவன் வாயைத் துடைத்துக்கொண்டு கூடத்தில் கிடந்த நாற்காலியில் வந்து உட்காரும் வரை அம்மா ஏதும் கேட்கவில்லை—

"நேரமாச்சே... நீங்க சாப்பிடுங்கம்மா நான் ஏதாச்சும் உதவி செய்யட்டுமா...?" என்று கேட்ட மகனைப் பார்த்து மெல்ல முறுவலித்தாள்.

"காலையிலே போன சங்கதி என்னாச்சுன்னு சொன்னா அதுவே பெரிய உதவி!" தாய் மெலிதாகச் சிரித்தாள்.

"முதலாவதாக போன இடத்தில் என்னை அநேகமா வேலைக்கு எடுத்துக்கிட்டாங்கன்னுதான் சொல்லணும். இரண்டாவதாக போனஇடம் வெறும் கண்துடைப்பு நாடகம். போகட்டும், காலையிலே போன இடத்திலே வேலை கிடைச்சா போதுமே...பார்வதி எலக்டிரிகல்ஸ் என்பது பிரசித்தி பெற்ற நிறுவனமாச்சே... அதன் தலைவி ரொம்ப கர்வமான பெண்மணி. அது ஒன்னு தான் எனக்கு பிடிக்கலை "

"பணம் இருக்கு—பதவி இருக்கு—அதனாலே கர்வம் இருக்கு–நமக்கென்ன? அங்கே வேலை கிடைச்சா தெரு பிள்ளையாருக்கு நான் சந்தனக்காப்பு போடறதாக வேண்டிகிட்டிருக்கேன். உனக்கு அந்த வேலை பிடிச்சுத்தானே இருக்கு?"



"அந்த வேலையைவிட அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு என்னை மிருதுவாகப் பார்த்து முறுவலித்தாளே அந்தப் பெண் அவளை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கம்மா...?" சொல்ல முடியாது கற்பனையிலே சம்யுக்தாவைப் பார்த்து மகிழ்ந்தபடி தனக்குள்ளே முறுவலித்துக் கொண்டான்.

"நான் கேட்ட கேள்விக்கு பதிலைக் காணுமே!" அம்மா நினைவு கூட்டியபோது திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

"பிடிச்சிருக்கம்மா முதல் மாச சம்பளத்திலிருந்து நான் பணம் தரேன். நீங்க பிள்ளையாருக்கு சந்தனக் காப்பு போடலாம்!" மகன் வாய்விட்டு சிரித்தான்.

மகனுக்கு அந்த வேலை கிடைத்துவிட்டால் எண்ணை சட்டியருகே எரியவேண்டாம் என்றதொரு எதிர்பார்ப்பில் தாயும் சிரித்தபடி காலியான பாத்திரங்களுடன் சமையலறைக்குள் மறைந்தாள்.

# 5

வசுந்தராவின் பங்களாவில் வேலைபார்த்த ஆட்களிடையே ஒற்றுமை நிலவியது என்று சொல்லிவிட முடியாது.

கார் ஓட்டுகிறவரைக் கண்டால் தோட்டக்காரனுக்குப் பிடிக்காது. சமையற்காரர் குப்புசாமியைக் கண்டால் வேலைக்காரி முகத்தை இறுக்கிக் கொள்வாள்.

Vennila

இந்த மனுசனுக்கு ரொம்ப ஓரவஞ்சனை, டிரைவருக்கு நல்லா சந்தனமாட்டம் காப்பி கலந்து தரார். எனக்கு கழுநீர் போல ஒரு காப்பி—முணுமுணுப்பாள்.

ரத்னாவைக் கண்டால் யாருக்குமே பிடிக்காது. வீட்டு அம்மாவின் அதிகாரம் ஒரு பங்கு என்றால் ரத்னாவின் அதிகாரம் பத்து மடங்காக இருந்தது. அந்தப் பங்களா தன்னுடையது போல அவள் ஆட்களை அகங்காரமாக ஏவிக் கொண்டிருந்தாள். குப்புசாமிக்கு அவளைக் கண்டாலேயே பிடிக்காது.

“காலா காலத்தில் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கையில் அடிபட்டிருக்கணும். அப்பதான் ஒரு நிதானம் ஏற்படும்... கல்யாணம் கட்ட தவறிவிட்டதாலேதான் இந்த சிடுமூஞ்சித்தனம்... காலையில் நான் எழுந்தால்...நேரே பூஜை அறைக்கு ஓடி விநாயகரைப் பார்த்து கும்பிடுபோட்டு விட்டுதான் வேலையைத் துவங்குவேன்–தப்பித்தவறி இந்தம்மா மூஞ்சியிலே முழிச்சுட்டேனோ போச்சுடா... அன்னி முழுக்க எனக்கு எஜமானியம்மாகிட்டே நிறைய திட்டுகள் கிடைக்கும்... இல்லாட்டா பின்கட்டு வராந்தாவிலே தடுக்கி விழுந்து... முட்டிக் காலில் அடிபட்டு நாள் முழுவதும் நொண்டிக் கொண்டிருப்பேன்... அப்படி ஒரு ராசி அந்தம்மாளுக்கு.”

—தோட்டத்திலே பூத்துச் சொரியும் சிவப்புக் கொன்றை மரத்தடியில் நின்று கொண்டு... வாய் நிறைய வெற்றிலைபாக்கைக் குதப்பிக்கொண்டு... எஜமானியின் கண்களில் படாதவாறு... ஒதுக்குப்புறமாக ஒரு குழியில் அவ்வப்போது எச்சிலைத் துப்பிக்கொண்டு, தோட்டக்காரனிடம் வம்பளந்து கொண்டிருப்பார்.

ரத்னாவுக்கும் குப்புசாமியைக் கண்டால் ஆகாது.

“தான் பீமனுடைய பரம்பரைன்னு நினைப்பு. முந்திரி பருப்பு நிறைய வேணும்னு அடம்பண்றார்



மனுசன்–அதை வறுத்து பொங்கலில் போடுகிறாரோ–பாதியைத் தன் வயிற்றில் போட்டுக் கொள்கிறாரோ... சாமான்கள் விற்கிற விலையில்...நெய்யையும் பாலையும் கண்டபடி செலவழிக்கிறார்–கொஞ்சம்கூட சிக்கனம் கிடையாது. ரொம்பவே பண்டங்களை பாழடிக்கிறார்.”

—அவர் காதுபட தனக்குள்ளேயே பேசிக்கொண்டு நடப்பாள்.

எலியும்–பூனையுமாக வீட்டுக்குள் உலவிக் கொண்டிருக்கும் வேலையாட்கள் அனைவரும் அம்மாவின் கார் கேட்டைத் தாண்டிக்கொண்டு உள்ளே வருவதற்குள் கப்சிப் என்றாகி விடுவார்கள். யாருக்கும் யார் மேலேயும் கோள் சொல்லத் துணிச்சல் இருந்ததில்லை.

வசுந்தரா வேலையாட்களுடன் சமமாக நின்று வம்பு தும்புகளை விசாரிக்கும் ஆசாமி இல்லை. அவள் தன் எஜமானி பீடத்திலிருந்து ஒரு நாளும் அசைந்து கொடுத்தவள் இல்லை...

அன்று மாலை வீடு திரும்பிய வசுந்தரா...குளித்து மாற்றுடை அணிந்துகொண்டு...தேநீர்கூட அருந்தாது வெளியே புறப்பட்டு விட்டாள். பிரிண்டெட் சில்க் புடவையில் கிளம்பிய அம்மாவைக் கண்டதும் குப்புசாமிக்குப் புரிந்து விட்டது.

எஜமானியம்மாள் ஏதோ ஒரு விழாவில் கலந்து கொள்ளப் புறப்படுகிறாள்! தொண்டையை செருமிக் கொண்டு பின்னால் வந்து நின்ற அவரைக் கடுமையாகத் திரும்பிப் பார்த்தாள்.

“இரவு சாப்பாட்டுக்கு வந்துவிடுவேன்–வழக்கம் போல சுக்காரொட்டியும் சப்ஜியும் செஞ்சிடுங்கோ... சம்யுக்தா கீழே வந்ததும் காப்பி டிபன் கொடுங்கோ... இரவு எட்டு மணிக்குள் திரும்பிடுவேன்”–சொல்லி விட்டு...பாதணிகள் ஒலிக்க வேகமாக வரவேற்பறை

Vennila

யைத் தாண்டி-வராந்தாவில் நடந்து படிகளில் இறங்கி வாயிலில் தயாராக நின்ற தனது காரில் ஏறிக் கொண்டாள்.

பென்ஸ் தோட்டத்தினின்று புறப்பட்டு—கேட்டைத் தாண்டி-சாலைக்குள் மறையும்வரை பார்த்துவிட்டு நிதானமாக பெருமூச்சு விட்டார் குப்புசாமி.

அன்று அவர் சம்யுக்தாவுக்கு பிடித்தமான டிபன் களை செய்திருந்தார். எஜமானி அம்மாள்கூட சாப்பிட உட்கார்ந்து விட்டிருந்தால் ஒரு வடை போதும், ஜாமூனில் பாதி தின்னு. இனிப்பு அதிகம் சாப்பிடக் கூடாது என்று குறுக்கிட்டு மகளை கட்டுப்படுத்தி இருப்பாள்.

குப்புசாமிக்கு எஜமானிமீது உள்ளூரக் கொஞ்சம் எரிச்சல் உண்டு.

“வயசையும்-வியாதிகளையும் நினைச்சு எஜமானி தன் வயிற்றை சுருக்கிக்கொள்ளட்டும்...ஆனால் பாவம் இளம் பெண் குழந்தை சம்யுக்தா. அவளது உணவுக்குக் கட்டுப்பாடு ஏன் விதிக்கணும்?”

நல்லவேளை அம்மா வெளியில் புறப்பட்டு போய் விட்டாங்க...

சம்யுக்தாவை உட்கார வைத்து தமது தயாரிப்பின் மகிமையை அவள் உணரும் வண்ணம்...ஜாமூனையும்-தயிர்வடைகளையும் பரிமாறி உபசரிக்க ரொம்பவும் ஆசைப்பட்டார்.

“பாப்பா...இன்னொரு ஜாமூன் போட்டுக்கம்மா... உனக்காக செஞ்சேன்” என்று...உரிமையோடு உபசரிக்க ஆசைப்பட்டார்.

அவர் ஒருவர்தான் அவளை ‘பாப்பா’ என்று அழைக்கும் சலுகை பெற்றிருந்தார். சிறிய வயதிலேயே அவளது பாட்டன் வீட்டில் வேலைக்கமர்ந்துவிட்டவர்.



நீண்ட நாள் உழைத்துக் கொண்டிருக்கும் நம்பிக்கை மிக்க-விசுவாசமுள்ள வேலையாள் என்ற தகுதியைப் பெற்றவர். சம்யுக்தாவைக் குழந்தைப் பருவத்திலே தூக்கிக் கொஞ்சி... வளர்க்க உதவியவர் என்ற உரிமை. மற்ற எல்லோரும் சின்னம்மா...என்று அழைத்தபோது அவர் மட்டும் அவளை ‘பாப்பா’ என்று கூப்பிட்டு உள்ளூர பெருமையில் பூரித்துப் போனார்.

வசுந்தராவுக்கு அது பிடிக்காத சங்கதிதான். ஆனால் அவரைப் போன்ற பொறுப்பான சமையல் ஆள் இன்னொருவர் இலேசில் கிடைக்க மாட்டாரே:

“தொலையட்டும்... திருமணமானவுடன் சிறிது காலத்திற்குள்ளே மனைவியை இழந்தவர்... உற்றார், உறவினர் என்று யாரும் கிடையாது. அவர்கள் வீடே கதி என்று இது நாள் வரை கிடந்தார். இப்போது தள்ளாத வயது.. சம்யுக்தாவை பாப்பா என்று கூப்பிடட்டும். அதற்கு மேல் அதிகப்பிரசங்கித்தனமான சொந்தம் கொண்டாட அனுமதிக்கக்கூடாது” என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

அதனால்தான் சாப்பிடும் போது... அவர் ‘அம்மாவுக்கு இன்னும் கொஞ்சம் பொரியல் வைக்கவா?’ என்று பவ்யமாகக் கேட்டால் கூட பார்வையால் அவரைச் சுட்டாள். முகத்திலே சிறிதும் சிரிப்பின்றி...கடுகடுவென்றிருந்தாள்.

குளித்துவிட்டு மாக்ஸி அணிந்து கொண்டு-மாடிப் படிகளில் துள்ளி இறங்கி வந்த சம்யுக்தாவைப் பார்த்து பெரிதாகப் புன்னகைத்தார் குப்புசாமி—

சாப்பாட்டறை ஜன்னல் திரைச்சீலையை சற்று விலக்கித் தோட்டத்தைப்பார்த்ததும் அவரது துணிச்சல் அதிகமாகியது. அவரது பரம விரோதியான ரத்னா ஒரு பூக்கூடையுடன் மல்லிகை மொட்டுக்களை சேகரிப்பதில் மும்முரமாய் இருந்தாள்.

ரத்னா தோட்டத்திற்குள் புகுந்தால் லேசில் உள்ளே வர மாட்டாள் என்பது அவருக்குத் தெரியும்...



Vennila

தோட்டக்காரன் எல்லா செடிகளுக்கும் தண்ணீர் ஊற்றினானா? தென்னை மரத்தில் எத்தனை காய்கள்... கிச்சிலி மரத்தில் எத்தனை பிஞ்சுகள்? என்று ஊன்றி கவனித்தபடி வளைய வந்து கொண்டிருப்பாள். அந்தப் பங்களா அவளுடையது என்ற நினைப்பு...

வீட்டுக்குள் இருந்தால் வினாடிக்கொரு தரம் சமையலறை பக்கம் எட்டிப்பார்த்து... சாம்பாரில் உப்பு போட்டோமா இல்லையா என்று அவரை...குழம்பும்படி ஏதாவது கேள்வி கேட்டு வதைத்துக் கொண்டிருப்பாள்.

கொஞ்ச நேரம் ரத்னா தோட்டத்தில் இருந்து தொலையட்டும்-எண்ணி நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

இன்று அம்மாவும் வீட்டில் இல்லை... என்பது அவருக்கு உற்சாகத்தைத் தந்தது.

சம்யுக்தாவிடம் சகஜமாகப் பேசி...தமது தயாரிப்புகளை பரிமாறி உபசரிக்க முடியுமே?

“பாப்பா! இன்னிக்கு டிபன் நல்லா அமைஞ்சிருக்கு— சும்மா பயப்படாம வேண்டிய மட்டும் சாப்பிடும்மா...” கனிவாகச் சொல்லிக்கொண்டு... தாம் தட்டில் சுமந்து கொண்டு வந்தவைகளை அவள் முன் மேசை மீது வைத்தார்.

“இதென்ன இது—மூணு ஜாமூன் இரண்டு பெரிய தயிர் வடை—ரொம்ப அதிகம் தாத்தா”...என்றாள் அவள்.

அவர் எப்படி அவளை பாப்பா என்று சொந்தம் கொண்டாடி அழைத்தாரோ... அதே போல அவளும் சின்ன வயதிலிருந்து அவரைத் தாத்தா... என்றுதான் அழைத்தாள்.

வசுந்தராவுக்கு இந்த உறவு முறை கொஞ்சமும் பிடிக்கவில்லை...இதையும் பல காரணங்களை முன் விட்டு... அசட்டையாக அனுமதித்திருந்தாள்.



ஜன்னல் திரையை நன்றாக ஓரமாக ஒதுக்கிவிட்டு தோட்டத்தில் பார்வையை அடிக்கடி அங்கே படர விட்டுக் கொண்டு அவர் அவளுக்கு பலத்த உபசாரம் செய்து கொண்டிருந்தார்.

“ஜாமூன் வாயிலே கரையுது!” என்று அவள் சொன்னதும் உச்சி குளிர்ந்து போனார்.

“எல்லாத்தையும் நல்லா சாப்பிடு—உங்கம்மா மாதிரி வயித்துக்கு வஞ்சனை வேண்டாம்—!” சொல்லிவிட்டு மேஜையருகே ஒட்டிக்கொண்டு நின்றார்.

கரண்டியால் ஜாமூனை வெட்டி அவள் வாயில் திணித்துக் கொண்டு ருசித்து விழுங்குவதை வேடிக்கை பார்த்தபடி நின்றவரால் பேசாது இருக்க முடியவில்லை.

“பாப்பா! அம்மா வீட்டிலே இல்லை—ஒட்டுக்கேட்க ரத்னாவும் அருகில் இல்லை. அதனாலே நான் சொல்ல விரும்பறேன்...”

—நிமிர்ந்து! அவரை வியப்புடன் பார்த்தாள் சம்யுக்தா.

“உங்கப்பாவுக்கு இந்த இனிப்பு பண்டம் ரொம்ப பிடிக்கும். குப்புசாமி இன்னும் ஒண்ணு கொண்டு வந்து போடுங்கோன்னு பிரியமா கேட்டு சாப்பிடுவார். நானும் கவனிச்சுக்கிட்டே வரேன். உணவு வகைகளில் அவருக்குப் பிடிச்சதெல்லாம் உனக்கும் பிடிக்கிறது... நுனிக் காலை மாடிப்படி மீது அழுத்திக் கொண்டு... குதிச்சாப்போல அவர் இறங்குவார்—அதேபோல நீயும் செய்யறே! அவர் நாற்காலியிலே சாஞ்சுகிட்டு இடது கையாலே மோவாயைத் தாங்கிட்டு புத்தகம் படிப்பார், அதேபோல நீயும் உட்கார்ந்துகிட்டு படிக்கிறே—ஏதாவது கேட்கணும்னு தோணினா கீழ் உதட்டை கடிச்சுகிட்டு மெலிசா முறுவலிப்பார். அதே போல நீயும் செய்யறேம்மா... பெற்றவர்களைப்போல பிள்ளைகள் சாயலில் இருக்கலாம். அது இயற்கையின் நியதி...

Vennila

உனக்கு நல்லா ஞாபகம் வருமுன் உன் அப்பா வீட்டை
விட்டு போயிட்டாரே அப்படி இருந்தும் அவரது பழக்க
வழக்கமெல்லாம் உன்னை எப்படி வந்து தொத்திக்
கிட்டது? எனக்கு ரொம்ப ஆச்சர்யமா இருக்கு..!''

கரண்டியால் வெட்டி துண்டமிட முயன்ற தயிர்
வடையை அப்படியே விட்டுவிட்டு—விருக்கென்று
நிமிர்ந்து அவரை திகைப்புடன் பார்த்தாள்.

சந்தர்ப்பம் கிடைத்தபோது அவளும் அவரிடம் சில
சங்கதிகளைக் கேட்க விரும்பியது உண்மை. ஆனால்
அதற்கு இதுநாள் வரை வாய்ப்புக் கிட்டவில்லை.

சில நாட்களாக மனதைக் குடைந்து கொண்டிருந்த
அந்தச் சங்கதியை இப்போது கேட்கத் துணிந்து
விட்டாள்.

''தாத்தா! நீங்க எனக்கு ரகசியமா கொடுத்த
அப்பாவோட புகைப்படத்தை நான் மந்திரத்தாயத்
தைப் போல என்னோட வச்சுக்கொண்டிருக்கேன்.
ஆனால் அதில் முகம் சரியாகவே தெரியலை. படம்
ரொம்ப பழுப்படைஞ்சு போயிருக்கு—வேறே பெரிய
படம் எதுவும் வீட்டிலே கிடையாதா?''

''நிறைய இருந்துச்சு பாப்பா...உங்கம்மா கோபத்
துடன் எல்லாத்தையும் கிழிச்சுப் போட்டுட்டாங்க...
ஆனால் ஒண்ணு என்கிட்டே என் பெட்டியிலே
பத்திரமா இருக்கு—உன் தாத்தா அறையிலே மேஜை
மேலே சாய்ந்த வாக்கில் வச்சிருந்த அந்தப் படத்தை
நான் சட்டுனு எடுத்து என் பெட்டியிலே ஒளிச்சு
வச்சுட்டேன். உங்கப்பா பெரிய மனுசன்னு காட்டிக்
காம பண்டிகை தினங்களில் எங்களோடு சமமா கலந்து
கொள்வார்—ஒரு சமயம் வீட்டு வேலைக்காரங்க நாங்க
எல்லோரும் ஒரு குருப் போட்டோ எடுத்துக் கிட்டோம்.
அவர் எங்களோட சேர்ந்து அந்தப் படத்திற்கு
நின்னார்..நான் உனக்குக் கொடுத்தது அந்த குருப்
போட்டோவிலிருந்து அவர் படத்தைத் தனியா



கத்தரிச்சு எடுத்துத் தந்தது.! எனக்கு உங்கப்பா மேலே
ரொம்ப பிரியம் பாப்பா...அவர் ரொம்ப நல்லவர்...!''

அவரது குழைந்த குரல் அவள் நெஞ்சை நெகிழச்
செய்தது. தான் பார்த்து-பழகி-உறவை இனிமையாக
அனுபவிக்க முடியாது போய்விட்ட அந்தப் பிரிவை
எண்ணியபோது அவள் கண்களில் நீர் புரண்டது.

''அவரைப்போல கண்ணியமானவரை நாம் சந்திக்
கிறது அபூர்வம் பாப்பா.. !''

துயரமும் பெருமையும் கலந்த ஒரு உணர்வில்
அவளது நெஞ்சு விம்மித் தணிந்தது. கூடவே நிழலாக,
நின்ற தாயை விட-சிறுவயதிலே அவளைவிட்டு
மறைந்து போன அப்பாவின் மீது அவளுக்கு அதிக
மானதொரு அன்பு இருந்தது.

இப்போது அப்பா இருந்தால்?என்று பல சமயங்கள்
அவள் கற்பனையில் அவரை நினைத்து நெஞ்சு
உருகியதுண்டு.

''தாத்தா! எனக்கு அப்பாவின் முகம் நிழல் போலத்
தான் நினைவில் இருக்கு. எத்தனையோ தடவை
நினைச்சுப் பார்க்கிறேன். அவர் உருவத்தை என்னால்
நினைவில் கொண்டு வரமுடியலை...உங்ககிட்ட இருக்
கிற அந்தப் போட்டோவைக் காட்ட முடியுமா?.. ''

''பாப்பா! கொண்டு வரேன்...தோட்டத்துப் பக்கம்
நீ ஒரு கண் வச்சுகிட்டிரு. திடீர்னு அந்த ரத்னா வந்து
உள்ளே நின்னா காரியம் கெட்டுவிடும்''

—சொல்லி விட்டு மூச்சிறைக்க பின்பக்கம் விரைந்
தார்.

நாளேடு ஒன்றில் சுற்றி வைக்கப்பட்டிருந்த படத்
தையும் அதன்கூட பத்திரமாகப் பாதுகாக்கப்பட்ட
தொரு கடித உறையையும் எடுத்துக்கொண்டு வேக
மாக வந்தார்... நாளேட்டைப் பிரித்து கண்ணாடியும்
சட்டமும் காத்துக்கொண்டிருந்த புகைப் படத்தை
அவள் முன் மேஜை மேல் வைத்தார்.

Vennila

நெஞ்சு படபடக்க வியப்பில் கண்கள் விரிய அவள் தன் தந்தையின்-பெரிய அளவில் பளிச்சென்று தெரிந்த படத்தை ஊன்றிப் பார்த்தாள்.

சுருண்ட முடியும் கூர்மூக்குமாக அப்பா போட்டோவில் அழகாகவே தெரிந்தார்...அந்தக் கண்களில்தான் எத்தனை சிரிப்பு? நேரில் அவரைப் பார்த்துவிட்டது போன்றதொரு பிரமை...அவளது மார்பு தீவிரமாகத் துடித்தது - கண்கள் பனித்துப் போயின...

"அப்பா! என்னை ஏன் விட்டுட்டு போனீங்க... நான் என்ன குற்றம் செய்தேன்?" உரக்கக் கத்திகேட்க வேண்டும் போன்றதொரு விவரிக்க இயலாதுயரம் நெஞ்சை அழுக்க...மெல்ல படத்தின் மீதிருந்த கண்ணாடியை விரல்களால் தடவினாள்...

# 6

பார்வையை மறைத்த கண்ணீரை சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டாள். சம்யுக்தா.

"அப்பா உங்க மகளோட கொஞ்சம் பேச மாட்டீங்களா?" என்று கேட்கவேண்டும் போன்றதொரு குழந்தைத் தனமான ஆசை மனதை அழுத்தியது... உணர்ச்சி வசத்தில் அவளது மூக்கின் நுனியும் உதடுகளும் லேசாகத் துடித்தன. தன்னையும் மீறி உடம்பு முழுதும் மெல்ல ஆடுவதை உணர்ந்தாள்.

தானாடா விட்டாலும் தசை ஆடும் என்பார்களே... எத்தனை பெரிய உண்மை...



படத்திலே அவரைப் பார்க்கும் போதே இத்தனை ஒரு பரவசம் என்றால் நேரில் அவரைப் பார்க்க நேரிட்டு விட்டால்?...

கும்மென்று நெஞ்சைத் துயரமும் ஆனந்தமும் ஒருங்கே கவ்வ அவள் மெல்லிய குரலில் கேட்டாள்.

"தாத்தா! இந்தப் படம் எப்போது எடுக்கப் பட்டது?"

"அவர் வீட்டைவிட்டுக் கிளம்புவதற்கு ஒரு மாதம் முன்னர் எடுத்தது. அப்போ வாலிப மிடுக்கோடு இருந்த மனுசன்..." தம் இரு தோள்களையும் குலுக்கிவிட்டு சலிப்புடன் சூள் கொட்டினார் குப்புசாமி.

கேட்க பயமாக இருந்தது— ஆனாலும் கேட்காதிருந்தால் மனதின் அமைதியே குலைந்துவிடும் போல மிரட்சியாகவுமிருந்தது அவளுக்கு. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"அப்பா இப்போ உயிரோட இருக்கார்னு என்ன நிச்சயம்?"

"உங்கம்மாவோட பூவும் பொட்டும் உனக்கு உண்மையைச் சொல்லலியா?"

"விளக்கமாகச் சொல்லக்கூடாதா தாத்தா, சுத்தி வளைக்கிறீங்களே?"

"உன் அப்பா உயிருடன் இருக்கார். எனக்குத் தெரியும். உன் அம்மாவுக்கும் தெரியும். ஆனால் அவரது இன்றைய முகவரி தெரியாது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் நான் இந்த ஊரில் ஒரு ஓட்டலில் அவரைச் சந்தித்தேன்..."

நிமிர்ந்து எழுந்து நன்றாக உட்கார்ந்து கொண்டாள் சம்யுக்தா—அவளது மார்பு விண்டுவிடும் போல விம்மியது

"சொல்லுங்க தாத்தா!" ஆவலுடன் கேட்டாள்.

Vennila

தொண்டையைச் செருமிக்கொண்டார் குப்புசாமி. மெல்ல ஜன்னல் வழியே தோட்டத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டார். ரத்னா மகிழமரத்தடியில் உதிர்ந்து கிடந்த பூக்களை சேகரிப்பதில் மும்முரமாக இருந்தாள். இன்னும் முல்லைப் பந்தலும், சம்பங்கி மரமும் பாக்கியிருந்தன. அவள் உள்ளே வருவதற்குக் கொஞ்சம் நேரம் செல்லும் என்ற துணிவில் பேச ஆரம்பித்தார்.

"உன் அம்மா இங்கே வந்து குடியேறித் தொழிற்சாலையை ஏராக்கி நடத்த ஆரம்பிச்ச சமயம் அது. எங்க ஊர் பிள்ளையாண்டான் ஒருவன் இங்கே அந்த ஓட்டலில் எடுபிடி வேலை செய்றான்னு கேள்விப்பட்டு அவனைப் பார்க்க ஒரு மாலைப்பொழுது கிளம்பியிருந்தேன். அவன் அந்த ஓட்டலில் இப்போது வேலை செய்யலை. ஊருக்குத் திரும்பிட்டான்னு கல்லாப்பெட்டி அருகே உட்கார்ந்திருந்தவர் சொன்னார். ஏமாற்றத்துடன் திரும்பினப்போ தடால்னு ஒருத்தர் மேலே இடிச்சுட்டேன். 'மன்னிச்சுக்கோங்க'ன்னு குரல் கேட்டதும்... திகைச்சுப் போய் முகத்தைப் பார்த்தேன். பாப்பா! நான் அப்படியே அசந்து போய் விட்டேன்."

"என்ன ஆச்சு தாத்தா?"

"கச்சிதமா அழகா இருந்த உன் அப்பா தாடியும் மீசையுமா உடம்பு இளைச்சுக் கருத்துப் போய் ரொம்பவே மாறிப் போயிருந்தார்.

"நீங்களா அய்யா?"ன்னு அவர் கையை வியப்போடு பிடிச்சேனே— மின்விசை தாக்கினாப் போல அதிர்ந்து போனேன். அவர் நல்ல காய்ச்சலோடு அனத்திக்கிட்டு நின்று கொண்டிருந்தார். பிறகு விசாரிச்சப்போ தெரிஞ்சுது, அந்த பக்கத்திலே அவர் ஒரு லாட்ஜிலே தங்கியிருப்பதாகவும் நாலு நாளா காய்ச்சலோடு அவதிப்படறதாகவும் சொன்னார்.



"அப்படியா?"–சம்யுக்தாவுக்கு அழுகை தொண்டையை அடைத்தது.

"நான் உடனே அவருக்கு காப்பி வாங்கிதந்து கைத் தாங்கலா பிடிச்சுகொண்டு போய் அந்த லாட்ஜில் அவர் தங்கியிருந்த அறையிலே கொண்டு விட்டேன். உன் அப்பா தங்குகிற இடமா அது? ரொம்ப அழுக்குப் பிடிச்ச கட்டடம். மக்கல் வாசனையடிச்ச அறைக்குள்ளே அழைச்சிட்டு போய் அவரை, பல நாள் துவைக்காம கிடந்ததுபோல தெரிஞ்ச படுக்கை விரிப்பு கிடந்த கட்டில் மேலே படுக்க வச்சப்போ என் மனசு ரொம்ப வேதனைப்பட்டது. அவர் ஊரிலே நம்மோட இருக்கச்சே எப்படி சொகுசா வாழ்ந்தார்? இப்ப இங்கே வந்து அழுக்கிலே புரண்டுகிட்டு— ஏழை மனுசனா இப்படி அனாதையா தவிக்கணுமான்னு நினைச்சப்போ எனக்கு துக்கம் தாங்கலை...

"ஐயா மருந்து ஏதாச்சும் சாப்பிட்டீங்களா?"ன்னு கேட்டேன். தலையை ஆட்டினார்.

"எனக்கு சங்கதி புரிஞ்சுட்டது. வேலை கிடைக்காம— கையிலிருந்த காசு செலவழிஞ்சுபோய் காய்ச்சலோடு திண்டாடுகிறார்னு தெரிஞ்சது..."

"அப்புறம்...?" திகிலுடன் வினவினாள் சம்யுக்தா... என்ன முயன்றும் தடுக்க முடியாது அவளது கண் இமைகள் ஓரம் நீர்கோர்த்துக் கொண்டது.

"அப்படியே விட்டுவிட்டு வந்துடுவேனா? ஓடிப் போய் பக்கத்திலே கிளினிக் வச்சிருந்ததொரு டாக்டரைக் கூட்டிவந்து காட்டி வைத்தியம் செய்ய வச்சேன். டாக்டர் பீஸ்— மருந்து செலவு எல்லாத்தையும் நான் ஏத்துக்கிட்டேன்."

"தாத்தா...! உங்களுக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்... அப்பாவுக்கு நீங்க செய்த உதவிக்கு..." மேலே பேச முடியாது திணறினாள்.

Vennila

“சீக்கிரம் சங்கதியை சொல்லி முடிச்சுடறேன் - ரத்னா உள்ளே வந்தா பிறகு நான் ஒரு வார்த்தை உன் கிட்டே பேசமுடியாது... உங்கம்மாவுக்குத் தெரியாம தினமும் என் காசிலே பால் வாங்கி காய்ச்சி பிளாஸ்க்கிலே ஊத்தி எடுத்துக்கிட்டு கடைத்தெருவுக்குப் போய் கொஞ்சம் கையோட ரொட்டி வாங்கி எடுத்துட்டு போய் அவரைப் பார்த்து... கொஞ்சம் சாப்பிட வச்சு... மருந்துகளை கொடுத்துட்டு... கொஞ்சநேரம் உட்கார்த்து பேசிட்டு வரத் தொடங்கினேன்.

“குப்புசாமி! எனக்கு நீங்க ரொம்ப செலவழிக்கிறீங்க... இந்தக் கடனை பின்னாலே எனக்கு வேலை கிடைச்சதும் அடைச்சுடுவேன்னார். ஒரு வாரத்திலே அவர் உடம்பு குணமாகிவிட்டது. வழக்கம் போல அவரைப் பார்க்க பால், ரொட்டியோட போனப்போ அறை பூட்டிக்கிடந்தது. அவர் லாட்ஜை காலிபண்ணிவிட்டு எங்கேயோ போய் விட்டார். ஒரு கடிதாசியை மட்டும் தன்னைத் தேடி வரவர் கிட்டே கொடுக்கும்படி சொல்லிவிட்டுப் போயிருந்தார்...!”

“என்ன எழுதியிருந்தார் தாத்தா? அந்தக் கடிதாசி...?” கேட்குமுன் அவள் கண்களிலிருந்து நீர் முத்துக்களாக கன்னங்களில் உருண்டது.

“அதையும் பத்திரமா வச்சிருக்கேனே... இந்த பழுப்பு உறைக்குள்ளே உங்கப்பா எனக்கு எழுதின கடிதம் இருக்கு, படிச்சுப்பார்—!” அவளிடம் அதைத் தந்துவிட்டு... மீண்டும் கவலையுடன் தோட்டத்தைப் பார்த்தார்.

மாலை மங்கிக்கொண்டு வந்த நேரத்திலே இன்னமும் ரத்னா முல்லைப் பந்தலை விட்டு அகலவில்லை.

பரபரப்புடன் கடிதத்தைப் பிரித்தாள்.

நீர்க்கமாக தெரிந்த அப்பாவின் கையெழுத்தை முதல் முதலாக அவள் பார்த்ததில் ஏற்பட்ட உணர்ச்சி கொந்தளிப்பு நெஞ்சை நடுங்கச் செய்தது...



அப்பா மட்டும் கூட இருந்தால்... அவளது பிறந்த நாள் போது வரும் வாழ்த்து மடல்கள் ஒன்றில் மனமார வாழ்த்தி... நீர்க்கமான தமது கையெழுத்தைப் போட்டு அவளது படுக்கையறை மேஜைமீது தாமே கொண்டு வந்து வைத்திருப்பாரே... அவள் பொக்கிஷம் போல அவரது வாழ்த்து மடல்களை சேகரித்து வைத்திருப்பாளே— யார் யாரோ அவளுக்கு இப்போது வாழ்த்து மடல்கள் அனுப்புகிறார்கள். ஆனால் அவை யாவும்... ‘அன்புள்ள உன் தந்தை லோகநாதன்’ என்ற கையெழுத்துக்கு ஈடாகி விடுமா?

கண்களைத் துடைத்துக்கொண்டு கடிதத்தைப் படித்தாள்.

பிரியமுள்ள குப்புசாமிக்கு,

நான் முன் பணமாக தந்த வாடகை இன்றுடன் தீர்ந்து விடுவதால் இடத்தைக் காலிசெய்துகொண்டு போக வேண்டி உள்ளது. நீங்கள் வரும்வரை காத்திருக்க முடியவில்லை—மன்னிக்கவும். நீங்கள் செய்த உதவிக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். வேலை தேடிக்கொண்டு வடக்கே போகிறேன். மீண்டும் சந்திப்போமா என்பது சந்தேகம். நீங்கள் தந்த முகவரியைப் பத்திரமாக வைத்திருப்பேன்...ஏன் எனில் எனக்கு திடீரென்று உடல்நலம் குறைந்து மரணம்ஏற்பட்டால்... என் மறைவு பற்றி என் மனைவிக்கு யாராவது தெரிவிக்க ஏற்பாடு செய்து விடுவேன்...உமக்கும் கடிதம் வரும்—தெரிந்து கொள்வீர்கள். உயிருடன் இருந்தால் என்றாவது சந்தித்தால் நீங்கள் செலவழித்த பணத்தை வட்டியுடன் திருப்பித் தந்து விடுவேன்.

எனக்கு நீங்கள் ஒரு உபகாரம் செய்ய வேண்டும். என் மகள் என்னைப்பற்றி எப்பொழுதாவது உங்களிடம் கேட்டால் நீங்கள் என்னைப்பற்றி தெரிந்து கொண்டுள்ள நல்ல சங்கதிகளையே சொல்ல வேண்டும் பாவம் அவள்! சின்ன வயதிலேயே அவளைப் பிரிந்து நான்

Vennila

'துளியளவு டிபன் பாழாகி விட்டதுக்கு பதறிப்போய்
விடுகிறியே அம்மா.....ரத்னா! ஒரு இளம் பெண்ணின்
உணர்வுகளை குழப்பி எப்படி அவளது வாழ்வு பாழாகி
விட்டிருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா? வீட்டை
விட்டு வெளியேறிய தன் தகப்பனை எண்ணி அந்த
இளம் உள்ளம் குமுறி—கண்ணீர் விட்டு வேதனையில்
வெம்பி பாழாகிப் போவதை உன் மரமண்டை புரிந்து
கொள்ள முடியாது!' என்று படபடவென்று வார்த்தை
களை வாரிக் கொட்டி...... காலியான அந்தத் தட்டு
டம்ளர்களை அவள் பக்கம் வீசி எறிந்துவிட்டு துண்டை
தோளில் உதறிப் போட்டுக்கொண்டு வெளிநடப்பு
செய்துவிட வேண்டும்போல வெகுண்டார்...

'அவசரப்படக் கூடாது. சம்யுக்தாவுக்கு சந்தர்ப்
பம் கிடைத்தபோதெல்லாம் விவரமாக நடந்ததை
எல்லாம் சொல்லிவிட வேண்டும். அம்மாவிடம்
அதிர்ந்து பேசத் தெரியாது வளர்ந்து நிற்கும் அந்தப்
பெண்ணுக்குள் துணிவையும்...சுதந்திர உணர்வையும்
தூண்டிவிட வேண்டும். அந்தஸ்து பீடத்தில் உட்கார்ந்
திருக்கும் இந்த அம்மா ஒரு அரக்கி என்பதை அவள்
புரிந்து கொண்டு...எதிர்த்துப் போராட வேண்டும்.
இந்த ரத்னாவை தூக்கி இருக்க வேண்டிய இடத்தில்
வைத்து இவள் கொட்டத்தை அடக்க வேண்டும்.
அதுவரை பொறுமனமே பொறு...!' தமக்குள் எண்ணிய
படி மவுனமாக சமையல் அறைக்குள் மறைந்துவிட்டார்.

அன்று இரவு வீடு திரும்பிய வசுந்தரா மிகவும்
மகிழ்ச்சியாகக் காணப்பட்டாள். சிறிதளவு கூடுதலாக
சப்ஜியைத் தவறிப்போய் குப்புசாமி பரிமாறிவிட்டதை
அவள் கவனிக்கவில்லை. கண் இமைகள் வீங்கி—முகம்
உப்பிப்போய் மவுனமாக குனிந்த தலையுடன் சாப்பாட்
டைக் கொறித்த மகளின் மனக்குழப்பத்தைக்கண்டு
கொள்ளாது அவள் பேசினாள்.

சாதாரணமாக வசுந்தரா தான் போய்வந்த இடத்
தில் என்ன நடந்தது-யாரை சந்தித்தாள்-என்ன பேசி



னாள் என்றெல்லாம் மகளிடம் சொல்லமாட்டாள்.
ஊர்வம்புகளை இந்தச் சின்ன வயசிலேயே அவள் ஏன்
தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கருத்து. ஆனால்
அவளால் இன்று பேசாதிருக்க முடியவில்லை.

போன இடத்தில் அவள் சந்தித்த தொழிலதிபர்
சிவப்பிரகாசத்தின் குடும்பத்தினரை அவளுக்கு
ரொம்பவே பிடித்துவிட்டிருந்தது. சிவப்பிரகாசம் நகரத்
திலே பிரபலமானதொரு காகித மை தயாரிப்பு நிறுவனத்
தின் அதிபர். ஆசைக்கும் அந்தஸ்திற்கும் ஒரே மகன்.
அமெரிக்காவில் எம்.பி.ஏ. முடித்துவிட்டு திரும்பியிருந்
தான். விழாவுக்கு அவனை அழைத்து வந்திருந்தனர்
சிவப்பிரகாசம் தம்பதியர். பலாப்பழத்தை * மொய்ப்பது
போல பெண்ணைப் படைத்தவர்கள் எல்லாம் அவனை
சுற்றிக்கொண்டு பேசிச் சிரிப்பதில் பொழுதைக் கழித்
தனர். அப்பொழுதே அவள் தன் மனதிற்குள் ஒரு
கணக்குப் போட்டு விட்டிருந்தாள்.

"நான் இன்னிக்கு திருமதி சிவப்பிரகாசத்தை அந்த
விழாவில் சந்தித்தேன்..." வசுந்தரா மெல்லிய குரலில்
கூறியதைக் கேட்டு மகள் ஒன்றும் புரியாது விழித்தாள்.

"அவங்களோட ஒரே பிள்ளை மோகன் பெற்றோர்
களோடு விழாவுக்கு வந்திருந்தான்!"

சம்யுக்தாவுக்கு பளிச்சென்று புரிந்தது. முகம் சிவந்து
நெஞ்சு படபடக்க ஆத்திரத்துடன் தாயை வெறித்தாள்.

"அம்மா எனக்கு இன்னிக்கு ஒரே தலைவலி... சாப்
பிட முடியலை. மன்னிச்சுக்கோங்க...!" என்று எழுந்து
வேகமாக பீங்கான் அருகே சென்று கைகளைக் கழுவி
வாயைத் துடைத்துக் கொண்டு தாயைத் திரும்பிப் பார்க்
காது மாடிப்படிகள்மீது தாவி ஏறி—தன் அறைக்குள்
சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு—படுக்கைமீது
தொப்பென விழுந்து விட்டாள்.

Vennila

அவளது வாழ்க்கையை அம்மா தன் விருப்பப்படி அமைக்கப் பார்க்கிறாள்—

முடியாது .. முடியவே முடியாது...

அம்மா அவளைத் தன் கைப் பொம்மையாக ஆட்டிப் படைப்பதற்கு அவள் இனி அனுமதிக்கப் போவதில்லை. ஆத்திரத்துடன் தலையணை மீது அவள் பல தடவை ஓங்கிக் குத்தினாள்.

கீழே, சாப்பாட்டறையில் வசுந்தரா... தன் மகளிடம் திடீரென்று காணப்பட்டதொரு துணிச்சலின் தாத்பரியம் புரியாது திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தாள்.

# 7

திங்கள்கிழமை காலையிலிருந்து ஞாயிறு பிற்பகல் வரை வார முழுவதும் உழைத்த தமது வேலையாட்களுக்கு பத்திராசலம் மாதம் ஒரு நாள் விடுப்பு தந்துவிட்டிருந்தார்.

அவரவர்களுக்கு உகந்த நாளைத் தேர்ந்தெடுத்து ஊழியர்கள் முன்கூட்டிய அறிவிப்புடன் விடுப்பெடுத்துக் கொள்ளலாம் என்ற சலுகை இருந்தது. ஆனால் ஒரே நாளில் பலர் லீவில் கிளம்ப உத்தேசித்தால் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றதொரு கட்டுப்பாடும் உண்டு.

இரண்டு நாட்களாக கோதையின் மனதில் ஒரே பதட்டம். காலை அவள் வெளியே கிளம்பியதும் கூடவே



வெளியேறிய மகன் மாலைப் பொழுது மங்கிய பின்னர் தான் வீடு திரும்பினான்.

"பாவம் பிள்ளை! சோறு தண்ணி இல்லாமல் இன்னமும் எத்தனை கம்பெனியின் படியேறி வேலைக்கு அலைஞ்சு கொண்டிருக்கானோ?" தாயின் மனம் மகனை நினைத்துப் பாகாய் உருகியது.

காலை வேலைக்குப் போகு முன்னும்–வேலையிலிருந்து திரும்பி வரும்போதும் தெருப்பிள்ளையாரை அவள் வணங்கி மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். வீட்டுக்கு வந்ததும் கதவைத் திறந்து நடைவிளக்கைப் போட்டதுமே அவளது கண்கள் தரையைத் துழாவின.

அந்தத் தெருவுக்கு வரும் தபால்காரர்–அவளது கடிதத்தை கதவிடுக்கு வழியே நடைக்குள் தள்ளிவிட்டுப் போய் விடுவது வழக்கம்.

அப்படி தினசரி அவர்களுக்குக் கடிதம் வந்துகொண்டிருந்ததில்லை. எப்பொழுதாவது அருணின் நண்பர்கள் யாராவது கடிதம் போடுவது உண்டு. அவளுக்கு தோழி மீனா சிலசமயம் நலன் விசாரித்து ஒரு கார்டு போடுவதுண்டு. பத்திராசலம் பலகாரக்கடை ஊழியர்கள் வீட்டுத் திருமண அழைப்பிதழ் அவளுக்கு சில சமயங்களில் வருவதுண்டு. அதைத் தவிர பொதுவாக அவர்களைத் தேடி நெருங்கிய உறவினர் எவரிடமிருந்தும் கடிதங்கள் வந்ததில்லை.

சமீப காலத்தில் அருண் வேலை தேடப்புறப்பட்ட பின்னர்—கம்பெனிகளிலிருந்து விண்ணப்பத்தாள்கள்–நேர்முகதேர்வு அழைப்பு என்று கடிதங்கள் சில வரத் தொடங்கியிருந்தன.

"பார்வதி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தாருக்கு அவனைப் பிடித்திருந்தது போல தெரிந்தது என்று சொன்னானே...இன்னமும் அவர்களிடமிருந்து ஒரு பதிலையும்



Vennila

காணவில்லையே...!'' நடையின் வெறுமையான தரை
யைப் பார்த்து அவள் தவியாகத் தவித்துப் போனாள்.

வேலைமீது நாட்டமின்றி கவலையில் துவண்டு
விட்டிருந்த கோதை, அன்று தன் மாதாந்திர விடுப்பை
எடுத்துக் கொண்டிருந்தாள். அந்த ஒரு நாளில்தான்
அவள் வீட்டை ஒட்டடை அடித்து, சமையலறை அல
மாரியில் வைக்கும் சாமான்களை ஒழுங்கு செய்து கூடம்,
தாழ்வாரம் முதலிய இடங்களைப் பெருக்கி கழுவித்
துடைத்து—வீட்டை துப்புரவு செய்வாள்.

அழுக்காகிவிட்ட மகனது உடைகளை சோப்புத்
தூள் போட்ட நீரில் ஊற வைத்து நன்றாக துவைத்து
புழக்கடை கொடியில் காய வைப்பாள். தலை முழுகி
விட்டு கூடத்து அலமாரித் தட்டிலிருக்கும் பூஜை
விளக்கை எடுத்துப் பொன் போல பளபளக்கும் வரை
துலக்கித் துடைத்து—பொட்டு வைத்து எண்ணையும்
திரியுமிட்டு மாலை ஏற்றுவதற்கு தயாராக வைப்பாள்.
மறுநாள் காலை மகனுக்கு காப்பியுடன் கொடுக்க
இட்டலிக்கு மாவரைத்து முடிப்பாள்.

பகல் பொழுது சீக்கிரம் மகன் திரும்பிவிட்டால்
என்று அவசரமாக சமைத்து வைப்பாள். பின்னர்
காய்ந்துவிட்ட அவனது உடைகளை சேகரித்து எடுத்
துச் சென்று தெருவில் உள்ள நடமாடும் இஸ்திரி
வண்டிக்காரரிடம் கொடுத்து பெட்டிபோட்டு வாங்கி
பத்திரமாகத் தங்கள் பீரோவுக்குள் வைப்பாள்

ஒரு தம்ளர் மோரைக் குடித்துப் பசியைத் தணித்துக்
கொண்டு மகன் வரவுக்காக சாப்பிடாது உள்ளும் புறமும்
நடையாக நடந்து கொண்டிருப்பாள். கதவைத் திறந்து
வாசலில் இறங்கி தெருக்கோடி வரை எட்டிப்பார்த்து
அவளது கழுத்தே வலித்துவிடும். அவள் வீட்டிலிருக்
கும் அந்த நாளாவது மகன் வேளைக்கு வந்து சாப்பிட
மாட்டானா என்கிற ஆதங்கம்.



அன்று காலை அவள் விக்டோரியா அவன்யூ
வீட்டில் சமையல் வேலையை முடித்து விட்டு. நேரே
தன் இல்லத்திற்கு வேகமாக திரும்பிக் கொண்டிருந்
தாள்.

தெருவுக்குள் அவள் புகுந்ததுமே சைக்கிளைவிட்டு
இறங்கிய தபால்காரர் அவளைப் பார்த்து புன்னகைத்
தார்.

''உங்க மகனுக்கு ஒரு ரிஜிஸ்டர் தபால் வந்திருக்கு.
நேத்து யாரும் வீட்டில் இல்லைபோலிருக்கு-இரண்டு
வாட்டி வந்து போனேன்.''

கோதை தன் பெயரை நன்றாகத் தமிழில் எழுதத்
தெரிந்து கொண்டிருந்தாள். பத்திராசலம் பலகாரக்
கடையில் மாதச்சம்பளம் வாங்கும்போது கணக்கர்
நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடவேண்டியிருந்
தது. ஆரம்பத்தில் தமிழ் எழுதப்படிக்க அவள் மிகவும்
திண்டாடினாள். பட்டண வாசத்தின் மகிமை, சில
ஆண்டுகளில் தமிழ் நாளேடுகளை நன்றாகப் படிக்க
வும்... மெல்ல எழுத்துக்கூட்டி தன் சினேகிதி மீனாவுக்கு
பதில் கடிதம் எழுதவும் தெரிந்துகொண்டு விட்டிருந்
தாள்.

மகனுக்கு எப்பொழுதாவது வரும் ரிஜிஸ்டர் தபால்
களை அவனில்லாதபோது, தான் கையெழுத்து போட்டு
பெறும் அனுமதியைப் பெற்றிருந்தாள்.

தடிமனான காகித கட்டுமீது தபால்காரர் வைத்த
வெள்ளைத்தாளில் குறிப்பிட்டிருந்த எண் முன்னால்
கையெழுத்துப்போடும் போது அவள் உடல் முழுவதும்
நடுங்கியது.

கடித உறையை வாங்கிக்கொண்டாள். முகவரியும்
அனுப்புனர் பெயரும் ஆங்கிலத்தில் இருந்தது. அந்த
பழுப்பு வண்ண உறைக்குள் இருக்கும் கடிதம் எங்
கிருந்து வந்திருக்கும்.

Vennila

“தபால்கார அய்யா’ யார் இதை அனுப்பிச்சிருக்காங்கன்னு சொல்ல முடியுமா?” பணிவுடன் கேட்டாள்.

“உங்க மகனுக்கு பார்வதி எலக்டிரிகல்ஸ் என்கிற நிறுவனத்திலிருந்து வந்திருக்கம்மா... உள்ளூர் கடிதம் தான்...ஏதோ முக்கிய சங்கதி! அதனாலே ரிஜிஸ்டர் பண்ணி அனுப்பிச்சிருக்காங்க” சிரித்தபடி அவர் சைக்கிள்மீது தாவி வேகமாகத் தெருவிலிருந்து மறைந்து போனார்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வருவதற்குள் அவளுக்கு கையும் காலும் பதறி விட்டன. அலமாரியிலிருக்கும் தெய்வப் படத்தருகே கடித உறையை வைத்து ‘பகவானே-கடிதத்தில் வந்திருப்பது நல்ல செய்தியாக இருக்கட்டும்’’ என்று பிரார்த்தித்துக் கொண்டாள். பின்னர் அக்கடித உறையைப் பத்திரமாக இரும்புப் பீரோவில் வைத்துப் பூட்டி விட்டு மற்ற காரியங்களை கவனிக்கத் துவங்கினாள்.

வெளியில் போயிருக்கும் மகன் இன்று சீக்கிரம் திரும்பக் கூடாது...மாலைவரை அவள் கடிதத்திலுள்ள செய்திக்காக காத்திருக்க வேண்டுமா?

அன்று முழுவதும் அவளுக்கு வேலை ஓடவேயில்லை. ஒரே தடுமாற்றம். புழக்கடை கொடியில் காயப்போட்டிருந்த துணிகளை எடுத்து வரப் பின்னால் சென்றவள் மறந்து போய் திரும்பி உள்ளே வந்து நின்றாள்.

குக்கருக்குள் வெந்து தயாராகி விட்டிருந்த பருப்பை எடுத்து சாம்பார்செய்ய மறந்து வீட்டை சுற்றிவந்தாள்.

‘சே! இன்னிக்கு எனக்கு என்ன வந்துவிட்டது? ஏன் இப்படி குழம்பறேன்!’ தன்னையே சாடிக் கொண்டு... விட்டுப் போன வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள்.

அடுப்பில் வெந்து கொண்டிருந்த காய்களில் புளி கரைத்து ஊற்ற முயன்றபோது... கை முழுவதும்



நெருப்பாக எரிந்தது. பலகாரக்கடை இரும்புச் சட்டியைத் தேய்த்துக் கழுவி தேய்ந்து போன நக இடுக்குகளில் லேசாகப் புண். புளி நீர் பட்டதும்...ஒரே எரிச்சல்.

தினமும் வெகுநேரம் நின்றபடி அடுப்பு மேடையில் காய்ந்து கொண்டிருந்த எண்ணையில் அதிரசத்தைத் தட்டிப் போட்டு பதமாக எடுத்துக் குவித்ததின் பலன்... கணுக்காலிலும்-பாதங்களிலும் நீர் கோர்த்துக் கொண்டு உப்பியிருந்தன. நடக்கும் போது கணுக்கால் முறிந்து விடும் போன்று வேதனையில் துடித்தாள்.

மகனுக்கு மட்டும் நல்ல வேலை கிடைத்து விட்டால்...அவன் சொல்வது போல வீட்டோடு தங்கிக் கொண்டு...கோயில் குளங்களுக்கு மட்டும் போய்வந்து-தோழி மீனாவை அடிக்கடி சந்தித்துப் பேசி மகிழ்ந்து-மேலே அவளது கற்பனை தாவ முடியாது தடைப் பட்டுப் போயிற்று.

வாயிற் கதவு பலமாக இடிபட்டது. வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

கையில் பெட்டியும் முகத்திலே அலைந்து திரிந்த களைப்புமாக அருண் உள்ளே வந்தான்.

பீரோவுக்குள் வைத்திருந்த கடிதத்தை சட்டென்று அவள் எடுத்துக் கொடுக்கவில்லை.

அவனும் கடிதம் ஏதேனும் வந்ததா என்று கேட்கவில்லை. பல கம்பெனிகளின் படிகளில் ஏறி இறங்கி ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கிறான் போலும்-எண்ணிக் கொண்டாள்...

மவுனமாக அவன் குளியலறைக்கு விரைந்து விட்டான். சூடான சோற்றின் மீது புளிக்குழம்பை ஊற்றி நெய் விட்டு...புடலங்காய் பொரியலுடன் உபசரித்தாள் தாய்.

Vennila

''நீங்க நம்ப மாட்டீங்க அம்மா...காலையில் இரண்டு தோசை ஒரு தம்ளர் காப்பியோடக் கிளம்பினவன். பிறகு பச்சத்தண்ணீர் கூட பல்மேல் படவில்லை. அப்படி ஒரே அலைச்சல்...அப்பப்பா...''என்று கூறிய படி சாப்பிட்டவன் எழுந்து கைகழுவிக் கொண்டான்.

''நீங்க சாப்பிடலையா அம்மா...எப்பவும் எனக்காக காத்துக்கொண்டு ரொம்ப நேரம் பட்டினியா இருக்கீங்களே...உடம்புக்கு நல்லதில்லை அம்மா!'' மகன் கனிவுடன் கேட்டபடி துவாலையால் கைகளையும் வாயையும் துடைத்துக் கொண்டான்.

''இன்னிக்கு எனக்கு விடுப்பு நாள் இல்லையா!'' அம்மா சிரித்தாள்.

''தெரியும். ஒரு தம்ளர் மோரோட வீட்டைத் துப்புரவாக்குவதில் பசியை மறந்திருப்பீங்க... நீங்களும் என்னோடவே கூட உட்கார்ந்து சாப்பிட்டால் என்னவாம்?''

''இல்லேப்பா— உனக்கு முதல்லே பரிமாறி நீ திருப்தியா சாப்பிடறதைப் பார்ப்பதே எனக்கு பெரிய இன்பம்...பல ஆண்டுகளாகப் பழகிப் போனதை திடீர்னு மாத்திக்க முடியுமா? அது கிடக்கட்டும். உனக்கு ஒரு ரிஜிஸ்டர் தபால் வந்தது...'' என்றபடி கலவரமும் மகிழ்ச்சியுமான கலவை உணர்வு மனதைக் கவ்வ, பீரோவைத் திறந்து அந்தக் கடிதத்தை எடுத்து வந்தாள்.

''எங்கேயிருந்து வந்திருக்கும்?'' மகன் முடிப்பதற்குள் அவள் குறுக்கே பேசினாள்.

''அன்னிக்கு நேர்முகத் தேர்வுக்குப் போனியே? அந்த பார்வதி எலக்டிரிகல்ஸ் என்கிற நிறுவனம்தான் கடிதாசியை அனுப்பி வச்சிருக்கு...! தபால்காரர் கிட்டே கேட்டு தெரிஞ்சு கொண்டேன்'' முறுவலித்தபடி கடிதத்தைக் கொடுத்தாள்.



உறையைப் பிரிக்குமுன் மகனது கை விரல்கள் நடுங்குவதை அவள் கவனிக்கத் தவறவில்லை.

அவளுக்குள்தான் எத்தனை விதமான உணர்ச்சிக் கொந்தளிப்பு? கடிதத்தைப் படித்தவனின் முகத்திலே பரவி மலர்ந்த சிரிப்பைக் கண்டதும் அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை...

''என்னப்பா அவங்க என்ன எழுதியிருக்காங்க?''

''அம்மா எனக்கு வேலை கிடைச்சுட்டது. முதல் தேதி அன்னிக்கு வந்துசேரும்படி உத்திரவு வந்திருக்கு... பார்வதி எலக்ட்டிரிகல்சுக்கு நான் மனுப்போட்ட அதே வேலைதான் அம்மா... சம்பளம் எத்தனை தெரியுமா?''

''ஏம்பா, உன் படிப்புக்கு ஒரு ஆயிரம் ரூபாய் சம்பளம் போட்டுத்தர மாட்டாங்களா?'' தாயார் மகிழ்ச்சியுடன் மலங்க விழித்தாள்.

''இரண்டாயிரத்து முன்னூறு... பிடிப்புப் போக கையில் சுளையாக இரண்டாயிரம் வாங்கப் போறேன்... அம்மா இனிமேலே நீங்க சமையல் வேலைக்குப்போகக் கூடாது... பலகாரக்கடை வேலையையும் விட்டுடணும்'' என்றபடி அருகில் வந்து அவள் கையில் கடிதத்தை வைத்துக் காலைத் தொட்டுக் கும்பிட்டான், மகிழ்ச்சியுடன்.

''உன் அப்பா படத்துக்கிட்டே கடிதாசியை வச்சு வணங்குப்பா... அவர் ஆத்மா ஆன்மீகமாக இருந்துகிட்டு உன்னை எப்பவும் பாதுகாத்துக்கொண்டு வரதுப்பா...'' தழுதழுத்தாள் தாய்...

''அம்மா...உங்களுக்கு இப்போ மகிழ்ச்சிதானே?'' என்றபடி தாயின் கரங்களைப் பிடித்துக்கொண்ட மகன் திடுக்கிட்டுப் போனான்... பஞ்சு போல மெத்தென்று இருக்கும் அவளது உள்ளங்கைகள் மு[illegible] உறுத்துவதை உணர்ந்தான்.

Vennila

இரும்புச் சட்டியின் கரி ஒட்டிக் கொண்டு தேய்ந்து விட்டிருந்த விரல் நகங்களைப் பார்த்தபோது அவன் மனம் வேதனையில் சுருண்டது. அவன் வாழ்வை வளமாக்க இந்தத் தாய் உண்மையாகவே உழைத்துத் தேய்ந்து விட்டிருக்கிறாளே..

"அம்மா நான் சம்பாதிக்க போடறதை வச்சுக் கொண்டு நீங்க இனி நிழலோட இருக்கப்போறீங்க ?" தாயின் கரத்தைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டான்.

கண் கலங்கிப் போனாள், கோதை.

"விநாயகருக்கு சந்தனக்காப்பு போடணும். வேலை நிரந்தரம் ஆனதும் அருண் உனக்கு தக்க இடத்திலே, ஒரு பெண்ணைப் பார்த்து கட்டிவச்சுட்டா...இந்தக் கட்டைக்கு பூரண ஓய்வு கிடைச்சுடும்ப்பா..."

"நீங்க ரொம்பவே...வேகமாக முன்னே நிக்கொண்டு போறீங்களே அம்மா.." மகிழ்ச்சியோடு சிரித்தான் மகன். அவனது கற்பனையில் ஏனோ சம்யுக்தா...பல முறை பளிச்சிட்டாள்-உடம்பு புல்லரித்துப்போனது.

மகனது கரத்தை வாரி முகத்தில் பதித்துக் கொண்ட கோதையின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் வேகமாக அவனது உள்ளங்கைகள் மீது உதிர்ந்தன.

ஓரம் நைந்த புடவையின் கிழிசலை-தைத்து-இனி அவள் உடுத்திக்கொள்ள வேண்டாம்.

மூச்சிரைக்க வேலைக்கு பஸ் பிடிக்க ஓடவேண்டாம்...

நெருப்பாக எரிக்கும் வெய்யில் காலத்திலே-எண்ணை சட்டி அருகே நின்று அவள் இனி வேக வேண்டாம்.

அவளுக்கும் ஒரு விடிவு காலம் பிறந்து விட்டதே-

"என்னம்மா இது — அழுகிறீங்க?" தாயின் முகத்தை நிமிர்த்திக் கண்ணீரைத் தன் கையால் துடைத்து விட்டான் மகன் அன்புடன்—



"இது ஆனந்தக் கண்ணீர் அருண்...இந்த ஏழை சமையல்காரிக்குக்கூட இப்படி ஒரு யோகமான்னு நினைச்சேன்...மகிழ்ச்சி தாங்கலை-!-" மகன் தோள் மீது சாய்ந்தபடி விசும்பினாள், அன்னை.

## 8

வசுந்தராவுக்குத் தன்னைப் பற்றி பிரமாதமான எண்ணங்கள் உண்டு.

"எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவள்-எந்தப் பிரச்சனையையும் திறமையாக சமாளிக்கத் தெரிந்தவள். கவலைகளைக் கண்டு கலங்காதவள்' எனப் பலவாறு தன்னைப் பற்றி உள்ளூர பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தவள்தான் அழுத்தலாக அவள் அமர்ந்திருந்த அதிகார பீடம் சில நாட்களாக ஆட்டம் கண்டு விட்டதுபோல அவளுக்கு ஒரு திகில் உணர்வு ஏற்பட்டு விட்டிருந்தது. மண்டையை அழுத்திக் கொண்டு சில எதிர்பாராத கவலைகள்.

அம்மா சொல்வதற்கெல்லாம் தலையாட்டிப் பொம்மையாக இருந்த சம்யுக்தாவுக்கு என்ன வந்து விட்டது? அவளுக்குச் சட்டென்று புரியாத பெருத்ததொரு குழப்பம்.

மகளுடன் தொழிற்சாலையினின்று திரும்பியதும் குளித்து-மாற்றுடை அணிந்துகொண்டு ஒரு கட்டு ஃபைல்களுடன் முன்னறையில் உட்காருவதை வழக்க

Vennila

மாக்க முயன்றாள். அலுவலகத்தில் விளரிக்க முடியாத சில அந்தரங்க சங்கதிகளை மகளுடன் பேசி முடி வெடுக்கத்தான் அந்த ஏற்பாடு.

"சம்யுக்தா... இப்படிவா!" என்று அன்று மாலை மகளை அவள் அழைத்த போது—பெண் முகத்தை சுருக்கிக் கொண்டு உட்காரப் பிடிக்காது திரும்பினாள்.

"எங்கே போறே, இப்படி உட்கார்...!"

"டென்னிஸ் பயிற்சியைக் கொஞ்ச நாளா விட்ட திலே உடம்பு கனத்து விட்டிருக்கு. டென்னிஸ் ஆடப் போறேன்...!"

முன்பெல்லாம் வேப்பங்காயாகக் கசந்த அந்த விளையாட்டு இப்போது தேனாக இனிக்கக் காரணம்?

"மாக்ஸியோடவா ஆடப்போறே—தடுக்கி விழுந்து பல்லை உடைச்சுக்காதே...!"

"வெளியே போக புடவையும் வீட்டிலிருக்கும்போது மாக்ஸியும்தான் எனக்கு ஒத்து வருகிறது. பாண்ட் சட்டை அணிய பிடிக்கலை!"

கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு மகளை வெறித் தாள். ஒங்கி உயரமாக நீலவண்ண மாக்ஸியில் ஒடிய கொடியாக நின்ற மகளது அழகிய முகத்திலே—ஆவேச மிக்கதொரு பரபரப்பைக் கண்டாள்.

தலையை நிமிர்ந்து பார்த்துவிட்டு லேசான புன் முறுவலுடன் சம்யுக்தா வேகமாக அங்கிருந்து வெளி யேறி தோட்டத்திற்குள் புகுந்து விட்டாள்.

சாப்பாட்டின் போதும் இப்படியே சில எதிர்ப்பு நிகழ்ச்சிகள்.



"என்னத்துக்கு மாங்காய் பச்சடியை நிறைய போட்டுக்கிறே? குப்புசாமி கூடை வெல்லத்தை போட்டு தயாரிச்சிருக்கார். ஏகப்பட்ட இனிப்பு உடம்புக்கு ஆகாதே?"

"நான்தான் கொஞ்சம் கூட வெல்லத்தைப் போட்டு தயாரிக்கும்படி அவரிடம் சொன்னேன். பச்சடி புளித் தால் எனக்குப் பிடிக்கலை... ஏம்மா எனக்குப் பிடிச்சதை நான் சாப்பிடுவது பற்றி உங்களுக்கு ஏன் மறுப்பு? நான் என்ன சின்ன குழந்தையா? நல்லது கெட்டது தெரியாத பத்தாம் பசலியா?"

தமுட்டுச் சிரிப்புடன் குப்புசாமி மேஜை அருகே நிற்பதைக் கண்டு வசுந்தரா உள்ளூர வெகுண்டு போனாள்.

ரத்னா அலமாரியில் ஏதோ குடைந்து கொண்டிருந் தாள். அவர்கள் முன்னிலையில் மகளுடன் தர்க்கிக்க அவளுக்கு விருப்பமில்லை. கோபத்தை அடக்கிக் கொண்டு மெல்ல சாப்பிடத் தொடங்கினாள். எப்பொழு தும் அம்மா சாப்பிட்டு முடிக்கும் வரை இடத்தைவிட்டு எழுந்திருக்காது அமரிக்கையாக காத்திருக்கப் பழக்கப் பட்ட மகள்; இப்போது வேகமாக சாப்பாட்டை முடித்துக்கொண்டு கையைக் கழுவியதும் மாடிக்கு ஓடத் தொடங்கி விட்டிருந்தாள்.

"இன்னிக்கு டென்னிஸ் பயிற்சிக்கு மார்க்கர் வர மாட்டார். அதனாலே நீ இங்கே வந்து உட்கார்ந்து இந்த ஃபைல்களைப் பார்...!" என்றபோது மகள்... வாசற்படியினின்று வெடுக்கென்று திரும்பி விட்டாள்.

"இப்ப ஞாபகம் வரது... வீணையைக் கட்டி மூலை யில் வச்சிருக்கேன். எடுத்து வாசிக்க பழகிக்கிறேன்!"

முன்னறையில் கோபத்துடன் ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்த தாயின் காதுகளில்... அடுத்த அறையினின்று மகள் வீணையை மீட்டத் தொடங் கியது கேட்டது...

Vennila

ஊசியால் குத்துவதுபோல்... சுருதி
காதுகளை
சேராது தப்பும் தவறுமாக ஏன் வாசித்து வயிற்
றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறாள்? இப்போது திடீ
ரென்று வீணை வாசிப்பதில் ஏன் இந்த மோகம்...?

பற்களைக் கடித்தாள் வசுந்தரா... வேலையை
கவனிக்க முடியாது பதட்டமடைந்து போனாள்.

"இந்த பெண்ணுக்கு ஏன் இப்படி குணம் மாறிவிட்டிருக்கிறது. அம்மாவை எதிர்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாளே—யார் அவளை இப்படி தூண்டிவிட்டிருக்க முடியும்?"—அடக்க முடியாது அன்று இரவு மகளின் படுக்கை அறைக் கதவை மெல்ல விரலால் தட்டினாள்.

"உள்ளே வரலாம்...!" மெதுவாக ஆனால் காரமாக சம்யுக்தாவின் குரல் பதிலளித்தது.

அறைக்குள் விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. தலையணைகளை உயரமாக அடுக்கி வைத்துக் கொண்டு-சாய்ந்தபடி இரவு உடையில் மகள் படுக்கை மீது உட்கார்ந்திருந்தாள். கையில் ஒரு காதல் கதைப் புத்தகம்-முகத்திலே தாயின் குறுக்கீட்டை விரும்பாத ஒரு சிணுங்கல்.

"என்ன சம்யுக்தா?...கம்பெனி ஃபைல்களைப் பற்றி தெரிஞ்சுக்காம டென்னிஸ்-வீணைன்னு ஓடறியே... உனக்கு என்ன ஆச்சு?" அதட்டலாகக் கேட்டாள், தாய்

"நாள்பூரா கம்பெனியைப் பத்தியே நினைச்சு மண்டையைக் குழப்பிக்க என்னால் முடியலை அம்மா...! என் மூளைக்கு ஓய்வு தேவை. யாரோ ஒரு பெரிய அறிஞர் சொல்லியிருக்கார்னு ஒரு பொன்மொழியை நீங்க அடிக்கடி சொல்வீங்களே. அதை நினைச்சுப் பாருங்க !" சொல்லியபடி, தாய் படுக்கையில் தன் அருகே உட்கார கால்களை இழுத்து மடக்கிக்கொண்டு இடம் விட்டாள்.



கட்டிலின் ஓரத்திலே வசுந்தரா, மகள் அருகே அமர்ந்து கொண்டாள். ஆனால் உள்ளத்து எண்ணங்களில் அவளுக்கு வெகு தொலைவில் இருப்பதாக ஒரு பிரமிப்பு ஏற்பட்டது.

சிவப்பாக மின்னிய அந்த கூர்மூக்கின் நுனி அவளுக்கு கணவனை ஞாபகப்படுத்தியது. தாயின் மனப் போக்குப்படி இது நாள்வரை வளர்ந்த மகள் இப்போது தகப்பனைப் போல திசை திரும்புகிறாளே?

தந்தையின் அந்தக் கர்வம், பிடிவாதம் இவை எல்லாம் இவளிடம் திடீர் என்று எப்படி வந்தன?

"ஒரு இளம்பெண் மான் குட்டிக்கு ஒப்பானவள்—திறந்த புல்வெளியில் அதை மேயவிட்டால் எது முள் எது நல்லபுல் என்று தானே தெரிந்துகொண்டு தின்னத் தொடங்கும். யாரும் அதற்குச் சொல்லத் தேவையில்லை. ஒரு குறிப்பிட்ட இளவயதில் ஒரு பெண்ணுக்கு நன்மை தீமைகளைத் தானே புரிந்துக்கொள்ள அறிவு வந்து விடுகிறது...!" அவள் சம்யுக்தாவிடம் அடிக்கடி சொன்னது உண்மைதான்.

இதைச் சொன்ன அறிஞர் யாரோ? ஆனால் வசுந்தராவின் தந்தை அடிக்கடி இதைச் சொல்லி வந்தது உண்மை. அவளுக்கு தானே நல்லது கெட்டதைத் தெரிந்து கொண்டு வாழ, பூரண சுதந்திரம் கொடுத்துவிட்டதாக அவர் நினைத்தார், பலன்?

கண்ணுக்கு அழகாகத் தெரிந்த-கையில் காசில்லாத உற்றார், உறவினர் யாருமற்ற இன்ஜினியர் பட்டம் பெற்றவன் என்ற தகுதிக்காக பரதேசி லோகநாதனை அவள் காதலித்தாள். அவனையே கல்யாணம் செய்து கொள்வேன் என்று அப்பாவிடம் எத்தனை பிடிவாதமாகப் பேசினாள்.

"பார்க்க நல்லா இருக்கான்னு... பாழும் கிணற்றில் விழாதே-காசில்லாவிட்டாலும் ஆசாமிக்கு கர்வத்தில் குறை இல்லை!" என்று அப்பா எத்தனையோ வாதாடினார்.

Vennila

அவள் கேட்கவில்லை...

"நம்ப கம்பெனியில் நம்ப கீழ் வேலை செய்கிறவன்... அந்தஸ்தைப் பத்தி யோசிச்சியா!"—அம்மா புலம்பினாள்.

"கைகட்டிக்கொண்டு உங்க முன் [illegible] நிற்கிறார் அவர். உங்க வியாபாரத்தை விருத்தி செய்து தமது ஆற்றலை தந்து உதவுகிறார். சம்பளம் கொடுக்கிறீங்க... இதில் அந்தஸ்து என்ன வேண்டிக் கிடக்கிறது. உங்ககிட்ட பணம் இருக்கு! அவர்கிட்டே படிப்பும்—திறமையும் இருக்கு...!" லோகநாதனுக்காக வக்காலத்து எடுத்துக் கொண்டாள்.

ஒரே பெண்—அவளது மகிழ்ச்சியும்—திருப்தியும் முக்கியமாயிற்றே? அப்பா கடைசியில் அசைந்து கொடுத்தார்... அம்மா மவுனமாகிப் போனாள்.

லோகநாதன் முடிவில் அவர்களது வீட்டு மாப்பிள்ளையாக மாறினார்.

மாமனார் வீட்டு மருமகனாகத் தங்கிக்கொண்டு விட்டிருக்கும் என் கணவரை இன்னும் கொஞ்ச நாளில் எப்படி மாற்றிவிடப் போகிறேன். பாருங்கள்... அப்பாவிடம் சவால் விடுத்தாள், அவள்.

காதலித்து கைபிடித்த அவள் கணவன் அவள் விருப்பத்திற்கெல்லாம் ஈடுகொடுத்தாரா?

சம்யுக்தா பிறந்தாள்—அந்த குறுகிய காலத்திற்குள்ளே அவர்களுக்குள் எத்தனை அபிப்ராய பேதம்?

"வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம்—கால் பட்டால் குற்றம்" என்பது பழமொழி.

அவள் சம்பந்தப்பட்டவரை... அது தலை கீழாக மாறிப் போனது. மரியாதைக்குரிய மாமனாரிடம் தன் கணவன் அடங்கிக் கிடக்காது எதிர்த்துப் பேசுவதைக் கண்டு எரிச்சல் பட்டாள்.



'உங்களுக்கு மரியாதை என்பதே தெரியாதா...?' என்று தந்தைக்குப் பரிந்துகொண்டு அவள் கேட்டபோது... லோகநாதன் இடக்காக பதிலளித்தார்.

"அதை இனி இந்த வீட்டில் உங்கள் அனைவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்..."

"குழந்தையைக் காரில் வச்சுக்கொண்டு... எங்கே ஊர் சுற்றினீங்க?"

"குழந்தைக்கு வேடிக்கை காட்ட அழைச்சுக் கொண்டு போனேன். இது ஒரு குற்றமா..?"

"வேடிக்கை காட்ட பாட்டனும், பாட்டியும் இருக்காங்க... தாயார் நான் ஒருத்தி இருக்கேனே?"

"பாட்டனுக்கு தன் வியாபாரம் பற்றி நாள் முழுதும் நினைப்பு—பாட்டிக்குக் கல்யாணம்—கோயில் திருவிழா இதுகளுக்குப் போய் வரவே நேரமில்லை. நீ உன் அப்பாவின் நிழல்... இந்த மாதிரியான சூழ்நிலையில் என் மகள்... பெத்தவங்க இருந்தும் அனாதையாக வளர்கிறதை நான் அனுமதிக்கமாட்டேன். பணமும்— பங்களாவும் இருந்தால் போதுமா? ஒரு குழந்தைக்குத் தேவை... பெத்தவங்களோட பாசம்!"

"இது ஒரு சாக்கு—பெட்ரோலை தண்ணியா ஊத்திக் கொண்டு நாலுபேர் மெச்ச... பெரிய மனுசனா நீங்க ஊர் வலம் வரீங்க."

"நான் சம்பாதிக்கிற காசில் காருக்குப் பெட்ரோல் போடறேன். என் மகளைக் கூட்டிக்கொண்டு நாலு இடத்துக்குப் போய் வரேன்... எனக்கில்லாத தகுதியை இருக்கிறது போல காட்டிக்க, நாடகம் நான் போடத் தேவையில்லை. அந்தக் கலை உங்கள் குடும்பத்துச் சொத்து!"

Vennila

"பேசமாட்டீங்களா...நல்லா எல்லா வசதியும் செய்து கொடுத்தா இதுவும் சொல்வீங்க... இன்னமும் சொல்வீங்க!"

"போதும் கேட்க சகிக்கலை...!" அம்மா உள்ளே இருந்து தலையில் அடித்துக்கொண்டு இடை புகுந்தால் தான் இருவரிடையே ஆரம்பித்த தர்க்கம் நிற்கும்.

ஆனால் மனதில் உருவாகிக்கொண்டு வந்த கசப்பு... நெஞ்சுவரை நிற்காது ஏறிக்கொண்டே போயிற்று.

கணவனும் மனைவியும் பேசாது விரோதிகள் போல ஒருவரை யொருவர் முறைத்தபடி... ஒரே வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்ததும் பின்னர் பிளவு ஏற்பட்டதும் ஒரு பெரிய கதை!

வீட்டிலே அந்த நாளிலிருந்து வேலை செய்து கொண்டு வந்த ரத்னாவுக்கோ குப்புசாமிக்கோ— முழு விவரம் தெரியாது.

உடுத்திய உடையுடன் வெளியே போன லோக நாதன் வீட்டுக்குள் திரும்ப வராததின் மர்மம் என்ன என்பது யாருக்கும் தெரியாத ரகசியம்.

அதனால் ரத்னா ஏதாவது சொல்லி சம்யுக்தாவின் இளமனதைக் கலவரப்படுத்தியிருப்பாள் என்று அஞ்சு வதற்கிடமில்லை... குப்புசாமியும்— ஏதாவது உளறி மகளின் மனதைக் குழப்பி இருக்க முடியாது...

அவள் செய்த தவறை மகள் செய்யக்கூடாது என்று தானே அவள் பாடுபடுகிறாள். காதல் என்று சொல்லிக் கொண்டு சகதிக்குள் காலை வைத்துவிடக் கூடாது என்றுதானே அவளைப் பல வழியிலும் தனக்கு அடங்கிய பெண்ணாக ஆரம்பத்திலிருந்து வளர்த்துக் கொண்டு வந்தாள்.



தானே ஒரு நல்ல இடமாகப் பார்த்து மகளுக்கு வாழ்க்கை அமைத்துத் தரவேண்டும் என்பதுதானே அவளது குறிக்கோள்.

சிவப்பிரகாசத்தின் மகன் மோகனைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லுமுன் சம்யுக்தா ஏன் அப்படி வெடித்தாள்.

"காற்றுகூட மேலே பட முடியாதபடி பத்திரமாக வளர்க்கப்பட்ட பெண்... யார் மீதாவது காதல்கொண்டு விட்டாள் என்று சொல்ல முடியாதே—யாரையும் சந்திக்க வாய்ப்புத் தந்ததில்லையே?"—அவளுக்கு இன்னொரு பெரிய குழப்பம் ஏற்பட்டிருந்தது.

இரண்டு தினங்களுக்கு முன்னர், அவளுக்கு நுங்கம் பாக்கம் நெடுஞ்சாலையிலிருந்த தங்கள் அலுவலகத்திற்கு அவசரமாகப் போக வேண்டியதொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

தேநீர் வேளையின் போது... பத்திரமாக இங்கேயே இரு—இதோ வந்துவிடுகிறேன்! என மர்மமாக மகளிடம் கூறிவிட்டு தொழிற்சாலையினின்று அவள் புறப்பட்டு விட்டிருந்தாள். அலுவலகத்தில் அவள் கவனிக்க வேண்டிய வேலை ஐந்து நிமிடத்தில் முடிந்து விட்டது.

வெளியே வந்தவள்... தனக்குத் தெரிந்த பெண்மணி ஒருத்தியின் பிறந்த நாளுக்கு ஒரு புத்தகம் வாங்க அருகிலிருந்ததொரு பெரிய புத்தகக் கடையில் நுழைந்தாள்.

அவளுக்கு நெருக்கமான தோழிகள் யாரும் கிடையாது. வியாபார உலகில் பழக்கமான சில பெண்மணிகளிடம் பட்டும் படாதும் பழகி வந்தாள். பிறந்த நாள்—தீபாவளி—பொங்கல் என்ற விசேட நாட்களை மறக்காது அவர்களுக்கு வாழ்த்து மடல்கள், பரிசுகள் அனுப்பத் தவறியதில்லை... அது அவளது கவுரவப் பிரச்சினை.



Vennila

பரிசைப் பெறப் போகும் பெண்மணியின் ரசனை உணர்வு பற்றி ஏதும் தெரியாது... எனவே அவளுக்கு சமையல் புத்தகம் ஒன்றை வாங்கி தபாலில் அனுப்பி வைக்கும் எண்ணத்துடன் கடைக்குள் நுழைந்தாள்.

"கேக்குகள் சுடுவது எப்படி? என்றதொரு விலை உயர்ந்த புத்தகத்தைச் சட்டென்று எடுத்து... கவுண்டரில் கொடுத்து... பணம் கட்டி பொட்டலத்தைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தவள், மின்விசையால் தாக்கப் பட்டவள் போல அதிர்ந்து போனாள்.

குறுந்தாடியும்—மீசையும்—கறுப்பு கண்ணாடியும்—நரையோடிய முடியுமாக உயரமாக குர்த்தா பைஜாமாவில் காணப்பட்ட அந்த மனிதன் அவள் கணவன் லோகநாதனா?...

நிச்சயமாக அவர் அவளது கணவன்தான் என்று உறுதியாகவும் நினைக்க முடியவில்லை.

என்ன வெட்கக்கேடு... காதலித்து மணந்து கொண்ட கணவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையே...

சாயல்— நடை... உயரம் எல்லாம் அப்படியே இருக்கின்றனவே!

'லோகநாதனுக்கு சென்னையில் என்ன வேலை... ஒரு சமயம் பயமுறுத்தி அவளிடம் பணம் வாங்க வந்திருப்பாரோ?

நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொள்ள... உடம்பு வியர்வையில் குளிக்க காரில் ஏறிக்கொண்டாள்.

தொழிற்சாலையில் அவளுக்கு அன்று முழுவதும் வேலை ஓடவில்லை... ஒரு சமயம் அவள் வீட்டில் இல்லாதபோது — கோவிலுக்குப் போயிருந்த அன்று மாலை, அவளது கணவன் பங்களாவுக்கு வந்து சம்யுக்தாவை சந்தித்து விட்டாரோ?...



ஊகும்... இருக்க முடியாது... அப்படியிருந்தால் ரத்னா உடனே சொல்லியிருப்பாளே... அவள் பெரிய வேட்டை நாயாக வேலை பார்க்கிறவளாச்சே. குப்புசாமிக்கு ஒட்டை வாய்... ஓடி வந்து உளறிக் கொட்டியிருப்பார்...

"சம்யுக்தா! நான் முந்தா நாள் கோவிலுக்கு போயிருந்த சமயம் என்னைத் தேடிக்கொண்டு யாராவது இங்கே வந்தாங்களா?..." கேட்டு முடிப்பதற்குள் அவளுக்கு மூச்சுத் திணறியது...

"யாரும் வரலை... ஏன் கேட்கிறீங்க...?"

"எங்க மாதர் சங்கத்துக் காரங்க யாராவது டொனேஷன்னு வந்து உன்னைத் தொந்திரவு பண்றதை நான் விரும்பலை!" வசுந்தரா சமாளித்தாள்.

"அன்று ஒருநாள் நீங்க எச்சரித்ததிலிருந்து என் கல்லூரி தோழிகள் யாரும் இந்தப் பக்கமே வரதில்லை. அவங்களோட போனில் பேசக்கூட எனக்கு இப்போவெல்லாம் நேரமே கிடையாது. ரத்னாவைத் தாண்டி யாரும் வீட்டுக்குள்ளே வர முடியாது— தோட்டத்துக்குள்ளே நுழையுமுன்பே உங்க நாய் மகியின் குரைப்பைக் கேட்டு நடுங்கிப் போய் விடுவாங்க... காற்றுகூட அத்துமீறி உள்ளே வரமுடியாத... இரும்பு திரை போட்டு மறைச்சு வச்சிருக்கிற பங்களாவாச்சே இது— யார் வரப்போறாங்க இங்கே?"

அதிகப் பிரசங்கித்தனமாக தன்னிடம் பேசிய மகளை வெறித்து பார்த்தாள், தாய்.

'இது டீன் ஏஜின் கோளாறு. திடீரென்று ஒரு முரட்டுத்தனம் உருவாகியிருக்கு... மெள்ள மெள்ளதான் இதை ஒழுங்கு செய்யமுடியும்?' என்று எண்ணியபடி தாய் மகளின் கன்னங்களை லேசாக வருடினாள்.

Vennila

"தூங்கும்மா ரொம்ப நேரம் படிக்காதே... நாளைக்கு தொழிற்சாலையிலே ரொம்ப வேலை இருக்கு...!" சொல்லியபடி வெளியேறினாள்.

கதவைத் தாளிட்டுக்கொண்டு படுக்கைமீது உட்கார்ந்த மகளின் முகத்திலே வெற்றிப் புன்னகை லேசாக உதயமாகியது...

அன்று மாலை குப்புசாமியிடமிருந்து இரகசியமாகக் கடன் வாங்கி ஒளித்து வைத்துக் கொண்டிருந்த தன் தந்தையின் பெரிய புகைப்படத்தை தலையணை அடியிலிருந்து எடுத்துப் பார்த்தாள்.

குப்புசாமி காட்டிய கடிதத்தைப் படித்த பின் அவருடன் பேசி சில சங்கதிகளைத் தெரிந்து கொண்ட பின் அவளுக்கு அம்மா மீதிருந்த மதிப்பும் பாசமும்... குறைந்துதான் போய்விட்டன.

'இத்தனை திறமையாகத் தொழிலை நடத்தி வரும் அம்மாவுக்கு இந்த அப்பாவுடன் ஒற்றுமையாக வாழத் தெரியவில்லையே...?' ஏக்கத்துடன் படத்தை உற்றுப் பார்த்தாள்.

"அப்பா! உங்களை நான் என் வாழ்க்கையில் ஒரு தடவையாவது சந்திப்பேனா?... சொல்லுங்க அப்பா!" தனக்குள்ளே முணகிக் கொண்டவள் கண்கள் கலங்கிப் போயின.

# 9

எரிக்கும் வெய்யிலில் நிலவில் உலா வருவது போல அருண்மிக்க மகிழ்ச்சியுடன் நேதாஜி சாலையில் சுற்றிக் கொண்டிருந்தான்.

வேலை தேடும் படலத்தை ஆரம்பித்த போது கூட அவன் அன்றாட போக்குவரத்து செலவுக்கு தாயின் உதவியை எதிர்பார்க்கவில்லை. படித்தபோது கிடைத்த உபகார சம்பளத்தில் ஒரு சிறு தொகையை வங்கியில் தன் பெயரில் அவ்வப்போது கட்டி சேமித்து வைத்திருந்தான்.

பட்டம் பெற்றதும் வேலை இல்லாது கொஞ்ச காலம் திண்டாட நேரும். அப்போது கைசெலவுக்கு அம்மாவை சிரமப்படுத்தக்கூடாது. சோறுபோட்டு—தங்க நிழல் கொடுத்து அன்பைக் காட்டும் அன்னைக்கு அவன் பாறாங்கல் போன்று பெரும் சுமையாக இருக்க விரும்பவில்லை.

அதிக காலம் அவன் வேலை கிடைக்காது அலைய நேரிடவில்லை. வேலை தேடிக்கொண்டிருந்த அந்தக் குறுகிய காலத்தின்போது தனது சேமிப்பிலிருந்து அவ்வப்போது கொஞ்சம் தொகையை செலவுக்கு எடுத்து உபயோகித்தான். சிக்கனமாக வாழத் தாயிடமிருந்து தெரிந்து கொண்டவன். அதே சமயம் சீராகவும் வாழப் புரிந்து கொண்டிருந்தான் அழுக்குச் சட்டையும் பரட்டைத்தலையுமாக அவன் வெளிக்கிளம்பினதில்லை. எப்பொழுதும் சுத்தமாக—கச்சிதமாக உடுத்திக்கொண்டு தான் மற்றவர் முன் வந்தான்.

Vennila

அன்று காலை அம்மா அலமாரியில் அடுக்கி வைத்திருந்த பழுப்பு வண்ண பாண்ட்டும், வெளிர் மஞ்சள் சட்டையும் அணிந்து கொண்டு சுத்தமாகப் புறப்பட்டிருந்தான்.

''நான்கூட இன்னிக்கு அரை நாள் விடுப்புபோட்டு விட்டிருக்கேன். வெய்யிலில் சுத்தாதே. பகல் சாப்பாட்டுக்கு நீ வீட்டுக்கு வந்துடு... ஒண்ணாந்தேதி வேலையில் சேரணும். உடம்பை பக்குவமா பார்த்துக்கணும்.. நேரங்கெட்ட நேரத்தில் சாப்பிடக்கூடாது...'' கிளம்பு முன் தாயார் வற்புறுத்திச் சொல்லிவிட்டுப் போயிருந்தாள்.

தனக்குக் கிடைத்துள்ள வேலையையும்-சம்யுக்தாவின் அழகிய முகத்தையும்.. மாறி மாறி சிந்தித்த வண்ணம் வளைய வந்து கொண்டிருந்தான்.

விழிப்புற்று கைக்கெடிகாரத்தைப் பார்த்தபோது நேரம் பனிரெண்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

பக்குவமாக சமைத்து வைத்து விட்டு மகன் வரவிற்காக வாசல் பக்கம் பலமுறை வந்து அம்மா எட்டிப் பார்ப்பாங்களே? பாவம் அம்மா! நினைத்து நெஞ்சுருகிப் போனான்.

வசதியில்லாத வாழ்க்கையில் வளர்ந்து ஆளான போதிலும் தாய்க்கும் அவனுக்கும் இடையே வளர்ந்திருந்த பாசத்திற்கு பஞ்சமேயில்லை. கோதை கடைத் தெருப் பக்கம் போனால்... கத்திரிப்பிஞ்சு போட்ட காரக்குழம்பு அருணுக்கு ரொம்பப் பிடிக்கும்—கொஞ்சம் கத்திரிப்பிஞ்சு வாங்கிக்கலாம் என்று அவனுக்குப்பிடித்தமான பொருள்களைத்தான் வாங்குவாள்.

மகனும் அப்படித்தான். அம்மா ரெண்டு நாளா இருமிக் கிட்டிருக்காங்களே? காலை பேப்பரில் விளம்பரம் செய்திருந்த அந்த இருமல் மருந்தை வாங்கிட்டு போய் கொடுத்துப் பார்த்தால்...?



''அம்மாவுடைய அபிராமி அந்தாதியைக் கடன் வாங்கிட்டுப் போனவங்க... தொலைச்சுட்டாங்களாம். அம்மா அதுக்காக ரொம்ப வருத்தப்பட்டாங்க... இந்த புத்தகக் கடையில் அது கிடைச்சால் அவங்களுக்கு வாங்கிட்டு போய் கொடுக்கணும். ரொம்ப சந்தோசப் பட்டுக்குவாங்க...'' என்று மகன் தன் தேவைகளை மறந்து அம்மாவைப் பற்றிதான் நினைப்பான்.

பழக்கடை வந்ததும்... உள்ளே சென்றான். தன் தாய்க்குப் பிடித்த பேரிச்சம்பழம் ஒரு பொட்டலமும்-மலை வாழைப்பழம் ஒரு சீப்பும் வாங்கிக் கொண்டான்.

வேலைக்கமர்ந்து முதல் மாதச்சம்பளம் கைக்கு வந்தவுடன் அம்மாவுக்கு கட்டிக் கொள்ள ஒரு நல்ல சேலை எடுத்துத்தரணும்... குண்டும்-குழியுமாகவுள்ள குளியலறை தரையை செப்பனிட கொஞ்சம் காசு செலவழிக்க வேண்டும். விடியற்காலை வேளையில் எழுந்து குளிக்கும் அம்மா தவறி இடறி விழுந்து காலை முறித்துக் கொண்டுவிட்டால்... எண்ணியபடி வாங்கிய பொருள்களை ஒரு பிளாஸ்ட்டிக் பையில் போட்டு கையில் பிடித்துக்கொண்டு... சாலைக்குள் திரும்பினான்.

எல்லாம் பொறி தட்டும் நேரத்தில்தான் நடந்தது.

''பார்த்து நடக்கிறதுக்கு என்ன கொள்ளை? எத்தனை பெரிய விபத்தாயிருக்கும். சோறு தின்ன முடியாம போலீஸ்காரங்களோட இங்கே உட்கார வைக்கப் பார்த்தியே-என்ன மனுசனைய்யா நீ?'' சடக்கென்ற சத்தத்துடன் தனது ஆட்டோவை திருப்பிய ஓட்டுனர்...அவனைப் பார்த்து கூவினார்.

நல்ல வேளை...பின்னாலே வந்த பஸ் பக்கம் விழுந்திருந்தா—ஆளே அடையாளம் தெரியாம போயிருப்பான்... சூழ்ந்துவிட்ட கும்பலில் ஒருவர் சூள் கொட்ட...

Vennila

'யார் பெத்த புள்ளையோ... கொஞ்சம் பிசகியிருந்தா இன்னிக்கு பெத்தவ வாயிலும் வயித்திலும் அடிச்சுகிட்டு கதறி இருப்பா... நல்ல வேளை... புள்ளே பொழைச்சான்...'- பூக்கூடையுடன் நடைபாதையோரத்தில் நின்று கொண்டிருந்த கிழவி அனுதாபப்பட...

மேல் உதட்டை கீழ் பற்கள் குத்திவிட்டன போன்றதொரு வேதனையில் இடது கை விரலால் லேசாக உதட்டைத் தடவிப் பார்த்தபடி நின்ற தன்னை ஒரு மனிதன் அணைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான் அருண்.

"காயம் ஒண்ணும் படலை-நல்ல வேளை-ரொம்ப அதிர்ச்சியடைந்து போயிருக்கிறாய். நல்லவேளை நான் இந்த பக்கம் நடந்து கொண்டிருந்தவன் திடீர்னு ஏற்பட்ட ஒரு உந்துதலில் உன்னைப் பிடிச்சு மறுபக்கமா இழுத்துக்கொண்டு விட்டேன்..." கரகரப்பாகக் காதை இதமாகத் தழுவிய குரலுக்குரியவரை வியப்போடு பார்த்தான்.

சிறு வயதிலே இழந்து விட்ட தன் தந்தையை மீண்டும் பார்ப்பது போன்ற ஒரு பிரமிப்பு அவன் உடலைப் புல்லரிக்கச் செய்தது...

"தாங்க்யூ ஸார்..! நான் என்ன சொல்றதுன்னே தெரியலை-சமயத்துக்குக் கடவுள்போல வந்து—"

"என்னைக் கடவுளாக்காதே தம்பி. நான் சாதாரண மனிதனாகத்தான் வாழ விரும்பறேன். இனிமேலே போக்குவரத்து நெரிசலா இருக்கிற சாலைகளில் கொஞ்சம் பார்த்து நடப்பா... உன்னைப் போல இள வயசு பிள்ளைகள்... விபத்திலே கை கால்களை இழக்க நேரிட்டா— அதைவிட கொடுமை வேறு எதுவும் கிடையாதே..." —அவன் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்தார், அந்த மனிதர்.

தனக்கு நேர இருந்த விபத்தை எண்ணிய மாத்திரம் அவன் மேனி நடுங்கியது—நெஞ்சு வேகமாகத்



துடித்தது...பாதைஓரத்திலே கிடந்த அவனதுபிளாஸ்டிக் பையை எடுத்து தூசி தட்டி அவன் கையில் கொடுத்தார் அவர்.

"வெய்யில் நெருப்பா காய்கிறது. குடையைக் கொண்டு வர மறந்துட்டேன்" முறுவலித்தார் அவர்.

'உங்களுக்கு எங்கே போகணும் சொல்லுங்க-ஒரு டாக்சியைப் பிடிச்சு உங்களை அங்கே கொண்டு விட்டுட்டு போறேன்" ஆவலுடன் கேட்டான் அருண்.

"மதுராந்தகத்துக்குப் போகணும்னு சொன்னால் கூட ஒரு டாக்சியை ஏற்பாடு பண்ணுவியா? பஸ்சில் ஏற முடியாத அளவு நான் தளர்ந்து தள்ளாடிக் கொண்டிருக்கும் கிழவனாகவா தெரியறேன்?—நான் கடைத்தெருவில் வாங்க வேண்டியதை வாங்கிட்டு...மெதுவா பஸ்சில் போய்க் கொள்வேன்...உன் அன்புக்கு நன்றி தம்பி...!" புன்னகைத்தார் அவர்.

அவரை எங்கேயோ முன்னர் பார்த்தது போன்றதொரு மருட்சி அவனுக்கு...

"கடைத்தெருவில் வாங்கிக்கிறதை முடிச்சுக் கோங்க...நான்கூட துணையாக வரேன்..."

"ஏது விடமாட்டே போலிருக்கே?" வேடிக்கையாக கேட்டவரின் வரிசைப் பற்கள் பளிச்சிட்ட போது அவர் முகத்தில் பரவிய கவர்ச்சியைக் கண்டு பிரமித்துப் போனான் அருண்.

இவருக்கு வயது என்ன இருக்கும்? ஐம்பதிற்கு மேல் ஒன்று அல்லது இரண்டு வயது கூடக்குறைய இருக்குமா?...ஓரக்கண்ணால் அவரைக் கணிப்பு செய்து காலோடு தலை வரை ஆராயத் தொடங்கினான்.

லேசாக நரை ஓடிய அடர்ந்த கிராப்பு முடி—மீசையோடு கலந்ததொரு குறுந்தாடி—அதிலும் இங்குமங்கும்

Vennila

சில நரை இழைகள். குறும்புத்தனமாகப் பார்த்து சிரிக்கும் கண்கள்–உயரத்திற்கேற்ற பருமன்...தொளதொள வென்ற வெள்ளை குர்த்தாவும் பைஜாமாவும் தரித்துக் கொண்டிருந்தவரைப் பார்த்தால் வடநாட்டைச் சேர்ந் தவர் போல தோன்றினார்...ஆனால் பேசும் தமிழ்... நம்ப ஊர்க்காரர்தான் என்று சத்தியம் செய்கிறதே?

யோசித்தபடி நின்றவன் தோளை மெல்ல அவர் தட்டியபோது திடுக்கிட்டுப் போனான் அருண்.

“எனக்குக் கடையில் வாங்க வேண்டிய சாமான் கள் அதிகமில்லை. ஒரு கட்டு மெழுகுவத்தி—கொஞ்சம் வாசனை பாக்குத்தூள்...இதுகளை வாங்கிட்டு வந்துட றேன்—இப்படி ஓரமா நீ சித்தே நில்லு...ஆனால் ஒரு நிபந்தனை. நாமிருவரும் அதுக்குப் பிறகு இங்கே பக்கத்திலே இருக்கும் ஓட்டலுக்குப் போய் பகல் சாப் பாட்டை முடிச்சுப்போம்—செலவு என்னுடையது...?” மீண்டும் பற்கள் பளிச்சிட சிரித்தார்.

பழக்கடை அருகிலிருந்ததொரு பலசரக்குக் கடை யில் தனக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு விரைவாக திரும்பிவிட்டார் அவர்.

“இப்போ நிபந்தனை விதிக்கப்போறது நான் கட்டாயம் நீங்க ஏத்துக்கணும்... என் தாயார் பகல் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரணும்னு வற்புறுத்தி இருக் காங்க. இன்று என் பகல் சாப்பாட்டை நான் உங்க ளோடு பகிர்ந்துக்க ஆசைப்படுகிறேன்!” அருண் சொன்னான்.

“திடீர் விருந்தாளியைக் கண்டு உங்கம்மா அதிர்ந்து போய் விடுவாங்க. ஏன் இந்த சிரமம் உனக்கு?”

“உங்களை என்னோடு அழைச்சிட்டுப் போகாம நடந்ததைச் சொன்னால்தான் அம்மா ரொம்ப கோவிச் சுக்கு வாங்க...!”



“விடமாட்டே போலிருக்கு. சரி... வரேன்... ஆமாம் உன் பெயர்?”

“அருணாச்சலம் என்பதை பள்ளிக்கூட நாட்களி லேயே சுருக்கி அருண் என்று வச்சுக் கொண்டேன். நீங்கள் அருண் என்று என்னைக் கூப்பிடலாம்— எனக்கு ஒரு சிறு சந்தேகம். உங்களைப் பார்த்தா வடக் கத்தி மனுசர் போல இருக்கு... ஆனா பேசும்போது நம் ஊர்க்காரர்னு தோணுது... நீங்க?”

“யாதும் ஊரே யாவரும் கேளிர்—தெரியுமில்லையா? வடக்காவது தெற்காவது ஏன் அப்படி பிரிச்சுப் பேச ணும். நான் இந்திய நாட்டுக் குடிமகன் என்று பெருமை யாக சொல்லிக் கொள்கிறேன். இந்தப் பட்டணத்தில் வேலை பார்க்கிறேன். பெயர் பூபதி... போதுமா?”

“ரொம்ப மகிழ்ச்சி... எங்கே வசிக்கிறீங்க!... உங்கக் குடும்பம்?” என்று கேட்டபடி அவருடன் கூட பஸ் நிலையத்தை நோக்கி நடந்தான்.

“இப்ப நான் தனியா இருக்கிறவன்—இதுக்கு மேலே உனக்கு விவரம் தேவைபபடாது. ரெயில் வண்டியில் ஏற்படும் தோழமைபோல இதுவும் ஒன்று. எதேச்சையா நாம் இப்படி சந்திக்க நேரிட்டது...!”

“இல்லை, நீங்க சொல்கிறதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். உங்களிடம் நெருங்கிப் பழகி நட்புரிமை பாராட்ட வேண்டும் என்று என்னுள் ஒரு ஆவல் ஏற்பட் டிருக்கு...!” என்றபடி அவருடன் நடந்து பஸ் நிலை யத்தை அடைந்தான் அருண்.

குறித்த பஸ் வந்ததும் இருவரும் ஏறிக்கொண்டனர். அவரைத் தடுத்து தானே இருவருக்கும் டிக்கட்டுகள் வாங்கினான்.

சிவானந்தன் தெருவுக்குள் நுழைந்ததுமே அவன் அவர் பக்கம் திரும்பிப் புன்னகைத்தான்.

Vennila

"அதோ அந்த வீட்டு வாசலில் சிவப்பு சேலை கட்டிய ஒரு அம்மா நின்றுகிட்டிருக்காங்களே... அவங்க தான் என் தாய். இத்தோட நூறாவது தடவையா என் வருகைக்காக வாசலில் வந்து நின்னுருப்பாங்க... நான் ஓட்டலில் சாப்பிட்டு விட்டு திரும்பினால் ரொம்ப வேதனைப்படுவாங்க..."

"கூடவே யாரோ ஒருவன் வருகிறானேன்னு இப்போ கவலைப்படப் போறாங்க...!" மெல்லச் சிரித்தார் பூபதி.

"நாங்க எளியவங்கதான். ஆனால் விருந்தோம்பலை ரொம்ப விரும்பரவங்க... எங்கம்மா உங்களைப் பார்த்து சந்தோசப்படுவாங்க..."

"என்னவோ தம்பி... இன்னிக்கு நான் உன்கிட்டே சரியா மாட்டிக் கொண்டிருக்கேன்..."

"பூபதி சார்... நீங்க எங்களுடைய அன்புப் பிணைப்பிலே இருந்து இனி விடுபடவே முடியாது..." சிரித்தபடி வாயிலை சமீபித்தான்.

முன்பின் தெரியாத ஒரு மனிதன்–கொஞ்சம் வயதானவர் கூட மகனுடன் வருகிறாரே? புடவைத் தலைப்பை இழுத்து வலது தோள்பட்டையை மூடிக் கொண்டு 'வாங்கோ!' என வரவேற்றுவிட்டு உள்ளே சென்று விட்டாள் கோதை...

கால் கைகளைக் கழுவிக்கொண்டு இருவரும் கூடத்தில் அமர்ந்தனர்.

நடந்த சங்கதியை மகன் தெரிவித்தபோது கோதை திடுக்கிட்டு போய் விட்டாள்.

"உங்களுக்கு நான் எப்படி நன்றி தெரிவிக்கிறதுன்னு தெரியலை அய்யா...! இவன்தான் என் உலகம்னு வாழ்கிறவள் நான். ஒரு எறும்பு இவனைக் கடிச்சா கூட தாங்கிக்க முடியாது தவிச்சுப் போகும் இந்த



ஏழைத் தாயையும் நீங்க காப்பாத்தியிருக்கீங்க—!" தழுதழுத்தாள், கோதை.

"என்னவோ பெரிசா உதவி செய்துட்டது போல நீங்க ரெண்டு பேரும் என்னை புகழ்கிறீங்க. ஆபத்து ஏற்படும்போது ஒருத்தருக்கொருத்தர் செய்யவேண்டிய உதவி... அவ்வளவுதான்!"

"முதல் தேதியன்னிக்கு வேலையில் போய் சேர வேண்டிய பிள்ளை. விபத்திலே கை, காலில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடந்தால் என் நிலைமை என்னாகியிருக்குமுன்னு நினைச்சுப் பார்க்க முடியலை அய்யா!" தொடர்ந்தாள் அவள்.

"நம் நாட்டில் படிச்ச இளைஞர்கள் பலர் தகுந்த வேலை கிடைக்காம திண்டாடறதை நினைச்சா என் மனம் ரொம்ப வேதனைப்படரது... அருணுக்கு ஒரு நல்ல வேலை கிடைச்சிருக்கிறதைப்பத்தி கேட்க மகிழ்ச்சியா இருக்கு... ஆமாம் எங்கே வேலை கிடைச்சிருக்கு— இந்தப் பட்டணத்தில்தானே?"

"இதே ஊரில்தான் வேலை—பார்வதி எலக்டிரிக்கல்ஸ் எனும் தொழிற்சாலையிலே கிடைச்சிருக்கு!" தாயார் பெருமையுடன் சொன்னாள்.

"நல்ல வேலைதான்! ஆனால் அதன் தலைவி வசுந்தரா அம்மாதான் கொஞ்சம் கடுமையானவங்களா தெரியறாங்க...! நேர்முகத் தேர்வுக்குப் போனபோது முகத்தை கடுகடுன்னு வச்சுக்கொண்டு... படபடன்னு கேட்ட கேள்விகள்... அப்பப்பா! கொஞ்சம் பொல்லாதவங்களா இருப்பாங்க போலிருக்கு. ஆனால் எனக்கென்ன? கொடுத்த வேலையை ஒழுங்கா கவனிக்கப் போறேன். அவங்களுக்கு ஒரு பெண் இருக்கு... பெயர் சம்யுக்தாவாம்... அவங்கதான் அந்த நிறுவனத்தின் வருங்காலத் தலைவி. தாயைப் போல

Vennila

பரம்சாதுவாக இருக்காங்க—!'' மேலே ஏதோ சொல்ல வந்தவன் பூபதி பக்கம் திரும்பி... திகைப்புடன் பார்த்தான்.

''என்னங்க என்ன?'' பதறினான் அருண்.

''ஒண்ணுமில்லை காலையில்கூட சாப்பிடலை— வெறும் வயித்தோட வெய்யிலில் அலைஞ்சது ஒத்துக்கலை—லேசா மயக்கம் வந்தது—''

''அம்மா... சீக்கிரம் கொஞ்சம் தண்ணி எடுத்துட்டு வாங்க!''—அருண் சொல்லி முடிக்குமுன் கோதை பானையிலிருந்து குளிர்ந்த நீரை தம்ளரில் மொண்டு கொண்டு பதட்டமாக ஓடி வந்தாள்.

தண்ணீரைப் பருகி தம்ளரைத் தரையில் வைத்துவிட்டு கைக்குட்டையால் முகத்தில் பூத்திருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டார் பூபதி.

''அவசரப்படாம இருந்து சாப்பிட்டுட்டு... கொஞ்சம் ஓய்வா சாய்வு நாற்காலியிலே படுத்திருந்துட்டு... வெய்யில் தாழ்ந்ததும் போகலாம் அய்யா... இது உங்க வீடுன்னு நினைச்சுக்கோங்க!'' அன்புடன் உபசரித்தாள் கோதை.

அவரது முகபாவத்தை ஊன்றி கவனித்துக் கொண்டிருந்த அருண், மனதை இனம் புரியாத ஒரு சந்தேகம் உறுத்தியது...

''உண்மையில் அது பசி மயக்கமா?''

# 10

படுக்கைமீது உறக்கமின்றி புரண்டு கொண்டிருந்த குப்புசாமி எழுந்து உட்கார்ந்தார்.

பின்பக்கம் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த அறையை அவர் மிக சுத்தமாகத்தான் வைத்திருந்தார். தோட்டப் பக்கமிருந்த ஜன்னல் கதவுகளை அகலத் திறந்துவைத்து விட்டிருந்தார்.

சுவர் ஓரம் வளர்ந்துவிட்டிருந்த பன்னீர் மரத்து மலர்களின் மணத்தை அள்ளிக்கொண்டு குளுமையாக காற்று உள்ளே வீசிக்கொண்டிருந்தது. தலைக்குமேல் மின் விசிறி மிதமான வேகத்தில் சுழன்று கொண்டிருந்தது.

வெய்யிலில் காயப்போட்டு—மருந்து அடித்து சுத்தப் படுத்தி இருந்த கட்டிலின்மீது விரிக்கப்பட்ட பஞ்சு மெத்தை. அவரே துவைத்துக் காயப்போட்ட சுத்தமான விரிப்பு... மிருதுவான தலையணைகள்— மூட்டைப் பூச்சி— கொசுக்களின் உபத்திரவம் கிடையாத படுக்கையறை. ஆனாலும் அவர் மனதை சந்தேகம் கப்பிக் கொண்டு கலவரப்படுத்திக் கொண்டிருந்ததால் தூக்கமின்றி தவித்தார்.

சாப்பாட்டறையில் தொங்கிய பெரிய கடிகாரம்... இரண்டு முறை அடித்து ஓய்ந்தது.

'இரவு இரண்டு மணியாகிறதா? அடக்கடவுளே! இன்னும் கொஞ்ச நேரத்தில் விடியுமுன் எழுந்து—பல்

Vennila

விளக்கிப் பச்சைத் தண்ணீரில் தலைமுழுகி மாற்றுடை அணிந்துகொண்டு... அடுப்பங் கரையில் கரண்டியை பிடிக்க வேண்டுமே? இதென்ன தொல்லை, தூக்கம் வராமல்—? என்று தமக்குள்ளே சொல்லியபடி...அருகில் கிடந்த மேஜையின் இழுப்பறையைத் துலாவினார். திருத்தணி முருகன் விபூதி பொட்டலம் கையில் தட்டுப் பட்டது...

தலைமாட்டில் கிடந்த துவாலையால் முகத்திலும் கழுத்திலும் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு... கொஞ்சம் திருநீற்றை எடுத்து நெற்றியில் அப்பிக் கொண்டார். ஒரு சிட்டிகையை வாயில் போட்டுக்கொண்டு பொட்டலத்தை மடித்து இழுப்பறையில் வைத்துவிட்டு... படுக்கை மீது சாய்ந்து கொண்டார்.

தலைக்குமேல் சுழலும் மின்விசிறி எழுப்பிய லேசான ஓசை... தோட்டத்தைச் சுற்றி ஓடிய மகி அவ்வப்போது குரைத்த சப்தம்... எங்கேயோ சாலையில் ஓடும் வாகனம் எழுப்பிய ஓசை... இவைகளைத் தவிர... அந்த வேளையில் எங்கும் ஒரே அமைதி நிலவியிருந்தது.

ஆனால் அவர் மனதில்...ஒரே குழப்பம்...சந்தேகம்.. கலவரம்.

'உண்மை அப்படியிருந்தால்?...' தமக்குள்ளே எண்ணிப் பெருமூச்செறிந்தார்.

அன்றுகாலை புறப்படுமுன் வசுந்தரா சொல்லி விட்டுத்தான் கிளம்பியிருந்தாள்.

"மாசக் கடைசி, தொழிற்சாலையிலே கவனிக்க வேண்டியவை ஏகப்பட்டது இருக்கு. நானும் சம்யுக்தா வும் வீட்டுக்கு வர நேரமாகும். அதனாலே மாலை டிபனை எங்களுக்கு தொழிற்சாலைக்கு அனுப்பி விடுங்கோ...!"

சில சமயங்கள் வசுந்தரா இப்படி உத்தரவிடுவ துண்டு.



அப்போது அவர் விரைவாக வேலையை முடித்துக் கொண்டு-பச்சைத் தண்ணீரில் உடலும் உள்ளமும் குளிர குளித்து விட்டு...மாற்று உடை அணிந்துகொண்டு வெற்றிலை பாக்குப் பெட்டியுடன் வெளிக் கிளம்பி விடுவது வழக்கம்.

வீட்டிற்குள்ளும்-வெளியே தோட்டத்திலும் வேட்டை நாயாக சுற்றிக்கொண்டு காலகடுத்து ரத்னா ஓய்ந்து களைத்துப்போகட்டும் நமக்கென்ன...என்று கருவிக்கொண்டு அவர் நன்றாக இருட்டிய பின்தான் வீடு திரும்புவார்.

எஜமானி பட்டணத்தில் அந்தப் பகுதியில் குடியேறிய பின்னர் அவருக்கு அருகிலிருந்த பங்களா வேலையாட்கள் பலர் அறிமுகமாகிவிட்டிருந்தனர், ஆனால் யாருடனும் அவர் நெருக்கமாக உறவு வைத்துக் கொண்டதில்லை.

பக்கத்து பங்களா சமையற்காரர் சுகவனத்துடன் அவர் எப்பொழுதாவது மாலை வேளை உலாவப் புறப் படுவதுண்டு. இருவரும் அருகிலிருக்கும் பூங்காவரை மெல்ல நடந்து சென்று வருவார்கள். தங்கள் கையுடன் கொண்டு போகும் அரைக்கவுளி வெற்றிலையை அரைத்துத் துப்பி மகிழ்ந்து விட்டு ஊர்க் கதைகளைச் சுவையாகப் பேசி ரசித்துவிட்டு விடை பெற்றுக் கொள்வார்கள்.

தன் எஜமானர் குடும்பத்தைப்பற்றி சுகவனம் அதிகம் பேசமாட்டார்.

"ஒரு பெண் ஒரு பிள்ளை... சின்னக் குடும்பம் அம்மாதான் வீட்டை நிர்வகிக்கிறாங்க..." —அதற்கு மேலே மூச்சு விடமாட்டார், அந்த அழுத்தமான பேர்வழி.

குப்புசாமியும் அதே கொள்கையைத்தான் அனுசரித் தார்... தான் வேலை செய்யும் பங்களாவாசிகளைத் தவிர பொதுவான சங்கதிகளை ரசமாக பேசி சுக வனத்தை சிரிப்பில் குலுங்க வைப்பார்.



Vennila

வீட்டுச் சங்கதி எதையாவது பேசப் போக அது எங்கேயாவது போய் விபரீதமாகிவிட்டால் – வசுந்தரா அம்மாளின் கோபத்துக்கு ஆளாகி வேலையைத் தொலைத்துக்கொண்டு விட்டால்... தள்ளாத இந்த வயதில் பட்டணத்தில் அவர் பட்டினியுடன் புது வேலை ஒன்றைத் தேடி அலைய சாத்தியப்படுமோ?

நாக்கு ருசிக்க சாப்பிட வேண்டுமென்றால், அந்த நாக்கைக்கட்டி வைப்பது சாலச் சிறந்ததென்று பெரிதும் நம்பினார்.

வழக்கம்போல அன்று மாலை வேலை முடிந்ததும் குளித்துவிட்டு, மாற்றுடை அணிந்துகொண்டு வெற்றிலைப் பெட்டியுடன் வெளியே வந்தார். ரத்னா தோட்டக்காரனுடன் உரத்த குரலில் ஏதோ தர்க்கித்துக் கொண்டிருந்தாள்.

அவள் தன்னைத் திரும்பிப் பார்க்குமுன் ஓசைப் படாது வராந்தாவில் இறங்கி தோட்டத்திற்குள் புகுந்து-சாலைக்குள் மறைந்து போனார்.

விரைவாக நடந்ததில் அவருக்கு மூச்சு வாங்கியது. பக்கத்து பங்களா அருகே நடைபாதைமீது நின்றபடி சிரம பரிகாரம் செய்து கொண்டார்.

அவரைக் கண்டதும் சுகவனம் ஓடோடி வந்தார்.

“எங்க எஜமானுடைய தம்பி பெங்களூரிலிருந்து காரில் தம் குடும்பத்தோட வரார்ன்னு போன் வந்தது. எனக்கு வேலை தலைக்கு மேலே கிடக்கு... அதனாலே உங்களோட வர முடியலை–மன்னிச்சுக்கோங்க..!”— ஊதி விட்ட பலூனை ஊசியால் குத்திவிட்டது போல குப்புசாமியின் உற்சாகம், வினாடியில் அடங்கிப்போய் விட்டது.

தன்னந்தனியாக அவர் பூங்காவிலே உட்கார்ந்து கொண்டு சருக்குப் பலகையில் விளையாடும் குழந்தை



களையும்—பூப்பந்தல் அடியில் நெருக்கமாக அமர்ந்து பேசிச் சிரிக்கும் காதலர்களையும் வயதைக் கூட்டிக் கொள்ள விரும்பாது...கைப் பிரம்பை ஊன்றிக்கொண்டு ஜிப்பா காற்றில் பறக்க வேகமாக நடக்க முயலும் வழுக்கைத் தலை கிழவர்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு—சே!—அவருக்கு அலுப்பாக இருந்தது... ஆனாலும் வீட்டுக்குத் திரும்பி ரத்னாவின் ஏவலுக்கு அடிபணிய விரும்பவில்லை...

சற்று நேரம் சுதந்திரமாக வெற்றிலை பாக்கை மென்று கொண்டு பூங்காற்றை அனுபவித்தபடி உட்கார்ந்திருக்கலாமே...

சாலையோரத்திலிருந்த கடையொன்றில் மாலைப் பத்திரிக்கை ஒன்றை வாங்கிக்கொண்டு மெல்ல பூங்காவை நோக்கி நடந்தார். சமீபத்தில் இரண்டு நாட்கள் மாலை நேரம் பெய்த மழையினால் பூங்கா பசேலென்று காணப்பட்டது.

போகன் வில்லா பூக்கள் புது வண்ணங்களில் மலர்ந்து விட்டதை போன்றதொரு மலைப்பைத்தந்தது. கொத்துக் கொத்தாகப் பூத்துச் சிரித்த நைட்குவீன் மலர் புதரிலிருந்து கம்மென்ற வாசனை மூக்கை தாக்கியது.

அடுத்தவாரம் நடக்கவிருந்த மலர்கள் கண்காட்சிக் காக காய்ந்து குவிந்து கிடந்த இலைச் சருகுகளைக் கூட்டி வேலையாட்கள் பூங்காவைத் துப்புரவாக்கி விட்டிருந்தனர்...

சிமெண்ட் பெஞ்சியைத் துடைத்து விட்டது போல சுத்தமாகத் தெரிந்தது. பத்திரிகையுடன் அவர் முல்லைப் பந்தல் அருகே கிடந்த சிமெண்ட் இருக்கைமீது அமர்ந்து கொண்டார்.

சருக்குப் பலகையில் வழுக்கிக்கொண்டு சிரித்த சின்னக் குழந்தைகளை வேடிக்கை பார்த்தபடி பத்திரிகையைப் புரட்டினார்.

Vennila

முதல் பக்கத்திலிருந்த ரயில் விபத்து விவரத்திலிருந்து கடைசி பக்கத்து சினிமா கிசுகிசுவரை படித்து முடித்து அலுத்துப்போய் பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு பக்கத்திலிருந்த வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார். ஒரு பிடி வாசனை பாக்கை அள்ளி வாயில் போட்டுக்கொண்டார்.

பெட்டியை நிறைந்த கும்பகோணம் வெற்றிலையை எடுத்து மேல் துண்டால் துடைத்து வாசனைச் சுண்ணாம்பை தடவி நார் கிழித்துச் சுருட்டி வாயில் அடைத்துக் கொண்டார்.

இரண்டு கெட்ட குணங்கள்தான் அவரைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தன.

சோறு, தண்ணீர் கூட அவருக்கு வேளைக்குத் தேவை இருக்காது. ஆனால் இரண்டு மணிக்கொரு தடவையாவது பில்ட்டர் காப்பியைச் சந்தனமாகக் கலந்து ஒரு சிட்டிகை சர்க்கரையைத் தூக்கலாகப் போட்டு—நுரை பொங்க ஆற்றி மிதமான சூட்டில் குடித்தாக வேண்டும். குறித்த நேரத்தில் காப்பி குடிக்காவிடில் அவருக்கு வேலை ஓடாது. அப்படி ஒரு போதைப் பழக்கம்.

அடுத்தது—நேரம் கிடைத்தபோது வாய் நிறைய வெற்றிலை போட்டு குதப்பித் துப்புவது.

வசுந்தரா எத்தனையோ தடவைகள் சொல்லிப் பார்த்து அலுத்துப் போனாள்.

வெற்றிலைபாக்கு அதிகம் போடுவது நல்லதல்ல. வாயில் புண் ஏற்பட்டு புற்றுநோய்க்கு அடிகோலக் கூடும்.

அவர் கவலைப்பட்டதில்லை...'இந்த வயதில் எந்த நோய் வந்தால்தான் என்ன? உலகை விட்டு மறைய ஏதோ ஒரு சாக்கு!' என்றதொரு அசட்டை...



வெற்றிலையைக் கடித்து குதப்பி யாரும் பார்க்காத போது மெல்ல தமது இருக்கைக்குப் பின் ஒரு பக்கத்தில் சதக்கென்று துப்பிவிட்டுத் திரும்பியவர் மேலே விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள், ஒரு குழந்தை.

கொஞ்சம் தூரம் சென்றதும் கால் தடுக்கிப் புல் வெளியில் தொப்பென்று விழுந்து ஓலமிட்டு அழுதாள்.

"ஓடாதேன்று சொன்னேன் கேட்டியா? போக்கிரிக் குட்டி...!" என்று அதட்டிக் கொண்டு மூச்சிறைக்க ஓடி வந்தாள், குழந்தையின் பாட்டி போல் தென்பட்ட வயதான பெண்மணி.

இருட்டும் நேரமாகி விட்டதால் பூங்கா விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கிவிட்டன.

"அழாதே பாப்பா...அழாதே...!" என்று அன்புடன் கூறியபடி குழந்தையை வாரி எடுத்துக் கண்ணீரைத் துடைத்துவிட்டு...அந்த அம்மாளிடம் ஒப்புவித்து விட்டுத் திரும்பிய மனிதனைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போய் விட்டார், குப்புசாமி...

அவர் பிடரிமீது யாரோ ஓங்கி அடித்துவிட்டது போன்றதொரு அதிர்ச்சி.

பழக்கமானது போல காதுகளில் ஒலித்த அந்தக் குரல் அவர் உடலைப் புல்லரிக்கச் செய்தது.

"இது உண்மையாக இருக்குமா?...அதிசயந்தான்!" எண்ணியபடி விளக்கு வெளிச்சத்தில் அந்த மனிதரை ஊன்றிக் கவனித்தார்...

தொள தொளவென்றதொரு குர்த்தாவும், பைஜாமாவும் அணிந்திருந்த அந்த மனிதன் நடுவயதைத் தாண்டியவர் போலத் தோன்றினார். நரை ஓடிய சுருண்ட கிராப்பு முடி...லேசாக சுண்ணாம்பால் தொட்டது போன்று வெளுத்து கருப்புடன் தெரிந்த கிருதாக்கள்...

Vennila

இங்குமங்கும் வெள்ளிக் கம்பிகள் காட்டிய...மீசை, தாடி... 'இவைகளை அகற்றி விட்டுப் பட்டுக்கரை வேட்டியும் ஜிப்பாவும் அணிவித்தால்—இந்த மனிதன்...' என அவர் தமது கற்பனையை ஓடவிட்டுக் கொண்டிருந்த சமயம்...

அந்த குர்த்தா மனிதன்... "இப்படி குழந்தையை தவியா ஓடவிடாதீங்க—காயம் பட்டா பின்னால் வருத்தப்படுவீங்க..." அன்போடு அந்த முதியவளைக் கடிந்து கொண்டுவிட்டு வேகமாக எதிர் பக்கம் நடக்கத் தொடங்கினார்.

மேல் துண்டை உதறிப் போட்டுக்கொண்டு... வெற்றிலைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு...தாம் வாங்கிய பத்திரிகையை பெஞ்சிமீது அப்படியே விட்டு விட்டு அவசரமாக குப்புசாமி அந்த பைஜாமாக்காரரை பின்பற்றினார்.

ஆனாலும் அந்த தாடிக்கார மனிதர் மிகவும் வேகமாகவே நடந்தார்.

பின்னால் ஓடியபடி தொடர்ந்தால் மனிதனுக்கு சந்தேகம் ஏற்படலாம் என அஞ்சி கொஞ்சம் நிதானமாக-தம் பார்வையினின்று அவர் அகலாதவாறு துரிதமாகப் பின்பற்றினார்.

குறுக்கும் நெடுக்குமாக பல சந்துகளைத் தாண்டி அவர் வேகமாக நடந்து கொண்டிருந்தார்.

முடிவில் குப்புசாமிக்குத் தெரிந்த நாராயணன் தெருவுக்குள்ளே நுழைந்த அந்த மனிதர், கோமதி லாட்ஜ் வாசலை அடைந்ததும் சுற்றும் முற்றும் பார்த்தார்.

சட்டென்று குப்புசாமி தம் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு ஒரு கணம்... பாதை ஓரத்திலிருந்த தொரு பழக்கடையில் ஏதோ வாங்குவதுபோல பாவனை செய்தபடி நின்றார்.



தாடிக்கார மனிதர் லாட்ஜிற்குள் நுழைந்து இடது புறமாக ஓடிய மாடிப்படிகளைத் தாவி சில நிமிடங்களில் மறைந்து போனார்.

குப்புசாமி ஒருகணம் யோசனையுடன் தயங்கி நின்றார். பின்னர் தம் துணிவைத் திரட்டிக்கொண்டு கல்லாப் பெட்டியருகே உட்கார்ந்திருந்த குங்குமப் பொட்டுக்காரரை அணுகினார்.

"சித்த முன்னே உள்ளே போனாரே... வடக்கத்தி மனுசன் போல குர்த்தா பைஜாமா போட்டுகிட்டிருக்கிற ஒரு மனுசன் எந்த அறையிலே தங்கியிருக்கார் அவர்?"

கல்லாப் பெட்டிக்காரர் குப்புசாமியை மேலும் கீழும் பார்த்தார்.

"அவரை உங்களுக்குப் பார்க்கணுமா... பெயரைச் சீட்டில் எழுதிக் கொடுங்க. பையன்கிட்டே கொடுத்தனுப்புகிறேன்."

"அதுக்கு அவசியமில்லே...பின்னால வாங்கோன்னு சொல்லிட்டு வேகமா நடந்தார். எந்த அறைன்னு அவர் சொன்னது காதிலே விழலே...நான் வயசானவன். அவரோட ஓட்டப் பந்தயத்துக்கு ஈடுகொடுக்க முடியலை!"

"அப்படியா..." என்றபடி மேஜை மேல் கிடந்ததொரு நோட்டுப் புத்தகத்தை புரட்டி விட்டு, "இரண்டாவது மாடி ஆறாம் நம்பர்...போய்பாருங்க!" என்று சுருக்கமாகக் கூறி விட்டு.. கையில் வாளியும் துடப்பமுமாக அங்கு வந்துகொண்டிருந்த பையன் பக்கம் திரும்பினார்.

"எத்தனை நாழியா நீ அறைகளை சுத்தம்பண்ணுவே... போய் அதுகளை வச்சுட்டு...கை கால்களை கழுவி விட்டு வந்து ஊதுவத்தி ஏத்தி படத்துக்குப் பக்கத்திலே வை..."

அப்பொழுதுதான் கவனித்தார் குப்புசாமி.. கோமதி லாட்ஜின் முதலாளி போலும்... மண்டையைப் போட்டு

Vennila

விட்டு சந்தன மாலை கொண்டதொரு சட்டத்தில் படமாகத் தெரிந்தார்.

குழல் விளக்கொன்று வெளிச்சத்தை அவர் முகத்தில் வாரி இறைத்துக் கொண்டிருந்தது.

அந்தி வேளையில்-அமரராகிவிட்ட முதலாளிக்குத் தான் ஊதுவத்தி ஏத்திவைக்க கல்லாப்பெட்டிக்காரர் உத்தரவிட்டுக் கொண்டிருந்தார்.

அதற்குமேல் ஆராய்ந்து கொண்டிருக்க நேரமின்றி...மாடிப்படிகள் பக்கம் வேகமாகத் திரும்பினார்.

இரண்டாவது மாடியை அடைவதற்குள் அவர் திணறிப் போய் விட்டார். கைப்பிடிச் சுவற்றைப் பிடித்துக்கொண்டு... மூச்சு வாங்கியபடி நின்ற அவரை லாட்ஜ் பையன் பரிதாபமாகப் பார்த்தான்.

"என்ன சார்! என்ன வேணும்?" கேட்டபடி அருகில் வந்தான்.

"ஆறாம் நம்பர் ஆளைப் பார்க்க வந்திருக்கேன்..." தடுமாறினார் குப்புசாமி.

"அடப்பாவமே! அவர் இப்பத்தான் அறையைப் பூட்டிக்கிட்டு இந்தப் பக்கமாக படியிறங்கிப் போயிட்டார்...!"

தமது ஏமாற்றத்தை விழுங்கிக்கொண்டு குப்புசாமி மெல்லிய குரலில் கேட்டார்.

"அவர் பெயர் என்னன்னு சொல்ல முடியுமா?"

"பெயர் விவரமெல்லாம் எங்களுக்கு எதுக்கு சார்? என்னைப் பொறுத்தவரை இங்கே தங்கி இருக்கிறவங்களை... அறையின் நம்பர் வச்சுத்தான் நான் தெரிஞ்சுக்கிற வழக்கம்..."



"இவர் இங்கே எத்தனை நாளா இருக்கிறார்னு சொல்ல முடியுமா?" குப்புசாமி தமது சட்டைப் பையிலிருந்து இரண்டு ரூபாய்த்தாள் ஒன்றை இழுத்து அவனிடம் நீட்டினார்.

பையன் முகமலர்ந்து போனான். "தாடிக்காரர் இங்கே வந்து ஒரு வாரமாகுது. காலையிலே அறையைப் பூட்டிக்கொண்டு போனா பகல் பொழுதுதான் வருவார். கொஞ்ச நேரத்துக்கு பிறகு சாப்பிட எங்கேயாவது ஓட்டலைத் தேடிக்கொண்டு போவார்—பிறகு வந்து கொஞ்சநேரம் தூங்குவார். சாயங்காலம் வெளியே போனா திரும்ப நேரமாகும்."

"நான் அவருக்காக இங்கே காத்துக் கொண்டிருப்பது பயன் இல்லேன்னு சொல்றியா?"

"அவரை நீங்க ரொம்ப முக்கியமா பார்க்கணுமா?"

"ரொம்ப முக்கியம்—இவ்வளவு வேகமா அவர் அறையைப் பூட்டிக்கிட்டு போய் விடுவார்னு நான் நினைக்கலை. நாளை மாலை வந்தால் ஒரு சமயம் பார்க்க முடியுமோ?"

"சரியா மூணு மணிக்கு வாங்க சார்—மனுஷர் அறையிலே தூங்கிக்கிட்டு இருப்பார்."

உதட்டைச் சுழித்துக்கொண்டு—மேல் துண்டால் முகத்தைத் துடைத்துவிட்டபடி...மெல்ல மாடிப் படிகளைக் கடந்து கீழே வந்தார்.

இரவு சாப்பாட்டைப் பரிமாற வந்த அவரிடம் காணப்பட்ட குழப்பத்தையும் தடுமாற்றத்தையும் கண்டு வசுந்தரா வெகுண்டாள்.

"தூக்கம் வந்துதுன்னா...எல்லாத்தையும் வச்சுட்டுப் போய் படுங்களேன்...ஏன் இப்படி தள்ளாடுகிறீங்க?" எரிச்சலாக அதட்டினாள்.

Vennila

ஒருவாறு தமது வேலைகளை முடித்துக் கொண்டு .. ஒரு தம்ளர் மோருடன் சாப்பாட்டை முடித்துகொண்டு தமது அறைக்கு வந்து படுக்கைமீது விழுந்த அவருக்கு தூக்கமா வந்தது...?

டாண் என்று சாப்பாட்டறை கடிகாரம் ஒலித்த போது...திடுக்கிட்டுத் தலையணை மேல் சரிந்து கொண்டார்...

நாளைக்குக் கட்டாயம் பகல் வேளை பங்களாவி லிருந்து நழுவி விடவேண்டும்.

அவர் நினைப்பதுமட்டும் உண்மையாகிவிட்டால்... படுக்கைமீது புரண்டபடி...தமக்குள்ளேயே ஏதோ பேசிக்கொண்டு – கண்களை மூடிவில் நித்திரை தழுவ .. லேசான குறட்டையுடன்...அயர்ந்து தூங்கத் தொடங்கினார் குப்புசாமி.

# 11

வசுந்தரா தன் மகளுக்குப் பூரண சுதந்திரம் தந்து, அவளிடம் காணப்படும் பிணக்கை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அன்று காலை காப்பி பலகாரம் சாப்பிட இருவரும் சாப்பாட்டறைக்கு வந்ததுமே சொன்னாள்.



"இன்னியிலிருந்து நீ தனியா தொழிற்சாலைக்கு உன் பச்சை பியட்டில் வரலாம். உன் உபயோகத் துக்குத்தானே அதை வாங்கினேன்!"

"காரை நானே ஓட்டலாம் இல்லையா?" மகள் கேட்டபோது தாயின் நெஞ்சில் திக்-கென்றதொரு உணர்வு ஏற்படத்தான் செய்தது.

போக்குவரத்து நெரிசலில் கொஞ்ச காலத்திற்கு முன் தான் கார் ஓட்டப் பழகிக்கொண்ட மகளை தனியாக கார்விட அனுமதிப்பது சரியா?

"என்னம்மா யோசிக்கிறீங்க? காரை ஓட்ட முடியாம திண்டாடுவேன்னு கவலைப்படுகிறீங்களா, ஏதாவது விபத்து ஏற்படலாம்னு பயமா?" மகள் சிரித்தாள்.

"எனக்கிருப்பதெல்லாம் நீ ஒருத்திதானே? அதனாலே..." மேலே பேச முடியாது... தடுமாறினாள் வசுந்தரா.

கடினமாக முகத்தை இறுக்கிக்கொண்டு தன் உணர்வுகளை அமுக்கிக்கொள்ள பழக்கப்பட்டிருந்த வசுந்தரா அன்று ஏனோ தன் எதிரே உட்கார்ந்திருந்த மகளைக் கண்டு நெஞ்சு உருகிப்போனாள்.

"இப்பத்தானே கார் ஓட்டக் கத்துக்கிட்டேன்னு யோசிக்கிறேன்..." லேசாக முறுவலித்தாள்.

மாரிக்காலத்துச் சந்திரன் மேகக் கூட்டத்திலிருந்து ஒரு விளிம்பைக் காட்டி மறைவது போல அம்மா முகத்திலே புன்னகை நிழலாடி அமிழ்கிறதே! வியந்தபடி குப்புசாமி காப்பி தம்ளர்களைக் கொண்டுவந்து மேஜை மீது வைத்தார்.

அவர் அப்பால் போகட்டுமென்று காத்திருந்துவிட்டு தொண்டையை லேசாகச் செருமினாள் வசுந்தரா.

Vennila

“நீ சொல்லப்போகிறது எனக்குப் புரிகிறது. என்னைக்காவது ஒருநாள் நானே தனியாக துணிவுடன் காரை ஓட்டித்தானே ஆகணும். அதை இன்னிக்கே செய்தால் என்ன என்றுதானே சொல்லப்போறே? இரண்டு நாளாவது கூட நம்ப டிரைவர் சந்தானத்துடன் நீ காரை ஓட்டிச் செல்வது நல்லதுன்னு நினைக்கிறேன்.”

வழக்கமான அதட்டல் அவளது குரலில் அடங்கி விட்டது. மிருதுவான வார்த்தைகளால் மகளின் பிடிவாதத்தை அடக்க முயன்றாள். சாமதான பேத தண்டம் என்ற நான்கு உபாயங்களையும் கையாண்டு விடுவதென்பது அவளது திட்டம். தனது அதிகாரப் பீடத்திலிருந்து அம்மா கொஞ்சம் இறங்கி வந்திருப்பதைக் காண சம்யுக்தாவுக்கு உள்ளூர மகிழ்ச்சிதான்.

அவளும் தன் உணர்வுகளைக் காட்டிக் கொள்ள பிரியமின்றி மிகவும் அழுத்தலாகப் பேசினாள்.

“சரி அம்மா! இரண்டு நாளைக்கு சந்தானம் கூட வரட்டும். நான் வண்டியை ஓட்டுகிறேன். அவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தவறு இருந்தால் திருத்தட்டும்!”

அதற்கு மேல் தர்க்கிக்க வசுந்தரா விரும்பவில்லை. சிறகு முளைத்துவிட்ட குஞ்சு, பறக்கத் துடிக்கிறதை தாய் பறவை கட்டுப்படுத்த இயலுமா?

‘சின்ன சங்கதிகளுக்கெல்லாம் மகளின் சுதந்திரத்தில் குறுக்கிட்டு கத்தரிக்கத் தொடங்கினால் பின்னர் சாத்யப்படாத பிரச்சனை தோன்றும் போது அவளை அடக்க முடியாது தோற்றுவிட நேரும்...’ என எண்ணியபடி, ‘‘அப்படியே செய்! நிதானமாக வண்டியை ஓட்டிக்கொண்டு தொழிற்சாலைக்கு முன்னே பின்னே வந்தால் போதும். என் பின்னாலயே வரணும்னு அவசரப்பட்டு வேகமா ஓட்ட வேண்டாம்!” என்றாள்.



வண்டி ஓட்டுனர் சந்தானம் அவர்கள் குடும்பத்தில் பல நாட்களாகப் பணிபுரிகிறவர். பேரன் பேத்தி எடுத்து விட்ட வயதானவர். இன்னும் ஓரண்டு காலத்திற்குப் பின்னர் ஓய்வடைய விரும்புவதாகச் சொல்லிக் கொண்டிருந்தவர்.

அவருடன் தனியாக சம்யுக்தாவை அனுப்புவதில் தவறில்லை என்று தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள் தாய்.

வசுந்தராவைச் சுமந்துகொண்டு பென்ஸ் கார் விட்டு வாசலைவிட்டு வழுக்கிக்கொண்டு நகர்ந்த சில நிமிடங்களில் சம்யுக்தா தனது பியட்டைக் கிளப்பினாள்.

உள்ளேயிருந்து குப்புசாமி ஓடி வந்தார்.

ரத்னாவும், தோட்டக்காரனும் சின்ன யஜமானியின் சாரத்தியத் திறமையை வேடிக்கை பார்க்க வராந்தாவில் வந்து நின்று கொண்டிருந்தார்கள். குப்புசாமியால் எதுவும் பேச முடியவில்லை. ஏமாற்றத்துடன் தோள்மீது கிடந்த துண்டை எடுத்து உதறிப் போட்டுக்கொண்டு உள்ளே திரும்பி விட்டார்.

காரை நிதானமாக செலுத்திக்கொண்டு போனாள் சம்யுக்தா. சந்தானத்தின் கண்கள் அவள் பிடித்திருந்த ஸ்டியரிங்கையும், தெருவையும் மாறி மாறி மிரட்சியுடன் பார்த்த வண்ணமிருந்தன. அந்தக் காரைத் தாண்டிக் கொண்டு துரிதமாக மேலே போகத் துடித்த ஒரு மோட்டார் சைக்கிள்காரருக்கு வழிவிட மறுபக்கம் லேசாக ஸ்டியரிங்கை ஒடித்தவளின் பார்வை யதேச்சையாக நடைபாதையில்லயித்தது.

தொள தொளவென்ற குர்த்தா பைஜாமாவில்... தோளின்மீது ஒரு துணிப்பையை மாட்டிக்கொண்டு... வேகமாக நடந்து கொண்டிருந்த தாடிக்கார மனிதரின் முகத்தைப் பார்த்ததும் ஏனோ அவளது நெஞ்சு தீவிரமாகத் துடிக்கத் தொடங்கியது...

Vennila

"அம்மா...! முன்னால் போற வண்டி கிட்டக்க வந்துட்டீங்க... இன்னும் கொஞ்சம் நகர்ந்திருந்தால் அதன் மேல் இடிச்சிருப்பீங்க !" என்று அவளது தவறைச் சுட்டிக் காட்டினபோதுதான் அவளுக்கு விழிப்பு ஏற்பட்டது... ஆனாலும் பார்வை நடைபாதையிலே விரைந்து கொண்டிருந்த மனிதரை விட்டு அகல மறுத்தது.

நெற்றிமீது குப்பென்று பூத்த வியர்வையை இடது கரத்தால் துடைத்துக்கொண்டு மெள்ள வண்டியை வட்டமான திருப்பத்திலே ஓட்டி - எதிர் பக்கம் நடந்து கொண்டிருந்த அந்த மனிதரது திசைக்கு ஓட்டினாள்.

"பெரிய அம்மா உங்களுக்காக தொழிற்சாலையில் காத்துகிட்டு இருப்பாங்க, நீங்க வேறே எங்கேயோ போறாப்பல...?" இழுத்தார் சந்தானம்.

'இதென்ன தொல்லை? இந்தப் பெண்ணுக்கு தொழிற்சாலைக்கு போகும் வழி தெரியவில்லையா என்ன?'— அவருக்கு எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தது.

"அம்மாகிட்ட சொல்ல மறந்துட்டேன். அதனால் பரவாயில்லை. இந்தச் சிறப்பு அங்காடியிலே எனக்கு ஒரு பொருள் தேவைப்படுகிறது. அதை வாங்கிட்டுப் போக நினைக்கிறேன்!"-கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு... தெருவில் ஒரு கண்ணும்-நடைபாதையில் ஒரு கண்ணுமாக மெல்ல வண்டியை ஓட்டினாள்.

தாடிக்கார மனிதர் அருகிலிருந்த சிறப்பு அங்காடிக்குள் நுழைவதைக் கண்டு அவளுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி.

"காரை நிறுத்தத்திலே வச்சுக்கொண்டு இருங்கோ... நொடிப்பொழுதிலே வந்துடறேன்... நீலச்சட்டைக்காரர் வாடகைக்கு சீட்டு கொடுக்க வந்தாக்க... இந்தாங்க சில்லறை!" என்று இரண்டு ரூபாய் தாள் ஒன்றை



அவரிடம் நீட்டியபடி காரை தெருவின் இடது பக்க ஓரத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் நிறுத்திவிட்டு... இறங்கினாள்.

சிறப்பு அங்காடியில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆனாலும் அவளால் அந்தத் தாடிக்காரரை தூரத்திலிருந்தே அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.

பற்பசையும்-சோப்பும் வாங்கிக்கொண்டு நின்றவர் அருகே மூச்சிறைக்க ஓடிவந்தாள்.

"சார்! உங்களைத்தானே?" என்று அழைத்தபடி அருகில் சென்று நின்று கொண்டாள்.

"யார் என்னையா கூப்பிட்டது?" திரும்பிப் பார்த்த தாடிக்காரர் கண்களில் சிரிப்பு பொங்கி வழிந்தது. காலோடு தலைவரை அவளை பிரமிப்புடன் பார்த்தார்...

"உங்களை நான் இதற்குமுன் எங்கேயோ பார்த்தது போல இருக்கு சார்... உங்க பேரைத் தெரிஞ்சுக்கலாமா?" பரபரப்புடன் கேட்டாள்.

கவுண்டரில் பணத்தைக் கொடுத்துவிட்டு பொருளைப் பெற்றுக்கொண்டு - விரைவாக வெளியேறியவர் பின்னால் விடாப்பிடியாகத் தொடர்ந்தாள். ஒருசமயம் அவருக்குத் தமிழ் புரியவில்லையோ? சந்தேகத்துடன் "உங்களைத்தான் கேட்கிறேன். உங்க பெயரை நான் தெரிஞ்சுக்கலாமா?" இந்தியில் விசாரித்தாள்...

வராந்தாவைத் தாண்டி படிகளில் இறங்கி பாதசாரிகளுடன் கலந்துகொள்ளுமுன் அவள் பக்கம் திரும்பி லேசாக சிரித்தார். அப்போது அவர் முகத்தை நன்றாகப் பார்த்த சம்யுக்தாவின் மனதில்...ஒரு பெருத்த மருட்சி.

எங்கேயோ கனவில் கண்ட மிகவும் பழக்கமானதொரு மனிதரைப் போல் அவர் காணப்பட்டதை அதிசயத்துடன் பார்த்தாள்.

Vennila

நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது.

அந்த மனிதரோடு நீண்டநேரம் பேச மாட்டோமா என்றதொரு ஆதங்கம் மனதைக் குடைவதை உணர்ந்தாள்.

"எனக்குத் தமிழ் தெரியும்மா...! தமிழிலேயே கேள், பதில் சொல்றேன்...!" பற்கள் பளிச்சிட மீண்டும் சிரித்தார்.

உச்சி முடியைப் பிடித்து யாரோ அவளை பலமாகக் குலுக்கிவிட்டது போன்றதொரு அதிர்ச்சியில் பிரமித்துப் போனாள்...

"உங்களை எங்கேயோ பார்த்ததுபோலத்தோணுது. உங்கள் பேரைத் தெரிஞ்சுக்கலாமா...?" மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள்.

"என்னை நீ பார்த்திருக்க முடியாதம்மா. நான் வடக்கே இருந்து வருகிறவன். என் பெயர்-ஊர் இதெல்லாம் உனக்கு அவசியமில்லை..."

"சார்! ஒரு சந்தேகத்தைப் போக்கிக்க கேட்கிறேன். தயவுசெய்து..." அவள் முடிக்கு முன் வேகமாக நடைபாதையை நோக்கிப் போன அவர்... அருகில் நின்றதொரு ஆட்டோவைப்பிடித்து ஏறிக்கொண்டுவிட்டார்.

அவரது செய்கை முகத்தில் அறைந்தது போன்ற வேதனையையும்... அவமானத்தையும் தந்தது. மூக்கும் முகமும் சூடாகிப் போய்...நெஞ்சு பதறி - கால்கள் தடுமாற, அவள் தன் காரை நோக்கித் திரும்பினாள்.

அவள் அப்படி என்ன வேண்டாத ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டாள்? தன் பெயரைச் சொன்னால் அந்த மனிதர் என்ன கூசிப்போய் விடுவாரா? உள்ளூர ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. காரில் ஏறி பின் ஆசனத்தில் உட்கார்ந்தவளுக்கு...கையும் காலும் ஓடமறுத்தன.



"டிரைவர்..! வீட்டுக்கு வண்டியை ஓட்டுங்கோ... நான் தேடி வந்த சாமானை வாங்க...மணிபர்சை கொண்டு வர மறந்துட்டேன்."

"என்கிட்டே இருபது ரூபாய் இருக்கும்மா... அவசியமான பொருளாக இருந்தா நீங்க இங்கேயே வாங்கிக்கிறது நல்லதாச்சே-!"

"வேண்டாம்! வீட்டுக்கு வண்டியை ஓட்டுங்க... காலதாமதமான காரணத்தைப் பத்தி அம்மாவுக்கு போன் செய்யணும். இல்லாவிட்டா கவலைப்படுவாங்க!" அழுத்தமாகச் சொன்னாள்.

சந்தானத்தினால் மேலே விவாதிக்க முடியவில்லை... காரை வீட்டுக்குத் திருப்பி ஓட்டினார். வண்டியிலின்று இறங்கி பதட்டத்துடன் அவள் உள்ளே விரைந்த போது மகி உற்சாகமாக குரைக்கும் சத்தம் கேட்டு சமையலறையிலிருந்து வாசலுக்கு ஓடிவந்தார் குப்புசாமி.

சம்யுக்தா திரும்ப வீட்டுக்குள் நுழைவதைக் கண்டு ஒரு கணம் திடுக்கிட்டுப் போனார்.

"என்ன பாப்பா? என்ன ஆச்சு?" பதறினார் அவர்.

"கொஞ்சம் சில்லுனு தண்ணி குடிக்கக் குடுங்கோ... உங்ககிட்ட ஒரு முக்கியமான சங்கதியை நான் பேசணும்!" சுற்று முற்றும் பார்த்தாள்.

தம்ளரில் குளிர்ந்த நீரை நிறைத்து ஐஸ் துண்டங்களை மிதக்கவிட்டுக் கொண்டு வந்து விரைவாகத் தந்தார்.

"கவலைப்படாதே அம்மா, ரத்னா அம்மா கடைத்தெருவுக்குப் போயிருக்காங்க. வழக்கம் போல பகல் உணவு நேரத்திற்குத்தான் திரும்புவாங்க—உன் முகம் ஒருமாதிரி இருக்கே பாப்பா. என்ன ஆச்சு?" கவலையுடன் விசாரித்தார்.

இ—8

Vennila

சாப்பாட்டறை நாற்காலியில் அமர்ந்துகொண்டாள் சம்யுக்தா...தண்ணீரை ஒரே மூச்சாகக் குடித்துவிட்டு—தான் சந்தித்த மனிதரைப் பற்றி விவரித்தாள்.

குப்புசாமிக்கு ஏக பரபரப்பு.

"இது ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி பாப்பா...இதே மனிதரை நான் நேற்று மாலை பார்த்தேன். எனக்கேற்பட்ட சந்தேகத்தில் பின் தொடர்ந்து போனேன். பொதுப் பூங்கா அருகேயிருக்கிற ஒரு லாட்ஜிற்குள் புகுந்ததைப் பார்த்து நான் வேகமாக பின்னாடி ஓடுவதற்குள் மனுசன் அறையைப் பூட்டிக்கிட்டு சாப்பிட எங்கேயோ கிளம்பி பின்வழி படிக்கட்டு வழியாகப் போய் விட்டார். இன்னிக்கு பகல் இரண்டு மணிக்கு நாராயணன் தெருவிலிருக்கும் கோமதி லாட்ஜில் இரண்டாவது தளத்தில் ஆறாம் நம்பர் அறையில் சந்திக்கலாம்னு லாட்ஜ் பையன் சொன்னான். இந்த ரத்னா அம்மா அது சமயம் வீட்டில் இருந்து தொலைக்குமேன்னு கவலையா இருக்கு..இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது...என்ன செய்யலாம்னு காலையிலிருந்து குழம்பிக்கிட்டிருக்கேன். எனக்கு ஒரு பெரிய சந்தேகம். ஒரு சமயம் அந்த மனிதர் வீட்டை விட்டு காணாமல் போய்விட்ட உன் தந்தையாக இருந்தால்... நேரே பார்த்து பேசிவிடணும்னு ஒரே தவிப்பு!" குப்புசாமியின் குரல் தழுதழுத்தது.

"தாத்தா! என் மனதிலும் அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டதும் என் உடம்பை என்னவோ செய்தது... தாங்க முடியாத துக்கம் நெஞ்சை அடைத்தது. தாத்தா, அவர் மட்டும் காணாமல் போன என் தந்தையாக இருந்துவிட்டால்!-தொண்டை வரை வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள் சம்யுக்தா.

"இன்னிக்கு பகல் இரண்டுமணிக்கு அங்கே எப்படி போறதுன்னு எனக்கு ஒரே கவலையா இருக்கு பாப்பா...!"



"தாத்தா! அந்தக் காரியத்தை என்கிட்ட விட்டுடுங்கோ...!"

"இல்லே பாப்பா...! நீயெல்லாம் அதுமாதிரி இடத்துக்குப் போறது அத்தனை நல்லதில்லே - அம்மாவுக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்னுபோட்டு விடுவாங்க...!"

"தாத்தா! இது என் சொந்தப் பிரச்னை... என்னை விட்டுப் போய்விட்ட என் தந்தையாக அவர் இருக்கக் கூடாதா என்கிற பரிதவிப்பு... அம்மாவுக்குத் தெரிஞ்சா தானே வம்பு.. நான் ஏதாவது ஒரு சாக்கு சொல்விட்டு பகல் உணவுக்குப் பிறகு கிளம்பிடறேன். சந்தானத்தை வீட்டிலே கொண்டு வந்து விட்டுட்டு... நேரே நானே காரில் நாராயணன் தெருவுக்குப் போய்...!" அவள் முடிக்குமுன் தொலைபேசி மணி கிணுகிணுத்தது...

"அம்மா கூப்பிடறாங்க போலிருக்கு...!" கையை உதறிக்கொண்டு வேகமாக சென்று போனை எடுத்தார் குப்புசாமி.

"என்ன இன்னும் சம்யுக்தா வீட்டை விட்டு கிளம்பலையா...?" அதட்டும் குரலில் கேட்டாள், மறுமுனையில் வசுந்தரா...

"அம்மா கூப்பிடறாங்க - பேசும்மா பாப்பா...!" என்றபடி போனை கீழே வைத்தார்.

"என்ன ஆச்சு...? இத்தனை நேரத்திற்குள் இங்கே வந்திருக்கணுமே... எனக்கு ஒரே கவலையா போயிட்டது..!" வசுந்தரா நிதானமான குரலில் கேட்டாள்.

"வழியிலே சிறப்பு அங்காடிக்குள்ளே நுழைஞ்சேன்... லேசா தொண்டை கமறியது... அதுக்காக லாசஞ்சஸ் ஏதாச்சும் வாங்கலாம்னு போனேன்— மணி பர்சை வீட்டில்விட்டு வந்தது தெரிஞ்சது... வீட்டுக்கு வந்திருக்கேன்...!"

Vennila

'நல்ல பொண்ணு—இந்த சின்ன சங்கதியைக் கூடவா மறந்துடுவே. சரி நேரே இங்கே வா... உனக்கு நான் லாசஞ்சஸ் ஒரு பாக்கட் வாங்கிவர ஏற்பாடு பண்ணறேன்... உனக்கு தயக்கமா இருந்தா சந்தானம் இன்னிக்கு மட்டும் வண்டியை ஓட்டட்டும். சீக்கிரமா வந்து சேர் அம்மா... பம்பாயிலிருந்து சில வியாபாரிகள் வரப்போறதாகச் சொன்னேனே—அவர்களோட நாம இன்னிக்கு தேநீர் சாப்பிடப் போறோம்... மறந்துட்டியா..?"

"இதோ வரேன் அம்மா!" தோள்களைக் குலுக்கிக் கொண்டு முகத்தை சுருக்கிய வண்ணம்... கண்களால் ஜாடை காட்டிவிட்டு... குப்புசாமியிடம் விடைபெற்றுக் கொண்டு... விரைந்து காரில் ஏறிக்கொண்டாள்.

"டிரைவர் நீங்களே வண்டியை ஓட்டுங்க... அம்மா சீக்கிரமா தொழிற்சாலைக்கு வரச்சொல்லி போன் செய்தாங்க..." என்றபடி பின் ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள்.

மனம்... பிற்பகல் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி... பலபல திட்டங்களை உருவாக்க விருவிருத்துக் கொண்டிருந்தது.

## 12

கண்ணாடிக் கதவை வேகமாகத் தள்ளித் திறந்து கொண்டு மூச்சிறைக்க உள்ளேவந்து நின்ற மகளை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள் வசுந்தரா.



...லையில் வேலை துவங்கி ஒரு மணி நேரத்திற்கு மேலாகி விட்டிருந்தது.

காலத்தை மிகவும் கண்டிப்பாக அனுசரிக்கிறவள் அவள். பதவி என்பதில் ஒழுங்கு முறைகளை எதிர்பார்ப்பவள். நேரம் தவறி வந்துவிட்ட பள்ளிக்கூட மாணவி போல முன்னெற்றி கூந்தல் முகத்தில் புரள—வியர்வை காதோரங்களை நனைக்க—பாதணி பலத்த ஓசை செய்ய மகள் வந்து உள்ளே நின்ற கோலம் அவளுக்கு சிறிதும் பிடிக்கவில்லை.

நிலைமை சாதாரணமாக இருந்திருந்தால் "இப்படியா அலறிப் புடைத்துக் கொண்டு வருகிறது? தொழிற்சாலையின் வருங்காலத் தலைவிக்கு இது அடுக்குமா? புத்தியில்லாத பெண்ணாக இருக்கியே?" எனப் படபட வென்று பலவும் சொல்லி மிகக் கடுமையாகக் கண்டித்திருப்பாள்.

சமீபத்தில் மகளிடம் காணப்பட்ட குழந்தைத்தனமான போக்கை மெல்ல அகற்றக் கையாண்ட உபாயம் காரணமாக அவள் எதுவும் பேசவில்லை.

"உட்கார்!" என்று மட்டும் சொல்லிவிட்டு, சில ஃபைல்களை அவள் முன் நார்த்தினாள்.

"முகத்தைக் கழுவிக்கொண்டு முடியை சீர்திருத்திக் கொள். தேநீர் இடைவெளியின்போது நாம் பம்பாயிலிருந்து வந்திருக்கும் நமது பெரிய வாடிக்கைக்காரங்களை சந்திக்கப் போகிறோம்.. நமது தொழிற்சாலையில் தயாரிக்கும் பொருள்களை அதிகமாக வாங்குகிறவர்கள் அவர்கள். அவர்களுக்கு நான் இந்தத் தொழிற்சாலையின் வருங்காலத் தலைவியான உன்னை அறிமுகப் படுத்த வேண்டாமா?"

அசட்டையாகத் தோள்களைக் குலுக்கினாள் சம்யுக்தா... உடனேயே எழுந்து உள்ளடங்கி இருந்த பிரத்யேக அறைக்குள் மறைந்து விட்டாள். கண்ணாடியில் தன் தோற்றத்தைப் பார்த்த அவள் திடுக்கிட்டுத் தான் போனாள்.

Vennila

வெளுத்த முகமும்—மிரட்சியான பார்வையும்—தாறு மாறாக முகத்தில் புரண்ட கூந்தலுமாக அவள் பேயால் அறைபட்டவள் போல் தோன்றினாள்.

இப்படி அலங்கோலமாக வந்து நின்றதை அம்மா கண்டு கொள்ளவில்லையே ஏன்?

அம்மா மகளைக் கண்டு அஞ்சுகிறாளா? எதுக்கு? சம்யுக்தாவுக்கு வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தன.

முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டாள். கூந்தலை அவிழ்த்து வாரி மீண்டும் இறுக்கமானதொரு கொண்டையைப் போட்டுக் கொண்டாள். தோள் பையைத் திறந்து காம்பாக்டை எடுத்து லேசாக முகத்தில் பவுடரை ஒத்திக்கொண்டு மற்ற ஒப்பனைகளை விரைவில் முடித்துக் கொண்டாள். கைவசமிருந்த பிளாஸ்டிக் பொட்டு ஒன்றைப் பிரித்து நெற்றியின் நடுவில் அழுக்கிக் கொண்டாள். தனது அலங்காரத்தை மறுபடி ஒருமுறை கண்ணாடியில் பார்த்து சரிசெய்து கொண்டு, வெளியே வந்தாள்.

மகளைக் கடைக்கண்ணால் பார்த்த வசுந்தராவுக்கு மிக்க திருப்தி...

"தொண்டை கமருகிறதுன்னு சொன்னியே— லாசஞ்சன்ஸ் வாங்கி வச்சிருக்கேன்— இந்தா!" என்று ஒரு பொட்டலத்தை மகளிடம் நீட்டினாள்.

சம்யுக்தா அதிலிருந்து ஒன்றை எடுத்துப் பிரித்து வாயில் அடக்கிக் கொண்டாள்.

"பொய் சொன்னதற்கு தண்டனையா இது?" என அவளுக்கு சிரிப்பு முட்டிக்கொண்டு வந்தது.

தலையைக் குனிந்துகொண்டு மேஜை மேல் தன் முன்னால் கிடந்த ஃபைல்களைப் புரட்டினாள். பார்வையும்— எண்ணங்களும் எங்கேயோ இருந்தன.



"நூடா தேநீர் சாப்பிடு— கரகரப்பு அடங்கலைன்னா வீட்டுக்கு போனதும் நம்ப டாக்டரைக் கூப்பிடறேன். அவர் பார்த்து மருந்து ஏதாச்சும் தரட்டும். ஊரெல்லாம் கடுமையான புளு காய்ச்சல் பரவியிருப்பதாகச் சொல்றாங்க. இந்தச் சமயம் பார்த்து நீ படுத்துடக் கூடாது" என்றாள் தாய் கரிசனமாக.

பளிச்சென்று ஒரு யோசனை மகளின் மூளையில் கொடி கட்டியது. அன்று பகல் அவள் அங்கிருந்து கிளம்பிவிட வேண்டும் என்ற தீவிரம் மனதைக் குடைந்து கொண்டிருந்தது...

அம்மாவிடம் என்ன சொல்லி தப்பிப்பது என்று குழம்பிக் கொண்டிருந்தவளுக்கு இப்போது ஒரு வழி தோன்றிவிட்டதே!

தேநீர் இடைவேளையின் போது தாயைப் பின் தொடர்ந்து அவள் டைரக்டர் மீட்டிங் நடத்தப்படும் பெரிய அறைக்குள் நுழைந்தாள். அவர்களது வரவை எதிர்நோக்கி அறையின் பெரிய மேஜைமீது வெள்ளை விரிப்பைப் பரத்தி... பீங்கான் தட்டுகளில் இனிப்பும் காரமும் பரிமாறப்பட்டிருந்தன. காண்டீனது ஆட்கள் இருவர் வெள்ளைச் சீருடையில்... காப்பி-தேநீர் கெட்டிலுடன் வருகிறவர்களுக்கு அவைகளை வழங்க ஒரு புறம் பவ்யமாகக் காத்துக் கொண்டிருந்தனர்.

ஒரு சில நிமிடங்களில் பம்பாயிலிருந்து வந்த வாடிக்கைக்காரர்கள் மூவர் அங்கு வந்து கலந்து கொண்டனர். மகளை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தாள் வசுந்தரா; எல்லோரும் தேநீர் சாப்பிட்டுக்கொண்டு வந்த காரியத்தை கவனிக்க அமர்ந்து கொண்டனர்.

வந்தவர்களில் வயதில் மூத்தவராகத் தெரிந்தவர் தான் தாத்தா என்றும் பம்பாயின் முக்கியமான நிறுவனத்தின் தலைவர் என்றும் அம்மா விவரிக்க- தலையை அசைத்துவிட்டு மெல்ல அவர் பக்கம் திரும்பிப் பார்த்தாள் மகள்.

Vennila

பின்கச்ச வேட்டியும்-மல்ஜிப்பாவும்... தடிமனான மூக்குக் கண்ணாடியும், வியர்வையில் பளபளத்த வழுக்கைத் தலையுமான அந்த வயதானவர் வாயெல்லாம் பல்லாகத் தன்னைப் பார்த்து முறுவலித்தது அவளுக்குப் பிடிக்கவில்லை...

கழுத்தை நெருக்கிய காலரிலிருந்து பொத்தான்கள் வரிசையாக முழங்கால் வரை ஓடிய கோட்டும்... பாண்டும் தரித்திருந்த பிள்ளை-நடு வயதைத் தாண்டி விட்டவர். அடிக்கடி தமது பையிலிருந்த தங்க கெடிகாரத்தை சங்கிலியுடன் எடுத்து பார்த்தவண்ணமிருந்தவரைக் கண்டவளுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. பம்பாய் நிறுவனத்தின் கிளை அலுவலகத்தின் தலைவர் அவர் என அம்மா அறிமுகப்படுத்தியதை அசட்டையாக ஏற்றுக் கொண்டாள்.

அவளுக்கு முன்னர் எதிர் பக்கம் அமர்ந்திருந்த மூப்பது வயதுக்குள்ளான தோற்றத்தில் மிடுக்காக சபாரி ஸூட்டில் கச்சிதமாகக் காணப்பட்டவன் பேரன்... ஷேவிங் லோஷனின் லேசான மணத்தை அறை முழுவதும் பரப்பிக்கொண்டு தனது கம்பீரமான தோற்றத்திலே அசையாத நம்பிக்கையுடன் உட்கார்ந்திருப்பவனை உற்றுப்பார்த்துவிட்டு அசட்டையாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அம்மா மிகவும் கெட்டிக்காரிதான். விஜிடபிள் சமூசாவை மெல்ல கடித்தபடி அவள் வியாபார பேச்சுக்களைத் துவக்கினாள்.

பல லட்சங்கள் அவர்களது வாயில் அடிபட்டன. தட்டிலிருந்த இனிப்பை ஸ்பூனால் அள்ளி வாயில் போட்டுக் கொள்வதற்குள் அம்மா தனது பேரத்தை முடித்துக்கொண்டு விட்டிருந்தாள்.

பம்பாயிலிருந்து தாத்தா-பிள்ளை-பேரன் என்ற உறவு பட்டாளமே புறப்பட்டு வந்திருந்தும்... இருந்த இடத்தை விட்டு அசையாத அம்மா அரை மணி நேரத்தில்-தேநீரைக் காண்டீன் ஆட்கள் கோப்பைகளில் நிறைத்து விட்டு அப்பால் நகர்வதற்குள் பல லட்சங்களுக்கு வியாபார உறுதிப் பத்திரத்தில் அவர்களிடம் கையெழுத்து வாங்கி முடித்துக் கொண்டுவிட்டிருந்தாள்.



மூன்று ஆண்களுக்கு எதிரில் ஒரு பெண்...எத்தனை சாமர்த்தியக்காரி பம்பாய் வியாபாரிகளைச் சுருட்டித் தன் தோள்பைக்குள் போட்டுக்கொள்ளும் அளவு கெட்டிக்காரியாக இருக்கும் அம்மா... தன் வாழ்க்கையில் ஒரு ஆண் பிள்ளையுடன் ஒழுங்காக-சிறப்பாக சேர்ந்து வாழமுடியவில்லையே. காரணம்? பிசகு யார் பக்கம்? கட்டாயம் சம்யுக்தா இந்த உண்மையைக் கண்டுபிடித்தாக வேண்டும். அவளது வருங்காலத்திற்கு அம்மா வேண்டப்பட்ட சொத்தை விட்டுப் போகலாம்.

ஆனால் புதிர் இருள் சூழ்ந்த இந்த மர்மத்தையும் விட்டுப்போனால்... அவள் வாழ்வில் வெளிச்சம் இருக்காதே-கவை இருக்காதே?

காரணத்தைக் கட்டாயம் அவள் கண்டுபிடித்தாக வேண்டும். அன்று பகல் எப்படியாவது... அந்த மர்ம மனிதரை அவள் சந்தித்து உண்மையில் அவர் யார் என்று முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். குப்புசாமி சந்தேகிப்பது சரியாக இருந்தால்... அவள் விடப்போவதில்லை.

அவர்களைவிட்டு அப்பா ஏன் வெளியேறி மறைந்து கொண்டார் என்ற உண்மையைத் தெரிந்துவிட்டு... பிசகு அம்மாவுடையதாக இருந்தால்...பற்களை கோபத்துடன் கடித்தாள் சம்யுக்தா...

தங்கள் அறைக்கு திரும்பிய வசுந்தரா மகளை மலர்ந்த முகத்துடன் திரும்பிப்பார்த்தாள்.

"கவனிச்சுக் கொண்டாயா? வியாபாரம் வேறு-நட்பு வேறுன்னு நாம் நமது உணர்வுகளைத் தனித்

Vennila

தனியே ஒதுக்கி வச்சுக்கணும். பம்பாயிலிருந்து வந்தாங்களே மூணு பேர்—இவங்களை எனக்கு இந்த தொழிற்சாலையை வாங்கின நாளா தெரியும். தீபாவளி—பொங்கல் என்று பண்டிகைகளை விடாது வாழ்த்து மடல்கள் அனுப்பிக்கிட்டிருப்பாங்க. இந்த பக்கம் வரவங்க கிட்டே என் அன்பு சகோதரிக்குன்னு எழுதி பெரிய பிஸ்கட் டப்பாக்களை அனுப்பிகிட்டிருப்பாங்க... அப்பப்போ நான் நன்றி தெரிவித்து பதில் கடிதம் போட்டு விடற பழக்கம். இதையெல்லாம் நான் வியாபாரத்திலே போட்டு குழப்பிக்கிறதில்லை... நீயும் அப்படித்தான் இருக்கணும்... சிநேகிதம்னு வியாபாரத்தை கோட்டை விட்டுடக்கூடாது... பட்டுக் கத்திரித்தால் போல— இவங்களோட எல்லாம் பட்டும் படாமலும்தான் பழகணும்...!''

'தெரியும் அம்மா...! கணவரிடம்கூட நீங்க அப்படிப் பழகினதாலேதானே அவர் உங்களை விட்டுட்டுப் போய் விட்டார்'—கேட்கவேண்டும் போல ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது...

இருக்கட்டும் அவசரப்படக்கூடாது... அந்த மர்ம மனிதர் உண்மையில் அவளது மறைந்துபோன தந்தையாக இருந்துவிட்டால்... அம்மாவுடைய அகம்பாவத்தை—கல்மனதை— வியாபாரம் என்று பணத்தின் பின்னால் பேயாக அலையும் போக்கை தூள் தூளாக்கிவிடலாமே...

தாடை இறுக அவள் ஃபைல்களைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

நேரம் நத்தையாக ஊர்ந்தது.

குப்புசாமி கொடுத்தனுப்பி இருந்த பகல் உணவை அம்மா மேஜை மீது பரத்திய போது மகள் வேண்டா வெறுப்பாக சிறிது சாப்பிட்டாள்.

"இரண்டு மணிக்குமேல் நம் அலுவலகத்துக்கு நாம் போகணும்... அதனாலே... சீக்கிரம் சாப்பிட்டுட்டு



தயாராக இரு...நான் கொஞ்ச நேரம் நம் செயலாளர் கிட்டேபேசிட்டு வரேன்!'' சாப்பிட்ட கையைக் கழுவி வாயைத் துடைத்துக்கொண்டு அம்மா கிளம்பினாள்.

குர்மா குழம்பின் வாசனை குடலைப் புரட்ட...பாதி சாப்பாட்டிலேயே எழுந்து கையைக் கழுவிக்கொண்டாள் சம்யுக்தா.

தொழிற்சாலை அலுவலகப் பையன் உள்ளே வந்து டிபன் பாக்சையும்—சாப்பாட்டு தட்டுகளையும் கழுவி எடுத்து வந்து கூடைக்குள் அடுக்கி வைத்துவிட்டு நகர்ந்தான்.

பிற்பகல் இரண்டு மணியாகி விட்டதை தொழிற்சாலை சங்கு அறிவித்ததும்... அவள்—மிகவும் பரபரப்படைந்து போனாள்.

கதவை மெல்ல தள்ளித்திறந்து கொண்டு வந்த அம்மாவிடம் உடனடியாக சொல்லிவிட்டாள்.

"எனக்கு உடம்பை என்னவோ பண்ணுகிறது... நீங்க சொன்னது போல காய்ச்சல் ஆரம்பமாகிவிட்டது போல தெரிகிறது. நான் வீட்டுக்குப் போய் ஓய்வா படுத்திருக்க விரும்பறேன்'' முகத்தைச் சுருக்கினாள் மகள். கவலையுடன் அருகில் நெருங்கி மகளின் கன்னத்தைத் தொட்டுப்பார்த்தாள் வசுந்தரா...

குளிர் தண்ணீர் கொண்ட மண் கூஜாவின் அடியைத் தொடுவது போல கன்னம் சில்லென்று இருந்தது... ஆனாலும் தர்க்கிக்க விரும்பவில்லை.

"சந்தானத்தை கார் ஓட்டச் சொல்லி நீ வீட்டுக்குப் போய் ஓய்வா இரு...நான் வரத்துக்குள்ளே காய்ச்சல் அதிகமாகிவிட்டது போல தெரிஞ்சா, நம் டாக்டரை போனில் கூப்பிடு. உடனே வந்து கவனிப்பார். இல்லே இப்பவேதான் அவரை வீட்டுக்கு வரச்சொல்லட்டுமா?''

Vennila

'வேண்டாம்மா! இந்தச் சின்ன விஷயத்தை என்னால கவனிக்கக முடியாதா?'' பதிலை எதிர்பாராது தன் தோள் பையை மாட்டிக்கொண்டு...விரைவாக வெளியே வந்து விட்டாள்.

வீட்டிற்குப் போகும் பாதி வழியில் ஒரு பஸ் நிலையத்தின் அருகே அவள் காரை நிறுத்தச் சொல்லி டிரைவர் சந்தானத்தை இறக்கி விட்டாள்.

''நானே வீட்டுக்கு காரை ஓட்டிக்கிட்டு போறேன். இன்று'பகலுக்கு உங்களுக்கு வேறே வேலை கிடையாது. வீட்டுக்குப் போகலாம்'' உத்திரவிட்டாள்.

டிரைவர் சந்தானத்திற்கு ஒரே தடுமாற்றம். "பத்திரமா குழந்தையை வீட்டில் கொண்டு சேர்த்துடுங்க''-பெரிய அம்மாவின் உத்திரவு-வழியில் பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டு-''வீட்டுக்குப் போங்கோ—!'' என்று சின்ன அம்மா உத்திரவு போடுகிறாங்க...

யார் பேச்சுக்கு மதிப்பு கொடுப்பது? பெரிய அம்மாவுக்குத் தெரிஞ்சு கோவிச்சுக்கொண்டால்...

குழப்பத்துடன் அவர் வண்டியை விட்டு இறங்கி தயங்கியபடி பஸ் நிலையத்தில் நின்று கொண்டார்.

குப்புசாமி கொடுத்த விவரத்தின்படி காரைத் திருப்பி நாராயணன் தெருவுக்கு ஓட்டினாள். சமீப காலத்துப் பயிற்சி. குறுகிய சந்துக்குள் லாவகமாக ஓட்ட முடியாது கொஞ்சம் சிரமப்பட்டாள். ஆனாலும் மனதில் ஆவேசமாகப் புரண்டு எழுந்திருந்த ஆவல் உந்த வியர்வை முகத்தில் பொடிக்க...நெஞ்சு வேகமாகத் துடிக்க... எப்படியோ கோமதி லாட்ஜ் அருகே ஓட்டிக்கொண்டு வந்து விட்டாள்.

காரிலிருந்து இறங்கிய இளம்பெண்-பணக்காரத்தனமான முகத்துடன் காண்பவள்...இரண்டாவது தளத்தில்



உள்ள ஆறாம் நம்பர் ஆளைத் தேடிக்கொண்டு வருவதின் காரணம்?...

காரையும்-முகத்தையும் பார்த்துக் கணக்குப் போட முடியுமோ.. பார்த்தால் பஞ்சத்திலடிபட்டவர் போல தெரிகிற தாடிக்கார மனிதனுக்கு இப்படி அழகான ஒரு பெண்ணோட சிநேகிதமா...

வக்கிரமான பல எண்ணங்கள் மனதில் ஓட, ஏற இறங்கப் பார்த்தார் குங்குமப் பொட்டுக்காரர்...

''ரூம்லதான் இருப்பார்...போய் பாருங்க'' தமக்குள்ளே புன்னகைத்தபடி கையை மாடிப் பக்கம் காட்டினார். வேகமாகப் படிகளைத் தாண்டி இரண்டாவது தளத்தை அடைந்தாள் அவள்.

நெஞ்சு வெடித்துவிடும் போன்றதொரு ஆவல். அடக்க முடியாது அவசரமாக ஆறாம் எண் கதவை ஓங்கித் தட்டினாள்.

வெளியே எட்டிப் பார்த்த இளைஞன்...தூக்கத்தில் சிவந்து போன விழிகளால் அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

''யார் இது? என்னையா தேடிட்டு வந்தே? ஆச்சரியமாக இருக்கு. பரவாயில்லை உள்ளே வா. சுகமான பொழுது போக்கு எனக்கு!''

திடுக்கிட்டுப் போனாள் அவள்.

அவனது வார்த்தைகளின் பொருள் காய்ச்சிய ஈயமாகக் காதில் விழ...தாங்க முடியாத அவமானத்தில் கால்கள் துவள...அவனைத் திரும்பிப் பார்க்க முகமின்றி ஒரே ஓட்டமாகத் தட்டுத் தடுமாறி கீழே இறங்கி ஓடி வந்தாள்...

'அடடா! தப்பா சொல்லிட்டேன். அந்த ஆறாம் நம்பர் தாடிக்காரர்...காலையிலேதான் அறையைக் காலி

Vennila

பண்ணிகிட்டு போய்ட்டார். இப்போ...அதிலே வேறே ஒருத்தர் வந்திருக்கார்!'' குங்குமப் பொட்டுக்காரரின் சிரிப்பு அவள் நெஞ்சில் நெருப்பாக இறங்கியது.

ஏமாற்றமும்-வெட்கமும் தாங்க முடியாது அவள் அழுது கொண்டே காரை வீடு நோக்கி ஓட்டிக்கொண்டு போனாள்.

## 13

அடுத்த நாள் மாதத்தின் முதல்தேதி. வேலைக்குப் போய் சேர வேண்டிய நாள்.

அதற்குப் பின் அவனுக்கு ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்ற நாட்களில் கடைத் தெருவுக்குப் போய் வர நேரம் இருக்காது. ஞாயிறு அன்று அநேகமாக எல்லாக் கடைகளும் மூடியிருக்கும். வேலையில் சேர பளிச் சென்று உடுத்திச் செல்ல அவனுக்கு சில புது உடைகள் தேவையாயிற்றே. மாற்றி அணிந்து கொள்ள புதிய காலணிகள் தேவை.

—அம்மா கோதை பலவும் எண்ணிதான் முதல் நாளே வங்கியிலிருந்து எடுத்து வைத்திருந்த தன் சேமிப்பு பணம் ஆயிரம் ரூபாயை மகன் கையில் வைத்தாள். வேண்டாம் என அவன் மறுத்தும் தாய் கேட்கவில்லை.

அவன் ஏற்கப்போகும் வேலைக்குத் தக்க வேஷம் அவன் போடவேண்டுமே...புதிதாக சட்டை, பாண்ட்...



கழுத்து டைகள் ஒன்றிரண்டாவது வாங்கிக்கொண்டாக வேண்டும்... மகனை வற்புறுத்திக் கடைத்தெருவுக்கு அனுப்பிவிட்டிருந்தாள்.

நகரத்திலிருந்த ரெடிமேட் ஆடை கடைகள் சிலவற்றில் அவன் காலைபொழுது முழுவதும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தான். முடிவில் ஒரு கடையில் தனக்கு அவசரமாகத் தேவைப்பட்ட ஒரு சபாரி ஸூட்-ஒரு சட்டை ஒரு பாண்ட்—சில டைகள் முதலியவற்றை வாங்கிக் கொண்டான்.

அதற்குள்ளாகவே அவனது கையிருப்பு தீர்ந்து போய் விட்டது.

போதும்... முதல் மாதம் சம்பளம் வாங்கியதும்-இன்னொரு சபாரி ஸூட்...புதிய காலணி முதலியவற்றை வாங்கிக் கொள்வோம். துணிகளுக்கே எல்லாப் பணத்தையும் செலவழித்தால்...சாப்பாட்டுக்கு வயிற்றின் மேல் ஈரத் துண்டை போட்டுக் கொண்டு காய முடியுமா?

சமீபகாலமாக அம்மா அகலக்கால் வைத்துக் கொண்டு போகிறாள். தினசரி கொஞ்சம் பால் அதிகமாக வாங்குகிறாள். வேலைக்குப் போகப் போகிற மகனுக்கு உடம்பில் தெம்பு கூட்ட வேண்டாமா என்று பருப்பு-நெய் என்று கடை சாமான்களையும் தாராளமாக வாங்கிப் போடுகிறாள். அம்மாவுடன் சேர்ந்துகொண்டு அவனும் அதிகம் செலவு செய்தால் கட்டுபடியாகுமா?

தனக்குள்ளே எண்ணி முறுவலித்தபடி ஆடைகள் அடங்கிய அட்டை பெட்டிகளை இறுக்கமாக இடது கை முடக்கில் அணைத்துக்கொண்டு வெளியேறினான்.

சின்ன வயதில் பண்டிகை நாட்களில், அம்மாவுடன் கடைக்குப்போய், அவள் எடுத்துத் தரும் ஆடைகளை ஆசையோடு வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வருவானே... குழந்தைத் தனமான தொரு மகிழ்ச்சியில் பூரித்துப்

Vennila

போவானே...அந்த சந்தோஷம் இப்போது நெஞ்சை நிறைக்க அவன் மெல்ல கடை வாசலின் படிகளை விட்டு இறங்கி நடைபாதை பக்கம் திரும்பினான்.

காலையில் புறப்படுமுன் அவன் வயிறு முட்டத் தான் காப்பி, பலகாரத்தை ஒரு கை பார்த்து விட்டு கிளம்பியிருந்தான். அம்மா சொல்வது போல ஓடுகிற பாம்பை மிதிக்கும் வயது.

ஐந்து இட்டலிகள், ஒரு கிண்ணம் சாம்பார், ஒரு பெரிய கரண்டி அளவு சட்னி... தம்ளர் நிறைய காப்பி... இத்தனையும் போன இடம் தெரியாது அவன் குடலைப் பசி பிடுங்கித் தின்னத் தொடங்கிவிட்டது!

தலையை வெடிக்க வீசிய வெய்யிலினின்று நிழலில் கொஞ்சம் நேரம் உட்கார யாட்டோமா என்றதொரு களைப்பு கால்களைத் தள்ளாடச் செய்தன.

முகத்தில் வழிந்த வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு அருகே இருந்த ஓட்டல் பக்கம் நடக்கத் தொடங்கினான். அதே கடையில் குழந்தைகளின் ஆடைகளின் பகுதியிலிருந்து இடது மடக்கில் அட்டை பெட்டியும் தோளில் பையும், வலதுகையில் ஒரு சிறுவனைப் பிடித்துக்கொண்டு இறங்கிய இளம் பெண் மூச்சிரைக்கப் பின்னால் நடந்து கொண்டிருந்தாள்.

"உன் பிறந்த நாளுக்கு ஒரு சட்டை பாண்ட் இரண்டும் வாங்கியிருக்கேன்—இதுக்கு மேலே ரயில் வண்டி பொம்மை அது இதுன்னு கேட்டு தொந்திரவு செய்யக் கூடாது. நீ இன்னும் சின்னப் பிள்ளையில்லை... அம்மா கிட்டே ரொம்ப காசு கிடையாது..."

"அப்பாகிட்டேயிருந்து வாங்கிக்கட்டுமா?"

"அப்பாவை நீ தொந்தரவு பண்ணக்கூடாதுன்னு தானே நான் இன்னிக்கு வேலைக்கு லீவு போட்டுட்டு



வந்திருக்கேன். உன் பள்ளிக்கூடத்துக்கும் இன்னிக்கு நீ மட்டம் போட்டிருக்கே...நீ அம்மா சொன்னதைக் கேட்கிற சமத்துப் பிள்ளையா இருக்கணும்!"

மிருதுவான குரலில் தன் மகனை அதட்டிக் கொண்டு நடந்த அந்த பெண்மணியைத் திரும்பிப் பார்த்தான் அருண்.

திடீரென்று அவனது பிள்ளை பிராயத்து நினைவு நெஞ்சை நிறைத்தது. இப்படித்தான் அவன் தாயும் பள்ளிச் சிறுவனான அவனது கையைப் பிடித்துக் கொண்டு பண்டிகை தினங்களில் கடைத்தெருவில் அலைந்து கொண்டிருப்பாள். சின்ன வயதில் அவன் ஆசைப்பட்ட ஆடையை அவன் வாங்கிக் கொள்ள அம்மா அனுமதிப்பாள்.

"ஒன்னு போதும்... அம்மாகிட்டே அதிகம் காசு கிடையாது கண்ணா!"—காதருகில் கிசுகிசுப்பாள் கோதை.

கிழிந்த புடவையைத் தைத்து தான் கட்டிக்கொண்டாலும் மகன் சுத்தமான கிழியாத உடைகளில் நடமாட வேண்டும் என்று அவன் தாய் ஆசைப்பட்டாள்.

எல்லா தாயாரும் இப்படித்தான் போலிருக்கு...தம் குழந்தைகளுக்காகத் தியாகம் செய்யும் பாரம்பரியத்திலே வழிவழியாக வந்த பெண்கள் அவர்கள்.

"அம்மா எனக்கு பசிக்குது...!" பொடிப்பயல் மெல்லிய குரலில் முணகினான்.

பத்து வயதிற்குள்ளிருக்கும் அந்தச் சிறுவன்...தீர்க்கமான மூக்கும்...பேசும் விழிகளுமாக...குழந்தைப் பருவத்தின் கபடமற்ற அழகு முகத்தில் வழிய, பார்க்க வாரி எடுத்து அணைத்துக் கொஞ்சவேண்டும் போன்றதொரு ஈர்ப்பைத் தந்தான். கடைத்தெருவுக்குக் கூட்டி வருகிறோம் என்ற காரணத்தால் அவன் தாய் அவனுக்கு சுத்தமான பாண்ட் சட்டை போட்டிருந்தாள்.



Vennila

பாதங்களிலின்று நழுவி ஓடமுயன்ற புதியசெருப்புகளை அங்கங்கே நின்று சரி செய்து கொண்டு தடுமாற்றத்துடன் தாயின் பிடியில் நடந்து கொண்டிருந்தான் சிறுவன்.

"திட்டக்கத்தான் ஓட்டல் இருக்கு...ரொம்ப சுணங்காதே!" தாயின் அதட்டல் குரல் அருணுக்கு துல்லியமாகக் கேட்டது.

தாயின் பக்கம் தன் பார்வையை மெல்ல பரவவிட்டான்.

சிறுவனுக்கு பத்து வயது இருக்கும் என்றால் தாயாருக்கு முப்பது வயதாவது இருக்காதா?

ஆனால் வட்டமான அந்த முகத்தில் அந்த வயது தெரியாததொரு இளமை. பளிச்சென்ற பார்வையில் மிருந்த பெரிய கண்கள். எடுப்பான மூக்கு...கோதுமை நிறம்...உயரத் தூக்கி கொண்டையாக போடப்பட்டிருந்த கருத்த அடர்ந்த கூந்தல். கஞ்சியில் விரைத்து நின்ற நீல வாயில் புடவையின் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு அவள் திரும்பி நடந்தபோது கொஞ்சம் பூசினார் போன்ற பருமனில்... உயரமான பெண்ணாகத் தெரிவதைக் கண்டான்...

சாதாரணமாக அவன் தெருவில் நடக்கும் பெண்களை முறைத்துப் பார்க்கும் பழக்கமுடையவன் அல்ல—அந்தச் சின்னப் பையனது சிணுங்கல்தான் அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. துருதுருப்பும் துஷ்டத்தனமும் பொங்கி வழிந்த அந்தச் சிறுவனின் முகத்தின் ஈர்ப்பு...அவனைப் பெற்றவள் யார் என்று ஆவலுடன் உற்றுப் பார்க்கச் செய்தது—அவ்வளவுதான்.

ஆனால் அவள் எங்கும் பாராது நேராகத் தெருமீது கண்ணாக நடந்து கொண்டிருந்தாள். கொஞ்ச தூரத்திலிருந்த அதே ஓட்டலுக்குள் அவன் மகன் கையைப் பற்றிக் கொண்டு புகுந்தாள்.



அட்டைப்பெட்டியை மேஜை மீது வைத்துவிட்டு... அப்பாடா என்ற பெருமூச்சுடன் அவள் நாற்காலியில் அமர்ந்தாள்.

அவனைப் போல காலையிலிருந்து நல்ல வெய்யலில் அவளும் அலைந்திருக்கிறாள் போலும். முகம் சிவந்து... நெற்றி குங்குமம் வியர்வையில் கசிந்து முடிபுரண்டு முகத்தில் விழ மிகவும் களைப்புடன் காணப்பட்டாள்.

கொஞ்ச தூரத்தில் ஜன்னல் ஓரமாகக் கிடந்த மேஜை அருகே வந்து உட்கார்ந்து கொண்ட அருண் கண்களில் தாயின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த சிறுவனின் முகம் நன்றாகவே தெரிந்தது.

எங்கேயோ அவனைப் பார்த்திருப்பது போன்றதொரு பிரமை...கொஞ்ச நேரம் அந்த சிறுவனையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அருணுக்கு இப்போது என்ன வந்து விட்டது... யாரைப் பார்த்தாலும் எங்கேயோ முன்னர் பார்த்து விட்டிருப்பது போன்றதொரு நினைவு-குழப்பம்? நாளைக்கு வேலையில் போய்ச் சேரப்போகிறோம் என்றதில் ஏற்பட்ட உற்சாகத்தின் பிரதிபலிப்பா?

மேஜையருகே நிழலாடுவதைக் கண்டு நிமிர்ந்தான்

கண்ணாடி தம்ளரில் நீரை நிறைத்து மேஜை மேல் வைத்து விட்டு சீருடை தரித்த ஓட்டல் பையன் அவன் முகத்தைப் பார்த்தான்.

சுவரின் மேல் சாய்த்து வைக்கப்பட்டிருந்த கரும் பலகையில் எழுதப்பட்டிருந்த உணவு வகைகள்—அவைகளின் விலை அனைத்தையும் நொடிப்பொழுதில் பார்த்துவிட்டு.. மசாலாதோசை, தயிர் வடை, காப்பி என்று தனக்கு வேண்டியவற்றை வேகமாக சொல்லி முடித்தான்.

Vennila

மெல்ல அந்தச் சிறுவன் பக்கம் திரும்பியபோது விஷமம் பொங்கிய அந்த முகத்திலே இப்போது பிடிவாதம் களை கட்டிக்கொண்டிருந்தது. உதட்டைச் சுழித்துக்கொண்டு சிறுவன் கொஞ்சம் உரத்த குரலில் சொன்னான்.

"எனக்கு இரண்டு பிளேட் பாதாம் அல்வா வேணும் ...நெய் தோசையும் ஐஸ்க்கிரீமும் வேணும்...பிறகு..."

"போதும் உனக்கு கண்ணு ரொம்பவே பெரிசு. எல்லாத்தையும் வாங்கி வச்சுகிட்டு சாப்பிடமுடியாம முழிப்பே...முதல்லே ஒரு பிளேட் பாதாம் அல்வாவும், ஒரு தோசையும்தான் வரவழைக்கப் போறேன் நாம் ரெண்டு பேரும் பங்கு போட்டுக்கொண்டு சாப்பிடலாம்."

"உகும்...எனக்கு தனியா ஒரு முழு தோசை வேணும். ஐஸ்க்கிரீமை நீங்க தொடக்கூடாது..."

"நீ கூட ஐஸ்க்கிரீமே தொடக்கூடாது. டாக்டர் என்ன சொன்னார்? சில்லுனு எதுவும் சாப்பிடக் கூடாதுன்னு சொன்னார் இல்லையா...வீட்டுக்குப் போனதும் சூடா கோக்கோ கலக்கித் தரேன்..."

"உகும்...ஐஸ்க்கிரீம் வேணும்!"

"இப்படி நீ படுத்தினா இனி கடைதெருவுகருக் கூட்டிக்கொண்டு வரமாட்டேன் ... இந்தா என் மணிபர்சைத் தொடாதே...அதிலிருக்கிற கொஞ்சம் சில்லறையையும் கீழே கொட்டிடாதே...!" தாய் அந்த சிறுவனை அதட்டிக் கொண்டிருந்தாள்.

முகம் சிவந்து - உதடுகள் நெளிந்து - கண்களை இடுக்கிக்கொண்டு அந்தச் சிறுவன் தலையை ஆட்டியபடி முரண்டு பிடித்துக் கொண்டிருந்ததைக் காண அருணுக்கு சிரிப்புப் பொங்கிக்கொண்டு வந்தது... அப்படித்தான் அவனும் சின்ன வயதில் சில சமயங்கள் அடம் பிடிப்பதுண்டு.



அவன் தாய் பாவம்...பொறுமையுடன்...'சொன்னதைக் கேளுப்பா...!' என்று கெஞ்சிக்கொண்டு கூட நடப்பாள்.

கோதை அவனை வாயால் கூட அதிர்ந்து அதட்டியதில்லை...ஒரே பிள்ளை... அவன்தான் தன் உலகம் என்று விட்டுக்கொடுத்து வாழ்ந்து கொண்டிருப்பவள்.

சின்ன வயதில் அறியாமையால் அவ்வப்போது கொடுத்த சங்கடத்திற்கு ஈடு செய்வதுபோல அவன் இனி அவன் தாயைத் தன் கண்களின் கருமணிகளாகப் பாதுகாக்க வேண்டும். ஆமாம், அவளுக்கு நிம்மதியும்-ஓய்வும் இனி ரொம்பவே அவசியம்...தாயை எண்ணி மனம் உருகிப் போனான். கரும்பலகை பக்கம் திரும்பிப் பார்த்து கணக்கிட்டுவிட்டு தோள்களைக் குலுக்கினாள், அந்தப் பெண்மணி.

அவனைப் போல அவளும் அடிமட்டத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும். ஆட்டோவில் ஏறிக் கொண்டதும் அடிக்கடி மீட்டரைப் பார்த்து கணக்கிட்டு...கலக்கத்துடன் பயணம் செய்ய வேண்டிய பற்றாக்குறை பட்டாளத்தை சேர்ந்தவள் போலிருக்கு. அவனது பார்வை அடிக்கடி அந்தச் சிறுவன் மீதும் அவன் தாய் மீதும் பரவிக்கொண்டிருந்தது.

காப்பியைக் குடித்து முடித்து தம்ளரை டபராக்குள் வைத்ததும் பையன் பில்லுடன் வந்து நின்றான். மணிபர்சைத் திறந்து பத்து ரூபாய் நோட்டொன்றை இழுத்து பீங்கான் தட்டின் மீது வைத்தான். கொஞ்ச நேரத்தில் சில்லறையுடன் வந்து நின்ற பையன் நீட்டிய தட்டில் - இருபத்தைந்து பைசாவை வைத்துவிட்டு மீதி சில்லறையை பத்திரமாக சட்டைப் பையில் போட்டுக் கொண்டு கிண்ணத்திலிருந்து சிட்டிகை சோம்பை வாரி வாயில் போட்டு மென்றபடி கிளம்பினான்.

"நேரமாகி விட்டதே விட்டுக்குப் போக வேண்டும்" என்ற உந்தலில் தயாராக நின்ற பஸ்சில் ஏறிக் கொண்

Vennila

டான். சட்டைப் பையில் தயாராக இருந்த சில்லறையைக் கொடுத்து பயணச் சீட்டை வாங்கிக்கொண்டு இருக்கையில் சாய்ந்தபடி...ஜன்னல் வழியே சாலையைப் பார்த்தான்.

பாய்க்கடை நிறுத்தத்தினருகே வண்டி நின்றதும் உள்ளே உரத்த குரல் கேட்டது.

கண்டக்டர்தான் அப்படி இரைந்து பேசிக்கொண்டிருந்தார்.

"எத்தனை நேரம் சில்லறையைத் தேடுவீங்க? சீக்கிரம் எடுங்கோ!" எரிச்சலுடன் அதட்டினார்.

அந்தப் பொடிப்பயலின் தாய்...குழப்பத்துடன் தன் தோள்பையை துழாவிக் கொண்டிருந்தாள்.

"எங்கேடா பர்ஸ்? சில்லறையோட ஒட்டல் மேசை மேலே வச்சுட்டு வந்துட்டியா....என் பர்சோட விளையாடாதேன்னு சொன்னேனே" மகனை அவள் மிரட்ட அவளைப் பரிதாபமாக சிலர் பார்க்க...

"வேறே சில்லறை இருந்தா சீக்கிரம் எடும்மா!" என்று கண்டக்டர் தமது எச்சரிக்கையை தொடர...ஒரு சில வினாடிகளில் ஏற்பட்ட அந்த குழப்பமான காட்சியை அருணால் பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்கமுடியவில்லை.

"கண்டக்டர் சார்! அவங்க எங்கே போகணும்? மாம்பலமா? இரண்டு டிக்கட்டுகள் கொடுத்துடுங்கோ..." என்று தன்னிடமிருந்த மீதி சில்லறையை நீட்டினான்.

குழப்பம் சப்பென்று ஒரே நிமிடத்தில் அடங்கிப் போக கண்டக்டர்... அவனிடம் பயணச்சீட்டுகளை நீட்டிவிட்டு அவனிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு கூட்டத்தில் நீந்திக்கொண்டு உள்ளே நகர்ந்துவிட்டார்.

நுங்கம்பாக்கம் நிறுத்தத்தில் அவன் இறங்கிய போது அந்தப் பொடிப்பையன் அவனது சட்டையின் நுனியைப் பிடித்து இழுத்தான்.



"அங்கிள்! அம்மா தாங்ஸ் சொல்லச் சொன்னாங்க" புன்னகைத்தான்.

அருண் மனம் உருகிப்போய்விட்டான்...அந்தப் பையனையும் அவனைப் பெற்ற தாயையும் பரிவுடன் திரும்பிப் பார்த்துவிட்டு வேகமாக இறங்கிக்கொண்டான்.

வீட்டுக்கு வந்து வெகுநேரமாகியும் அவனுக்கு அவர்கள் இருவரையும் பற்றியே சிந்தனை...பானையிலிருந்து ஒரு டம்ளர் பச்சைத் தண்ணீரை முகர்ந்து குடித்துவிட்டு கூடத்தில் பாயை விரித்துக்கொண்டு படுத்தவன் நன்றாக உறங்கிப்போனான்.

அம்மா வந்து கதவைத் தட்டியபோது...மாலைப் பொழுது மங்கத் தொடங்கிவிட்டிருந்தது. கோதை விரைவாகக் குளியலை முடித்துக்கொண்டு, மாற்றுப்புடவை அணிந்து பரபரப்புடன் சமையலை கவனிக்கத் தொடங்கி விட்டாள். கையுடன் கடைத்தெருவிலிருந்து கொஞ்சம் காய்களை அவள் வாங்கிக்கொண்டு வந்திருந்தாள்.

மறுநாளிலிருந்து வேலைக்குப் போய் மாடாக உழைக்கப் போகிற மகனுக்கு சுவையாக சமைத்துப் போட வேண்டுமென்ற ஆதங்கம் அந்த அன்னைக்கு

முகத்தைக் கழுவி முடியை வாரிவிட்டுக்கொண்டு ஜுங்கி, பனியனில் அவன் பின்புறமிருந்து வருவதற்குள் வாயிற்கதவு தட்டப்பட்டது. விரைந்து சென்று திறந்தான்.

"தெரு முனையிலேயே நான் மோப்பம் பிடித்து விட்டேன். வெங்காய சாம்பார் வாசனை மூக்கை தூக்குதே...!" சிரித்தபடி பூபதி உள்ளே வந்து நடையில் செருப்புகளை கழற்றி விட்டு...முற்றத்திலிறங்கி முகம், கால்–கைகளைக் கழுவிக்கொண்டு கூடத்திற்கு வந்தார்.

"வாங்கோ...உட்காருங்கோ...நீங்க வந்தது நல்லதாப்போச்சு. நீங்களும் அருணோடு ஒருவாய் சாப்பிட்டு

Vennila

விட்டு போகலாம்'' மகிழ்ச்சியுடன் சமையலறையி லிருந்து தலையை நீட்டிய கோதை உபசரித்தாள். தமது ஜோல்னா பைக்குள் கையை விட்டு இரண்டு சாத்துக் குடி பழங்களை எடுத்தார் பூபதி.

''நாளைக்கு நீ வேலைக்குப் போகப்போறே— உன்னை நேரில் வந்து வாழ்த்திவிட்டுப் போகத்தான் வந்தேன்!'' என்று பழங்களை அவனது கைகளில் வைத் தார். பளிச்சென்று சிரித்தார்... அருண் மனம் நெகிழ்ந்து போனான்.

''நன்றி ஐயா...! உட்காருங்கோ...ரொம்பக் களைப்பா தெரிகிறீங்க...வேலை கடினமாக இருந் ததோ...?'' விசாரித்தபடி பிரம்பு நாற்காலியை கூடத் தில் இழுத்துப் போட்டான்.

''கடினமாக உழைச்சால்தான் கால்வயிற்றுக்காவது சாப்பிடலாம் என்கிற நிலை—அதை விட்டுத்தள்ளு வேறு பேசுவோம்'' என புன்முறுவலுடன் அமர்ந்தார்.

வாழை இலை இரண்டை கூடத்துத் தரையில் பரப்பி கோதை மகிழ்ச்சியுடன் வந்தவருக்கு வயிறார உணவு படைத்தாள். அவரும் கூச்சமின்றி கேட்டு வாங்கி நன்றாகவே சாப்பிட்டார். அவருக்கு நல்ல பசி போலும் என எண்ணிக்கொண்டான் அருண்.

சாப்பிட்டு கைகளைக் கழுவிவிட்டு...புறப்படு முன் சிறிது நேரம் இருந்து பேசிவிட்டுப் போக நாற்காலியில் வந்து அமர்ந்தார் பூபதி. அருகில் ஜமக்காலத்தின் மீது சுவற்றில் சாய்ந்தபடி உட்கார்ந்த அருண் தான் வாங்கிய உடைகளை அட்டைப் பெட்டிகளிலிருந்து எடுத்து அவருக்கும், தன் அன்னைக்கும் மகிழ்ச்சியுடன் காட்டினான்.

''ரொம்ப நன்றாக இருக்கு உனக்கு திருப்திதானே அம்மா?'' மகிழ்ச்சியுடன் கேட்டான்.

''ரொம்ப திருப்திதான்.''



''அதைவிட இன்று நடந்த ஒரு சிறு நிகழ்ச்சி மன துக்கு ரொம்ப நிறைவைக்கொடுத்தது'' என்றபடி தான் சந்தித்த அந்தத்தாயையும் - சிறுவனையும் விவரித்து விட்டு மெலிதாக சிரித்தான்.

''அந்தச் சிறுவனை அவன் தாய் கார்த்திக் என்று கூப்பிட்டதிலிருந்து அவன் பெயர் அது என்று புரிந்துக் கொண்டேன். பூபதி சார் அந்த சிறுவனது முகத்தை எங்கேயோ பார்த்ததுபோல ஒரு பிரமிப்பு. காரணமில் லாமல் என் மனதிலே ஒரு பரிவு அவன் மேல் ஏற்பட் டது. அவங்களைப் பார்த்தப்போ.. என் சொந்த சகோதரியைக் காண்பது போல ஒரு மிரட்சி எனக்கு ஏற் பட்டது— ஏன்னு புரியலை'' என்றான்.

''கூட அக்கா-தங்கை யாரும் இல்லையேன்னு உன் உள் மனசிலே ஏற்பட்டிருக்கும் ஏக்கம்தான் காரணம்-வேற என்ன?'' அம்மா சிரித்தாள்...

பூபதி சிரிக்கவில்லை... அவர் முகத்திலே மின்ன லடித்தது போல பல்வேறு உணர்வுகளின் கொந்தளிப்பு...

''பூபதி சார் நீங்க என்ன நினைக்கிறீங்க?'' அவரது தோளை மெல்ல தட்டிய போது அவர் திடுக்கிட்டு... பார்த்தார்.

அவரது பார்வையில் பயம்.. ஏன்? பூபதி ஒரு புரி யாத புதிராய் இருக்கிறாரே...

நகரத்து சாலையில் சந்தித்தவர்களைப்பற்றி அவன் பேசும்போது அவர் கண்களில் ஏன் அந்த மிரட்சி. ஏன்? ஏன்...?

Vennila

# 14

மாம்பலம் மங்கநாதன் தெருவிலிருந்த அந்த வீடு பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என்பதை பெரிய விரிசல்களுடன் காணப்பட்ட சுற்றுச் சுவரும்... துரு பிடித்த கேட்டும் பறையறிவித்தன.

புதர் மண்டிக் கிடந்த தோட்டத்திற்குள் பொதிந்து கிடந்த அந்த பழைய வீட்டில் வசித்த ரங்கம்மாள் எழுபது வயதை எட்டிக்கொண்டிருந்தாள்.

மூட்டு நோவு-இரத்த அழுத்தம்-சர்க்கரை வியாதி என்று பலவும் பிடித்துக் கொண்டு விட்டிருந்த தங்களது விதவைத் தாய்க்கு மாதா மாதம் செலவுக்குப் பணம் அனுப்புவதாகச் சொல்லி வெளி நாட்டிற்குப்புறப்பட்டுப் போன இரண்டு பிள்ளைகளும் தங்களது வாக்கைத்தவற விட்டிருந்தனர்.

எப்பொழுதாவது அபூர்வமாக அவர்களிடமிருந்து வரும் டிராப்டுகளை எதிர் நோக்கி...வாழ்ந்து கொண்டிருந்த அவளுக்கு...கணவன் தன் சேமிப்பில் விட்டுப் போன காசுதான் கைகொடுத்து உதவிக் கொண்டிருந்து. எத்தனை சிக்கனமாக அவள் வாழ முயன்றும்... வங்கியிலிருந்து கிடைத்த அந்த வட்டித் தொகையில் மருந்து வாங்கமுடியாது மிகவும் சிரமப்பட்டாள். வீடு விற்கப்படப் போகிறதாகக் கேள்விப்பட்டோம்... என அடிக்கடி யாராவது வந்து தொந்திரவு செய்து கொண்டிருந்தனர்.



Vennila

தன் கட்டை அங்கிருந்து நகரும்வரை அந்த வீட்டை அவளது பிள்ளைகள் கூட விற்க முடியாது என்றதொரு பிடிவாதம் அவளுக்கு.

ஆனால் செலவுக்குப் பணம் போதாது தவிக்கும் போது அவ்வப்போது ஒரு ஆவேசம் அவளுள் எழுவதுண்டு. இந்த வீட்டை விற்றுத் தலை முழுகி விட்டால் என்னவாம்?... தன்னுள்ளே கோபத்துடன் சீறுவாள்.

பெத்த இரண்டு பிள்ளைகளும் அசட்டையாக இருக்கத் தொடங்கவே அவர்களிடமிருந்து காசோலை வருவதும் நின்றுபோனது. கிழவி ரொம்பவே பண முடையில் தவித்துப் போய் விட்டாள்.

உணவுக்கு செலவழிப்பதைவிட அவளது உபாதைகளுக்கு மருந்து வாங்கச் செலவழிக்கும் தொகை இரட்டிப்பாகியது.

அக்கம்பக்கத்தவர்களிடம் அதிகம் நெருங்கிப் பழகாது தானுண்டு தன் வீடுண்டு என்று வாழ்ந்து வந்தவள் அவள். நோய்கள்-தனிமை இரண்டாலும் அவள் குணம் கெட்டு விட்டிருந்தாள். கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே வரும் கீரைக்காரியிடம் கூட எரிந்து விழத் தொடங்கி விட்டிருந்தாள்.

'தன்னுடையது என்று தலைக்குமேல் ஒரு கூரை இருந்தால்... வயிற்றின்மீது ஈரத்துணியைப் போட்டுக் கொண்டு பட்டினியுடன் படுத்துக் கிடக்கலாமே!' என்பது அவள் கொள்கை. ஆனால் அவள் தலைக்கு மேலிருந்த அந்தக் கூரை...தொந்திரவுகளைத் தொடர் சங்கிலியாகத் தந்து கொண்டிருந்தது.

புழக்கடை குழாய் ஒழுக ஆரம்பித்துவிட்டிருந்தது. இரவு முழுவதும் அதிலிருந்து எழுந்த டொக்...டொக்கென்று தண்ணீர் சொட்டும் சத்தம் அவளது தூக்கத்

ளைக் கெடுத்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு சாயம் பூசப்பட்ட சுவர்கள், அங்குமிங்கும் பாசிபிடித்துக் கொண்டு... திட்டுத்திட்டான கருப்புடன் பார்க்க அசிங்கமாகத் தென்பட்டன.

நடையிலிருந்த கை கழுவும் பீங்கான் உடைந்து விட்டிருந்தது... குழாய் ரிப்பேர்காரர் புழக்கடை குழாயை பழுது பார்க்க ஐம்பது ரூபாயாவது செலவா கும் என்ற குண்டை தூக்கிப் போட்டுவிட்டுப் போயி ருந்தார்.

"அவுட்ஹவுசை துப்புரவு செய்து வாடகைக்கு விட் டால் இந்தக் காலத்தில் குறைஞ்சது நானூறு ரூபா யாவது கிடைக்கும்...அந்த பணத்தில் வீட்டு ரிப்பேர் களை சமாளிக்கலாம் இல்லையா?" குழாயை வந்து பார்வையிட்டுப் போகும்போது ஒரு கருத்தைத் தெரி வித்து விட்டிருந்தார் மனிதன். நல்ல யோனைதான்... ஆனால் வாடகைக்கு ஆளைத் தேடிக்கொண்டு இந்த வயதில் அவள் எங்கே அலைய முடியும்?

பத்திரிக்கையில் வாடகைக்கு இடம் என்ற பகுதியில் விளம்பரப்படுத்தலாம். அதற்கு பணம் செலவழிக்க வேண்டுமே...தரகர் மூலமாக வாடகைக்கு விடலாம்... உடனே பணத்தை கீழே வை என்பாரே தரகர்?

"இந்தக் கவலைகள் எல்லாம் தேவையில்லை... நானே வந்துவிட்டேன்! என்று சில நாட்களுக்கு முன் னர் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு இளம் பெண் வந்து கதவைத் தட்டினாள்.

'யாரது?' எரிச்சலுடன் கிழவி...காப்பி டம்ளரை மேசை மேல் வைத்துவிட்டு வந்து கதவைத் திறந்தாள்.

உயரமும், லேசான பருமனும்...நல்ல நிறமுமாக இருந்த ஒரு அழகான பெண்ணைக் கண்டதும் அவள் வியப்பில் அயர்ந்து போனாள்.

"வாடகைக்கு இடம் தேடிக்கொண்டிருக்கிறேன். உங்க வீட்டுக்குப் பின்னாலிருக்கும் அவுட்ஹவுசில்



யாரும் குடியிருக்கவில்லை என்று கேள்விப்பட்டேன்" பணிவான குரலில் மிருதுவாகக் கேட்டாள் வந்தவள்.

"யார் சொன்னது?" கொஞ்சம் கோபத்துடன் மூக்கின் மீது நழுவிய கண்ணாடியை சரி செய்து கொண்டு அந்தப் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தாள்.

"சாலையோரத்திலிருக்கும் மளிகைக் கடைக்காரர் சொன்னார்!"

"மளிகைக்கடை மன்னார்சாமிக்கு வேறே வேலை கிடையாது போலிருக்கு...மளிகை சாமானுடன் வம்பை யும் விற்கிறான் போலிருக்கு"–மௌவி முணுமுணுத் தாள்... அதே சமயம் வாடகைக்கு வீடு தேடிக்கொண்டு தானே ஒருத்தி வந்து விட்டாளே என்ற திருப்தி...

"உள்ளே வந்து உட்கார் அம்மா! பேர் என்னன்னு சொல்ல முடியுமா?" முன் அறையில் கிடந்த கை யொடிந்த நாற்காலி யொன்றை காட்டினாள்.

"தாரான்னு பேர்!"–புன்முறுவலித்தபடி வந்தவள் நாற்காலியில் மெல்ல அமர்ந்து கொண்டாள்.

'அவுட்ஹவுசைப் பூட்டிவச்சு பல காலம் ஆகிறது... அங்கே பழய கூடை–ஒரு நாற்காலி–ஊஞ்சல் பலகை... என்று சில பொருள்கள் கிடக்கு. அதுகளை அப்புறப் படுத்தி...விரிஞ்சு கிடக்கும் தரைக்கு சிமெண்ட் பூசி ஓட்டடை தட்டி... சுண்ணாம்படிச்சு – குழாய்களைப் பழுது பாத்து... வாசல் கதவு–ஜன்னல் கதவுகளுக்கு வர்ணம் அடித்து ஒழுங்கு செய்யணும்...இதெல்லாம் என்னால் இப்ப முடிகிற காரியமா?"

கிழவியின் மனம் கணக்கிட்டுத் தயங்கியது. அதைப் புரிந்து கொண்டவள் போல வந்தவள் பேசினாள்.

Vennila

"நாங்க பழுது பார்த்துக் கொண்டு பிறகு குடிவருகிறோம். வீட்டை வாடகைக்கு கொடுக்க நீங்க ஒப்புக் கொண்டால்...மத்ததைப்பேசலாமே!" – அவள் புன்னகைத்த போது முகம் பிரகாசமாகத் தெரிவதைக் கிழவி கவனித்தாள்.

வீட்டின் சொந்தக்காரி என்ற கர்வத்தில் அவள் குரலில் கண்டிப்புக் கூடியது.

"அவுட்ஹவுசை வாடகைக்கு தந்து எனக்கு ஆவது ஒண்ணுமில்லை–என் பிள்ளைகள் வெளிநாட்டிலிருந்து என் செலவுக்குப் பணம் அனுப்பிக்கொண்டிருக்காங்க... ஏதோ உன்னைப் பார்த்து மனசு இரக்கப்படரதாலே கொடுக்க சம்மதிக்கிறேன். ஆமாம், உனக்குக்கல்யாணமாகிவிட்டதா!" அந்தப் பெண்ணின் கழுத்தில் தொங்கிய மெல்லிய தங்கச் சரட்டை சந்தேகத்துடன் பார்த்தாள் ரங்கம்மாள்.

"ஆயிட்டது–குழந்தை கூட இருக்கு!"

"எத்தனை குழந்தைகள்? சின்ன வயது குழந்தைகளா... தோட்டத்தில் பந்து விளையாட புறப்பட்டு விடுவாங்களே? எனக்கு சத்தம் பிடிக்காது.. !"

"ஒரே ஒரு பிள்ளை–அவன் பள்ளிக்கூடம் போய் விடுவான்–விடுப்பு நாட்களில்... தோட்டத்தில் விளையாடி உங்களுக்கு சிரமம் கொடுக்காம பார்த்துக்கிறேன்–எங்க குடும்பம் சின்னது...கணவன்–மனைவி பிள்ளைன்னு மூணே பேர்தான். இங்கே நாங்க குடியிருப்பது கூட தெரியாம நடந்துக்குவோம் கவலைப்படாதீங்க!"

"உன் கணவர் என்ன செய்கிறார்...?"

"நகரத்தில் ஒரு நிறுவனத்தில் வேலை பார்க்கிறார்–நானும் வேலை செய்கிறேன்...என் பிள்ளை பள்ளிக்கூடத்திலிருந்து மாலைதான் திரும்புவான் – நாங்க வேலையிலிருந்து வந்ததும்... குளிச்சு சாப்பிட்டுட்டு



கூட்டிலே பறவை அடைஞ்சுக்கிறதைப் போல வீட்டுக்குள்ளே அடக்கமா இருப்போம். எங்களால் எந்த விதமான தொந்திரவும் உங்களுக்கு ஏற்படாது. அதுக்கு நான் உத்திரவாதம். வாடகையைச் சொன்னால் நல்லா இருக்கும்!" அந்தப் பெண் தாரா தொண்டையை மெல்ல செருமினாள்.

கிழவிக்கு திடீரென்று ஏற்பட்ட பேராசை...நாக்கு நுனிவரை எட்டிப் பார்த்தது.

"நானூறு ரூபாய் வாடகை! மூணு மாதம் முன்பணம் தந்துடணும். நீயே ரிப்பேர் செய்து வீட்டை சரிசெய்துக்கணும்—அதுக்கு செலவழிச்ச பணத்தை மாதம் இருபத்தஞ்சு ரூபாயாக வாடகையில் தள்ளிக்கலாம்."

நெற்றியில் பூத்த வியர்வையை கைகுட்டையால் துடைத்துக் கொண்டாள் தாரா...இன்னும் எத்தனை நாள் வீடுதேடி அலைவது என்ற அலுப்பு முகத்திலே தெரிந்தது...

"ஐம்பது ரூபாய் குறைச்சுக் கொடுத்தா உதவியா இருக்கும்!' மெல்லிய குரலில் கேட்டாள்.

கிழவி அசைந்து கொடுக்கவில்லை. "இந்த பக்கம் வீடு கிடைக்கிறது குதிரைக்கொம்பு. வாடகையைக் கொஞ்சமும் குறைக்க முடியாது...பிரியமில்லாட்டி வேறே பார்த்துக்கோ" மிகவும் கண்டிப்பாகப் பேசினாள்.

வீட்டை பார்வையிட அந்தப் பெண் கேட்டபோது துருப்பிடித்ததொரு சாவிக்கொத்துடன் தள்ளாடியபடி வந்து கதவைத் திறந்து விட்டாள் ரங்கம்மாள்.

உள்ளே தொங்கிய ஒட்டடையையும் தரையில் படிந்திருந்த தூசியையும் பார்த்து வந்தவள் திடுக்கிட்டுப் போனாள்

ஒரு காலத்தில் கார்வைத்த கராஜாகக் கட்டப்பட்ட இடம்—பின்னர் யார் யோசனையோ? படுக்கையறை–

Vennila

முன்னறை – சமையலறை ... குளியலறை – கழிவறை என்று குறுக்கே தடுக்கப்பட்டு ஒருவழியாக அவுட்ஹவுஸ் என்ற உருவத்தைப் பெற்று விட்டிருக்கிறது என்று பார்த்ததும் புரிந்து கொண்டாள். உள்ளே கிடக்கும் அண்டா முண்டாக்களை அப்புறப்படுத்திவிட்டு–வீட்டை துப்புரவு செய்து பழுது பார்த்து வெள்ளை அடித்து சீராக்க ஒரு வாரத்திற்கு மேல் பிடிக்கும் என்று தனக்குள் கணக்கிட்டுக் கொண்டாள்.

வெளியே வந்து சுற்று முற்றும் பார்வையை ஓட விட்டாள். காய்ந்த இலைச்சருகு கும்பல்களும் மண்டிக் கிடந்த புதரும் புல்லுமாக தோட்டம் ஒரு காடாகக் காட்சி அளித்தது. முதலில் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக்க வேண்டும். இதில் குழந்தை எப்படி நடமாடுவான் ...பூச்சி பொட்டு ஏதாவது இருந்தால்...

“தோட்டத்தை சுத்தப்படுத்தும் பெரிய வேலை இருக்குதேயம்மா...கொஞ்சம் வாடகையைப் பார்த்து போடக்கூடாதா?” தாரா பேரம் பேசினாள்.

“தோட்டத்தை சுத்தப்படுத்தி. அதில் பயிர் செய்துக்கிற உரிமையை உனக்கே தந்துடறேன்...போனால் போரதுன்னு ஒரு இருபத்தஞ்சு ரூபாய்வரை வாடகையில் குறைச்சுக்கிறேன் அதுக்கு மேலே நீ எதிர்பார்த்தால் எனக்குக் கட்டுப்படியாகாது...” கிழவி கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

மறுநாள் காலையிலேயே மூன்று மாத முன் பணம் கைக்கு வந்து விட்டது. இரண்டு ஆட்களுடன் வந்த அந்தப் பெண் தோட்டத்தை முதலில் துப்புரவு செய்து கொண்டாள். அவுட்ஹவுசிலிருந்த சாமான்களை அப்புறப்படுத்தி வந்த ஆட்கள் பரபரப்பாக வேலையைத் தொடங்கினார்கள். முதல் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே வீடு குடியேறத் தகுதி பெற்று விட்டது.



“மாதம் பிறக்க இன்னும் இரண்டு நாள் இருக்கு... இன்னிக்கே நல்ல நாள். குடி வரலாம்னு யோசனை...” தாரா சொன்னதற்கு கிழவி மறுப்பு தெரிவிக்கவில்லை.

அந்த இரண்டு நாளுக்கும் உண்டான வாடகையை அவர்களிடம் கேட்க ரங்கம்மாளுக்கு மனம் இருக்கவில்லை.

‘பாழடைந்து கிடந்த இடத்தை...பாடுபட்டு சுத்தமாக்கி ஒரு வீடாக்கிக் கொண்டிருக்கிறார்களே போகட்டும்...’ என்று தாராளமாக அவர்களை முன்னதாக வந்து குடியேற அனுமதித்து விட்டாள்.

அவர்கள் வண்டி நிறைய சாமான்களை எடுத்து வரவில்லை...ஒரு சிறு இரும்புப் பீரோ...இரண்டு பிரம்பு நாற்காலிகள்–ஒரு சின்ன மர மேஜை, நாற்காலி–ஒரு நாடா கட்டில்... ஒரு அட்டை பெட்டிக்குள் கொஞ்சம சமையல் பாத்திரங்கள்... என்று குறைவாகத்தான் எடுத்து வந்தார்கள்.

மறுநாள் காலை தன் அறியும் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாது கிழவி அந்த மனிதன் வேலைக்குக் கிளம்பியதும்.. மெள்ள அங்கு சென்று எட்டிப் பார்த்தாள்.

அவளால் நம்பவே முடியவில்லை...அந்த அழுக்குப் பிடித்த அவுட்ஹவுஸ் படுசுத்தமாக... அழகானதொரு சிறு வீடாக மாறிவிட்டிருந்தது.

“என் வேலையையும் கவனிச்சுக்கொண்டு பழுது பார்க்கும் சங்கதியையும் மேற்பார்வை செய்வதென்றால் என்னால் முடியலை...நாளைக்கு நான் விடுப்பு எடுத்துக்கப் போரேன்... கடையில் சில சாமான்கள் வாங்க வேண்டி இருக்கு” என்றாள் தாரா புன்னகையுடன்.

ரங்கம்மாளின் மருமகள் இருவரும் வேலைக்குப் போகும் பெண்களாகத்தான் இருந்தனர். பற்றாக்குறை இல்லாது தன் இரு பிள்ளைகளும் சுகமாக வாழ வேண்



Vennila

டும் என்று எண்ணி வேலைக்குப் போகும் மருமகள்களை தேர்ந்தெடுத்ததின் பலனை அவள் உடனேயே அனுபவித்து விட்டாள்.

அலுவலக வேலை ஒன்றை மட்டுமே செய்யத் தெரிந்த அந்த இரண்டு பேரும் அடுப்பங்கரை பக்கமே கால் எடுத்து வைக்க மறுத்துவிட்டனர்.

பிள்ளைகள் இருவருக்கும் செய்த பணிவிடைகள் போதாது போல் மருமகள் இருவருக்கும்...சமைத்துப் போட்டு, டிபன் கட்டிக் கொடுத்து... வீட்டை நிர்வகித்து... அப்பப்பா அவள் ரொம்பவே பாடுபட்டுப்போய் விட்டாள்-வெளிநாட்டுக்கு பிள்ளைகள் தங்கள் மனைவிகளுடன் போனபின்புதான் அவளுக்கு நிம்மதி. வேலைக்குப் போகும் பெண்களைக்கண்டாலே அதற்குப் பின்னர் அவள் முகத்தை சுளித்தாள்.

ஆனால் தாரா...வித்யாசமானவளாக இருந்தாள்.

“அப்பப்பா! எத்தனை சுறுசுறுப்பு இந்த பெண்ணுக்கு?” அவள் அதிசயப்பட்டாள்.

துப்புரவாகக் காணப்பட்ட முன்னறையை நோட்டம் விட்டபடி... சமையலறைக்குள் கண்களை ஓட்டினாள்.

சுவரில் பதித்திருந்த சிறிய அலமாரியில்...அரிசி பருப்பு-மிளகாய் என்று எழுதி ஒட்டப்பட்ட டின்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. சமைத்த பாத்திரங்களைக் கழுவித் துடைத்து மேடை மீது தாரா ஒழுங்காக கவிழ்த்திருந்தாள்.

“எங்க வீட்டுக்கு முதல் முதலாக பெரியவங்க வரீங்க... நான் நேத்து தயாரிச்ச பலகாரம் இது வாதும் பர்பி... கொஞ்சம் ருசி பாருங்கோ” சிரித்தபடி இரண்டு வில்லை பர்பியை ஒரு தட்டில் வைத்து உபசரித்தாள் தாரா...



ஒடித்து வாயில் போட்டுக்கொண்டு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தபடி சுவரில் தொங்கிய போட்டோவை உற்றுப் பார்த்தாள்.

வீட்டில் அவர்கள் குடியேறி ஒருநாள் பொழுது ஓடிவிட்ட போதிலும் இன்னமும் கிழவி வீட்டுத்'தலைவன் முகத்தை சரிவரவே பார்க்கவில்லை...இப்போது அந்தப் படத்தில் அவரைப் பார்த்தவளுக்கு பெருத்த வியப்பு... தாடியும்...மீசையுமாக...மனிதன் கொஞ்சம் வயதானவராகத் தெரிந்தார்.

தாரா கொண்டுவந்து தந்த தண்ணீரில் கையைக் கழுவிக் கொண்டு கிழவி எழுந்திருந்தாள்.

“ரொம்ப நல்லா பலகாரம் செய்திருக்கே ..சமையலிலும் நீ கெட்டிக்காரியாக இருப்பே போலிருக்கு - ஒரு கேள்வி கேட்டா கோவிச்சுக்க மாட்டியே?...பார்க்க நல்லா இருக்கே-வேலைக்குப் போய் சம்பாதிக்கிறே. நீ ஏன் உன் வயசுக்கு மீறின ஆளைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கே? வரதட்சணை தரமுடியாமல் இரண்டாம் தாரமாக இவரை கட்டிக்கொண்டியா?”

தாரா முகம் சிவந்து போனாள்...முதல் தாரமாகத்தான் இவரை நான் கட்டிக் கொண்டிருக்கேன்...என்னவோ எனக்கு இவரைப் பிடிச்ச-இவருக்கு என்னைப் பிடிச்சுப்போச்சு கல்யாணம் பண்ணிக்கொண்டோம்... வெகுளித்தனமாக சிரித்தாள்.

“காதல் கல்யாணமா உங்களுடையது? ஆச்சர்யமா இருக்கே?”

“வயசு வித்தியாசம் அதிகம் உள்ள இந்த இரண்டு பேர் இடையே காதல் எப்படி ஏற்பட்டதுன்னு நினைக்கிறீர்களா? பெரியவங்க நீங்க! உங்களுக்கு நான் சொல்லணுமா... காதலுக்குத்தான் கண்ணில்லையே!” கலுக்கென்று சிரித்தாள், தாரா.

Vennila

ரங்கம்மாள் தாங்க முடியாது கூடவே சிரித்து விட்டாள். இப்படி மனம் விட்டு சிரித்து எத்தனை நாளாகிறது அவள்?...அந்தப் பெண் தாராவை அவளுக்குப் பிடித்து விட்டது.

வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்கிறாள் என்பதோடு...கூப்பிட்ட குரலுக்கு துணையாக ஒரு ஆணும் பெண்ணும் அருகில் இருப்பது இந்த வயது காலத்திற்கு ஒரு பெருத்த ஆறுதலாச்சே-எண்ணியபடி திரும்பினாள். காலடிச் சத்தம் கேட்டது...

அந்தப் பெண்ணின் கணவர்...வேகமாக நடந்து வருவதைக் கண்டதும் சட்டென்று விடை பெற்றுக் கொண்டு பின் பக்கமாக தன் வீட்டிற்குள் புகுந்து கொண்டாள் ரங்கம்மாள். குளியலறை ஜன்னலை மெல்லத் திறந்து அவுட்அவுஸ் பக்கம் பார்த்தபடி காதுகளைத் நீட்டிக் கொண்டாள். அந்த அதிசய தம்பதிகளைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேணும் என்ற ஆசை...

"டிபன் டப்பாவை வச்சுட்டு போயிட்டீங்க நீங்க... இப்படி எதையாவது மறப்பீங்கன்னு நினைச்சேன்..." சிரித்தபடி அவள் சமையலறையிலிருந்து ஸ்டீல் டப்பா ஒன்றை எடுத்து வந்து கணவனது தோளில் தொங்கிய ஜோல்னா பைக்குள் போட்டாள். சுற்று முற்றும் பார்த்துவிட்டு தன் முந்தானையால் கணவன் நெற்றி மீது வழிந்த வியர்வையைத் துடைத்து விட்டாள் தாரா. தோட்டத்திற்குள் அவருடன் ஜோடியாக நடந்து கேட்டுவரை சென்று வழியனுப்பிவிட்டு சிரித்த முகத்துடன் திரும்பிய அந்தப் பெண்ணைப் பார்த்த ரங்கம்மாளுக்கு வியப்பாகத்தானிருந்தது.

தாடியும் மீசையும்...பைஜாமாவும் குர்தாவுமாக அந்த மனிதன் வயதில் பெரியவனாகத் தோன்றுவதுடன்... வடநாட்டுக்காரன் போலத் தெரிகிறார்... ஆனால் நெற்றியில் குங்குமப் பொட்டு-இடையே



காஞ்சீபுரம் நூல் சேலையுமாக மூழுக்கமுழுக்க...தமிழ்ப் பெண்ணாக-இளமையோடு அழகாகத் தெரியும் தாராவுக்கு தாடிக்காரர் மீது எப்படித்தான் காதல் வந்தது? வியப்புத்தான்-எண்ணியபடி மெல்ல ஜன்னல் கதவை சாத்திய ரங்கம்மாளுக்கு இளவயதில் தான் கற்றுக் கொண்டதொரு பாட்டு ஞாபகத்திற்கு வந்தது—

"எதைக் கண்டு நீ இவன் மேல் இச்சை கொண்டாய் என் மகளே?"-இமயவான் மனைவி தன் மகள் பார்வதிக்கு...பேயாண்டியின் மீது ஏற்பட்ட காதலைக் கண்டு அதிசயத்து கேட்கிறாள் என்ற பாட்டு...

கிழவி...அதைத் தனக்குள்ளே முணுமுணுத்தாள்.

'ஆமாம் காதலுக்கு சுத்தமாகக் கண் இல்லைதான்—இல்லாவிடில் இப்படி ஒரு ஜோடி இணைந்து—அன்றில் போல் ஒன்றி வாழ முடியுமா?'...—தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

## 15

பள்ளிக்கூடச் சிறுவனைப் போல அருண் மனதில் பரவச உணர்வு பொங்கிப் புரண்டு கொண்டிருந்தது.

அந்தக் காலத்தில் அவன் தாய் அவனுக்கு புத்தகங்கள் வாங்கித் தந்து வாசல் வரை வந்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவாளே? அப்போது மார்புடன் அணைத்துக்கொண்டிருக்கும் புது புத்தகங்களின் வாசனையை

Vennila

நுகர்ந்தபடி மகிழ்ச்சியுடன் தெரு இறங்குவானே... அந்த இனிய நினைவு நெஞ்சை நிறைக்க, அவன் தொழிற்சாலையில் தனக்கு அளிக்கப்பட்டிருந்த தனி அறையைச் சுற்றி பார்வையிட்டு மகிழ்ந்தான்.

அவனுக்காகத் தயாரிக்கப்பட்டது போன்று புத்தம் புது வண்ணப் பூச்சுடன் அறையின் சுவர்கள் சுத்தமாகத் தெரிந்தன. மெத்தென்றதொரு நாற்காலி, முகம் தெரிந்த சன்மேகா பாவிய மேஜை; அதன்மேல் ஒருபுறம் பச்சை வண்ண தொலைபேசி; ஜன்னல்களை மூடிக்கொண்டு காற்றில் மெல்ல அசைந்த கனமான நீலவண்ண திரைச்சீலைகள், ஃபைல்களை வைக்க இரும்பு காபினெட்டுகள்; முக்கிய கடிதங்களை வைத்துப் பூட்ட பெரிய இரும்பு அலமாரி; எழுது கோல்கள் சொருகப்பட்டிருந்த கிண்ணம் முதலியவற்றுடன் அவனது பெயர் பொரிக்கப்பட்ட பிளாஸ்டிக் தகடு சாய்ந்த வாக்கில் மேஜை மீது காணப்பட்டது.

அவனது மகிழ்ச்சி கட்டுக்கொள்ளவில்லை.

அம்மாவுக்கு இவைகளைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டால் பெருமையில் பூரித்துப் போவாளே! தன்னைப் பெற்றவளை மிக்க பாசத்துடன் நினைத்து ஒரு கனம் நெஞ்சம் நெகிழ்ந்து போனான்.

அன்று காலை கோதை விடியலுக்கு முன்னர் எழுந்து விட்டாள். அவசரமாகத் தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மகனுக்கு வெந்நீர் போட்டு பதமான சூட்டில் அண்டாவில் நிறைத்து வைத்துவிட்டு— "அருண்! இன்னிக்கு முதல் தேதி. சீக்கிரம் எழுந்திருப்பா..." என்று குரல் கொடுத்தாள்.

அருண் குளித்து முடித்துவிட்டு வந்ததும் அவனுக்கு தட்டில் ஆவி பறக்க இட்டலிகளை பரிமாறி—அளவான சட்டினியுடன், காப்பி தம்ளரைக் கொண்டு வந்து கூடத்தில் வைத்து உபசரித்தாள்.



"இன்னும் இரண்டு இட்டலி போட்டுக்கோ—நல்லா சாப்பிடு. பகல் டிபனுக்கு கொஞ்சம் எலுமிச்சம் பழ சாதம் கட்டிக்கொடுக்கிறேன்" தாயார் தவிப்புடன் சொன்னாள்.

"வேண்டாம் அம்மா. தொழிற்சாலையிலே ஒரு காண்டீன் இருக்கு. அங்கே தொழிலாளர்கள் அனைவருக்கும் இடைவேளை தேநீர், பகல் உணவு எல்லாம் வழங்கப்படுகிறது!"

"அங்கே சாப்பிட்டா ரொம்ப செலவாகுமே அருண்?"

"வேலைக்கு உத்திரவு அனுப்பினபோது செயலாளர் தொழிற்சாலை விதிமுறைகள் அடங்கிய ஒரு கடிதத்தையும் கூட அனுப்பியிருந்தார். நான் முன்னமேயே அதைப்பத்தி உங்களுக்கு சொல்ல மறந்துட்டேன். மன்னிச்சுக்கோங்க. தொழிற்சாலை ஊழியர்களுக்கு உணவு மிகக் குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறது... மாதம்முழுவதும் சாப்பிட்டபின்பு என் சம்பளத்திலிருந்து பிடிப்பு செய்து கொள்வாங்க கவலைப்படாதீங்க!"

"கண்ட எண்ணையில் சமைப்பாங்க. உடம்புக்கு ஒத்துக்குமா?"

"அம்மா உங்களுக்கு இந்த ஒரே மகன்தான் இருக்கான். அதனால் இப்படி எல்லாத்துக்கும் கவலைப்படுகிறீங்க... அந்த வசுந்தரா அம்மாவுக்கு தொழிற்சாலையில் வேலை பாக்கிற அத்தனைபேரும் பெற்ற பிள்ளைகளுக்குச் சமம். அவங்களது உடல்நலம் மிக முக்கியம்—கட்டுப்பாடுகளை ரொம்ப கடினமா அனுசரிக்கிறவங்க. காண்டீனை அன்னிக்கே பார்த்தேன். மிக சுத்தமாக இருக்கு. அங்கே தயாரித்து வழங்கும் உணவும் சுத்தமானதாகவும்—வாய்க்கு ருசியாகவும் இருக்குன்னு கேள்விப்பட்டேன். ஒரு நாள் இடைவேளை தேநீர்—பகல் உணவு எல்லாத்துக்கும் இரண்டு ரூபாய்கள் என்ற கணக்கில்தான் பிடிப்பு செய்வார்கள். வீண் கவலைகளை விடுங்க!"

Vennila

"தலைவி கண்டிப்பானவங்கன்னு சொல்றே! பஸ் தவறிட்டுதுன்னு காலம்கடந்து போய் நிக்காதேயப்பா... கொஞ்சநாள் போனதும் முதல்லே நீ உன் தேவைக்கு கடன் உடன்பட்டாவது ஒரு ஸ்கூட்டர் வாங்கிக் கணும்பா!"

"என் வேலையில் அவங்களுக்குத் திருப்தி ஏற்பட்டதும் வேலை நிரந்தரமாக்கப்படும்... சீக்கிரம் வேலை உயர்வும் சம்பள அதிகரிப்பும் பல சலுகைகளும் கிடைக்கும். வீட்டு வாடகை-கார் வசதி...வைத்திய உதவின்னு பலவும் கிடைக்கும்மா!"

"அப்படியா? நல்லா ஒழுங்கா கருத்தோட கொடுத்த வேலையை செய் அப்பா...! பல தொழிலாளிகள் ஒருங்கே வேலை பண்ற இடம். வம்பு தும்புகள் பலவும் இருக்கும். நீயுண்டு உன் வேலையுண்டுன்னு இருக்கணும் அருண்!"

"அம்மா புக்ககம் போற பொண்ணுக்கு தந்தை புத்தி சொல்லி அனுப்புவாங்களே... அதைப்போல அல்லவா சொல்றீங்க! 'புருசன் வீட்டுக்குப் போர பொண்ணே—கொஞ்சம் புத்தி சொல்லரேன் கேள் கண்ணேன்னு' " சிரித்தான் அவன்.

"தகப்பன் இல்லாத உனக்கு இந்தத் தாய்தானே தெரிஞ்சவரை புத்தி சொல்லணும். நான் படிச்சவ இல்லேப்பா...ஆனாலும் உலக அனுபவம் கொஞ்சம் உண்டுப்பா...!"

"அம்மா...நீங்கதான் எனக்கு அம்மா—அப்பா-குரு-தெய்வம் எல்லாம். நீங்க சொன்னதை மறுக்கமாட்டேன்-வரட்டுமா?" என்று புறப்படுமுன் அவன் காலைத் தொட்டு கும்பிட்டான்.

கண்களில் முட்டிக்கொண்டு வந்த கண்ணீரை கோதை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

"அடுத்த மாசம் வாங்குற சம்பளத்திலே நீ ஒரு கோட்டு சூட்டு இதுகள் வாங்கிக்கணும்—கோடி வீட்டுப்



பிள்ளை அலுவலகத்துக்கு கோட்டு சூட்டு போட்டுகிட்டு மாப்பிள்ளை கணக்கா போகிறான் பார்... அது போல நீயும்..." மேலே பேசாது அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

"வெய்யல் கொளுத்துது அம்மா... கோட்டு சூட்டில் நான் வெந்து போயிடுவேன். சாதாரணமாக வேலைக்கு சபாரி சூட்டில் வந்தால் போதும்னு செயலாளர் சொன்னார். இது எனக்கு நல்லா இல்லையா?" அவன் ஆவலுடன் கேட்டான்.

கச்சிதமாக அலுவலக தோரணையில் பிஸ்கட் கலரில் அமைந்த சபாரி சூட்டில் மகன் கம்பீரமாகத்தான் தெரிந்தான்.

"ஒரு பேச்சுக்குச் சொன்னேன். ஆபீசுக்கு எப்படி போகணும்னு உனக்குத் தெரியாதா! கொஞ்சம் நில்லு! நான் வெளியே போய் பார்த்துட்டு வரேன்..." கதவைத் திறந்து கொண்டு வாயிலுக்கு ஓடி தெருவை எட்டிப் பார்த்தாள்.

அம்மாவுக்கு சில நம்பிக்கைகள் உண்டு—அவைகளை அவனால் அகற்றவே முடியவில்லை...

"நல்லவேளை இந்த மாதத் தொடக்கம் வியாழக் கிழமையில் ஆரம்பமாகியுள்ளது. இன்று முகூர்த்த நாள் வேறு. திங்கள் கிழமையாக இருந்தால் ராகுகாலம்னு கவலைப்பட்டிருப்பேன். சீக்கிரம் கிளம்பு. எதிர்வீட்டு சிவகாமி கோவிலிலிருந்து திரும்பி வராங்க—பழுத்த சுமங்கலி...!"

பிரீஃப்கேசுடன் அவன் கிளம்பினான். நிலையத்தை அடைந்ததுமே பஸ் கிடைத்து விட்டது. சுமார் ஒன்னரை மணி நேரம் பயணம். அம்மா சொல்வது போல பஸ்ஸைத் தவற விட்டால் தொழிற்சாலையை அடைய நேரம் கடந்து விடுமே?

Vennila

அறையை விட்டு செயலாளர் சாம்பசிவத்துடன் கவனிக்க வேண்டிய பகுதிக்கு செல்லும் பொழுது வழியில் வண்டிகள் நிறுத்தம் எனும் இடத்தில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த சைக்கிள்-ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்-கார் முதலியவற்றைக் கண்டதும்... அவனுக்கு சீக்கிரமாக ஒரு ஸ்கூட்டரை வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் தோன்றியது.

சாம்பசிவம் சுருக்கமாக அவனது வேலை சம்பந்தப்பட்ட சில சங்கதிகளை சொல்லிவிட்டு அப்பால்நகர்ந்து விட்டார்.

உற்பத்தி பகுதிக்குள் நுழைந்து மேற்பார்வையைத் தொடங்கினான். இயந்திரங்களின் ஏகப்பட்ட கூச்சல் காதை பிளந்தது. புதிதாக வந்துள்ள அவனைக் கண்டு தொழிலாளிகள் வணக்கம் சொல்ல... அவர்களுக்கு தலையாட்டி விட்டு கூச்சத்துடன் புன்முறுவலித்தபடி வளைய வந்தான்.

வசுந்தரா தனது வழக்கப்படி தொழிற்சாலைக்குள் மகளுடன் பவனி வந்துகொண்டிருந்தபோது அந்தப் பகுதிக்குள் தலை நீட்டிவிட்டு மறைந்து விட்டாள்.

புதிதாக வேலைக்கு வந்து சேர்ந்து விட்டிருக்கும் அவனை கண்டு கொள்ளவில்லை. 'புதிய துடைப்பம் நன்றாகத்தான் பெருக்கும்...ஆனால் போகப் போக—தேய்ந்து போய் விடுமே!' என்ற எண்ணமுடையவள் அவள். இருக்கட்டும்...'இன்னும் சில நாட்கள் சென்ற பிறகு அந்தப் பையனை அழைத்து அவனது வேலைகளைப் பற்றி விசாரிக்கலாம். வந்து சேர்ந்த ஒரு மணி நேரத்தில் என்னதை சாதித்து விடப் போகிறான்?' என்ற அசட்டை அவளுக்கு.

தாய், மகளின் கரத்தைப்பற்றி அங்கிருந்து நெட்டித் தள்ளிக்கொண்டு போய் விட்டாள்.

எஜமானியோ, அவளது மகளோ அங்கு வந்து ஒரு கணம் நின்றுவிட்டு போனதை அவனும் பார்க்கவில்லை. அவனது கவனம் முழுவதும் வரிசையாக எந்திரத்தி



லிருந்து வெளிப்பட்டு பெரிய பிளாஸ்டிக் வாளிகளில் குவிந்து கொண்டிருந்த மின்விசை பொருள்கள் கவர்ந்து கொண்டு விட்டிருந்தன.

பின்னர் திரும்ப அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டு கவனிக்க வேண்டிய கடிதங்களை படித்து குறிப்பு எடுத்துக் கொண்டான். உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் சிலவற்றை அந்தந்த வியாபாரிகளுக்கு அடையாளம் காட்ட வேண்டிய கடிதங்களை எழுதி முடித்துவிட்டு... அவைகளை தட்டெழுத்தரிடம் கொடுத்து...தயாரித்து தன் கையெழுத்துக்கு அனுப்ப சொல்லிவிட்டு திரும்பியபோது...பகல் உணவு நேரத்தின் சங்கொலி பலமாகக் கேட்டது...

எந்திரங்களின் ஓசை நின்றது. அதற்குப் பதிலாக மனிதப் பேச்சும், சிரிப்பொலியும்...பாதணிகளின் சப்தமும் கலவை ஒலியாக உரத்துக்கேட்டது. தலைக்கு மேல் சுழன்ற விசிறியை நிறுத்தி குழல் விளக்கை அணைத்து-பீரோவைப் பூட்டி சாவியை பத்திரமாக பாண்ட் பையில் வைத்துக்கொண்டு...அறைக் கதவை வெளியே இழுத்து... பூட்டிக்கொண்டு...கைக்கடிகாரத்தைப் பார்த்தான். பிற்பகல் ஒரு மணி, ஐந்து நொடியைக் கடந்துவிட்டிருந்தது

பளிச்சென்று எரித்த பகல் சூரியனின் ஒளி கண்களைக் கூசின. வயிறு பசித்தது. மெல்ல காண்டீன் இருந்த பக்கம் நடையைக் கட்டினான். அங்குக் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அன்றைய பகல் உணவுக்கானதொரு டோக்கனை வாங்கிக் கொண்டு காண்டீன் கவுண்டர் அருகே வரிசையில் சேர்ந்து கொண்டான்.

அவன் முறைவந்தபோது...காண்டீன் சிப்பந்தி மெல்லிய புன்னகையுடன்...சாப்பாடு நிறைந்ததொரு ஸ்டீல் தட்டை அவனிடம் நீட்டினார்—சாப்பாட்டறையில் ஜன்னல் ஓரமாகக் காலியாகக் கிடந்த ஒரு மேஜை மீது தட்டை வைத்துக்கொண்டு அமர்ந்தான்.

Vennila

சூடான உணவிலிருந்து எழுந்த வாசம் நாக்கில் நீரை சுரக்கச் செய்தது. தட்டை வைத்துவிட்டு...அருகிலிருந்த பீங்கானில் கைகளைக் கழுவி தன் கைக்குட்டையில் துடைத்துக்கொண்டு-பில்டரிலிருந்து டம்ளர் ஒன்றில் நீரை நிறைத்துக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்து விட்டு சாப்பிட உட்கார்ந்தான்.

சாதம், பருப்பு-அவியல் காரட் துவையல்-பப்படம் என உணவு வகையாக தட்டில் பரிமாறப்பட்டிருந்தது. அத்துடன் சிறிய கிண்ணங்களில் சாம்பார்-ரசம்-தயிர் முதலியவைகளும் இருந்தன. இத்தனைக்கும் ஒரு ரூபாய் ஐம்பது பைசாதானா? அவனால் நம்பவே முடியவில்லை!

பருப்பை சோற்றுடன் கலந்து...வாயில் அள்ளிப் போட்டு சுவைத்து விழுங்கினான்-சாம்பாருடன் சாதத்தைப்பிசைந்து விழுங்கியபோது விக்கல் எடுத்துக் கொண்டது. தண்ணீரை ஒரு மடக்குக் குடித்துவிட்டு வாயை கைகுட்டையால் துடைத்துக் கொண்டபோது "சாம்பார் ரொம்ப காரமாக இருக்கா?'' கேட்ட குரல் அவனை திடுக்கிடச் செய்தது.

நிமிர்ந்து பார்த்தவன்—அதிர்ந்து போனான்.

தொழிற்சாலையின் தலைவி வசுந்தரா அம்மாளின் செல்ல மகள் சம்யுக்தா அவன் எதிரே மேஜையருகே உணவு தட்டுடன் அமர்ந்திருந்தாள்.

''நீங்க இங்கே ?'' பேச முடியாது அவன் தடுமாறியதைக் கண்டு மெல்லச் சிரித்தாள் அந்த மோகினி.

"இந்த காண்டீனில் எல்லாருடன் சேர்ந்து சாப்பிடணும்னு ரொம்ப ஆசையாக இருந்தது. அதனாலே நானும் சாப்பாட்டு தட்டுடன் இங்கேவந்து உட்கார்த்துட்டேன்...இங்கே நான் உட்கார்ந்திருப்பதைப்பற்றி... மறுப்பு ஏதாவது உண்டா?''



மறுப்பா...கிடைக்கக் கூடாத பாக்கியம் அது—ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்ல துணிவு இருக்கவில்லை.

''மறுப்புச் சொல்ல நான் யார் இந்த தொழிற்சாலை, இதில் அடங்கியிருக்கும் அனைத்தும் உங்களுடையது...நீங்களும் உங்க தாயாரும் இந்த காண்டீனில்தான் சாப்பிடற பழக்கமா?'' கேட்டபடி சோற்றை அளைந்தான்.

எங்கள் வீட்டுச் சமையல்காரர்.. பக்குவமாக-பிடிச்ச உணவு வகைகளைத் தயாரித்து ஹாட்கேசில் பத்திரமா அனுப்புகிற பழக்கம்.

''அப்போ...இங்கே வந்து—''

''அதனால் என்ன? தனியா எங்க அறையிலே உட்கார்ந்து சாப்பிடறதைவிட இங்கே உங்கள் அனைவரோடு சேர்ந்து சாப்பிடறது ரொம்ப நல்லா இருக்கு..! நீங்கள் எல்லோரும் எங்களைவிட இன்னும் அதிகமா என்னதான் சாப்பிடுகிறீங்கன்னு பார்த்துட்டு போக வந்தேன்னு வச்சுக்கோங்க...!'' கலகலவென்று சிரித்தாள்.

தலைவியின் மகள் அங்கே வந்திருப்பதைப் பற்றிய செய்தி தொழிலாளர்களிடையே கணப்பொழுதில் பரவி விடவே...கிசுகிசுப்புடன் எல்லோரும் அந்தப் பக்கம் பார்க்க...தட்டை விட்டு நிமிர முடியாது கூச்சத்தில் கூனிப் போய்விட்டான் அருண்—அவன் முகம் சூடாகிப் போய் விட்டது...நெஞ்சு தீவிரமாகத் துடித்தது. பயம் கலந்ததொரு இன்பஉணர்வில்...திண்டாடியபடி அவன் சாப்பாட்டை மெல்ல கொரித்துக் கொண்டிருந்தான்.

ஆனாலும் இந்தப் பெண் ரொம்ப விளையாட்டுக்காரியாக இருக்கிறாளே...தனக்குள் எண்ணி உதட்டைக் கடித்துக் கொண்டான்.

''எனக்கு அவியல் ரொம்ப பிடிக்கும்...உங்களுக்கு?'' அவள் கேட்டபொழுது அவன் நிமிர்ந்து பார்த்து பதில் சொல்ல வேண்டியிருந்தது.

Vennila

"எனக்கும் பிடிக்கும்..."

"அப்போ அதை சாப்பிடுங்கோ. தொடாம பூசைக்கு வைத்திருக்காப்பல ஒதுக்கி இருக்கீங்களே" சிரித்தான்.

சட்டென்று அவியலை அள்ளி சாம்பார் சாதந்துடன் சேர்த்து வேகமாக விழுங்கினான் அருண்.

சக ஊழியர்கள் இந்தச் சம்பவத்தைப் பற்றி ஏதாவது கதைகட்டிவிடப் போகிறார்களே என்றதொரு பயம்...நெஞ்சை குறுகுறுத்தது.

"என்னைக் கண்டதும் கான்டீன்காரர் ரொம்ப உபசரிக்கத் தொடங்கிவிட்டார். அம்மாவுக்கு அவியல் கொஞ்சம் கூட வைக்கவா—நெய் ஊத்தித் தரேன்... சாம்பார் வேணும்னா பையன் கிட்டே சொல்லுங்க. நீங்க வந்து எடுத்துட்டு போகணும்னு அவசியம் இல்லே அப்படின்னு ஒரேமுட்டா... ஆர்ப்பாட்டம் பண்ணிட்டார். டோக்கன் எடுக்கிற இடத்திலேயும் இதே கதைதான். அம்மா எதுக்கு பணம் கட்டணும்... என்று குழைந்தார் அவர். நான் பணம் கட்டிட்டு டோக்கன் வாங்கி வரிசையில் ஒழுங்கா நின்றுதான் வந்தேன். எல்லாருக்கும் ஒரே சட்டந்தானே?"

"நீங்க சொல்றது சரிதான்...ஒழுங்கு முறைகள் என்று வரும்போது எல்லோரும் அதற்குக் கட்டுப்பட வேண்டும்!"

அதற்குமேல் அவள்தான் பேசிக்கொண்டிருந்தாள்—விரைவாகத் தன் உணவை முடித்துக் கொண்டு, "மன்னிக்கணும் நான் வேலையை ஆரம்பிக்கணும்... பத்து நிமிஷ நேரந்தான் இருக்கு!" என்று எழுந்து கைகளைக் கழுவ நகர்ந்து விட்டான்.

கட்டிப்போட்டிருந்த தலையை அறுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டது போன்றதொரு நிம்மதி அவனுக்கு... ஆனால் அன்று மாலை வேலையின்போது சம்யுக்தா



வின் அழகிய முகம் பல தடவைகள் அவனது கற்பனையில் தோன்றி இடைஞ்சல் செய்து கொண்டிருந்தது.

மாலை வீடு திரும்பிய மகனிடம் வேலை பற்றிய விவரத்தை கேட்டபடி தாய் காப்பி தம்ளரை நீட்டினாள்.

"வேலை சுவாரசியமாக இருக்கம்மா... கொஞ்ச நாளில் நன்றாகப் பழகி விடுவேன். சாப்பாடு ரொம்பவே நல்லா இருக்கு..."

"குறைச்ச பணத்துக்கு நல்ல சாப்பாடு கொடுக்க கான்டீனுக்கு எப்படி கட்டுப்படியாகும்?"

"கம்பெனி செலவில் நடக்கும் கான்டீன்...தொழிலாளர்களின் நலனுக்காக கையைவிட்டு, செலவழித்து நல்ல உணவை வழங்குகிறார்கள். இன்னிக்கு ஒரு வேடிக்கை நடந்தது. தொழிற்சாலை தலைவியின் மகள் சம்யுக்தா என் மேஜை அருகே வந்து உட்கார்ந்து கொண்டு நாங்கள் சாப்பிடும் அதே சாப்பாட்டை சுவைத்து சாப்பிட்டாங்க...எனக்கு ரொம்ப அதிசயமாக இருந்தது. கலகலப்பா பேசினாங்க...!"

"பதிலுக்கு நீ அதிகம் பேச்சுக் கொடுத்தியா? வேண்டாம். பணக்காரங்க உறவு...பாம்பைப் போல...!"

இதென்ன அம்மா இப்படி சொல்ராங்க.

"அம்மா...நானாகத் தேடிக்கொண்டு அந்த பெண்ணிடம் பேசப் போகலை. என்னைப்பத்தி உங்களுக்குத் தெரியும்...நீங்க வீணே கவலைப்படுகிறீங்க?" என்று கூறி விட்டு காப்பியை வேகமாகப் பருகிவிட்டு எழுந்தான்.

சம்யுக்தாவின் சிரிப்பு அவன் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளது கூந்தலில் சூட்டியிருந்த மகிழம்பூச்சரத்திலிருந்து லேசாக எழுந்த நறு

Vennila

மணம் இன்னமும் அவன் முகத்திலே மோதுவது போன்ற பிரமை...

அந்த கபடமற்ற முகத்தை அவனால் பாம்புடன் ஒப்பிடவே முடியாது. மேலே பேசப் பிடிக்காது பெரு மூச்சுடன்... குளியலறை பக்கம் விரைந்தான் அவன்.

## 16

வசுந்தரா குளியலறையிலிருந்து வெளிப்பட்டாள். கடும் கோடை காலத்தில் கூட லேசான சுடுதண்ணீரில் குளிக்கும் பழக்கமுடையவள். இன்று பச்சைத் தண்ணீரில் தலை முழுகி விட்டிருந்தாள். பூவாக ஷவரிலிருந்து விழுந்த தண்ணீர் சில்லென்று விழுந்த மண்டையைத் தாக்கியதைக்கூட உணராது வெகு நேரம் குழாய் அடியில் நின்று கொண்டிருந்தாள்.

திகு திகுவென்று எரிந்த மனதையும் உடலையும் அப்படி சுலபமாக குளிரவைக்க முடியாது என்று எண்ணியவளாக... தலையில் சுரத்துவாலையைச் சுற்றிக் கொண்டு மாற்றுடை அணிந்து மெல்லக் கீழே இறங்கி வந்தாள்.

சாப்பாட்டறை ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தாள். மகி உற்சாகமாகக் குரைப்பதற்குக் காரணம் இருக்கு மென்று அவளுக்குத் தெரியும்.



தாயாருக்கு முன் வீட்டுக்கு தனது காரிலே திரும்பி விட்டிருந்த மகள் குளித்துவிட்டு ஆரஞ்சு வண்ண வாயில் சேலையில் தலைமுடி இடைவரை அவிழ்ந்து புரள-வன தேவதை போல தோட்டத்திற்குள் இங்கு மங்கும் மகிக்குப் பாய்ச்சல் காட்டி ஓடிக்கொண்டிருந்தாள். நாய் அவளைத் துரத்திக்கொண்டு உற்சாகமாக குரைத்து ஓடி விளையாடுவதை வேடிக்கை பார்த்த வண்ணம் தோட்டக்காரன் கொன்றை மரத்தடியில் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு நிற்பதைக் கண்டாள்.

'இந்த அழகான பெண்ணுக்கு அழகான குணம் அமைந்திருக்கக் கூடாதா? அப்பனைப்போல ஒரு பிடிவாதம்!' பற்களை கடித்துக்கொண்டு சுரத் துவாலையை தலை முடியினின்று உருவி...நாற்காலி கைமீது போட்டுவிட்டு மின்விசிறி அடியில் முடியை காய வைத்துக்கொள்ள உட்கார்ந்தாள் வசுந்தரா.

மாலை நாளேடுகளைக் கொண்டு வந்து வைத்து விட்டு குப்புசாமி அசையாது அருகில் நிற்பதை உணர்ந்து நிமிர்ந்தாள்.

"பகல் உணவுக்கு நான் பாப்பாவுக்கு சுண்டைக் காய் வத்தல் குழம்பு செய்து அனுப்பி இருந்தேன். குழம்பு அப்படியே இருக்கு.பாப்பா சாப்பிடலையா?"

ஆதங்கம் நிறைந்த அவரது விசாரிப்பு அவளுக்கு எரிச்சலூட்டியது.

நாளேடு ஒன்றை மேலெழுந்த வாரியாக பார்வை யிட்டபடி அவள் பதிலளித்தாள்.

"சம்யுக்தா நீர் அனுப்பி வைச்ச எதையும் சாப்பிடலை..." ஏளனமாக அவள் குரல் தொனித்தது.

"பாப்பாவுக்கு உடம்புக்கு...?" குப்புசாமி முடிக்காது நிறுத்தினார்.தொழிற்சாலையிலிருந்து அலுப்பும் சலிப்பு



Vennila

மாகத் திரும்பியிருக்கும் அவளிடம் அதிகம் பேசினால்... என்ற கவலையுடன் அவர் மவுனமாகினார்.

''உடம்புக்கு ஒண்ணுமில்லை-உங்க தயாரிப்பை சாப்பிடாது சம்யுக்தா இன்று காண்டீனில் சாப்பிட்டா!''

சட்டென்று எழுந்து கையில் பிடித்திருந்த பத்திரிகையை மேசை மீது மடித்துப் போட்டுவிட்டு கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு எஜமானி அறையை அளப்பதைக் கண்டு குப்புசாமி...நடையைக் கட்டினார்.

அவருக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். இப்படித்தான் வாழவேண்டும் என்று கோடிட்டு குறிப்பிடும் தாயின் அதிகாரத்தை மகள் மீறத் தொடங்கியிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு தமக்குள்ளே புன்னகைத்துக் கொண்டார். பின் பக்கத்து நடை ஜன்னல் வழியே அவரும் தோட்டத்தைப் பார்த்தார்.

பச்சிளங் குழந்தை போல குதித்துக்கொண்டு மகியுடன் தோட்டம் பூராவும் ஓடிவிளையாடிக் கொண்டிருந்த சம்யுக்தாவின் முகத்தில் பரவி நின்ற பரவசத்தைக் காண அவருக்கு மிகவும் திருப்தியாக இருந்தது.

'கால முழுவதும் அட்டகாசமாக அல்லிதர்பார் நடத்திக்கொண்டு வாழ முடியும் என்ற நினைப்பு, நொறுங்க வேண்டும். யாராவது இந்தம்மாளுக்கு புத்தி கற்பிக்க வேண்டும்...'என்று தமக்குள்ளே முனகியபடி சமையலறை பக்கம் நடந்தார்.

மாலைப்பொழுது மங்கி இருள் பரவத் தொடங்கியதும் ரத்னா வீட்டிலிருந்த மின்விளக்குகள் அனைத்தையும் ஏற்றி விட்டாள். மகியைக் கட்டித்தழுவிக் கொஞ்சி விட்டு—முகத்தில் முடிபுரள உள்ளே ஓடி வந்த மகளை வெறித்துப்பார்த்தாள் வசுந்தரா.

''போய் கை, கால்களை சுத்தமாகக் கழுவிக் கொண்டு வா. நாயை தொட்டு விளையாடிட்டு அப்படியே இங்கே வந்து உட்கார்ந்திடாதே—!''



பதிலுக்கு தாயை ஊன்றிப் பார்த்தாள் மகள்...முகம் கோபத்திலே சிவந்து போனது.

''இது கூட எனக்குத் தெரியாதா? நீங்க என்னை இன்னும் பச்சைக் குழந்தையினு நினைச்சுக் கொண்டிருக்கீங்க!'' பட்டென்று சொல்லிவிட்டு... மாடிக்குப் போய் விட்டாள்.

இரவு எட்டு மணி அளவில் தாயும், மகளும் சாப்பிட உட்கார்ந்தனர். அதுவரை அடக்கிவைத்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை அப்போது கேட்டுவிட தீர்மானித்தாள் தாய்.

அன்று பகல் உணவு நேரத்தின் போது தொழிற்சாலையின் அவளது அறை மேஜை மீது சுத்தமான தொரு வெள்ளை விரிப்பை பரத்தி குப்புசாமி அனுப்பியிருந்த உணவுக் கூடையிலிருந்த ஹாட் கேசையும் தட்டுகள்–தம்ளர்கள் இத்யாதிகளை எடுத்து வைத்து விட்டு அலுவலகப் பையன் அப்பால் போய் விட்டிருந்தான்.

முகத்தை கழுவி – முடியை சீராக்கிக்கொண்டு அறைக்குள் வந்த வசுந்தரா ஹாட் கேசைத் திறந்து டிபன் பாக்சை வெளியே எடுத்தாள். உணவைப்பரிமாற மகளுக்காக கொஞ்ச நேரம் காத்திருந்தாள். பகல் உணவு நேரம் ஆரம்பித்து பதினைந்து நிமிஷங்கள் ஆகியும் சம்யுக்தாவைக் காணவில்லை. செயலாளர் சாம்பசிவத்துடன் தொழிற்சாலையை பார்வையிடப் போவதாகக் கிளம்பிய மகள் ஏன் இன்னமும் திரும்பவில்லை?

இண்டர்காமில் செயலாளரை அழைத்தாள். காண்டீனிலிருந்து அவருக்காக அனுப்பப்பட்டிருந்த உணவைச் சாப்பிட்டு முடிக்கும் தருவாயிலிருந்தார் அவர்... கடைசி வாய் சோற்றை அள்ளி எடுத்தவர், அதை உதறிவிட்டு எழுந்தார்.

Vennila

மகளைக் காணவில்லை என்று எஜமானி சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனார்.

பரபரப்புடன் கைகளைக் கழுவி வாயை துடைத்துக் கொண்டு வசுந்தராவின் அறைக்குள் மூச்சிரைக்க வந்து நின்றார்.

"உங்களோடு தொழிற்சாலையைப் பார்வையிடப் போவதாகச் சொன்ன சம்யுக்தா எங்கே போனா? பார்த்து சீக்கிரம் சாப்பிட அனுப்பும்" கடுகடுத்தாள் அவள்.

காலையிலிருந்து சம்யுக்தாவின் போக்கு அவருக்கு மிகவும் சங்கடமாகத்தானிருந்தது.

கொஞ்ச தூரம் அவருடன் நடந்து கொண்டிருந்தவள் திடீரென்று காணாமல் போய்விட்டாள். எங்கே போய் விடுவாள்? 'தொழிற்சாலை அவர்களுடையது... சுத்தி தானே பார்த்துவர விரும்புகிறாள் – நமக்கென்ன..., என்று அவரும் விட்டுப்பிடித்தார். இப்போது அவள் எந்தப் பகுதியில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாளோ!... கவலையுடன் மூச்சடைக்க இங்குமங்கும் விரைந்து சென்று தேடினார்... கடைசியில் அவளைக் காண்டீனில் பார்த்துவிட்டார்.

உணவு தட்டிற்காக கவுண்டர் அருகே வரிசையில் நின்றவளிடம் ஓடி வந்தார். அவர் கேட்குமுன் சம்யுக்தா பதிலளித்து விட்டாள்.

"காண்டீனில் சாப்பிடப் போகிறேன்னு அம்மாகிட்டே சொல்லுங்க."

சங்கதியைக் கேட்ட வசுந்தராவுக்குக் கோபம் கட்டுக் கொள்ளவில்லை...

"இருங்க. நானே போய் கூட்டிக்கொண்டு வருகிறேன்" எனக் கூறிவிட்டு வேகமாக காண்டீனை நோக்கி நடந்தாள்.



ஜன்னல் ஓரமாக இருந்த மேஜையருகே புதிதாக வேலைக்கு அமர்ந்த அருணுடன் பேசிச் சிரித்தபடி தன் மகள் காண்டீன் உணவை சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

அத்தனை தொழிலாளிகள் முன்னால் அவள் தன் மகளைக் கண்டிக்க இயலாதே. புகையும் எரிமலையாக ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு தன் அறைக்குத் திரும்பி விட்டாள்.

அவளுக்கு அன்று சாப்பிடவே பிடிக்கவில்லை. 'என்ன அவமானம்?' என மனம் வெகுண்டு கொதித்தது. மகளின் வரவிற்காகக் காத்திருக்க முடியாது–அவளுக்கு நகரத்து அலுவலகத்திற்கு அவசரமாகப் புறப்பட நேர்ந்தது.

மாலை இருவரும் தனித்தனியே தங்கள் கார்களில் வீடு திரும்பிவிட்டிருந்தனர்.

வாயில் பிட்டுப் போட்டுக் கொண்ட சப்பாத்தியை கடித்து விழுங்கிவிட்டு மெல்லிய குரலில் வசுந்தரா பேசத் துவங்கினாள்.

"என் கிட்டே சொல்லாம திடீர்னு காண்டீனில் போய் உட்கார்ந்துண்டு சாப்பிடத் தொடங்கினா என்ன அர்த்தம்?"

"தொழிற்சாலை முழுவதையும் சுத்திப் பார்த்தேன்–நானே எல்லாத்தையும் பார்த்து தெரிஞ்சுக்கிறது நல்லதுன்னு பட்டது. அப்படியே காண்டீன் சாப்பாடு உண்மையில் நல்ல சாப்பாடான்னு சோதித்து பார்க்க ஆவலாக இருந்தது... போய் சாப்பிட்டேன். இது தவறா?"

"காண்டீனுக்கு தேவைப்பட்ட நல்ல பொருள்களை சாம்பசிவம் நேரிடையாக கவனித்து வாங்கிப்போடுகிறார்–எல்லாம் சுத்தமாகத் தயாரிக்கப்படுகின்றன!"

Vennila

"அரிசி, பருப்பு, காய்கள் எல்லாத்தையும் அவர் நல்லதா பார்த்து வாங்கிப் போட்டாலும் தயாரிப்பும் நல்லதாக இருக்க வேண்டாமா?"

"அதைச் சோதிக்கணும்னு சொல்லி அனுப்பிச்சா ஒரு தட்டு சாப்பாட்டை நம்ம அறைக்கு அனுப்பி வைப்பாங்களே!"

"அதுதான் தவறு. எஜமானி கேட்டாங்கன்னா... நல்ல நெய்-பருப்பு-தயிர் இதுகளை அதிகம் வைத்து அனுப்பலாம்...சாதாரண தொழிலாளிக்கு என்ன வித மான உணவு கொடுக்கப்படுகிறதுன்னு தெரிஞ்சுக்க நானே நேரில் போய் பார்த்தேன். திருப்தியா இருந் தது-மேலும் அம்மா! எஜமானின்னு உயரமான இடத் தில் உட்கார்ந்து கொண்டு அதிகாரம் செய்கிறதைவிட அவர்களோடு சமமாக நட்புரிமை பாராட்டினால்... அவர்கள் மகிழ்ச்சி அடைய மாட்டார்களா? தொழிலா ளர்களின் மன நிறைவு நமக்கு அவசியமல்லவா?"

"எஜமானி எட்டத்தில் இல்லாம சரிசமமாகப் பழக ஆரம்பிச்சா என்ன நடக்கும் தெரியுமா? தொழிற்சாலை யைக் கூட்டி சுத்தப்படுத்தும் சாதாரணமான ஆள்கூட உன்னைதான் ஏன் கட்டிக்கொள்ளக் கூடாதுன்னு நினைப்பான்?" படபடவென்று கோபத்தை வார்த்தை களாக உதிர்த்தாள்.

"நமக்கு சமமான பணக்கார இடத்துப் பிள்ளை யாராவது என்னைக் கட்டிக்க விரும்பினால் உடனே நான் ஒத்துக்கொள்வேனா? பணக்காரனோ... ஏழையோ...நான் விரும்பினவனைத்தான் கட்டிக்கொள் வேன்!"

"இத்தனை விரைவில் நீ இப்படி பேசக் கத்துக் கொண்டு விடுவாய்னு நான் நினைக்கலை...இது யாரு டைய போதனை?"



"ஏம்மா... எனக்குன்னு சொந்தமா சிந்திக்க மூளை இல்லையா?" மகள் துண்டரிகமாகக் கேட்டாள்.

வசுந்தரா தாடை இறுகிப்போனாள். "தொடர்ந்து அதிர்ச்சி தரும் இது மாதிரியான காரியங்களில் ஈடு படாதே. எனக்கு வயதாகிவிட்டது. பல பொறுப்பு களைத் தனியே தாங்கி நான் தளர்ந்து விட்டிருக்கேன்!"

"உங்களை யார் தனியே பொறுப்புகளை சுமக்கச் சொன்னது? அப்பாவுடன் சேர்ந்து இவைகளை பங் கிட்டுக் கொண்டிருக்கலாமே? ஆமாம் அம்மா அப்பா நம்மைவிட்டு ஏன் விலகிப்போனார்? ஏம்மா அவர் இப் போது எங்கே இருக்கார்னு தெரியுமா?"—தொண்டை வரை வேகமாக எழுந்துவிட்ட கேள்விகளை அடக்கிக் கொண்டாள் மகள்.

."அம்மா நான் ஒண்ணு கேட்க விரும்பறேன்!"

வசுந்தரா மகளின் முகத்தை கலவரத்துடன் பார்த் தாள். அவளது மார்பு படபடத்தது—மூச்சு நின்றுவிடும் போன்றதொரு இறுக்க உணர்வு நெஞ்சை அடைத்தது.

"நம்மை விட்டு எக்காரணம் கொண்டோ விலகிப் போன அப்பா இன்னும் உயிருடன் இருக்கிறாரா— அதை எப்படியம்மா தெரிஞ்சுக்கிறது?"

முகம் சிவந்து போனாள் வசுந்தரா... "என் கழுத் தில் தொங்கும் தாலியை நான் என்னிக்குக் கழற்றி வைக் கிறேனோ அன்னிக்கு அவர் மறைஞ்சிட்டார்னு அர்த்தம். இது மாதிரி கேள்விகளை இனி என்கிட்டே கேட்காதே... என்னால் பதில் சொல்ல முடியாது!" தாய் விடுக்கென்று பாதி சாப்பாட்டில் எழுந்து போய் விட்டாள்.

"அம்மா! இன்னும் கொஞ்சம் சப்பாத்தியும், குர்மா வும் கொண்டு வரவா!" கேட்டுக்கொண்டு அருகேவந்த

Vennila

நின்ற குப்புசாமியை எரித்து விடுகிறவள் போல பார்த்தாள் வசுந்தரா.

"எனக்குப் போதும். சம்யுக்தாவுக்கு வேணும்னா கேட்டுப் போடுங்க!" சொல்லிவிட்டு கைகளைக் கழுவிக் கொண்டு மாடிக்கு விரைந்துவிட்டாள்.

கண்ணில் பெருகிய கண்ணீர்—கன்னங்கள் மீது வழிந்ததைக்கூட உணர முடியாது துயரத்தின் எல்லைக் கோட்டிற்கே போய்விட்ட வசுந்தரா தன் அதிகார வேஷம்... கலைந்து போய்விட்ட ஒரு அதிர்ச்சியில் செயலற்று நின்றாள். எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் ஆரம்பித்த அவளது இல்லறம் ஜன்னல் வழியாகத் தெரிந்த கருமை கப்பிய வானத்தைப் போல .. எத்தனை பெரிய இருளாகி விட்டது. நடந்த அத்தனையையும் அவள் மகளிடம் சொல்ல வேண்டுமா?

உகும்! அவள் சொல்லப் போவதில்லை. பெற்ற மகள் என்ற போதிலும், தாயின் கடந்த காலத்தைப் பற்றி தெரிந்துகொள்ள மகளுக்கு உரிமை ஏது?

படுக்கை மீது சாய்ந்துகொண்டு ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

# 17

நகரத்தில் பிரபலமான பொன்னரங்கள் அண்ட் சன்ஸ் என்ற துணிக்கடையின் பகல் உணவு நேர மணி ஒங்கி ஒலித்தது. நேதாஜி சாலையில் உள்ளே ஓடிய தொரு நெருக்கமான சந்தில் அமைந்திருந்த அந்தக் கடை வெளிப்பார்வைக்கு மிகவும் சிறியதுபோல காணப்பட்ட போதிலும்... அடுத்த தெருவை எட்டி விடும் அளவு உள்ளே நீளமாக வியாபித்திருந்தது.

முன்பக்கத்துக் கண்ணாடி அலமாரிக்குள் சட்டை, பாண்ட் முதலியவை தைக்க தேவைப்பட்ட விதவிதமான துணிகள் பெரிய சுருள்களாக நெருக்கமாக வைக்கப்பட்டிருந்தன. அடுத்த பகுதியில் பெண்களுக்குத் தேவைப்பட்ட வாயில் புடவைகள்... சைனா சில்க் விதங்கள்—பாலியஸ்டர் புடவைகள் என்று பல ரகப் புடவைகள்... அலமாரிகளில் அடுக்கப்பட்டிருந்தன. அடுத்த பகுதியை ரெடிமேட் ஆடைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. கடைசியாகக் குழந்தைகளின் உடைகள் என்ற பகுதி கண்கொள்ளாக் காட்சியாக வாங்க வந்தவர்களை திகைக்கச் செய்யும் வண்ணம் அமைந்திருந்தது. தேவைப்பட்ட அத்தனையையும் ஒரு கடையிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்ற காரணம் பற்றியும்... தள்ளுபடி விலையில் தருகிறார்கள் என்ற ஆவலினாலும் கடையில் கூட்டம் எப்பொழுதும் திமுதிமுத்தது. அந்தக் கடையில் பூபதி... ரெடிமேட் ஆடைப் பகுதியில் விற்பனையாட்களில் ஒருவராக வேலையை மேற்கொண்டிருந்தார்.

Vennila

கட்டிடத்தின் பின் பகுதியிலிருந்த சாப்பாட்டறையை நோக்கி அவர் மெல்ல நடந்தார்.

பீங்கானில் கைகளைக் கழுவிக் கொண்டு முகத்தில் நீரை வாரி இறைத்தபடி பீங்கானுக்கு மேல் சுவற்றில் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துக் கொண்டவருக்கு லேசாக ஒரு அதிர்ச்சி.

காதோரத்து கிருதாக்களிலும்—முன்னெற்றி முடியிலும் நரை முன்னைவிட அதிகமாகிவிட்டிருந்தது.

ஜோல்னா பையிலிருந்து சிறு துவாலையை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

கண்களின் கடையோரத்திலே காக்கையின் கால்களைப் போல ஆழமாக சுருக்கங்கள் காணப்பட்டன.

இந்த சில நாட்களில் வேலைக்காக அலைந்து திரிந்த— அனுபவித்த சிரமங்கள் தாங்காது பாதச் சுவட்டை அவர் முகத்திலே விட்டுப்போயிருந்தன.

நல்லவேளை இந்தக் கடையிலாவது வேலை கிடைத்ததே... என்றதொரு திருப்தி அவருக்கு.

பம்பாயில் பல ஆண்டுகளாக அவர் பார்த்து வந்த வேலைக்கு திடீரென்று ஆபத்து வந்தபோது அவர் மிகவும் கலங்கிப் போனார். தாராவின் சம்பாத்தியத்தை மட்டுமே நம்பி... அவரும் குழந்தையும் பற்றாக்குறை இன்றி வாழ முடியாதே?

'பம்பாய் வாசம் பணத்துக்கு நாசம் என்பார்களே...' அது போல அத்தனை ஆண்டுகள் அங்கே கணவனும் மனைவியும் வேலை செய்தும்—கணிசமாக பணத்தை சேமிக்க இயலவில்லை.

வெய்யிலிலும் — மழையிலும் ஓடிச்சென்று மின் ரயிலைப் பிடித்து கூட்டத்தில் நீந்தி...அவரவர் அலுவலகத்



திற்கு சென்று உழைத்து களைத்து... ஒரே ஒரு அறை கொண்ட குடியிருப்புக்குள் வந்து அடைந்து கொண்டனர்-இருவரின் சம்பளமும் வாடகைக்கும்-சாப்பாட்டுக்கும்-உடைக்குமே சரியாக இருந்தது. பம்பாய் தேவதை மகாலட்சுமி வந்தவர்களுக்கெல்லாம் வாழ்வளிப்பாளாம்...

ஆனால் அங்கிருந்து பணத்தை வாரிக்கட்டிக் கொண்டு வெளியேற அனுமதிக்க மாட்டாளாம்.

பாமரர்கள் பலர் சொல்லக் கேட்டிருக்கிறார். உண்மை என்பது அவர் வேலை பார்த்த அந்த மில் மூடப்பட்டு விட்ட போதுதான் தெரிந்தது. கிடைத்த கொஞ்ச சுட்டுத் தொகையோடு வேறு முயற்சியில் ஈடுபடும்போது தாரா சொன்னாள். "நாம் ஏன் சென்னைக்குச் சென்று குடியேறிவிடக்கூடாது. அங்கே இத்தனை செலவு ஆகாது... எங்கள் நிறுவனத்தின் கிளை அலுவலகம் அங்கே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதற்கு என்னை மாற்றிவிடும்படி மானேஜரிடம் கேட்கட்டுமா?"

கையில் காசில்லாது அந்த பெரிய நகரத்தில் எத்தனை காலம் வாழ முடியும்? "அப்படியே செய்-நான் உனக்கு முன்னர் அங்கு சென்று வேலை ஏதாகிலும் தேடிக்கொள்கிறேன்" என்றார் பூபதி.

ஒருமாத காலத்திற்குப்பின்னர் அவளை சென்னை கிளை அலுவலகத்திற்கு மாற்றித் தருவதாக மானேஜிங் டைரக்டர் ஒப்புக் கொண்டார். ஆனால் அந்த ஒரு மாதத்திற்குள் பூபதிக்கு சட்டென்று வேலைகிடைத்ததா? அவரது வயது அவருக்கு பெருத்த இடைஞ்சலாக இருந்தது. கண்டினால் ரத்தம் தெறிக்கும் இளசுகளுக்கே வேலை கிடைக்காது திண்டாடும் போது... வயதால் வற்றிக் காய்ந்து கொண்டு இருக்கும் அவருக்கு சட்டென்று வேலை கிடைத்துவிடுமா? பம்பாயில் வேலை வாய்ப்புகள் அதிகம்...அங்கேயே தக்க வேலை கிடைக்காது திண்டாடியவருக்கு பட்டணத்தில் சுலபமாக

Vennila

கிடைக்கவா போகிறது... தேடி ஏமாந்து அலுத்துப் போய்... கையிலிருந்த கடைசி காசையும் லாட்ஜிற்கு செலவிட்டுவிட்டு தவிப்போடு நின்ற போதுதான் அந்த துணிக்கடையில் விற்பனை பகுதியில் விற்பனையாளர் வேலை கிடைத்தது.

அவரது படிப்பு-முந்திய அனுபவம்...முதலிய தகுதிகளுக்கு ஒவ்வாத வேலை. மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம். அதை ஏற்பதா? தாராவுக்குக் கடிதம் எழுதிக் கேட்டபோது... உடனடியாக அந்த வேலையை ஒப்புக் கொள்ளும்படி புத்தி சொல்லி பதில் போட்டு விட்டிருந்தாள்.

தாரா பார்த்து வந்த அந்த கணக்கர் வேலையில் அவள் அந்த பகுதி தலைவருக்கு அடுத்தபடியாக இருந்தாள். நீண்டகால உழைப்பு முதலியவற்றின் பலனாக அவளுக்கு கம்பெனி ஆயிரத்து முன்னூறு ரூபாய் சம்பளமாகத் தந்து உதவியது. மற்ற சலுகைகள் வேறு கிடைத்தன. பூபதிக்கு தமது இயலாமையை எண்ணி வெட்கமாகத்தான் இருந்தது. ஆனால் தாரா அதைப் பொருட்படுத்தவேயில்லை.

"கணவன்-மனைவி என்ற நமக்குள் சம்பளத்தைப் பற்றி ஏன் இந்த குழப்பம். பம்பாயில் வேலை பார்க்கும் பொழுது நீங்கள் என்னைவிட அதிகம் சம்பாதித்துக் கொண்டிருந்தீர்கள்-அப்போது நான் வெட்கப்பட்டேனா?" என்று மடக்கிவிட்டாள்.

சென்னைக்கு வந்ததுமே தாரா...ஒரு சில நாட்களில் குடியிருக்க அந்த அவுட்ஹவுசை தேடிப் பிடித்து ஒழுங்கு செய்து முன் போல ஒரு அமைதியான வாழ்க்கையை அவருக்கு அமைத்துத் தந்துவிட்டாள்.

தாராவுக்கு முகராசி ரொம்ப அதிகம்.

பள்ளிக்கூடத்தில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டிருக்கும் இந்த நாளில் அருகிலிருந்ததொரு பள்ளியில் மகனுக்கு எப்படியோ இடம் பிடித்து விட்டாள்.



சும்மா சொல்லக் கூடாது, தாராவைப் போன்றதொரு மனைவி இவருக்குக் கிட்டியது... எத்தனை ஒரு பாக்கியம்...அவரது சிந்தனையை துண்டிப்பவர்போல... கடையின் வேறு ஒரு ஊழியர் பீங்கான் அருகேவந்து ஆங்காரம்-ஓங்காரத்துடன் வாய் கொப்பளித்து முகம் கழுவத் தொடங்கியதும் பூபதி நகர்ந்து கொண்டார்.

அந்தக் கடையில் வேலைக்கு அமர்ந்த நாளிலிருந்து அவர் பின்னால் சுவர் ஓரமாகக் கிடந்த ஒரு மேஜை அருகேதான் சாப்பிட உட்காருவது வழக்கம்.

ஜோல்னா பையிலிருந்த டிபன் டப்பாவை எடுத்து மேஜைமேல் வைத்து மெல்லத் திறந்தார்.

குப்பென்று பிரியாணியின் வாசனை—முகத்தைத் தாக்க... நாவில் நீர் புரண்டது. அத்துடன் உள்ளத்தில் விருக்கென்று அந்த நினைவுகளும் கூடப் புரண்டெழுந்தது. அவருக்கும் வேலைக்கும் அத்தனை பொருத்தம் இருக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆரம்ப காலத்தில் ஆமதாபாத்தில் ஆறு மாதங்கள்-சூரத்தில் ஓராண்டு காலம்...கல்கத்தாவில் இரண்டு வருஷம்... என்று தங்கி கிடைத்த வேலைகள் எதிலும் ஒட்டாது... நாடோடியாகத் திரிந்து கொண்டிருந்தார். மனமும்-உடலும்...உளைந்து போய்த்தான் முடிவில் அவர் பம்பாய் நகருக்கு ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொண்டு புறப்பட்டு வந்திருந்தார். கையிலிருந்த சொற்ப தொகையில் ஓட்டலில் தங்கி வேலை தேடுவது சாத்யப் படாது என்று நேரே சாந்தா குருஸ் கிழக்குப் பகுதியில் வசித்த தமது ஒன்றுவிட்ட, மாமனைத் தேடிக்கொண்டு வந்தார். பல ஆண்டுகளுக்கு முன் அந்த பகுதிக்கு வந்த நினைப்பு... அந்தக் குடியிருப்புப் பகுதி ரெயில் நிலையத்துக்கு அருகாமையில் இருப்பதாக நினைவு-முதல் நாள் மழையில் நனைந்து விட்டதால் லேசான தலைவலியும் தொண்டை கரகரப்புமாக... உடல் அசதியில் தள்ளாட

Vennila

அவர் மெல்ல நடந்து பல மாடிக் கட்டிடமான அந்த குடியிருப்பு பகுதியைக் கண்டு பிடித்து விட்டார். மூன்றாவது மாடியில்...பதினாறாம் எண்ணில் வசித்த மாமன் வீட்டு வாயிற் கதவு முன் நின்றுகொண்டு மெல்ல அழைப்பு மணியை அழுத்தினார்.

கதவு லேசாகத் திறந்துகொண்டது—ஆனால் இணைப்பு சங்கிலி இடுக்கு வழியே ஒரு இளம் பெண் எட்டிப்பார்த்தாள். கோன் ஹை (யார் அது) என்று இந்தியில் மெல்லிய குரலில் கேட்டாள்.

மாமாவின் பேத்திபோலும் என எண்ணியபடி... 'நான் திரு. வாகீசன் அவர்களுக்கு சொந்தம்-அவரைப் பார்க்க வந்திருக்கிறேன்'' என்றார் சுத்தமான தமிழில்.

''யாரும்மா அது'' என்று பதில் உள்ளேயிருந்து ஒரு ஆணின் குரலாக தமிழில் ஒலித்தது.

கதவில் பொருத்தப்பட்டிருந்த அந்தச் சங்கிலியை நீக்கி அவரை உள்ளே அனுமதித்தாள் அந்தப் பெண்.

ஒரே ஒரு அறை கொண்டதொரு குடியிருப்பு அது

''டீ கொண்டுவந்து கொடும்மா—'' என்று அவளுக்குக் கட்டளை இட்டுவிட்டு வீட்டின் பெரியவர் அவரை உட்காரச் சொல்லி உபசரித்து ஒரு மோடாவை அருகே நகர்த்திப் போட்டார்...

''தாங்களும் தமிழர்கள்தான்-இரண்டு தலைமுறையாக இங்கேயே தங்கி வாழ்கிறோம்...திருநெல்வேலி பக்கம் இருந்து என் பாட்டன் வந்தார். ஊரைப் போய் பார்க்க ஆசை. ஆனால் கொடுப்பினை இல்லை. நீங்க எந்த ஊர்?'' என்று அன்புடன் விசாரித்தார் அவர். பூபதி..தேநீர் கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு வாய் பருகுவதற்குள் வயிற்று குமட்டலுடன் எழுந்து நின்றார்.



''உடம்புக்கு என்ன?'' என்று பதறிய அந்தப் பெரியவர் தாங்கலாக அவரைப் பிடித்துக் கொண்டபோது...வியப்புடன் கூவிவிட்டார்.

''தாரா. இவருக்கு நல்ல காய்ச்சல் அம்மா...நாடா கட்டிலை நிமிர்த்திப் போட்டு—படுக்கையை ஒழுங்கு செய்-பிறகு டாக்டரை அழைச்சுக் காட்டலாம்'' முன் பின் தெரியாத அந்தப் பெரியவரும்-அந்த இளம் பெண்ணும் அவரிடம் காட்டிய பாசமும் பரிவும்... கொஞ்ச நஞ்சமல்ல...காய்ச்சலுடன் அவர்களது கவனிப்பில் சில நாட்கள் அங்கு படுத்துக் கிடந்தபோதுதான் அவர்களைப்பற்றிய எல்லா விவரமும் தெரிந்து கொண்டார்.

அவரது ஒன்று விட்ட மாமா வாகீசன் அந்த குடியிருப்பை காலி செய்து கொண்டு டெல்லியிலிருந்த மகனோடு வசிக்க சென்று இரண்டு ஆண்டுக்கு மேலாகி விட்டது என்றும் அதற்குப் பின்னர் தாராவும் அவளது தந்தையும் அங்கே குடியேறினார்கள் என்றும் தெரிந்து கொண்டார். தாரா தனது பத்தாவது வயதில் தாயை இழந்து விட்டாள் என்றும்...பி ஏ. பட்டத்திற்கு பின்னர் தட்டெழுத்து-சுருக்கெழுத்து கற்றுக்கொண்டு ஒரு நல்ல நிறுவனத்தில் கணக்கராக வேலை பார்க்கிறாள் என்றும் -பெரியவர் தாம் செய்த வேலையினின்று ஓய்வடைந்து தற்சமயம் பகுதி வேலை ஒன்றில் ஈடுபட்டு வாழ்கிறார் என்றும் புரிந்து கொண்டார்.

ஒரு சில நாட்களில் அவரும் அந்தக் குடும்பத்தாரும் மிகவும் நெருக்கமான நண்பர்களாகி விட்டனர்.

உடம்பு சிறிது குணமானதும் - அடுத்ததாக இருந்த குடியிருப்பு பகுதியில்...ஒரு சிறிய அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வாழத் தொடங்கினார் பூபதி.

பம்பாய் வாழ்க்கையை அவர் தொடங்கிய இரண்டாவது மாதத்தில்தான்...அந்த துயர சம்பவம் நடந்தது-

Vennila

பகுதி வேலைக்குப் போய் திரும்பி வந்த பெரியவர்... மயக்கமாக நாற்காலிமீது சாய்ந்தவர் எழுந்திருக்கவில்லை.

"அப்பாவுக்கு என்னவோ ரொம்ப மயக்கம் வந்திருக்கு...வந்து உதவி செய்யுங்கோ" என பதறிக்கொண்டு ஓடிவந்த தாராவின் பின்னால் விரைந்தார் பூபதி.

உதவிகளுக்கு அப்பால் போய்விட்டார் பெரியவர் என்ற உண்மை அவருக்கு பெருத்த அதிர்ச்சியாக இருந்தது.

தன்னந்தனியான இளம் பெண் தாரா—அழகு எனும் ஆபத்துடன் எத்தனை காலம் அங்கே தனியே வசிக்க இயலும்?

"கூட துணைக்கு ஒரு நண்பன்போல நான் இருப்பேன் கவலைப்படாதே" என்று உறுதி சொன்னார் பூபதி.

ஆனால் அவள் ஒத்துக்கொள்ளவில்லை.

"சுற்றிலும் உள்ளவர்களின் கண்களில் அந்த நட்பு அசிங்கமாகத் தெரியுமே? வெறும் துணையாக இருந்து உதவ முன்வரும் அவர் அவளது வாழ்க்கைத் துணையாக ஏன் மாறக்கூடாது?" துணிவாகக் கேட்டு விட்டாள்.

"உனக்கும் எனக்கும் உள்ள வயது வித்தியாசத்தை நினைத்துப் பார்த்தியா?"

எத்தனை சொல்லியும் அவள் ஒரே உறுதியாக இருந்தாள். அவளுக்கு உதவ அவர் முன்வந்தால் அவளது வாழ்க்கை துணைவராக அமைந்து உதவினால்தான் ஏற்க முடியும்...என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டாள்.

"இதனால் பின்னால் நீ வருந்தும்படி ஏற்பட்டால்?" சந்தேகத்துடன் கேட்டார்.

"நான் எடுக்கும் எந்த முடிவிற்கும் நான் வருத்தப் பட்டதில்லை-இந்த முடிவு என்னுடையது...இதனு



டைய பலாபலன்கள் என்னைச் சேர்ந்தது யாரையும் நான் பிற்காலத்தில் இதற்காக நொந்து கொள்ளமாட்டேன் போதுமா" லேசாகச் சிரித்தாள்.

அருகிலிருந்ததொரு கோவிலில் அவர்களது திருமணம் மிகவும் எளிய முறையில் நடந்தேறியது.

திருமண விருந்திற்குகூட வேலை செய்த சில தோழர்களை மட்டுமே அவர் அழைத்திருந்தார்.

அந்த சிறு வீட்டில்தான் விருந்து—மணப் பெண் தான் சமைத்தாள். அவள் தயாரித்த பிரியாணியையும் குர்மாவையும் எல்லோரும் சுவைத்துச் சாப்பிட்டனர்.

பட்டுப் பூச்சியின் சிறகுகள் படபடத்தது போன்ற இமைகளுக்கு பின்னால் ஒளிவிட்ட கண்களும்—கூர் மூக்கும்... கோதுமை வண்ணமுமாக பொம்மைபோல... சிவப்பு வண்ண சந்தேரி சேலையில் மணப்பெண்ணாக அவள் எத்தனை அழகாக இருந்தாள். ஏன்? இன்னமும் அவளது அழகு குன்றவே இல்லையே? தோற்றத்தில் மட்டுமா அவள் அழகி...குணத்தில் எத்தனை அழகானவள், சுவையாக சமைத்துப் போட்டு பரிவுடன் கவனித்துக்கொண்டு... எளியதான அவர்களது வாழ்க்கையை... எத்தனை இனிமையாக்கி விட்டிருக்கிறாள்? தாரா சமைத்துக் கட்டிக் கொடுத்தனுப்பியிருந்த பிரியாணியின் சுவையில் நாக்கு ஊறியது...அவளது நினைவில் கண்கள் பனித்தன.

உணவை முடித்துக்கொண்டு டிபன் டப்பாவைக் கழுவி துடைத்து பையில் போட்டுக் கொண்டு பகல் பொழுது வேலையை கவனிக்கச் சென்றார். சென்னைக்கு வந்து வேலையில் சேர்ந்த பின்னர்... அவர் தாராவுக்கு மாலை வீட்டுக்குத் திரும்பும் போது ஒரு முழம் மல்லிகைப் பூவை வாங்கிச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். ஆபரணங்கள்—பட்டாடை



Vennila

கள்... முதலியவற்றை வாங்கி பரிசளிக்க இயலாவிட்டாலும் பாசமிக்க தம் மனைவிக்கு ஒரு முழம் பூவையாவது வாங்கித் தரக்கூடாதா...? என்பது அவர் எண்ணம்.

அன்று மாலை அவர் பாதை ஓரத்தில் உட்கார்ந்திருந்த தொரு பூக்காரியிடம் ஒரு முழம் மல்லிகைப்பூவை வாங்கித் தமது பைக்குள் போட்டுக் கொண்டு சில்லறையைத் தந்து விட்டு நிமிர்ந்தவர் திடுக்கிட்டுப் போனார். 'சார்! உங்களைத் தானே?' என்று தம்மை நோக்கி வந்த அந்த வயதான மனிதனுடன் பேசத்துணிவின்றி-சட்டென்று கூட்டத்தில் கரைந்து மெல்ல நகர்ந்த பஸ்சில் தாவி ஏறிக் கொண்டு விட்டார். வெகு நேரம் அவரது மார்பு படபடவென்று துடித்தது. உடம்பு முழுவதும் சருகுபோல உணர்ச்சி வசத்தில் ஆடுவதை உணர்ந்தார்.

அவர் சந்திக்க விரும்பாத மனிதரை அவர் இதுவரை இரண்டு முறைகள் சந்தித்து விட்டாரே...ஏன் உலகம் இவ்வளவு சிறியதாகவா இருக்கிறது? பலவும் எண்ணி பட படக்கும் நெஞ்சோடு வண்டியின் கம்பியில் தொங்கிய வாரைப் பிடித்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக நின்றார். அப்படியே அந்த கூட்டத்தில்...முகம்-பெயர்-என்று இல்லாத ஒரு மனிதனாக அவர்...வாழ முடியாதா...? மனம் ஏங்கி இரைஞ்சியது.

# 18

அன்று பகல் உணவு நேரத்தின் போது வசுந்தரா தன் மகளுக்காகக் காத்திருந்தாள்.

முதல் நாள் போல அன்றும் மகள் காண்டீனில் சாப்பிடப் போய்விட்டாளா?

ஆகாரத்திற்கு முன்னர் வசுந்தரா தண்ணீரைப் பருகும் வழக்கமுடையவள் அல்ல.

வாழ்க்கையில் அவள் பல கட்டுப்பாடுகளை அனுசரித்துக் கொண்டு ஒரு சிறு வட்டத்திற்குள் வாழ முயன்று கொண்டிருந்தவள். மகள் சம்யுக்தாவால் அவளது பழக்க—வழக்கமெல்லாம் மெல்ல சிதறிக் கொண்டு போவதை உணர்ந்தாள்.

தோளுக்கு மிஞ்சிக்கொண்டு போய்விட்ட மகளை எப்படி தன் வழிக்கு இனி கொண்டு வர முடியும் என்ற தவிப்பில் அவளது வாய் உலர்ந்து போயிற்று...மேஜை மீது தம்ளரில் பையன் நிறைத்து வைத்துவிட்டுப் போயிருந்த நீரைக் கொஞ்சம் எடுத்துப் பருகினாள்.

கதவை லேசாகத் தட்டிவிட்டு தள்ளித் திறந்து கொண்டு வந்த மகள், "மன்னிச்சுக்கோங்க அம்மா... பத்து நிமிஷம் லேட்டாகி விட்டது" என்றபடி உள்ளடங்கிய குளியலறைக்குள் மறைந்து கொண்டாள். கை—கால்— முகத்தைக்—கழுவி தன் தோற்றத்தை சீராக்கிக்கொண்டு வெளிப்பட்ட அவள், அம்மாவுக்கு அருகில் சாப்பிட வந்து உட்காருவதற்குள் இன்னும் ஒரு பத்து நிமிடகாலம் ஓடிச்சென்று விட்டது. காலத்

Vennila

தைக் கணக்கிட்டு செலவழிக்கப் பழக்கப்பட்டிருந்த வசந்தராவுக்கு தாளமுடியாத எரிச்சல்-பற்களை கடித்துக் கொண்டாள்.

மவுனமாக சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்த தாயால் அதற்கு மேல் பேசாது இருக்க முடியவில்லை.

"இன்றைக்கும் நீ காண்டீனிலியே சாப்பிட உட்கார்ந்துட்டியோன்னு நினைச்சேன்...!"

"டிஸ்பாச் செக்ஷனில் ஒருதொழிலாளியின் தொடையில் இரும்பு தகடு குத்திவிட்டது. ரத்தம் கொடகொட வென்று கொட்ட மனிதன் வலியில் துடிக்கப் போய் விட்டார்."

"இது மாதிரியான சமயங்களில் என்ன செய்ய வேணும் என்று முதல்உதவி பகுதியில் உள்ளவங்களுக்கு தெரியுமே, நம் தொழிற்சாலையில் ஒரு மருத்துவ அறை இருக்கிறதே...சிறு காயங்களுக்கு உடனடியா சிகிச்சை செய்ய தொழிற்சாலை இயங்கும் நேரம் வரை பணி செய்ய ஒரு மருத்துவரும், நர்ஸ்சும் இருக்கிறாங்களே..."

"உடனடியா அவரை மருத்துவ அறைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்து விட்டு அங்கே அவருக்கு தாமதமின்றி சிகிச்சை தரப்படுகிறதான்னு பார்த்துட்டு வந்தேன்...!"

"இதெல்லாம் உன் வேலையில்லை—நீ ரொம்ப அதிகப்பிரசங்கித்தனமாக நடக்கிறே?"

"நீங்க சொல்றது தவறு அம்மா. காயம்பட்டு வலியில் துடிக்கிற ஒரு தொழிலாழியை பாராது போல நழுவி விடுவது சரியா? போன வாரம் வாயிற்படி இடித்து உங்க வலது கால் கட்டை விரல் நகம் கொஞ்சம் பெயர்த்து ரத்தம் கசிந்தப்போ வலியில் எப்படி துடிச்சுப் போயிட்டீங்க...உடனேயே டாக்டரைக்கூப்பிட்டேனா இல்லையா? நோய்-துன்பம் இவைகளுக்கு பணக்காரர்-ஏழை என்கிற ஏற்றத்தாழ்வு கிடையாதே!"



வசுந்தராவின் முகம் செவேலென்று மாறியது. அவளது நெஞ்சுத் துடிப்பு வேகமாகியது.

கட்டின பசு போல வீட்டில் வளர்ந்துகொண்டிருந்த இந்தப் பெண் கொஞ்ச நாட்களில் படுபொல்லாதவளாக மாறிக்கொண்டு வருகிறாளே? நியாயம்-அநியாயம், ஏழை, பணக்காரர், இருக்கிறவன், இல்லாதவன் என்று ரொம்பவே பேச ஆரம்பித்து விட்டிருக்கிறாளே?

ஒரு நாள் இல்லாவிடில் ஒரு நாள் இவள் தன் தந்தையைப் பற்றிய விவரத்தைக் கேட்டு சண்டித்தனம் செய்யப் போகிறாள்-அப்போது?

மூச்சே நின்றுவிடும் போன்றதொரு திகில் நெஞ்சைக் கவ்வ-தன் ஆசனத்தில் மெல்ல சரிந்து கொண்டாள் வசுந்தரா.

அலுவலகப் பையன் காலி தட்டுகளையும்-டிபன் செட்டையும் கழுவ எடுத்துக்கொண்டு வெளியேறியதும் மகள் புன்னகையுடன் தாயைப் பார்த்தாள்.

"இன்னிக்கு நான் காண்டீனில் சாப்பிட்டிருக்க மாட்டேன். காலையில் புறப்படுமுன் குப்புசாமியிடம் பருப்பு உருண்டை மோர்க் குழம்பு செய்தனுப்பச் சொல்லியிருந்தேன்...!"

கோபத்துடன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள் வசுந்தரா.

அன்றாடம் குப்புசாமி என்ன சமைக்க வேண்டும் என்று உத்திரவு போடுகிறவள் அவள்! அதில்கூட மகள் தலையிட ஆரம்பித்துவிட்டாளே? மாலை வீடு திரும்பியதும் அவள் குப்புசாமியைக் கூப்பிட்டு கண்டிக்க முடியும். ஆனால் பல காலமாக வேலை செய்து முதிர்ந்து பழுத்து விட்ட கிழவர் அவர். ஆள் லேசுப்பட்டவர்

Vennila

அல்ல. பயப்படுவது போல பாசாங்கு செய்வார். ரத்னாவும் எடுபிடியும் அருகிலிருக்கும்போது துணிவுடன் திருப்பிக் கேட்டுவிடுவார்.

"நான் யாருடைய உத்திரவுக்குக் கட்டுப்படணும்? நீங்க சொல்றதைக் கேட்டு நடக்கணுமா...பாப்பா சொல்றதைக் கேட்டு நடக்கணுமா?" மனிதன் அஞ்சாமல் கேட்டு அவளை அசர வைத்து விடுவார். இந்தச் சில்லறைச் சங்கடங்களை காணாதுபோல அவள் இருந்து விடுவதுதான் நல்லது.

வாய் வரை பொங்கிக்கொண்டு வந்த கோபத்தை விழுங்கினாள். அவள் ஏதோ சொல்ல முற்படுமுன் கதவைத்தட்டி மெல்ல திறந்து கொண்டு மூச்சுத் திணற வந்து நின்றார் செயலாளர் சாம்பசிவம்.

"போன மாதம் நாம் வாங்கிப் போட்ட ஃ காட்டேஜில் இயங்கும் யந்திரம் திடீர்னு பழுதாகி விட்டது..!"

சில்லென்ற உணர்வு வயிற்றைப் பிடிக்க வசுந்தரா இருக்கையை விட்டு எழுந்தாள்.

சில லட்சங்களை விழுங்கிவிட்டு வந்து உட்கார்ந்திருக்கும் புது யந்திரம். அதற்குள் பழுதாகிவிட்டதா?

வீட்டிலாகட்டும்,தொழிற்சாலையிலாகட்டும் யாரும் அவளைப் போல சாமான்களையும் யந்திரங்களையும் பத்திரமாகக் கையாள்வதில்லை. புத்தம் புது கலர் டெலிவிஷனை கண்டபடி முடுக்கி வாங்கிய நாலாவது நாளே பழுதடையச் செய்து விட்டாள் ரத்னா. முப்பது வருஷமாக அப்பாவின் ஞாபகமாக அவள் வைத்திருக்கும் சிறிய டிரான்ஸிஸ்டர் ரேடியோ இன்னமும் பழுதின்றி இயங்கிக் கொண்டிருக்கிறது. அவரவர் பொருள் என்று இல்லாவிட்டால் சிலரிடம் எச்சரிக்கை உணர்வே இருக்காது.



பண வசதி உடையவள்தான் வசுந்தரா. ஆனால் வீண் செலவு என்று ஒன்று வந்துவிட்டால் ரொம்பவே பதைத்துப் போய் விடுவாள்.

"அதை இயக்குகிறவர் ரொம்ப திறமைசாலின்னு சொன்னீங்களே?" காரமான குரலில் அதட்டினாள்.

கழுத்தில் வழிந்த வியர்வையைக் கையால் துடைத்து விட்டுக்கொண்டார் செயலாளர்.

சித்தமுன்னே நல்லா இருந்த கடவுளின் படைப்பான மனித காயமே அடுத்த கணம் கெட்டுவிடுகிறது. மனிதன் கண்டுபிடித்த யந்திரங்களின் தன்மையைப் பற்றி நிச்சயமா என்ன சொல்ல முடியும்மா?

"ஒரு சின்ன ரிப்பேர் என்று நினைக்கிறேன். பழுது பார்ப்பவர் வந்து கவனிக்கத் தொடங்கிவிட்டார்... நீங்களும் வந்தாக்க..!"

"இதோ வரேன்!" என்று பரபரப்புடன் தோள் பையை எடுத்துக்கொண்டு அவள் திரும்பியபோது பகல்நேர வேலை ஆரம்பமாகி விட்டதின் அறிவிப்பு மணி அழுத்தமாக ஒலித்தது.

அப்பொழுதுதான் அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. அன்று பகல் வேளை முழுவதும் அவள் நுங்கம்பாக்கத்து அலுவலகத்தில் இருக்க வேண்டியவள். அங்கு சில காரியங்களை கவனிக்க வேண்டுமே? மகள் பக்கம் விருக்கென்று திரும்பினாள்.

கைவிரல் நகத்தைக் கடித்துக்கொண்டு ஃபைல்களை புரட்டியபடி மகள் பகல் பொழுதை அங்கே கழிக்கத் தேவையில்லை...

முதல் நாள் தட்டெழுத்தரிடம் வசுந்தரா தயாரிக்கச் சொல்லி கொடுத்திருந்த கடிதங்களைப்படித்து அந்தந்த

Vennila

ஃபைல்களில் ஒழுங்காக வைக்கட்டும். 'இவ்வளவு பேசுகிறவளுக்கு இதைக்கூட சொல்லித்தரணுமா' என்று வெருண்டபடி மகளை ஏவினாள்.

"நீ இன்னிக்கு நுங்கம்பாக்கத்து அலுவலகத்துக்குப் போ—அங்கே கொஞ்ச வேலை கவனிக்க இருக்கு... தலைமை கணக்கர் எல்லாத்தையும் சொல்வார். மாலை அப்படியே நேரே வீட்டுக்குப் போய்விடு—நான் இங்கிருந்து வருவேன்..!" கூறிவிட்டு மேலே பேச நேரமின்றி வேகமாக அறையை விட்டு கிளம்பிவிட்டாள்.

சந்தானத்தின் உதவி தேவை இல்லை என்று கூறிவிட்டு சம்யுக்தா தானே காரை ஓட்டிக்கொண்டு புறப்பட்டாள். நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்திருந்த அவர்களது அலுவலகத்திற்கு தனியாக அவள் செல்வது இதுவே முதல் தடவை.

தொழிற்சாலையைப்போன்று அது பரந்து விரிந்து கிடக்கும் நிறுவனம் அல்ல. போக்குவரத்து நெரிசலான பகுதியில் அமைந்திருந்த அந்த அலுவலகத்தின் முன் பக்கத்தில் தோட்டம் கிடையாது. கார்கள் நிறுத்த வென்று ஒதுக்கப்பட்ட கீழ் பகுதியில் சுவர் ஓரமாக பூந்தொட்டிகளை வைத்து கொஞ்சம் கண்ணுக்கு குளிர்ச்சி செய்யப்பட்டிருந்தது.

சம்யுக்தாவுக்கு தொழிற்சாலை மீது ஏற்பட்டிருந்த தொரு சலிப்பு அந்த அலுவலகத்தின்மீது ஏற்படவில்லை. மிக நெருக்கமான இடத்தில் பல தட்டெழுத்து யந்திரங்கள் ஏகப்பட்ட இரைச்சலுடன் இயங்குவதைக் கேட்டு அவள் அலுப்படைந்தாள்.

தொழிற்சாலை போன்று அலுவலகத்து பிரத்யேக அறை பெரியதாக அமைந்திருக்கவில்லை.

ஒரு சிறு அறைக்குள்ளே அடைக்கப்பட்டு விட்டது போன்ற இறுக்க உணர்வில் அவள் தலைமைக்



கணக்கர் சொன்னவற்றை கேட்டு புரிந்து கொள்ள முயன்றபடி நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தாள். அம்மா தனது அலுவலக ஊழியர்களை நிற்க வைத்துத் தான் பேசுவது வழக்கம். செயலாளரே அவள் சொன்னால்தான் உட்கார்ந்து பேச முடியும். அப்படி ஒரு அல்லிதர்பார் சம்யுக்தாவுக்கு அந்த முறை கொஞ்சமும் பிடிக்கவேயில்லை.

வயதான தலைமைக் கணக்கர்...காதோரத்தில் வழிந்த வியர்வையைக் கைகுட்டையால் துடைத்துக் கொண்டு முதுகை வளைத்தபடி அவள் முன்னால் நிற்பதை விரும்பாது "உட்காருங்க சார்!" என்று உபசரித்தாள்.

அறையின் குளிர் சாதனம் அன்று வேலை செய்யவில்லை. தலைக்கு மேலிருந்த கூரையைத் தாக்கிய சூரியன் வெம்மை அத்தனையையும் மின் விசிறி வாரி அனலாக அறைக்குள்ளே வீசிக்கொண்டிருந்தது.

'உஸ்!' என்ற பெருமூச்சுடன் கணக்கர் அவளுக்கு எல்லாவற்றையும் விவரித்துக் கொண்டிருந்தார்.

படித்த நாட்களிலிருந்து அவளுக்கு கணக்கு என்பது ஒத்துக் கொள்ளாத சங்கதி. பள்ளிக்கூட கணக்குகளை விட இந்தக் கம்பெனிக் கணக்குகள் அவள் மண்டையைக் குழப்பியது.

'பணம்-பதவி இவைகளை சும்மா அனுபவிக்க முடியாது-அத்துடன் கூடிப் பின்னிப் புதைந்துகொண்டிருக்கும் பல தொல்லைகளையும் சேர்த்துதான் அனுபவிக்கவேண்டும்... அவைகளில் இந்தக் கணக்கு வழக்கு ஒன்று போலும்!' எண்ணியபடி பெருமூச்செறிந்தாள்.

"டைப் செய்துள்ள கடிதங்களையும் அந்தந்த ஃபைல்களையும் இங்கே வைத்துவிட்டு நீங்க போய் மற்றதை கவனிக்கலாம்!" என்றாள் இரக்கத்துடன்.

Vennila

மீதி ஃபைல்களை வாரி மார்புடன் அணைத்துக் கொண்டு அவர் எழுந்திருந்தார்.

"அம்மாவுக்கு சாப்பிட காப்பி அனுப்பி வைக்கட்டுமா?" மிகவும் பணிவாக வினவினார்.

அந்த அலுவலகத்திற்குத் தனியாகக் காண்டீன் என்பது கிடையாது.

பின்பக்கத்து அறை ஒன்றில் மின்விசை அடுப்பில் அலுவலகப் பையன்தான் அத்தனை பேருக்கும் திடீர் காப்பி தயாரித்து சிறிய கோப்பைகளில் நிறைத்துக் கொண்டு வந்து விநியோகிப்பான். வசுந்தரா அதைக் கையால் கூடத் தொடமாட்டாள். ஆனால் சம்யுக்தா பையனின் தயாரிப்பை வெறுக்கவில்லை. அவளுக்கு பகல் உணவு இன்னமும் நெஞ்சுவரை நின்று கொண்டிருந்தது. காப்பி அப்போது தேவைப்படவில்லை...

"எனக்கு எதுவும் தேவையில்லை. என்னை யாரும் தொந்திரவு செய்யவேண்டாம்னு சொல்லிட்டு போங்க போதும்" என்றாள்.

காலையில் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்வையிட்டு வந்த களைப்பு; தலைமைக் கணக்கர் பொரிந்து தள்ளிய கணக்குகளின் குழப்பம்; கடிதங்களைப் படித்து... அந்தந்த ஃபைல்களில் வைக்க எடுத்துக்கொண்ட நேரம்... எல்லாம் அவளை அலுப்பில் ஆழ்த்தின. கண்களை மூடிக்கொண்டு நிம்மதியாக சில நிமிடங்கள் ஓய்வாக இருக்க இருக்கையில் சாய்ந்தாள்.

கடபுடா என்றதொரு சத்தம் அவளை திடுக்குறச் செய்தது. சற்று முன் நெருப்பை வீசிய அறைக்குள் ஜன்னல் திரைகளைத் தள்ளிக்கொண்டு சில்லென்ற காற்று வீசி... மேசை மேலிருந்த காகிதங்களைப் பறக்கச் செய்தது



எழுந்து அவைகளை பொறுக்கி உரிய இடத்தில் கனக் கண்ணாடி அடியில் வைத்துவிட்டு-ஜன்னல் வழியே வெளியே எட்டிப்பார்த்தாள். வானம் இருண்டு கொண்டு பளீரென்ற மின்னலும் இடியுமாக ஆரம்பித்து ஒரு சில வினாடியில் சோவென்ற இரைச்சலுடன் மழை கொட்டத் தொடங்கிவிட்டது.

சிறிது நேரத்தில் அலுவலக மாலை வேளை வேலை முடிவடைந்துவிட்ட அறிகுறியாக மணியோசை அழுத்தமாக ஒலிக்கத் தொடங்கியது.

"மழை நின்றதும் போகலாமே!" என்று கணக்கர் மெல்லிய குரலில் முனகியதை கேட்காதது போல அவள் தன் தோள் பையுடன் லிஃப்டிற்குள் நுழைந்துவிட்டாள். மழைக்கு பயந்து அத்தனை அலுவலக ஊழியர்களும் சிலநிமிடங்களில் அங்கிருந்து மாயமாகிவிட்டனர்.

கீழ் தளத்தில் வந்து லிஃப்டிலிருந்து இறங்கியவள், கார் நிறுத்தத்தை நோக்கி நடக்கத் திரும்பிய போது... ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள். கையில் பெட்டியுடன் வெளிர் நீல சபாரி ஸூட்டில் களைத்த முகத்துடன் அருண் நின்று கொண்டிருந்தான்.

அவள் கேட்குமுன் அவன் பதிலளித்து விட்டான்.

"வாரத்திற்கு இருமுறை பகல் பொழுது எனக்கு இங்கே வேலை என்று உத்திரவாகியிருக்கிறது."

"மழை நிற்கும் வரை இங்கே காத்துக் கொண்டிருக்க போகிறீங்களா? வாங்க, உங்களைக் காரில் கொண்டுவிடுகிறேன்" அவள் அழைத்தபோது அவன் தயங்கினான்.

"வேண்டாம் எங்கள் வீடு அருகிலேதான் இருக்கு" என்றான்.

Vennila

"அப்படியா மகிழ்ச்சி. நான் உங்களுக்காக காரை நெடுந்தூரம் ஓட்டத் தேவையில்லை...ஏறிக்கோங்கோ" காரின் முன் பக்கத்து கதவை திறந்துவிட்டு உபசரித்தாள்.

காக்கிச்சட்டை காவலாளியின் முகத்தை அச்சத்துடன் பார்த்தபடி அரை மனதாக அவன் ஓட்டுனருக்கு அடுத்தான இருக்கையில் முன்பக்கம் ஏறி அமர்ந்து கொண்டான்.

காரை வேகமாக அவள் வெளியே செலுத்தி சாலைக்குள் புகுந்தாள்.

"இந்தப் பக்கம் கொஞ்ச தூரத்தில் வரும் தெருவின் முடிவில் உள்ளதொரு குறுகிய சந்தில்தான் நாங்கள் வசிக்கிறோம்... தெருமுனையில் நிறுத்திவிட்டால் போதும்" என்றான் அவன்.

"எனக்கு வண்டியை நல்லாவே ஓட்டத் தெரியும்–கவலைப்படாதீங்க!" என்று கூறிவிட்டு அவள் சிரித்தாள்.

"எங்கள் தெரு ரொம்ப சேரும் சகதியுமா இருக்கும்..." மெல்லிய குரலில் முணகினான்.

"அதனால் என்ன மழை பொழிந்தால் தெரு அப்படித்தான் காட்சி தரும்... ஆமாம் நீங்கள் கதைகள் படிப்பதுண்டோ...?"

திகைப்புடன் அவள் பக்கம் மெல்ல திரும்பிப் பார்த்தான். இதென்ன கேள்வி?' மனம் வியந்தது.

"முன்பெல்லாம் அருகிலிருக்கும் நூல் நிலையத்திலிருந்து புத்தகங்கள் எடுத்து வந்து படிப்பேன்–இப்போது கதைகள் படிக்க நேரமில்லை!"

நான் தினசரி படுக்கப் போகுமுன் கட்டாயம் ஏதாவது கதைப் புத்தகத்தை கொஞ்ச நேரம் திருப்பாதிருப்ப



தில்லை...சில கதைகளில் மழையில் நனைந்து சங்கடப்படும் கதாநாயகிக்கு–காரை ஓட்டிச் செல்லும் நாயகன் லிஃப்ட் தந்து உதவுகிறதாகப் படித்திருக்கிறேன்" களுக்கென்று அவள் சிரித்தாள்.

அருணின் நெஞ்சு படபடத்தது. மவுனமாகத் தெருவைப் பார்த்தான்.

"இப்போது நிலைமை நேர்மாறாக இருக்கிறதுன்னு தானே நினைக்கறீங்க. மழையில் நனைந்து சங்கடப்பட இருந்த இளைஞருக்கு ஒரு பெண் தன் காரில் இடம் கொடுத்து அழைத்துப் போகிறாள். இதே மாதிரியான சம்பவத்தை கதாசிரியர் கையாண்டால்... என்று வேடிக்கையாக இருக்கவில்லையா?"

—அவள் உரத்து சிரிக்க அருணும் கூட சேர்ந்து சிரித்து விட்டான்.

சம்யுக்தாவின் அருகில் காரில் அமர்ந்து கொண்டு அவளுடன் சரிசமமாகப் பேசிச் சிரிக்கும் வாய்ப்பு தனக்கு கிட்டும் என்று அவன் கனவிலும் நினைத்தவன் இல்லை. அந்த அருகாமை அவனுக்கு மிகவும் இனிமையாக இருந்தது.

"இந்தத் தெருவுதான் நான் சொன்னது!" என்று சிந்தனையைத் துண்டித்துக்கொண்டு சாலையின் இடது பக்கமாக உள்ளே ஓடிய பெரிய தெருவைச் சுட்டிக் காட்டினான்.

வேண்டாம் என்று அவன் மறுத்தும் பிடிவாதமாக சம்யுக்தா துங்கம்பாக்கம் நெடுஞ்சாலையின் அந்தத் தெருவின் கோடியில் உள்ளே ஓடிய சிவானந்தம் தெரு என்ற சந்திற்குள் காரை லாவகமாக செலுத்தி அவனது வீட்டிற்கெதிரே நிறுத்தினாள்.

Vennila

மழை இன்னமும் பெய்து கொண்டிருந்ததினால் தெருவுக்குள் வந்த அந்தக் காரையோ அதை ஓட்டிய இளம் பெண்ணையோ... அவனுடன் அவன் ஜோடியாக அதில் வந்ததையோ— வேடிக்கை பார்க்க... தெரு ஜன்னல்களில் மனிதத் தலைகள் காணவில்லை.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ''மிக்க நன்றி'' என்று கூறியவன் காரினின்று இறங்கினான்.

''வெறும் நன்றி மட்டும் போதாது...எனக்கு ரொம்ப தாகமாக இருக்கு... உங்கம்மா எனக்கு சூடா ஒரு டம்ளர் காப்பி தயாரித்து தரமாட்டாங்களா?'' வேடிக்கையாகக் கேட்டபடி அவளும் இறங்கி காரின் கதவை சாத்தி பூட்டிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவன் தாய் வேலையிலிருந்து திரும்பிவிட்டிருந்தாள். அழைப்பு மணியை லேசாகத் தொட்டவுடனேயே கோதை பரபரப்புடன் கதவைத் திறந்து விட்டாள். மகனுக்குப் பின்னால் தங்கக் குத்துவிளக்கு போல அழகாக உயரமாக நின்று கொண்டிருக்கும் அந்தப் பெண்? கோதையின் கண்கள் வியப்பில் விரிந்தன...

''உள்ளே வாங்கோம்மா!'' உபசரித்தவளின் நெஞ்சு இனம் காணாத கலவரத்தில் 'திக்திக்'கென்று அடித்துக் கொண்டது.

# 19

பலகாரக் கடையினின்று வேலையை முடித்துக் கொண்டு கோதை கிளம்புவதற்குள் வானம் கருத்துக் கொண்டு விட்டது.

பளிச்சிட்ட மின்னல்களுடன் வானம் லேசான உறுமலுடன் எந்த நிமிஷமும் மழையைக் கொட்டக் காத்திருந்தது.

வேகமாகத் தெருவைக் கடந்து மூச்சிறைக்க வந்தவள் அடுத்த வீட்டு அம்மாவிடம் வேலைக்காரி விட்டுப் போயிருந்த பால் பொட்டலத்தை வாங்கிக்கொண்டு பூட்டியிருந்த வீட்டுக் கதவைத் திறப்பதற்கும் மழை இரைச்சலுடன் பொழியத் துவங்குவதற்கும் சரியாக இருந்தது. கதவைத் தாளிட்டு விட்டு உள்ளே கவிந்து நின்ற இருட்டைப் போக்க நடைவிளக்கையும், கூடத்து விளக்கையும் ஏற்றிவிட்டு பின்னாலிருந்த குளியலறைக்கு விரைந்தாள்.

மகன் வேலையினின்று திரும்பி வந்து விடுவான். அதற்குள் இரவுச் சமையலை முடித்துவிட வேண்டும் என்ற அவசரம். குளியலை முடித்துக்கொண்டு மாற்றுச் சேலையில் கூடத்து அலமாரி தட்டிலிருந்த சம்புடத்தில் விரலைத் தொட்டு விபூதியை நெற்றியில் கீறிட்டுக் கொண்டாள். கூந்தலை வாரி அள்ளி முடிந்து கொண்டு ...சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

Vennila

இரவு உணவுக்கு மகனுக்கு பரோட்டாவும்–மசாலா உருளைக்கிழங்கும் தயாரிக்க மாவு டின்னை எடுக்கத் திரும்பியவள் திடுக்கிட்டுப் போனாள். அழுத்தமாக ஒலித்த வாயில் அழைப்பு மணி அவளுக்கு அப்படி ஒரு அதிர்ச்சியைத் தந்து விட்டது.

முதல் நாள் மாலைப் பொழுதிலிருந்து அவளுக்கு மனதில் அமைதி இருக்கவில்லை. அதன் பயனாக உடம்பு தெம்பின்றி துவண்டு விட்டது போன்றதொரு பலவீன உணர்வு.

அழைக்காமல் தானேயே வீட்டுக்குள் வந்து நின்ற அந்த பெண்ணைப் பற்றியே நினைத்துக்கொண்டு அவள் இரவு சரியாகவே உறங்கவில்லை.

இன்னும் மழை பொழிகிறது. ஒரு சமயம் அவன் காரில் முதல் நாள் போல வீட்டுக்குத் திரும்பியிருக்கிறானோ?

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள். "என்ன பயந்திட்டீங்களா?" சிரித்தபடி மழையில் நனைந்த உடையுடன்... வாசலில் நின்றுகொண்டிருந்தார் பூபதி.

'இல்லை, அருண் வரும் நேரம். அவன்தானாக்கும்னு நினைச்சேன். குடையை எடுத்துப் போக மறந்து விட்டான்...மழை கொட்டுகிறதே நனைஞ்சு போயிடுவானேன்னு ஆதங்கம்...''

"பெத்தவங்களுக்கு எப்பவும் பிள்ளைகளைப் பத்தி தான் நினைப்பு இல்லையா? நேத்து தாராகூட ரொம்ப தவிச்சுப் போயிட்டா...பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு நேரே வராம குழந்தை தன் தோழன் வீட்டுக்கு விளையாடப்போய் விட்டான். மழை ஆரம்பிச்சதும் குழந்தையைக் காணலையின்னு வேலையிலிருந்து வந்தவ தவிச்ச தவிப்பு...!'' சிரித்தபடி சேற்றில்முழுகி...



நனைந்து ஊறி விட்டிருந்த செருப்புகளை நடையில் கழற்றி வைத்துவிட்டு தாழ்வாரத்திற்கு வந்தார் பூபதி.

'கால்—கைகளை கழுவிகிட்டு முதல்லே சட்டையை அவிழ்த்து நாற்காலி மேலே போடுங்க—மின் விசிறி காத்திலே காஞ்சுடும்'' என்றாள் அன்புடன் கோதை.

"பரவாயில்லை. அப்படியே விசிறிக்கடியில் சித்த நேரம் உட்கார்ந்தா தலையும், உடையும் காஞ்சுடும்'' புன்னகைத்தபடி தமது ஜோல்னா பையிலிருந்து ஒரு சீப்பு மலைவாழைப் பழத்தை எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டு—காலை நீட்டிக்கொண்டு ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

''இதெல்லாம் எதுக்கு?'' அன்புடன் கடிந்துகொண்டாள் அவள்.

''என் சகோதரி வீட்டுக்கு வெறுங்கையா வரப் பிடிக்கலை.. ஏதோ என்னால் ஆனது...''

''இருங்க அருண் வரட்டும்—சாப்பிட்டு போவிங்க... மழை நல்லா நின்ன பிறகு போகலாம்'' என்றாள்.

''அருணைப் பார்த்துட்டு...வேலை எப்படி இருக்குன்னு விசாரிச்சுட்டுப் போகத்தான் வந்திருக்கேன்'' என்றார் அவர்.

''இதை கொஞ்சம் படிச்சிட்டு இருங்கோ...அடுப்பில் காரியம் இருக்கு. அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன்'' என்றபடி கோதை அலமாரி அடித்தட்டில் அடுக்கி வைத்திருந்ததொரு வாரப் பத்திரிக்கைகளில் ஒன்றை எடுத்து அவரிடம் நீட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

பில்ட்டரில் காப்பித் தூளைப் போட்டு நீரைக் காய்ச்சி ஊற்றிக் கொண்டே சிந்தித்தாள்.

அவரிடம் சொல்லி யோசனை கேட்டால்?



Vennila

முதல் நாள் மாலையிலிருந்து அவள் மனம்பட்ட உளைச்சல் கொஞ்சநஞ்சமல்ல.

பலகாரக் கடையில் அவள் இருமுறை கொதிக்கும் எண்ணையில் கையைச் சுட்டுக் கொண்டு பெரிய விபத்திற்குள்ளாகிவிடும் அளவு தடுமாறிப் போய் விட்டாள். நல்லவேளை. லேசாகக் கை அடுப்பிலிருந்த இரும்புச் சட்டிமீது பட்டு...விரல் நுனியில் எரிச்சலுடன் தப்பினாள். தெருவில் நடக்கும்போது கூட கால்கள் தள்ளாடிப் போயின. தவறிப்போய் கழிவறைக்குள் விழுந்து காலை ஒடித்துக் கொள்ள வேண்டியவள்... யார் புண்ணியமோ தப்பினாள்.

நிலை தெரியாது தவிக்குமளவு மனதிலே பெருத்த குழப்பம். பூபதியைக் கண்டதும் கூடப்பிறந்த சகோதரனைப் பார்த்து விட்டது போல மனதில் தெம்பு—அவரிடம் சொல்லி மனப்பாளுவை இறக்கி வைக்க வேண்டுமென்றதொரு ஆவல்.

முதல் நாள் மாலை கதவைத் திறந்தபோது மகனுடன் பின்னால் நின்ற அழகான பெண்ணைப் பார்த்ததுமே திடுக்கிட்டுப் போய் விட்டாள். திறந்து கிடந்த கதவின் வழியே வாசலைப் பார்த்தவளுக்கு ஓரளவு புரிந்து விட்டது. மழையில் குளித்துக்கொண்டு நின்ற அந்த நிறுவனத்தின். அவளது சிந்தனையைத் துண்டிப்பவள் போல வந்தவள் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

"நான் உங்க மகன் வேலை செய்யும் நிறுவனத்தின் தலைவியின் மகள். என் பெயர் சம்யுக்தா. மழை அதிகமாகிட்டதால போகும் வழியில் இறக்கிவிட்டுப் போகலாம்னு அருண் அவர்களை என் காரில் அழைத்து வந்தேன்?"

பகீர் என்ற உணர்வில் கோதையின் உடல் முழுவதும் ஆடியது.



தனக்கேற்பட்ட பதட்டத்தை சமாளித்துக்கொண்டு வந்தவளுக்கு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்காரச் சொல்லி உபசரித்தாள்.

சுவற்றில் தொங்கிய சந்தன மாலை சூடப்பட்ட படத்தைப் பார்த்து விட்டு மெல்லிய குரலில் சம்யுக்தா கேட்டாள்.

"இந்தப் படத்திலிருப்பவர் உங்கள் தந்தையா? உங்களுக்கு அவரோட சாயல் ரொம்பவே இருக்கு..." புன்னகைத்தாள்.

"அப்படியா? எனக்கு அம்மாவின் சாயல்தான் அதிகம்னு பார்க்கிறவங்க சொல்வாங்க."

அருகில் கிடந்த முக்காலிமீது அமர்ந்து கொண்டான் அருண்.

ஒரு இளம் பெண்ணைக் கண்டதும் மகன் பல்லை இளிக்கிறானே என்று கோதைக்கு உள்ளூர எரிச்சல்.

"ஆமாம் அம்மா, அருணுக்கு ஞாபகம் வருமுன்னாலே அவன் அப்பா இறந்து போயிட்டார். தாயாகவும் தந்தையாகவும் இருந்து நான்தான் அவனை வளர்த்து ஆளாக்கினேன்..." பதில் கொடுத்துவிட்டு சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

இந்தப் பெண்ணுக்கு குடும்பத்தின் உண்மை நிலை தெரிந்தால் ஒதுங்கிக் கொள்வாள் என்று எண்ணியபடி இரண்டு தட்டுகளில் அதிரசமும் நெய் முறுக்கும் வைத்து...காப்பியைக் கலந்து டம்ளர்களில் நிறைத்து எல்லாவற்றையும் ஒரு டிரேயில் எடுத்து வந்து மேஜை மேல் வைத்தாள்.

'அட அதிரசமா? எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீங்களே செய்தீங்களா?" என்றபடி அதைப் பிட்டு வாயில் திணித்துக்கொண்டு சுவைத்துத் தின்றாள் சம்யுக்தா.

Vennila

ஆமாம், நான்தான் சுட்டேன்...ஆனால் இதை நான் வீட்டில் தயாரிக்கவில்லை. அருணை நான் எப்படி படிக்க வச்சேன்னு நினைக்கிறீங்க? நான் கிராமத்தில் வளர்ந்தவ-படிப்பறிவு அதிகம் கிடையாது. இங்கே வந்து ஒரு வீட்டில் சமையல்காரியாகவும்...பின்னர் ஒரு பலகாரக் கடையில் அதிரசம்-முறுக்கு சுட்டெடுக்கும் ஆளாகவும் வேலை செய்து இந்த வீட்டை நிர்வகிச்சு, மகனை ஆளாக்கினேன். அருண் புத்திசாலிப் பிள்ளை தான். உபகாரச் சம்பளத்தில் படிச்சான். அதனாலே எனக்கு ரொம்ப சிரமம் இருக்கலை.''

வெளுத்துப்போன நீல சேலையும்-வெள்ளை ரவிக்கையும்-வெறும் கழுத்துமாக நின்ற அவளை சம்யுக்தா வியப்புடன் பார்த்தாள்.

''உழைப்பால் உயர்ந்தவங்களைக் கண்டால் எனக்கு ரொம்பவே பிடிக்கும்'' என்றபடி முறுக்கை ஒடித்து வாயில் போட்டுக் கொண்டு மென்று சுவைக்கத் தொடங்கினாள்.

''தன் தாய் பாடுபட்டு தன்னை வளர்த்து ஆளாக்கினாங்கன்னு அருண் பெருமைபட்டுக் கொள்ளலாம்... நான் அப்படி பெருமையா ஏதும் சொல்லிக்க முடியாதே? வசதிகள் நடுவே வளர்ந்து ஆளானேன்...என்றுதானே சொல்லிக்க முடியும். இதில் பெருமை என்ன இருக்கு. பணம் படைச்சவங்க தங்கள் குழந்தைகளை பிரபல பள்ளிக்கூடத்தில் படிக்க வைக்கிறாங்க. படிப்பில் மட்டமா இருந்தா டியூஷன் வச்சு பாடங்களை கரைத்துப் புகட்டறாங்க...பின்னால் தங்கள் நிறுவனங்களிலேயே உயர்மட்ட அதிகாரியா பதவி தந்து-கை நிறைய சம்பளத்தை வாரிக் கொடுக்கறாங்க...

''உங்களைப் பார்த்து நான் பெருமைப்படறேன். உங்களைப் போல உழைச்சு தன் குழந்தையை முன்னுக்கு கொண்டு வருகிற பெண்மணி பூஜிக்கப்பட வேண்டியவங்க.''



தாயும் மகனும் பிரமிப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சம்யுக்தா சிறிது பொழுதில் விடைபெற்றுக் கொண்டு வெளியேறி விட்டாள்.

கூரை மீது கொட்டிய மழையின் சத்தம் அடங்கி வீடு அமைதியில் மூழ்கியது... ஆனால் கோதையின் மனம் அமைதியிழந்து தவிக்கத் தொடங்கியது.

இதென்ன காலைச் சுற்றிய பாம்பு போல... இந்தப் பெண் அருண்மீது காட்டுவது கருணையா? தனக்கு பணக்கார மமதை இல்லை என்று விளக்கமாக சொல்வதின் அர்த்தம்? இந்த தொடர்பு எங்கே போய் முடியப்போகிறது... அருண் வேலைக்கு வேட்டு வைக்க கிளம்பியிருக்கிறாளோ? ஏழைகளான அவர்களை சோதிக்க பகவான் இப்படி ஒரு அழகான—பணக்காரப் பெண்ணை அவர்கள் வீட்டுக்குள் அனுப்பி வைக்கணுமா?... நெஞ்சுவரை வந்த துயரத்தை அடக்கிக் கொள்ள அவள் சமையலறைக்குள் தஞ்சமானாள்.

இரவு முழுவதும் மனதை முள்ளாகக் குத்திக் கொண்டிருந்த அந்தச் சம்பவத்தை பூபதியிடம் சொல்ல வேண்டும். மகன் வருவதற்குள் அவரிடம் பேசி ஆலோசனை கேட்க வேண்டும் என்ற அவசரத்தில் காப்பி பில்ட்டர் மீது மூடியால் ஒங்கி இரண்டு முறை தட்டினாள். அடியில் தேங்கி நின்ற டிக்காஷனுடன் பால் கலந்து அளவாக சர்க்கரை போட்டு மிதமான சூட்டில் ஆற்றி டம்ளரில் நிறைத்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

முதல்லே தாகத்துக்கு இதைச் சாப்பிடுங்கள்—அருண் வந்ததும் அவனோட கொஞ்சம் பரோட்டா சாப்பிட்டுட்டு மழை நல்லா விட்டதும் வீட்டுக்குப் போகலாம்'' உபசரித்தபடி காப்பி டம்ளரை மேஜைமீது வைத்துவிட்டு தாழ்வாரத்துத் தூணைப் பிடித்துக் கொண்டு நின்றாள். பூபதிக்கு தாகம் நாக்கை வரட்டிக் கொண்டிருந்தது. காப்பியை ஒரே மூச்சாக

Vennila

குடித்து தம்ளரை தரையில் வைத்துவிட்டு கைக்குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டார்.

"என்னம்மா ஒரு மாதிரி இருக்கீங்களே? உடம்புக்கு ஏதாச்சும்?" ஆதங்கத்துடன் வினவினார்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லை—மனசில்தான் ரொம்ப கவலை" அவள் குரல் தழுதழுத்தது.

"நான் தெரிஞ்சுக்கலாமா அம்மா...?"

"உங்ககிட்டே சொல்லத்தான் துடிக்கிறேன். அருணைப் பத்தின கவலை-"

"பிள்ளைக்கு இள வயசு வந்துட்டா பெத்தவங்களுக்கு கவலை ஆரம்பிச்சிடுது இல்லையா?" பூபதி உரக்கச் சிரித்தார். "நீங்க சொல்லாமலே எனக்கு புரிகிறது. அருண் வேலையில் சேர்ந்துட்டான். காலாகாலத்திலே அவனுக்குக் கல்யாணம் செய்து வச்சுட்டு பொறுப்பை ஒப்படைக்க மாட்டோமான்னு நீங்க ஏங்குகிறீங்க..."

"நான் ஏங்கி நினைக்கிறது ஒண்ணு-ஆனால் நடக்கிறது வேறாக இருக்கு. அதனாலே நான் பயப்படறேன்_"

"புரியும்படி சொல்ல முடியுமா அம்மா?"

"உங்கிட்ட சொன்னாத்தான் என் மனதில் நிம்மதி ஏற்படும். தெய்வமே அனுப்பிச்சாப்பல நீங்க இப்போ வந்திருக்கீங்க-அதுவே மனசுக்கு ஆறுதலா இருக்கு. நேத்து மழையிலே அருண் வீட்டுக்குத் திரும்பினான். கூட ஒரு இளம் பொண்ணு வந்திருந்தா..."

"பலே!பலே!எனக்கு விளங்கிவிட்டது. அதுக்குள்ளே மகனுக்கு ஒரு பெண் மேலே விருப்பம் விழுந்துட்டதுன்னு உங்களுக்கு கவலையா இருக்கு. அருணுக்கு பிடிச்ச பெண்ணா அவனே தேர்ந்து எடுத்துகிட்டா உங்கசிரமம்



பாதியாகிடுமே. அருண் இந்தக் காலத்துப் பையன். காதலிச்சு கல்யாணம் செய்துக்கணும்னு கொள்கையிருக்கலாம். ஒரு நாள் நான் என் மனைவி தாராவையும் குழந்தையையும் இங்கே கூட்டிவரப் போகிறேன். நீங்க பார்த்து ஆச்சர்யப்படுவீங்க. நானும் தாராவும் விரும்பி கல்யாணம் செய்து கொண்டவங்க. என்னை ஒத்த வயசுக்காரனுக்கே... கல்யாணம் என்பதில் விருப்பம் முக்கியம்னு நினைக்கிறப்போ... அருண் போல இளைஞர்கள் காதல் கல்யாணத்தை வரவேற்கிறதில் தப்பு என்னம்மா? அவனுக்கு அந்தப் பெண் மேலே விருப்பம் போலிருக்கு-அதனாலே உங்ககிட்ட காட்ட வீட்டுக்கு அழைச்சிட்டு வந்திருக்கான். நீங்க வீணாகக் கவலைப்படறீங்க."

"அதெப்படி? நமக்கும் அவங்களுக்கும் ரொம்ப அந்தஸ்து வேற்றுமை இருக்கே?"

"ஏழைப் பொண்ணுன்னு கவலைப்படுறீங்களா?"

"இல்லை தம்பி! ரொம்ப பணக்கார வீட்டுப் பெண். பார்க்க அழகா இருக்கா. படிச்சவ. பரிவா பேசறா ஆனா நமக்கு ஒத்துவராதேன்னு உடனேயே அவளோட ஆசையில் அணைபோட நாங்க ரொம்ப அடிமட்டத்தைச் சேர்ந்தவங்கன்னு நாசூக்காகப் பேசிப் பார்த்தேன். அந்தப் பெண் எல்லாத்துக்கும் பதில் சொல்லி என்னை மடக்கப் பார்க்கிறா. பக்கத்திலே அந்தப் பெண் நிக்கும்போது, அருண் முகத்தைப் பார்க்கணுமே. ஒரே பரவசம். ஆனால் என் மனசில் ஒரே குழப்பம்.

"காதலுக்கு கண் கிடையாதுன்னு உங்களுக்கு தெரியாதா? மேலும் அவங்ககிட்டே பணம் இருந்தா அருண்கிட்டே படிப்பும், திறமையும் இருக்கு... அதனாலே இரண்டும் சமமாகிடறது.. விவரமா சொன்னா அவ உங்களுக்கு ஏத்த மருமகள்தான்னு நான் பதில் சொல்ல முடியும்."

Vennila

"பணக்காரங்களைக் கண்டாலே எனக்கு ரொம்ப பயம். எனக்கிருக்கிறது ஒரே மகன். கடைசி காலத்தில் அவன் எனக்கு துணையாக இருந்து கரை சேர்த்து விட்டு விடுவான்னு நம்பிக்கொண்டு வாழறேன். பணக்காரி ஒருத்தி காதல் வலை போட்டு அவனை தன்வசமாக்கி... மாமனார் வீட்டு மருமகனாக்கிக் கொண்டு விட்டால் நான் என்ன செய்வேன்? என் கதி?" அவளது குரல் துயரத்தில் உடைந்தது.

"நீங்க ரொம்ப தூரம் கற்பனையை ஓட விட்டிருக்கீங்க. அந்தப் பெண் யார் என்னன்னு விவரம் கேட்கலையா... அவள் அருணை நேசிக்கிறானு எப்படிச் சொல்ல முடியும்?"

"அவள் முகமும், கண்களும் உண்மையைச் சொல்கிறதே-அவன்தானே தன்னை அறிமுகம் செய்து கொண்டான். அருண் வேலைபார்க்கிற அந்தத் தொழிற்சாலையின் தலைவி வசுந்தரா அம்மாவின் ஒரே செல்ல மகள் சம்யுக்தா அவள். பார்க்க அழகா இருக்கிறாள். சாமர்த்தியமாகப் பேசுகிறாள். ஆனால் அவங்களுக்கும் நமக்கும் ஏணி வச்சாக்கூட எட்டாத இடமாச்சே... அருண் அனாவசியமாக ஆசைப்பட்டு மனமுடைஞ்சு போகக்கூடாது பாருங்கோ—" என்று பேசிக் கொண்டு போனவள் திகைப்புடன் நிறுத்தினாள்...

"தம்பி! உங்களுக்கு உடம்புக்கென்ன—முகம் வெளேர்னு இருக்கே?" பதறினாள்.

"ஒண்ணுமில்லே... குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டு வாங்க. எனக்கு அடிக்கடி வரும் ஒரு திறுசு மயக்கம் வரத் தொடங்கியிருக்கு..." என்றபடி ஜோல்னா பையிலிருந்ததொரு சிறிய டப்பாவைத் திறந்து மாத்திரை ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

"அட பாவமே!" என்றபடி கோதை உள்ளே சென்று தம்ளரில் நீருடன் ஓடி வந்தாள்.



ஒரு வாய் நீரைப் பருகிவிட்டு முகத்தை துவாலையால் துடைத்துக்கொண்டு தொண்டையைச்செருமிக் கொண்டார் பூபதி.

"அவள் பணக்காரப் பெண்ணா இருந்தா என்ன? அருண் மேலே ஆசை ஏற்பட்டா கல்யாணம் செய்துக் கட்டும். அருண் நல்ல பையன். உங்க மனதை புண்படுத்தராப்பல நடந்துக்க மாட்டான்...வீண் கவலையை விடுங்க... உண்மையான அன்பு முன்னால் பணம்-காசு-பதவி எல்லாம் தூசுக்கு சமம் அம்மா... அருண் இந்தப் பெண்ணையே கட்டிக் கொண்டு சுகமா வாழட்டும்னு நான் வாழ்த்தறேன்..."

அது சமயம் வாசற் கதவு மணி அழுத்தமாக ஒலித்தது. விரைந்து சென்று கோதை கதவைத் திறந்தாள்.

"என்னம்மா பார்க்கிறீங்க? தினம் காரில் யாராவது வீட்டில் கொண்டு வந்து விடுவாங்கன்னு நினைக்கிறீங்களா. பஸ் நிலையத்திலிருந்து வீட்டுக்கு வருவதற்குள்"... என்று சிரித்தபடி— தெப்பலாக நனைந்த உடைகளுடன் பெட்டியைச் சுமந்துகொண்டு உள்ளே வந்தான்.

"பூபதி ஸாரா வந்திருக்கார்" என்று அவன் மகிழ்ச்சியுடன் கூறியபோது,

"உனக்கு ஆயுசு நூறு அப்பா உன்னைப்பத்தி நான் பேசிக்கொண்டிருந்தோம்..." பூபதி சிரித்தார்.

"நல்லதுதானே பேசினீங்க? அருண் படு அயோக்கியன்னு பேசலையே?" சிரித்தபடி நாற்காலி கைமீது கிடந்த துவாலையால் தலையைத் துவட்டிக் கொண்டான்.

"இதோ வந்துட்டேன்" என்று அவன் குளியலறை நோக்கி விரைந்த போது... பூபதி கோதை பக்கம் திரும்பினார்.

Vennila

"நாம பேசினது எதையும் அவன்கிட்டே சொல்லிட மாட்டேன் கவலைப்படாதீங்க... ஆமா தெரியாமத்தான் கேட்கிறேன்? கவலைப்படுகிறதுங்கிறது பெண் பிறப்பான உங்களுக்கு ஒரு பொழுதுபோக்கா? இங்கே நீங்கள் மகனைப்பத்தி கவலைப்படுகிறீங்க... அங்கே தாரா நான் இன்னும் வீட்டுக்கு வரலையே-மழை கொட்டுதேன்னு என்னைப்பத்தி கவலைப்பட்டுக் கொண்டிருப்பா... யோசித்துப் பார்க்கும் போது ஆண்களுக்கு இது தேவையான சங்கதிதான். நம்மைபத்தி கவலைப்பட ஒரு ஆன்மா இருக்குன்னு உணரும்போது ஒரு ஆணுக்கு எத்தனை மனத் தெம்பு ஏற்படுகிறது தெரியுமா... கோதை அம்மா கவலைப்படுங்க உங்க பிள்ளை வாழ்க்கையில் முன்னேறி விரும்பினவளை கட்டிக் கொண்டு நல்லா வாழணும்னு எண்ணி பல விதமா கவலைப்படுங்க... உங்கள் கவலைகள் வெற்றியடையும்..." உரத்த குரலில் சிரித்தார்.

கோதையும் கூட சிரித்தாள். அப்பா... இந்த மனிதர் தமது பேச்சால்-சிரிப்பால் அவள் மன வேதனை அந்தனையையும் விரட்டிவிட்டாரே... உண்மையில் தாரா என்கிற அந்தப் பெண் கொடுத்துவைத்தவள்... கணவன் நல்லவனாக அமைவதற்கு ஒரு பெண் நல்ல தவம் செய்திருக்கணும்... நினைத்தபடி அவரை மனதிற்குள் வாழ்த்தினாள்.

# 20

அன்று காலை வசுந்தரா வழக்கம் போல் தொழிற்சாலையை சுற்றி பார்வையிட்டுக்கொண்டு வந்தாள்.

சீ காட்டேஜில் வாங்கிப் போட்டிருந்த புத்தம் புதிய யந்திரம் இயங்காது தகராறு செய்து கொண்டிருந்தது. அதை இயக்கிக் கொண்டிருந்தவர் என்ன கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியாது-யந்திரத்தின் பல பகுதிகளையும் விரல்களால் தொட்டுத் தடவி கருப்பாகிப் போன கை விரல்களைத் துணியில் துடைத்துக்கொண்டு விழித்தபடி நின்று கொண்டிருந்தார். இயந்திரங்களை கவனிக்கத் தொழிற்சாலை அமர்த்தியிருந்த நிபுணருக்கும் எதுவும் பிடிபடவில்லை.

அந்த யந்திரத்தை வாங்க அவள் வங்கியில் கடன் எடுத்திருந்தாள். மிக விரைவில் அந்தக் கடனை அடைத்து விட முடியும் என்று அவள் போட்ட கணக்கு தவறிவிட்டது. ஒருவாரத்திற்குமேல் வட்டியைவிழுங்கிக் கொண்டு யந்திரம் செத்துக் கிடந்தது. அதற்கு உயிர் கொடுக்க...பம்பாயிலிருந்து யந்திரம் பழுது பார்க்கும் நிபுணர் ஒருவரை வரவழைக்க வேண்டும் என்று செயலாளர் சொன்ன போது அவள் கோபத்தில் கொதித்துப் போனாள்.

"அந்தக் காரியத்தை முதல் நாளே செய்திருந்தால் உற்பத்தி நின்று போயிருக்காதே. அதனால் எத்தனை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?" வரவர சாம்பசிவத்தின்

Vennila

மூளை மழுங்கிக் கொண்டு வருகிறது என அவர்மீது வெறுப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

முன் போல அவரை அவள் அதட்டிப்பேச முடிய வில்லை. நீண்ட காலமாக வேலை செய்யும் தகுதியில் சாம்பசிவம் அவளிடம் வாயாடத் தொடங்கி விட்டி ருந்தார்.

சாம்பசிவத்திற்கு அவளது தொழிற்சாலையைப் பற்றிய சகலமும் தெரிந்தது. அதிகம் அதட்டிப் பேசி னால் மனிதன் எதிர்த்துக் கொள்ளலாமே?

கணவன் என்பவனை மட்டுமரியாதையின்றி காலில் போட்டு மிதிக்கத் தொடங்கியபோது என்ன நடந்தது?

உதட்டைக் கடித்துக் கொண்டு சீ காட்டேஜில் செயலிழந்து கிடந்த யந்திரத்தைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு பெருமூச்சுடன் நடந்தாள்.

"கவலைப்படாதீங்க...பாம்பேயிலிருந்து பழுது பார்க்கிறவர் இன்றுராத்திரி விமானத்திலே வந்துடுவார்– ஏற்பாடு செய்தாகி விட்டது. நான் நேரே போய் அழைத்து வந்துடுவேன்–ராத்திரியே அவர் மிசினை பழுது பார்த்தால் சரி–இல்லாவிட்டால் நாளை காலை யில் ரிப்பேர் வேலைகளை ஆரம்பிக்கட்டும். அதுவரை அவர் தங்குவதற்கு நல்ல ஒட்டலில் அறை எடுத்துக் கொடுத்து விடுகிறேன்–நம்ப ஆட்கள் கூட இருந்து ஒத்துழைப்பாங்க...கொஞ்சம் பணம் விரயமாகிறது. நமக்கு வேலைதானே முக்கியம்."

—தொண தொணவென்று அவர் பேசியதற்கெல் லாம் தலையை அசைத்துக் கொண்டு நடந்தவளது பார்வை சற்று தொலைவில் படர்ந்ததும்...திடுக்கிட்டுப் போய் நின்று விட்டாள்.

"நான் சொல்வது சரிதானே?" சாம்பசிவம் கேட்ட தற்கு, அவள் பெருமாள் மாடுபோல தலையை அசைத் தாள்.



பார்வையும், நினைவும் அவள் பார்த்த காட்சியில் லயித்துப்போனது. மனதிலே ஒரு பெருத்த நெருடல்...

சாம்பசிவத்துடன் கூட நடந்து தொழிற்சாலையை அவள் சுற்றிவருவதைப் போல அவளது மகள் சம்யுக்தா—புதிதாக வேலைக்கமர்ந்து விட்டிருக்கும் அருணுடன் அவன் மேற்பார்வையிடும் பகுதியைப் பார்த்தபடி சிரித்துப் பேசிக்கொண்டு ஜோடி நடையில் போவதைக் கண்டாள்.

'உகும்! இது நல்லதிற்கில்லை' என்றதொரு எண்ணம் அவள் உள்ளத்தில் பளிச்சிட்டது.

காதல் என்று அவள் எண்ணி ஒரு படுகுழியில் விழுந்தது போதாதா? அவள் மகளுக்கும் அப்படிப்பட்ட தொரு விபத்து ஏற்பட வேண்டுமா...? ஏடாகூடமாக எதுவும் நடந்து விடுமுன் அவள் செயல்படத்தொடங்க வேண்டுமே?

"நமக்கு இந்த யந்திரத்தாலே இப்போ கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கு" சாம்பசிவம் அடிக்குரலில் முணு முணுத்தபடி அவளைப் பின் தொடர்ந்தார்.

'மிஸ்டர் சாம்பசிவம்! இந்த யந்திரத்தால் ஏற்படும் நஷ்டத்தை நான் அதிக வேலை செய்து சமாளித்து விடலாம்...ஆனால் என் மகள் ஒரு வாலிபனின் தந்தி ரத்தால்...தவறிவிட்டால் அந்த இழப்பை என்னால் ஈடு செய்ய முடியாதே? வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும்...'–தனக்குள்ளே சொல்லிக் கொண்டு அவர் பக்கம் திரும்பினாள்.

"நான் என் அறைக்குப் போகிறேன்—நீங்கள் ஆவன செய்யுங்கள்" என்று கூறிவிட்டு வேகமாக நடந்தாள்.

பம்பாயிலிருந்து வரப்போகும் யந்திரம் பழுது பார்க்கும் நிபுணருக்கு ராஜ உபசாரங்கள் செய்யப்

Vennila

படும்-பின்னர் அவளிடமிருந்து ஒரு கனிசமான தொகையை எதிர்பார்ப்பார் செயலாளர். காசோலை எழுதி அவள் கிழித்துக் கொடுப்பாள்-காலம் இப்படியே போய்க் கொண்டிருக்கிறது.

அவளைச் சுற்றி உள்ளவர்களில் யார் நம்பிக்கைக்கு உகந்தவர் என்று புரியாத ஒரு புதிர் அவரவர்கள் சமயம் வரும்போது தேன் எடுக்கிறவன் புறங்கையை நக்கிய கதையாக ... செயல்பட்டு விடுகிறார்கள். சிந்தினது-சிதறினது போகத்தான் அவள் சேமிக்க முடிகிறது. அவளுடன் கூட உற்ற துணையாக உண்மையாக இருந்து உதவ வேண்டும் என்று கட்டின கணவனுக்குக் கூட அக்கறை இருக்கவில்லை.

கண்களில் பனித்த கண்ணீரை விழுங்கிக் கொண்டு அறையில் வந்து இருக்கையில் சாய்ந்து கொண்டாள். தனது தோள்பையிலிருந்த சிறிய நோட்டு புத்தகத்தைத் திறந்து...தோழி பத்மாவின் தொலைபேசி எண்ணைக் கண்டு பிடித்து தனது பிரத்தியேக போனில் அவளை அழைத்தாள்.

பிரபலமானதொரு அறுவை சிகிச்சை நிபுணரது மனைவி பத்மா. மாதர் சங்கம்-பெண்களின் முன்னேற்ற கழகம் என்று பல அமைப்புகளிலும் அவள் முக்கிய அங்கம் வகித்தாள். அரசியல்வாதிகளிலிருந்து, சினிமா நடிகை சிந்துமணி வரை அவளுக்குப் பலரைத் தெரிந்திருந்தது. அவளது பேச்சுக்கு மேல் மட்டத்துப் பெண்கள் ரொம்பவே மதிப்புக்கொடுத்தனர்.

மாதர் சங்கத்து கூட்டத்திலிருந்து அழைப்பு வரும் போது தவிர்க்க முடியாது போக நேரிட்டால் வசந்தரா அவளைக் கண்டு எரிச்சல் பட்டதுண்டு...'எல்லாவற்றையும் தன் தலையில் இழுத்துப் போட்டுக் கொண்டு புகழுக்குப் பேயாக அலைகிறாளே இந்த பத்மா?'... என்று வெறுத்தது உண்மை. வசந்தராவுக்கு இப்போது அவளின் தயவு மிகவும் தேவைப்பட்டது. தொழிலதிபர் சிவப்பிரகாசத்தின் மனைவி கமலாவும்-அவளும் நெருங்கிய தோழிகள் என்று கேள்வி.



அவளது பேச்சிற்கு மறுப்பு சொல்ல மாட்டாள் கமலா என்றதொரு நம்பிக்கை.

"வசந்தரா அம்மாவா .. சவுக்கியமா? என்ன இந்த வேளையில் உங்க பகுதி மாதர் சங்கத்து ஆண்டு விழா அருகில் வந்துவிட்டதா?" படபடவென்று உற்சாகத்துடன் பேசினாள் பத்மா...

"சொந்தக் காரியமாக கூப்பிட்டேன். காலை வேளையில் நீங்க வீட்டிலிருப்பீங்கன்னு தெரியும் ..!"

"இன்னிக்கு முழுநாளும் எனக்கு ஓய்வு... நாளையிலிருந்து எங்க சங்கத்து தர்ம கல்யாணத்துக்கு நிதி திரட்டர வேலை இருக்கு...!"

"அப்படியா? அப்படியே என் பெண்ணுக்கும் உங்க முயற்சியாலே ஒரு கல்யாணத்தை செஞ்சு வச்சுடணும்!"

"ஜமாய்ச்சுடலாம்... வரன்?..."

"உங்க சிநேகிதி திருமதி சிவப்பிரகாசத்தின் மகன் மோகன். அவங்களை உங்களுக்கு ரொம்பத் தெரியுமாமே... உயிருக்குயிராக பழகுவதாகக் கேள்விப் பட்டேன்."

மறுபக்கத்தில் பத்மா ஒரு வினாடி மவுனமானாள் மூச்சை உள்ளே இழுக்கும் சப்தம் கேட்டது. "நீங்க முடிஞ்சா நேரே இன்னிக்கு சாயங்காலம் எங்க வீட்டுக்கு ஆறுமணிக்குள்ளே வர முடியுமா?"

'கட்டாயம் வரமுடியும்-அப்போ நேரே பேசிக்கலாமா?" மகிழ்ச்சியுடன் போனை வைத்தாள்.

யாருடைய வீட்டிற்கும் அவள் சட்டென்று போய் விடுவதில்லை... இப்போது பத்மாவின் வீட்டுக்குத் தானே ஓடவேண்டி இருக்கிறது.

Vennila

வியர்வையில் நனைந்து போன தன் உள்ளங் கைகளைத் துடைத்துக் கொண்டாள். அவளது தந்தை அடிக்கடி சொல்வது வழக்கம். "பெண்ணைப் பெற்று விட்டால் ஜாதகக் கட்டை தலைமீது வைத்துக் கொண்டு செருப்புகள் தேய அலையணும்" அவளது தந்தைக்கு அந்த விதமாக அலைச்சல் இருக்கவில்லை. ஆனால் அவள் தன் மகள் காதலித்து கல்யாணம் செய்து கொள்வதை அனுமதிக்கப் போவதில்லை—அவனே பார்த்து... நல்ல இடத்தில் சிறப்பாக கட்டிக் கொடுக்கப் போகிறாள்.

—எண்ணியபடி...மேஜை மேலிருந்த... ஃபைல்களை மெல்லப் புரட்டினாள். தொழிற்சாலையில் ஏற்பட்டிருந்த சில தொல்லைகளை கவனிப்பதிலும்—அலுவலகத்துக் காரியங்களை மேற்பார்வையிடுவதிலும் அன்று பொழுது விரைந்து போனது.

வீட்டுக்குத் திரும்பியவள் விரைவாகக் குளித்து விட்டு கனமானதொரு காஞ்சீபுரச் சேலையை உடுத்திக் கொண்டு கிளம்பினாள்.

குப்புசாமி தொண்டையை செருமிக் கொண்டு பின்னால் வந்து நின்றார்.

"எனக்கு டிபன் வேண்டாம்—நான் கோவிலுக்குக் கிளம்பிக் கொண்டிருக்கேன். ராத்திரி எப்போதும் போல சமையல்..." சொல்லி விட்டு காரில் ஏறிக்கொண்டாள்.

அடையாறிலிருந்த பத்மாவின் வீட்டு காவல்காரன் கேட்டை அகலமாகத் திறந்து விட கார் வழுக்கிக் கொண்டு வாசல் முன் வந்து நின்றது. டிரைவர் கதவைத் திறந்துவிட மெல்ல தயக்கத்துடன் படிகள் ஏறி பளிங்கு பாவிய வராந்தாவில் வந்து நின்றாள்.

அவள் பத்மாவின் வீட்டிற்கு வருவது இதுதான் முதல் தடவை. 'எத்தனை பேருடைய வயிற்றை



கிழித்து—இவள் கணவன் இந்த அழகான வீட்டை கட்டி முடித்தாரோ?' பிரமிப்புடன் நின்று விட்டாள்.

பணக்காரர் வசிக்கும் வீடு...கட்டாயம் ஒரு அல்சேஷனோ—டொபர்மானோ... ஒரு குட்டி பொமரேனியன் நாயோ இருக்க வேண்டுமே? மேலே வந்து திடீர் என்று குதித்து கடித்துவிடப் போகிறது என்ற பயம் அவளுக்கு!

பேரன் பேத்தி எடுத்துவிட்ட தனது அத்தனை வயதையும் ஒப்பனைக்குள் திணித்துக்கொண்டு சின்னப் பெண்போல...சந்தேரி வாயில் புடவையில் கொடியாக துவண்டு வாசலுக்கு ஓடி வந்தாள், பத்மா.

"வாங்க...நீங்க வருவீங்கன்னுட்டு எங்க வீட்டு சக்தியை பின்னாலே கட்டிப் போட்டு வச்சுட்டோம்—சக்தி நல்ல குடும்பத்தை சேர்ந்ததொரு டொபர்மான்... ரொம்ப பொல்லாதவ!" எனப் பெருமையோடு சொல்லிக் கொண்டு வரவேற்பறை சோபாவில் அவளை அமரச் செய்தாள் பத்மா.

அவர்களது வீட்டுக்கு இணையானதொரு வரவேற்பறை அது—வெளிநாட்டு அலங்காரப் பொருள்கள் பல அங்கங்கே அணி செய்து கொண்டு அமர்ந்திருந்தன. வசுந்தரா இருக்கையில் சாய்ந்து கொண்டு தாராளமாக மூச்சு விடுவதற்குள்—

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட ஆள்— டிரேயில் சுமந்து வந்த தேநீர் கோப்பை கெட்டில்...கேக்கு தட்டுகள் இத்தியாதிகளை அருகிலிருந்ததொரு மேஜை மேல் வைத்து விட்டு மாயமானார்.

உணவு விஷயத்தில் வசுந்தரா கண்டிப்பான வளாச்சே! அதனால்தான் வீட்டிலிருந்து வெறும் வயிற்றோடு புறப்பட்டு வந்தாள்.

பத்மா பலகாரம்—தேநீர் கொடுத்து வற்புறுத்துவாள் என்று அவளுக்குத் தெரியும். நாட்டு நடப்புகளைப்



Vennila

பேசிக் கொண்டே இருவரும் தேநீரை உறிஞ்சிக் கொண்டு நாசூக்காக ஒரு துண்டு கேக்கை ருசி பார்த்துக் கொண்டிருந்தனர்.

வசுந்தரா ஆரம்பிக்கு முன் பத்மா குறுக்கிட்டுப் பேசினாள்.

"முன்பே நான் சம்யுக்தாவைப் பத்தி என் தோழி கமலாகிட்டே பேசினேன்...வந்து" என்று தயங்கினாள்.

"அவங்க என்ன சொன்னாங்க? அதிக வரதட்சணை, சீர் இதுகளை எதிர் பார்க்கிறாங்களா? ஒரே பிள்ளையில்லையா... நிறைய எதிர்பார்க்கிறது தப்பில்லை! எனக்கும் ஒரே மகள்தான். எனக்குப்பின் அத்தனை சொத்தும் சம்யுக்தாவுக்குத்தானே போய் சேரப் போகிறது. ஜாதகம் பார்க்கப் பிரியப்பட்டாலும் எனக்கு மறுப்பு இல்லை" லேசாக முறுவலித்தாள்.

"ஜாதகத்தில் சிவப்பிரகாசம் தம்பதிகளுக்கு நம்பிக்கையில்லை, பணம் பற்றிய பிரச்சனையே இல்லை- அவர்கள் வரதட்சணை எதிர்ப்பு சங்கத்தின் உறுப்பினர்கள்!"

"நல்லதா போச்சு...!"

"அதுதான் சொல்ல வருகிறேன். ஒரு பக்கம் ரொம்ப பரந்த நோக்கம். இன்னொரு பக்கம் கட்டுப் பெட்டித்தனம்... சிவப்பிரகாசம் தம்பதியர் விநோதமானவங்க... சம்யுக்தாவின் அப்பா உங்களோட சேர்ந்து வாழலைன்னு அவங்க கேள்விப்பட்டிருக்காங்க. தாயைப் போலத்தானே பெண் இருக்கும். இப்போ சரின்னு கல்யாணம் செய்துகொண்டு பிறகு கொஞ்ச நாளில் எனக்கு இந்த புருஷன் வேண்டாம் என்று விவாகரத்து கேட்டால்...? எங்களுக்கு ரொம்ப அவமானம்-கல்யாணப் பந்தலில் உறவினர்கள் கிசுகிசுப்பாங்க...பெண்ணைப் பெத்தவன் எங்கே என்று கேட்டால் நாங்கள் என்ன பதில் சொல்லமுடியும். எங்களுக்கு இந்த சம்பந்தம் வேண்டாம் என்று கமலா திட்டவட்டமாகச் சொல்லி விட்டாள்...!"



உடல் சாணாகக் கூனிக்குறுகி அவமானத்தில் பதைத்துப் போனாள், வசுந்தரா.

இத்தனை காலமும் அவள் இந்த அசம்பாவிதத்தை எண்ணியே பார்க்கவில்லை...

பணத்தினால் எல்லாவற்றையும் மூடிவிடலாம் என்று எண்ணியவளுக்கு பலத்த சாட்டை அடி.

"அப்படியா? இந்தக் காலத்தில் ஒவ்வொரு வீட்டில் ஒவ்வொரு கதை நடக்கிறது. அதைப்பற்றி பலர் பாராட்டரதில்லை-சம்யுக்தா நல்ல பெண்-என் கட்டுப் பாட்டில் வளர்ந்தவள்..!"

"நான் எத்தனையோ எடுத்துச் சொன்னேன். கமலா ஒரேயடியாக மறுத்துட்டா...நான் ரொம்ப வருத்தப்படறேன். அது கிடக்கட்டும் நாம வேறே சில இடங்களைப் பார்க்கலாமே...நம்ப மாதர் சங்கத்து உறுப்பினர் சீதாவைத் தெரியுமில்லையா..! அவளது இரண்டாவது பிள்ளை சுந்தரத்துக்கு பார்க்கலாமா?"

நாக்கைக் கடித்துக் கொண்டாள் வசுந்தரா. அவளது அந்தஸ்து என்ன...சீதாவின் நிலை என்ன?

அவளது கணவன் பெருத்த குடிகாரன் என்பது ஊரறிந்த சங்கதி.

சீதாவின் மூத்த மகன் தன் மனைவியோடு தனிக்குடித்தனம் செய்கிறான். இளைய பிள்ளையைப்பற்றி நல்லதாகப் பேசப்படவில்லை. அவர்களது பிளாஸ்டிக் பொருள் தயாரிப்பு நிறுவனம் மூக்கு வரை கடனில் மூழ்கிக் கிடக்கிறது...

அந்த இடத்தில் அவள் மகளைத் தள்ளப் பார்க்கிறாளே பத்மா? ஆவேசமாக எழுந்த கோபத்தை

Vennila

அடக்கிக் கொண்டு கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் ஆறு மணியாகி சில நிமிடங்களாகி விட்டிருந்தது.

"நான் கோவிலுக்குப் போய் விட்டு—பிறகுதான் வீட்டுக்குப் போகணும். சீதா வீட்டு வரனைப்பற்றி யோசித்து சொல்கிறேன்" மென்மையாக முறுவலித்து விட்டு காரில் ஏறிக்கொண்டாள்.

உடல் அனலாக எரிந்தது. நெஞ்சு பதைத்தது...

பாவி மனிதன்... அவளைத் தீராத அவமானத்தில் ஆழ்த்திவிட்டு ஓடிப்போய் விட்டாரே?...கணவனை உள்ளூர நொந்து கொண்டாள். கடற்கரையோரம் சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு வீடு திரும்ப விரும்பினாள்.

காரை நிறுத்தி டிரைவர் அவள் இறங்க கதவைத் திறந்து விட்டு உபசரித்தார்

"கடல் மணலில் கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டு வரேன்... ஒரு பக்கம் காரை நிறுத்தி வையுங்கோ" உத்திர விட்டு விட்டு அவள் மணல் பரப்பை நோக்கி நடந்தாள்.

பரவிக்கொண்டு வந்த இருளை ஒட்டவிடாது வெளிச்சம் இன்னமும் போக முரண்டு கொண்டிருந்த பொன் மாலைப்பொழுது.

கடற்காற்றின் சுகத்தை அனுபவித்த வண்ணம் இங்கு மங்கும் மனிதக் கூட்டம். ஆர்ப்பரிக்கும் கடலோடு ...சர மணலில் நின்று சாலை நனைக்கத் துடிக்கும் குழந்தைகளின் ஆர்ப்பாட்டம் ஒரு பக்கம்.

வசதியானதொரு இடத்தில் அமர்ந்து கொண்டிருக்க...தேடிக்கொண்டு மணல்மீது நடந்தவள் திகைப்போடு நின்று விட்டாள்.

ஒரு முழம் மல்லிகைச் சரத்தை வாங்கி தமது ஜோல்னா பையில் போட்டுக் கொண்டு திரும்பிய தாடிக்



கார மனிதர் அவள் பக்கம் திரும்பியவர் அதிர்ந்து போனார்.

"மிஸ்டர்! உங்களைத் தானே...?" என்று அவள் அதட்டிக் கொண்டு அருகில் வரும் முன்... அந்த மனிதன் வேகமாக சாலையை நோக்கி நடந்து நகர்ந்து கொண்டிருந்ததொரு பஸ்சிற்குள் அடைக்கலமாகி விட்டார் அடக்க முடியாத நெஞ்சு படபடப்போடு அவள்... சாலையை வியப்புடன் பார்த்தாள்.

நேருக்கு நேர் மிக அருகில் பார்த்துவிட்டும் அவர் யார் என்று அவள் அடையாளம் காண முடியவில்லையே? என்ன விந்தை? அவளைக் கண்டு அவர் ஏன் மிரண்டு கொண்டு விரைய வேண்டும்...

அவளை விட்டு ஓடிப்போன கணவரா அவர்? அவரைத் தேடிக்கொண்டு அவள் ஓடமுடியுமா... பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள். அது சரி... அந்தப் பூ யாருக்காக வாங்கப்பட்டது...அருகிலிருக்கும் வினாயகர் கோவிலுக்கு வாங்கி எடுத்துப் போகிறாரோ...

இதென்ன அக்கிரமம்? இல்லை பெரியதொரு அவலம். காதலித்து கழுத்தை நீட்டிய மனைவியான அவளுக்குத் தம்மோடு கொஞ்ச காலம் வாழ்ந்த கணவரை அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லையே?

அவர் வேறு யாராவதாக இருந்துவிட்டால்? ஏதோ ஒரு காரணம் பற்றி அவர் பயந்து கொண்டு மறைந்து கொள்கிறார் என்றால்... அவள் அவரைத் தன் கணவர் என்று எண்ணித் தவறாகப் பின் தொடர்வது எத்தனை பெரிய அசிங்கம்.

வீட்டை நோக்கி கார் விரைய அவள் மனம் கடந்த காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றை நோக்கி விரைந்து கொண்டிருந்தது

Vennila

## 21

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை பொழுதே பூபதி தம் குடும்பத்துடன் அங்கு வந்து நாள் முழுவதும் தங்கி விட்டுப் போவது என்று ஏற்பாடு.

அந்த மழை நாள் அன்று அங்கு வந்திருந்த பூபதியிடம், கோதை வற்புறுத்தியிருந்தாள்.

"மனைவியையும் குழந்தையையும் அழைத்து வருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கீங்க தம்பி... இந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டி வாங்களேன்!"

அவளது அன்புக் கட்டளையை மீற முடியாது அவர் ஒப்புக்கொண்டு விட்டிருந்தார்.

"மாலை காப்பி டிபனுக்கு நான் பலகாரக் கடையிலிருந்து இனிப்பும் காரமும் வாங்கிக்கொண்டு வந்திருக்கேன். கொஞ்சம் கடைத்தெரு வரை போய் நீ சமையலுக்கு வேண்டியதை வாங்கிட்டு வர முடியுமா?"— மகனைக் கேட்டாள்.

"தேவைப்பட்டதை சொல்லுங்க – வாங்கிட்டு வரேன்!" என்றபடி கொடியில் கிடந்த சட்டையை எடுத்து அவசரமாக அணிந்து கொண்டு முடியைச் சீராக்கிக் கொள்ளத் துவங்கினான் அருண்.

"இந்தக் காகிதத்தில் எழுதியிருக்கிற காய்களை பார்த்து வாங்கிட்டு வா... கத்திரிக்காயை வாங்கும் போது



சொத்தை இல்லாம பிஞ்சா பார்த்து பொறுக்கி வாங்கு... குட்டை புடலங்காய் கூட்டு வைக்க ருசியாக இருக்கும்...தேடி வாங்கிட்டு வா...கடையிலே சாமான்களை வாங்க இனி நீ தெரிஞ்சுக்கிறது நல்லதாச்சு—ஏன்னா எனக்கு வயசாகிட்டு வரது.!" கோதை புன்முறுவலித்தாள்.

அவள் சொல்ல வந்தது அவனுக்குப் புரிந்துவிட்டது. "நீ காலா காலத்திலே ஒரு கல்யாணம் செய்து கொண்டு எனக்கு வீட்டு வேலையிலிருந்து ஓய்வு தரணும்...!"

கல்யாணம் என்று நினைக்கும் போதே அவனது நினைவில் ஏன் சம்யுக்தா வந்துநிற்கிறாள்? சாத்யமான சங்கதியா அது?—

அம்மா கொண்டு வந்து வைத்த பிளாஸ்டிக் கூடையைத் தூக்கிக் கொண்டான். அவள் இருபது ரூபாய்த் தாளை அவனிடம் நீட்டிய போது, "என்கிட்டே பணம் இருக்கே அம்மா!" என்றான்.

"வீட்டு செலவுக்குன்னு மாதம்பிறந்ததும் பணத்தை எடுத்து ஒதுக்கி வச்சுடற பழக்கம் எனக்கு–அதுக்குள்ளேதான் எந்தச் செலவுகளையும் சமாளிக்கணும் என்பது என் திட்டம்!"

"விருந்தாளிகள் வராங்களே கொஞ்சம் இன்னிக்குக் கூடுதலா செலவாகுமே அம்மா?"

"இன்னிக்குக் கூடுதலா சம்பிரதாயமா சமைச்சுப் போடுவேன். நாளையும் மறுநாளும் இந்த அதிகப்படி செலவை ஈடுகட்ட சமையலை சுருக்கிக் கொள்வேன்– இப்படித்தான் முன்ன பின்ன—இழுத்துப் பிடிச்சுக் கொண்டு போய் இத்தனைக் காலம் நான் குடும்பத்தை நிர்வகிச்சுட்டேன்...எத்தனை காலம் இந்த தேர் ஓடும் சொல்லு!" புன்முறுவலுடன்...மகன் கையில்வற்புறுத்தலாக பணத்தை வைத்து விட்டு...உள்ளே திரும்பினாள்.

Vennila

"கதவைத் தாள் போட்டுக்கோங்க... சீக்ரெம் கடைக்கு போய்ட்டு வந்துடறேன்" என்றபடி மகன் கிளம்பினான்.

அன்று காலை பூபதி தமது குடும்பத்துடன் அங்கு வரப்போகிறார்... அவர் கூறியதிலிருந்து அவருக்கு ஒரு மகன் இருக்கிறான் என்பது மட்டுமேதான் அவனுக்குத் தெரியும். மிகவும் நட்புரிமை பாராட்டி பூபதி அவர்களைத் தேடிக் கொண்டு சில தடவைகள் அவர்கள் வீட்டுக்கு வந்து போனார்... ஆனாலும் அவர் தம் வீட்டு முகவரியைச் சொல்லி அவர்களை அங்கே வரும்படி அழைக்கவில்லை. தமது குடும்பத்தைப்பற்றி அவர் அதிகம் பேசியதே இல்லை—தோண்டித் துருவி அவர்களைப் பற்றி அவனும் விவரமாக எதுவும் கேட்டதில்லை... அம்மா கோதையும் விசாரித்ததில்லை... எப்படியோ முடிவில் தம் குடும்பத்துடன்—அங்கு அன்று வர ஒப்புக் கொண்டிருந்தார்... அதுவரை அவனுக்கு மிக்க மகிழ்ச்சியே.

வீட்டுக்கு வருகிறவர்களுக்கு அவன் பங்காக ஏதாவது வாங்கிக்கொண்டு போக வேண்டும் என்று மனம் ஆதங்கப்பட்டது. கடைத் தெருவில் முதலில் அம்மா விரும்பிய பொருள்களை வாங்கி முடித்தான். தன் பணத்திலிருந்து வரப்போகிற விருந்தாளியின் மகனுக்கு ஒரு சாக்லெட் கட்டியை வாங்கிக்கொண்டான் எல்லோரும் சாப்பிட கொஞ்சம் திராட்சைப் பழம் வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

காலை சூரியன் கடுமையாகவே புறப்பட்டிருந்தது. வீட்டை அடையுமுன்பே அவன் முகம் வியர்த்து கழுத்தோரம் நனைந்து போய்விட்டது.

அழைப்புமணியை அவன் தொட்டதுமே அம்மா கதவைத் திறந்து விட்டாள்.

மற்ற நாட்களைவிட கூடமும்-தாழ்வாரமும் படு சுத்தமாகக் காணப்பட்டன. கூடத்தில் அவன் அலமாரி



இடுக்கில் சொருகி வைத்திருந்த சந்தன ஊதுவத்தியின் நறுமணம் வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தது.

"வடை பாயசத்தோட விருந்துபோல இருக்கே...?" வேடிக்கையாகக் கேட்டபடி கூடையை தாழ்வாரத்தில் வைத்து விட்டு முகம்-கைகால்களைக் கழுவிக்கொள்ள முற்றத்தில் இறங்கினான் அவன்.

"விருந்துன்னா அதுகள் கட்டாயம் இருக்கணுமே. உனக்குப் பிடிச்ச சேமியா பாயசம்தான்... கவலைப் படாதே!"-அம்மா சிரித்தபடி கூடையை எடுத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

இத்தனை வயதிலும்... இவ்வளவு சிரமமான வாழ்க்கையிலும், கடும் உழைப்பிலும் கோதையிடம்... அபாரமான சுறுசுறுப்பு காணப்பட்டது.

முற்றத்துக்குறட்டில் உட்கார்ந்து கொண்டு... நாளேட்டை அவன் படித்து முடிக்குமுன் அம்மா சமையலை முடித்து விட்டு... முகம் கழுவி-முடியை வாரி கொண்டையிட்டுக் கொண்டு.. நெற்றியில் திருநீற்றுக் கீற்றுடன்-மாற்றுப்புடவையில் மிகவும் சுத்தமாக வந்து கூடத்தில் அமர்ந்து கொண்டாள்.

"அதுக்குள்ளாற சமைச்சு முடிச்சுட்டீங்களா" அவன் அதிசயப்பட்டான்.

"வந்தவங்களோட பேசமுடியாம உள்ளுக்கும்-கூடத்துக்கும் அலைஞ்சு கொண்டிருக்க எனக்குப் பிடிக்காது.. எல்லாத்தையும் சமைச்சு - மேடையிலே பாத்திரங்களில் மூடி பத்திரமா வச்சுட்டேன்! ஆச்சு, அவங்கள்ளாம் வர நேரம்தான்!" அம்மா சொல்லிமுடிக்கவில்லை.. வாயில் அழைப்பு மணி கிறுகிறுக்கத் தொடங்கியது.

"நான் போய் திறக்கிறேன்!" என்று பத்திரிக்கையை மடித்து ஒரு ஓரமாக வைத்துவிட்டு விரைந்தான் அவன்.

Vennila

கதவைத் திறந்தவனுக்கு ஒரு சிறு அதிர்ச்சி.

வேலைக்குப் போகும் முதல் தினம் கடைத் தெருவில் துணிவாங்க சென்றபோது சந்தித்தானே அதே பெண் மணியும் சிறுவனும் பூபதியுடன் வெளியே நின்று கொண்டிருந்தனர்.

அவனும் பிரமிப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தான்.

"அங்கிள்! நீங்களா?" இதுவா உங்க வீடு?" என்று மகிழ்ச்சியுடன் கேட்ட சிறுவன் தன் கரங்களை நீட்டி ஆவலுடன் அவனது கரங்களைப் பற்றிக்கொண்டான்.

"இவங்களா உங்க மனைவி? அன்னைக்கு நான் இவங்களை சந்திக்க நேர்ந்த சம்பவத்தை விவரிச்சேன்— பையன் பெயர் கார்த்திக் என்று சொன்னேன்...உங்க குடும்பத்தாரைத்தான் நான் சந்திச்சேன்னு நீங்க அன்னிக்கு கண்டுகொள்ளலையே" சிறிது மனத்தாங் கலுடன் கேட்டபடி அவர்கள் உள்ளே நுழைய வழி விட்டான் அருண்.

"நேரில் இவங்களை சந்திக்கும்போது உனக்கு மகிழ்ச்சிகரமானதொரு அதிர்ச்சி ஏற்படணும்...! ஒரு சஸ்பென்ஸ் கொடுத்து உன்னை ஆனந்தப்படுத்தணும்னு நான் தெரியாது போல இருந்துட்டேன்!"—சிரித்தார் பூபதி...

"அன்னிக்கு மட்டும் நீங்க சில்லறை கொடுத்து டிக்கெட் வாங்கி உதவி செய்திராட்டா...நான் அவமானப்பட்டு போயிருப்பேன். உங்க பேரைக்கூட நான் கேட்டுக்கலையேன்னு ரொம்ப வருத்தப்பட்டேன். அந்த நிகழ்ச்சியை இவர்கிட்ட நான் சொன்னப்போ... இவர் தமக்கு உங்களைத் தெரியும்னு கொஞ்சம் கூட காட்டிக்கலை...என் கணவர் சில சமயங்களில் ரொம்ப மர்மமாகவே நடந்துப்பார்...!" என்று புன்முறுவலுடன் பேசிய தாரா கோதைக்கு வணக்கம் சொல்லிக்கொண்டு உள்ளே வந்தாள்.



"வாம்மா... உட்கார்...! உன் கணவர் எங்களை எப்படி சந்திச்சார்... எப்படி இந்த சிநேகிதம் ஆரம்ப மாச்சுன்னு உன் கிட்டே சொல்லியிருக்கமாட்டார். அதையும் ஒரு சஸ்பென்சாக வச்சிருப்பார்... அருண் உனக்கு உதவ நேரிட்டது எப்படி ஒரு எதிர்பாராத நிகழ்ச்சியோ அது போல பூபதி தம்பி எங்க குடும்பத் தோட பழக நேரிட்டதும் ஒரு எதிர்பாராத சம்பவந் தான். வேலைக்குப் போகுமுன் கடைத்தெருவில் சாமான் வாங்கப் போன என் மகன் ஒரு விபத்துக்குள் ளாக இருந்தான். பூபதி தம்பி சட்டுன்னு கையைநீட்டி அவனைக் கட்டிப்பிடிச்சுக் காப்பாத்திட்டார்! நம்ப இரு குடும்பமும் நெருங்கிப் பழக இப்படி ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு நட்பை ஆரம்பிக்கணும்னு இருக்கு!"

"ஆச்சர்யமா இருக்கும்மா கேட்க! ஒரு வாலிபன் பெரிய விபத்தில் அகப்பட இருந்தான்—அதை தவிர்க்க என்னால் உதவ முடிஞ்சது பற்றி மகிழ்ச்சியடை கிறேன்னு என்கிட்டே சொன்னார். அந்த வாலிபன் பின்னால் எங்களுக்கு உதவப் போரார்னு நான் எதிர் பார்க்கலை!"

"எந்த ஒரு நல்ல காரியத்தின் பலனும் வீணாவ தில்லைன்னு பெரியவங்க சொல்லி இருக்காங்களே! நம்ப ரெண்டு குடும்பமும் நெருங்கிப் பழகணும்னு இருக்கு! இதெல்லாம் விட்டகுறை—தொட்ட குறைன்னு சொல்லு வாங்க...உட்காருங்க எல்லாரும்! தாகத்துக்கு ஏதாவது கொண்டு வரவா?" அன்போடு கோதை உபசரித்தாள்.

"ஒண்ணும் வேண்டாம்—உங்களுக்கு சமையலில் நான் கொஞ்சம் உதவி செய்யவா?" தாரா பரிவுடன் கேட்டாள்.

அந்தப் பெண்ணைப்பார்த்த உடனேயே கோதைக்கு ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

இடையில் வாயில் சேலையும்.. காதுகளில் முத்து தோடும்— கைகளில் பிளாஸ்ட்டிக் வளைகளுமான அலங் காரத்தில் நெற்றி நிறைய குங்குமப் பொட்டுடன் பளிச்

Vennila

சென்று காணப்பட்ட அந்தப் பெண் வயதில் பூபதிக்கு மிகவும் இளையவளாகவே தெரிந்தாள்... ஆனால் கணவன் பக்கம் திரும்பிய போதெல்லாம் அந்த பளபளத்த கண்களில் தெரிந்த கனிவு...நிறையவே இருப்பதை வியப்புடன் கவனித்தாள் கோதை...

'பழக மிகவும் இனியவர்களாக இருக்கும் இவர்கள் இருவரும் நீண்டகாலம் சுகமாக வாழவேணும்!' மனதிற்குள்ளே பிரார்த்தித்துக் கொண்டாள்.

"சாப்பாடு எல்லாம் தயாராகிட்டது அம்மா! கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம். யாருக்காவது பசித்தால் கூச்சப்படாமல் சொல்லலாம். உடனே சாப்பாடு பரிமாறப்படும்!" என்றாள் வேடிக்கையாக...

தோள் பையைத் திறந்து... அதிலிருந்து ஒரு பொட்டலம் கல்கண்டை எடுத்து கோதையின் கையில் வைத்தாள் தாரா.

"இதெல்லாம் எதற்கு?" என்று அவள் கேட்ட போது..."என் பிறந்த வீட்டுக்கு வெறுங் கையோட வருவேனா?" என்றாள் பரிவுடன். கோதை நெஞ்சம் நெகிழ்ந்து போனாள். அந்த பெண்ணின் கன்னத்தைத் தொட்டு... தன் நெற்றியுடன் சேர்த்து விரல்களைச் சொடுக்கி திருஷ்டி கழிக்க வேண்டும் போல ஒரு ஆவல் தன் உள்ளத்திலே எழுவதை உணர்ந்தாள்.

"நாம இப்படி உட்கார்ந்து பேசுவோம்" என்று கோதை காற்றோட்டமான பின்பக்கத்து நடையில் புது ஜமக்காளம் ஒன்றை விரித்துப் போட்டு தாராவின் கையைப் பற்றி அழைத்துச் சென்று உட்காரவைத்தாள்.

"நாம இங்கே உட்கார்ந்து பேசுவோம்" என்று வேடிக்கையாகக் கூறியபடி மகனை தம் மடிமீது வைத்துக்கொண்டு கூடத்து நாற்காலியில் அமர்ந்தார்...பூபதி.

அருண் தான் வாங்கி வந்த சாக்லெட் கட்டியை கார்த்திக்கிடம் கொடுத்தான்.



"நீங்களும் அப்பாவும் முதலில் கொஞ்சம் சாப்பிடுங்கள்" என்று ஆசையுடன் குழந்தை சாக்லெட்டைப் பிட்டு அவர்களிடம் நீட்டி விட்டு மீதியைத் தன் வாயில் திணித்துக் கொண்டான்.

கூடநலமில்லாது... மிகவும் நல்ல முறையில் கார்த்திக் வளர்க்கப் பட்டிருப்பதைக் கண்டு வியப்புடன் அவன் முகத்தையே பார்த்த அருணது மூளையில் மின்னலடித்தது போன்று ஒரு நினைவு எழுந்தது...அந்த முகத்தை எங்கேயோ பார்த்தது போல தோன்றியதின் அதிசயம் இப்போது நன்றாகவே விளங்கியது.

கார்த்திக் அப்படியே தந்தையின் சாயலை உரித்துக் கொண்டு வந்திருந்தான். அதே கூர் மூக்கு...அலையாகச் சரிந்த முடி...சிரிக்கும் கண்கள்...சிவந்த நிறம்... அத்தோடு மட்டுமா...அவனது நினைவில் சிறிது நெருடல் ஏற்படவே சட்டென்று முதல் நாள் மாலை நடந்த அந்த சிறு சம்பவத்தை நினைத்துப் பார்த்தான்.

அன்று மாலை அவனுக்கு தொழிற்சாலையில் மேற்பார்வையிடும் வேலை மிகவும் அதிகம் இருந்தது.

சில நாட்களாக அந்தப் பகுதியைப் பார்வையிட சம்யுக்தா வந்து போய்க் கொண்டிருந்தாள்.

அவள் அன்றாடம் அங்கே வந்து தன்னுடன் ஜோடியாக நடந்து அந்தப் பகுதியைப் பார்வையிடுவதையும்–அவளிடம் பல கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொள்வதையும் அவன் மிகவும் வரவேற்றான்.

"அப்படியா? எனக்குத் தெரியாது...ரொம்ப ஆச்சர்யமாக இருக்கே!" என்று ஆர்ப்பரித்தபடி அவள் சொல்வதைக் கூர்மையாக அவன் கேட்கும் போது அவளது முகத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிப் பிரதிபலிப்புகளையும்...கண்களில் மின்னும் பளபளப்பை

Vennila

யும்...மிகவும் ஊன்றிப் பார்த்து மகிழ்வது அவனது வழக்கமாகி விட்டிருந்தது.

அந்த முகச் சாயலில் தனக்குப் பழக்கமான வேறு ஒருவரின் முகச்சாயலின் ஒற்றுமையைப் பலமுறை கண்டு தன்னுள் வியப்படைந்திருக்கிறான். அந்த வியப்பில் ஒரு தடுமாற்றம். எப்படி அது சாத்திய மாகும் என்று இடையே ஒரு சந்தேகம் அவனைக் குலுக்கிக் கொண்டிருந்தது.

அன்று மாலை அவனுடன் சம்யுக்தா அந்தப் பகுதி முழுவதையும் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டு வந்தாள்.

"ரொம்ப நன்றி" என்றபடி விடை பெற்றுக் கொண்டு அவள் திரும்ப முற்பட்டபோது.. தோள் பையைத் திறந்து தன் கையிலிருந்த குறிப்பு நோட்டுப் புத்தகத்தை வைக்க முற்பட்டாள்...சட்டென்று பை கைதவறி தலைக்குப்புற தரையில் விழுந்து அதிலுள்ள பொருள்கள் நாலா பக்கமும் சிதறி ஓடின.

அடடா...என்றபடி சட்டென்று குனிந்து அவைகளைப் பொறுக்கிப் பைக்குள் போட்டு அவளிடம் கொடுத்தான் அருண். அப்போது கவனித்தான். சற்று தூரத்தில் ஒரு பிளாஸ்டிக் உறை கிடந்தது.

"இங்கே ஒண்ணு விட்டுப் போச்சு!" என்றபடி அதைக் கையில் எடுத்தபோது உறைக்குள் ஒரு மனிதனின் புகைப்படம் இருப்பதைக் கண்டான். உறை மீது படிந்த மண்ணைத் தன் கையால் துடைத்து சுத்தப் படுத்தி அவளிடம் கொடுக்க நீட்டியபோது...அந்த மனிதனின் முகத்தை எங்கேயோ பார்த்திருப்பது போன்ற நினைவு...மனதைச் சுண்டி இழுத்தது...

ஒரு ஆண் பிள்ளையின் படத்தைத் தன்னுடன் அவள் வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றி அருண் தவறாக நினைக்கலாம் என்று எண்ணினாள் போலும்.



"இது என் தந்தையின் புகைப்படம்! பல ஆண்டுகளுக்குமுன் எடுக்கப்பட்டது...என் தந்தை எங்களோடு வசிக்கவில்லை. எங்கே இருக்கார் என்று கூட தெரியாது - எனக்கு பிரச்சனைகள் ஏற்படும்போது...இந்தப் படத்தை எடுத்துப்பார்ப்பேன்...மனசுக்கு ஆறுதலாக இருக்கும்!" படபடவென்று கூறிவிட்டு அவள் நகர்ந்து விட்டாள்.

அவள் குரலில் தொனித்த வேதனையை உணர்ந்து அவன் மிகவும் வருந்தினான்.

"இவ்வளவு போக பாக்கியங்கள் நடுவே...இப்படி ஒரு துயரமான பிரச்சனை இந்தப் பெண்ணுக்கு இருக்கிறதே...கவலையும்-சங்கடமும் யாருக்குத்தான் இல்லை" என்று எண்ணினான். இந்த சம்பவத்தை அவன் பூபதியிடம் சொல்ல விரும்பினான்.

ஆனால் அவர் முகத்தை பார்த்தபோது-மடியிலிருந்த குழந்தையின் முகத்தை ஊன்றி கவனித்தபோது —சம்யுக்தாவின் முகத்தை நினைவிற்குக் கொண்டு வந்து...ஆராய முற்பட்டபோது...அவன் மனதில் திடீரென்று ஒரு கலவரம் ஏற்பட்டது...

'இதென்ன வேடிக்கை?'-அவன் மனம் குழம்பியது...

"என்ன பெரிசா யோசிக்கிறே...?" வேடிக்கையாக அவன் முதுகைத் தட்டினார், பூபதி—

"ஒன்றுமில்லை... கார்த்திக்கிடம் அம்மாவைவிட அப்பாவின் சாயல்தான் அதிகம்னு மனசில் தோணித்து ...அவ்வளவுதான்" என்று சமாளித்தான்.

Vennila

# 22

சாப்பாட்டறையில் வந்து அமர்ந்த வசுந்தராவிடம் வழக்கமான மிடுக்கு காணப்படவில்லை.

வீட்டுக்குள் வந்தவள் பரபரப்புடன் குளியலை முடித்துக்கொண்டு வெகு நேரம் பூஜை அறையில் அமர்ந்திருந்ததை குப்புசாமி கவனித்தார். முகம் சோர்ந்து கண்கள் இடுங்கி கவலையே உருவாகி விட்டவளைப் பார்க்க அவருக்கு அதிசயமாகத்தானிருந்தது. அவள் முகத்தில் அப்பி நின்ற துயரத்திற்கும்-கண்கள் பிரதிபலித்த கலவரத்திற்கும் அவருக்குக் காரணம் விளங்கவில்லை.

ஒன்றே ஒன்றை மட்டும் அவர் நன்றாக உணர்ந்து கொண்டிருந்தார். வசுந்தரா தனது நிறுவன சம்பந்தப்பட்ட சிக்கல்கள் எதையாவது சிந்தித்துக் கவலையில் மூழ்கி விட்டிருந்தால் வழக்கமாக அவளிடம் காணப்படும் ஆர்ப்பாட்டங்கள் அடங்கிப்போய் விடும்-குரல் தணிந்து பார்வையில் கடுமை மறைந்து அவள் மிகவும் சாதுவாகத் தென்படுவாள்.

உண்மையில் அவள் ஒரு சராசரி பெண்தான். பணத் திமிரும் பதவி என்கிற அகம்பாவமும் அவளது மென்மையான பெண்மையை சீரழித்து-போலித் தனமானதொரு மிடுக்கையும் கர்வத்தையும் தோற்றுவித்திருந்தன. எப்பொழுதாவது சில சமயங்களில் அவளது அகம்பாவம் குலைந்து போலியான மிடுக்கு மறைந்து வேஷம் கலைந்து அவள் மிரட்சி மிக்கவளாகத் தென்படுதுண்டு.



வழக்கம்போல அவள் நிமிர்ந்து அவரைக் கடுமையாகப் பார்க்கவில்லை. வேண்டுமென்றே அதிகமாக ஒரு சப்பாத்தியை அவள் தட்டில் போட்டதற்கு அவள் கோபம் கொள்ளவில்லை.

"எனக்குப் பசியே இல்லை...!" என்று முணுமுணுத்து விட்டு தனக்கு வேண்டாத உணவை ஒதுக்கியபடி அவள் எழுந்து விட்டாள்.

கைகளைக் கழுவிக்கொண்டு அவள் முன்னறையில் உட்கார்ந்து பத்திரிக்கைகளைப் படிக்கவில்லை-தொலைகாட்சி பெட்டியில் செய்திகளைக் கேட்கவில்லை.

"எனக்கு உடம்பு ரொம்ப சோர்வா இருக்கு-நான் போய் தூங்கப் போறேன்" எனப் பொதுவாகக் கூறி விட்டு மாடிப் படிகளில் மெல்ல ஏறினாள்.

"ஏன் பாப்பா அலுவலகத்திலே ஏதாச்சும் தகராறு நடந்ததா...?" குப்புசாமி மெல்லக் கேட்டார்.

"ஒண்ணுமில்லையே— உங்களுக்குத் தெரியாதா தாத்தா... அம்மாவின் மூடுகளில் இது ஒன்று...!" சூள் கொட்டிவிட்டு சம்யுக்தா எழுந்து முன்னறைக்குப்போய் அமர்ந்து கொண்டாள்.

தன் அறையை அடைந்த வசுந்தரா—விளக்கை போட்டு விட்டு கதவைத் தாழிட்டுக் கொண்டாள். பார்வையைக் கண்ணீர் மறைத்தது.

அன்று மாலை அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும்-அவமானமும் நெஞ்சை பளுவாக இன்னமும் அழுத்திக் கொண்டிருந்தன.

பார்வதி எலக்டிரிக்கல்ஸ் எனும் பெரிய நிறுவனத்தின் தலைவி...கோடிக்கணக்கான சொத்துக்கு அதிபதி...



Vennila

பெரிய தொழிற்சாலையை சாமர்த்தியமாக நடத்துகின்ற புத்திசாலி...என்று பணக்கார புள்ளிகள் நடுவே தனக்கு பெருத்த மதிப்பு இருக்கிறது என நம்பிக்கொண்டிருந்தவளுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சி? மேல்மட்டவாசிகள் சிலருக்கு அவள் கணவனால் கைவிடப்பட்டவளாக அல்லவா காட்சி அளிக்கிறாள்?

அவமான உணர்வில் உடல் அனலாக எரிந்தது. விளக்கை அணைத்துவிட்டு படுக்கையில் சாய்ந்து கொண்டாள். பார்த்த படக்காட்சியை மீண்டும் வீடியோவில் போட்டு பார்ப்பது போல அன்று மாலை அவளது சிந்தனையில் புரண்ட கடந்துபோன சம்பவங்கள் மீண்டும் கோர்வையாகத் தொடர்ந்தன.

அப்பொழுது அவளுக்கு சம்யுக்தாவின் வயது இருக்கும். கல்லூரியில் பி ஏ. பட்டம் பெற்றுவிட்ட பெருமை... அவளும் பெற்றோருக்கு ஒரே மகள். அப்பா சேனாபதியின் வியாபாரம் ஓகோ என்று இருந்த காலம். பிள்ளை இல்லாவிட்டால் என்ன? பெண்ணுக்கு தக்க பயிற்சி அளித்து தமக்குப்பின் அந்த வியாபாரத்தை அவள் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று சேனாபதி விரும்பினார். பட்டதாரியான சில நாட்களுக்குப் பின்னர்... மகளைத் தமது வியாபார நிறுவனத்திற்கு கூட அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

"கல்யாணத்திற்கு நிற்கிற பெண்ணைக் கண்ட இடத்துக்கெல்லாம் ஏன் கூட்டிகிட்டுப் போறீங்க?" அம்மா பொருமினாள்.

"அது கண்ட இடமில்லை. அவள் வருங்காலத்திலே நடத்தப் போற வியாபார நிறுவனம். நாளைக்கு நமக்கு மருமகனாக வரப்போகிறவன் எனக்குப் பின்னால் பதவியில் உட்கார்ந்துகொண்டு என் பெண்ணை ஆட்டிப் படைக்கக் கூடாது பார்!"



அப்பா தமது பெண் அல்லி ராணியாக தர்பார் நடத்த வேண்டுமென்று விரும்பினார்.

அப்பாவின் போதனையில் அவளுக்கு தான் என்ற அகம்பாவம் தலைக்கேறிவிட்டிருந்தது.

ஒரு வருஷகால வியாபார பயிற்சியைப் பெற்ற பின்னர் ஒருநாள் காலை அவள் வழக்கம் போல தங்களது நிறுவனத்தைச் சுற்றி பார்வையிட்டபடி வளைய வந்து கொண்டிருந்தாள்.

அப்பாவின் பிரத்யேக அறைக்கு அடுத்ததான பெரிய அறையில் அவள் வந்ததைக் கூட கவனிக்காது—தன் இருக்கையில் அமர்ந்திருந்த இளைஞர் குளித்த தலையுடன் மேஜை மேலிருந்த ஃபைல் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் மேஜைக்கெதிரே கைகளைக் கட்டிக் கொண்டு நின்றாள். உண்மையாக அவர் ஃபைலில் உள்ள முக்கிய வியாபார சங்கதியை ஊன்றிப் படித்துப் பார்க்கிறாரா...அல்லது அப்படி ஒரு நடிப்பா? அவளுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"மிஸ்டர்! உங்களைத்தானே?...நான் நிற்கிறது கண் தெரியலை?" அதட்டினாள்.

"எனக்கு வேலை இருக்கு என்ன வேணும்?" அதட்டியபடி நிமிர்ந்தார் அவர்.

வாலிபனது கோதுமை நிறம்...கூர்மூக்கு...சுருண்ட கிராப்பு முடி—கண்களில் பளிச்சிட்ட சிரிப்பு...எல்லாமே அவளை அதிர அடித்துவிட்டன.

"நான் மிஸ்டர் சேனாபதியின் வியாபார பங்குதாரர்—உங்களுக்கு அது தெரியுமா?" தன்னை சுதாரித்துக் கொண்டு கர்வமாகக் கேட்டாள்.

Vennila

உட்கார்ந்திருந்த அந்த இளைஞர் எழுந்து நின்று கைகூப்பி வணங்கினார்.

"சித்தே முன்னே பார்க்காது போல உட்கார்ந்திருந்தீங்க...சங்கதியை நான் சொன்னதும் எழுந்து கும்பிடு போடுறீங்களே...நீங்க யார்?" அதட்டலாகக் கேட்டாள்.

"இந்த வியாபாரத்திலே பங்குதாரர் என்கிறீங்க... மிஸ்டர் சேனாபதி என்னை இன்றிலிருந்து வேலைக்கு அமர்த்தியிருப்பது கூட உங்களுக்கு தெரியவில்லையே? உங்களுக்கு நான் கும்பிடு போடவில்லை—இந்த நிறுவனத்தின் மற்றொரு பங்குதாரர் என்கிற உங்க பதவிக்குக் கும்பிடு போட்டேன்!" வரிசைப் பற்கள் பளிச்சிட அந்த வாலிபன் சிரித்தபோது அவளது கோபம் பொய் வேடம் பூண்டது.

"ரொம்ப எகத்தாளமா பேசுகிறீங்க?"

"ஐயோ? நான் நினைக்கிறது வேறு—மிஸ்டர் சேனாபதி பலே ஆள் போலிருக்கே—தன் வியாபாரத்தின் பங்குதாரருக்குச் சொல்லாமல் காதும் காதும் வைத்தது போல் என்னை வேலைக்கு அமர்த்தி விட்டிருக்கிறார்—இன்னும் இதுபோல எத்தனை காரியங்கள் செய்து இந்த இளம் பெண் தலையில் மிளகாய் அரைக்கிறாரோ என்று ஒருகணம் பரிதாபப்பட்டுப் போனேன். அவ்வளவுதான்!"

"மிஸ்டர்—! சேனாபதி யார்னு நினைச்சு பேசுகிறீங்க...! அவர் மிளகாய் அரைக்கவேண்டாம்—மஞ்சளும் அரைக்க வேண்டாம். அவர் என்னைப் பெற்ற தந்தை...!"

"என் பெயர் லோகநாதன்...இப்போ புரிகிறது... பெயருக்கு சும்மா நீங்க ஒரு பார்ட்னர்...அவர் எடுத்துச் செய்யும் காரியங்களைத் தெரிந்துகொள்ள உங்களுக்கு உரிமை கிடையாது!"



"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை—இந்த வியாபாரத்தில் நடக்கும் அத்தனை சங்கதிகளும் எனக்குத் தெரியும். உங்களை இங்கே வேலைக்கு வச்சது ஒரு திடீர் முடிவாக இருக்கலாம்!"

"பலே! பலே! சரியாகச் சொல்லிட்டீங்களே? மிஸ்டர் சேனாபதி என்னை இன்று காலைதான் நேர்முகப் பேட்டியில் பார்த்தார். உடனே வேலைக்கு ஆர்டர் கொடுத்துட்டார். நான் வேலையில் சேர்ந்து அரை மணி நேரம் கூட ஆகலை. அதற்குள் இந்த வியாபாரத்தின் மற்றதொரு பங்குதாரரான உங்களை சந்திக்க முடிந்தது என் பாக்யம்" சிரித்தார்.

வசுந்தராகூடச் சிரித்துவிட்டாள். அந்த வாலிபனின் தோற்றம் துணிச்சலான வேடிக்கைப் பேச்சு, இரண்டும் அவளுக்கு எடுத்த எடுப்பிலேயே பிடித்துப் போயிற்று—அவருக்கும் அவளை ரொம்ப பிடித்துவிட்டிருந்தது...அடுத்தடுத்த நாட்களில் அவராக அவளது அலுவலக அறைக்குள் அடிக்கடி வியாபாரம் பற்றிய சந்தேகங்களைக்கேட்டுத் தெளிய வந்து போய்க்கொண்டிருந்தார்.

அவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று அடம்பிடித்தாள் அவள். அப்பா ஆத்திரப் பட்டார். குதித்தார்...குறுக்கே நின்றார்.

"என்ஜினியர் பட்டம் மட்டும் போதுமா? அவனது 'பாக்கிரவுண்ட்' என்ன தெரியுமா...?" மனுசனுக்கு சொத்து மேலே வானம்-கீழே பூமி. பெத்தவங்களை சின்ன வயதிலே இழந்துட்டு பிள்ளையில்லா மாமன் கிட்டே கிராமத்திலே வளர்ந்து ஆளானவன். மாமன் மதுரைக்கு பக்கத்து மஞ்சங்குடி கிராமத்திலே உள்ளங்கை அளவு புஞ்சை நிலமும்...ஓட்டு வீடும் சொத்தாக வச்சுக் கொண்டிருப்பவர்...அவைகள் மேலேயும் ஏகப்பட்ட கடன். அவனையா நான் மருமகனாக

Vennila

ஏத்துக்கணும்?'' கத்தினார்...கத்தினார் - அப்பா காட்டுக் கத்தலாக சத்தம் போட்டார்.

ஆனால் அவளது பிடிவாதம் வெற்றி பெற்றது. லோகநாதன் மாப்பிள்ளையானார். கொஞ்ச நாட்கள் இருவரும் மனமொத்த தம்பதியராக வாழ்ந்தனர்.

நான் என்ற அகம்பாவம் அவளது வாழ்க்கையில் அடிக்கடி குறுக்கிட்டு கோளாறு செய்தது.

பிடிவாதத்தில் லோகநாதனும் குறைந்தவராக இருக்கவில்லை. இருவரது மன உணர்வுகளும் ஒத்துப் போகாது...பிரிந்து போராடத் துவங்கின. 'காசில்லாதவர் அவர்' என்று காலில் போட்டு மிதித்து நுவைக்கப் பார்த்தாள் அவள்.

"ஒரு புழுவுக்குக் கூட தன்னை நசுக்குகிறவனை திருப்பி எதிர்க்க - தலையைத் தூக்கிப் பார்க்கும் சக்தி இருந்தபோது. ரோஷமிக்க ஒரு ஆண் மகனுக்கு எதிர்க்க தெம்பு இருக்காதா?...பணம் இன்று வரும் நாளை போகும். மனிதனது சுயகவுரவமும் - மானமும் அப்படிப் பட்டவை அல்லவே?'' என்று தர்க்கம் செய்தார்.

அவர்களது அபிப்ராய பேதங்கள்—சிறு பூசல்களாக ஆரம்பித்து பெருத்த சண்டைகளாக மாறின. கணவனும் —மனைவியும் ஒரே வீட்டில் விரோதிகள் போல ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருந்தனர்.

வீட்டு மாப்பிள்ளையாகிவிட்ட லோகநாதன் மீது— சேனாபதிக்கு உள்ளூர வெறுப்பு.

"காசில்லாத பயல்...காதல் வலை விரித்து என் பெண்ணை மடக்கி விட்டதோடுவீட்டோடு உட்கார்ந்து விட்டான். நான் பாடுபட்டு சம்பாதித்த பணத்தில் கிடைக்கும் சுக போகங்களை மூக்கு முட்ட அனுபவிக் கிறான். அந்துடன் பெண்டாட்டியை இழந்துவிட்ட இவனது ஏழை 'மாமன் வேறு வந்து அடிக்கடி டேரா



போட்டு விடுறோன். பட்டிக்காட்டு மனிதனுக்கு நாகரிக வாழ்க்கையைப் பற்றி என்ன தெரியும்? சாப்பிட்டு கழுவிய கைகளை ஜன்னல் திரை யில் துடைக்கிறான். காட்டுமிராண்டி... புழுதிபடிந் துள்ள கால்களைத் தூக்கி சோபாமீது வைத்துக் கொண்டு தூங்குகிறான்...இப்படிப்பட்ட ஒரு அநாகரிகச் சகதியில் காலை வச்சிருக்கோம்!'' அடிக்கடி மருமகன் காதுபட புலம்பினார்.

அப்பாவின் வெறுப்பு மகளையும் தொத்திக் கொண்டது...வாயை அடக்கமாட்டாது கணவனிடம் தர்க்கிக்கும் போது, சொல்லி விட்டாள்.

"கண்ணுக்கு இனியவன்னு கல்யாணம் செய்து கொண்டேன்-கருத்துக்குக் கயவன்னு யார் கண்டா...?''

"அப்படியா?'' ஏளனமாகச் சிரித்தார் லோகநாதன்.

"உங்க மாமா அடிக்கடி இங்கே வரதை என் அப்பா விரும்பலை!''

"அப்படின்னா நீ என்னோடு புறப்படு. நாம வெளி யிலே போய் தனிக்குடித்தனம் வச்சுக்குவோம்!'

"இங்கே எனக்குக் கிடைக்கிற வசதியெல்லாம் உங்க சம்பளத்திலே எனக்குக் கிடைக்குமா?''

"ராமன் இருக்கிற இடம் அயோத்தின்னு நீ என் னோட புறப்படணும்.. நான் சாப்பிடுகிற கஞ்சியையோ கூழையோ நீ பங்கிட்டுக்கணும்... அதுதானே மனைவி என்பவளின் கடமை!''

"இந்த சீதை இருக்குமிடம்தான் மிதிலைன்னு நீங்க இங்கேதான் இருக்கணும். நான் என் பெற்றோர்களை விட்டு வெளியே வரமாட்டேன். அப்படித்தானே நம் கல்யாணத்தின்போது பேச்சு?''

Vennila

"ஆமாம்... மாமனார் வீட்டு மாப்பிள்ளையாக இருக்க ஒப்புக்கொண்டேன். அவருடைய வீட்டு வாசல் மிதியடியாக இருக்க மறுக்கிறேன்?"

இப்படி பல தர்க்கங்கள்-விவாதங்கள் அவர்களிடையே அதிகமாகின. புக்ககத்து மாமாவுக்கு அரைகுறையாக சங்கதி காதில் விழுந்தது. அவர் வீட்டுக்கு வரவே இல்லை.

மனமொத்த தம்பதியராக இருந்தபோது அவர்களுக்குப் பிறந்த சம்யுக்தா... பெற்றோரிடம் ஏற்பட்டுள்ள மனத்தாங்கலைப் புரிந்து கொள்ளாத குழந்தைப் பருவத்திலிருந்தாள்.

கிராமத்திலேயே தங்கி விட்ட மாமா...ஒரு நாள் திடீர் என்று மாரடைப்பில் மறைந்துபோனார். கடமைக்காக அவள் மட்டும் கணவனுடன் கிராமத்திற்குச் சென்று... மாமாவின் காரியங்கள் முடியும் வரை பற்களைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருந்தாள்.

அதற்குப் பின்னர் ஒரு நாள்—அவள் தந்தை அவளை அழைத்து மிகவும் தாழ்ந்த குரலில் விசாரித்தார்.

"உன் கணவனிடம் மெல்ல கேட்டுப்பார். லோகநாதன் மட்டமான இந்தக் காரியத்தை செய்வான்னு நான் நினைக்கலை.. என் அலுவலக அலமாரியில் நான் லாக்கரில் வச்சிருந்த பத்தாயிரம் ரூபாயைக் காணலை—நேற்று முந்தின தினம் வங்கியிலிருந்து எடுத்து வந்த பணம். நூறு ரூபாய் நோட்டுகளாக அப்படியே ஒரு கத்தையாக இருந்தது. அந்த அலமாரியை நானும் உன் கணவனும்தான் திறப்பது வழக்கம். மாமனது இறுதிச் சடங்குகளை முடிக்க கையில் பணமில்லை என்று யாரிடமோ கடன்பட்டிருக்கிறான். அதை அடைக்க இப்படி ஒரு குறுக்கு வழி— என் மானம் போகிறது!" படபடவென்றார் ஆத்திரத்துடன்.



வசுந்தராவுக்கு அவமானமும் ஆத்திரமும் தாளவில்லை. உடனே கணவனிடம் நேரிடையாகக் கேட்டு விட்டாள்.

"அப்பாவின் பீரோவிலிருந்து பத்தாயிரம் ரூபாயைக் காணவில்லையாம்."

"உன் அப்பா எனக்குத் திருட்டுப்பட்டம் வச்சுட்டாரா?"

"கேட்கிறதுக்குள்ளே ஏன் இப்படி சீரணும்? என் நகைகளில் ஒண்ணைத் தரேன்—அதை வித்து முதல்ல அந்தப் பணத்தைக் கொண்டு வந்து பீரோவில் வச்சுடுங்க!"

"அப்போ நான் அதை எடுத்ததாக முடிவு செய்துட்டியா?"

"நீங்க ரெண்டு பேர்தான் அந்தப் பீரோவைத் திறக்கிறவங்க. உங்களை மீறி பணம் எங்கே போகும்?"

"மாமனாரைத் தொங்கிக்கொண்டு வாழும் மருமகன் என்கிறது போதாது போல இப்போ திருட்டுப் பட்டமா? நான் எடுத்தேன்னு நம்புகிறியா?"

"தேவை வந்துட்டா நல்லவனும் கெட்டுப் போகிறான். உலகத்திலே நடக்கிற சங்கதிதானே...என் அப்பா சொல்றதை நான் நம்பறேன்... உங்களாலே நான் இப்போ என் தந்தை முன் தலைகுனிஞ்சு நிக்க வேண்டி வந்துட்டது!"

லோகநாதன் பதில் பேசவில்லை—அன்று பகல் சாப்பிடாது அவர் வீட்டைவிட்டு வெளியே போனவர் திரும்பவில்லை.

"திருட்டுப் பயல்...அந்த பத்தாயிரத்துடன் எத்தனை தூரம் ஓடமுடியும்? திரும்பி வந்தா கால் முட்டிகளை பேத்திடுவேன்" ஆங்காரத்துடன் அலறினார் அப்பா சேனாபதி.

Vennila

அவமானமும் ஆத்திரமும் தாளாது அவள் அழுதாள். இரண்டு நாட்களுக்குப் பின்னர் அப்பா அவளைத் தம் அறைக்கு வரும்படி அழைத்தார். கதவை சாத்திவிட்டு அவளை மேஜைக்கருகே கிடந்த நாற்காலியில் உட்காரச் சொல்லி விட்டு மெல்லிய குரலில் பேசினார்.

"வசுந்தரா! உன் கிட்டே நான் மன்னிப்புக் கேட்கிறேன். உன் அப்பாவை நீ கட்டாயம் மன்னிக்கணும். அந்த பத்தாயிரம் ரூபாய்களைப் பற்றி தான் அவசரப் பட்டு பேசிவிட்டேன்!"

"என்னப்பா சொல்றீங்க?" மகள் வியப்புடன் விழித்தாள்.

"மூன்று நாட்களுக்கு முன் நான் எழுதிக் கொடுத்த தொரு காசோலைக்கு ஈடு செய்ய அந்தப் பணத்தை நான் வேறொரு வங்கியில் சேர்க்க வேண்டியிருந்தது. செயலாளர்கிட்டே நான் அதை கொடுத்துக் கட்டச் சொன்னது சுத்தமா மறந்து போச்சு—என்னை அப்படி பார்க்காதே. எனக்கு வயசாகிட்டதாலே...ரொம்ப ஞாபக மறதி வந்துட்டது. இன்னிக்குக் காலையிலே நம்ப செயலாளர் பேச்சு நடுவே அதைப் பத்தி சொன்ன போது நான் திடுக்கிட்டுப் போனேன். வீணா உன் புருசன் மேலே திருட்டுக் குற்றத்தை சுமத்திட்டேன்"

வசுந்தரா கோபத்துடன் குமுறி அழுதாள்.

"அவன் வீடு திரும்பி வந்ததும் நானே மன்னிப்புக் கேட்டுக்கிறேன். அழாதேம்மா!" அப்பா தேற்றினார். வீட்டைவிட்டு வெளியேறிய மாப்பிள்ளையை சல்லடை போட்டுத் தேடினார். எங்கு தேடியும் லோகநாதன் அகப்படவேயில்லை. அன்று பிற்பகல் வெளியேறிய மனிதன் பின்னர் வீடு திரும்பவில்லை.

கழுத்தின்மீது சூடாக உதிர்ந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.



அதற்குப் பின்னர்...சில நாட்களில் அப்பா சேனாபதி காலமாகி விட்டார். தன்னந்தனியே ஒரு பெண் குழந்தையுடன்... அவள் துணிவாக தலையை நிமிர்த்திக்கொண்டு...பிடிவாதமே தன் துணையாக வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டாள்—வெற்றி பெற்றாள். அது முழுமையான வெற்றியாக இருக்கவில்லையே?

மீண்டும் அந்தத் தாடிக்கார மனிதனின் முகம் நிழல் போல நினைவை அலைக்கழித்தது.

'ஆமாம் அந்த மல்லிகைப் பூச்சரத்தை அந்த மனிதர் யாருக்காக வாங்கியிருப்பார்? விநாயகர் கோவிலுக்கு எடுத்துப்போக வாங்கியிருக்க முடியாது... கோவில் அருகேதான் பெரிய பூக்கடை இருக்கிறதே... கடற்கரையிலிருந்து மல்லிகைச் சரத்தை வாங்கிக் கொண்டு போக வேண்டிய அவசியம் இல்லையே? அப்படியென்றால்...அந்தத் தாடிக்காரருக்கு மனைவி ஒருத்தி வீட்டில் இருக்க வேண்டும்!'

எப்படி சாத்தியப்படும்? அவர் மட்டும் மறைந்து போன லோகநாதனாக இருந்தால்—மறுமணம் செய்து கொள்ள சட்டம் இடம் தராதே...கல்குண்டு போலே அவள் உயிரோடு இருக்கிறாளே—அவர்களுக்கிடையே விவாகரத்து என்ற சட்டபூர்வமான பிரிவு ஏற்படவில்லையே?

இல்லா விட்டால்தான் என்ன?...ஆணுக்கும் பெண்ணுக்கும் சமூகத்திலே...தரப்படும் அந்தஸ்தில் வித்தியாசம் ஏராளம் இருக்கிறதே? கணவனில்லாத அவள்... சமூகத்தின் நன்மதிப்பைப் பெற—மனதை அடக்கி—உணர்வுகளை ஒதுக்கி—துறவியாக வைராக்கியமுடன் வாழ்ந்து காட்டக் கடமைப்பட்டவள்.

லோகநாதன்—கல்யாணம் என்ற பந்தமின்றி...ஒரு பெண்ணுடன் மறுபடி வாழ்ந்தால்கூட யாரும் அவரை

Vennila

நிந்திக்கமாட்டார்கள். பாவம்...அவர் என்ன செய்வார்... ஒரு தலைவலி—கால்வலி என்றால் வீட்டில் ஒருத்தி இருக்கணுமே...பரிதாபப்பட்டு பேசுவார்கள்.

சமூகத்திலே... ஆணுக்கும்—பெண்ணுக்கும் வித்தியாசமான நியாயங்கள் வழங்கப்படுகின்றன.

பற்களைக் கடித்தாள் கோபத்துடன்...அப்படி மட்டும் இருந்தால்...கைகளை மடக்கிக்கொண்டு தலையணையை ஓங்கிக் குத்தினாள்.

அவர்களது குடும்ப வக்கீல் கோதண்டத்தின் நினைவு மூளையில் பளிச்சிட - தொலைபேசி எண்களை பரபரப்புடன் சுழற்றினாள்.

## 23

அன்று காலை புறப்படு முன் வசுந்தரா சொல்லி விட்டுப் போனாள்.

“மாலை டிபன் காப்பியை தொழிற்சாலைக்குக் கொடுத்தனுப்பிடுங்கோ...நாங்க வீட்டுக்குத் திரும்ப நேரமாகும்.”

அவளது முகம் உப்பி...கண்களின் கடையோரம் சிவந்து...இமைகள் தடித்துக் காணப்பட்டன.

“அழுதிருக்கிறாள் போலிருக்கிறது. எதற்காக அழ வேண்டும்?”



தமக்குள் எண்ணியபடி அவளை இரக்கத்துடன் பார்த்தார். வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டு பார்வையைத் தனக்கு முன்னால் தெரிந்த தோட்டத்திலே படரவிட்டபடி அழுத்தமாக இருக்க வசுந்தரா முயன்றபோதிலும் எந்த நிமிடமும் ஓவென்று அழுது விடுவாள் போல முகத்தில் துயரம் கப்பிக் கொண்டிருந்ததை அவர் கவனிக்காமல் இருக்கவில்லை.

நீண்ட காலம் அங்கேயே குடும்பத்தில் ஒருவராக வேலை செய்து கொண்டு வாழ்ந்து விட்டதின் பயனாக அவருக்கு வசுந்தரா மீது உள்ளூர ஒரு பரிவு இருக்கத் தானிருந்தது.

கடுமையாகத் தன்னை அதட்டி—விரட்டியடித்து வேலை வாங்கியபோது அவர் உள்ளூர கசந்து கொண்டது உண்மைதான்.

ஒரு பூனை வீட்டின் ஒரு பகுதியில் வெகுகாலம் தங்கியிருந்துவிட்டால் அந்த இடத்தின்மீது அதற்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிடும்—இதைப் பூனைக்குட்டி விசுவாசம் என்பார்கள். அதைப் போல மனிதர்கள் மனதிலும் ஒரு துளியளவு விசுவாசம் ஒருவருடன் வெகு காலம் பழகியதில் ஏற்படுவதுண்டு. அந்தப் பூனைக் குட்டி விசுவாசம்தான் குப்புசாமியின் மனதை லேசாகப் பிராண்டியது.

பெற்றோர்-உற்றார்...கணவன் என்று யாருமில்லாது பெற்ற மகளிடம்கூட நெருங்கி நேசமாகப் பழகாது ஒதுங்கி தன்னைச் சுற்றிலும் தனிமை எனும் அரணை அமைத்துக்கொண்டு-தன் கவலைகளை சொல்ல முடியாது உள்ளூரப் புழுங்குவானேன்?

தனிமை மனிதனின் முதல் எதிரியாயிற்றே. ஒரு சுவற்றோடவாவது சொல்லி அழவேண்டும் என்பார்கள். தனிச் சிறையில் அடைக்கப்படும் போது கைதிகள்...

Vennila

தங்கள் கை நகங்களையே எழுதுகோலாக்கிக் கொண்டு உள்ளத்தில் பொங்கும் உணர்வுப் போராட்டங்களை— கல் சுவரில் கவிதையாக எழுதி வைத்துவிட்டுப் போன தாக வரலாறு உண்டு. தங்களது தவிப்புகளுக்கு அப்படி ஒரு வடிகால் தேடிக்கொண்டனர் அவர்கள். வசுந்தரா தானே மருகி ஏன் துயரத்தில் உளுந்துப் போகிறாள்?

வேலைக்காரர்—எஜமானி என்ற வேற்றுமை மறந்து அவரது வயதிற்கும் நீண்டநாள் உழைப்பிற்கும் மதிப்பு கொடுத்து அவரைத் தந்தையாக பாவித்துத் தன் துயரத்தை வாய் விட்டு சொன்னால் குறைந்தா போய் விடுவாள்?

பெருமூச்சுடன் உள்ளே திரும்பினார்– தொலைபேசி மணி கிணுகிணுத்தது. பக்கத்து பங்களா சமையற்காரர் சுகவனம் அவரை அழைத்தார்.

"என்ன காலை வேளையில்...ஏதாவது?"–குப்புசாமி கேட்டு முடிக்கு முன் அவர் குறுக்கிட்டார்.

"கொஞ்ச நாளாக நாம சந்திக்கிறது குறைஞ்சே போச்சு. இங்கே எங்க வீட்டு ஐயா, அம்மா குழந்தைகளோடு மதுரைக்கு ஒரு கல்யாணத்துக்குப் போயிருக்கிறார். வேலைவெட்டி ஏதுமில்லாம வனைய வந்து அலுத்து விட்டது. ஒரு முக்கிய சங்கதியைச் சொல்லனும்–தொலைபேசியில் சொல்லக்கூடிய சமாச்சாரம் இல்லே!"

நண்பர்களாகப் பழகினாலும் இருவரும் கடன் கைமாற்று என்ற விவகாரத்தை வைத்துக் கொண்டதில்லை...

சுகவனம் முக்கிய சங்கதி என்கிறாரே? என்னவாக இருக்கும்!

"சரி—! மாலை சந்தித்து பூங்காவில் பேசலாம்" என்று போனை வைத்தார் குப்புசாமி.



அவருக்கு அதற்குப் பின்னர் வேலையில் கவனம் ஓடவில்லை. பகல் உணவைத் தயாரித்து தொழிற்சாலைக்கு அனுப்பி விட்டு... மாலை டிபனை செய்து... அதை வந்து ஆள் எடுத்துப் போக தயாராக ஒருபக்கம் வைத்தார். அவருக்கு சாப்பாடு இறங்கவில்லை. இனம் விளங்காத ஒரு கலவரத்தில் தவித்தார்.

மாலை வெறும் காப்பியுடன்...பச்சைத் தண்ணீரில் உடல் குளிர முழுகிவிட்டு...மாற்றுடையில் பட்டையாக திருநீற்றை நெற்றியில் தீட்டிக்கொண்டு வெற்றிலை பெட்டி சகிதம் புறப்பட்டு விட்டார்.

'எங்கே போகிறீங்க? எப்ப திரும்பி வருவீங்க.. அம்மா தொலைபேசியில கேட்டால் நான் என்ன தகவல் கொடுப்பது?' என்று படபடப்புடன் கேட்க ரத்னா உள்ளேயிருந்து வருவதற்குள் அவர் தெருக்கோடியை அடைந்து விட்டார்.

அடுத்த பங்களாவின் வாசலில் அவருக்காக நண்பர் சுகவனம் காத்திருந்தார்.

பொடி நடையாக இருவரும் பூங்காவை நோக்கி நடந்தனர். குப்புசாமிக்கு ஆயாசமாக இருந்தது. சரியாக சாப்பிடாத சோர்வு.. பூங்கா அன்று வெகு தொலைவிலிருப்பது போன்றதொரு பிரமையாக இருந்தது. வழக்கமாக அங்கு அவர்கள் அமர்ந்து கொள்ளும் சிமெண்ட் ஆசனம் காலியாகக் கிடந்தது. மகிழ்ச்சியுடன் இருவரும் அதில் அமர்ந்து கொண்டு அவசரமாக வெற்றிலைப் பெட்டிகளைத் திறந்து கொண்டனர்.

நரம்பு கிழித்து வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவிக் கொண்டே மெல்லிய குரலில் பேசினார் சுகவனம்.

"திருச்சி பக்கத்திலே கட்டிக் கொடுத்திருக்கிற என் மகளோட மூத்த குழந்தைக்கு உடம்பு நல்லா இல்-

Vennila

ளலன்னு சேதி கிடைச்சது-ஒரு நடை போய் பேரனைப் பார்த்துட்டு வரணும்னு ரொம்ப ஆவலா இருக்கு!''

இதைச் சொல்லவா...குப்புசாமியை பூங்காவுக்கு அழைத்தார். இது என்ன ரகசியம்? தொலைபேசியில் தாராளமாகச் சொல்லியிருக்கலாமே.. தாடை இறுக நண்பரை ஓரக் கண்களால் பார்த்தபடி... வெற்றிலையைக் குதப்பத் தொடங்கினார்.

கொண்டு வந்த வெற்றிலை பூராவையும் அரைத்து துப்பி விட்டு...அருகிலிருந்த குழாயில் வாயைக் கழுவிக் கொண்டு வந்து இருக்கையில் அமர்ந்து கொண்டார் சுகவனம்.

''இரண்டு நாளைக்கு முன்னாடி காலை ஏழு மணி இருக்கும்-ஒரு தாடிக்கார மனிதன்-பார்த்தால் வடக்கத்தியான் போல குர்த்தா பைஜாமாவிலே வந்து எங்க பங்களா வாசலிலிருந்த கூர்க்காகிட்டே பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

குப்புசாமி குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலையை டபக்கென்று தூரத் துப்பிவிட்டு...நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் மார்பு வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

''கறிவேப்பிலை பறிச்சுக்கொண்டு போக தோட்டத்துக்கு வந்த எனக்கு ரொம்ப சந்தேகமாகிட்டது. வீட்டில் யஜமானர் இல்லை...யாரிவன் துப்பு விசாரிக்கிறதுன்னு மெள்ள கேட்டருகே சென்றேன். வடக்கத்தியானா? தென் நாட்டுக்காரனா என்று இனம் காண முடியாத தோற்றத்தில் காணப்பட்ட அந்தத் தாடிக்கார மனிதனுக்கு ஐம்பதுக்கு கூடுதலான வயசு இருக்கும். தலை, கிருதா, தாடி எல்லாவற்றிலும் லேசான நரை—கூர்க்காவிடம் இந்தியில் பேசினான்-எனக்குத்தான் அரைகுறை இந்தி தெரியுமே...புரிஞ்சு கொண்டேன். 'வசுந்தரா என்கிற பெண்மணிதானே பக்கத்து பங்களாவிலே இருக்காங்க-அவங்க பெண் பெயர் சம்யுக்தா



தானே?'...என்று அவர் விசாரிப்பதைக் கண்டு நான் கலவரமடைந்து போனேன்.

''நான் குறுக்கிடு முன்னால் எங்க வீட்டு கூர்க்கா... மடத்தனமாக பற்களை காட்டிக்கொண்டு... ஆமா! தாயும் மகளுந்தான் சில வேலைக்காரங்களோட அடுத்த பங்களாவில் வசிக்கிறாங்க'ன்னு விவரமா சொல்லிட்டான். கொஞ்ச நேரம் அந்த மனிதர் எதிர் சாரியிலிருக்கும் கொன்றை மரத்தடியில் நின்று கொண்டு உங்க பங்களாவையே வெறிச்சுப் பார்த்துக் கொண்டு நின்றான். அரைமணிக்கு மேலிருக்கும் ஆள் அசையவில்லை-எனக்கு வெகுநேரம் வாசலில் நின்றுகொண்டிருக்க முடியவில்லை. உள்ளே போய் கொஞ்ச வேலையை கவனிச்சுட்டு வந்தப்போ அவன் அங்கே இருக்கவில்லை. என் மனதிலே ஒரு குறுகுறுப்பு ஏற்பட்டு விட்டது-காலம் கெட்டுக் கிடக்கிறதே...கொள்ளைக் கோஷ்டியின் உளவாளியான ஒருவன் இப்படி வடக்கத்திய வேடத்தில் வந்தானோ? இதை உங்க எஜமானி கிட்டே வந்து சொல்ற தயக்கமா இருந்தது... அந்தம்மாவின் முகத்தைப் பார்த்தாலே எனக்கு எலும்பிலே காய்ச்சல் எடுத்துக்கும். 'என்ன?' என்று என் மேலே சீறி விழுந்தா. அதுக்காக உங்ககிட்டே சொல்லி...எச்சரிக்கை பண்ணத்தான் கூப்பிட்டேன்!''

குப்புசாமியின் நெஞ்சு-படபடத்தது...

தாடிக்கார ஆசாமி...அவர் நினைத்தது போல சம்யுக்தாவின் தந்தைதானோ? மகளைப் பார்க்க ஆசைப்பட்டு...வந்து வாசலில் நின்றாரோ?

''நீங்க அவரைப் பற்றி மேலே எதுவும் தெரிந்து கொள்ளலையா?''

''ஆசைப்பட்டேன்-ஆனால் நேரடியாக தெரிஞ்சுக்க முடியலை. ஆனால் ஒரு வேடிக்கை...எங்க பங்களாவுக்கு காவல் செய்ய இரண்டு கூர்க்காக்கள்



Vennila

இருக்காங்கன்னு உங்களுக்கு தெரியுமில்லையா? தாடிக்காரருடன் பேசிய கூர்க்கா பகல் வேளை காவல் செய்கிறவன்... அவன் என்னிடம் இன்று காலையில்தான் சொன்னான்-நான் உடனே பரபரப்போடு உங்களுக்கு போன் செய்தேன். அவனுக்கு அந்தத் தாடிக்கார மனிதன் வசிக்கும் இடம் தெரியுமாம். நேற்று மாலை அவன் வீடு திரும்பியபோது அவன் ஏறும் பஸ்சில் அந்த தாடிக்காரன் இருப்பதைக்கண்டு வியப்படைந்தானாம்... அவருக்கு நம் கூர்க்காவை அடையாளம் தெரியவில்லையாம். மாம்பலத்தில் கூர்க்கா இறங்கிய அதே நிறுத்தத்தில் தாடிக்காரனும் இறங்கி நடந்தானாம். மாம்பலம் மஞ்சுநாதன் தெருவுக்குள் புகுந்து நடந்த அந்த மனிதன், பத்தாம் எண் வீட்டிற்குள் புகுந்ததை கூர்க்கா. கவனித்துப்பார்த்திருக்கிறான். இன்று காலை அந்த மனிதன் வசிக்கும் முகவரியை பேச்சோடு பேச்சாகச் சொன்னான். எதுக்கும் நீங்க ஒரு நடை அங்கே போய் அவன் யார்? எதுக்காக உங்க எஜமானி வீட்டை பற்றிய விவரம் கேட்டான்னு தெரிஞ்சுக்கோங்கோ.

“நான் அதிகம் மத்தவங்க சங்கதியிலே தலையிடறதில்லை... உங்க யஜமானியம்மா தன் கணவரோட வாழலைங்கிறது அரைகுறையா இந்த வட்டாரத்துக்கே தெரியும்...அது சம்பந்தமாக அம்மாவையோ-மகளையோ இந்த மனிதன் பிளாக்மெயில் செய்ய வந்திருக்கலாம் இல்லியா? பணம் சம்பாதிக்க சிலர் எத்தனை கேவலமான சங்கதிகளில் இறங்கிடறாங்கன்னு உங்களுக்கே தெரியும்!”

“ரொம்ப நன்றி...இந்த சங்கதியை மேலே நான் கவனிச்சுக்கிறேன். நீங்க கவலைப்பட வேண்டாம். இதைப் பத்தி வேறே யார்கிட்டேயும் நீங்க கண்டுக்க வேண்டாம்!” என்றபடி குப்புசாமி எழுந்திருந்தார்.

அடுத்த நாளும் மாலை டிபனை நுங்கம்பாக்கம் அலுவலகத்திற்கு அனுப்பச் சொல்லி விட்டிருந்தாள் வசுந்தரா.



முதல் நாளைப் போல...சீக்கிரமா டிபனை கட்டி வைத்து விட்டு குளியலை முடித்துக்கொண்டு வெளியே கிளம்பி விட்டார்.

“என்ன இப்படி தினமும் வெளியே கிளம்பிடறீங்க ...அம்மா கேட்டா நான் என்ன பதில் சொல்றது?” ரத்னா கேட்டபொழுது அவர் கோபத்தில் கொதித்துப் போனார்.

“வீட்டில் சிறைப் பட்டுக்கிடக்கப் பிரியமில்லாமல் காலார உலாவப் போனார்னு சொல்லுங்கோ!” கண்களில் கனல் எழ அவளைக் கடுமையாகப் பார்த்தபடி தோள் துண்டை உதறிப்போட்டுக்கொண்டு நடையைக் கட்டினார்.

மாம்பலத்தில் மஞ்சுநாதன் தெருவைக் கண்டுபிடிக்க அவருக்கு சிரமம் அதிகம் ஏற்படவில்லை...பத்தாம் எண் வீட்டின் கேட்டை தொட்டதுமே. அது கீச்சென்று அலறியது. வீட்டின் கதவைத் திறந்துகொண்டு ரங்கம்மாள் எட்டிப் பார்த்தாள். “யாரது?” அதட்டிக் கொண்டு வராந்தாவில் வந்து நின்றாள்.

“இங்கே தங்கியிருக்கிற வெங்கட்ராமனை பார்க்க வந்தேன்...” வாயில் அது சமயம் வந்ததொரு பொய்யைச் சொன்னார் குப்புசாமி.

“என் வீட்டில் அப்படி யாரும் தங்கியிருக்கவில்லை –அவுட் ஹவுசில் குடியிருக்கிறவங்க வேலைக்கு போயிருக்காங்க...வரத்துக்கு ரொம்ப நேரம் பிடிக்கும்..!”

“அப்படியா வெங்கட்ராமன் இந்த வீட்டில் குடியில்லையா...உங்க அவுட்ஹவுசில்தான் வசிக்கிறாரா? பரவாயில்லை கொஞ்ச நேரம் கழிச்சு வந்து பார்க்கிறேன்!” சமாளித்தார் குப்புசாமி.

ரங்கம்மாளுக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை.. வீட்டு வேலைகளை கவனித்து விட்டு...மூன்று மணியளவில்தான் அவள் கொஞ்சம் தூங்கலாம் என படுக்கையில் சாய்ந்து கொண்டாள். விளக்கு வைக்கும்

Vennila

நேரம்வரை நிம்மதியாக உறங்கி எழலாம் என்று நினைத்தவளை...அரைத்தூக்கத்தில் எழுப்பி விட்டதுடன் மறுபடி வந்து தொந்தரவு செய்யப் போகிறேன் என்கிறானே இந்தக் கிழவன்.

"மறுபடி எதுக்காக வரணும்...அதான் சொல்லிட்டேனே. நீங்க தேடுகிற வெங்கட்ராமன இந்த வீட்டில் இல்லை...அவுட்ஹவுசில் இருப்பவர் பேர் பூபதி. அவரும் அவர் மனைவியும் வேலைக்குப் போகிறவங்க. பிள்ளை பள்ளிக்கூடம் போகிறான். இங்கே மறுபடி வந்து நீங்க என்னை தொந்தரவு செய்ய வேண்டாம்!" கோபத்துடன் சொல்லிவிட்டு திரும்பினாள்.

"அம்மா— மன்விச்சிக்கோங்க...தாடி, மீசை வச்சுகிட்டு வடக்கத்திகாரன் போல இருப்பார் என் சிநேகிதர் மகன்—வெங்கட்ராமன். அவரை அவசரமாக சந்திக்கணும்...!"

"தாடி, மீசை வச்சவன் எல்லாம் வெங்கட்ராமனா? நீங்க தவறான இடத்துக்கு வந்து தூங்கிக் கொண்டிருந்த என்னை தொந்தரவு செய்கிறது நல்லா இல்லை. மறுபடி இந்தப் பக்கம் வராதீங்க...!" கதவைப் படீர் என்று ரங்கம்மாள் சாத்திக்கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

குப்புசாமியின் உற்சாகமும் பரபரப்பும் சப்பிட்டுப் போயின. அந்த தாடிக்காரர் பெயர் பூபதியா? மனைவி பிள்ளை என்றதொரு குடும்பக்காரரா? சுகவனம் சொன்னதைக் கேட்டுக்கொண்டு காட்டு வாத்தை வேட்டையாடப் போனவன் கதையாகி விட்டதே?

சம்யுக்தாவின் தந்தையைப் போல கொஞ்சம் சாயல் என்றதை வைத்துக் கொண்டு எவனையோ துரத்திக் கொண்டு துப்பு துலக்க முயன்றது அபத்தம்!

ஒரு சமயம் பெயரை மாற்றி வைத்துக் கொண்டு விட்டாரா லோகநாதன்? அப்படியும் செய்திருக்கலாம்...



ஆனால் இந்த வீட்டுக்காரக் கிழவி, மனைவி, பிள்ளையோட வசிக்கும் மனிதன் என்கிறாளே...அது எப்படி முடியும்.

வசுந்தரா உயிருடன் இருக்கும்போது...விவாகரத்து பெற்று பிரியாதிருக்கும் போது...எப்படி மறுமணம் செய்து கொண்டிருக்க முடியும்? அந்தத் தாடிக்காரர் எதற்காக வசுந்தராவையும்...சம்யுக்தாவையும் தேடிக் கொண்டு அவர்கள் பங்களா எதிரில் வந்து நிற்க வேண்டும்? ஒரு சமயம்...வசுந்தரா அம்மா நடத்தும் நிறுவனத்தில் வேலை தேடிக்கொண்டு வந்தாரா...

நேரே வந்து தொழிற்சாலையின் தலைவிகளான தாய் அல்லது மகளிடம் பேசி...வேலை வாங்கிக் கொள்ளலாம் என்ற யோசனையா? எதுக்காக...பூபதி எனும் அந்த தாடிக்கார ஆசாமி...வசுந்தராவின் பங்களா எதிரில் வந்து நின்றார்? வெகுநேரம் காத்துக் கொண்டு நின்றார்...எதுக்காக?

குப்புசாமியின் குழப்பம் அதிகமாகியது.

எதுக்கும் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை...சீக்கிரம் சமையலை முடித்துக் கொண்டு அம்மாவிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு வெளிக் கிளம்ப வேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் பூபதி வேலைக்குப் போக மாட்டார்... நேருக்கு நேர் சந்தித்து...உண்மையைத் தெரிந்து கொண்டால்...

குப்புசாமி தாங்க முடியாத குழப்பத்துடன்... வீட்டை நோக்கி பஸ்சில் பயணப்பட்டார்.

Vennila

## 24

இது நாள் வரை மகா புத்திசாலியாகக் கட்டுப்பாடான பழக்க வழக்கங்களுடன்—திறமை மிக்கவளாக வியாபாரத்தை கவனித்துக்கொண்டு வந்த வசுந்தரா... வேர் இற்றுப் போய் ஆட்டங்கண்டு விட்ட மரம்போல ஆடிப்போய் விட்டிருந்தாள்.

இதுவரை அவளது வாழ்க்கையில் குறுக்கிடாத சஞ்சலமும்—மனக்குழப்பமும் அவளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டிருந்தன. அன்று காலை அவள் மிகவும் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

"இதை சரியா பாக்கவில்லையா அம்மா, அப்படியே திருப்பி அனுப்பியிருக்கீங்களே?" செயலாளர் சாம்பசிவம் அவள் முன் மேஜையில் ஃபைல் ஒன்றை வைத்து—அதிலிருந்த கடிதத்தைச் சுட்டிக் காட்டினார்.

வசுந்தராவின் காதுகள் சூடாகிப் போயின.

பம்பாய் வியாபாரி ஒருவருக்கு அவள் அனுப்பச் சொல்லிய கடிதம் டைப்பாகி—அவள் பார்வைக்கு வந்தது—படித்துப் பார்த்தாள். ஆனால் கையெழுத்து போட மறந்து விட்டாள்.

தனக்குத் திடீரென்று ஏற்பட்ட மறதியை எண்ணி வெட்கி...தன் பேனாவை எடுக்க கைப்பையைத் திறந்த போது...அதைக் காணவில்லை. படுக்கை அறையில்



தலைமாட்டிலிருந்த தொலைபேசி யருகே பேனாவை மறந்து போய் வைத்துவிட்டு வந்திருந்தாள்.

செயலாளர் பேனாவை இரவல் வாங்கி கையெழுத்துப் போட்டுவிட்டு 'ஸாரி!' என்று முணுமுணுத்தபடி முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள். காலையிலிருந்து அவளுக்கு இப்படி ஒரு தடுமாற்றம்.

"மிளகாய் பொடி-சட்டினி எல்லாம் வச்சிருக்கேன். நீங்க ஒண்ணையும் தொடாம... வெறும் இட்டிலியை தின்னு கிட்டிருக்கீங்களே நான் எடுத்துப் போடவா?" குப்புசாமி கேட்டபோது திடுக்கிட்டுப் போனாள்.

நினைவு எங்கேயோ ஓடிக்கொண்டிருக்க அவள் ஒப்புக்காக காப்பி பலகாரம் சாப்பிட உட்கார்ந்தாள்.

"ஏதாவது போடுங்கோ!" மெல்லிய குரலில் அசட்டு சிரிப்புடன் சொன்னாள்.

வெளியே கிளம்புமுன் சாப்பாட்டறையிலிருந்த பெரிய கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டவள் திகைத்துப் போனாள். அவள் அணிந்து கொண்டிருந்த நீலவண்ண நூல் சேலைக்கு சற்றும் பொருத்தமில்லாத பச்சை வண்ண ரவிக்கையை அணிந்து கொண்டிருந்தாள்.

இப்படிப்பட்ட தப்பு எப்படி நடந்தது? அவள் உடுத்தப் போகும் புடவை இத்யாதிகளை முதல் நாளே அவள் எடுத்து தயாராக வைத்து விடும் வழக்கமாச்சே!

மூச்சிறைக்க மாடிப்படிகளை வேகமாகக் கடந்து தன் அறைக்குள் வந்து அலமாரியைத் திறந்து புடவைக்கேற்ற ரவிக்கையை தேடி எடுத்து அணிந்து கொண்ட பின்னர்தான் வெளியே வந்தாள்.

காரின் பின் ஆசனத்தில் வலது பக்கத்து ஜன்னல் ஓரமாக எப்பொழுதும் அமரும் பழக்க முடையவள்.

Vennila

அன்று இடது பக்கத்தில் அமர்ந்திருந்தாள். தொழிற்சாலையின் வாயிலில் இறங்கிய போதுதான் அதையும் அவள் கவனித்தாள்.

இப்படி பல தடுமாற்றங்கள் - தவறுகள் எல்லாம் அவளுக்கு ஏற்பட்டிருந்த சஞ்சலத்தின் பாதிப்பாக சங்கிலியாகத் தொடர்ந்து கொண்டிருந்தன.

வீட்டிலிருந்து கொண்டுவந்த தண்ணீர்ப் பாட்டிலை எடுத்து குளிர்ந்த நீரை மடமடவென்று குடித்தாள். உடலும் உள்ளமும் உலைக்களத்துத் தீயாக எரிந்து கொண்டிருந்தபோது... ஒரு வாய் ஐஸ் தண்ணீரால் அந்த உணர்ச்சிப் பிழம்பை அணைக்க இயலுமோ...

அம்மாவின் மனப் போராட்டத்தை கொஞ்சமும் உணர்ந்து கொள்ளாத மகள்... தொழிற்சாலைக்கு வந்ததும் காரை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு அவர்களது பிரத்யேக அறைக்குள் புகாமல்... பல பகுதிகளை சுற்றிப் பார்க்கத் தொடங்கி விட்டாள்.

தொழிற்சாலையில் வேலை தொடங்கி ஒரு மணிக்கு மேலாகியும் மகள் அங்கே வரவில்லை என்பதை உணர முடியாது வசந்தரா தன் சிந்தனைக்குள்ளே புழுங்கிக் கொண்டிருந்தாள். அன்று முழுவதும் அவள் யந்திரம் போலத்தான் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

எதிலும் மனம் ஒட்டாது அவள் குழம்பிக் கொண்டிருந்ததற்குக் காரணம்? முதல் நாள் இரவு அவள் தங்களது குடும்ப வக்கீல் கோதண்டத்துடன் பேசியதின் விளைவு.

அந்தக் காலத்தில் திருச்சியில அவர்களது வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்தபோது கோதண்டம் தான் அவர்களது வியாபார சட்ட ஆலோசகராகவும்... குடும்ப வக்கீலாகவும்... நல்ல நண்பராகவும் இருந்தார்.



தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு பேசுவது போல மறுபக்கத்தில் அவர் குரல் கரகரத்தது.

"யார் வசந்தராவா... மிஸ்டர் சேனாபதி மகள் வசந்தராதானே... என்னம்மா இந்த நேரத்தில்?"

"உங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பிட்டேன். மன்னிக்கணும்."

"இந்த வயசில் என்ன பிரமாதமான தூக்கம்? அது கிடக்கு. டிரங்கால் போட்டிருக்கீங்க... ஏதோ முக்கிய செய்தியாகத்தானிருக்கும். உங்க குழந்தை சம்யுக்தா... இப்போ பெரிய பெண்ணாக வளர்ந்திருப்பாளே கல்யாணம் -?"

"அதைப் பத்தி பேசத்தான் உங்களை அவசரமா கூப்பிட்டேன். அவ கல்யாணம் எனக்கு ஒரு பிரச்சனையாக இருக்கும் போல தோணுது. மாப்பிள்ளை வீட்டவங்க பெண்ணோட அப்பா எங்கே இருக்கார்னு கேட்டா என்ன பதில் சொல்றது?"

"என்னைவிட்டு பிரிஞ்சுட்டார்னு துணிவா உண்மையைச் சொல்றது."

"சில இடங்களில் இந்த உண்மை அத்தனை சுலபமா வரவேற்கப்படாது... அதனாலே நான் இப்போ அவரைத் தேடி கண்டுபிடிச்சாக வேண்டியிருக்கு. அவரோட முகவரி உங்களுக்குத்தான் தெரியும் இல்லையா? வீட்டை விட்டுப் போனபின் சில நாட்களுக்குப் பிறகு அவர் உங்களை வந்து பார்த்தாரே!"

"ஆமாம்! அப்போ நான் உங்க ரெண்டு பேர் இடையே சமாதானம் செய்து வைக்க முயன்றேன் - அவர் ஒப்புக் கொள்ளலை. உனக்கு விவாகரத்து தேவைப்பட்டால் அதை வழங்கத் தயாராக இருப்பதை சொல்லிவிட்டு போக வந்ததாகச் சொன்னார் - நீங்க விவாகரத்தை விரும்பலை!"

Vennila

"தமக்கு ஏதாவது ஏற்பட்டால் உங்களுக்கு தெரிவிப்பதாகச் சொன்னார் என்று அப்போ நீங்க சொன்னீங்களே!"

"ஆமாம் சொன்னார்-தமக்கு மரணம் ஏற்பட்டு விட்டால் அந்த செய்தி எனக்கு யார் மூலமாவது தெரிவிக்கப்படும்-அதை நான் உங்களுக்கு தெரியப்படுத்தணும் குடும்ப நண்பர் என்பதால்... இந்த பொறுப்பை உங்ககிட்டே நான் கொடுக்கிறேன்னு சொன்னார்."

"உங்களுக்கு அவர் தொடர்ந்து கடிதம் எழுதினார் இல்லையா?"

"உங்களைவிட்டுப் போன பிறகு அவர் எனக்கு இரண்டு கடிதங்கள் எழுதினார். எதிலும் முகவரியைக் கொடுக்கவில்லை. தபால் மீதிருந்த முத்திரையிலிருந்து ஒன்று டெல்லியிலிருந்தும் மற்றொன்று பம்பாயிலிருந்தும் வந்திருப்பதை புரிந்துகொண்டேன்."

"இப்போ அவர் எங்கே இருக்கார்னு உங்களுக்கு சுத்தமா தெரியாதா?"

"தெரியாதம்மா...இதுவரை அவரைப் பற்றிய அவலச் செய்தி ஏதும வரலை-அதனால் இன்றுவரை அவர் உயிரோடுதான் இருக்கார். அது நிச்சயம்!"

போனை வைத்துவிட்டு தலையைப் பிடித்துக் கொண்டு அவள் வெகு நேரம் படுக்கை மீது உட்கார்ந்திருந்தாள்.

கணவனது தற்சமய முகவரி மட்டும் தெரிந்தால்... வெட்கத்தை விட்டு அவள் அவரை சந்தித்துப் பேசத் தயாராக இருந்தாள். மீண்டும் அவருடன் சேர்ந்து வாழ அவள் விரும்பி...அவரை சந்திக்கத் துடிக்கவில்லை...

எங்கேயாவது ஒரு நல்ல இடத்தில் மகளைக்கட்டிக் கொடுக்கும் வாய்ப்பு ஏற்பட்டால்... அவரை நேரில்



சென்று சந்தித்து பெண்ணுக்கு கல்யாணம் கூடி விட்டிருக்கும் செய்தியைச் சொல்லி...ஒரு சிறு உதவி கேட்க விரும்பினாள்.

"நீங்கள் இல்லாமலே நான் உங்கள் மகளை வளர்த்து ஆளாக்கி விட்டேன். ஆனால் நமக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த பிரிவு அவளது வாழ்க்கையை பாதிக்கக்கூடாது. அதனால் கல்யாணத்தின்போது வந்து... நாலுபேர் பார்க்க... நான்தான் பெண்ணின் தந்தை என்று பந்தலில் நின்று கொண்டு சம்பிரதாயச் சடங்குகளில் பங்கேற்க வேணும்... அது போதும். என்று கேட்டுக்கொள்ள விரும்பினாள்.

மனிதன் இடக்கு செய்தால் மகளை அனுப்பி அந்த காரியத்தை சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது.

மகள் மீது...பெற்றவனுக்கு ரொம்பவே பாசம். அவளது வாழ்க்கை நல்லபடியாக அமையவேணும் என்பதற்காக தமது பிடிவாதத்தை விட்டு...மணப்பந்தலில் கவுரவமாக ஒரு நாளைக்கு மட்டும் அப்பாவாக வந்து நிற்பார்.

அவள் கணவரை வசுந்தரா இப்போது எங்கேபோய் தேடுவாள். அவள் தானே இந்தத் தேடல் முயற்சியில் ஏன் ஈடுபடக்கூடாது? ஒரு சமயம் அந்தத்தாடிக்காரர்... அவளது கணவன் லோகநாதனாக இருந்துவிட்டால்?

அவள் மறுபடியும் அந்தத் தாடிக்காரரைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.

அன்று அவள் அப்படி செய்திருக்கக் கூடாது... 'மிஸ்டர் உங்களைத்தானே!' என்று உரத்த குரலில் அழைத்ததும் மனிதன் மிரண்டுகொண்டுவிட்டார். மறுபடி கடற்கரையருகே அவரை சந்தித்தால் மவுனமாக காரில் மெல்ல பின்பற்ற வேணும்.

Vennila

இந்தத் தேடலை... செயலாளர் சாம்பசிவத்திடம் விட்டு விட்டால்? அவருக்கு அவர்களது குடும்பரகசியம் அத்தனையும் தெரியும்.

அவர் உதவியைக் கேட்டால் மனிதன் ரொம்பவே அலட்டிக் கொள்வார். காரியத்தை கச்சிதமாக முடிக்க மாட்டார். 'ஓடிப்போன கணவனைப் பற்றி கவலைப் படுகிறாள்!' என்று அவளது பலவீனத்தைத் தெரிந்து கொண்டு பின்னர் அவளை ஆட்டிப்படைக்க முயன்றாலும் அதிசயப்படுவதற்கில்லை. அவளிடம் வேலை பார்க்கும் ஊழியர்களிடம் அவள் இதுபோன்ற அந்தரங்கமான காரியங்களில் உதவி பெற எதிர்பார்க்கவே கூடாது. அவளது சிகை தன் கையில் என அவர்கள் நினைக்க இடம் தரக்கூடாது.

பலவாறு எண்ணியபடி அன்று மாலைப் பொழுது சற்று முன்னதாகவே தொழிற்சாலையினின்று கிளம்பினாள். கடற்கரையில் அதே இடத்தில் காரை நிறுத்தச் சொல்லிவிட்டு மெல்ல மணற்பரப்பை நோக்கி நடந்தாள்.

போக்குவரத்து நெரிசலாகிவிட்ட நேரம்–மாலை மஞ்சள் வெய்யல் வேகமாக இருளோடு கரைய விரைந்து கொண்டிருந்த சமயம். மணல்மீது இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்த சிறுவர்களையும், பூ விற்கும் பெண்களையும்...சுண்டல் விற்பவரையும் பார்த்தபடி அந்த தாடிக்காரரை அக்கூட்டத்திற்குள் கண்களால் துலாவினாள்.

பார்வைக்கு சாதாரண குடும்பத்தை சேர்ந்தவனாகத் தெரிந்த அந்த மனிதன் கட்டாயம் அந்த வட்டாரத்திற்குள்தான் வசிக்க வேண்டும். ஒண்டுக் குடித்தனக்காரரோ என்னவோ...காற்று வாங்க கடற்கரையை நாடி வந்திருக்கிறார். ஒரு சமயம் அன்றாடம் அங்குவரும் வழக்கமோ என்னவோ—இன்று அவரை அவள் சந்தித்துவிட்டால் சற்றுதொலைவிலிருந்தபடியே



கண்காணித்து விட்டு... காரில் பின் தொடர்ந்து தானே அவர் முகவரியைக் கண்டுபிடிக்கப் போகிறாள்.

—எண்ணியபடி... மணல் பரப்பில் ஒரு பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டு கையோடு தோள்பையில் வைத்துக் கொண்டிருந்த வார இதழ் ஒன்றைப் பிரித்துப் படிக்கும் பாவனையில் அமர்ந்திருந்தாள்.

வெகு நேரம் திரும்பி இங்குமங்கும் பார்த்து அவள் கழுத்துதான் வலித்தது.

அந்தக் கூட்டத்தில் கண்களுக்கு எட்டியவரை அந்தத் தாடிக்காரரைக் காணவில்லை.

இருக்கட்டும் இந்த முயற்சியை தொடர்ந்து கொண்டு போனால் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அவரை கடற்கரையிலோ—கடைத்தெருவிலோ அவள் கட்டாயம் கண்டுபிடிக்கத்தான் போகிறாள் என்று எண்ணியபடி... புடவை மீது அப்பிக்கொண்டிருந்த மண்ணை உதறிவிட்டு கார் நிறுத்தப்பட்டிருந்த சாலை ஓரத்தை நோக்கி மெல்ல மணலில் புதையும் பாதங்களை இழுத்தபடி நடந்து சென்றவளுக்கு பெரும் அதிர்ச்சி.

அது அவள் மகள் சம்யுக்தாதானா... பரபரப்புடன் பையிலிருந்த மூக்குக் கண்ணாடியை துடைத்து போட்டுக்கொண்டு பார்த்தாள். அவளேதான் சந்தேகமேயில்லை என்று புரிந்து கொண்டதும் அவளது நெஞ்சு வேகமாக துடிக்கத் தொடங்கியது—குப்பென்று உடல் முழுவதும் வியர்வையில் நனைந்து போனது—மேலே நடக்க முடியாதுபோன்று மூச்சு அடைத்துக் கொள்ளவே அவள் திணறியபடி அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்து நின்றாள்.

மணல் பரப்பிலே கடலை நோக்கி அமர்ந்து கொண்டிருந்தாள் சம்யுக்தா—எதிரில் அவள் அருகே அவர்கள் தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்து விட்டிருக்கும் அருண் உட்கார்ந்திருந்தான்.

Vennila

இருவரும் தங்களைச் சுற்றிலும் உள்ள மக்களையும் உலகத்தையும் மறந்தவர்களாக பேச்சும் சிரிப்புமாக மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தனர்.

இந்தப் பெண் சம்யுக்தா கொஞ்ச நாட்களாக காண்டீனுக்குப் போய் சாப்பிடுவதும்... தானே தொழிற்சாலையின் பல பாகங்களை சுற்றிப் பார்ப்பதும் இதற்குதானா?

பணக்கார பெண்...பார்த்தால் அழகாகஇருக்கிறாள். அம்மா கண்களை மூடினால் அத்தனை சொத்துக்கும் அதிபதி என்று தெரிந்துகொண்டு காதல் வலையை விரித்திருக்கிறான் அந்தக் கயவன் அருண்.

தாய் இளவயதில் செய்த அதே தவறை மகளும் செய்யத் துணிந்து விட்டிருக்கிறாள்.

சம்யுக்தாவுக்கு இப்படியா புத்தி போகணும்? அவளைத் தவிர தொழிற்சாலை ஊழியர் வேறு யாராவது இப்போது அவர்களைப் பார்த்து விட்டால் சங்கதி மறுநாளே தீயாக பரவி விடாதோ? கணவனால் கைவிடப்பட்டவள் என்று மட்டமாக அவளைப் பற்றி பேசும் அந்தச் சில பணக்கார கூட்டம் இப்போது என்ன சொல்லும்?

"சம்யுக்தாவா! வேண்டாம் அந்த வரன்—அந்த பெண் ஒரு பரதப் பயலுடன் ஏற்கனவே ஊர் சுற்றினவள்" என எண்ணியபடி பற்களை நறநற வென்று கோபத்துடன் கடித்துக் கொண்டாள்.

அவர்கள் தன்னைப் பாராவண்ணம் மெல்ல அங்கிருந்து நழுவி காரில் ஏறிக் கொண்டாள்.

வீட்டுக்குத் திரும்பியதும் மகளைக் கேட்டால் என்ன சொல்லப் போகிறாள்? நாங்கள் நண்பர்களாகப் பழகுகிறோம். உங்களுக்கு ஏன் இந்தக் குறுகிய புத்தி என்று ஆத்திரமாக கத்தப் போகிறாள்.



கொஞ்ச நாளாக அவள் எதிர்த்துப் பேசப் பழகிக் கொண்டிருக்கிறாள். ரொம்பக் கண்டித்து முகத்தில் கரியைப் பூசிக் கொள்வதை விட மெல்ல இந்த சிக்கலை தவிர்க்க முயல்வதுதான் புத்திசாலித்தனமாகும்... எப்படி தவிர்ப்பது? அவளுக்கு இந்த மாதிரி சங்கடங்கள் போது கூட துணையாக இருந்து உதவ யார் இருக்கிறார்?

வசுந்தராவுக்கு இப்போது ஜாதகத்தில் ஏழரை நாட்டு சனியன் யோகமோ?

அவமானம் - அதிர்ச்சி என்று ஒன்றன் பின் ஒன்றாக பல தொல்லைகள் விசுவரூபமெடுத்து அவளை பயமுறுத்துகின்றனவே..

'ஓ' வென்று வாய் விட்டு அழ முடியாது...படபடத்த நெஞ்சோடு... அவள் காரின் இருக்கையில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டாள்.

முத்துக்கள் போல...சில துளி கண்ணீர்...அவளது கன்னங்களில் உருண்டு நெஞ்சை நெருப்பாகச் சுட்டது.

## 25

அன்று தாரா வீட்டுக்குத் திரும்புவதற்குள் பொழுது அமிழ்ந்து தெரு விளக்குகள் எரியத் தொடங்கி விட்டிருந்தன. வீட்டின் சொந்தக்காரி ரங்கம்மாள் தனக்கு வரும் வழியில் ஒரு சீப்பு மலை வாழைப்பழமும்— ஒரு சின்ன பாட்டில் தேனும் வாங்கி வரும்படி கேட்டுக் கொண்டு பணம் தந்து விட்டிருந்தாள். தன் வீட்டு அவுட் அவுசில்

Vennila

அவர்களைக் குடி வைத்தது...ஒரு துணைக்காக அவசரத்துக்கு உதவுவார்கள் என்ற எண்ணத்திற்காக...என்பதை அவள் நிரூபிப்பது போல அடிக்கடி அவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள்!

"தம்பி பூபதி! நீங்க டவுனிலதானே வேலை செய்கிறீங்க. அதனால் சிரமம் இருக்காது... என் மூக்குக் கண்ணாடியின் ஒரு பக்கத்து கம்பி கழன்று விழுந்துட்டது... கொஞ்சம் பழுது பார்த்து எடுத்து வர முடியுமா? ஏம்மா தாரா - திரும்பி வரப்போ எனக்கு ஒரு பிஸ்கட் பொட்டலம் வாங்கிட்டு வரியா— ராத்திரி வேளையிலே நான் வேறே என்ன சாப்பிடறேன்— இரண்டு பிஸ்கட்—ஒரு தம்ளர் பால்... விதரணையா சமைச்சுத் திங்க உடம்பிலே பலம் ஏது...? உணவை ஜீரணிக்கத்தான் இந்த வயசுலே முடியுதா?"

—அவள் கேட்ட உதவிகளை... இருவரும் மகிழ்ச்சியுடன் செய்தார்கள். வீட்டுக்காரி கேட்டதை வாங்க இரண்டு கடைகள் ஏறி இறங்கியதில் வழக்கமான பஸ்ஸைத் தவற விட்டிருந்தாள் தாரா - அடுத்ததில் இடம் கிடைக்காது... மூன்றாவதாகப் புறப்பட்ட பஸ்சில் வீடு திரும்பிய போது வழி நெடுகிலும் அவள் மனதில் பல கவலைகள்.

வீட்டையும் கணவனையும்—குழந்தையையும் பற்றி சஞ்சலப்பட்டபடிதான் தெருவில் விரைவாக நடந்து... கேட்டைத் திறந்துகொண்டு வேகமாக உள்ளே வந்தாள்.

கார்த்திக் பள்ளிச்சிறுவன்—பத்து வயது கூட இன்னும் பூர்த்தியாகவில்லை... விளையாட்டுப் போக்குடையவன். பயம் தெரியாது. தெருவில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருப்பான். அவர்கள் வசித்த தெருவில் மாலை நேரத்தில் போக்குவரத்து அதிகமாக இருந்ததினால் அவளுக்கு கார்த்திக்கைப்பற்றி



கவலை. பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வருகிறவனுக்கு... பசி வேளைக்கு உணவு கொடுத்து பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வீட்டில் யாரும் இல்லையே என்ற வேதனை.

என்ன செய்வது? அவளும்-கணவரும் வேலைக்குப் போனால்தானே குடும்பத்தை சீராக நடத்திச் செல்ல இயலும்?

அவள் கணவருக்கு இரண்டு நாட்களாக இருமல்—அவள் வற்புறுத்தி மருந்து கொடுத்தால் ஒழியத் தன்னைத் தாமே கவனித்துக் கொள்ளாது அவர் அசட்டை செய்து விடுவார். சாதாரண இருமல்...அதிகமாகி வேறு விதத்தில் உடம்பை பாதிக்கத் தொடங்கி விட்டால் என்ற அச்சம் அவளுக்கு.

அன்று வேலைக்கு கிளம்புமுன்கூட வற்புறுத்தி இருமல் மருந்தைத் தன் கையால் சாப்பிடக் கொடுத்து அனுப்பியிருந்தாள். சரியாக உறங்காததாலும் - சாப்பிடாததாலும் அவர் சோர்வாகக் காணப்பட்டார்.

இருமல் மட்டும் அதற்குக் காரணம் இல்லை...என்பது அவளின் கணிப்பு. சென்னைக்கு வந்த நாளிலிருந்து அவரது உற்சாகம் குறைந்துவிட்டிருந்தது. நகைச்சுவை ததும்பப் பேசி அவளை சிரிக்க வைக்கும் மனிதர், வீட்டிலிருக்கும் நேரத்தில் மவுனமாக எங்கேயோ நினைவோடு காணப்பட்டார்.

"என்ன யோசனை ஏன் இப்படி இருக்கீங்க?" என்றெல்லாம் அவள் தூண்டித் துருவிக்கேட்கும் பழக்கமுடையவள் அல்ல. அவரும்—அவளிடமிருந்து தமது கவலைகளையும்-பிரச்சனைகளையும் ஒளித்து மறைத்து வைத்தவர் அல்ல.

அப்படியிருந்தும் ஏன் அவர் ஒரு மாதிரியாகக் காணப்படுகிறார்?- பலவாறு எண்ணியபடி...அவள் வீட்டுக்கார அம்மாளிடம் மீதம் சில்லறையையும் வாங்கி



Vennila

வந்த பொருள்களையும் ஒப்படைத்துவிட்டு அவுட் அவுசை நோக்கி விரைந்தாள்.

அவள் மகன்...வராந்தா விளக்கைப் பொருத்தி விட்டு... அங்கே கிடந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். தெருவிலிருந்த அந்தனைப் புழுதியும் அவனது பள்ளிச் சீருடையிலும் பாதணிகளிலும் அப்பிக் கொண்டிருந்தது.

உதட்டைப் பிதுக்கிக்கொண்டு கொஞ்சம் கோபத்துடன், "அம்மா? எனக்கு ரொம்ப பசிக்குது" முணகினான் சிறுவன். "ஒரு நிமிசம் பொறுத்துக்கோ... சாப்பிட ஏதாச்சும் தரேன்!" அவனை சமாதானப்படுத்திய படி பையிலிருந்த சாவியை எடுத்துக் கதவைத் திறந்தாள். உள்ளே இருள் கவிந்து கொண்டிருந்தது. விளக்கைப் போட்டாள்.

அடுப்பு மேடை சமையலுக்காக அவள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல வெறுமையாகக் காணப்பட்டது. சாதாரணமாக அந்த நேரத்திற்குள் பூபதி வீட்டுக்கு வந்து விடுவது வழக்கம்.

கணவன் முன்னதாக வந்து விட்டிருந்தால்... மகனைக் குளிக்கச் சொல்லி உதவிசெய்து... இரவு ஆடை அணிவித்து... அவனுக்கு ஜாம் தடவிய ரொட்டியைத் தின்னத்தந்து... அவள் வந்ததும் காப்பி சாப்பிட பாலைக்காய்ச்சி தயாராக வைத்திருப்பார். சில நாட்களாக அவர் நேரம் கழித்துத்தான் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். ஏன் நேரம் என்று அவள் கேட்கவே இல்லை.

மகனது அழுக்கான சீருடையை களைந்து விட்டு... அவனைக் குளியலறைக்குள் அனுப்பினாள். லேசான சூட்டில் அடுப்பில் வெந்நீர் காய்ச்சித்தந்து உதவினாள். அவன் குளித்துவிட்டு இரவு உடைகளை அணிந்து கொண்டு வந்து வராந்தா நாற்காலியில் காமிக் புத்தகத்துடன் உட்கார்ந்ததும் அவள் பரபரப்புடன் செயல்படத் தொடங்கினாள்.



பச்சைத் தண்ணீரில் வேகமாகத் தனது குளியலை முடித்துக்கொண்டு குக்கரில் அரிசி-பருப்பு-காய்களை ஏற்றிவிட்டு கொஞ்சம் பாலைச்சூடாக்கி மகனுக்கு சாப்பிடக் கொடுத்தாள். சமையல் முடிந்தவுடன் அவசரமாகச் சோற்றையும், பருப்பையும் தட்டில் போட்டு— மின்விசிறிக்கடியில் வைத்து நெய் ஊற்றிப் பிசைந்து மகனுக்கு ஊட்டினாள்.

உண்ட களைப்பில்... குழந்தை நாற்காலியிலேயே சாய்ந்தபடி உறங்கிப்போனான்.

அவனை அள்ளிக்கொண்டு வந்து உள்ளே தரையில் பாயை விரித்துப்படுக்க வைத்துவிட்டு— வாசல் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள்.

முன்புற தோட்டத்து கேட் கிரீச்சிட்டது. நன்றாக இருட்டிய பின்னர்தான் பூபதி வீட்டுக்கு வந்தார்.

'என்ன ஆச்சு? பஸ் தவறிவிட்டதா?' என்று எதுவும் அவள் கேட்கவில்லை. மாறாக... வந்ததும் அவர் சாப்பிட காப்பியைக் கலக்கிக் கொண்டு வந்து முக்காலிமீது வைத்தாள்.

குளியலறைக்குள் அவள் கொண்டு வந்து வைத்த வெந்நீரில் விரைவாகக் குளித்துவிட்டு... லுங்கி பனியனில்... வெளியே வந்த கணவரின் முகத்தை கவனித்தாள். சுருக்கென்று மனதை இனம் விளங்காத ஒரு கவலை தைத்தது.

பூபதி திடீரென்று பத்து வயதைத் தாண்டிவிட்டவர் போன்றதொரு முதுமையுடன் காணப்பட்டார். கண்களில் வேதனை கப்பிக்கொண்டிருந்தது. தட்டை வைத்து சோற்றை பரிமாறி விட்டுத் தானும் சாப்பிட எதிரில் தரைமீது உட்கார்ந்து கொண்டாள். மவுனமாக அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

ஒருவாய் சோற்றை வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டதும் அவள் சிரித்து விட்டாள்.

Vennila

திகைப்புடன் பூபதி நிமிர்ந்து பார்த்தார்.

"என் அப்பா ஒருகதை சொல்வார்— அது ஞாபகத்துக்கு வந்தது. தம்மிடம் சகல சாத்திரங்களையும் கற்று அறிய குருகுல வாசம் செய்ய வரும் மாணவர்களுக்கு ஆசான் பரிட்சை ஒன்று வைப்பது வழக்கமாம். தம் பத்தினியிடம் சொல்லி படிக்க வந்திருக்கும் மாணவர்கள் அனைவருக்கும் சாப்பாட்டின்போது நெய்யிற்கு பதில் வேப்ப எண்ணையை ஊற்றச் சொல்வாராம். உண்மையில் கல்வியைத் தேடிக் கொண்டு வந்திருக்கும் மாணவனுக்கு... ருசியே தெரியாதாம். கசப்பைக் கண்டு கொள்ளாது சாப்பிடுவானாம்?"

"இந்தக் கதை இப்போ எதுக்கு?" வரட்சியாக முறுவலித்தார் பூபதி.

"உப்புப் போட மறந்து ரசம் வைச்சிருக்கேன்— அதைக்கூட தெரிஞ்சுக்காம சாப்பிட்டு முடிச்சுட்டீங்களே? நீங்க எந்த பரிட்சைக்கு அப்படி மும்முரமாக படிக்கிறீங்களாம்?" கேலியாகக் கேட்டாள்.

"உப்பு போட்டு சாப்பிடாத உணக்கை கெட்டவன் நான்னு வச்சுக்கோயேன்... வாழ்க்கை எனும் பெரிய பரிட்சைக்கு படிக்கிறேன்னு நினைச்சுக்கோ.." லேசாக முறுவலித்தார்.

"உங்க மனசை புண்படுத்தராப்பல நான் ஏதாச்சும் சொல்லிட்டேனா?" பரபரப்புடன் கேட்டாள் அவள்.

"பாவம் நீ— உன் மேலே நான் தவறு ஏதும் காண முடியாது. என் மனசில் ஒருவேதனை—காலம் வரும் போது அதை உன்னிடம் சொல்லாமல்... இருப்பேனா?"

மேலே அவள் ஒன்றும் கேட்கவில்லை... மோர் சோற்றை வேகமாக விழுங்கிவிட்டு எழுந்தவர் கையைக் கழுவிக்கொண்டு கட்டிலின்மீது சாய்ந்து கொண்டார்.



சாதாரண நாட்களில் அவர் அவளுக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்வார்.

"நகரு...! நீ கழுவி வைக்கிற பாத்திரங்களை நான் துடைச்சு அடுக்கி வைக்கிறேன். வெளியில் போய் ரெண்டுபேரும் வேலை செய்கிறோம். வீட்டு வேலையை ரெண்டு பேரும் பகிர்ந்து கொள்வதுதான் நியாயம்!" என்று சிரித்தபடி உதவி செய்வார்.

கனமான குடத்தையோ... கூடையையோ அவளைத் தூக்க விடமாட்டார்.

வெளியில் செல்லும்போது கார்த்திக் வயதில் சிறிய குழந்தையாக இருந்த காலத்தில் அவனைச் சுமந்து கொண்டு அவளை தெருவில் நடக்க அனுமதிக்க மாட்டார்.

"பத்து மாசம் இவனை சுமந்துட்டே நீ...! இனி இவனை சுமக்கிறது என் பொறுப்பு..."என்று வேடிக்கையாகப் பேசிக்கொண்டு— நடக்க முடியாது தத்தளிக்கும் மகனை வாரி தூக்கிக்கொண்டு செல்வார்.

'மனைவியான அவளை ஒரு தோழனைப் போல அன்போடு நடத்திய பூபதிக்கு இப்போது என்ன வந்து விட்டது? மனதிற்குள்ளே எதையோ மூடி வைத்துக் கொண்டு மருகுகிறாரே? வெளிப்படையாக அதைச் சொன்னால்... அந்தக் கவலையின் பளு பாதியாகக் குறைந்துவிடுமே? மனைவி மேல் திடீரென்று அவநம்பிக்கையா...? அவளுக்குத் தெரியக் கூடாத ரகசியமா அது?' பலவாறு எண்ணியபடி... வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு... சமையல் தடுப்புக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

பளிச்சென்று குழல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. முத்துக்களைப் போல முகத்தில் வேர்வை அரும்பி...

Vennila

கிராப்பு முடி நெற்றியில் பரவிக் கிடக்க... உறங்கிக் கொண்டிருந்தார் பூபதி...

அந்த நிலையில் அவரைப் பார்த்த தாராவுக்கு... அவர் இன்னொரு கார்த்திக் போலத்தான் தெரிந்தார். தாயின் இரக்கத்தோடு, அவள் தன் புடவைத் தலைப்பால் மெல்ல அவரது முகத்தை துடைத்து விட்டாள். மின் விசிறியை அடக்கமாக ஓடவிட்டு...குழல் விளக்கை அணைத்துவிட்டு— விடிவிளக்கைப் பொருத்தினாள்.

சிறிது நேரம் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

ஏதோ ஒரு தாங்க முடியாத துயரத்தில் மனிதர் துவண்டு விட்டிருக்கிறார் என்ற அளவில் அவளால் ஊகித்துக்கொள்ள முடிந்தது...

அந்த துயரத்தை மட்டும் அவள் தெரிந்து கொள்ள முடிந்தால்—கண்கள் பனித்துப்போக அவள் மெல்லப் பாயில் தன் மகன் அருகே சரிந்து கொண்டாள்.

அதே சமயம் அவள் உள்ளத்திலே ஒரு உறுதி உருவானது— அந்தத் துயரம் எத்தனை தீவிரமானதாக இருந்தாலும்— அவர்கள் இருவரது வாழ்க்கையின் மகிழ்ச்சியை பாதிப்பதாக இருந்தாலும் அவள் அஞ்சப் போவதில்லை. அவருக்கு உறுதுணையாக இருந்து உதவப் போகிறாள்.

அந்த எண்ணத்துடன் அவள் தன் அருமை மகனை அணைத்துக்கொண்டு மெல்ல உறங்கத் தொடங்கினாள்.

மறுநாள் காலை அவள் தன் அலுவலகத்திற்கு அவசரமாகப் போகத் தேவையிருக்கவில்லை. அன்று அவள் விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தாள்.



துவைக்க நேரமின்றி குவித்து வைத்திருந்த அழுக்காகி விட்ட ஆடைகளைத் துவைத்து—வாய்க்கு ருசியாக கணவருக்கும் குழந்தைக்கும் சமைத்துப் போட்டு... முடிந்தால் கணவர்-குழந்தையுடன் மாலை சற்று காலாற கடைத் தெரு வரை நடந்துவிட்டு வரவேண்டும் என்ற ஆவல்!

அவளுக்கு சேரவேண்டிய விடுப்பு நாட்கள் அதிகம் இருந்தன. அதனால் ஒரு நாள் நிம்மதியாக வீட்டு வேலைகளை கவனிக்கலாமே என்றுதான் லீவு எடுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

வேலைக்குப் புறப்பட்ட கணவரை வாசல்வரை சென்று வழி அனுப்பிவிட்டு மகனைப் பள்ளிக்கு அனுப்பியதும் உள்ளே வந்தாள். முதல் வேலையாக அழுக்குத் துணிகளைத் துவைத்துக் காயவைக்க விரும்பினாள். நாலு நாட்களாக வேலையிலிருந்து வந்த கணவரும் பள்ளியிலிருந்து திரும்பிய மகனும்... களைந்து போட்ட ஆடைகள் பிரம்புக் கூடையை நிறைத்துக் கொண்டிருந்தது.

சட்டைப் பைக்குள்-பிஸ்கட், சாக்லெட் துண்டங்கள் எதையாவது கார்த்திக் விட்டுவைத்திருப்பது வழக்கம்.

பூபதி... மறதியாக ரூபாய் நோட்டுகளை விட்டு விடுவதும் உண்டு.

துவைக்கும்போது அவள் முதல் வேலையாக மகனது சட்டைப் பைகளையும் கணவரது ஜிப்பா பைகளையும் ஆராய்வது வழக்கம். ஒரு ஜிப்பாவின் பைக்குள் கையை விட்டு துலாவியபோது ஒரு சிறு கடிதத்துண்டு அவள் கையில் பட்டது. வெளியே எடுத்துப் பிரித்துப் படித்தாள்.

என் ஒன்பது-பத்தாவது அவன்யூ-அண்ணாநகர்... தொலைபேசி எண்...என்று பூபதியின் கையெழுத்துடன் காணப்பட்ட கடிதத்துண்டை வெறித்துப் பார்த்தாள்.

Vennila

பத்தாவது அவன்யூ அண்ணா நகரில்தான் அவளது அலுவலக மானேஜரது மகள் தன் கணவனுடன் வசித்துக் கொண்டிருந்தாள் என்பதை அவள் ஒரு சமயம் தெரிந்து கொள்ள நேர்ந்தது.

"அப்பாடி! அந்தப் பக்கத்தில் எல்லாம் நாம் காலை வைக்கக்கூட முடியாது. மேல் மட்டத்து வாசிகள் வசிக்கும் பங்களாக்கள் நிறைந்த பகுதி...மானேஜரின் மருமகன் ஒரு பெரிய நிறுவனத்திலே தலைமை அதிகாரியாக வேலை பார்க்கிறாராம். பரம்பரை பணக்காரர்"— தட்டெழுத்து திலகம், தன் அருகிலிருந்த கணக்கர் மல்லிகாவுடன் கிசுகிசுத்தது நன்றாக அவள் காதில் விழுந்தது.

என்ன காரணத்தினாலோ பத்தாவது அவன்யூ அண்ணாநகர் என்ற சங்கதி நினைவில் அட்டையாக ஒட்டிக்கொண்டு விட்டது.

அந்த பத்தாவது அவன்யூவிலிருக்கும்... யாருடைய முகவரியோ... தொலைபேசி எண்ணோ... அவள் கணவரிடம் இருக்க வேண்டிய காரணம்?

அந்த வீட்டைத்தேடி...பூபதி போக விரும்பினாரா, எதற்காக? யாரைப் பார்க்க?

திடீரென ஏற்பட்ட கலவரத்தில் அவளுக்கு வேலை ஓடவில்லை— அந்தக் கடிதத் துண்டத்திலிருந்த முகவரியைப் பலமுறை தன்னுள் படித்துக்கொண்டு... விளக்கம் தர இயலாத துயரம் நெஞ்சை அடைக்க பிரமிப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

# 26

அன்று மாலை தொழிற்சாலையினின்று தன் தாயாருக்கு முன்னதாகவே வீடு திரும்பியிருந்தாள் சம்யுக்தா.

குளித்து விட்டு மாற்று ஆடையில் அவள் மாடியினின்று இறங்கி வருவதற்குள் சமையல் அறைக்கு விரைந்தார் குப்புசாமி. சம்யுக்தா வந்து மேஜையருகே உட்காருமுன் சூடாக பஜ்ஜி தயாரித்து பால் போளியுடன் பரிமாறிவிட வேண்டும் என்ற பரபரப்பு அவருக்கு. சம்யுக்தா நாளேட்டைப் பிரித்து வைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்வதற்குள் டிபன் தட்டுடன் அவர் வந்து விட்டார்.

"ம்! வெங்காய வாசனை... நான் மாடியிலிருந்து இறங்கி வருவதற்குள் வா...வான்னு கூப்பிட்டது...!" சிரித்தபடி அவள் தட்டைத் தன் அருகே இழுத்துக் கொண்டாள்!

கொஞ்ச நாட்களாக வசுந்தரா... அவரது உணவுத் தயாரிப்பில் குறுக்கிடாது மவுனமாகி விட்டிருந்தாள். அதனால் அவர்... சம்யுக்தாவுக்குப் பிடித்த டிபனை செய்து போட்டு அவள் தமது சமையல் திறமையைப் புகழ்வதைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தார்.

"பால் போளி மேலே !இன்னும் கொஞ்சம் பால் ஊத்தவா...?" பரிவுடன் கேட்டுக்கொண்டு அருகில் வந்து நின்றார்.

Vennila

"இன்னிக்கு நீங்க தொழிற்சாலைக்கு அனுப்பி யிருந்த வாழைப் பூ வடை கறி ரொம்ப பிரமாதம்..."

மூக்கும்—முகமும் சூடாகிப் போக சந்தோஷத்துடன் சிரித்தார்.

"உன் தாத்தாவுக்கு பால் போளின்னா உயிர். தை வெள்ளிக் கிழமைகளில் அம்பாளுக்கு நைவேத்தியத்துக்கு செய்து வைக்கும்படி உத்திரவு போடுவார். சாமி பேரை சொல்லிட்டு மனுஷன் தம் வயிற்றுக்கு நிறைய படைச்சுக்குவார்..!"

களுக்கென்று சிரித்தாள் சம்யுக்தா... இப்பொழுதெல்லாம் அவள் சின்ன சங்கதிகளுக்கெல்லாம் நிறைய சிரித்தாள். மாடிப்படிகளில் மான்குட்டியாகத் துள்ளி ஏறி இறங்கினாள். தோட்டத்தில் மகியோடு சுற்றும்போது கையில் டிரான்சிஸ்டருடன் சங்கீதத்தை அனுபவித்தபடியே... வளைய வந்தாள்.

"நான் போன வருஷம் நட்ட மல்லிகைச் செடி... பூக்க ஆரம்பிச்சுட்டது தாத்தா... பாருங்க குண்டு மல்லிகை... என்ன வாசம்?" என்று கைநிறைய தான் பறித்துக் கொண்டு வந்த மல்லிகை மலரை அவரிடம் காட்டி ஆர்ப்பரிப்பாள்.

"தன் தாயிடம் குழந்தையாக கொஞ்சி குழைந்து பேச முடியாது அஞ்சி வளர்ந்து விட்டவள் சம்யுக்தா... பாவம்! என்னவோ விளையாட்டுத் தனமா பேசுகிறாள்" என்று எண்ணிக் கொண்டிருந்தவருக்கு—அதன் அடிப்படையான காரணம் என்ன என்று முதல் நாள் மாலை தான் தெரிந்து விட்டிருந்தது.

முதல் நாள் மாலை ஒய்வாக வெளியே கொஞ்சம் சுற்றி வரப் புறப்பட்டிருந்தார் அவர்.



நண்பர் சுகவனத்திற்கு அவருடன் கிளப்ப முடியவில்லை. வழக்கமாக அந்த வீட்டில் வந்து குவிந்துவிடும் திடீர் விருந்தாளிகளை கவனிப்பதில் அவர் திணறிக் கொண்டிருந்தார்.

தனியே கிளம்பிய குப்புசாமி தமது வெற்றிலைப் பெட்டியை துணிப்பைக்குள் போட்டு கையில் பிடித்துக் கொண்டு . காலார நடந்தார்.

கடற்காற்றை சுவாசித்து ரொம்ப நாளாகிவிட்டது என்ற எண்ணம் ஏற்படவே பஸ்சைப் பிடித்து... திருவல்லிக்கேணி...கடற்கரை பக்கம் வந்து இறங்கினார். பொழுது அமிழத் தொடங்கி விட்டிருந்த நேரம்—சில்லென்று வீசிய கடற்காற்று உடலுக்கு இதமாக இருந்தது. அலைகள் தவழ்ந்து ஈரமாகி விட்ட மணல் மீது கொஞ்ச தூரம் நடக்க வேண்டுமென்ற ஆவலுடன் மெல்ல மணற்பரப்பை நோக்கி நடந்தார். என்றும் போல மணற்பரப்பை மக்கள் கூட்டம் நிறைத்துக் கொண்டிருந்தது.

'கனகாம்பரம்...மல்லிப்பூ?' 'தேங்காய் மாங்காய் சுண்டல், மசால்வடை' என்ற கூக்குரல் இடையே—

குறுக்கும் நெடுக்குமாக ஓடிய குழந்தைகளைத் தாண்டி—கும்பலாக உட்கார்ந்திருந்தவர்கள் மீது இடறி விடாத வண்ணம் எச்சரிக்கையுடன் நடந்தவர்...

சில நாட்களாக சம்யுக்தா இருட்டிய பின்பு வீட்டுக்குக் காரை ஒட்டிக்கொண்டு வருவதின்... காரணம் இதுதானா?

டிபன் வேண்டாம் பசியில்லை என்றதின் மர்மம் இதுவா?

யாரோ ஒரு இளைஞனுடன் மணற் பரப்பில் நெருக்கமாக அமர்ந்தபடி தேங்காய் மாங்காய் சுண்டல் பொட்டலத்திலிருந்ததை அள்ளி சுவைத்துக் கொண்டிருந்தாள் சம்யுக்தா!

Vennila

இதென்ன கூத்து? இந்தப் பெண்ணுக்கு இப்படி ஒரு துணிச்சல் எப்போதிருந்து வந்தது?

யார் இந்த இளைஞன்?...வசுந்தரா அம்மாளின் அந்தஸ்துக்கு சமதையானவனா? தங்கள் தகுதிக்கு ஏற்றவன் என்று தெரிந்து கொண்டதால்தான் தாய் மகளுக்கு காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளும் சுதந்திரத்தை தந்து விட்டிருக்கிறாளோ?

–பலவும் எண்ணி வியப்புடன் அவன் பக்கம் பார்த்த படி நின்றார். இந்த உலக நினைப்பே இன்றி...தம்மை சுற்றிலுமுள்ளவர்களை மறந்தவர்களாக அவர்கள் இருவரும் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

இது சாதாரண நட்பல்ல...ஆழமான காதல்! எங்கே போய் முடியப் போகிறது?

வசுந்தரா தன் மகளை கடுமையான கட்டுப்பாடுடன் வளர்த்ததைப் பார்த்தவர் மனதில் ஒரு நெருடல். கட்டுத்தறியை அவிழ்த்துக்கொண்டு இந்தக் கன்றுகுட்டி ஒருநாள் தலைதெரிக்க ஓடப்போகிறது...

அவர் நினைத்தது சரியாகிவிட்டது.

கடற்கரையில் சாவதானமாக உலவப் பிடிக்காது அவர் உடனடியாக வீடு திரும்பிவிட்டார்! இரவு முழுவதும்...உறக்கமின்றி...அந்த காட்சியை சிந்தித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சம்யுக்தா அன்று மாலை அவருடன் மனம்விட்டு பேசும் மகிழ்ச்சிகரமான நிலையில் இருப்பதை உணர்ந்து கொண்டார்.

சமையல் அறைக்குள் விரைந்து காப்பியை கலக்கி தம்ளரில் நிறைத்தபடியே...ஜன்னல் வழியே தோட்டத்தில் பார்வையை ஓடவிட்டார். ரத்னா தோட்டக்காரனுடன் வழக்கம் போல கத்திக்கொண்டிருந்தாள். அவள் திரும்பி வீட்டுக்குள் வர அரை மணிக்கு மேல் பிடிக்கும் என்ற நினைப்பில் நிம்மதியடைந்தார்.



காப்பி தம்ளரை சம்யுக்தா முன்னால் மேசைமீது வைத்துவிட்டு தொண்டையைச் செருமிக் கொண்டார்!

"பாப்பா!" என்று தாழ்வான குரலில் அன்புடன் அழைத்தார்.

"என்ன தாத்தா?...என்னவேணும்?" நிமிர்ந்து பார்த்த அவள் புன்னகைத்தாள்.

"ஒரு உண்மை தெரியவேணும்? யார் இவர் கேட்கிறதுக்குன்னு கோவிச்சுக்கக் கூடாது. உன் தாத்தா சேனாபதி அவர்கள் உயிரோடு இருந்து கேட்பதாக எண்ணிக்கொள்ளணும்!"

"பீடிகை ரொம்ப பெரிசா இருக்கே?"

"ஆமாம் ரொம்ப பெரிய சங்கதி—அதனாலே சுட்டுனு நேரிடையாக கேட்க முடியலை...நேத்து மாலை கடற்கரையிலே உன்னைப் பார்த்தேன்!"

திகைத்துப் போனாள் சம்யுக்தா–அவளது முகம் செவேலென்றாகி விட்டது.

"கூட என்னோட ஒரு இளைஞரைப் பார்த்திருப்பீங்க...அவர் எங்க தொழிற்சாலையிலே வேலை பார்க்கிறவர்...பெயர் அருண்-நாங்க ரெண்டுபேரும்..."

"புரிகிறது பாப்பா...மேலே சொல்ல வேண்டாம்–இது அம்மாவுக்குத் தெரிஞ்சா–முதல்லே அவர் வேலைக்கு சீட்டு கிழிக்கப்படும். தம்மிடம் கைகட்டி சேவகம் செய்கிறவன் தம் மகளை விரும்புவதான்னு வீம்பு செய்வாங்க!"

Vennila

"அம்மா மட்டும் என்னவாம்...தாத்தாகிட்ட...கை கட்டி சேவகம் செய்தவரைத்தானே காதலிச்சுக் கல்யாணம் செய்து கொண்டாங்க..!"

"எப்பவும் பெத்தவங்க தாங்க செய்த தவறை தன் பிள்ளைகள் செய்யக் கூடாதுன்னு எச்சரிக்கையா இருப்பாங்க-தாங்க அனுபவிக்காத சுகபோகங்களை தங்க குழந்தைகளாவது அனுபவிச்சு மகிழட்டும்னு ஆசைப்படுவாங்க...இது உலகப்போக்கு."

"நான் அருணை ரொம்ப விரும்புகிறேன்—அவரும் என்னை விரும்பறார். எனக்கு நெருக்கமான தோழின்னு யாரும் கிடையாது-என்னை அம்மா அப்படி யாரோடவும் பழக முடியாம பிரிச்சு வளர்த்துட்டாங்க. என் மனப்போராட்டங்களை புரிஞ்சுகொண்டு எனக்கு ஆலோசனைகள் சொல்ல அப்பா என்பவர் கிடையாது. அம்மாவுக்கும் எனக்கும் நடுவே உள்ள இடைவெளி ரொம்பப் பெரிசு-அவங்க என்னை தன் ஆதிக்கத்துக்குட்பட்ட ஒரு அலங்கார பொம்மைன்னு எண்ணிக்கிட்டிருக்காங்க. எனக்கு இருக்கிற நம்பகமான—அன்பான மனித ஜீவன் நீங்க ஒருவர்தான். உங்ககிட்டேதான் இந்த ரகசியத்தைச் சொல்லணும்னு இருந்தேன்-கொஞ்சம் கூச்சமா இருந்தது. நீங்களே கேட்டதும் விவரமா சொல்லத் துணிவு வந்துட்டது."

"பாப்பா! அவரோட அந்தஸ்து நமக்கு சமதை இல்லைன்னு அம்மா விவாதிக்கலாம்—கவலையா இருக்கு!"

"கொஞ்சம் இல்லை - அவங்களுக்கும் நமக்கும் ரொம்ப வித்தியாசமிருக்கு. அருணோட அம்மா ஒரு பலகாரக் கடையிலே அதிரசம்—முறுக்கு சுட்டு எடுக்கிற வேலை செய்துகிட்டிருக்காங்க. ஆரம்பத்திலே சமையல்



வேலை செய்துகொண்டிருந்தாங்க... அலங்காரமான நம்ம ஆபீஸ் இருக்கிற நுங்கம்பாக்கத்திலே ஒரு சிறு சந்து போன்ற தெருவில் ஓட்டுக்கூரை வீட்டிலே குடியிருக்காங்க.. அருண் சம்பாதிச்சுதான் இனி வசதியா வாழ முடியும்!..."

"ஐயோ பாப்பா! இந்த வரனை உங்கம்மா ஏத்துக்கவே மாட்டாங்க. இந்த வீட்டில் ஒரு பெரிய யுத்தமே நடக்கப் போரது—எனக்கு பயமா இருக்கு!"

"நான் துணிச்சலோடு இருக்கிறேன்—நாங்க ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்த நாள்முதல் விரும்பறோம்—சந்தித்து மனம் விட்டுப் பேசினதில் ரெண்டு பேருக்கும் மனப் பொருத்தம் ரொம்பவே இருக்கு-எனக்குப் பிடிக்கிற பல சங்கதிகள் அவருக்கும் பிடிச்சிருக்கு—நம்மைப் போலவே அவரும் சைவ உணவுக்காரர்—என் மனதுக்கு இதம் தரும் நீலவண்ணம் அவருக்கு ரொம்ப பிடிக்குமாம்- நான் படிக்கிற புத்தகங்கள்—பார்த்து ரசித்த சினிமாக்கள்—கேட்டுக் களித்த பாட்டுக்கள்—ரசித்த நாடகங்கள் இவை அனைத்தும் அவருக்குப் பிடித்தமானவைகளாக இருக்கு. ஒரு சில சங்கதிகளில் எங்களுக்குள் கருத்து வேற்றுமையும் இருக்கு. அப்படி இருப்பதும் நல்லதுதான் தாத்தா. அதைக்குறித்து சிறு விவாதங்கள் தர்க்கங்கள் எங்களுக்குள் ஏற்படும். எல்லா சங்கதிகளுக்கும் இரண்டு பேரும் பெருமாள் மாடு மாதிரி தலையாட்டிக் கொண்டிருப்பதில் வாழ்க்கை சுவையற்றுப் போய்விடும் இல்லையா?"

"என்னவோ பாப்பா...நீ பெரிய முடிவு எடுத்திருக்கே! ஆனால் இதில் உனக்கு வெற்றி சுலபமாகக் கிடைக்கும்னு நான் நம்பலை!"

"நேத்து மாலை அருண் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பிக் கேட்டார். நான் சம்மதம் கொடுத்து விட்டேன். இனி இதைப்பத்தி நாங்க ரெண்டு

Vennila

பேரும் அம்மாகிட்ட பேசப்போறோம்—அவங்க ஒப்பு தலை கேட்கப் போகிறோம்.''

''அருணோடு நீ இந்த வீட்டுக்குள் வந்து இந்த மாபெரும் காரியத்தை சாதிக்க முடியும்னு நினைக்கிறியா? பாப்பா...இப்போ உன் மனசிலே ஏற்பட்டிருக்கிற இந்த ஆசை உண்மையான காதல்தானான்னு நல்லா...சிந்தித்துப் பார்த்தியா...முதல் முதலாக ஒரு வாலிபனைச் சந்தித்துப்பேச நேர்ந்த ஒரு புது அனுபவத்தின் மேல் ஏற்பட்ட வெறும் கவர்ச்சியாக இருந்து விட்டால்...''

''நான் யோசிச்சு என் உணர்வுகளை நானே ஆராய்ந்து பார்த்துட்டுத்தான் பேசறேன் தாத்தா. எத்தனையோ காலமாக அருணோடு நான் நெருக்கமாக பழகி விட்டவள் போல ஒரு வியப்பு என் நெஞ்சை நிறைச்சுக் கொண்டிருக்கு!''

''பாப்பா அந்த பிள்ளையாண்டான் வெகு விரைவில் உங்க தொழிற்சாலையிலிருந்து விரட்டப்படப்போகிறான். ஏழைக் குடும்பம்னு விவரிச்சே. வேலை போய் விட்டா—அவன் ரொம்பவே திண்டாடப் போகிறான்!''

''இந்த சிக்கலைப் பற்றியும் நாங்க ரெண்டு பேரும் பேசி இருக்கோம். கட்டாயம் அம்மா அவரை வேலையிலிருந்து நீக்கிவிடப் போறாங்க. ஆனால் பரவாயில்லை. அவர் தற்காலிகமாகத்தானே பணி செய்கிறார். இந்த வேலையிலிருந்து நீக்கப்பட்டால்... வேறு ஒரு இடத்தில் வேலை கிடைக்காமலா போய் விடும்?''

''உன் தாயாரைப் பற்றி எனக்கு ரொம்பவே தெரியும். தனக்கு ஒருவரைப் பிடிக்காட்டி அவரை வாழ விடாம வெருட்டுக் கொண்டிருப்பாங்க. புருசன் கிட்டேயே கருணை காட்டாதவங்க... வரப் போர மருமகன் கிட்டேயா பரிவை காட்டப் போராங்க? இந்த சங்கதி காதில்பட்டதும் வெடித்துக்கொண்டு நெருப்பைக் கக்கும்



எரிமலையா பொங்கிப் போய்விடுவாங்க. மன்னிக்கிற சுபாவம் ரொம்பக் குறைவு—ரொம்ப பிடிவாதம். இவை எல்லாம் இல்லாது அன்போடு பழகும் பெண்மணியாக இருந்தால் உங்கப்பாவைப் பிரிஞ்சிருக்க வேண்டிய சந்தர்ப்பமே வந்திருக்காது.''

''நான் ஒரே பிடியாக இருந்தா இப்போ அம்மா தன் மகளையும் இழந்துடுவாங்கன்னு பயப்படுகிறீங்களா தாத்தா?''

''ஆமாம் பாப்பா. எனக்கு ரொம்ப அச்சமா இருக்கு!''

''என்ன நடந்தாலும் சரி தாத்தா! நான் இது சம்பந்தமா அம்மாவுக்கு எந்த விதத்திலும் விட்டுக் கொடுக்கப் போறதில்லை. எனக்கு இன்னொரு பால் போளி கொண்டு வாங்க...உங்க கிட்ட இந்த மகிழ்ச்சியான சங்கதியை ரகசியமாக சொல்லி விட்ட மகிழ்ச்சியைக் கொண்டாட நிறைய இனிப்பு சாப்பிட ஆசையா இருக்கு! நேத்து நாங்க திருமணம் பத்தி தீர்மானிச்சப் போ உடனடியா ஒரு ஓட்டலுக்குப் போய்—இனிப்பு சாப்பிட்டு...கொண்டாடி மகிழ நேரம் இருக்கலை... வழியில் கடையில் அருண் ஒரு சாக்லட் கட்டியை வாங்கினார். ஆளுக்குப் பாதியா பிட்டு சாப்பிட்டோம்...!'' மகிழ்ச்சியுடன் சிரித்தாள் சமயுக்தா.

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டதும் சட்டென்று மவுனமாகி விட்டார் சுப்புசாமி.

மகியின் உற்சாகமான குரைப்பு...யஜமானியின் வரவைத் தெரிவித்தது. வராந்தாவில் கேட்ட பரபரப்பான காலடி ஓசை அவருக்கு மிக்க கலவரத்தை உண்டாக்கின.

வசுந்தரா கோபமாக இருக்கிறாள் போலிருக்கிறது. ஏன்? பெற்றவளுக்கு மகளின் சங்கதி தெரிந்துவிட்டதா?



Vennila

மகளை மாடிக்கு அழைத்துச் சென்று...மண்டகப்படி செய்யப்போகிறாளோ...? அமைதியாக இருந்த அந்த வீட்டில் ஒரு பூகம்பம் எழப் போகிறதா?

நெஞ்சு படபடக்க...துயரத்துடன் சட்டென்று சமையல் அறைக்குள் மறைந்து கொண்டார் அவர்.

# 27

'பொன்னரங்கம் அண்ட் சன்'சின் பகல் உணவு நேரத்து மணி கிணுகிணுத்தது.

நெற்றியில் வழிந்த வியர்வையைக் கைகுட்டையால் துடைத்துக்கொண்டு பூபதி வாடிக்கைக்காரர்கள் அமரப் போட்டிருந்த இருக்கை ஒன்றில் உட்கார்ந்து கொண்டார்.

ஏ.சி.யின் குளிர்ச்சியையும் மீறி அவர் உடம்பு முழுவதையும் வியர்வையால் குளிப்பாட்டி மூச்சைத் திணறச் செய்த அந்த நெஞ்சுவலி—சில நாட்களாக அடிக்கடி வரத் தொடங்கி விட்டிருந்தது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவர் மனம் வேதனைப்படும்போதும்—வேகமாக நகரும் பஸ்சை பிடிக்க ஓடியபோதும்...லிப்ட்டிற்குக் காத்திருக்கப் பொறுமையின்றி...மாடிப்படிகளில் தாவி ஏறி...உச்சியை அடையும் போதும் அந்த நெஞ்சுவலி வந்து அவரைத் திக்கு முக்காடச் செய்து கொண்டிருந்தது.

பம்பாயில்தான் முதல் முதலாக இந்தத் தொல்லை ஆரம்பமாகியது. வேலை கிடைக்காது...அலைந்து மனச் சோர்வுடன் வீட்டை நோக்கி நடந்தபோது...லேசாக



நெஞ்சில் ஒரு வலியுடன் மூச்சுத் திணறல் ஏற்படவே அப்படியே ஒரு கடை வாசற்படி மீது ஓரமாக உட்கார்ந்து விட்டார். ஒரு சில நிமிடங்கள் நீடித்த அந்த வலி அடங்கிப்போனதும் அவர் எழுந்து நடந்தார் ...உடல் தக்கையாகி...சோர்வில் கால்கள் தள்ளாடுவதை உணர்ந்தார்

தமக்கேற்பட்ட அந்த அனுபவத்தை அவர் தாராவிடம் சொல்லவில்லை. அவள் மிகவும் பயந்து போய்விடுவாள் என்று பச்சாதாபப்பட்டு அதை மறைத்து விட்டிருந்தார்.

ஆனாலும் அருகிலிருந்ததொரு வைத்தியரின் கிளினிக்கிற்குச் சென்று தம் உடலை பரிசோதனை செய்து கொண்டார். அந்த வைத்தியர் அவரை ஒரு பிரபல இருதயநோய் நிபுணரிடம் அனுப்பிவைத்தார். அவர் பல பரிசோதனைகள் செய்யத் தொடங்கவே... பூபதியின் கணிசமான கையிருப்பு கரைந்ததுடன்... வைத்தியர் தந்த தகவல் மனதை திகைக்க வைத்து விட்டிருந்தது.

''உங்களுக்கு 'அஞ்சைனா' எனும் இருதய சம்பந்தமான கோளாறு ஏற்பட்டிருக்கிறது...உங்கள் இருதயத்தில் ஏற்கனவே மாரடைப்பு நோயின் அறிகுறிகள் தெரிகிறது...!''என்று ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார் அவர்.

''மன அதிர்ச்சி ஏற்படும்போதும், அவசரமாகக் காரியங்களில் ஈடுபடும்போதும், சில சமயம் நெஞ்சுவலி வரும். அப்போது இந்த மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு நாக்கடியில் விழுங்காது வைத்துக் கொள்ளுங்கள். வலி குறைந்து விடும்!''

''எனக்கு மாரடைப்பு நோய் பெரிய அளவில் வரக் கூடும் என்று நினைக்கிறீங்களா டாக்டர்?'' கவலையுடன் அவரிடம் கேட்டார்.

Vennila

நிபுணர் லேசாகச் சிரித்தார். "ஐம்பது வயதிற்கு மேல் எந்த ஆணும் இந்த நோயைப்பற்றி நினைத்து எச்சரிக்கையுடன் வாழவேண்டும் என்று நாங்கள் சொல்லி வந்த காலம் போய் இப்போது மாரடைப்பு... கட்ட கடும்காளைகளை...முப்பது வயதிலேயே தாக்கு கின்றது... அதற்குப் பல காரணங்கள் சொல்லப்படு கின்றது. உங்களுக்கு நாற்பத்தைந்து வயதிற்கு மேலாகி விட்டதல்லவா? நீங்கள் மிக எச்சரிக்கையாக வாழ வேண்டியது அவசியம்" என்று பலவும் சொல்லி... பத்திய உணவு பற்றி விவரித்து... மருந்துப்பட்டியலை எழுதிக் கொடுத்து அனுப்பியிருந்தார்.

கொஞ்சகாலம் வராத நெஞ்சுவலி சென்னைக்கு வந்த பின்னர் அடிக்கடி தலைகாட்ட ஆரம்பித்து விட்டிருந்தது. ஆனாலும் அவர் தாராவிடம் சொல்லாது—தம் வேதனையைத் தாமே அனுபவித்துக் கொண்டி ருந்தார்.

அன்று காலை கடைக்குவந்த ஒரு பெண்மணி அவரை ரொம்பவே அலட்டி விட்டிருந்தாள்.

அவரது பகுதிக்குள் அவள் நுழையுமுன்பே அவள் அணிந்து கொண்டிருந்த வெளிநாட்டு சென்ட்டின் மணம் குபீரெனப் புகுந்து அவர் மூக்கைத் தாக்கியது. வந்தவளின் அலங்காரம் பணக்காரத்தனத்தை பறை சாற்றியது. அங்கே வேலை செய்ய ஆரம்பித்துச் சில மாதங்கள் ஆனபோதிலும் அவர் அங்கு வரும் வாடிக்கைக்காரர்களைப்பற்றி ரொம்பவே தெரிந்து கொண்டிருந்தார்.

எளிய தோற்றத்துடன் மிகவும் கூச்சத்துடன் உள்ளே நுழையும் பெண்கள் தாங்கள் வாங்க வந்ததைச் சடுதியில் முடித்துக்கொண்டு கிளம்பினர். உயர்



மட்டத்து வாசிகள் போல தென்பட்ட பெண்களோ... லேசில் வாங்குவதில்லை. எத்தனைக்கெத்தனை அவர்களது பர்ஸ் பணத்தினால் கனக்கிறதோ, அத்தனைக் கத்தனை அவர்கள் உடைகளைப் பொறுக்கி வாங்கு வதில் தயக்கம் காட்டினர்.

"இது சலவை தாங்குமா? காலரின் கலர் கண்களை அடிக்கிறதே? இந்த நிறம் வெளுத்து விடாதே" என்று ஒவ்வொரு ஆடையையும் கொக்கியிலிருந்து எடுக்கச் சொல்லி... ஆயிரம் குற்றம் குறைகளை கண்டு மேசை மீது அவைகளைக் குவித்துவிட்டு... முடிவில் ஒரு பனியனை வாங்கிக்கொண்டு புறப்படுவார்கள்.

வாடிக்கைக்காரர்கள் சொல்லுவதும்—நினைப்பதுந் தான் நியாயம்... என்ற கொள்கை உடையவர் கடை யின் முதலாளி.

வைரத் தோட்டுக்காரி வாரிக் குவித்து விட்டுப் போன உடைகளை சீராக்கி மறுபடி அவைகளை வரிசையாக அலமாரியில் தொங்க விடுவதற்குள் பூபதி யின் தோள்பட்டையில் வலி எடுத்துக்கொண்டு விடும்.

ஆனாலும் மனிதர் பொறுமையுடன் புன்னகை மாறாத முகத்துடன் அடுத்தபடியாக வாங்க வந்தவரைக் கவனித்தார். எத்தனையோ முறை அந்த வேலையை உதறிவிட்டு வேறு ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொள்ள அவர் ஆசைப்பட்டார்.

மாதம் முதல் தேதி சம்பளத்துடன் வீடு திரும்பும் போது... இந்தா தாரா என் பங்குக்கு வீட்டுச் செலவு பணம் என்று எண்ணூறு ரூபாய்களை அவளிடம் கொடுத்தபோது மனதை அழுத்திய கவலைகள் பாதி யாகி விட்டதை உணர்ந்தார்.

இந்த விலைவாசியின் உக்கிரத்தில் பத்து ரூபாய் கூட பல ஆயிரம் போல... அவருக்குத் தேவைப்பட்ட தாகவே இருந்தது.

Vennila

"சீக்கிரம் பார்சல் செய்து கொடும். பில்போட்டு விட்டீங்களா?" என்று அந்தப் பணக்காரி அவரை அதட்டினாள்.

அவசரமாக அந்த வேலையை செய்து முடிக்க நேரிட்டது—பின்னர் மூச்சுவிட நேரமின்றி பல வாடிக்கைக்காரர்களைத் தொடர்ந்து கவனித்தார். ஆனால் அந்த ஒரு பெண்மணி அவரை ரொம்பவே பாடுபடுத்தி விட்டிருந்தாள்.

அவரது படிப்பிற்கும்—தொழில் அனுபவத்திற்கும்—வியாபார நுணுக்கத்திற்கும் கொஞ்சமும் பொருந்தாத வேலை அது. சொந்தமாக ஒரு தொழிலை ஆரம்பித்து நடத்த வேண்டும்-சுதந்திரமாக வாழ வேண்டும் என்று மனம் கொள்ளை ஆசைப்பட்டது. ஆனால் கையிருப்பு அதற்கு இல்லையே-கடன் வாங்கத் துணிவும் இல்லேயே.

கொஞ்ச நேரத்தில் நெஞ்சுவலி அடங்கிப் போகவே அவர் மெல்ல எழுந்தார்.

உடம்பு நூலாக ஆடியது-பின்பக்கமிருந்த அறைக்குள் சென்று கைகளையும்-முகத்தையும் கழுவிக் கொண்டு எப்பொழுதும் அமரும் மேசைக்குப்பின் உட்கார்ந்து டப்பாவைத் திறந்தார்.

தாரா அவருக்கு பகல் உணவுக்கு எலுமிச்சம் பழ சாதம் கட்டித் தந்திருந்தாள். அது அவருக்குப் பிடித்த மான உணவுதான். ஆனால் நாக்கு மரத்துவிட்டது போல ருசி தெரியாது-மென்ன சாதத்தை விழுங்கிவிட்டு கையோடு கொண்டு வந்த பாட்டில் தண்ணீரைக் குடித்தார்.

சமீபத்தில் ஏற்பட்ட பெருத்த மழைக்குப் பின்னர்—டைபாய்டு காய்ச்சல் பரவலாகிக்கொண்டு வருகிறது என்று கேள்விப்பட்ட தாரா... மகனுக்கும் கணவருக்கும்



அன்றாடம் காய்ச்சி ஆறவைத்த நீரை பாட்டிலில் நிரப்பி... டிபனுடன் சாப்பிடக் கொடுத்தனுப்பினாள்.

காய்ச்சல்களிலிருந்து கணவரைக் காப்பாற்ற முயன்ற தாராவுக்கு அவருக்கு வரும் நெஞ்சுவலி பற்றிய உண்மை தெரிந்தால்?

—தமக்குள்ளே சிரித்தபடி எழுந்து கைகழுவச் சென்றார். மீண்டும் ஒருமுறை நெஞ்சில் வலிவந்து அவரை வருத்தியது. லீவு எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய் விடலாமா என்று நினைத்துக் குழம்பினார்.

பண்டிகை நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்த சமயம் கடை கூட்டத்தில் திணறியது. ஊழியர்கள் அது சமயம் லீவு எடுத்துக் கொள்வதை கடையின் சொந்தக் காரர் கொஞ்சமும் விரும்பமாட்டார்.

மறுபடி ஒரு மாத்திரையை எடுத்து நாக்கடியில் வைத்துக்கொண்டு மெல்ல உள்ளே சென்றார்.

எப்படியோ அவர் அன்றுமாலை வேலையை சமாளித்து விட்டு... வீட்டுக்கு திரும்பிவிட்டார்.

"என்ன ஒரு மாதிரி இருக்கீங்க?" தாரா விசாரித்த போது அவர் உண்மையைச் சொல்ல விரும்பவில்லை.

"எப்பவும் போலத்தான் இருக்கேன்... இன்னிக்கு அதிக வேலை அதனால் களைப்பு..." மழுப்பினார்.

இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் கட்டிலின்மீது சாய்ந்து கொண்டவர் மறுபடி அந்த பாழாய் போன நெஞ்சுவலி மார்பைக் குடைவதை உணர்ந்தார். படுக்கையில் சற்று புரண்டு படுத்துப் பார்த்தார்.

உகும்... முடியவில்லை வலி தீவிரமாகியது—மூச்சு முட்டியது. நெற்றியில் வியர்வை துளிர்த்து... காதோரம் வழிந்து கழுத்தை நனைத்தது.

Vennila

வராந்தாவில் கிடந்த சாய்வு நாற்காலியில் புத்தகத்தை மார்பில் அணைத்துக்கொண்டு தூங்கிவிட்ட மகனைத் தூக்கிக் கொண்டு வந்து பாயில் படுக்கவிட்டுத் திரும்பிய தாரா திடுக்கிட்டுப் போனாள்,

குழல் விளக்கு வெளிச்சத்தில் முகம் சாம்பல் நிறமாகி... வேதனையுடன் முனகிக்கொண்டிருந்தார் பூபதி. நெஞ்சை கோடாலி போட்டு பிளக்கிறாப்போல வலி... பேசமுடியாது திக்கினார்.

அவள் தந்தையும் இப்படித்தான்... நெஞ்சுவலி என்று கூறிவிட்டு மயங்கி நாற்காலியில் விழுந்தவர் எழுந்திருக்காது மறைந்து போன நினைவு அவளை மிகவும் கலவரப்படுத்தியது.

"டாக்டரைக் கூட்டி வருகிறேன். அசையாது படுத்திருங்க... இதோ வந்துட்டேன்" என்று கூறிவிட்டு... புடவை தலைப்பை இழுத்து கைமீது போர்த்திக் கொண்டு காலில் வேகமாக செருப்புகளைத் திணித்தபடி... ஓட்டமும் நடையுமாக தெருவை நோக்கி விரைந்தாள்.

பஸ் நிலையத்தருகே கிளினிக் வைத்திருக்கும் டாக்டர் கிரிதரன் இரவு ஒன்பது மணிவரை... இருந்து நோயாளிகளை கவனிப்பது வழக்கம் என்பது அவளுக்குத் தெரியும்.

அவுட்ஹவுஸில் குடியேறிய புதிதில் மார் சளி வந்து கார்த்திக் ரொம்ப அவதிப்பட்டபோது.. அவள் மகனை அந்த டாக்டரிடம்தான் காட்டி சிகிச்சை பெற்றாள். இரவு ஒன்பது மணியை நெருங்கிக் கொண்டிருந்த சமயம். அவள் அந்த வைத்தியரைத் தேடிக்கொண்டு மூச்சிறைக்க ஓடினாள்.

கடைசி நோயாளியை கவனித்து அனுப்பிவிட்டு டாக்டர் கைகளைக் கழுவிக்கொண்டு வெளியே வந்த போது,அவளை வியப்புடன் பார்த்தார். பதட்டத்துடன் அவள் சொன்ன செய்தியைக் கேட்டதும் தாமதிக்காது



அவளைப் பின்தொடர்ந்து மருந்து பெட்டியுடன் கிளம்பி விட்டார் டாக்டர்.

அதற்குள் பூபதி...வலியில் மிகவும் துடித்துப் போய் விட்டிருந்தார். முகம் வெளுத்து மூச்சுவிடமுடியாது... கட்டிலின் மீது புரண்டு கொண்டிருந்த அவரை வைத்தியர் சோதனை செய்துவிட்டு உதட்டை கடித்துக் கொண்டார்.

"அம்மா...! இது வீட்டில் வைத்து பார்க்கும் கேஸ் அல்ல...உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்து தக்க சிகிச்சைகள் தந்தாக வேண்டும். உங்கள் கணவருக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கு..." என்றபோது... அவள் திகைப்பும் துயரமும் தாங்க முடியாது கண்கலங்கிப் போய் நின்று விட்டாள்.

"என்ன யோசிக்கிறீங்க?" டாக்டர் கேட்டதும் அவள் தன் துயரத்தை சமாளித்துக்கொண்டு பேசினாள். இப்பவே இவரை மருத்துவமனையில் அனுமதிச்சுடுங்க. என்ன செலவானாலும் சரி...சீக்கிரம் இவர் குணமாகி வீடு திரும்பினால் போதும்" தழுதழுத்தாள் கண்ணீருடன்.

"கவலைப்படாதீங்க! என் நண்பனது நர்சிங் ஹோமில் இப்பவே அனுமதிக்க ஏற்பாடு செய்துவிடறேன். போன் செய்து ஆம்புலன்சை வரவழைக்கிறேன்— நீங்க இது சமயம் தைரியமா இருக்கணும்!" டாக்டர் புன்னகைத்துவிட்டு...நோயாளிக்கு ஊசியால் மருந்தை-ஏற்றிவிட்டு...வெளியே விரைந்தார்.

நர்ஸிங் ஹோமில் தீவிர கவனிப்புப் பகுதியில் சிகிச்சை-நிபுணர்களின் ஆலோசனை ...இ. சி. ஜி மருந்துகள் என பலவும் கிடைக்கும். அவைகளுக்கு பணம் கணிசமாகத் தேவைப்படும். அவளது வங்கி சேமிப்பில் அதிகம் இருக்கவில்லை. என்ன செய்வது? .. என்று யோசித்த போது... அவளது கை கழுத்தின் மீது பட்டது.

Vennila

நான்கு சவரன் எடையிலிருந்த அந்த மெல்லிய தங்க சங்கிலி இவளுக்கு அப்பா தந்து விட்டிருந்த பரிசு. அத்துடன் தேய்ந்து போன இரண்டு வளையல்கள்... இரண்டு சவரன் எடை இருக்கும் அம்மா விட்டுப்போன சொத்து, பெட்டியில் ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் பத்திரமாகக் கிடந்தது. அப்பாவின் ஞாபகமாக அவள் வைத்துக் கொண்டிருந்த இரண்டு மோதிரங்கள் .. ஒரு சவரன் எடை தேறும்...எல்லாவற்றையும் விற்றால் கொஞ்சம் பணம்புரட்ட முடியும்.

அப்பாவுக்கு மருமகன் பூபதி மீது மட்டற்ற அன்பு... வெளியிலிருந்து பசியுடன் வந்து விட்டாலே பொறுக்க மாட்டார்.

"தாரா... சீக்கிரம் சாப்பாட்டை சூடு பண்ணு தட்டெடுத்து வை..." என்று அவசரப்படுத்துவார்.

மாரடைப்பு வந்து மருமகன் துடிக்கிறதை இப்போது பார்த்தால், "இந்தா—தாரா! உன் அம்மாவுடைய தாலி...இதையும் சேர்த்து எடுத்துக்கொண்டு போய் விற்று காசாக்கி அவருக்கு முதலில் சிகிச்சைசெய்" என்பார்.

கண்கள் கலங்க... கட்டிலின் அருகே சென்று பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு வலியினால் துவண்டு கொண்டிருந்த கணவனை ஆசுவாசப்படுத்த முயன்றாள்.

கொஞ்சம் பொறுத்துக்கோங்க...! உடலில் ஏறியிருக்கிற மருந்து வேலையை ஆரம்பிச்சு வலி குறைஞ்சுடும்... மருத்துவமனையில் வேறு சிகிச்சைகள் தருவாங்க. நல்லவேளை கார்த்திக் தூங்கறான். இல்லாவிட்டா பயந்து போய் அழத் தொடங்கியிருப்பான். அவனை வீட்டுக்கார அம்மாகிட்டே விட்டுட்டு...நான் உங்க கூட மருத்துவமனைக்கு வரேன்... கூடவே இருப்பேன்!" என்றபடி அவர் முகத்திலே வழிந்த வியர்வையைத் தன் முந்தானையால் துடைத்துவிட்டாள்.



"தாரா—தாரா—!" தீனமான குரலில் பூபதி குளறினார்.

"என்ன வேணும்?" என்று அவர் முகத்தருகே குனிந்து தணிவான குரலில் கேட்டாள்.

"இதுநாள் வரை நான் சொல்றதா...வேண்டாமான்னு தவிச்சுக் கொண்டிருந்த ஒரு சங்கதியை—உன் கிட்டே சொல்ல விரும்பறேன் தாரா!" என்று திக்கலும் திணறலுமாக.. தவித்தார் அவர்.

"உடம்பு நல்லா ஆனதும் சொல்லலாம். இப்போ அதுக்கு அவசரமில்லே. மனசை அலட்டிக்காதீங்க" என்று அவள் தடுக்க வறட்சியான புன்முறுவலுடன்... லேசானதொரு மயக்கத்தில் ...கண்களை மூடிக் கொண்டார் பூபதி.

## 28

தொழிற்சாலையிலிருந்து நேராக வீட்டுக்குத் திரும்பிவிட்டிருந்த அருண் சீக்கிரம் குளியலை முடித்துக் கொண்டு மாற்றுடையில் வெளியே செல்ல ஆயத்தமாகி விட்டிருந்தான்.

இரண்டு வாரம் விடுப்பிலிருந்த கோதை அன்று காலைதான் பலகாரக் கடை வேலைக்குப் போயிருந்தாள். மகனுக்கு சற்று முன்னதாக வீடு திரும்பியிருந்த அவளும் குளியலை முடித்துக் கொண்டு...பரபரப்பாக

Vennila

பூபதிக்குப் பத்திய உணவு தயாரித்து...டிபன் செட்டில் நிரப்பி தயாராக முக்காலி மீது கொண்டு வைத்தாள்.

பூபதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துவிட்டிருந்தன.

அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மறு தினம் தொழிற்சாலையின் தொலைபேசிக்கு தொடர்பு கொண்ட தாரா தழுதழுத்த குரலில் சங்கதியைச் சொன்னதும் அருண் அதிர்ந்து போய்விட்டான். அன்று பிற்பகல் நேரத்திற்கு லீவு எடுத்துக்கொண்டு அவன் அந்த மருத்துவமனைக்கு விரைந்தான்.

தீவிர கவனிப்புப் பகுதியின் வெளி வராந்தாவில் கிடந்ததொரு பலகை மீது தன் மகனை மடியில் வைத்துக் கொண்டு சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள் அவள். இரவு முழுதும் கண் விழித்திருந்த களைப்பு முகத்தில் கவிந்து நின்றது. அவனைக் கண்டதும் தாராவின் கண்களில் நீர்புரண்டு விட்டது.

"நீங்க வீட்டுக்குப் போய் கொஞ்சம் ஓய்வுஎடுத்துக் கோங்க. நான் இங்கே இவரைப் பார்த்துக் கொள் கிறேன்" என்று அவளை சமாதானப்படுத்தி-கார்த்திக் குடன் அனுப்பி வைத்தான் அருண்.

கண்ணாடித் தடுப்பின் வெளியே இருந்தபடி அவனால் அவரைக் காணமுடிந்தது.

மயக்க நிலையில் மூக்கில் ரப்பர் குழலும்—கை மடக்கில் பொருத்தப்பட்ட ரப்பர் குழலும் மின்னலடித்த மானிட்டருமாக பூபதி வெள்ளை படுக்கை விரிப்பின்மீது படுத்துக்கிடந்ததைக் கண்டு அவன் மனம் கரைந்து போனான்.

பூபதியும் தாராவும் யாருக்கும் தீங்கு நினைக்காத நல்ல தம்பதியர். தங்கள் உழைப்பினால் தலை



நிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சாதாரணமானவர்கள். அவர்களுக்கு ஏன் இப்படி ஒரு சோதனை?

பெருமூச்சுவிட்ட வண்ணம் இருட்டும் நேரம் வரை அங்கேயே அமர்ந்திருந்தான்.

தெருவிளக்கு பளிச்சிட்ட நேரத்தில் மகனுடன் திரும்பி வந்தாள் தாரா.

"மிக்க நன்றி. இனி நீங்கள் வீட்டுக்குப் போக லாம்...ரொம்ப நேரமானால் உங்கள் தாயார் கவலைப் படுவாங்க" என்றாள்.

மடியில் மகனைப் படுக்கை வைத்துக் கொண்டு அவள் இரவு முழுவதும் அங்கேயே தங்கியிருப்பது சாத்யப்படாது என்று உணர்ந்த அவன் கார்த்திக்கைத் தன்னுடன் அனுப்பி விடும்படி கேட்டுக் கொண்டான்.

"எங்கள் வீட்டில் கார்த்திக் இந்த இரவில் தங்கி இருக்கட்டும்—காலை கொண்டு வந்து உங்களிடம் சேர்ப்பித்து விடுகிறேன். பிறகு நாம் மூவரும் இதுபற்றி சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். பகல்வேளை இவரை யார் பார்த்துக் கொள்வது-இரவுப் பணியை யார் செய்வது—குழந்தை பள்ளிக்கு எப்படிப் போவான் என்பதையெல்லாம் பற்றி யோசிக்க வேண்டும்" என்றான்.

குழந்தை கார்த்திக் மிகவும் அரண்டு விட்டிருந் தான்.

கதைகள் சொல்லி அவனை சிரிக்க வைத்து தம் மடிமீது இருத்திக் கொண்டு தலைமுடியை துளாவி கன்னத்துடன் கன்னம் வைத்துக்கொஞ்சி விளையாடும் அவன் அப்பா பேச்சு—மூச்சு இல்லாமல் படுத்துக் கிடக்கிறாரே?

"அம்மா! அப்பாவுக்கு என்ன ஆச்சு?" தாயின் காதருகே குனிந்து கொண்டு மெல்லக் கேட்டான்.

Vennila

"நெஞ்சு வலி சரியாயிடும்—டாக்டர் ஊசிபோட்டிருக்கார்—அப்பா தூங்குகிறார்...நீ தொண தொணக்கக் கூடாது...பிடிவாதம் செய்யக்கூடாது...அம்மா சொன்னதைக் கேட்கணும்..." தாரா மிருதுவான குரலில் பதில் சொன்னதும் மகன் தாயின் கழுத்தை இறுக்கக் கட்டிக் கொண்டான்.

"எனக்கு பயமா இருக்கும்மா...அப்பாவை சீக்கிரம் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போய் விடலாம்...பாவம் அப்பா!" என்றபடி கண்களில் நீர் புரள அவள் தோளில் சாய்ந்து கொண்டு விசும்பினான்.

குழந்தையை சமாதானப் படுத்தியபடி தாரா மெல்லிய குரலில் சொன்னாள்.

"அம்மா ராத்திரி முழுவதும் இங்கே இருந்து அப்பாவை கவனிக்கணும். அதனாலே நீ அங்கிள் அருணோட அவங்க வீட்டில் போய் தூங்கிட்டு காலையில் காப்பி பலகாரம் சாப்பிட்டு விட்டு வரலாம். செய்வியா?"

குழந்தை தாயை பரிதாபமாகப் பார்த்தான்... கண்ணாடி தடுப்பின் வழியே ஊடுருவிய அவனது பார்வையைக் கண்ணீர் மறைத்தது.

"சரிம்மா...?" எனத் தலையை ஆட்டினான் முடிவில்.

கண்ணீரைத் துடைத்து விட்டு...முகத்தில் புரண்டு விழுந்த முடியை சீராக்கி...அவள் தன் மகனை அருணிடம் ஒப்படைத்தாள்.

"டாடா அம்மா...!" என்று அவளுக்குத் தன் சிறு கரத்தை ஆட்டிவிட்டு அருணின் கையைப் பிடித்துக் கொண்டு...கிளம்பிய கார்த்திக்...வழியில் அவ்வப்போது கொஞ்சம் அழுதான். அவனை அருண் சமாதானப் படுத்திதான் வீட்டுக்கு கூட்டி வர முடிந்தது.



இருட்டி வெகுநேரமாகியும் மகன் வீடு திரும்பாதது கண்டு கோதை கவலையுடன் அன்று உள்ளுக்கும் வாயிலுக்கும் பல தடவைகள் நடந்து கொண்டிருந்தாள்.

பாலைக் காய்ச்சி இறக்கி வைத்துவிட்டு அவள் திரும்புவதற்குள் வாயிற்கதவு தட்டப்பட்டது. ஆவலுடன் சென்று திறந்தாள்.

"ஆமாம்! இவன் பூபதி மகன் கார்த்திக் இல்லையா? இவனுடைய பெற்றோர்கள் பின்னால் வருகிறார்களா?" வியப்போடு கேட்டாள்.

"உள்ளே வாங்கோ—சொல்றேன்" என்ற மகனை கவலையுடன் பார்த்தாள். கார்த்திக்கை கூடத்தில் ஒரு மோடா மீது உட்கார வைத்துவிட்டுத் தன் பாதணிகளை நடை ஓரத்தில் கழற்றிவிட்டு முற்றத்தில் இறங்கி கை கால் முகம் கழுவித் துடைத்துக்கொண்ட பின்னர்தான்... அவன் அம்மாவிடம் நடந்ததைச் சொன்னான். கோதை கேட்டு திகைப்படைந்து போனாள்.

"அட பாவமே! தாரா மருத்துவமனை செலவுக்கு என்ன செய்வாள்—இவங்களுக்கு இப்படி ஒரு கஷ்டம் வரணுமா?" ஆதங்கப்பட்டாள்.

கார்த்திக் சாப்பிட்டுவிட்டு கூடத்தில் விரித்துப் போட்ட பாயின் மீது உறங்கிப் போனான்.

தாயும் மகனும் சாப்பாட்டிற்குப் பின்னர் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

"தாரா ஏற்க மறுப்பாள் என்றாலும் அவளை வற்புறுத்தித் தன் சேமிப்பில் இருந்து இரண்டாயிரம் ரூபாய்களை கடனாகத் தந்து உதவ வேண்டும். பூபதியின் உடல் நிலை அபாயக் கட்டத்திலிருந்து திரும்பும் வரை—கார்த்திக் அவர்களுடன் தங்க வேண்டும்—

Vennila

வேலையை ராஜினாமா செய்யும் யோசனையில் உள்ள கோதை இரண்டு வாரம் லீவு எடுத்துக் கொண்டு குழந்தை கார்த்திக்கை பள்ளிக்கு அனுப்பி-அழைத்து வரும் வேலையைக் கவனித்துக் கொள்ள வேண்டும்—வேலையிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு கணவனுடன் நாள் முழுவதும் தங்கியிருக்கும் தாராவுக்கு இரவு வேளையில் கொஞ்சம் ஓய்வு தர ஒரு இரவு கோதையும்—ஒரு இரவு அருணும் மாற்றி மாற்றி.. பூபதியை கவனிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். தாரா அவர்கள் வீட்டில் குழந்தையுடன் வந்து தங்கிக் கொள்ளலாம்'' என்று பலவும் பேசி முடித்தனர். இருவருக்கும் இந்த முடிவு பூரண திருப்தியை அளித்தது.

சென்னையில் நீண்ட காலம் தங்கிவிட்ட போதிலும் அவர்களுக்கு அன்பான நெருங்கின நண்பர்கள் யாரும் கிடையாது. கோதை தான் வேலை செய்த இடத்தில்—மற்ற பெண்களுடன் பட்டும் படாமலும்தான் பழகி வந்தாள்.

அருணும் தான் படித்த காலத்தில் வகுப்புத் தோழர்கள் சிலருடன் அன்பாகப் பழகினான்—ஆனால் ரொம்ப நெருக்கம் வைத்துக் கொண்டதில்லை. இத்தனை பெரிய பட்டணத்தில்-பல லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் அவர்கள் இருவரும் தனியாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

என்ன காரணமோ, பூபதியைத் தெரிந்துகொண்ட நாள் முதல் அம்மாவும் பிள்ளையும் அவர்பால் ஒரு ஆழ்ந்த பிணைப்பில் கட்டுண்டு போயினர்.

தாரா அவர்கள் செய்ய முன் வந்த எல்லா உதவிகளையும் ஏற்றுக் கொண்டாள்-ஆனால் பண உதவியை ஏற்க முதலில் மிகவும் மறுத்துவிட்டாள். கோதை லேசில் விடவில்லை. தனது அழுத்தமான வற்புறுத்தலின் முடிவில் பண உதவியையும் ஏற்கச் செய்துவிட்டாள்.



இரண்டு வார காலத்தில் பூபதியின் உடல் நிலையில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டதால் தீவிர கவனிப்பு பகுதியிலிருந்து சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டிருந்தார். வீட்டிலிருந்து நீரான ஆகாரத்தைக் கொண்டு வந்து அவருக்கு சாப்பிடத் தரலாம் என்று வைத்தியர் அனுமதித்து விட்டிருந்தார். நாளின் பெரும்பொழுதில் நல்ல நினைவுடன் இருந்ததால் வந்தவர்களுடன் சிறிது நேரம் அவரால் பேசவும் முடிந்தது.

கணவனை கவனித்துக் கொள்ள ஒரு மாத காலம் தாரா விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தாள்—சம்பளத்துடன் அவளுக்கு லீவு கிட்டியிருந்தது. ஆனால் பூபதியின் கடையில் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் அவர் இடத்தில் வேறு ஒரு ஆளை நியமித்து விட்டிருந்தார்கள்—தற்காலிகமாகத் தரப்பட்ட வேலை அது. எனவே அவர்களிடம் தர்க்கிக்க முடியாது அவருக்கு சேர வேண்டிய சம்பள பாக்கியை வாங்கிக்கொண்டு தாரா வந்து விட்டிருந்தாள்.

சங்கதியைக் கேள்விப்பட்டு கோதை வருந்தினாள்-ஆனால் அதை நோயாளியிடம் அவர்கள் யாரும் சொல்லவேயில்லை. இன்னமும் நான்கு நாட்கள் அவர் அங்கேயே தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டும் என்றும்...பின்னர் ஒரு மாத காலம் வீட்டில் ஓய்வாக இருக்க வேண்டும். பின்பு...மூன்றாவது மாத நடுவில் வேலைக்குப் போகலாம் என்றும் வைத்தியர் பூபதிக்கு தெம்பு கொடுத்து விட்டிருந்தார்.

இந்த சில நாட்களில் அவன் சம்யுக்தாவை சந்தித்துப் பேச இயலவில்லை.

அன்று காலை தொழிற்சாலையை மேற்பார்வையிடும் பாவனையில் வளைய வந்து கொண்டிருந்த சம்யுக்தா, தாழ்ந்த குரலில் அவனிடம் கேட்டாள்.



Vennila

"தொடர்ந்து கடற்கரையில் சந்தித்து பேசிக் கொண்டு மற்றவர்கள் கண்களில் படவேண்டாம்னு தீர்மானிச்சோம்... சரி... ஆனால் தொழிற்சாலையில் கூட நீங்க ஒரு மாதிரியா இருக்கிறீங்களே...காரணம்?"

"நண்பர் ஒருவர் மாரடைப்பு நோய் வந்து மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்...தினமும் வேலையிலிருந்து நான் அங்கே போய் அவரை கவனித்துக் கொள்கிறேன்...சில நாட்கள் இரவு முழுவதும் அவருடன் அங்கேயே தங்க நேர்கிறது...அந்த அலுப்புத்தான், வேறு எதுவும் இல்லை!" லேசாக முறுவலித்தான்.

"நான் இன்று உங்ககூட வந்து அவரைப் பார்க் கட்டுமா?"

"அவருக்குத் தீவிர சிகிச்சை தந்து கொண்டிருப்ப தால் பார்வையாளர்கள் அதிகம் பேரை அனுமதிக்க மாட்டாங்க!"

"நான் ஏதாவது உதவி செய்யவேணுமா?"

'ரொம்ப நன்றி...அம்மாவும் நானும் அந்தக் குடும்பத்துக்கு தற்சமயம் தேவைப்பட்ட உதவிகளை செய்து கொண்டிருக்கோம்!"

"அவர் சீக்கிரம் குணமடைந்து வீட்டுக்கு வரணும்னு வேண்டிக்கிறேன்" புன்னகைத்தாள் அவள்.

"உன்னோடு தனிமையில் பேசாமல் இருப்பது எனக்கு ரொம்ப மனக்கஷ்டமாகத் தானிருக்கு—"

"எனக்கும் ரொம்ப கஷ்டமாகத்தானிருக்கு...ஆனால் கடமைதானே முக்கியம்? கவலைப் படாதீங்க. உங்க சிரமத்தை என்னால் புரிஞ்சுக்க முடியும்!" மெல்லிய குரலில் சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்தாள்.



'சம்யுக்தா எத்தனை ஒரு நல்ல பெண்—பூபதிக்கு
உடல் நலம் பூரண குணமடைந்ததும் அவனை அவ
ருக்கு அறிமுகம் செய்து வைத்து அவரது ஆசியைப்
பெற வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

அவனைப் பொருத்தவரை நாட்கள் நத்தையா
ஊர்ந்தன. சீக்கிரம் சாப்பாட்டைக் கொண்டு ஆஸ்ப
திரியில் அக்காவிடம் கொடுத்துட்டு வா...இனிமே
ராத்திரி வேளையில் யாரும் கூட இருக்கத் தேவையி
லைன்னு டாக்டர் சொல்லிட்டாராம். டிபன் செட்டி
மேல் தட்டில் பூபதி தம்பிக்கு சூப் வச்சிருக்கேன்—கீ
இரண்டு தட்டுகளில் தாராவுக்கும், குழந்தைக்கும் சா
பாடு வச்சிருக்கேன்—இதுக்கு மேலே வீட்டுக்குப் போ
தாரா சமைக்கறதுன்னா ரொம்ப அலுப்பா இருக்கும்
பாவம்...இந்த ரெண்டு வாரத்திலே அந்தப் பெண்
ரொம்பவே நொடிச்சு போயிட்டா!" என்றாள்.

டிபன் செட்டை ஒரு வலைப் பைக்குள் போட்டு
கொண்டு செருப்புகளை காலில் திணித்துக் கொள்
நடை பக்கம் திரும்பியபோது கதவு படபடவென்
தட்டப்படுவதைக் கேட்டு திடுக்கிட்டுப் போய் வி
டான்.

திகைப்புடன் கோதை விரைந்துசென்று கதவை
திறந்தாள். இதுநாள் வரை பூபதி உடல் நலம் நன்றாக
தானே இருந்தது...ஏதாவது... என்ற கவலை தாய்க்கு
மகனுக்கும்...

குழல் விளக்கின் வெளிச்சத்தில்கூட உள்ளே புகுந்
அந்த இருவரையும் அவர்களுக்குத் தெரியவில்லை.

"யார் அது?...உங்களுக்கு என்ன வேணும்?
கொஞ்சம் அதட்டலாகக் கேட்டான்.

திறந்த வீட்டிற்குள் தடதடவென்று வந்
அவர்கள் இருவரின் அதிகப்பிரசங்கித்தனம் அவனுக்
வெறுப்பை உண்டாக்கியது.

Vennila

"நல்ல கேள்விதான்! உனக்கு என்னை தெரிஞ்சிருக்க நியாயமில்லை-அஞ்சு வயசிலேயே நீ எங்களைப் பிரிஞ்சுட்டே-உன் தாயாருக்கும் என்னை அடையாளம் தெரியலையே-ஆச்சர்யம்தான்" வந்த இருவரில் ஐம்பது வயதை எட்டியவர் போலிருந்த மனிதன் தான் சுமந்து வந்த துணிப் பையை கீழே வைத்து விட்டு...சுவாதீனமாக முற்றத்தில் இறங்கி கை கால்களைக் கழுவத் தொடங்கினார்.

"யார்...நீலகண்டனா?" மெல்லிய குரலில் வியப்பும் கோபமுமாகக் கேட்டாள்.

"பரவாயில்லை சித்தி! அடையாளம் கண்டு பிடிச்சுட்டீங்க...இவன் உங்க பேரன்-குமார். என்ஜினியர் பட்டப்படிப்பை முடிச்சுவிட்டிருக்கான். வயது இருபத்திரண்டு முடிஞ்சு போச்சு-ஒரு வருஷமாவே வேலை கிடைக்காம திண்டாடுகிறான்...இவனை அழைச்சுக் கொண்டு உங்களை பர்ர்க்க வந்திருக்கேன்...அருண் தான் இதுசமயம் உதவணும்..!"

குழப்பத்துடன் நின்ற மகளைப் பார்த்து சொன்னாள் கோதை...

"சீக்கிரம் நீ போய்விட்டு வந்துவிடு—உன் அண்ணனும் அவர் மகனும் வந்திருக்காங்க. உன்னோடு உட்கார்ந்து சாப்பிடட்டும். பம்பாய் பக்கம் தன் குடும்பத்தோடு உன் அண்ணன் புறப்பட்டு போனபின்...நாம சென்னைக்கு வந்துட்டோம். இத்தனை வருஷத்துக்குப் பிறகு...இவங்களை நாம் பார்க்க முடிகிறது அதிசயந்தான்!" என்றபடி... "உட்கார் நீலகண்டா. உட்காரு தம்பி குமார்!" என்று உபசரித்துவிட்டு சமையலறைக்குள் புகுந்தாள்.

இத்தனைகாலம் சிறிய தாயார் இருக்கிறாளா, செத்தாளா என்று கூட கவலைப் படாது...இப்போது நீலகண்டன் எதற்காக வந்திருக்கிறான்... அவர்களிடம் அவன் நாடும் உதவி என்ன? மதுரையில் அவள் கணவர் விட்டுப்போன கடல் போன்ற வீட்டை என்ன செய்தான். கழுத்தோரம் நைந்து போன அழுக்கு சட்டையும் வேட்டியுமாக வந்து நிற்கிறானே...ஏதாவது காசு பணம் கடன் கேட்கவா? கலவரத்துடன்...அடுப்பை மூட்டி...பரபரப்புடன்...வந்த விருந்தினருக்காக சமைக்கத் தொடங்கினாள்.



## 29

சில நாட்களாக சம்யுக்தா மாலை வேளையில் தன் தாயாருக்கு முன்னதாகவே வீடு திரும்பிக் கொண்டிருந்தாள்.

குப்புசாமி பலவித சந்தேகத்தில் சஞ்சலப்படத் தொடங்கி விட்டார். அவர் நினைத்தது போல ஒரு சமயம் சம்யுக்தாவின் காதல் வெறும் கவர்ச்சியில் முடிந்து போன சங்கதியோ?

திடீரென்று தன் அந்தஸ்தின் நினைவு வர மெல்ல விலகிக்கொண்டு விட்டாளோ?

அந்த பிள்ளையாண்டான் அருண் நமக்கு இது எட்டாத இடம் என்று 'இந்தப்பழம் புளிக்கும்' என்று அவனாகவே நகர்ந்து கொண்டு விட்டானோ?

சின்ன வயசு தீர யோசித்து முடிவு செய்யத் தெரியாது...முதலில் சம்மதம் கொடுத்து விட்டு இப்போது வேண்டாம் என்று சம்யுக்தாதான் ஒதுங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

Vennila

'அருண் நல்லவனாக இருந்ததால் தப்பில்லை—திட்டம் நீட்டி வாழ்க்கையில் முன்னேற எதையும் செய்யத் துணியும், கயவனாக இருந்தால்... 'இந்த காதல் விவகாரத்தை அம்பலப்படுத்துவேன்' என்று காதல் கடிதங்கள் ஏதாவது இருந்தால்... அதை வைத்துக் கொண்டு பயமுறுத்தத் தொடங்கினால்...

—ஒருகணப் பொழுதில் பலவும் எண்ணி வியர்த்து விறுவிறுத்துப் போனவர் ஜன்னல் வழியே தோட்டத்தை எட்டிப் பார்த்தார்.

கேட்டைத் தாண்டிக் கொண்டு சம்யுக்தாவின் கார் உள்ளே நுழைவதைப் பார்த்து விட்டார்.

நல்லவேளை ரத்னா வழக்கம்போல தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள். தனிமையில் அவர் கேட்க விரும்பியதை சம்யுக்தாவிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள இதுதான் தருணம் என்று பரபரப்புடன் சாப்பாட்டு அறை மேசையைத் துடைத்து தட்டை வைத்தார்.

சம்யுக்தா வந்து உட்காருவதற்குள் சூடாக பரிமாற வேண்டும் என்ற அவசரத்தில் எண்ணை சட்டியை அடுப்பில் ஏற்றிவிட்டு அறைக்குள் வளைய வந்தார்.

சிறிது பொழுது மாடிப் படிகளில் மெல்லியதாகக் காலடி ஓசை கேட்டது. சந்தன சோப்பின் நறுமணம் சாப்பாட்டறையை எட்டியது. சம்யுக்தா மெதுவாகப் பாடிக் கொண்டு...படிகளைத் தாவியபடி கீழே இறங்கி வருவதைக் கண்டவருக்கு வியப்பு-உற்சாகமாகத்தான் காணப்படுகிறாள்.

அப்படியென்றால்?-கிழவருக்கு ஒரே குழப்பம்.

காய்ந்து கொண்டிருந்த எண்ணையில் தயார்செய்து வைத்திருந்த விஜிடபிள் பஃப்பை பொரித்து எடுத்துக் கொண்டு விரைந்து வெளியே வந்தார்.



"தாத்தா ! ரொம்பக் கொடுத்து என்னை குண்டாக்கி விடாதீங்க...அம்மா இப்போதெல்லாம் என் உணவு விஷயத்திலும்—மற்ற எந்த சங்கதிகளிலும் தலையிடுவதேயில்லை. அதனால் நானே என்னை கவனிக்கக்க வேண்டியிருக்கு !" சிரித்துக்கொண்டே ஒரு பஃப்பை எடுத்துத் தன் தட்டில் வைத்துக் கொண்டாள்.

"உன்னை நீயே கவனிச்சுக்க பொறுப்பு ஏற்பட்டு விட்டதுன்னு அம்மா நினைக்கிறாங்க...!" முறுவலித்தபடி காப்பி டம்ளரை வைத்துவிட்டு மேஜை அருகே பவ்யமாக வந்து நின்றார்.

"என்ன தாத்தா...?" தட்டிலிருந்து நிமிர்ந்தாள்.

"என் கிட்டே நீ சங்கதியைச் சொல்லிவிட்டதாலே நான் உன்னை இப்போது ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கு!"

"தாராளமாகக் கேளுங்கோ...!" சிரித்தாள் அவள்.

"இப்போதெல்லாம் நீ வீட்டுக்கு சீக்கிரம் திரும்பி வருகிறாயே...அந்த அருண் ஊரில் இல்லையா?"

பக்கென்று சிரித்து விட்டாள் சம்யுக்தா—

"புரியுது தாத்தா, இரண்டு வாரங்களுக்கு முன் நான் சொன்ன சங்கதிக்கும் என் நடவடிக்கைக்கும் பொருத்தமில்லாதிருக்கிறதேன்னு கவலைப்பட்டு பலவிதமாக கற்பனை செய்து கொண்டு விட்டிருக்கீங்க... அருண் இந்த இரண்டு வார காலமாக ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக அலைஞ்சு கொண்டிருக்கார்... அதனால் அவரை சந்தித்துப் பேச முடியலை. மேலும் அம்மாவை நேரே பார்த்து எங்கள் விருப்பத்தை தெரிவிக்கும் நாள் வரை கொஞ்சம் சந்திப்பை ஒத்திப் போடுவது நல்லது என்று நாங்கள் ஒதுங்கி இருக்கிறோம்?" புன்னகைத்தபடி பஃப்பை கடித்து-சுவைத்துத் தின்னத் தொடங்கினாள்.

Vennila

"ஆஸ்பத்திரியா? அவருக்கு உடம்புக்கு என்னம்மா?" திகைப்புடன் கேட்டார் குப்புசாமி.

"அவருக்கு ஒண்ணுமில்லை தாத்தா...! அவரது குடும்ப நண்பர் பூபதி என்கிறவருக்கு ஹார்ட் அட்டாக் வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரை காலையிலும்—மாலையிலும் போய் பார்த்து வரவே அருணுக்கு பொழுது சரியாக இருக்கிறது!"

"பூபதியா? மேலே விவரம் ஏதாவது தெரியுமா பாப்பா?" பதட்டமாகக் கேட்டார் அவர்.

"ஏன் தாத்தா உங்களுக்கு அந்த பூபதியைத் தெரியுமா?"

"எங்கேயோ கேட்ட பேர் போல தோணிச்சு—ஆமாம் அவர் எங்கே வசிக்கிறாராம்?"

"தாத்தா! அவர் என்கிட்ட முழுவிவரம் சொல்லலை—நானும் நூண்டித் துருவி கேட்கலை. தொழிற்சாலையில் நாங்கள் இருவரும் கண்டும் காணாதது போல நடந்துக்கிறோம். அபூர்வமாக பேசறோம்...அப்பத்தான் தெரிஞ்சுது...அந்த பூபதி மாம்பலத்திலே எங்கேயோ தம் குடும்பத்தோட வசிக்கிறாராம். அந்த மனிதர் உடல் நிலை இப்போது கொஞ்சம் தேவலையாம். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்!"

குப்புசாமியின் நெஞ்சு...இனம் விளங்காதொரு கலவரத்தில் வேகமாகத் துடித்தது...

அந்த பூபதியை உடனேயே போய் பார்த்துவிட்டு வரவேண்டும் போன்றதொரு பரபரப்பு.

"என்ன தாத்தா யோசிக்கறீங்க?" அவள் கேட்ட போது திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்.

"ஒண்ணுமில்லை பாப்பா. உன் அம்மா இப்போதெல்லாம் தினமும் ¡நேரம் கழிச்சுதான் வீட்டுக்கு



வராங்க...டிபன் காப்பி எதுவும் சாப்பிடறதில்லை .. அவங்க முகத்தைப் பார்த்தா எனக்கு ரொம்ப பரிதாபமாக இருக்கு. எப்போதும் கவலையில் மூழ்கினவங்க போல் தெரியறாங்க...தொழிற்சாலையில் எல்லாம் நல்லாத் தானே நடந்து கொண்டு இருக்கு. அவங்க மனசை வருத்துகிற சங்கதி என்னன்னு உன்கிட்டே யாவது சொல்லக்கூடாதா?"

"அம்மா என்னிக்குத்தான் தன் மனதைத் திறந்து பேசியிருக்காங்க தாத்தா! இப்படி ஒரு தனித் தன்மையோடு.. விலகி இருந்ததால்தான் என் தந்தை அம்மாவை விட்டு விலகிப்போய் விட்டார்னு என் மனம் சொல்லுது!"

பெருமூச்சு விட்டபடி குப்புசாமி காலிப் பாத்திரங்களுடன் உள்ளே திரும்பிவிட்டார். அவர் மனம் ஒரு நிலையில் இல்லாது தத்தளித்தது.

அடுத்த நாள் காலை வசுந்தரா புறப்படுமுன் தான் மாலை திரும்பிவர நேரமாகும் என்று சொல்லிவிட்டுப் போனாள்.

குப்புசாமிக்கு அது பெருத்த நிம்மதியைத் தந்தது. அன்று பிற்பகல் வழக்கம் போல அவர் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வெள்ளை வேட்டி சட்டையில் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார்.

"அம்மா வந்தாக்க என்ன சொல்றது?" ஏளனமாகக் கேட்டாள் ரத்னா.

"அவங்க நேரம் கழிச்சுத்தான் வருவாங்க. அதனால் எதுவும் சொல்லத் தேவையில்லை!"

"சின்ன யஜமானி வந்தால் அவங்களுக்கு டிபன் தந்து யார் உபசரிக்கிறது?"

"எல்லாத்தையும் ஹாட்கேசில் எடுத்து வச்சிருக்கேன்...அதோட ஒரு கடிதாசி துண்டும் எழுதி

Vennila

வச்சிருக்கேன். அதனால் அவங்க கோவிச்சுக்கமாட்டாங்க!"...அதற்கு மேல் பேசப் பிரியப்படாதவர் போல வேகமாக வராந்தாவைக் கடந்து தோட்டத்தைத் தாண்டி...தெருவிற்குள் புகுந்து விட்டார் குப்புசாமி.

"வரவர குப்புசாமி ரொம்பவே இடக்காகப் பேசுகிறார்...அம்மாவிடம் சமயம் பார்த்து இவரைப் பற்றி ஒரு வார்த்தை போட்டு வைக்க வேண்டும்"...பற்களைக் கடித்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள் ரத்னா.

அதற்குள் தெருமுனையில் கிடைத்ததொரு ஆட்டோவை அழைத்து அதற்குள் ஏறி உட்கார்ந்து கொண்டு மாம்பலத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தார் அவர்.

மாம்பலம் பஞ்சநாத தெருவிற்குள் நுழைந்து ஆட்டோ பத்தாம் எண் வாசலில் நின்றது. கட்டணத்தைக் கொடுத்துவிட்டு கிரீச்சிட்ட கேட்டின் தாளை மெல்ல நீக்கிக்கொண்டு தோட்டத்திற்குள் புகுந்தார்.

பகல் வேளை தூக்கத்திற்குப் பின் எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டிருந்த ரங்கம்மாளுக்கு ஒரே எரிச்சல். பகல் முழுவதும் யாராவது வந்து அன்று அழைப்பு மணியை அழுத்திக் கொண்டு—அவளது தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தனர். இப்போது யார் வந்திருப்பது?...சீற்றத்துடன் முகத்தை துவாலையால் அழுத்தித் துடைத்துக் கொண்டு...வாயிற் கதவை படக்கென்று திறந்தாள்.

சில நாட்களுக்கு முன்னர் வந்த அதே வயதான மனிதர் வராந்தாவில் நிற்பதைக் காண அவளுக்குக் கோபம் வந்தது...

"மறுபடியும் வெங்கட்ராமனைப் பார்க்கவா வந்திருக்கீங்க—" ஏளனமாகக் கேட்டாள்.

"இல்லேம்மா! அவுட் அவுசில் குடியிருக்கும் பூபதிக்கு உடம்பு சுகமில்லை என்று கேள்விப்பட்டேன்—



அவருக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன். பூபதி எங்கள் நண்பர் வெங்கட்ராமனுக்கு ரொம்ப வேண்டியவர்..!" தயங்காது வாயில் வந்ததை படபடவென்று சொன்னார்.

வீட்டுக்காரி யோசனையுடன் தலையைச் சொரிந்து கொண்டாள்.

பூபதியின் நண்பர்கள் அவருக்கு உதவ முன்வந்தால் அதை அவள் தடுப்பது முறையல்லவே...

"அவர் இப்போது வீட்டில் இல்லை—மருத்துவமனையில் அல்லவா அனுமதிக்கப்பட்டிருக்கிறார்" என்றாள்.

"அப்படியா... எந்த மருத்துவமனைன்னு சொன்னால்..."

"கிரீம்ஸ் சாலையில் புதிதாக உருவாகியிருக்கிற சொக்கேசன் நர்ஸிங்ஹோமில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். முன்னைவிட அவர் உடல்நிலை இப்போது கொஞ்சம் குணமாகிவிட்டிருப்பதாக அவர் மனைவி சொன்னாள். எந்த வார்டு...படுக்கை எண் என்ன என்பதெல்லாம் தெரியாது–நீங்க போய் விசாரிச்சுக்கணும்..." கூறிவிட்டு மேலே பேசாது கதவை சாத்திக்கொண்டு விட்டாள்.

மறுபடி இன்னொரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து குப்புசாமி புறப்பட்டார்.

மாலை வெய்யல் மஞ்சளாகிவிட்ட நேரம். பார்வையாளர்கள் வரத்தொடங்கிவிட்ட சமயம்...மருத்துவமனை வாசலில் கூட்டம் திமுதிமுத்துக் கொண்டிருந்தது. வரவேற்பறையில் விசாரிப்பு செய்யும் பகுதியில் ஒரு பெரிய கியூ தெரிந்தது தமது முறைக்காக அந்த வரிசையில் சேர்ந்து கொண்டார் குப்புசாமி.

"திரு பூபதியா? முகவரி என்ன சொன்னீங்க..." என்று புன்னகையுடன் கேட்ட ரிஸப்ஷன் பெண் மேஜைமேலிருந்த தடிமனானதொரு நோட்டுப் புத்தகத்

Vennila

தைப் புரட்டிவிட்டு...ஆமாம், "அவர் இப்போது சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். ஹார்ட் அட்டாக் கேஸ்தான். நாலாவது தளத்தில்...இருபத்திநான்காவது எண் படுக்கை—எச் வார்டு 'லிப்ட்' இந்தப் பக்கம் உள்ளது!" என்று போகும் வழியைச் சுட்டிக் காட்டினாள்.

பரபரப்பாக லிப்டிற்குள் புகுந்து நான்காவது தளத்தை அடைந்தார். ரிஸப்ஷன் பெண் கூறிய வலது பக்கத்து வார்டை நோக்கி நடப்பதற்குள் கால்கள் மடக்கிக் கொண்டு தரையில் விழுந்துவிடுவார் போல் உணர்ச்சி கொந்தளிப்பில் உடல் ஆடியது.

பார்வையாளர்கள் வந்த வண்ணமாக இருந்தனர்—ஒவ்வொரு படுக்கையைச் சுற்றியும் ஒரு சிறு கும்பல். படுக்கை தலைமாட்டில் பளிச்சென்று சுவற்றில் எழுதப்பட்டிருந்த எண்கள் மீது கண்களை ஓட்டியபடி மூச்சுத் திணற வார்டுக்குள் விரைவாக நடந்தார்.

இருபத்து நான்காம் எண் படுக்கை வார்டின் கடைசியில் சுவர் ஓரமாக இருந்தது. பழுப்பு வண்ணக் கம்பளியால் கழுத்து வரை போர்த்திக்கொண்டு படுக்கையில் சுருண்டபடி கிடந்த நோயாளியின் முகம் சுவற்றின் பக்கமாக திரும்பியிருந்தது. அந்தப் படுக்கையைச் சுற்றி பார்வையாளர் யாரையும் காணவில்லை. தம்முடன் இது வரை கண்ணாமூச்சி விளையாடிய அந்த தாடிக்காரரை கண்டுபிடித்து விட்டோம் என்ற உற்சாகத்தில் யாருமில்லாத தனிமையில்...அவருடன் பேச ஒரு நல்ல வாய்ப்பு கிட்டிவிட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியில் விரைந்து கட்டிலை அடைந்தார்.

செருப்புக் காலடி ஓசை கேட்டதும்...மறுபக்கம் திரும்பிய அந்த நோயாளி திடுக்கிட்டு எழுந்து தலையணைக் குவியல் மீது சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டார்.

மிக அருகிலே நேருக்கு நேர் அவரைப் பார்க்க நேரிட்ட குப்புசாமிக்கு மின் விசை தாக்கியது போன்ற



தொரு பெரும் அதிர்ச்சி...அவரது நெஞ்சு விரிந்து வெடித்துவிடும் போன்று வேதனையில் துடித்தது. கால்கள் பூமியில் நில்லாது தள்ளாடின.

"ஐயா! நீங்களா...இது? நம்பவே முடியலை..." தழதழத்தார். பிரமிப்புடன் கண்களில் நீர் புரண்டு பார்வையை மறைத்தது.

"குப்புசாமியா?... ஆச்சர்யமா இருக்கு... எப்படி இங்கே?" பேச முடியாது தடுமாறினார் பூபதி.

"உங்களைத் தேடித்தேடி முடிவில் இங்கே கண்டு பிடிச்சுட்டேன் ஐயா! எங்களையெல்தாம் விட்டு... மறைஞ்சு வாழ உங்களுக்கு எப்படி ஐயா மனம் வந்தது?" தன் கரங்களை நீட்டி அவரது கைகளைப்பற்றிக் கொண்டார்.

நோயாளியின் உடல் நடுங்குவதை உணர்த்தியது, நடுங்கிய அவரது கரங்கள்.

"எத்தனை காலமாச்சு...ஆனாலும் அடையாளம் கண்டு பிடிக்க முடிகிறது..." லேசானதொரு சோகப் புன்னகை அவர் முகத்திலே தெளிந்தது.

அவர் கண்களில் பெருகி—கன்னத்திலே கோடிட்ட கண்ணீரை சட்டென்று குப்புசாமி துடைத்துவிட்டார்.

"ஐயா...! இந்த சந்திப்பு உங்களுக்குப் பெருத்த அதிர்ச்சிதான். உங்க உடம்புக்கு நல்லதல்ல... மன்னிச்சுக்கோங்க.. உங்களை நான் தேடி எப்படியாவது கண்டுபிடிச்சுடணும் என்கிற பிடிவாதத்திலே இங்கே வந்துட்டேன்...!"

"பரவாயில்லை குப்புசாமி—நானும் உங்களையெல்லாம் சந்திக்கணும் என்கிற முடிவோடு பங்களா பக்கம் இரண்டு தடவை வந்து காத்திருந்தேன். எல்லாத்துக்கும் நேரம் காலம் வரணும் இல்லையா... குப்புசாமி!

Vennila

சம்யுக்தா இப்போ பெரிய பெண்ணா வளர்ந்து நிக்கிறாள் இல்லையா?'' ஆவலுடன் கேட்டார்.

''தாயாருடன் கூட தொழிற்சாலைக்குப் போய் மேற்பார்வையிடும் அளவுக்கு வளர்ந்திருக்கு ஐயா! உங்களைப் பத்தியே சதா நினைப்பு அந்த குழந்தைக்கு! அதனாலேதான் நான் தீவிரமாக உங்களைத் தேடத் துவங்கினேன்...இந்த பெயர் மாற்றந்தான் என்னை ரொம்ப ஏமாத்திட்டது.''

''குப்புசாமி! நான் என் பெயரை மாத்திக்கலை. என் முழுப்பெயரை நீங்க மறந்துட்டீங்களா... லோகநாத சங்கர... பூபதி... என்ற என் நீட்ட பெயரின் வால் பகுதியை மட்டும் வச்சுக்கொண்டிருக்கேன். லோகநாதன் என்பது என் பெயர்–சங்கரன் என்பது அப்பா பெயர் பூபதி என்பது குடும்பத்து பெயர். பெரியவங்க பேரை எடுக்க ஒரு பிள்ளை வேணும்னு சொல்வாங்க இல்லையா...என் மூதாதையர் பெயரான பூபதியை நான் எனக்காக எடுத்துக் கொண்டு விட்டேன்!'' லேசாக சிரித்தார்.

—அந்த நிலையிலும் அவரது சுபாவமான நகைச்சுவை அவரை விட்டுப் போகவில்லை என்பதை அறிந்த குப்புசாமியின் மனம் பாகாய் கரைந்தது. எப்படி இருக்க வேண்டியவர்...எப்படி இருக்கிறார் என எண்ணி இரக்கத்தில் உருகிப் போனார்.

''இப்போ நான் நாடோடியில்லை. ஒரு குடும்பத் தலைவன்!'' சிரித்தார் அவர்.

''தெரிஞ்சு கொண்டேன்'' சுருக்கமாக பதிலளித்தார், குப்புசாமி.

''என்னைப் பார்க்க என் மனைவியும் குழந்தையும் கொஞ்ச நேரத்தில் இங்கே வரப்போறாங்க. குப்புசாமி



நீங்க எனக்கு உதவி செய்யணும்...கொஞ்ச நாள் வரை இந்த சந்திப்பு–உண்மை எல்லாவற்றையும் என் குடும்பத்தாரும்–சம்யுக்தாவும் தெரிஞ்சு கொள்ளாதிருக்கும்படி பாதுகாக்கணும், செய்வீங்களா?''

''உங்கள் நோக்கம் எனக்கு புரிகிறது–அப்படியே செய்வேன். கவலைப்படாதீங்க...விரைவாக குணமடைந்து நீங்க வீடு திரும்பணும் என்பதுதான் இனி என் நித்தியப்படி பிரார்த்தனையாக இருக்கும்'' உணர்ச்சிவசத்தில் குரல் உடையத் திணறினார் குப்புசாமி.

'என் மனசில் கொந்தளிக்கிற உணர்வுகளைப் பத்தி இப்போ என்னால் விரிவாக எதுவுமே பேச முடியலை குப்புசாமி அதை நினைச்சு...!'' அவர் முடிக்குமுன்... வார்டுக்குள் நுழைந்த தாரா வேகமாக கட்டில் அருகே மகனுடன் வந்து நின்றாள்.

வியப்புடன் தன்னைப் பார்த்த அந்தப் பெண்ணை கை கூப்பி வணங்கினார் குப்புசாமி...

''ஐயா எங்க ஊர்க்காரர்–நோயாளி நண்பனைப் பார்க்க வந்த இடத்தில்...இவரையும் பார்த்துட்டேன்... ஹி......!'' என்று அவருக்கே உரித்தான பாணியில் நிலைமையை சமாளித்தார்.

Vennila

## 30

பழங்காலத்து மன்னர்கள் சிலர் கெட்ட செய்திகளை கொண்டுவந்த தூதுவர்கள் மீது சீற்றம்கொண்டு... அவர்களைக் கொடுமையாகத் தண்டித்து விடுவார்களாம்.

வசுந்தராவும் ஒரு வகையில் அவர்களைப் போன்றவளாகத்தான் இருந்தாள். அன்று மாலை பகல் உணவிற்குப் பின்னர் தொழிற்சாலையிலிருந்த அவளது அறைக்குள் மெல்ல நுழைந்தார் செயலாளர் சாம்பசிவம். கைமடக்கில் சுமந்து கொண்டு வந்த ஃபைல்களை அவள் முன்மேசைமேல் வைத்து விட்டு பவ்யமாக நின்றார்.

சமீபகாலத்தில் அவர் தொழிற்சாலைவிருந்து ஒரு கடன் தொகைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். அவரது வீட்டை சீர்திருத்தி முன் பகுதியைப் புதுப்பிக்க அந்த பணம் தேவைப்பட்டது. வசுந்தராவிடம் தெரிவித்தபோது "அதற்கென்ன! கடன் விண்ணப்பத்தாளை பூர்த்தி செய்துவையும், பார்க்கிறேன்" என்று நம்பிக்கை தெரிவித்திருந்தாள். அந்தத் துணிவில் அவர் ஃபைல்களுக்கு அடியில் தமது கடன் விண்ணப்பத்தாளை அவள் பார்வைக்கு வைத்து விட்டிருந்தார்.

ஃபைல்களைப் புரட்டி கடிதங்களை கவனமாகப் படித்து கையெழுத்திட்டுக் கொண்டிருந்த அவள் தம் முன்னால் கைகளைக் கட்டிக்கொண்டு மரம் போல நின்றவரை ஓரக் கண்ணால் கவனித்துவிட்டு.. 'உட்காருங்கள்' என்று உபசரித்தாள்.



பகல் உணவிற்குப் பின்னர் வயிறு நிறைந்து—மனம் நிறைந்து எஜமானி நல்ல மன நிலையில் இருப்பதாக ஊகித்துக் கொண்ட அவர் தொண்டையை லேசாகச் செருமினார்.

"அம்மா கிட்டே ஒரு சங்கதி சொல்லப் பிரியப்படுகிறேன்" மெல்லிய குரலில் ஆரம்பித்தார்.

கடைசியாக இருந்த அவரது கடன் விண்ணப்பத்தாள்மீது பார்வையை—நிமிர்த்தி அவரைப் பார்த்தாள்.

"தான் கண்ணால் பார்த்ததைச் சொல்லாமலிருப்பது தவறுன்னுபட்டதால் சொல்கிறேன்!" பீடிகையுடன் ஆரம்பித்தார்.

மவுனமாக அவரை வெறித்தாள் வசுந்தரா.

அவர் சொல்லப் போகும் சங்கதி என்ன என்று அவளால் ஊகிக்கமுடிந்ததால் உள்ளத்திற்குள் சினம் பொங்கத் தொடங்கிவிட்டது.

"நம்ப சின்ன அம்மாவையும் தொழிற்சாலையில் வேலைக்கு சேர்ந்துள்ள அருணையும் கடற்கரையில் தான் சில தினங்களாக ஒன்னாகப் பார்க்க நேரிட்டது. என்னைப்போல வேறு யாருடைய கண்களிலாவது அவர்கள் தென்பட்டு விட்டால்...அபவாதம் ஏற்படுமே என்று மனம் ரொம்பவே சங்கடப்பட்டது. அதனால்..." பேச முடியாது தடுமாறினார்.

வசுந்தராவின் முகம் கோபத்தில் சிவந்து போனது—சற்றுமுன் அதில் நிழலாடிய லேசான புன்னகை மறைந்து கடுமையாகியது.

"என் மகளின் நடவடிக்கைகளைப் பற்றி எனக்குத் தெரியாதுன்னு வந்து சொல்றீங்களா? எனக்கு இதுபற்றி தெரியும். இரண்டுபேரும் நட்புரிமை பாராட்டிப் பழகுறாங்க. அதனால் என்ன? இதை ஒரு தவறான



Vennila

காரியமாக எடுத்துக் கொள்ளும் பத்தாம்பசலி நான் இல்லை!'' படபடவென்று வெடித்தாள்.

சாம்பசிவம் வியர்த்து விறுவிறுத்துப் போனார்.

'ஏதோ நல்லது என்று சொல்லப் போக—எஜமானியின் கோபத்துக்கு ஆளாகி விட்டோமே' என்றதொரு பயம் அவரது நெஞ்சைக் கவ்வியது. ''உங்களுக்குத் தெரியாதுன்னு!'' மேலே பேச முடியாது முணகினார் அவர்.

ஆனால் வசுந்தரா அவரை மன்னிக்கும் மனநிலையில் இருக்கவில்லை. தன்முன் மேஜைமேல் அவர் வைத்திருந்த விண்ணப்பத்தாளைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

''மிஸ்டர் சாம்பசிவம்! உங்களுக்கு இந்தக் கடனைத் தந்து உதவ எனக்கு ரொம்பவும் ஆவலாகத்தான் இருக்கிறது... ஆனால் தற்சமயம் முடியாது என்பதால்... இந்த விண்ணப்பத்தை நான் ஒதுக்கிவிட நேர்கிறது... மிகவும் வருந்துகிறேன்!'' என்றாள்.

இடி விழுந்தவர் போலாகினார் சாம்பசிவம். சில தினங்களுக்கு முன் ''ஆகட்டும் பார்க்கலாம்!'' என்று நம்பிக்கை தந்த எஜமானி... இப்போது முடியாது என்று கண்டிப்பாக மறுத்து விட்டாளே? நம் வாயில் ஏன் இந்த சனி? இவள் மகன் எக்கேடு கெட்டுப் போனால் நமக்கென்ன என்று மவுனமாக இருக்காமல் போனது பிசகாய் போய் விட்டதே—என்ற ஆதங்கத்துடன் எழுந்து... விடை பெற்றுக்கொண்டு வெளியே சென்று விட்டார்.

கதவு சாத்தப்பட்டதும்... அந்த விண்ணப்பத்தாளை எடுத்து கோபத்துடன் 'மறுக்கப்பட்டது!'' என எழுதி கையெழுத்திட்டு கம்பிக் கூடைக்குள் விசிறிப் போட்டாள்.



கோப உணர்வின் அழுத்தத்தில் தலை வெடித்து விடும் போன்ற வேதனையில் அவள் தடுமாறிப் போனாள்.

அதற்கு மேல் அதிக நேரம் அங்கே இருக்க மனமின்றி அடுத்த அறையில் தொழிற்சாலையின் விவகாரங்களை தானே கவனித்து ஆவன செய்ய முயன்று கொண்டிருந்த மகளிடம் சொல்லிக்கொள்ள பிடித்தம் இல்லாது... காரை வரவழைத்து ஏறிக் கொண்டு நேரே நுங்கம்பாக்கத்து அலுவலகத்திற்குப் புறப்பட்டு விட்டாள்.

அங்கேயும் அவள் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அலுவலகத்தைச் சுற்றி பார்வையிட்டுக் கொண்டிருந்தவள் முன் எதிர்ப்பட்ட அருணைக் கண்டதும் அவள் முகம் இறுகிப் போய் நெஞ்சம் பதைத்துப் போனாள்.

புன்னகையுடன் வணக்கம் தெரிவித்து விட்டு... அப்பால் நடந்து சென்ற அவனை பார்வையால் பொசுக்கிவிட மாட்டோமா என்று மனம் பதை பதைத்தது.

அன்று மாலையே அவனது வேலைக்கு சீட்டுக் கிழித்து விட அவளால் முடியும். ஆனால் அதனது பின் விளைவுகளை சமாளிக்க முடியுமா என்ற சந்தேகத்தில்... பற்களைக் கடித்துக் கொண்டாள்.

தொழிற்சாலை சம்பந்தப்பட்ட அனைத்தையும் அவளிடம் பேசும் வாய்ப்பும் தகுதியும் இருக்கிறது என்ற காரணத்தால் சாம்பசிவம் அவளிடம் சம்யுக்தாவின் நடத்தையைப் பற்றி துணிவுடன் சொல்லி விட்டார். அவர் ஒரு சாதாரண ஊழியராக இருந்திருந்தால்... தாம் கண்டதை மற்றவர்களிடம் சொல்லி சிரித்திருப்பார்.

Vennila

யார் கண்டது? இதற்குள் இந்த சங்கதி தொழிற்சாலையில் உள்ள ஊழியர்கள் பலருக்கு தெரிந்துவிட்டிருக்கலாம். அவளைக் கண்டு அஞ்சி ஒடுங்கும் அவர்கள் பலர்...வெறும் வாயை மெல்வதற்கு பதில் அவல் கிடைத்தது என்று... அவள் பின்னால் பேசி சிரித்துக் கொண்டிருக்கலாம். கோபத்துடன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

எல்லாவித வசதிகளையும் தந்து—ஒரு இளவரசியைப் போல மேன்மையாக வளர்த்தாள் அவள் தன் மகளை! அந்த இளவரசிக்கு ஏன் இந்த பிச்சைக்காரப் புத்தி?—நினைக்க நினைக்க அவள் நெஞ்சு ஆத்திரத்தில் குமுறியது.

மாலை பொழுது அமிழும் நேரம். வசுந்தராவின் பென்ஸ்...பங்களாவின் முன்புற தோட்டத்திற்குள் நுழைந்த போது... அவளுக்கு முன்னதாக வந்திருந்த சம்யுக்தா...தரையைப் பெருக்கியதொரு மாக்ஸியில் தடுக்கி விழாத குறையாக—வீட்டின் செல்ல நாய் மகியுடன் பாய்ச்சுக் காட்டி விளையாடிக் கொண்டிருந்தாள்.

தாயைக் கண்டதும் சிரித்த முகத்துடன் ஓடோடி வந்தாள் மகள்.

"அம்மா...! உங்களை பகல்பொழுது தொழிற்சாலையில் காணவில்லை. நீங்க நுங்கம்பாக்கம் கிளம்பிப்போய் விட்டதாகத் தெரியவந்தது. விற்பனை பகுதிக்கு வந்திருக்கும் சில கடிதங்களைப்பற்றி ஏற்பட்ட சந்தேகத்தை உங்களிடம் பேசி நிவர்த்தி செய்துக்க விரும்பினேன். நாளைக்கு உங்களிடம் அந்த கடிதங்களைக் காட்டலாமா அம்மா?" உற்சாகமாகக் கேட்டாள்.

காலோடு தலைவரை மகளை ஏற இறங்கப் பார்த்தாள் வசுந்தரா. இந்த குறுகிய காலத்திற்குள் சம்யுக்தா தோற்றத்தில் ஒரு பிடி உயரமாகக் காணப்பட்டாள்.

அத்துடன் மட்டும் இல்லை உணர்விலும், நடவடிக்கைகளிலும் ரொம்பவே சுதந்திரமான போக்கில் வளர்ந்து



விட்டிருந்தாள். முளையில் கிள்ளி எறியாத பிசகு இது—என எண்ணித் தாடை இறுகிப் போனாள் தாய்.

"உன்னிடம் கூட நான் பேச வேண்டியது சில இருக்கு!"

"அப்படியா அம்மா...! இப்பவே உள்ளே வரவா..." பரபரப்புடன் மகள் கேட்டாள்.

"ரொம்ப களைப்பா வந்திருக்கேன்—முதலில் குளிக்கணும்—அரைமணி நேரம் கழிச்சு உன்னை ரத்னா வந்து கூப்பிடுவாள்—நீ மாடிக்கு வரணும்—" என்று உத்திரவிட்டபடி வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

ஷவரிலிருந்து பூவாகக்கொட்டிய பச்சைத் தண்ணீர் கூட அவளது உடலையும்—உள்ளத்தையும் தகித்த கோபாக்கினியைக் குளிர வைக்க முடியவில்லை.

மாற்று உடையில் மாடியிலிருந்து வந்தாள்—பூஜை அறைக்குள் நுழைந்தாள். மல்லிகை மலர்—சந்தன ஊதுவத்தி இரண்டின் கலவை மணத்தை அனுபவிக்க முடியாது...மனம் உருகி பிரார்த்திக்க இயலாது, சில நிமிடங்கள் அறைக்குள் நின்றபடி—தெய்வப் படங்களை வெறித்துப் பார்த்துவிட்டு.. சிந்தனையில் மூழ்கியவளாக வெளிப்பட்டாள்.

"சம்யுக்தாவை மாடிக்குவரச் சொல்!" என்று ரத்னாவிடம் கூறிவிட்டு...நேரே தன் அறைக்குள் புகுந்து... ஜன்னல் ஓரம் போடப்பட்டிருந்ததொரு மிருதுவான இருக்கையில் சாய்ந்து கொண்டாள். மாடிப் படிகளில் கேட்ட காலடி ஓசை அவளது நெஞ்சிலே படபடப்பை உண்டாக்கியது.

பத்து மாதம் சுமந்து அவள் பெற்ற மகள்தான் தான் சம்யுக்தா—தாயின் கண் அசைப்பில் பயந்து நடுங்கிப் போய்விடும் கபடமற்ற குழந்தையாக வளர்ந்தவள்—அம்மா கிழித்த கோட்டைத் தாண்டத் தெரியாத வெகுளிப் பெண்ணாக இதுவரை இருந்தவள். ஆனால் இப்போது இந்த சிட்டுக் குருவிக்கு சிறகு முளைத்து

Vennila

விட்டிருக்கிறதே... தன்னிச்சையாகப் பறந்து திரிய வேண்டும் என்ற சுதந்திர தாகம் அமோகமாக இருக்கிறதே!

"அம்மா வந்துட்டேன்!" முகத்தில் சிரிப்புத் தவழ உற்சாகமாக உள்ளே வந்து நின்றாள் மகள்.

"சாவகாசமாகப் பேச வேண்டிய சங்கதி...அந்த நாற்காலியை இப்படி நகர்த்திப் போட்டுக் கொண்டு உட்கார்...!" படுக்கையருகே கிடந்ததொரு பிரம்பு நாற்காலியைச் சுட்டிக் காட்டினாள் வசுந்தரா...

"என்ன சொல்லுங்கோ!" என்ற கேள்விக் குறியில் புருவங்கள் வில்லாக...மகள் தாயின் எதிரே இழுத்துப் போட்டுக் கொண்ட நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

வசுந்தராவுக்கு எப்படி ஆரம்பிப்பது என்று ஒரு சில வினாடிகள் குழப்பம். லேசாக ஒருமுறை இருமினாள்.

"ஆமாம் அந்தப் பையன் அருண், அவனுடன் உனக்கு எத்தனை காலமாக சிநேகம்?" எடுத்த எடுப்பில் அழுத்தமான குரலில் கேட்டாள். சம்யுக்தாவின் நெஞ்சு படபடவென்று துடிக்கத் தொடங்கியது...ஜப்பென்று முகம் சிவந்துபோனாள் அவள்...

"கொஞ்ச நாட்களாகத்தான்...ஏன் கேட்கிறீங்க?" கிணற்றுக்குள்ளிருந்து ஒலித்தது போன்ற குரலில் கேட்டாள்.

"நீயும் அவனும் கடற்கரையில் மாலை வேளையில் சந்தித்துக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன்—நம் தொழிற்சாலையைச் சேர்ந்த வேறு சிலர் பார்த்திருக்கிறார்கள். நம் நண்பர்கள் வட்டாரத்தில் இன்னும் யாரெல்லாம் பார்த்திருக்கிறார்களோ தெரியாது!"

"எல்லோரும் பார்க்கட்டும். அதில் தவறு என்ன?"

"பலே பேஷ்! உனக்கு துணிச்சல் தலைவரை ரொம்பவே ஏறியிருக்கிறது...தொழிற்சாலைக்கு உன்னை நான் எதற்காக அழைத்து வரத் தொடங்கினேன் தெரி



யுமா? எனக்குப்பின் இந்த வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு போக, தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்—என்பதற்காகத்தான்... அங்கே வேலைசெய்கிற ஒரு சாதாரண ஊழியனுடன் நீ காதல் நாடகம் நடத்த அல்ல!" அம்மாவின் குரலில் சூடு அதிகமாகி விட்டிருந்தது. கண்களில் கடுமையும் கோபமும் தெரிய மகளை உறுத்து விழித்தாள் வசுந்தரா...

"காதலிக்கிறது தவறா அம்மா?" தீனமான குரலில் வினவினாள் மகள்...

"நமக்கு பொருத்தமான இடமாகப் பார்த்து காதலிப்பதில் தவறு இல்லை—இந்த அருண் யார்? உன் கால் செருப்புகளை தூசி போக தட்டி வைக்கக்கூட யோக்கிதையில்லாத அடிமட்டத்து ஆசாமி. நமது அந்தஸ்த்துக்கு ஈடான ஒருவர் வீட்டு பையனை நீ... காதலிக்கிறாய் என்று இருந்தால் நான் மனச்சங்கடப்படமாட்டேன்!"

"காதல் அந்தஸ்த்தையும்...அழகையும் எடைபோட்டுக் கொண்டு ஏற்படுவதில்லையே அம்மா! நீங்க கோவிச்சுக்காதிருந்தால் ஒண்ணு சொல்ல விரும்பறேன். அப்பாவை நீங்க விரும்பித்தானே கல்யாணம் செய்து கொண்டு...அவர் உங்க அந்தஸ்த்திற்கு ஈடு இல்லாத இடத்தைச் சேர்ந்தவர் இல்லையா?"

"நான் செய்த பிசகை என் மகள் செய்யக்கூடாது என்பது என் விருப்பம்! சமமில்லாத இடத்திலிருந்து வந்த உங்கப்பாவைக் கல்யாணம் செய்துகொண்டு நான் பட்ட அவமானம் என்னோடு இருக்கட்டும்...அதனால் சொல்கிறேன்—இதுவரை நீ செய்துவரும் தவறைக் கண்டும் காணாது போல நான் மறந்துவிடத் தயாராக இருக்கிறேன்—நீ அந்த அருணை மறந்துவிட வேண்டும்!"

"அம்மா" என்றாள் பதட்டத்துடன் சம்யுக்தா... காய்ந்து போன தன் உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள்.

Vennila

அவன் எதிர்பார்த்தது போல அவளது காதல் விவகாரம் அப்படி ஒன்றும் சுலபமானதாக இருக்கப் போவதில்லை என்ற நினைவு.. வயிற்றைப் பிசைந்தது.

"அதெப்படி அம்மா முடியும்? அவரை நான் கல்யாணம் செய்து கொள்ள சம்மதம் தந்துவிட்டிருக்கிறேன்!"

"என்னைக் கேட்காமல்.. இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய நீ ரொம்பவே துணிஞ்சு விட்டிருக்கே பேஷ்...என் சம்மதம் தேவையில்லையா?"

"உங்களது ஒப்புதல் ரொம்ப முக்கியம் அம்மா... உங்ககிட்டே வெளிப்படையா பேசி உங்க ஆசிகளையும் அனுமதியையும் பெற நாங்கள் இருவரும் வர இருந்தோம்.. அதற்குள் அருண் அவர்களது நண்பர் ஒருவர் நோய்வாய்ப் பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்ததால் அருணுக்கு நேரம் கிடைக்கவில்லை!"

"நீங்கள் இருவரும் நேரில் வந்திருந்தால் உடனடியாக நான் ஒப்புக் கொண்டிருப்பேன் என்று நினைச்சியா?" ஏளனமாகக் கேட்டாள் வசுந்தரா...

"அவரை நான் என் உயிருக்கும் மேலாக காதலிக்கிறேன் அம்மா அதனால்!" பேச முடியாது கண்கள் கலங்க தாயைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"காதலாவது கத்தரிக்காயாவது? நீ அந்த உதவாக்கரை அருணை மணந்து கொள்ள நான் ஒரு போதும் அனுமதி தரமாட்டேன். என் பேச்சை மீறி நடக்க முற்பட்டால்...அதன் பயன் ரொம்ப விபரீதமாக இருக்கும் என்று எச்சரிக்கிறேன். என் வரைக்கும் நீ நேற்றுப் பிறந்தவள். என்னோடு மோதப் பார்த்தால்...பயங்கரமான தோல்வியடைவாய்.. உன் அறைக்குப் போய் உட்கார்ந்து கொண்டு கலங்குகிற உன் சிந்தனையை தெளிவுபடுத்திக் கொள்...நாளையிலிருந்து தொழிற்சாலைக்கு வரத் தேவையில்லை...வீட்டோடு தங்கியிரு.. ரத்னா உன்னை கவனித்துக் கொள்வாள்...தெரிகிறதா?" உரத்த குரலில் அதட்டினாள்.

# 31

அதற்குப் பின்னர் சம்யுக்தா வீட்டிலேயே தங்கி இருக்கத் தொடங்கினாள்.

அடிக்கடி மாடிப் பக்கம் வந்து கொண்டிருந்த ரத்னாவிடம் அவள் கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

"ஓய்வாக வீட்டில் இரு-தொழிற்சாலைக்கு வர வேண்டாம் என்று அம்மா என்னிடம் சொல்லிவிட்டிருக்காங்களே ஒழிய... என்னை வீட்டிற்குள் சிறை வைத்திருக்க வில்லை-நீங்கள் இப்படி அடிக்கடி மாடிப்பக்கம் வந்து வேவு பார்ப்பது எனக்கு பிடிக்கலை... உங்கள் உதவி தேவைப்படும் போது நான் கூப்பிடுவேன்... வரலாம்!" என்று காரமாகச் சொன்னாள்.

சம்யுக்தாவின் முகத்திலே கொதித்துக் கொண்டிருந்த கோபத்தைக் கண்டு ரத்னா அடங்கிப் போனாள்.

"நீங்க எங்கேயாவது வெளியில் போனால் என்கிட்ட சொல்லிட்டுப்போகச் சொன்னாங்க அம்மா!"

"உங்ககிட்டே நான் ஏன் சொல்லணும்...தொழிற்சாலையிலிருக்கும் அம்மாவைத் தொலைபேசியில் கூப்பிட்டு நேராக சொல்லி அவங்க உத்திரவை பெற்றுக் கொள்ள எனக்குத் தெரியும். ஆனால் தற்சமயம் எனக்கு எங்கேயும் போக வேண்டிய அவசியம் இருக்கவில்லை.. எனக்கு நல்ல ஓய்வு தேவை... அடிக்கடி ஏதாவது கேட்டுக் கொண்டு வந்து தொண தொணக்காதீங்க!"

Vennila

என்று கூறிவிட்டு தன் அறைக் கதவைப் பட்டென்று சாத்திக் கொண்ட பின்னர்தான் ரத்னா அடங்கிப் போனாள்.

அவள் அப்பால் சென்ற பிறகு ஓசைப்படாது மெல்ல தாயின் படுக்கை அறைக்குள் நுழைந்து அவளது பிரத்யேக தொலைபேசியை எடுத்து தொழிற்சாலைக்கு தொடர்பு கொண்டு அருண் வேலை பார்க்கும் பகுதிக்கு தொடர்பு தரச் சொல்லிக் கேட்டாள்.

அருணது குரல் மறுபக்கத்தில் பரபரப்பில் நடுங்கியது. அந்தப் பகுதியின் அறையின் நடுவே எல்லாருடைய சவுகர்யத்திற்கும் உதவும் வகையில் தொலைபேசி அமைக்கப்பட்டிருந்தது. அருகில் இருப்பவர்கள் கேட்டுப் புரிந்து கொண்டுவிடப் போகிறார்களே என்ற கவலையில் அருண் பூடகமாகப் பேசினான்.

"உடம்புக்கு சுகமில்லையா? வேலைக்கு வரவில்லையே?" தாழ்ந்த குரலில் ஆதங்கத்துடன் கேட்டான்.

சுருக்கமாக சம்யுக்தா நடந்தவற்றை சொல்லிவிட்டு... "கவலைப்படாதீங்க...! பொறுமையாக இருப்போம்... வெற்றி முடிவில் நம் பக்கந்தான்" என்று நம்பிக்கை தெரிவித்து போனை வைத்தாள்.

அதற்குப் பின்னர் அவள் இரண்டு நாளைக்கு ஒரு தடவையாவது பகல் உணவு நேரத்தின்போது அவனை தொலைபேசியில் அழைத்துப் பேசி மகிழ்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

குப்புசாமிக்கு ஓரளவு சங்கதி புரிந்து விட்டிருந்தது. மாலை வேளை காப்பி டிபன் சாப்பிட கீழே இறங்கி வந்தபோது ரத்னா அருகில் இல்லாத சமயம் தனக்கும் அம்மாவுக்கும் இடையே ஏற்பட்ட விவாதத்தையும்—அம்மா தன்னை தண்டிக்க எடுத்துக் கொண்டிருக்கும் அந்த விசித்திர ஏற்பாட்டையும் சொல்லிவிட்டு மெல்ல சிரித்தாள்.



"பாப்பா! இப்படித்தான் நடக்கும்னு நான் ஏற்கனவே எச்சரித்திருக்கிறேனே—இப்போ நீ என்ன செய்யப்போறே?" விசாரத்துடன் கேட்டார்.

"தாத்தா! உங்களுக்கு தெரியாததல்ல-ஒரு பெண்ணுக்கு மனம்தான் காவல்-மதில் காவல் இல்லை. என் முடிவை நான் மாத்திக் கொள்ளப் போவதில்லை. அம்மா ஒரு பிடிவாதக்காரி என்றால் மகளான நான் அவளை மிஞ்சும் ஒரு பயங்கர பிடிவாதக்காரி என்பது சீக்கிரம் புரிஞ்சுக்கப்போறாங்க..!" அழுத்தமாகச் சொன்னாள்.

"அதற்கு மேல் நான் ஒண்ணும் சொல்ல முடியாது பாப்பா இது உன் வாழ்க்கைப் பிரச்சினை-இதற்கு சரியான தீர்வு காண்பது உன் கடமை!" என்றார் விரக்தியுடன். அவர் மனதில் இப்போது இரண்டு சங்கதிகள் உறுத்திக்கொண்டு வேதனை கொடுத்தன.

சம்யுக்தாவின் காதல் பிரச்சினை ஒன்று... மற்றொன்று அவள் தந்தை பூபதி பூரண குணமாகி வீடு திரும்பவேண்டும். பிரிந்த குடும்பம் மீண்டும் ஒற்றுமையடைய வேண்டும்...அது சாத்தியமா?...என்றதொரு கேள்வி.

தொடர்ந்து மாலை வேளையில் அன்றாடம் அவர் பங்களாவை விட்டு...ரத்னாவின் கேள்விகளுக்கு பதிலளிக்காது அசட்டையுடன் வெளிக் கிளம்பிக் கொண்டிருந்தார்.

மருத்துவமனையில் தங்கியிருந்த பூபதியைப் பார்த்து நலன் விசாரித்து விட்டு சிறிது நேரம் அவரிடம் பேசி மகிழ்ந்து விட்டுத் திரும்புவதைத் தமது நித்தியப்படி வழக்கமாக மேற்கொண்டிருந்தார்.

பூபதியும் அவரது வரவை ஒவ்வொரு நாளும் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமிருந்தார்.

வீட்டிலிருந்து கொண்டுவரும் ஆகாரத்தை உட்கொள்ளலாம் என்று வைத்தியர் அவருக்கு அனுமதி

Vennila

யளித்து விட்டதை அறிந்த குப்புசாமி ஒரு நாள் தன் எஜமானருக்குப் பிடித்தமான அரிசி உப்புமாவை மிக பக்குவமாகத் தயாரித்து ஒரு டப்பாவில் பொதித்துக் கொண்டு கிளம்பி இருந்தார்.

"உங்களுக்கு நான் என்ன கொண்டு வந்திருக்கேன் தெரியுமா?" என்று புன்னகைத்தபடி படுக்கை பக்கத்திலிருந்த சிறு மேசையின் அறையைத் திறந்து தட்டை எடுத்து டப்பாவிலிருந்த உப்புமாவை அதில் கொட்டி அள்ளித் தின்ன ஒரு ஸ்பூனை வைத்து அவரிடம் நீட்டினார்.

"அட அரிசி உப்புமா! நீங்க எனது உணவு பழக்க வழக்கங்களை மறக்கவேயில்லையே...வழியில் ஏதாவது ஒரு ஓட்டலில் வாங்கி வந்தீங்களா..." வியப்புடன் கேட்டபடி படுக்கைமீது நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு தட்டைப் பெற்றுக் கொண்டார்.

"அதிக தேங்காய்—கண்ட எண்ணை இதெல்லாம் உங்க உடம்புக்கு ஒத்துக்காதுன்னு எனக்குத் தெரியும். டாக்டர் உங்களை பத்தியத்தில் வச்சிருக்காரே... அதனாலே நானே பக்குவமா தயாரித்து எடுத்து வந்திருக்கிறேன்!" குப்புசாமி மெல்ல சிரித்தார்.

"குப்புசாமி! உமக்கு என் மேலிருக்கும் பரிவுக்கு ரொம்ப நன்றி. இனிமேல் நான் அந்த வீட்டு உப்பை ஒரு காலும் தின்னமாட்டேன்!" கோபம் கலந்த குரலில் கூறியபடி... அந்தத் தட்டை அவரிடம் திருப்பத் தந்து விட்டார் பூபதி.

"அது உங்க வீடு—அதிலுள்ள பொருள்கள் உங்க சொத்து.. ஏன் இப்படி பேதம் பிரிச்சு பேசுகிறீங்க?"

"கடைசி கவளச் சோற்றோடு...அந்த வீட்டை விட்டு கால் மண்ணை உதறிக் கொண்டு கிளம்பின எனக்கு அங்கே எந்த உரிமையும் கிடையாது...நான் மறுமணம் செய்து கொண்டு ஒரு குழந்தைக்குத் தகப்பனாக வேறு வகையில் வாழ்க்கையைத் துவங்கி விட்ட



தால் எனக்கு அந்த வீட்டில் எந்தவித பந்தமும் கிடையாது!"

"சம்யுக்தா கூட உங்களுக்கு அந்நியமாகிவிட்டாளா?"

'இல்லை-அவள் என் மகள்—அவளை நான் என் உயிருக்குமேல் நேசிக்கிறேன்."

"வீடு-சொத்து முதலியவற்றில் சம்யுக்தாவுக்கு பங்கு உண்டே. அதனால் இந்த உப்பு அவளுடைய தாயிற்றே-சாப்பிடுவதில் தப்பில்லையே!"

"இல்லை குப்புசாமி...! தந்தை என்கிற நிலையில் அவளுக்காக நான் ஒரு காசு கூட சேர்த்து வைக்கலை—அவளுக்கு கிடைக்கப்போகிற சொத்து அனைத்தும் அவளது பாட்டன் சேனாபதி வழி வந்தது. எனக்கு அந்த மனிதனுக்கு சொந்தமான ஒரு துரும்பு கூடத் தேவையில்லை-பணத்திமிரில் அவர் என்னை ஒரு புழுவாக நினைத்துத் தம் காலடியில் போட்டு மிதித்துத் துன்புறுத்தி அவமானப்படுத்தி இருப்பதை நான் மறக்கவே முடியாது குப்புசாமி! தயவு செய்து இந்த பண்டத்தை தெருவில் நிற்கும் பிச்சைக்காரர் யாருக்காவது சாப்பிடக்கொடும். பாவம் அவனது பசியாவது அடங்கட்டும்" என்று மறுத்து விட்டார்.

குப்புசாமியின் கண்கள் பனித்துப் போயின-நெஞ்சை சுரீர் என்று வேதனை குத்தியது...

"இனிமேல் இந்தத் தவறை நான் திரும்பவும் செய்ய மாட்டேன்"...என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு நாளும் தாரா தன் குழந்தையுடன் வந்து சேரும்வரை அங்கேயிருந்துவிட்டு புன்னகையுடன் விடை பெற்றுக்கொண்டு கிளம்பிவிடுவது வழக்கம்!

சில நாட்களில் பூபதி உடல்நிலை பூரண குணமாகி மருத்துவமனையினின்று வீட்டிற்கு அனுப்பப்பட்டு

Vennila

விட்டார். குப்புசாமி அவரைத் தொடர்ந்து பார்த்து விட்டு வரும் வழக்கத்தை நிறுத்திக் கொள்ளவில்லை.

வீட்டில் ஓய்வாகப் படுத்திருக்கும் கணவரைத் தனியே விட்டுவிட்டு வேலைக்குப் போகவேண்டியிருக்கிறதே என்ற வேதனையில் தவித்த தாராவுக்கு குப்புசாமி தினம் மாலைப் பொழுதில் அவள் திரும்பும்வரை கணவருக்குத் துணையாக இருந்து பேசிக் கொண்டிருப்பது மெத்த ஆறுதலைத் தந்தது.

குப்புசாமியும அவளிடம் தன்னைப்பற்றி சுருக்கமாகத்தான் அறிமுகம் செய்து கொண்டிருத்தார்.

"என் பேர் குப்புசாமி–இங்கே அண்ணாசாலையில் ஒரு பங்களாவில் சமையல் ஆளாக நீண்டகாலம்வேலை பார்த்து வரேன். உங்கள் கணவரை எனக்கு ரொம்ப காலமா தெரியும்."

"அப்படியா?—நீங்க ஒழிஞ்ச நேரத்தில் இங்கே வந்து இவருக்கு பேச்சுத் துணையாக இருப்பதுபற்றி மகிழ்ச்சி" என்றாள்.

மாலை வேளை அவர் வரும்போது வெறுங்கையுடன் வராது தமது பணத்தில் கார்த்திக் சாப்பிட பிஸ்கட்-பழங்கள்- மிட்டாய்கள் என எதையாவது வாங்கிக்கொண்டு வந்து உபசரித்தார்.

அவனுடன் கொஞ்ச நேரம் விளையாடி-கதைகள் சொல்லி அவனை மகிழ்வித்தார். பின்னர் அடுப்பைப் பற்ற வைத்து பூபதிக்குக் கொஞ்சம் தேநீர் தயாரித்து கொடுத்து உபசரித்து விட்டு...தாராவுக்கு வந்தும் சாப்பிட மீதி தேநீரை பிளாஸ்கில் நிரப்பி வைத்து விட்டு—அவள் வீட்டுக்கு வந்த மறுநிமிஷம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

இந்த வகையில் தமது எஜமானருக்குக் கொஞ்சம் பணிவிடை செய்ய முடிகிறதே என்றவரை அவருக்கு மிகவும் திருப்தி.



அன்று மாலை...கார்த்திக்கை தோட்டத்திற்குள் விளையாட அனுப்பிவிட்டு...பூபதி அவருடன் மனம் விட்டுப் பேசத் தொடங்கினார்.

"நான் ஒரு பெரிய பிசகு செய்திருக்கிறேன்—உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்—சாஸ்திரப்படி நான் தாராவை மணந்து கொண்ட போதிலும் சட்டத்தின் கண்களில் அவள் என் மனைவியல்ல–இந்த உண்மையை நான் அவளிடம் இதுவரை மறைத்து வைத்திருப்பது பெருந்த பிசகு. அவளிடம் விரைவில் எல்லாவற்றையும் சொல்லி மன்னிப்புக் கேட்கப்போகிறேன். என் தாரா.. இனிமையான சுபாவம் உடையவள்—என் மேல் மட்டற்ற அன்பு வைத்திருக்கிறவள். சந்தர்ப்ப சூழ்நிலையைச் சொன்னால் அவள் கட்டாயம் என்னை மன்னித்து விடுவாள்.

"அதற்குப் பின்னர் என் உடல்நிலை நன்றாகத் தேறியதும்...நான் முதல் வேலையாக வசுந்தராவை சந்திக்கப் போகிறேன். நான் எப்பொழுது அங்கே வருவேன் என்பதை முன்கூட்டி உங்களிடம் சொல்லி விடுகிறேன். வசுந்தராவை நேரில் கண்டு...'எனக்கு விவாகரத்து வழங்க வேண்டும்' என்று கேட்டுக் கொள்ளப் போகிறேன். இத்தனை காலம் என்னைப் பற்றி அசட்டையாக இருந்து விட்ட அவளுக்கு இனி என் சொந்தம் தேவை இருக்காது. இந்த விவாகரத்து எனக்கு மிகவும் அவசியம். ஏன் தெரியுமா குப்புசாமி? இப்போது இருக்கும் நிலையில் தாரா எனக்கு வைப்பு போன்றதொரு உறவில்தான் என்னுடன் போலியாக மனைவி என்று வாழ்கிறாள். பாவம்! உண்மையை அறிந்தால் அவள் மிகவும் அதிர்ந்து போய் விடுவாள்...

"ஆனால் அலற்காக என்னை வெறுத்துப் பேசிவிட மாட்டாள். எங்களுக்குள் எத்தனையோ முறை–பல அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டதுண்டு.. ஆனால் வெறி பிடித்தவள் போல சண்டைபோட்டு அட்டகாசம்

Vennila

செய்யும் பெண்மணி தாரா அல்ல... அவள் மனம் மலர் போன்று மிருதுவானது. நான் கோபப்படும்படி அவள் எந்தக் காரியத்தையும் செய்ததில்லை—சுற்றி வளைப்பானேன்... மாதர் குலத்து மாணிக்கம் அவள் என்று சொன்னால் மிகையே இல்லை—அப்படிப்பட்டவளுக்கு சட்ட பூர்வமான மனைவி என்ற அந்தஸ்த்தை நான் தர விரும்புகிறேன். கார்த்திக் என் மகன் என்ற உண்மை நிலையைப் பெற வேண்டும்... வைப்பின் மகன் என்று அவனைப் பின்னால் யாரும் இழிவாகப் பேசக்கூடாது என்பது என் ஆவல்...

"இப்போது வந்த இந்த பயங்கர மாரடைப்பு என்னை விழிப்புற செய்து விட்டிருக்கிறது... அடுத்த முறை இதை விட ஒரு கொடுமையான மாரடைப்பு ஏற்பட்டு நான் மறைந்து போனால் என் மனைவியும்—மகனும் அவமானச் சின்னங்களாக... மற்றவர் முன்னிலையில் நிற்பார்கள். அதை நினைத்தாலே என் நெஞ்சு குமுறுகிறது...

"என் அருமை தாராவுக்கு இது நாள் வரை சுயநலம் காரணமாக நான் செய்த துரோகம் போதும்... தொடர்ந்து அவளை வஞ்சிக்க என் மனம் இடந்தரவில்லை... இதன் காரணமாகத்தான் உம்மைத் தேடிக் கொண்டு இருமுறை நான் பங்களா பக்கம் வந்தேன். வாய்ப்பு கிடைக்கவில்லை... நான் ஒரு கோழை—துரோகி!" தழுதழுத்தார் பூபதி.

அவரது கண்களில் பெருகிய நீர் கன்னத்தில் கோடிட்டதைக் கண்டு துணுக்குற்று... தமது மேல் துண்டால் கண்ணீரைத் துடைத்துவிட்டார் குப்புசாமி.

"ஐயா மனதை அலட்டிக் கொள்ளாதீங்க. உங்க உடம்புக்கு உணர்ச்சி கொந்தளிப்பு ஒத்துக் கொள்ளாது. நடந்தது நடந்துட்டது. மேலே செய்ய வேண்டியதை நிதானமாக செய்து முடிக்கலாம். நீங்க பங்களா பக்கம் வருவதற்கு முன் எனக்குக் கொஞ்சம் தெரியப்படுத்தி விட்டு வந்தால் நலமாக இருக்கும்" என்றார்.



அவரது துயரத்திற்கு ஆறுதல் சொல்லி... அவரை ஆசுவாசப்படுத்திவிட்டு... குப்புசாமி அடுப்பை மூட்டி அவருக்குப் பிடித்தமான அரிசி உப்புமாவை சடுதியில் தயாரித்து சூடான தேநீருடன் கொடுத்து உபசரித்தார். மீதமானவற்றை ஒரு டப்பாவில் போட்டு மூடிவிட்டு அவர் கைகளைக் கழுவிக் கொண்டு புறப்பட ஆயத்தமான சமயம்... தாரா கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

அவளைத் தொடர்ந்தபடி உள்ளே வந்த இளைஞனைக் கண்டதும்... அவர் சந்தேகத்துடன் ஏற இறங்கப் பார்த்தார்.

'இந்தப் பையனை எங்கேயோ பார்த்திருக்கிறோமே! எங்கே?' சிந்தித்து அவர் முடிக்கு முன்... செருப்புகளை வராந்தாவில் கழற்றி வைத்துவிட்டு குடையை மடக்கிக் கொண்டு புன்னகையுடன் உள்ளே வந்த தாரா— "உம்... டிபன் வாசனை... தோட்டத்துக்குள் நுழையுமுன்னமேயே மூக்கைத் துளைக்கிறது. நல்லவேளை தம்ப அருணுக்கு என்ன செய்து தருவதுன்னு நினைத்துக் கொண்டேதான் வந்தேன். இங்கே டிபனும் தேநீரும் தயாரா காத்திருக்கே!" சிரித்தாள்.

"தம்பி அருண்! என் கணவரின் கிராமத்தைச் சேர்ந்த நண்பர் இவர். குப்புசாமின்னு பேர்... இங்கே யதேச்சையாக சந்திப்பு ஏற்பட்டது உன்னைப் போல எங்களுடன் ரொம்ப நெருக்கமாகிட்டார்" என்றாள்.

"தம்பி யார்னு சொல்லலையே?" சந்தேகத்துடன்... பதட்டமாகக் கேட்டார் குப்புசாமி...

"அருணை என் கணவர் இந்த நகரத்தில்தான் எதிர்பாராத விதமாக சந்தித்தார். கொஞ்ச கால பழக்கம் என்றாலும்... இரு குடும்பத்தாரும் நீண்ட காலத்து நண்பர்கள்போல பழகுகிறோம்... இவர் பார்வதி எலக்ட்ரிகல்ஸ் எனும் தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார்."



Vennila

திகைப்புடன் அருணை மறுபடி மேலும் கீழும் பார்த்தார் குப்புசாமி.

என்ன அதிசயம்! உலகம் ரொம்பவே சிறியதுதான். வசுந்தரா அம்மாளுக்கு விரைவில் அறிமுகமாகப் போகிற அனைவரும் ரொம்ப நெருக்கமாக வந்து சேர்ந்துவிட்டிருக்கிறார்களே? இந்த அருணுக்கு பூபதி தனது வருங்கால மாமனார் என்னும் உண்மை தெரியுமா? பையன் பளிச்சென்று பார்க்க நன்றாகத்தான் இருக்கிறான்—படிச்சவன், புத்திசாலி போல காணப்படுகிறான். இவனை மருமகனாக ஏற்க வசுந்தராவுக்கு ஏன் மனக்கசப்பு?

பணம் அந்தஸ்து முக்கியமா?—பாசம் முக்கியமா?...

"உட்காருங்க. ஏன் எழுந்திட்டீங்க?" தாரா கேட்டாள்.

"நேரமாச்சு... நான் ஒரு வீட்டில் ஊழியம் செய்கிறவன்—நேரத்தோட திரும்பணுமே... வரட்டுமா?" என்றபடி விடை பெற்றுக்கொண்டு வெளியே நடந்தார்.

வெகு நேரம் அந்த வியப்பினால் ஏற்பட்ட படபடப்பு அவருக்கு அடங்கவேயில்லை.

## 32

வழக்கம்போல், குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து கொண்டான் அருண். அலுவலகத்திலிருந்து திரும்பிய களைப்பு அவனை விட்டகன்றது போன்ற உணர்வு ஏற்பட்டது. நேராக அலமாரியருகில் சென்றான். உள்பக்கம் அடங்கி இருந்த அப்பாவின் படத்தை வணங்கியதும்



நெஞ்சினுள் ஒரு சிறு வலி. தந்தையின் பாசத்தை ஐந்து வயதிலேயே இழந்து விட்டோமே என்ற வேதனை. திருநீற்றை நெற்றியில் பூசிக் கொண்டான்.

"தந்தையுடன் கல்விபோம், தாயுடன் அறுசுவை போம்" என்று சொல்வார்கள். அவனைப் பொறுத்த மட்டில் அவன் தாயே, தந்தையாக இருந்து, அறுசுவையும் கல்விச்சுவையும் ஒன்றாகக் கொடுத்து அவனை உருவாக்கி விட்டிருந்தாள். அதனால் தந்தையின் பாசத்தை இழந்து விட்ட வேதனையைத் தாயின் அரவணைப்பில் கண்டு, அமைதியடைவான்.

கூடத்துத் தரையில் அம்மா சுத்தமாகப் பெருக்கி இலைகள் போட்டிருந்ததைக் கண்டான் அருண். அவனது சாப்பிடும் தட்டைக் கழுவித் துடைத்து அந்த இலைகளின் அருகே வைத்திருந்ததைக் கவனித்தான்.

அவனது பெரிய அண்ணன் நீலகண்டன் அவரது மகன் குமாருடன் பம்பாயிலிருந்து வந்திருப்பதை அவனும் தாயாரின் முகத்திற்காகப் பொறுத்துக் கொண்டான்.

"குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லைம்பாங்க. ஏதோ நம்ம வீடு தேடி உதவி கேட்டு வந்திருக்காங்க. எதுவும் மனக்கிலேசப்படும்படி பேசிடாதே" கோதை மகனை எச்சரித்து விட்டிருந்தாள்.

தாயின் சொல் தவறாத பிள்ளை அருண். அவள் முகம் வாடப் பொறுக்காத ஆசை மகனாயிற்றே! எனவே, பற்களைக்கடித்துக்கொண்டு, வந்த விருந்தினர்களை மிக்க மரியாதையாக கவுரவித்தான்.

"என்ன சின்னம்மா? அருண் பெரிய வேலைக்குப் போகுதுன்னு சொல்றீங்க! இன்னமும் தரையில் உக்காந்து சாப்பிடறாரு?" அண்ணன் மகன் குமார் அரட்டலாகக் கேட்டான்.

அருகே அமர்ந்திருந்த குமாரை ஒருமுறை உறுத்துப் பார்த்தான் அருண். உடலைக் கவ்வி நின்ற பனியன்,

Vennila

இடுப்பில் இறுக்கிப் பிடித்த கால் சட்டையுடன், வெகு சிரமத்துடன் தரையில் உட்கார்ந்திருந்தான். கழுத்தில் தொங்கிய கறுப்புக் கயிற்றில் 'ஐ லவ் யூ' என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்ட டாலர், வேகமாக ஊசலாடியது.

அவன் அருகே அண்ணன் என்ற உறவு முறை கொண்டாடும் நீலகண்டன், வயதின் ஏற்றம் உடலைப் பருமனாக்கி இருந்தது. காதோரத்திலிருந்து, தலை முழுவதும், குப்பென்று நரைத்து விட்டிருந்தது. முகத்திலும் முகவாயிலும் தொங்கிய சதைக் கோளங்கள் அவரது சோம்பேறித்தனமான வாழ்வின் அடையாளங்களாகத் திகழ்ந்தன.

"என்ன அண்ணன் பேசலே?" குமார் பற்களைக் காட்டினான்.

தொண்டையைச் செருமியபடி கோதை, இலையில் சோற்றை வட்டித்தாள். "இன்னம் கொஞ்சம் கத்தரிக்காய் பொரியல் வைக்கவா?" கனிவு ததும்பியது அவள் குரலில்.

"கால் அடுப்பு. இரும்பு பீரோன்னு வச்சிருக்கீங்க... ஏன் ஒரு சாப்பாட்டு மேசை வாங்கலைன்னு உங்க பேரன் கேக்கறான்" இடிஇடியென நீலகண்டன் சிரித்தார்.

"உக்காந்து தானே காலை நீட்டணும், மத்தவங்க கிட்ட கடன் வாங்காம வாழ்வதுதான் வசதியான வாழ்க்கைன்னு நாங்க நினைக்கறோம்" மகனை முந்திக் கொண்டு கோதை பதிலிறுத்தாள்.

"தம்பி பதிலே பேச மாட்டேங்குது, நாமே பேசிட்டிருக்கோம்?" நீலகண்டன் இலேசாகக் கிண்டினார்.

கடந்த சில தினங்களாக அட்டைகளைப் போல ஒட்டிக்கொண்டு அங்கு தங்கிவிட்ட அண்ணனையும் அவரது குமாரனையும் அருணால் எதுவும் செய்ய இயலாத நிலை.



பகல் முழுவதும் அலுவலகத்தில் வேலை. பூபதியின் உடல் நலம் பற்றி விசாரிப்பது எனப் பல்வேறு கவலைகளில் அலண்டு போனான் அவன். சம்யுக்தாவிடம் நேருக்கு நேர் பேசமுடியாத தவிப்பு வேறு அவனை அல்லல் படுத்திக் கொண்டிருந்தது. இருவரும் மற்றவர்கள் எதிரில் தங்கள் அன்பை விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை என்று தீர்மானித்து விட்டிருந்தது உண்மைதான். தொலைபேசி வழியாகப் பேசினால் மட்டும் தங்கள் கவலைகளை முழுதுமாகக் கொட்டிவிட முடியவில்லை. சங்கேத மொழிகளில் உரையாடல் நடத்த வேண்டி இருந்தது.

எஜமானி அம்மாள் அகம்பாவமும், பிடிவாதமும் உருக்கொண்டவள். மகளின் போக்கினால், மேலும் கடுகடுத்த முகத்துடன் தொழிற்சாலைக்குள் வளைய வந்து கொண்டிருந்தாள். யாரேனும், தப்பித் தவறி, இரண்டாவது முறையாக சந்தேகம் கேட்டால் 'சள்'ளென்று எரிந்து விழுந்தாள். அருணது நிழலைக்கூட அவள் அறவே வெறுத்து ஒதுக்க முயன்றதை, அந்தம்மாள் முகத்தைத் திருப்பிக்கொண்டு போவதிலிருந்து ஊகித்திருந்தான்.

"ஏம்ப்பா அருண் பேசத்தான் நேரமில்லை, சாப்பிடக் கூடவா நேரம் இல்லாம போயிட்டுது உனக்கு" நீலகண்டனது கரகரத்த குரல் அவனை உசுப்பியது.

"சாப்பிடறேன்" தடுமாற்றத்துடன் தட்டை வெறித்தான்.

"சித்தி! உங்க கைமணமே தனிதான். கத்தரிக்காய் பொரியல், வெண்ணெய்க் கட்டியாட்டம் ருசிக்குது" நீலகண்டன் சப்புக் கொட்டினார்.

"இன்னும் பொரியல் வைக்கவா அருண்" தாயாரின் ஆசையும், பாசமும் நிறைந்த குரல், அவனை நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

Vennila

அந்தக் கையின் மணம்தான் அவனை இப்படி ஒரு பதவியில் அமர்த்தி இருக்கிறது. அந்தக் கரங்களுக்கு இனி அவன் ஓய்வு தரவேண்டும். காலமெல்லாம் உழைத்து மெலிந்து போன கரங்கள், கனிவுடன், அவன் தட்டில் குழம்பை வட்டித்தன.

'உலகிலேயே சிறந்த இதயம் எவரிடம் இருக்கிறது?' என்று கேட்டானாம் ஒரு அறிவாளி. 'அது குழந்தையைப் பெற்ற தாயிடம்தான் இருக்கிறது' என்று பதில் கிடைத்ததாம்.

ஏனெனில், சுயநலம் பாராட்டாத குழந்தை நலமே பெரிதாகப் பேணிக் காக்கும் தாயின் இதயம் அன்பால் உருவானது. ஆம். அவனது தாயும், அன்பையே புகட்டி அவனை ஆதரவாக வளர்த்தவளாயிற்றே. அவர்களுக்குச் சகல வசதிகளையும் தரவேண்டுமென்று அவனும் விரும்பினான். மேசை, நாற்காலி என்ற ஒரு சில வசதிகளோடு கோதை நிறுத்திக் கொண்டாள். அருணது வேலை உறுதியாகும் வரை, மனம் போன போக்கில் செலவிடுவதை அவளால் ஒப்புக்கொள்ள இயலவில்லை.

"சுவர் வச்சித்தான் சித்திரம் எழுதணும். ஆபீஸ் தொல்லையில மூழ்கிட்டா, சாப்பாடு கூட சாப்பிடாம..." நீலகண்டன் மீண்டும் கேட்டார்.

"அ! ஒண்ணுமில்லே...பசி இல்லே" சோற்றைக் கொறிக்கத் துவங்கினான் அருண். ஐந்து வயதுச் சிறுவனாக அவன் நின்ற அந்தப் பழைய சம்பவம் நினைப்பில், நிழலாடியது.

வயதின் பாதிப்பில், சதைக் கோளமாக மாறிவிட்டிருந்த இதே நீலகண்டன் அப்போது கட்டு காக்கடுங் காளையாக இருந்தார். சிறு வயதுப் பையன், தம்பி தானே என்று அவனை ஆதரவுடன் பேசியதாகவோ அல்லது அன்பாக ஒரு வார்த்தையேனும் கூறியதாகவோ அவனுக்கு நினைப்பில்லை.



மாறாக, தந்தை இறந்து போனார் என்பதை சரி வரப் புரிந்து கொள்ளாத வயது அருணுக்கு. பூவும் பொட்டுமாக, மஞ்சள் மணம் வீசும் முகத்துடன் தாயைக் கொஞ்சிப் பழக்கப்பட்டவன் குழந்தை அருண்.

ஆரண்மனை போன்ற பெரிய வீட்டுத் தாழ்வாரத்தில் கிடத்தப்பட்டிருந்த தகப்பனைப் பார்த்து, "அப்பா ஏன் எந்திரிக்கலேம்மா? என்று கேட்டான்.

"அவரு, இனிமே எந்திரிக்க மாட்டாருப்பா. நம்மை விட்டுப் போயிட்டாருப்பா" அம்மா விசித்து, விசித்து அழுதாள். அப்போதுகூட அவனுக்கு விளங்காத ஒரு அதிர்ச்சியான சம்பவம், சில நாட்களுக்குப்பின் நிகழ்ந்ததை அவன் மறக்கவே இல்லை.

திடும் என ஒரு நாள் நெற்றியில் திருநீறும், வெள்ளைச் சேலையுமாக நின்ற தாயைக் கண்டதும், அந்தப் பிஞ்சு உள்ளம் 'ஓ'வென அலறியது. "பொட்டு வச்சிக்கலையோம்மா" மழலை மாறாத சொல்லில் அவன் கேட்டான்.

"உங்கப்பனை முழுங்கிட்டே. இனிமே உங்கம்மா இப்படித்தான் இருப்பா?" கடுமையாக யாரோ ஒருத்தி கூறவும், குழந்தை விம்மி அழ ஆரம்பித்தான்.

"எதுக்கு அந்தப் பிஞ்சு மனதை நோக அடிக்கிறீங்க? அது நான் வாங்கிட்டு வந்த வரம்" கோதை துடித்துப் போய் மகனை வாரி அணைத்துக் கண்ணீர் பெருக்கினாள்.

"அப்பனைத் துடைச்சிட்ட பிள்ளை" என்று அண்ணி சொல்வதை அவனால் சரிவர விளங்கிக் கொள்ள முடியவில்லை என்றாலும், ஏதோ ஒரு குற்றம் சாட்டுகிறார்கள் என்று மட்டும் வேதனை அடையத் தெரிந்திருந்தது.

நிற்க நிழல் இன்றி, சென்னைக்கு வந்த பிறகு, அவன் தாய் வெள்ளைச் சேலையை ஒழித்திருந்தாள்.

Vennila

காரணம், அவளை ஆதரித்த எஜமானியின் கருணையும், கண்டிப்பும்தான். எளிமையான வண்ண நூல் சேலைகளை உடுத்தத் துவங்கினாள். அருணது வளரும் உள்ளத்தில் அந்த மாற்றம் மெத்த ஆறுதலை அளித்தது.

"என்ன அருண்? உடம்புக்கு ஒன்றுமில்லையே?" கோதை கேட்டதும், சட்டெனத் தாயை உற்று நோக்கினான் அவன். அவளின் மிருதுவான பார்வையில் கட்டுப்பட்டவனாக, "வேலைத் தொந்திரவு. அதுதான்" என்றான்.

"நான் ஒரு பிடிபிடிச்சிட்டேன். இப்ப எந்திரிக்கத்தான் முடியலே" உரக்கச் சிரித்தபடி நீலகண்டன், உருண்டு எழுந்து நின்றார்.

சாப்பிட்டுக் கை கழுவிய பின், கூடத்துத் தரையைத் துடைத்து படுக்கைகளை விரித்தாள் கோதை. நீலகண்டத்துடன் மரியாதை கருதி சில வார்த்தைகள் பேசிவிட்டு, தன் அறைக்குள் வந்து படுக்கையை உதறிப்போட்டுக் கொண்டான் அருண்.

சிறிது நேரத்தில் கூடத்திலிருந்து நீலகண்டத்தின் குறட்டை ஒலி பலமாகக் கேட்டது. குமாரும், உண்ட களைப்பு தீர அயர்ந்துவிட்டிருப்பான் போலும்!

அம்மாவின் காலடி ஓசை மெலிதாக அவனருகில் கேட்டது. படுக்கையை விட்டு எழுந்து அமர்ந்தான்.

மகனது முன் நெற்றி கூந்தலை அன்புடன் ஒதுக்கியபடி கோதை மெல்லக் கூறினாள்.

"உனக்கு உள்ளூர அவங்க மேல கோவம் இருக்கலாம் ஆனா, செய்யாதவங்களுக்குச் செஞ்சு காட்டணும்பா. நான் ரொம்பப் படிக்காதவதான். மனசு சுத்தம். அறிவுக்கும், ஆவேசத்துக்கும் இடத்தைக் குடுத்திடாதே. அன்புக்குத்தான் முதல்ல இடம் குடுக்கணும், புரியுதா?"



"அம்மா! நீங்க படிக்காட்டி என்ன? உங்க உயர்ந்த மனசுல எவ்வளவு அன்பைத் தேக்கி வச்சிருக்கீங்க. நான் உங்க மகன். போதுமா?" தாயின் கரங்களில், குழந்தையைப்போல் முகத்தைப் புதைத்துக் கொண்டான் அருண்.

# 33

வசுந்தரா, தனது ஒப்பனையை, அந்த ஆளுயரக் கண்ணாடி முன் நின்று பார்வையிட்டாள். சமீபகாலமாக, அவளது முகத்தில் தெரிந்த மிடுக்கு, பணக்காரக் களை யாவுமே, திரைபோட்டு மறைத்தாற் போன்று குறைவாகத் தெரிகிறதோ?

தன்னுடைய வயதைக் கூட எவரும் கண்டுகொள்ள முடியாது என்ற பெருமை அவளுக்கு என்றுமே உண்டு. பொலிவுடன், கச்சிதமாக இருந்த உடல் கட்டும், கருண்ட கூந்தலுமாக அவள் கம்பீரமான பெண்மணியாகத் திகழ்ந்தாள். ஆனால், இப்போது சட்டென பத்து வயது அதிகமாகி விட்டதைப்போல உணர்வு பெருகியது அவளுக்கு.

எவருக்கும் அஞ்சாத நெஞ்சுரத்தோடு நடந்து கொண்டிருந்தவள், ஏன் இப்படி ஆடிப் போய் விட்டாள்? வசுந்தரா, மீண்டும் கண்ணாடிக்குள் ஒரு முறை உற்றுப் பார்த்தாள். அவளது முகத்தில் ஏன் இப்படி ஒரு கவலையின் ரேகை?

மனதினுள் மறுபடியும் சம்யுக்தாவின் நினைப்பு. கடற்கரையில் கண்ட நிகழ்ச்சி, அந்தத் தாடிக்காரர்

Vennila

முகம்...ஐயோ! இது என்ன? தன்னால், தன்னந்தனியே எல்லாவற்றையும் சமாளிக்க முடியும் என்று தலை நிமிர்ந்து நடந்தாளே! இப்போது மகளால் எத்தனை பெரிய தலைகுனிவு ஏற்படப் போகிறது?

கலவரத்துடன், முன்னறைப் பக்கம் வந்தாள். சமையற்காரர் குப்புசாமி, ஓசைப்படாமல் பின்னால் வந்து நின்றவா, மெல்லிய குரலில், ''இன்னைக்கி சாப்பாடு வெளியேன்னு சொன்னீங்க... அதனால...'' என்று தயக்கத்துடன் நிறுத்தினார்.

''சாப்பாடு இல்லையா? ஏன்? இன்றைக்கு விடுமுறை நாளாச்சுதே?'' கேள்விகள் எழு முன், சட்டென நினைப்பில் வந்தது. நான்கு நாட்களுக்கு முன் ஒரு நாள் மாலை, திருமதி கதிரேசன் தொலைபேசியில் அவளிடம் பேசி விட்டிருந்தாள்.

திருமதி கதிரேசன், தொழில் சம்பந்தமாக வசந்தராவுடன் அறிமுகம் ஆனவள். கிண்டி தொழிற்பேட்டையில் அவளது கணவர் கதிரேசன் ஒரு சிறு தொழிற்கூடத்தைத் துவக்கி இருந்தார். பிளாஸ்டிக் சம்பந்தமான விஷயங்களைப்பற்றித் தெரிந்து கொள்ள வசந்தராவின் உதவியை நாடி வந்தவள் திருமதி கதிரேசன்.

வசந்தரா எவரிடமும் நெருக்கமாகப் பழக விரும்பியதில்லை. ஆயினும் வியாபார நோக்கம் கருதி ஒரு சிலரை பழகுவதறகு மட்டும் அனுமதித்து விட்டிருந்தாள். திருமதி கதிரேசனை அவ்வாறு அவள் கொண்டாடியதற்குக் காரணம், அவர்களது ஒரே குமாரன் வினோத்தின் மீது ஏற்பட்டிருந்த ஒரு துளி அக்கறைதான்.

வெளிநாடு சென்று எம். பி. ஏ. படிப்பு படித்தவன். பார்க்கக் கண்ணுக்கு அழகாகத் தெரிந்தான். வசதியான குடும்பம். வசந்தராவின் அப்பா குறிப்பிட்டதைப் போல 'பாக்ரவுண்ட்' நன்றாகவே இருந்த இடம். ஆனால், அவளது இயல்பான பெருமைக் குணம், வலியச்



சென்று அவர்கள் வீட்டுப் பையனை, மருமகனாகக் கேட்க இடம் கொடுக்கவில்லை. சம்யுக்தாவின் அழகும், அந்தஸ்தும் நிச்சயமாக கதிரேசன் வீட்டவர்களை வீழ்த்தி விடும் என எதிர்பார்த்தாள்.

அமெரிக்கவில் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு சமீபத்தில்தான் திருமதி கதிரேசன் திரும்பி இருந்தாள். மகனுடைய பிறந்த நாள் என்ற சாக்கில் வசந்தராவை தொலைபேசியில் அழைப்பு விடுத்திருந்தாள்.

''வினோத் பிறந்த நாள் மறந்திடாதீங்க. சம்யுக்தாவையும் அழைச்சுக்கொண்டு வாங்கோ'' திருமதி கதிரேசன் பேச்சில் பல்வேறு பொருட்களை ஊகித்துக் கொண்டாள் வசந்தரா.

போன உயிர் மீண்டும் வந்ததைப் போல இருந்தது அவளுக்கு. சம்யுக்தாவை மிகுந்த கட்டுப்பாட்டில் வளர்த்துவிட்டிருந்ததால், உலகம் தெரியாத பெண்ணாகப் போயிருக்கலாம். இந்த பரதைப் பயல் அருண் மீது அவள் காட்டும் அன்பு கூட வெறும் கவர்ச்சியாக இருக்கலாம். நிச்சயமாக அவள் அந்த நினைப்பை மகளின் நெஞ்சத்திலிருந்து கிள்ளி எறிந்துவிட வேண்டும். சம்யுக்தாவை, அந்த விசேஷத்திற்கு அழைத்துப் போனால், அந்த வினோத், தேனில் விழுந்த ஈ போல சொக்கிவிடமாட்டானா?

வசந்தராவின் வியாபார மூளை பரபரப்பாகத் திட்டம் தீட்டியது. ஞாயிறன்று எந்தக் கடை திறந்திருக்கும் என ஒரு விநாடி யோசித்தாள். அண்ணா நகரில் உள்ள பிரபலமான 'ஷாப்பிங் சென்டர்' ஒன்று ஞாயிறன்றும் இயங்கி வருவதை அவள் அறிவாள். போகும் வழியிலேயே ஏதாயினும் பரிசுப் பொருளை வாங்கிக் கொண்டு, கதிரேசன் வீட்டிற்குப் போய் விடுவது என்று தீர்மானித்தாள்.

''சம்யுக்தா எங்கே? அவ என்கூட வரப்போறா'' அவள் ஆரம்பிக்கு முன், குப்புசாமி மென்று விழுங்கினார்.

Vennila

"காலையிலேயே, சிநேகிதி யாரையோ பார்க்கணும்னு காரை எடுத்துக்கிட்டுப் போகணும்னு சொல்லிச்க."

வசுந்தரா முகம் இறுகியது. பெண்ணை அவள் எங்கும் விடுவதில்லை. ரத்னாவின் கண்காணிப்பில் வீட்டிலுள்ளேயே கயிறில்லாமல் கட்டிப்போட்டிருப்பதை குப்புசாமியும் உணர்ந்திருப்பவர். வேண்டும் என்றே அவளிடமே வந்து பேசும் அளவிற்கு துணிந்து விட்டாரா?

வசுந்தரா அவரைக் கவனமாகப் பார்த்தாள்.

"நான்தான் அவளை எங்கேயும் தனியா, காரை எடுத்துக்கிட்டுப் போக வேணாம்னு சொல்லி இருக்கேவில்ல. காலம் கெட்டுக் கிடக்குது. எங்கயாச்சும் விபத்து ஏற்பட்டா..." இவரிடம் என்ன பேச்சு என்ற எண்ணம் உடனடியாக ஏற்பட்டது அவளுக்கு. "சரி சரி நான் பேசிக்கிறேன் அவகிட்ட" அலட்சியமாகக் கூறிவிட்டு, மேலே நடந்தாள்.

"கூப்பிட்டீங்களாமே" சம்யுக்தா, தாயிடம் வந்து நின்ற போது வசுந்தராவிற்கு ஒரு வினாடி உள்ளம் துடிப்பை மறந்து போனது. ரோஜா மலர் போல தென்றலில் ஒய்யாரமாக அசைந்து வரும் அவளது அழகு மகள்...? இப்படி முகம் வாடிச் சோர்ந்துபோய்...எப்படி ஆகிவிட்டாள்?

அடுத்தவினாடி அவளது இயல்பான பிடிவாத குணம் தலை தூக்கியது. நல்லபடியான வாழ்க்கையை தேர்ந்து எடுத்துக் கொடுக்க அவள் முயலும்போது, இந்த அசட்டுப் பெண் தன் பிடிவாதத்தால் எப்படி அதை அழிக்கப் பார்க்கிறாள்? தன் குலம், அந்தஸ்து எல்லாவற்றையும், தூசியில் போட்டு மிதித்துவிட்டு, எல்லோர் முன்னாலும் துணிச்சலாக, அந்த கதிகெட்டவனுடன் திரிந்திருக்கிறாளே! ஆத்திரம்பொங்கி அவளது பாசத்தை அழித்துச் சென்றது.



பற்களைக் கடித்தபடி, "இன்னிக்கு நாம ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்திற்குப் போகிறோம்" என்றாள் வசுந்தரா.

'பிறந்தநாள் கொண்டாட்டமா? ஹய்! எனக்கு எந்தவித கொண்டாட்டத்திலும் கலந்து கொள்ள விருப்பமில்லை. நான் வரப்போவதில்லை" மகளின் முகத்தில் நிலவிய இறுக்கத்தைக் கண்டு அதிர்ந்தாள் வசுந்தரா.

"எனக்கு விருப்பப்பட்டபடி நான் வெளியே போகக் கூடாதுன்னீட்டீங்க இப்ப உங்க விருப்பப்படி நான் வெளியே வரணுமா?" வெடுக்கெனக் கேட்ட, மகள் சட்டென உள்ளே திரும்பிச் சென்றுவிட்டாள்.

கோபம், ஆத்திரம், அவமானம் எனப் பல்வேறு உணர்ச்சிகளால் தாக்கப்பட்டவளாய் வசுந்தரா, தான் மட்டும் போகத் தீர்மானித்து விட்டிருந்தாள்.

சிறிது நேரத்தில், பிரிண்டட் சில்க் சேலையில் வசுந்தரா புறப்பட்டு விட்டாள். ரத்னாவைக் கூப்பிட்டு, சம்யுக்தாவிற்குத் துணை இருப்பதைப்பற்றி உத்திரவு இட்டபடி, வாயில் பக்கம் இறங்கினாள்.

அண்ணாநகர் கடையில் மனதிற்குத் தோன்றிய பரிசுப் பொருளை வாங்கிக்கொண்டு, காரில், கதிரேசன் வீட்டை அடையும்பொழுது, சரியாக இருந்தது.

"எங்கே வராம இருந்துடுவீங்களோன்னு கவலைப் பட்டேன்" திருமதி கதிரேசன் தன் அகலமான பற்களைக் காட்டி நகைத்தபடி வரவேற்றாள்.

தமது பருத்த தேகத்தை கூட மதியாமல், வெகு சிரத்தையுடன் அவளருகில் வந்த மிஸ்டர் கதிரேசன், "வாங்கம்மா, எங்க குழந்தையைக் காணோம்" என்று விசாரித்தார்.

வசுந்தராவிற்கு ஒருவினாடி தடுமாற்றம் ஏற்பட்டது, சட்டென சமாளித்தவளாய், "அவ சிநேகிதி [illegible] போல 'பார்ட்டி' போயிருக்கா" என்றாள்.

Vennila

வந்திருந்த முக்கிய புள்ளி எல்லோரையுமே வசுந்தராவிற்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. திருமதி கதிரேசன் அவர்களை அறிமுகப்படுத்தியதும் ஒப்புக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு நகர்ந்தாள்.

'மெனி ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் தி டே'' என்றபடி வினோத்தின் கையில் பரிசைக் கொடுத்ததும், ''ஓ! தேங்க்யூ ஆண்ட்டி'' என்றான் சிரித்தபடி. அமெரிக்க வாசத்தில், சிவந்து குண்டாகிப் போன தேகம். மேல்நாட்டு நாகரிகம் சிந்திக் கொண்டிருந்த உடை. பெரிய மனுஷ தோரணை.

''இவன் என் மருமகனாகி இருந்தால் நான் எத்தனை சந்தோஷப்பட்டிருப்பேன்'' மனதினுள் குமுறியபடி, அங்கு போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்தாள் வசுந்தரா.

''என்ன தனியா உட்காந்திட்டீங்க. சாப்பிடப் போகலாமே'' கேட்டபடி அருகே வந்தமர்ந்தாள் திருமதி கதிரேசன்.

''எல்லோரும் போகட்டும், பிறகு வரேன் சாப்பிட'' வசுந்தரா மனக்கிலேசத்தை மறைத்தபடியே பேசினாள்.

ஒரு வினாடி தயங்கிவிட்டு, மெல்ல அடிக்குரலில் கேட்டாள்திருமதி. கதிரேசன். ''நாமொண்ணு நினைக்க தெய்வம் வேறயா நினைச்சிட்டது பாருங்களேன்.''

வசுந்தரா குழப்பத்துடன் ''என்ன சொல்றீங்க'' என்றாள் தடைபட்ட குரலில்.

''உங்க மகளை மருமகளாக்கிக் கொள்ளணும்னு ரொம்பவே ஆவலா இருந்தேன். ஆனா...''

''என்ன ஆனா?'' வசுந்தராவின் இதயம் துடிக்கத் துவங்கியது.

''அவ வேற யாரோட...மன்னிக்கணும். உங்க மனசு நோகும்படியா, உங்க குடும்ப விவகாரத்தைப்பத்தி பேசக் கூடாது. எங்க வினோத்துக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யறோம். பெண்ணைக் காட்டித் தரேன்



வாங்க'' ஆதரவுடன் அவள் கையைப் பற்றினாள் திருமதி கதிரேசன்.

''பாவிப் பெண்ணே! உன் கண்ணை நீயே குத்திக் கொண்டதுமல்லாமல், என் கண்ணையும் குருடாக்கி இப்படி திசை தெரியாமல் அலைக்கழிக்கிறாயே?'' மகளை எண்ணி 'ஓ' வென்று அலற வேண்டும் போல எழுந்த உணர்வை, விழுங்கிக் கொண்டாள் வசுந்தரா. எல்லோருக்கும் தெரிந்து போய்விட்ட விவகாரம் ரகசியமாகாதே! கண்களில் கசிந்த நீரை மறைத்தபடி, எழுந்து நின்றாள் அவள்.

## 34

குப்புசாமி காலையிலிருந்தே, மனதினுள் ஒரு விதமான தவிப்பு. பகல் உணவை, தொழிற்சாலைக்கு அனுப்பிவிட்டிருந்தார். வீட்டினுள் இருந்த சம்யுக்தாவிற்குப் பிடித்தமான உணவை, அவர் தயாரித்து உபசரிக்க இயலாமல் போய் விட்டிருந்தது.

வீட்டினுள் வளைய வந்துகொண்டிருந்த சம்யுக்தா, உள்ளூர புழுங்கிக் கலங்குவதை அவரும் உணர்ந்திருந்தார். எஜமானியின் நம்பிக்கைக்குகந்த ரத்னா, இடுப்பில் கையை வைத்தபடி...அவர் பின்னாலேயே திரிந்து கொண்டிருந்தது எரிச்சலைத் தந்தது.

''பாப்பா! உனக்காக தயிர்வடை செய்திருக்கேன் சாப்பிடறியா?'' எஜமானி அம்மாள் தனியாகத் தொழிற்சாலைக்குப் புறப்பட்டுப் போய்விட்ட துணிவில், சம்யுக்தாவிடம் கிசுகிசுத்தார்.

Vennila

வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், சம்யுக்தாவின் முகம் சோர்ந்து போயிருந்ததை நொடிப் பொழுதில் கவனித்து விட்டிருந்தார். 'பாவம்! குழந்தை! அந்தப் பையன் மீது வைத்துவிட்ட அன்பினால் எப்படி அவதிப் படுகிறது?' பச்சாதாபம் அவரை பாகாய் உருகச் செய்தது. அதே சமயம், உள்ளூரப் பெருமையும் பொங்கியது.

'பிடிவாதம் எஜமானி அம்மாளுக்கு மட்டும்தானா? தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி பாய்கிறதே! மனதில் நிறுத்தியவனையே மாலையிடுவேன் என்று கூறிவிட்டிருக்கிறாளே! பலே பாப்பா!' உள்ளூரப் பாராட்டிக் கொண்டார்.

டிபன் சாப்பிட்டாச்சா?' வேவுகாரி போல ரத்னா சாப்பிடும் அறைப் பக்கம் வந்ததும், புலிபோல வெருண்டாள் சம்யுக்தா.

"எனக்குப் பிடிச்சா நான் சாப்பிடறேன். இல்லாட்டி சும்மா இருக்கேன். இதெல்லாம் என்ன கேள்வி?"

ரத்னா குப்புசாமியை விழித்துப் பார்த்துவிட்டு, அவ்விடத்தை விட்டு அகன்றபோது, அவருக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

"நல்லா வேணும் இந்த ராட்சசிக்கு!" மனதினுள் திருப்தியுடன், சம்யுக்தாவைப் பார்த்தார்.

"தயிர் வடை உனக்குப் பிடிக்குமே பாப்பா, நல்லா சாப்பிடு." அவசரமாக சாப்பாட்டு மேஜைமீது பளபளப்பான ஸ்டீல் தட்டில், இரண்டு தயிர் வடைகளைக் கொணர்ந்து வைத்தார்.

தட்டை வெறித்துப் பார்த்தபடி அவள் உட்கார்ந்திருந்தது அவர் மனதை என்னவோ செய்தது.

"பாப்பா! உடம்பு நல்லா இருந்தாத்தான், மனசும் தெம்பா இருக்கும். ஒண்ணுமே சாப்பிடாம இருந்



தின்னா... சுவரை வச்சுத்தானே சித்திரம் எழுத முடியும்?" அவர் குரல் உணர்ச்சிவேகத்தில் தடைப்பட்டது.

சம்யுக்தாவின் உதடுகள் இலேசாக நடுங்கின.

"தாத்தா! உங்களுக்குத் தெரியாத விஷயம் இல்லே. நீங்களே சொல்லி இருக்கீங்க, என்னைப் பேத்தி மாதிரின்னு...இப்ப சொல்லுங்க...அம்மா இப்படி பிடிவாதம் பிடிக்கறாங்களே...நல்லா இருக்கா...என் மனசுல தப்பா ஏதானும்...நினைச்சிருந்தா நான் அத்தனை துணிவா முடிவு எடுத்திருப்பேனா?" குப்புசாமியிடம் இருந்த நட்புறவின் நெகிழ்ச்சியில் அவள் கரைந்து விசிக்கத் துவங்கினாள்.

குப்புசாமி அவளருகில் நெருங்கி அடிக் குரலில், "தைரியமா இரு பாப்பா, என்னைக்கும் உண்மைதான் வெல்லும். கண்ணைத் துடைச்சிக்கிட்டு, முதல்ல சாப்டும்மா.இந்தக்கிழவன் பேச்சைத் தட்டமாட்டியே" என்றார் கனிவுடன்.

வசுந்தராவின்மீது அவருக்கு மட்டற்ற கோபம் வந்தது. எஜமானி அம்மாளிடம் நிறைய தவறுகளும், குற்றங்களும் இருந்தன. பணம், அந்தஸ்து என்ற கர்வத்தில் கண்மண் தெரியாமல், கட்டினவனையே இழந்தவள், அவரை வீட்டைவிட்டு வெளியேற்றக் காரணமானவள். ஆனால், அத்தகைய மாபெருங் குற்றத்தை நீக்கிவிட முயற்சி செய்யவே இல்லை. சொந்த மகள்மீது குற்றம் காண முயலுவது எந்த நியாயத்தில் சேர்ந்தது? தன்னை முதலில் திருத்திக் கொள்ள முடியாத தாய், மகளை மட்டும் திருத்த முடியுமா?

எஜமானி அம்மாள் ஆடம்பரத்திற்கு ஆசைப்பட்டு, மனிதாபிமானத்தை இழந்து கொண்டிருப்பதை அவரால் உணர முடிந்தது. இல்லையேல் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றிய மகளைக் கண்ணீரில் கரையும்படியான



Vennila

நிலைக்குக் கொண்டுவரும் கல்நெஞ்சுக்காரியாக மாறுவாளா?

"பாப்பா!" ஏதோ சொல்ல வாயெடுத்தவர் வாயிற்படியருகில்ரத்னாவின் நிழல்படிவதை உணர்ந்து,வாயை இறுக மூடிக்கொண்டார்.

வேண்டா வெறுப்புடன் சம்யுக்தா, டிபன் தட்டை நகர்த்தி விட்டு எழுந்த போது அவர் துடித்துப்போனார். அவளிடம், பூபதியின் விவரங்களைக் கூறி விடலாமா? சம்யுக்தா எத்தனை ஆனந்தப்படுவாள்?

"பாப்பா உங்கப்பாவைப் பாத்துப் பேசினேன். உன்னை மணக்கப் போகும் அருணும், அவரும் நெருங்கிய சினேகிதர்கள். நிச்சயமாக உன் வருங்காலம் நன்றாக இருக்கும்" என்று உண்மையை உடைத்துச் சொல்லி விடலாமா? சம்யுக்தா எத்தனை ஆனந்தப் படுவாள்?

"சொல்லிவிடாதே!" அவரது உள் மனம் எச்சரித்தது. பூபதியுடன் கலந்து பேசிய வகையில், உண்மையை சிறிது காலத்திற்கு உள்ளத்தில் போட்டுப் பூட்டி வைக்க வேண்டியது அவர் கடமையாயிற்றே? குறுகுறுத்த மனத்துடன் குப்புசாமி சமையலறைக்குள் புகுந்தார்.

சம்யுக்தா, மாடியறைப் பக்கம் விரைந்ததும் ரத்னா தோட்டத்துப் பூச்செடிகளைப் பார்வையிட வெளியே இறங்கினாள். வீட்டின் இறுக்கமான சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவராகக் குப்புசாமி சமையலறையில் தவித்துக் கொண்டிருந்தார்.

தொலைபேசி மணி கிணுகிணுத்தது. கோபமாகப் பாய்ந்து சென்று எடுத்தார் அவர். பக்கத்துப் பங்களா சமையற்காரர் சுகவனம்தான் பேசினார்.

"என்ன ஆளையே காணோம்? நாம சந்திக்கறதே குறைஞ்சுகிட்டு வருது?" சுகவனம் உரிமையுடன் குறைப்பட்டுக் கொண்டார்.



'நாம் சந்திக்கிறதை விட, முக்கியமான சந்திப்பில் இருக்கிறேன்" சொல்ல வந்ததை விழுங்கியபடி, "இப்பிடி பொழுது போயிடுது" என்றார் அசட்டையான குரலில்.

"வழக்கம் போல பூங்காவில சந்திக்கலாமா?" சுகவனத்தின் குரலில் வற்புறுத்தல் இருந்தது. ஒரேயடியாக மறுத்து விட்டால், மனிதர் சந்தேகப்படுவார். அத்தோடு, அவருக்கு ஊர் அக்கப்போர் எல்லாம் நிறைய அத்துபடியான விஷயம். எனவே குப்புசாமி சொல்லாமல் விட்டதைத் தொடுத்து எதையாவது கதை கட்டி விட்டால்—

வசுந்தராவின் வீட்டு உப்பைத் தின்றுவிட்ட நன்றி உணர்வு அவரை விரட்டியது. "அதுக்கென்ன, வேலையை முடிச்சிட்டு அஞ்சுமணி போல வரேன், பேசுவோம்" தொலைபேசியை வைத்துவிட்டு, சமையலறைக்குள் புகுந்தார் மீண்டும்.

இரவுக்கான உணவு அவருக்கு மனப்பாடம். ஆதலால் இயந்திரகதியில் முடித்துவிட்டுக் குளியலறைக்குள் புகுந்தார். அடுத்த அரை மணிக்குள் மாற்றுடையில் திருநீறு பட்டை நெற்றியில் மின்ன, வெற்றிலை பெட்டி சகிதம் வெளியே கிளம்பி விட்டார்.

பூனை குறுக்கே வருவது போல, ரத்னா எங்கே போகிறீங்க?" என்று கேட்டு விட்டால்...என்ற அச்சம் அவருக்கு. பொடி நடையாக வாயிலைக்கடந்து, தெருக்கோடிக்கு விரைந்தார்.

வழக்கமாக அமரும் சிமெண்டு ஆசனத்தின்மீது சுகவனம் வந்து அமர்ந்திருந்தார்.

"பார்த்து ரொம்ப நாளாயிட்டுது. எங்கே வராமல் இருந்துடுவீங்களோன்னு பயம்" வெற்றிலையைஎடுத்த குப்புசாமிக்கு மார்பு வேகமாக அடித்துக் கொண்டது.

Vennila

"ஆசாமி எதற்காக வருந்தி, வருந்திக் கூப்பிட்டு வம்புக்கு இழுக்கிறான்? ஏதானும் இரகசியம்னு இன்னொரு குண்டைத் தூக்கிப் போடவா?"

"அன்னைக்கி சொன்ன சமாச்சாரம் ஏதாச்சும் தெரிஞ்சுதா?" வெற்றிலையை குதப்பியபடி சுகவனம் கேட்டார்.

"என்ன சமாச்சாரம்:" குப்புசாமி தெரியாதவரைப் போல விழித்தார்.

"அதான் அந்த தாடிக்காரர்..."

"அதுவா... அது... ஏதோ தவறான விலாசம் தேடி வந்திட்டாங்களாம்..." குப்புசாமி சமாளித்தார். இரகசியத்தைக் காப்பாற்றும் வரையில் அது நமக்கு அடிமை. அதை வெளியிட்டு விட்டால் அது பெரிய பூதம் போல, நம்மீதே பாய்ந்து விடும் என்ற அனுபவ உண்மையை உணர்ந்தவராயிற்றே!

"போவுது. எவனாவது பணம் பறிக்க வந்திட்டானோன்னு பயந்திட்டேன்" சுகவனம், வெற்றிலைச் சாறை உமிழ்வதற்காக எழுந்து சென்றார்.

குப்புசாமியின் எச்சரிக்கை உணர்வு வேலை செய்தது. அக்கம் பக்க பங்களாவாசிகளில் எவருக்கேனும் உண்மை தெரிந்து விட்டால்...? அரைகுறையாகத் தெரிந்த வசுந்தராவின் வாழ்க்கையைப் பற்றி வேண்டாத கதைகளைக் கட்டி விடுவார்கள்.

சுகவனத்துடன் வேறு கதைகளைப் பேசிவிட்டு குப்புசாமி வீடு திரும்பினார். அது சமயம் வசுந்தரா தொழிற்சாலையிலிருந்து திரும்பி விட்டிருந்தாள்.

எள்ளும் கொள்ளும் வெடித்த முகத்துடன், "எங்க போய்ட்டு வர்றீங்க?" என்று அதட்டியபடி, முன்னறையில் அமர்ந்திருந்தாள்.



குப்புசாமி தயக்கத்துடன் அவளைப் பார்த்தார், "அவளது கணவர் வீட்டு வாயில் வரை வந்ததைச் சொல்லி விடலாமா" மனம் அடித்துக் கொண்டது.

"அம்மா! வக்கீல் கோதண்டம் சார், பேசறார்" ரத்னாவின் குரலைக் கேட்டதும், தன்னை மறந்தவளாய் எஜமானி அம்மாள், தொலைபேசியருகே ஓடுவதை வியப்புடன் பார்த்தபடி நின்றார் குப்புசாமி.

வக்கீல் சாருக்கு இப்போது என்ன வேலை?

## 35

அன்று தாரா விரைவிலேயே வீடு திரும்பி விட்டிருந்தாள். கார்த்திக்கின் பள்ளியில் விசேஷ தினம். பெற்றோர்கள், வகுப்பு ஆசிரியைகளுடன் சந்தித்துப் பேச வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

"கட்டாயம் எங்க டீச்சரை நீங்க வந்து பாக்கணும்", கார்த்திக் கண்டித்துச் சொல்லி இருந்தான். 'அப்பாவும் வரணும்' என்று குழந்தை ஆசையாகக்கூறி இருந்தான்.

"சும்மா ஆபீஸ் அது இதுன்னு சொல்லாதீங்க. நீங்க வருவீங்கன்னு எங்க பிரண்ட்ஸ்கிட்டே சொல்லி இருக்கேன்" சின்னஞ்சிறு கண்களில் பெருமிதம் மின்ன கார்த்திக் கூறியதைக் கேட்டு, மகிழ்ந்து போனாள் தாரா.

வகுப்பில் வெகு சூட்டிகையான மாணவனாக [illegible] தான் கார்த்திக். காலை எழுந்ததும், அம்மாவின் [illegible]

Vennila

யுடன் குளித்து, வெறும் ஜட்டி பனியன் சகிதம், சாப்பிட அமருவான். பள்ளிச் சீருடை அணிவதற்கு அப்பா உதவுவார்.

மாலை, அலுவலகத்திலிருந்து அப்பா, அம்மா இருவருமே மெல்லத்தான் வர முடியும் என்பதை அந்தக் குழந்தை மனம் உணர்ந்திருந்தது. அதனால் வீட்டின் முன் வராந்தாவில் கிடக்கும் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருப்பான்.

தெருவில் இறங்கி ஓடியாட அவன் மனம் துடிக்கும். அதே சமயம் தாயார் அவனைப்பற்றி கவலையுடன் அலுவலகத்திலிருந்து ஓடி வருகிறாள் என்பதை சிறிதளவு தெரிந்து கொண்டிருந்தான் குழந்தை.

"அம்மா கோவிப்பாங்க" என்ற பயமும் அவனைத் தெருவில் இறங்கி விளையாட விடாமல் தடை செய் திருந்தது. ஆனாலும் தாராவின் தாய் மனதில் கவலை கள் இருக்கத்தான் இருந்தது.

"குழந்தைக்கு விளையாட்டுப் புத்தி அதிகம். எங்கே போக்குவரத்து சாலையில் இறங்கி விளையாட ஓடி விடுகிறானோ" என்ற வேதனை. பசியோடு காத்திருக் குமே குழந்தை என்ற தாபம். எல்லாமாக அவளை அலைக்கழிக்க, பஸ்சில், முண்டியடித்துக் கொண்டு வீடு திரும்புவதில் கண்ணாக இருந்தாள்.

சமீபகாலமாக பூபதியின் உடல்நிலை பற்றிய கவலை வேறு அவளை அதிகமாகப் பாதித்திருந்தது. இருவர் சம்பாதித்து நடத்து கொண்டிருந்த குடும்ப வாழ்க்கையில், ஒருத்தர் வருவாயில் காலம் தள்ள வேண்டிய நிலையைக்கூட அவள் பொருட்படுத்த வில்லை. எப்படியாவது உடல்நிலை தேறி அவளுக்குக் கணவராக, அவனது கார்த்திக்கின் தந்தையாக வீட்டி னுள் வளைய வந்தாலே போதும் என்றிருந்தது அவளுக்கு.



வீடு திரும்பும்போது பழைய கவலைகள் அவளிடம் ஏற்படவில்லை. ஏனெனில் பூபதி வீட்டில் இருந்தார். அத்துடன், அவரது ஊர்க்காரர் குப்புசாமி மிக்க அருமையான நண்பர். ஆசையும் நேசமுமாக, பெற்ற தகப்பனைவிடப் பரிவுடன் அவளிடம் நடந்து கொண் டார்.

சாதாரண நாட்களாக இருந்தால், முன்னதாகத் திரும்பி விடும் பூபதி, மனைவிக்குக் கூடமாட உதவு வார். இப்போது அவர் பூரண ஓய்வு வேண்டி நிற்கும் ஒரு நோயாளி. அவருக்கே அவளது உதவி தேவைப் படும்பொழுது—பாவம் அவரால் என்ன செய்யமுடியும்? ஆனால் தற்சமயம் குப்புசாமி பெரியவரது வரவால் அவளுக்குப் பெருத்த நிம்மதி கிட்டியிருந்தது. பூட்டிய வீட்டைத் திறந்துகொண்டு உள்ளே போக வேண்டாம். அவளது சமையல் மேடையில், பல சமயங்களில் ருசி யான உணவுகள் தயாராக இருக்கும்.

"நீங்க எதுக்காக சிரமப்படறீங்க?" ஒரு முறை தாரா, குப்புசாமியை அன்புடன் கடிந்து கொண்டாள். "நான்தான் உங்களை உக்காரவச்சு உபசரிக்கணும்."

குப்புசாமி மனம் நெகிழ்ந்து போனார். "பூபதி எங்களுக்கு ரொம்ப வேண்டியவர். எதுக்கம்மா கவலைப் படறீங்க-நான் கவனிச்சுக் கொள்றேன். அது என் கடமை" என்றார்.

குழந்தை கார்த்திக், அவரை அருமையாக "தாத்தா" என்று கூப்பிட ஆரம்பித்திருந்தான். குப்புசாமிக்கு பரம திருப்தி. சம்யுக்தா அவரை எப்படி அழைக்கி றாளோ, அதே போல அவளது தம்பியும் அழைக்கின்றா னல்லவா?

தாரா வீடு திரும்பியதும், வாயிற்புற நாற்காலியில் அமர்ந்தபடி கார்த்திக் பாடங்களைப் படித்துக்கொண் டிருந்தான். மறுநாள் பாடங்களை முதல் நாளே படித்து விடுவது அவன் வழக்கமாகி விட்டிருந்தது.

Vennila

விஞ்ஞானம் சம்பந்தமான சந்தேகங்களை, அம்மாவிடமோ அப்பாவிடமோ கேட்டுத் தெரிந்துகொள்வான்.

தாயாரைக் கண்டதும் உற்சாகத்தில் குதித்து இறங்கினான் கார்த்திக். "ஹை! அம்மா வந்திட்டாங்க" அவனது பள்ளிக்கூட நிகழ்ச்சிக்கு அப்பா, அம்மா வருவார்களே!

சிறிது பொழுதில் குப்புசாமியிடமும், கணவரிடமும், மகிழ்ச்சியுடன் பேசிவிட்டு, தாரா குளித்து மாற்றுடை உடுத்திக் கொண்டாள்.

"காப்பி பலகாரம் சாப்பிட்டுப் போங்கம்மா" குப்புசாமி அன்புடன் கூறினார்.

'வேண்டாம். மதியம் சாப்பிடக் கையில் எடுத்துப் போன சாப்பாடே, ரொம்ப நேரம் கழிச்சு சாப்பிட்டேன். பசி இல்லை. கார்த்திக்கோட பள்ளிக்கூடம் வரை போய்ட்டு வந்து சாப்பிடறேன்" என்றவள், கணவரின் அருகில் வந்தாள்.

"மருந்து சாப்பிட்டீங்களா? ஏன் இப்படி களைச்சுப் போனாப்பல இருக்கீங்க" தவிப்புடன் கேட்டதும் பூபதி மென்மையாக முறுவலித்தார்.

"என் சிநேகிதர் பக்கத்தில் பேச்சுத் துணையா இருக்கார். கவலை இல்லாம போய்வா. மருந்தை நான் மறந்தாலும், அவர் மறக்கமாட்டார்."

நன்றி பொங்க, குப்புசாமியை ஒரு முறை பார்த்து விட்டு, "நான் சீக்கிரம் வந்திடுவேன்" என்றாள் தாரா.

"அப்பா வரலியாம்மா?" சிறிது ஏமாற்றத்துடன் கேட்டபடி தாயின் சேலைத் தலைப்பைப் பற்றிக்கொண்டான் கார்த்திக்.

படுக்கையிலிருந்தபடியே, மகனுக்கு வெளியே செல்ல உடை அணிவித்து உதவி இருந்தார் பூபதி.



"அப்பாவுக்கு உடம்புக்கு முடியலே. இப்ப நான் மட்டும் வரேன். அடுத்த வாட்டி ரெண்டு பேருமே வருவோம்" சமாதானம் கூறியபடி, மகனுடன் வெளியே இறங்கினாள் தாரா.

பள்ளிக்கூடம் அதிக தொலைவில் இல்லை என்றாலும் பெற்றோர்களின் கும்பல் அதிகமாகவே இருந்தது. கார்கள், ரிக்ஷாக்கள், இரண்டு சக்கர வாகனங்கள் என்று விதம், விதமான ஜோடிகள் வந்து இறங்கியவண்ணம் இருந்தனர்.

கார்த்திக்கின் வகுப்பு ஆசிரியையைப் பார்த்துப் பேசிய தாரா, உவகையால் பல மடங்கு பூரித்து விட்டிருந்தாள். இருக்காதா? "ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாயின்" நிலையில் இருந்தாள்.

"குழந்தையை எப்படி வளர்க்க வேணும்கிறதுக்கு ஒரு எடுத்துக்காட்டு உங்கள் மகன். அவனை மாணவனாக அடைய நாங்கள் ரொம்பப்பெருமைப் படறோம்." ஆசிரியை மெச்சிக்கொண்டதில் உச்சி குளிர்ந்தவளாய் வெளியே வந்தாள்.

"என்னோட அம்மா" எதிர்ப்பட்ட வகுப்புத் தோழர்களிடம் கார்த்திக் பெருமையுடன் அறிமுகப்படுத்தியபடி அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்.

"ஏய் தாரா! நீ எங்கே இங்கே?" குரல் கேட்டுத் தாரா திடுக்குற்றுத் திரும்பினாள். அவளது அலுவலகத் தோழி திலகம் சிரித்தபடி நின்றிருந்தாள்.

"நீ எப்படி இங்கே?"

"என் அக்கா மகன் இந்தப் பள்ளியில்தான் படிக்கறான். இங்கே அக்கா வீட்டுக்கு வந்தேன். அப்படியே துணைக்கு வந்தேன். அட! இதுதான் உன்

Vennila

மகனா? படு கட்டியா இருப்பான் போல இருக்குதே!" படபடத்த வண்ணம், கார்த்திக்கின் கன்னத்தை வருடினாள்.

"அதுக்காகத்தான் கொஞ்சம் சீக்கிரமா ஆபீஸிலே இருந்து வந்திட்டேன்" சிரித்தபடி தாரா கூறினாள்.

"உங்கிட்ட ஒரு முக்கியமான சங்கதி சொல்லணும். ஆபீஸ்ல வச்சுப்பேச முடியாது" திலகம் தொண்டையைச் செருமிக் கொண்டாள்.

"எங்கிட்டயா?" வியப்புடன் அவளைப் பார்த்தாள் தாரா.

"அம்மா என் பிரண்ட் கூப்பிடறான். பேசிட்டு வரட்டுமா" தாயிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு கார்த்திக் எதிர்ப்புறம் ஓடியது. ஒரு விதத்தில் சாதகமாயிற்று.

"உன் கணவர் பூபதி சுகம்தானே."

தாராவின் புருவங்கள் கேள்விக் குறியாக நெரிந்தன.

"இப்போ பரவா |இல்லே. இருந்தாலும் ரொம்ப சோர்வாகத்தான் இருக்கார். ஏன்?"

"மனசில கவலை ஏதும் இல்லையே?"

தாராவின் விழிகள் கலவரத்தினால் விரிந்தன.

"என்ன சொல்றே திலகா? விளங்கச் சொல்லேன்." என்றாள் சிறிது எரிச்சலுடன்.

"உன் கணவரை நான் பார்த்திருக்கேன். ஆனா நம்ம மானேஜர் மகளுக்குத் தெரிய நியாயமில்லையே. சமீபத்தில் அவ வீட்டருகே, ஒரு தாடிக்காரர் அடிக்கடி வந்ததாகவும். எல்லோரும் முகமூடி ஆளா இருக்குமோன்னு பயந்ததாகவும் சொன்னாள்."



"தாடி வச்சவங்க எல்லாம் என் வீட்டுக்காரர் தான்னு சொல்லிட முடியுமா? அதுவும் தவிர அந்த எடத்துக்கு அவர் ஏன் போகப் போறார். சுத்தப் பேத்தல்" என்றாள் அசட்டையான குரலில்.

"மானேஜர் மகளை எனக்கு நல்லா தெரியும். போன வாரம் ஒரு கல்யாணத்தில் சந்திச்சப்போ அவ இதை பெரிய 'நியூஸ்' மாதிரி விவரிச்சுக்கிட்டிருந்தா. அவ சொன்ன அடையாளங்களைப் பார்த்தப்போ எனக்கு சந்தேகமா இருந்திச்சு" திலகம் இழுத்துவிட்டு, "ஸாரி! ஒரு வேளை தவறா இருக்கலாம்; வீணா உன் கிட்ட எதையாச்சும் சொல்லிக்கிட்டிருக்கேன்" மன்னிப்பு கேட்கும் தோரணையுடன் நிறுத்தினாள்.

பத்தாவது அவென்யூ–அண்ணாநகருக்கு, உண்மையிலேயே அவள் கணவர் போனாரா? அப்படியானால் அவளிடம் கூட கூறமுடியாதபடி, அவர் பார்க்கப் போன நபர் யார்? தாராவின் நெஞ்சில் கனத்த சுமை ஒன்று அழுத்த உட்கார்ந்து கொண்டது.

## 36

பூபதி, தொழிற்சாலையின் முன்புற வாயிலை அடைந்தபோது மணி பத்திற்கு மேலாகி விட்டது. வாசற்புற கூண்டுக்குள் நின்றிருந்த காவலாளர்களிடம் ஏற்கெனவே சொல்லி வைத்திருக்கிறார் போலும்.

Vennila

"மிஸ்டர் லோகநாதன்னு சொன்னா, தெரியும்"- அவர் கூறி முடிக்குமுன், வரவேற்பறையைக் காட்டி விட்டார்கள்.

பூபதிக்கு ஒரு புறம் தயக்கமும், மறுபுறம் துயரமுமாக இருந்தது. வாழ்க்கையின் நியதி ஒரே சீராக இயங்கி இருந்தால், இப்படி ஒரு மூன்றாம் மனிதர்போல அவர் வரவேண்டி இருக்குமா?

'சலாம்' போட்டபடி, வாயில் கேட்டைத் திறந்து, அவரது கப்பல் போன்ற காரை உள்ளே செல்ல அனுமதித்திருப்பார்களே! தொழிற்சாலையின் அதிபர்களுள் அவரும் ஒருத்தர் என்று எத்தனை பணிவாக இருந்திருப்பார்கள்?

"என்ன இது? ஏன் இப்படிப்பட்ட எண்ணம் உன் மனதில் ஏற்பட்டது? இப்படி நீ நினைப்பதே உன் அருமைத் தாராவிற்கு இழைக்கும் மாபெரும் துரோகம் ஆயிற்றே!' உள்ளுக்குள்ளே அவரைச் சாடியது மனசாட்சி.

பணத்திற்கு அடிமையாகாமல், யாவற்றையும் உதறிவிட்டு வெளியேறியவர் அவரையே நம்பி வாழும் தாராவிற்கு உண்மையான கணவராக வாழவேண்டும் என்ற நியாயம் அவரை உறுத்தியது. தாராவின் அமைதியான முகம் நினைப்புக்கு வந்ததும், அவர் காலையில் நடந்ததை எண்ணி ஒரு கணம் நெகிழ்ச்சியடைந்தார்.

படுக்கையில் இருந்தபடியே பல நாட்களாக ஓய்வு எடுத்த போதிலும், மனதில் பல எண்ணங்கள் அலை பாய்ந்து கொண்டிருந்தன.

"தாராவிற்கு ஒரு வழி செய்துவிட வேண்டும். சமூகத்தின் முன் அவளைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்ய வேண்டியது அவர் கடமை. அவரது மகன் கார்த்திக், உரிமை மகனாக வளர வேண்டும்.

ஆவேசம் வந்த அவர், வக்கீல் கோதண்டத்திற்குக் கடிதம் போட்டிருந்தார். வழக்கம்போல, விலாசம்



இல்லாத கடிதம் அல்ல. மஞ்சுநாதன் தெரு விலாசத்துடன், தாம் வசுந்தராவைப் பார்த்துப் பேச விரும்புவதாகவும், அதற்கு ஒரு நாளைக் குறிப்பிட்டு எழுதும்படியும் கேட்டிருந்தார்.

தபால்காரர் பதிலைக் கொண்டுவரும் சமயம், தாரா அலுவலகம் சென்றிருப்பாள் என்பது அவருக்குத் தெரியும். முதல் மனைவியிடமிருந்து விவாகரத்து வாங்கிய பிறகு தாராவை சட்டப்படி மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்ற அவசரம் அவருக்கு.

கோதண்டத்திடமிருந்து எதிர்பார்த்தபடி பதில் வந்ததும் அவர் படபடத்தார். தாராவிற்குத் திடீரென விஷயத்தைக் கூறி அவளைச் சந்தோஷத்தில் ஆழ்த்த வேண்டும் என்று எண்ணினார்.

அன்று காலை பூபதி வெளியே புறப்படுவதற்கு ஆயத்தமாக இருப்பதைக் கண்ணுற்றதும் தாரா பயந்து போனாள்.

"ஏங்க! உங்களுக்குத்தான் உடம்புக்கு முடியலையே. இப்ப எதுக்காக வெளியே போய் அலட்டிக் கொள்றீங்க" என்றாள் கவலையுடன்.

"ரொம்ப முக்கியமான நண்பரைப் பார்க்கப் போகணும். தடுக்காதே தாரா."

தாரா, என்றுமே அவரது பேச்சுக்கு எதிர் பேச்சுப் பேசுகிறவள் அல்ல. ஆனால் உடல்நிலை தேறிவரும் இந்த சமயத்தில் அவர் எதற்காக, யாரைப் போய் பார்க்க வேணும் என்கிறார்? அப்படிப்பட்ட முக்கியமான நபர் யார்?

மனதினுள் உறுத்தல். சே! இவரைப் போய் சந்தேகிப்பதா? தன்னைத்தானே கடிந்தவளாய், அவரது முகத்தைப் பார்த்தாள். அதே சமயம் நோயின் கடுமையிலிருந்து தேறி, சோர்வுடன் தெரியும் அவரது முகம் அவளை நுணுக்குறச் செய்தது.

Vennila

"தனியாகப் போகாதீங்க. உங்க நண்பரைக் கூடத் துணையாக அழைச்சிட்டுப் போங்க" என்றாள் சிறிது தயங்கியபடி.

குப்புசாமி துணையுடனா? பூபதிக்கு சிரிப்பு வந்தது. பாவம் தாரா! அவரை எத்தனை நம்புகிறாள்?

"அவர் ஒருத்தர் வீட்ல வேலை செய்யறார் தாரா. அவரைப் போய் இதுக்கெல்லாம் விடுப்பு எடுத்துக்கிட்டு வாங்கன்னு தொல்லை தரலாமா? பேஷா, நானே போயிட்டு வந்திடறேன். கவலைப்படாதே" என்றார் அமைதியாக.

அதற்கு மேல் தாராவால் எதுவும் கேட்க இயலாமல் போயிற்று. இருப்பினும், அவள் அழுவதைப் புறப்படு முன், பலமுறை எச்சரிக்கையாகக் கூறி விட்டிருந்தாள்.

"கவனமாக இருங்க. ஆட்டோவில் போய் வாங்கோ. பஸ் பயணம் உங்க உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. கார்த்திக் பள்ளிக்கூடத்தில் இருந்து திரும்பி வருவதுக்குள்ளாற திரும்பிடுங்கோ."

பூபதியின் ஜிப்பா பையில் மூன்று பத்து ரூபாய் தாள்களை சொருகினாள். அவளது கனிவும், பரிவும் அவர் நெஞ்சைத் தொட்டன.

"என் பர்ஸில கொஞ்சம் பணம் இருக்கு தாரா" என்றார் உணர்ச்சி பொங்க.

"இருக்குன்னு தெரியும். ஆனா, வீண் செலவுன்னு நீங்க, பஸ்ஸில போய் அவஸ்தைப் படுவீங்க. அதனால இந்தப் பணம் கூடுதலாக இருக்கட்டும்" கண்டிப்பும், கனிவுமாகக் கூறினாள்.

"தாரா! நீ எத்தனை இனிமையான வாழ்க்கைத் துணைவி" நெஞ்சை நிறைந்த நினைவுகளுடன், தொழிற்சாலையின் வரவேற்பறையை ஒட்டி இருந்த பெரிய அறையின் முன் நின்றார்.



இலேசாக விரல்களால் தட்டியதும், "வரலாம்" என்ற குரல் கேட்டது. அந்தக் குரல் சிறிதும் மாறவே இல்லை! அதே அதிகார தோரணை. அதட்டல். எல்லாமே காலத்தால் அழியாமல் அப்படியே ஒலித்தது.

பல வருடங்களுக்குப் பின் நேருக்கு நேர் சந்திக்கப் போகும் பதை பதைப்பு அவருக்கு கதவை மெல்லத் தள்ளியபடி உள்ளே நுழைந்தார்.

வசந்தரா! அவரது மனைவி என்ற உரிமைக்கும் சட்டத்திற்கும் உட்பட்டவள். அவரது தாலியை நெஞ்சிலே சுமந்து கொண்டு, அவரையே நெஞ்சிலிருந்து தூக்கி எறிந்து விட்டவள், கம்பீரமாக, இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

காலின் கீழே அழுந்திய ரத்தினக் கம்பளத்தின் மென்மை கூட அவளிடம் காணப்படவில்லையே! தாரா, அவரது தாலியை நெஞ்சிலே சுமந்தவள் மட்டும் அல்ல, நெஞ்சுக்குள்ளும் அவரை அன்போடு சுமக்கிறாளே!

பளபளத்த மேசையின் மீது, தொலைபேசிகள். அருகே ஃபைல்கள் என ஒரு பஜுவான தோரணையில் உட்கார்ந்திருந்தவள் அவரைப் பார்த்தும் "உக்காருங்க" என்றாள்.

பின்பக்க சுவரிலே சந்தன சட்டமிடப்பட்ட புகைப் படத்தில், மாமனார் சேனாபதி அவரைப் பார்த்து சிரிப்பதுபோல இருந்தது.

'பாக்ரவுண்ட் இல்லாதவனெல்லாம் என் மருமகனாக முடியாதுன்னேனே! பார்த்தாயா?' என்பது போன்ற மருட்சி ஏற்பட்டது பூபதிக்கு.

அதே சமயம் வசந்தராவும் வெகுவாகப் பாதிக்கப் பட்ட மனநிலையில்தான் இருந்தாள். தொலைபேசியில் லக்ஷ்மி கோதண்டம் கூறியதைக்கேட்டு அவள் ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள்.

"மிஸ்டர் லோகநாதன் கிட்ட இருந்து கடிதம் வந்திருக்கு" சட்டென அவள் சுற்றுமுற்றும் பார்த்தவள், எச்சரிக்கையுடன், "ஒரு நிமிஷம்! நானே கூப்பிடறேன்" என்றாள். மறுவிநாடி தனது படுக்கை அறை பிரத்தியேக தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

"இந்த வாட்டி, விலாசத்தோட கடிதம் வந்திருக்கம்மா. நேரே பார்த்துப் பேசணுமாம்" வக்கீலின் குரலைக் கேட்டதும், வசுந்தராவிற்கு ஏற்பட்ட உணர்ச்சி ஆனந்தமா, வருத்தமா என்றே விளங்காமல் போய் விட்டிருந்தது.

"எங்கேயிருந்து?" தனது படபடப்பை மறைத்தபடி கேட்டாள் மெதுவாக.

"சென்னை விலாசம்தான். மாம்பலம், மங்களநாதன் தெரு போட்டிருக்கு. அந்த விலாசத்துக்கு நான் பதில் எழுதணும்" கவலையுடன் ஒலித்தது அவரது குரல்.

வசுந்தரா சற்று நிதானித்தாள். சம்யுக்தாவின் திருமணத்திற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் அவளது கணவர் என்ற முறையில் லோகநாதன் திரும்பி வந்து விட்டால், எதையும் கண்டு கொள்ளாமல் இருந்து விடுவதே சிறந்தது. கல்யாணப் பந்தலில், சம்யுக்தாவின் அப்பா என்ற கவுரமான போர்வையில், அவரும் துணிவாக இருக்கலாம்.

"என்னம்மா யோசிக்கிறீங்க?" கோதண்டத்தின் குரலில் தூண்டல்.

"சரி! அவரை, என் தொழிற்சாலை வரவேற்பறைக்குப் பக்கத்து அறைக்கு வரச் சொல்லிடுங்க."

"என்னம்மா? அலுவலகத்துக்கா?" அவரது குரலில் ஆச்சரியம் தெரிந்தது.

"ஆமாம் அங்குதான் என் பிரத்தியேக அறை இருக்கு. வீட்லன்னா, மத்தவங்க மூக்கை நுழைப்பாங்க. அதை நான் விரும்பலே. வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு வரச் சொல்லுங்க" தொலைபேசியை வைத்து விட்டாள்.



ஆனால், நெஞ்சம் மார்பும், வெகு நேரம் துடித்துக் கொண்டே இருந்தன. அன்றிரவு அவள் உறங்காமலே கழித்தாள்.

இப்போது, பல காலம் பிரிந்திருந்த கணவரை, தாடியும், மீசையுமாக, உருக்குலைந்த தோற்றத்தில் கண்டதும், பேச்சற்றுப் போனாள்.

"மனிதர் சோறு தண்ணி இல்லாம திண்டாடிட்டு இப்ப புத்திவந்ததுன்னு ஓடிவந்திருப்பார். நல்லா வேணும்" அவளது அதிகார புத்தி தலை தூக்கியது.

பல வருடங்களுக்குப் பிறகு, அந்நியர்களைப் போல, எதிர் எதிரே கணவனும், மனைவியும் உட்கார்ந்திருப்பது எத்தனை துரதிருஷ்டம்? யார் பேச்சை ஆரம்பிப்பது, எப்படி ஆரம்பிப்பது என்ற குழப்பத்தில் ஒருவரை ஒருவர் பார்த்தபடி சிறிது நேரம் அமர்ந்திருந்தனர்.

முடிவில் தொண்டையைச் செருமியபடி பூபதி மெல்ல ஆரம்பித்தார். "இத்தனை நாளைக்குப் பிறகு நான் மீண்டும் வந்து தொல்லை தர விரும்பலே."

வசுந்தராவின் புருவங்கள் யோசனையுடன் நெரிந்தன.

"எதற்காக சுற்றி வளைக்கிறார்? நேரடியாகச் சொல்ல வேண்டியதுதானே? நடந்ததையெல்லாம் மறந்து மன்னித்து விடு" என்று. அவள் மனதை அடக்கியபடி அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

தாடியும், மீசையுமாக எத்தனை அலங்கோலமாக மாறிவிட்டார் மனிதர்!

"இப்ப நான் வந்த நோக்கம்..." ஒரு விநாடி தயங்கி விட்டு, 'நமக்குள்ள இந்த விவாகத்தை ரத்து செய்துடணும்னு கேக்கத்தான்" என்றார் திடமான குரலில்.

"விவாகரத்தா?" தூக்கிவாரிப் போட்டவளாய் வசுந்தரா இருக்கையை விட்டு எழுந்தாள்!



Vennila

# 37

நாய்க்குப் பலர் அன்பு காட்டுவதற்குக் காரணம், அது தன் நாவை ஆட்டாமல் வாலை ஆட்டுவதனால் தான் என்றார் ஒரு அறிஞர். நன்றி என்ற சின்னத்தின் அடையாளமாக, நாயைத்தான் குறிப்பிடுகிறார்களே தவிர, மனிதர்களைக் குறிப்பிடுவதே இல்லை. குப்புசாமி மனிதர்தான். ஆனால் நன்றி உணர்வு அவரிடம் அதிகமாக இருந்தது.

வசுந்தராவின் வீட்டின் உப்பைத் தின்றதற்கு, அந்தக் குடும்பம் மீண்டும் ஒன்றுபட வேண்டும் என்று பாடுபட விரும்பினார். உடல் நோயுற்ற எஜமானர், மீண்டும் அந்த பங்களாவினுள் வந்துவிட்டால் சகல வைத்திய வசதிகளும் செய்துவிடலாம். அவர் உயிர் காப்பாற்றப்படும். குழந்தை கார்த்திக்கின் படிப்பின் எதிர்காலத்திற்கும் ஏதேனும் வழிவகுக்கும் என்றெல்லாம் கற்பனை செய்த வண்ணம் இருந்தார்.

அன்று வக்கீல் கோதண்டத்தின் தொலைபேசி அழைப்பு வந்ததும் அவர் ஆவலினால் திணறிப் போனார். எஜமானி அம்மாள், தனது பிரத்தியேக தொலைபேசியை உபயோகிக்க, படுக்கையறைக்குள் சென்றது, அவரது அறியும் ஆவலை துளிர்விடத் துவக்கியது.

ஒட்டுக் கேட்பது அவர் சுபாவமல்ல என்றாலும், இதை எப்படித் தெரிந்து கொள்வது? கூடவே ரத்னா இருக்கிறாளே! மோப்பம் பிடிக்கும் வேட்டை நாயைப் போல, அவரைப் பின் தொடர்வாளே?



அது சமயம் அவருக்குச் சாதகமாக ரத்னா, வெளிப்புறத் தோட்டத்தில் இறங்கிச் சென்றாள். சிறிது நேரம் வரை, அவள் பூக்களிடையே தடுமாறிக் கொண்டிருப்பாள் என்பதை அவர் அறிவார்.

சம்யுக்தா, முன்னறை சோபாவின் மீது அமர்ந்து ஒரு புத்தகத்தில் மூழ்குவதாக பாவனை செய்து கொண்டிருந்தாள்.

ஓசையிடாமல் வசுந்தராவின் படுக்கை அறைச் சுவர் ஓரமாக நின்றார். மனதில் பக்கென்ற உணர்வு. நெஞ்சு தடதடவென அடித்துக் கொள்ள காதைத் தீட்டினார்.

வசுந்தரா சாதாரணமாக மெல்லிய குரலில்தான் பேசுவது வழக்கம். அது தொலை தூரத்திலிருந்து பேச வேண்டி இருந்ததால் சிறிது உரக்கவே பேசினாள். லோகநாதன், மஞ்சுநாதன் தெரு என்பது போன்ற ஓரிரு வார்த்தைகள் மட்டுமே அவருக்குக் கேட்டன. அதற்கு மேல் நிற்பது ஆபத்து என்று உள்ளுணர்வு உறுத்த வேகமாக பின்பக்கத்துப் படிகள் வழியாக இறங்கிச் சென்றுவிட்டார்.

"தாராவிற்கு ஒரு வழி செய்ய வேண்டும்" என்று லோகநாதன் கூறியதற்கும், இப்போது தொலை பேசியில் வந்த தகவலுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? குப்புசாமி கவலையும், சந்தேகமுமாக சமையலறைக்குள் புகுந்து கொண்டார்.

இரவு சாப்பாட்டு மேசையருகில் அமர்ந்த எஜமானி அம்மாளின் முகத்தைக் கவனியாதவர் போல் கடைக் கண்ணால் பார்வை இட்டார். வசுந்தராவின் முகத்திலிருந்து எதையுமே ஊகிக்க இயலாமல் தவித்துப் போனார்.

அன்றிரவு அவர் சரிவர உறங்காமல் புரண்டு கொண்டிருந்தார். அந்தக் குடும்பத்தின் சீர்குலைவை அவர் விரும்பியதே இல்லை. லோகநாத பூபதியின்

Vennila

குடும்பம் சிதைந்து போகாமல் காப்பாற்ற அவர் ஒருத்தரது முயற்சியால் மட்டும் நடக்கக் கூடியதா? கூடவே, அவருக்கு அந்த இளைஞன் அருணின் முகம் நினைப்பிற்கு வந்தது. சம்யுக்தாவின் மீது உயிரையே வைத்திருக்கும், அந்த இளைஞனின் உதவியை நாடினால்...? சட்டென ஒரு புது யோசனை பளிச்சிட்டது.

மறுநாள் வீட்டை விட்டுக் கிளம்பி வெளியே செல்ல என்ன காரணங்கள் கூறலாம் என்றெண்ணியபடியே கண்ணயர்ந்து போனார்.

ஆனால் அடுத்த இரு நாட்களும் அவருக்கு வீட்டில் வெளியே செல்ல முடியாத அளவு வேலை இருந்து விட்டிருந்தன. வசுந்தரா வழக்கம்போல் வேளைப்படி அலுவலகம் சென்று திரும்பவில்லை. தாமதமாகச் சென்று, திடீரெனத் திரும்பி வந்தாள். மீண்டும் எப்போது வெளியே செல்வாள் என ஊகிக்க முடியாத அளவிற்கு வீட்டினுள்ளேயே இருந்தாள்.

அன்று காலை, வசுந்தரா அலுவலகம் புறப்பட்டு சென்றதும், சம்யுக்தாவிடம் தனிமையில் பேசும் வாய்ப்பு கிடைத்தது குப்புசாமிக்கு.

"பாப்பா! நான் ஒண்ணு கேட்டா கோவிக்காம பதில் சொல்லுவியா?" அடிக்குரலில் கிசுகிசுத்தார்.

"உங்ககிட்ட கோவமா? சொல்லுங்க" சம்யுக்தா முறுவலிக்க முயன்றாள்.

சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்தார் குப்புசாமி ரத்னாவைக் காணோம். தாழ்ந்த குரலில்" அருண் வீடு எங்கேன்னு சொல்றியா பாப்பா?" என்றார்.

"தாத்தா!" அவளது விழிகளில் வியப்பும், திகைப்பும் தெரிந்தன.



"இப்ப எங்கிட்ட ஒண்ணும் கேக்காதே. ரொம்ப அவசரமா எனக்கு அருணோட விலாசம் வேணும். பிறகு வந்து சொல்றேன்" அவளைக் கனிவாகப் பார்த்துப் புன்னகைத்தார்.

அன்று மாலை, ரத்னாவின் கெடுபிடியான பார்வையிலிருந்து நழுவி, பஸ்ஸைப் பிடித்து, நுங்கம்பாக்கத்திலுள்ள, அந்தத் தெரு வீட்டை அடைந்தபோது மணி ஐந்தரை ஆகி விட்டிருந்தது.

பூபதியைப் பார்க்குமுன்பு, அருணைச் சந்தித்து ஓரளவாவது உண்மையை விளக்கிவிட வேணும் என்பது அவர் திட்டம்.

வீட்டின் மூடப்பட்டிருந்த கதவை மெல்லத் தட்டினார் குப்புசாமி. கதவைத் திறந்த அந்த மெல்லிய உருவம்தான் அருணின் தாயாராக இருக்க வேண்டும் என கணித்தார்.

"யார் வேணும்?"

"இதுதானே அருண் இருக்கற வீடு. என் பேர் குப்புசாமி. பூபதி ஐயாவோட ஊர்க்காரர். அருண் தம்பி கிட்ட கொஞ்சம் பேசலாம்னு வந்தேன்" குப்புசாமி பொரிந்து தள்ளினார்.

பூபதி என்ற பெயரினால், கோதையும் அவரை உள்ளே அழைத்து அமரச் செய்தாள்.

"தம்பி இன்னும் சற்று நேரத்தில் வந்திடுவான். காப்பி ஏதாச்சும் சாப்பிடறீங்களா?" மரியாதை, பணிவு நிறைந்த குரல், அவரை புளகிக்கச் செய்தது.

"கொஞ்சம் ஜில்லுனு தண்ணீர் குடுங்க போதும்" என்றார் சிரிப்புடன்.

"எங்க வீட்ல பானைத் தண்ணீர்தான் பரவாயில்லியா?" கேட்டபடி கோதை உள்ளே சென்றாள்.

Vennila

தம்மைச் சுற்றிலும் ஒருமுறை நோட்டம் விட்டார் குப்புசாமி. ஏழ்மையின் பிடியிலிருந்து ஒருபடி மேலே எழும்ப முயலும் குடும்பம். நுரை ரப்பர் மெத்தைமீது படுத்து உறங்கி மேசைமீது நாசூக்காகச் சாப்பிட்டு, சொகுசாகக் காரில் செல்லும் சம்யுக்தாவால் எப்படி இங்கு வாழ இயலும்.

அருண்மீது உள்ள அன்பு ஒன்றையே அவள் பெரிதாகக் கருதி, இதர வசதிகளைத் துச்சமாக தூர எறிந்து விட்டிருக்கிறாளே! அதற்கு நிச்சயம் நல்ல மனோதிடம் வேண்டும். மனதினுள் அதிசயித்தவராய் அமர்ந்திருந்தார். உண்மையான காதலுக்கு உறுதிதானே தேவை?

கோதையம்மாளை அப்பொழுதுதான் அவர் நேருக்கு நேர் பார்க்கிறார். அருணின் தாய் என்பதை அந்தம்மாளின் அமைதியான முகத்திலிருந்தே அவர் விளங்கிக் கொண்டிருந்தார்.

"இப்ப தண்ணீர் சாப்பிடுங்க. அருண் வந்ததும் காப்பி சாப்பிடலாம்" உபசரித்தபடி நீர் நிரம்பிய தம்ளரை அவரிடம் தந்தாள் கோதை. அதிக வேலை செய்ததால் நரம்புகள் புடைத்த கைகள், உழைத்து உரமேறியவை. தம்ளரை வாங்கியபடியே அவர் எண்ணமிட்டார். கோதை அம்மாள் தமது உழைப்பினால் மகனை உருவாக்கி இருக்கிறார்கள். நிச்சயம், அருண் தாய் சொல் தட்டாத மகனாக இருக்க வேண்டும்.

பணத்திலே புரளும் சம்யுக்தாவை, மருமகளாக ஏற்றுக் கொள்ள இந்தம்மாள் சம்மதிப்பார்களா?

"என்ன யோசிக்கிறீங்க. எங்க வீட்டுக்கு முதன் முறையா வந்திட்டு, ஒரு வாய் காப்பி கூட சாப்பிடாம நாங்க அனுப்பறதில்லை" கனிவுடன் உபசரித்தாள் கோதை.

தண்ணீரைக் குடித்து விட்டு தம்ளரைக் கீழே வைத்தார், அவர்.



"நீங்க எங்க இருக்கீங்க?"

ஆசட்டுச் சிரிப்புடன், அண்ணா நகர்ல ஒருத்தர் வீட்ல வேலை செய்றேனம்மா. தம்பியை, பூபதி ஐயா வீட்ல பார்த்தேன். இந்தப் பக்கமா வர வேண்டிய வேலை இருந்திச்சு, பார்த்துட்டுப் போகலாம்னு—" அவர் முடிக்குமுன் வாயிற்பக்கம் அரவம் கேட்டது.

அலுவலகத்திலிருந்து அப்போதுதான் உள்ளே நுழைந்த அருண் குப்புசாமியைக் கண்டதும் வியப்பிலாழ்ந்தான். "வாங்க! வாங்க! நீங்களா? வந்து நேரமாயிட்டுதா?" அடுக்கடுக்காகக் கேட்டபடி, அவர் அருகில் வந்தான்.

"முதல்ல, முகம் கழுவி, காப்பி பலகாரம் சாப்பிட்டு பேசலாம்!" என்றார் குப்புசாமி.

"எனக்கு முகம் மட்டும் கழுவினா போதாது. குளிச்சு உடை மாத்திக்கணும்" வரிசைப் பற்கள் தெரிய வாய் விட்டு சிரிக்க முயன்றான் அருண்.

"காத்துக்கிட்டிருக்கேன். அவசரம் இல்லே" என்றார் குப்புசாமி அமைதியாக.

சிறிது பொழுதில், மாற்றுடை அணிந்து சுத்தமாக வந்த அருணைப் பார்த்தவர் மனதினுள் திருப்தி. "பையன், சுத்தம் சோறு போடும்னு நினைக்கறவன் தான்."

அலமாரியினுள் இருந்த திருநீரை நெற்றியில் பூசி விட்டு தகப்பனாரின் படத்தை நோக்கிக்கரங்குவித்தான் அருண். பிறகு அவர் அருகில் ஒரு முக்காலியை இழுத்துப்போட்டபடி அமர்ந்தான்.

கோதையின் அன்பான வற்புறுத்தலின் பேரில் குப்புசாமி அரைத் தம்ளர் காப்பியைக் கையில் வாங்கிக் கொண்டார். இரவுச் சமையலுக்காக கோதை உள்ளே சென்றதும், குப்புசாமி மெல்ல தொண்டையைச் செருமிக் கொண்டார்.

Vennila

"தம்பி! உங்ககிட்ட ரொம்ப முக்கியமான ஒரு சேதியைச் சொல்லணும்னு துடிச்சிட்டிருக்கேன்.

அருண் கேள்விக்குறியோடு அரைப் பார்த்தான்.

"சம்யுக்தா விஷயம் எனக்குத் தெரியும்."

தட்டிலிருந்த பலகாரத்தை வாயில் போடப் போன வனது தொண்டையில் ஏதோ சிக்கிக் கொண்ட உணர்வு.

"ஆனா, அதைப் பத்தி இப்ப பேச வரலே. உங்க கிட்ட நான் சொல்ல வந்தது, பூபதி சார் பத்தின ரகசியம். அவரைப் பத்தி தெரிஞ்சு கொண்டீங்கன்னா நீங்க மலைச்சிடுவீங்க. அவ்வளவு உயர்ந்த மனிதர் அவர். அவருக்கு நாமெல்லாம் உதவி செய்யணும்னு கேக்கத்தான், உங்க வீட்டு விலாசத்தைக் கேட்டுக் கிட்டு ஓடி வந்தேன். இதை வேற எங்கேயும் பேச முடியாது" பெருமூச்சு விட்டார் குப்புசாமி.

ஆவலுடன் அவர் முகத்தைப்பார்த்தபடி "ம்! சொல் லுங்க" என்றான் அருண்.

குப்புசாமி வாயைத் திறக்குமுன், "ஏம்ப்பா! அருண், இன்னைக்கி சீக்கிரமா வந்திட்டியா?" என்று கேட்டபடி நீலகண்டன், குமாருடன் உள்ளே வந்து கொண்டிருந் தார். தமது திறந்த வாயை குப்புசாமி 'டப்'பென்று மூடிக்கொண்டார் கோபத்துடன்!

# 38

வசுந்தரா மிக்க மனவெழுச்சியோடு காத்திருந்தாள். கடந்த இரண்டு நாட்களாக அவள் வெகுவாக ஆலோ சித்து செய்த முடிவு. அவளது கணவர் லோகநாத விடம் பேசிவிட வேண்டிய நீர்மானம்.

காலை எழுந்ததிலிருந்து, பூஜைஅறைக்குள் சென்று விட்டு, பலகாரம் சாப்பிட உட்காரும் வரை அவள் ஒரு நிலையில் இல்லை. எதிரே சிந்தனையுடன் அமர்ந்தி ருந்த சம்யுக்தாவை அசட்டையாகப் பார்ப்பதுபோல நிதானித்தாள். கொடிபோல வளர்ந்து நிற்கும் மகளுக்கு மணமேடையில் நிற்க தந்தை என்பவர் தேவையான வர். ஆனால், அவளது தந்தை இப்போது பிடிவாத மாக விலகிச் செல்ல விரும்பி விட்டிருக்கிறாரே!

"இப்பத்தானம்மா, அடுப்பில இருந்து எடுத்திட்டு வந்தேன். இட்லி சுடும்!" ஆவி பொங்கும் இட்டலித் தட்டை, மேசைமீது குழைந்தபடி வைத்தார் குப்புசாமி.

வசுந்தரா, இதர நாட்களிலானால் எரிந்து விழுந்தி ருப்பாள். அன்று சிந்தனை வயப்பட்டிருந்தவளாக, "உம்" என்றாள் மெதுவாக.

இதுதான் தருணம் என குப்புசாமி, சம்யுக்தாவின் டிபன் தட்டின் இட்டலிகள்மீது நெய்யைத் தாராளமாக ஊற்றினார்.

வசுந்தராவின் தட்டில், அதிகமாக தேங்காய் சட்டினியைத் தள்ளினார். வழக்கமாக சாப்பாட்டு விஷயத்தில் கறாரும், கண்டிப்புமாக இருக்கும் எஜமானி

Vennila

அம்மாவின் கவனம் எங்கோ இருக்கிறது எனப் புரிந்துகொண்டவர், தம் விருப்பம் போல் புகுந்து விளையாடலானார்.

''பாப்பா! இன்னம் ஒரு இட்டலி'' சம்யுக்தாவை நன்றாகவே கவனித்தார். வசுந்தராவின் கண்களும், மனமும் வேறு எங்கேயோ லயித்திருப்பதை அவர் ஊகித்துக் கொண்டார்.

எந்த விஷயத்திலும் கவனமாக இருக்கும் அம்மா இன்று ஏன் இப்படிக் குழம்பிப் போயிருக்கிறார்? சம்யுக்தாவின் விழிகள் வியப்பினால் விரிந்தன.

ஒரு வேளை, தொழிற்சாலையில், பழுதுபட்டு பிறகு சீர் செய்யப்பட்ட இயந்திரத்தால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்குமோ? இருக்காது. அம்மா அதற்கெல்லாம் அசைந்து கொடுக்கக் கூடியவர் அல்ல. ஒரு காலத்தில் நொடித்துப் போயிருந்த கம்பெனியை வாங்கி, அதைத் திறம்பட நிர்வகிப்பவர். லாபம் சேர்த்தவர்—எதையும் ஊகிக்க முடியாமல் திணறினாள் அவள்.

குப்புசாமிக்கு மட்டும், வசுந்தராவின் குழப்பம் புதிராக இல்லை. ஆனால், அவராலும் சரிவரத் தெளிவுபடுத்திக் கொள்ள முடியாத நிலை. யாரிடமும் உண்மையை விண்டு உரைக்க முடியாமல் தமக்குள்ளேயே வைத்துக்கொண்டு புழுங்கினார் அவர்.

''இன்னம் ஒரு இட்டலி!'' தயக்கமாக அவர் கேட்டதும் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள் வசுந்தரா.

''வேண்டாம். பசி இல்லே'' எழுந்து கையைக் கழுவச் சென்றுவிட்டாள். அவளது மனதிலிருந்து அந்த சம்பவத்தைக் கழுவ முடியவில்லையே!

லோகநாதன் 'விவாகரத்து' கேட்டதும், ஆத்திரத்துடன் அவனையும் அறியாமல் சட்டென எழுந்து நின்றாள் வசுந்தரா.



பல வருடப் பிரிவிற்குப் பிறகு, தனது அந்தஸ்து கௌரவம் ஆகியவற்றைப் பார்த்துவிட்டு அவர் தேடி வருவார் என உறுதி கொண்டிருந்தாள்.

'இனி உன்னைவிட்டுப் போகமாட்டேன. மன்னித்துவிடு' என்று லோகநாதன் கெஞ்சிக் கேட்பார். சற்று பிகு செய்த பிறகு, 'இருந்துவிட்டுப் போங்கோ' என்று அலட்சியமாகக் கூறியதுபோல், சொல்லிவிடலாம் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டி இருந்தாள். ஆனால் ஒரே நொடியில் அவளது கோட்டையைத் தகர்த்து எறிந்து விட்டாரே அவர்!

வசுந்தராவின் இயல்பான ஆணவம் அவளைத் தூண்டியது. அத்துடன் சுயநலமும் துணை சேர்ந்து கொள்ள, அவள் அவரை உறுத்துப் பார்த்தாள். சம்யுக்தாவின் கல்யாணம், இனி தடங்கலின்றி நடைபெறும் என நினைத்திருந்ததற்கு மாறாக—? அவள் உள்ளூர பொருமியபடி மவுனமாக நின்றாள்.

''நமக்குள்ளே ஒருத்தருக்கொருத்தர் ஒத்துவராம போன வாழ்க்கையால எந்த லாபமும் இல்லே. அதனால, விவாகரத்து செய்து கொள்வோம்!'' லோகநாதன் மெல்லிய, தெளிவான குரலில் கூறினார்.

''எனக்கு யோசிக்க ஒரு இரண்டுநாள் அவகாசம் தேவை!'' அழுகை. ஆத்திரம் இரண்டையும் பற்களைக் கடித்து விழுங்க முயன்றாள் அவள்.

''தாராளமா, இத்தனை வருஷம் காத்திருந்தவனுக்கு இரண்டுநாள் காத்திருப்பது பெரியதா என்ன?'' லோகநாதன் எழுந்தார்.

அவர் மெல்ல நடந்து மறைந்து சென்ற பிறகும், அவள் பிரமை பிடித்தவளைப் போல வெகுநேரம் அமர்ந்திருந்தாள்.

தன்னுடைய தடுமாற்றத்தை பிறர் அறியாவண்ணம் சாமர்த்தியமாக நடக்க முயன்று

Vennila

எப்போதும் போல, அலுவலக வேலைகளைக் கவனிப்ப தாகக் காணப்பட்டாலும், உள்ளூர அவளை கவலை அரிக்கத் துவங்கிவிட்டிருந்தது.

"என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்? மனதி னுள் சதா ஒரு கேள்வி குடைய ஆரம்பித்தது.

அன்று காலை பத்துமணிக்கு அவள் திடமான ஒரு முடிவெடுத்திருந்தாள். மனம் பதைக்க, முன்னர் அவளது கணவரை முதன்முதலாக சந்தித்து அதே பிரத்தியேக அறையினுள் சென்று அமர்ந்தாள்.

அறைக் கதவை மெல்ல விரலால் தட்டினார் லோகநாதன்.

"வரலாம்!" வசுந்தராவின் குரலின் அழுத்தம் அவரை சட்டென உள்ளே செல்ல வைத்தது.

"உட்காருங்க!" லோகநாதனுக்குப் பொறுமை போய்க்கொண்டிருந்தது. வீணான அவகாசத்தைக் கேட்டு, வீணா நாட்களைக் கழிப்பதால் என்ன பயன்? சட்டப்படி பிரிவு கிடைத்துவிட்டால், தாரா அவரது சட்டத்திற்குட்பட்ட மனைவியாகி விடுவாள் என்ற எண்ணம் அவரை உந்தியது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டார் அவர்.

"யோசனை செய்து முடிச்சாயிருக்கும்னு நினைக் கிறேன். தகுந்த வக்கீல் மூலமா மேற்கொண்டு ஏற்பாடு செய்துடறது நலலது இல்லையா?" என்றார் எதிரே உட்கார்ந்தபடி.

வசுந்தரா அவரை நேருக்குநேர் பார்த்தாள். "நாம பிரிஞ்சு வாழத்தான் வேணும்ங்கறது அவசியமா?"

அவர் வியப்புடன் ஏறிட்டபடி, "அது பல வருடங் களுக்கு முன்னமேயே நீ எடுத்த முடிவுதானே! அந்த லோகநாதன் எப்பவோ மறைஞ்சு போய்ட்டான். இப்ப பூபதிங்கிற புதிய பிறவி எடுத்திருக்கான்!" என்றார் திடமாக.



"எந்தப் பெயரானாலும், சம்யுக்தாவோட தந்தை நீங்கதானே?"

"நான் மறுக்கலியே? ஆனா, வசுந்தராவோட கண வனாக வாழறது இயலாததுன்னு சொல்ல வந்தேன்!" உறுதி தொனித்தது அவரிடம்.

வசுந்தரா அவமானத்தால் முகம் சிவந்து போனாள். கோபத்தில் சூடு ஏறிய குரலில், "அப்படி நான் செய்த தவறுதான் என்ன?" என்றாள்.

"இறந்த பிணத்தைக் குழி தோண்டி எடுத்து இனி அழுவதால் என்ன பலன்? நடந்ததைப் பற்றிப் பேசு வதைவிட, இனி நடக்கப் போவதைப் பற்றிப் பேசி னால் நல்லது!" அவர் குரலில் கண்டிப்பு.

"இத்தனை வருடங்கள் நீங்கள் எப்படி எல்லாமோ வாழ்ந்திருந்துவிட்டு, இப்போது திரும்பி வந்திருக்கீங்க. நான் பழசை மறக்க முயற்சித்தாலும், நீங்க மறுக்க றீங்க. ஏன்னா, நீங்க ஆண்பிள்ளை. சட்டம் உங்க ளுக்கு வளைந்து குடுக்கும்!" படபடத்தாள் வசுந்தரா.

"சட்டம் ரொம்ப மதிப்பு வாய்ந்தது. ஏன்னா அதிக நியாயம் இருக்கிறதனால, நானும் நியாயம் கேட்டுத் தான் இங்கே வந்திருக்கேன். உன்னை அவமானப் படுத்தவோ, கேவலமாகப் பேசவோ வரவில்லே!"

"இப்ப நீங்க கேட்டது கேவலப்படுத்தாம மதிப்பா கொடுத்தது?"

"புரியலையே?"

"எப்படி புரியும்? என்கிட்ட இருந்து இப்ப எதுக் காக விவாகரத்து வேணும்னு கேக்கறீங்க? அதுக்கு நிச்சயம் ஒரு காரணம் இருக்கணும்!" சிறிது சிறிதாக வசுந்தராவின் குரல் உயர்ந்தது.

Vennila

லோகநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தார். "ஆமாம் காரணம் இருக்கிறது!"

"இருக்கிறதுன்னா, உண்மையைச் சொல்ல ஏன் தயக்கம் காட்டணும்?" எரிச்சலுடன் கேட்டவளை உறுத்துப் பார்த்தார் அவர்.

"உண்மையைச் சொல்லத்தான் வந்திருக்கேன். அதுக்குள்ள நீ எங்கே என்னைப் பேச விட்டே?" அவர் உணர்ச்சியால் தழுதழுத்த குரலில் பேசலுற்றார்.

"என்னை தம்பி, ஒரு பெண், எங்கிட்ட எதையும் தெரிஞ்சு கொள்ள விரும்பாத உத்தமி மனைவியா வாழ்கிறாள். அவளை சட்டப்படி மனைவியாக உலகத்தின் முன் நிறுத்த ஆசைப்படறேன்!"

அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தாள் வசுந்தரா. ஊராரின் அபவாதம், வீண்பழி, ஏளனமான விமரிசனங்கள் யாவற்றையும் தாங்கி, எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு, தனிமையில் வாழ்ந்தாள் அவள். அவரோ மாற்றாளாக வேறு ஒருத்தியுடன் இல்லறம் நடத்தி வந்திருக்கிறார். ஏன்? எதனால் அவள் பெண் அவர் ஆண் என்பதாலா?

"தாரா மிகுந்த பொறுமைசாலி. இது நாள்வரை, அவள் எனது பழைய வாழ்க்கையைப் பற்றிக் கேட்டதே இல்லை. நான் சொல்ல முற்பட்டபோதெல்லாம் அவள் தடுத்துவிட்டாள். ஒரு மனிதனுக்கு மனைவி எப்படி அமையணும்கிறதுக்கு தாரா ஒரு உதாரணம். அப்படிப்பட்ட அன்பான பெண்ணுக்கு, மனைவிங்கற அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுக்க ஆசைப்படறேன். மேலும், எங்கள் மகனையும், உரிமையான பிரஜையாக வாழும்படி செய்ய விரும்புகிறேன்!" மூச்சிரைக்க முடித்தார் அவர்.

வசுந்தராவின் ஆத்திரம் பன்மடங்காகப் பெருகியது. மனிதர் குஷாலாகக் குடும்பம் நடத்திப் பிள்ளையும்



பெற்றுக் கொண்டு வாழ்ந்திருக்கிறார். 'அவளுக்கு மனைவி அந்தஸ்து தர வேண்டி, நான் விவாகரத்து அளிக்க வேணுமாம். முடியாது முடியாது' அவள் மனம் அலறியது. கோபத்துடன் கண்ணும், முகமும் ஜிவுஜிவுக்க, "நான் மறுத்தால் ..?" என்றாள்.

"கோர்ட் மூலமாகப் போக வேண்டிவரலாம்!" அவர் எழுந்து கொண்டார்.

"ஒரு நிமிஷம் கேட்டுக் கொண்டு போங்கோ, நீங்க நினைக்கிறது போல, இந்த வசுந்தரா அத்தனை எளிதா, விவாகரத்துக்கு இணங்கிட மாட்டா!"

"ஏன்? உனக்கு என்ன லாபம் இதனால?" வெகுண்டவராய் கேட்டார் லோகநாதன்.

'எனக்கு லாபம் இல்லாமல் போனால் கவலை இல்லே. ஆனா, உங்களை வாழவச்ச தாராவுக்கு சமூக அந்தஸ்து கிடைக்காது. அவள் உங்க ஆசை நாயகின்னு பலரால பேசப்படறதைப் பாத்து சந்தோஷப் படுங்கோ! அதுதான் உங்களுக்குத் தண்டனை"' சீறினாள் வசுந்தரா.

"என்ன சொன்னே? என் தாராவை... அவள் தெய்வம். என் தாரா...!" அடுத்த நிமிடம் அவர் புழுப் போல் துடித்தபடி, மார்பைக் கையால் தாங்கிக்கொண்டு கீழே சாய்ந்தார்.

இதை சற்றும் எதிர்பாராத வசுந்தரா, ஐயோ! உங்களுக்கு என்ன?" என்று அலறியபடி அருகே ஓடி வந்தாள்.

Vennila

# 39

கோதை சமையலறையைவிட்டு வெளியேவந்தாள். அது நேரம் வரை, மிகுந்த கவனத்துடன் தயாரித்த பாயசம், வெஜிடபிள் பிரியாணியை சூடு ஆறாமல் இருக்க மூடி வைத்துவிட்டு, முன்னறையின் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தாள்.

இன்னம் சிறிது நேரத்தில் அருண் வந்து விடுவான். அவனது பிறந்தநாள் என்ற நினைப்பு அவனுக்கு இருக்குமோ என்னவோ என்ற கவலையில் முதல் நாள் காலையிலேயே அவனிடம் கூறிவிட்டிருந்தாள்.

"நாளைக்கு உனக்குப் பிறந்தநாள். மறந்திடாம கோவிலுக்குப் போய்ட்டு வந்திடு."

தாயாரின் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேசாத மகன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான்.

'மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்' குமார் குதூகலத்துடன் பாராட்டிவிட்டு "சின்னம்மா! எங்களுக்குப் பாயசம் கிடையாதா?" என்றான் ஆரவாரமாக.

"எனக்கு இந்த கொண்டாட்டமெல்லாம் பிடிக்காதுன்னு அம்மாவுக்குத் தெரியும்" அருண் சட்டென பதிலளித்ததை அரட்டை செய்தபடி, நீலகண்டன் சிரித்தார்.

"நீ இந்தக் கால இளசு. சின்னம்மா பழைய காலத்துக்காரங்க. அதெல்லாம் கொண்டாடாம விடமாட்டாங்க."



'உங்க மகன் இந்தக் கால இளசுதானே? எதற்காக கொண்டாட்டத்திற்கு அலை பாய்கிறான்' மனதினுள் எரிச்சல். அருண் பற்களைக் கடித்தபடி மவுனம் சாதித்தான்.

"தம்பி காலை வேளையில ஆபீஸ் போகிற அவசரம். சரிவர சாப்பிட முடியாது. அதனால், ராத்திரி நிதானமா விருந்து சாப்பாட்டை சாப்பிடலாம்னு சொல்ல வந்தான்" மகனை விட்டுக் கொடுக்காமல் கோதை சமாளித்தாள்.

அன்று காலை தாயின் காலில் விழுந்து வணங்கினான். அருண்

"நல்லா இருப்பா!" உணர்ச்சியுடன் குரல் தழதழக்கக் கூறினாள் கோதை.

நீலகண்டனும், குமாரும் அதிகாலையிலேயே வெளியே சுற்றப் புறப்பட்டுப் போயிருந்தது அவனுக்கு வசதியாக இருந்தது.

"அம்மா! நீங்க தேவை இல்லாம தேகத்தை சிரமப் படுத்திக்காதீங்கோ. எங்க அண்ணனும், குமாரும் சாப்பிடணும்னு, பெரிய சாப்பாட்டுக் கடையை இழுத்து விட்டுக்கிட்டீங்க... அவ்வளவுதான்" கனிவுடன் அதட்டலாகக் கூறினான்.

"சரிப்பா! நீ சொன்னதுக்காக, சிக்கனமா விருந்து தயாரிச்சுடறேன். சீக்கிரம் வந்திடு" என்றாள் ஆசி வழங்கியபடி.

பிற்பகல், வீட்டைப் பூட்டிக்கொண்டு, கடைத்தெரு வரை சென்ற கோதைக்கு மனதினுள் ஒரு பரபரப்பு. கைநிறைய சம்பாதிக்கத் துவங்கிய மகனுக்கு ஆசை தீர நல்ல உயர்ந்தரக சட்டைத் துணியை வாங்கிப் பரிசாக அளித்து மகிழ வேண்டும்.



Vennila

அலுவலகத்திலிருந்து அருண் திரும்பிய பிறகு அவனை மகிழ்ச்சியுடன் வியப்பிலாழ்த்த வேண்டும் என அந்தத் தாயுள்ளம் விரும்பியது. நிதானமாக யோசித்து அருணின் அளவுக்கு ஏற்றபடி ஒரு சட்டையை வாங்கி வந்திருந்தாள். கூடத்து அலமாரியில் கணவரது புகைப் படத்தருகில் வைத்து விட்டு, "நம்ம குழந்தை நல்லபடியா வாழணும்னு வாழ்த்துங்க!" என்றவளது கண்களில் கண்ணீர் கசிந்தது.

கோதை ஆவலுடன் வாயிற்கதவைத் திறந்து வைத்தபடி மகனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அருண் சிரித்த முகத்துடன் உள்ளே நுழைவதைக் கண்டதும் கோதை முகம் மலர அவனை நோக்கினாள். வழக்கம் போல, மகன் குளித்து மாற்றுடை அணிந்து வரும்வரை கோதை பொறுமையாக இருந்தாள்.

தகப்பனாரின் படத்தருகில் இருந்த பொட்டலத்தைக் கண்டதும் அருண் வியப்புடன், "என்னம்மா இங்கே வச்சிருக்கீங்க!" என்றான்.

"திறந்து பார்! தெரியும்" தாயின் உத்திரவின்படி, பொட்டலத்தைப் பிரித்தவன் உற்சாகத்தில் 'விசில்' அடித்தான்.

கோதைக்கு சிரிப்பு வந்துவிட்டது. "பிறந்த நாளுக்குன்னு ஆசைப்பட்டு வாங்கிட்டு வந்தேன். சரியா இருக்கான்னு பாரு!"

அம்மாவின் உணர்ச்சிவசப்பட்ட பேச்சில் அவன் மனம் பாகாய் கரைந்தது. சட்டென உள்ளே சென்று அவன் அலுவலகப் பையிலிருந்த ஒரு பொட்டலத்தை எடுத்து வந்தவன் "அம்மா! இந்தாங்க. என்னைப் பெத்து வளத்து ஆளாக்கியதுக்கு, நியாயமா நான்தான் நன்றி தெரிவிச்சுப் பரிசு தரணும் உங்களுக்கு" என்றபடி அதை நீட்டினான்.



'என்னப்பா இதெல்லாம்?' மனம் நெகிழ்ந்து போனவளாய், பொட்டலத்தைப் பிரித்த கோதை வியந்து போனாள். மிதமான ஊதா நிறத்தில், மஞ்சள் கரையிட்ட காஞ்சிபுரம் நூல் சேலை.

"எனக்கெதுக்கப்பா இதை வாங்கினே?"

"பேச்சுப் பேசாதீங்கோ. முதல்ல நீங்க இதை உடுத்திகிட்டு வந்தாத்தான், நான் நீங்க குடுத்த சொக்காயைப் போட்டுக்குவேன்!" உரிமையுடன் மிரட்டலாக தாயைப் பணித்து விட்டு, அருண் தன் அறைக்குள் சென்றான். அவனது மகிழ்ச்சிக்கு காரணம் இருந்தது.

அலுவலகம் முடிந்ததும், அவசரமாக, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையருகில் உள்ள ஒரு எம்போரியத்தினுள் நுழைந்தான் அவன்.

"பிறந்த நாள் வாழ்த்துக்கள்" அவனுக்கு மிக அருகில் பழக்கமான இனிய குரல். தூக்கிவாரிப்போட திரும்பியவன் வியப்பும் மகிழ்ச்சியுமாகத் திணறிப் போனான்.

"என் பிறந்த நாள் உனக்கு எப்படித் தெரியும்? நீ எப்படி இங்கே வந்தே? அம்மா கோவிப்பாங்கன்னு சொல்லுவியே? வெளியே சுதந்திரமா வர விட்டாங்களா சம்யுக்தா?" படபடப்புடன் கேள்விகளை அடுக்கினான் அவன்.

"ஒவ்வொண்ணாக் கேளுங்க சொல்றேன்!" சம்யுக்தா சிரித்தாள் மெலிதாக.

"உங்க விண்ணப்பத் தாளைப் பார்த்ததுமே பிறந்த நாள் நினைப்புல இருந்தது. அம்மாவோட சொந்தக்காரங்க யாருக்கோ உடம்புக்கு முடியாம ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்காங்க. அம்மாவோட கவனம் அதனால வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கு. எனக்கு விடுதலை!"

Vennila

"அது போகட்டும். இந்தக் கடையில எப்படி வந்தே?"

"பெரிய வித்தையில்லே. ஆபீஸ்ல இருந்து வெளியே வருவீங்க. உங்ககிட்ட பேசணும்னு ஓடோடி வந்தேன். ஆனா, அதுக்குள்ளார நீங்க வெளியே இறங்கி போறதைப் பார்த்தேன். பின்னாலேயே தொடர்ந்து வந்து பிடிச்சிட்டேன்'' குழந்தையைப் போல ஆர்ப்பரித்த சம்யுக்தாவின் முகத்தைப் பார்த்தான் அருண்.

வாடிப்போன மலரைப் போல இருந்தாள் அவள்.

"அன்புகூட ஒருவித தவம்தான். அந்த தவத்தின் வலிமையால், இந்தப் பெண் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு இருந்திருக்கிறாள்'' மனதினுள் எண்ணமிட்டபடி உள்பக்கம் சென்றான்.

"உங்களுக்கு நான் ஒரு பரிசு வாங்கித் தரப் போகிறேன் அருண்!'' மகிழ்வுடன் அவள் கூறியதைக் கேட்டு, "வேண்டாம் சம்யுக்தா, உன்னை நேரே சந்திச்சதே எனக்குப் பெரிய பரிசு'' என்றான் மறுப்புடன்.

"அப்ப நான் குடுத்தா வாங்கிக்க மாட்டீங்களா?'' மனத்தாங்கலாகக் கேட்டாள், சம்யுக்தா.

"அப்படி இல்லே. திருமணம் நடந்த பிறகு நீ எதைக் கொடுத்தாலும் நான் ஏற்பதுதான் நியாயம், இப்போது இல்லே!''

"என்ன அருண் நாம இன்னைக்காவது சிறிது நேரம் பேசிக் கொண்டு இருக்கலாம்னு வந்தேன்'' ஏமாற்றத்துடன் மொழிந்தாள் அவள்.

"இன்னைக்கி மன்னிச்சுக்கொள்ளு சம்யுக்தா! நாளைக்கி நிச்சயம் சந்திச்சு நிறையப் பேசுவோம்'' மனதைக் கட்டுப்படுத்தியபடி கூறினான் அருண்.



தாயாருக்கு சேலையை வாங்கியபடி. வெளியே இறங்கியவனிடம், 'கார்லதான் வந்தேன். உங்களை இறக்கி விட்டுட்டுப் போறேன்'' என்று வற்புறுத்தினாள் சம்யுக்தா.

"இப்ப வேண்டாம், நீ நேரா வீட்டுக்குப் போ. நாளைக்கி நிச்சயம் சந்திக்கலாம். பொறுத்துக்கொள்ளு!'' வேடிக்கையுடன் பேசியபடி அவளை அனுப்பிவிட்டு, கையில் இருந்த பொட்டலத்தை மறைத்தபடி வீட்டை நோக்கி நடந்தான். தாயாரைத் திடீரென மகிழ்ச்சியில் ஆழ்த்தி விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டிருந்தவனை, அவன் தாய் மிஞ்சி விட்டாளே!

"என்னப்பா பிரமிச்சுட்டே?'' மகனின் வேண்டுகோளை மறுக்காது புதிய நூல் சேலையில் வந்து நின்ற கோதை கேட்டாள். சட்டையை மாற்றிக் கொண்டு, தாயை மீண்டும் விழுந்து வணங்கினான் மகன்.

"இந்தப் பிறவியில் மட்டும் இல்லேம்மா. இனி எத்தனை பிறவி எடுத்தாலும் நீங்கதான் என் தாயாராக இருக்கணும்னு ஆசி கூறுங்கம்மா!'' பாசத்தின் பிணைப்பில் பரவசத்துடன் கூறினான் அவன். மகனது அன்பான பேச்சால் உணர்ச்சி வயப்பட்டாள் கோதை. அவனை ஆசையுடன் தூக்கி நிறுத்தியவள் "எனக்கும் அப்படியேதானப்பா ஆசை!'' என்றாள் தழதழத்த குரலில்.

சிறிது பொழுதில் நீலகண்டனும், குமாரும் வீடு திரும்பியதும், கூடத்துத் தரையில் விருந்துக்கு ஏற்பாடுகள் ஆரம்பமாயின.

"தம்பிக்கு பிறந்த நாள்னு என்ன வாங்கிட்டு வரதுன்னு தெரியலே. அதனால, சாப்பிடலாம்னு ஐஸ்கிரீம் வாங்கிட்டு வந்தோம்'' நீலகண்டன் கூறியபடி ஒரு அட்டைப் பெட்டியை அங்கிருந்த சிறு முக்காலி மீது வைத்தார், பெருமையுடன்.

Vennila

"ஐஸ்கிரீம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதான் அப்பாகிட்ட வாங்க 'ஐடியா' குடுத்தேன்!" உரத்த குரலில் குமார் விவரித்ததும், நீலகண்டனின் முகம் கறுத்தது.

"அதனால என்ன? என் பங்கையும் சேர்த்து சாப்பிடட்டும் குமார்!" அருண் கிண்டலாகக் கூறிய படி சாப்பிட எழுந்தான்.

மணமிக்க வெஜிடபிள் பிரியாணியையும், பாயசத் தையும் ஒரு கை பார்த்தார் நீலகண்டன்.

"பாயசம்! லப்பா! இன்னும் கொஞ்சம் ஊத்துங்கோ சின்னம்மா," குமார் அட்டகாசமாக பாயசத்தினுள் இறங்கி நீந்தாத குறையாக, வயிற்றை நிரப்பினான். கரைகடந்த உற்சாகத்தில், "இன்னைக்கி சாயரட்சை, துணிக்கடை வாசல்ல... அந்த அழகான பொண்ணு... யாரு அண்ணே...?" கண்களைச் சிமிட்டி கிசுகிசுத் தான் —

அருண் முகம் கோபத்தால் சிவந்தது. "இவன் எங்கே அந்தப் பக்கம் வந்து தொலைத்தான்?"

"யாரை கேக்கறே?" கோதை, கேட்டபடி நீல கண்டத்தின் இலையில் பாயசத்தை ஊற்றினாள்.

"சின்னம்மா! நம்ம அருண் தம்பி ஒரு அழகான பெண்ணோட பேசிக்கிட்டு, ஒரு துணிக்கடை வாசல்ல நின்னுக்கிட்டிருந்தது. குமாருக்கு வேலைக்காக அங்க ஒரு ஆபீஸ்பக்கம் போய்ட்டு வந்திருந்தோமா" விவரிக்க ஆரம்பித்தார் நீலகண்டன்.

கோதை நெஞ்சில் விவரிக்கவொண்ணாத கலவரத் துடன் மகனை ஏறிட்டாள். "யாரும் இல்லேம்மா எங்க கம்பெனி முதலாளியம்மா மகள். அன்னைக்கி இங்க கூட வரலே அந்தப் பொண்ணு என்னைப் பார்த்துப் பேசிட்டுது!" கடுகடுப்பாக அந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முனைந்தான் அவன்.



"நற்செயலான சந்திப்பா அல்லது..." கோதை கேட்க இயலாமல் பெருமூச்செறிந்தாள். அது சமயம் வாயிற் கதவை யாரோ தட்டுவது கேட்டது.

"இந்த நேரத்தில் யார்?" வாயிற் கதவைத் திறந் தவள், தாராவைக் கண்டதும் திகைத்துப் போனாள்.

"அருண் இருக்காரா?" பரபரப்புடன் கேட்டபடி, தாரா, கார்த்திக்கைக் கையில் பிடித்தவாறு உள்ளே நுழைந்தாள்.

"வாங்க" என்றவன் கண்களில் வியப்பும், சந்தேக மும் தோன்ற சட்டென எழுந்து நின்றான்.

"அவர்... கார்த்திக்கோட அப்பாவை... அப்பா வீட் டுக்கே திரும்பி வரலே. அவருக்கு என்ன ஆச்சுன்னு தெரியலே. எனக்கு ரொம்ப பயமா இருக்கு தம்பி! அவ ருக்கு ஏதாச்சும் ஆகாம இருக்கணும்னு..." முடிக்க முடி யாமல் 'ஓ'வென அழலானாள் தாரா.

## 40

உச்சிவெய்யில் மண்டையைப் பிளப்பது போல் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. பார்வையாளர் களின் நேரம் காலை எட்டு முதல் பன்னிரண்டு வரை என்ற நேரமும் முடிந்துவிட்டிருந்தது.

மனோகரா நர்சிங்ஹோமின் பளபளப்பான கண் ணாடிக் கதவுகளைக் 'கிளிக்'கென்ற ஒலியுடன் முடி

Vennila

விட்டு, வாயிற் காப்போன் வெளிப்புறத்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

நவீன நாகரீக வசதிகள் கொண்டிருந்த அந்த மருத்துவமனை, பூந்தமல்லீ நெடுஞ்சாலையில், சமீப காலத்தில், கம்பீரமாக எழுந்து நின்றிருந்தது. மேல் நாட்டு புத்தம் புதிய மருத்துவ முறைகளையும், வசதிகளையும் கொண்டு கட்டப் பெற்றிருந்த அந்தத் தனியார் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் சபரி, பிரபலமான இருதய நோய் நிபுணராக விளங்கினார்.

இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அவரிடம் சிகிச்சைக்காக பெரும் பணம் படைத்தவர்கள் வருவதுண்டு. டாக்டர் சபரி தமது வைத்தியப் படிப்பில் நீண்ட பல பட்டங்கள் பெற்ற அனுபவசாலி. இருதய நோயைக் குணப்படுத்துவதில் திறமை வாய்ந்தவர் எனப் பெயர் எடுத்திருந்தார். அத்தகைய தனியார் மருத்துவமனையில்தான் பூபதி என்ற லோகநாதன் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பூபதியின் உடல் நிலை மிகக் கவலைக்கிடமாகி விட்டிருப்பதால் அவரை 'இன்டென்சிவ் கேர் யூனிட்'டினுள் தீவிரமான சிகிச்சையில் வைத்திருந்தார்கள். அவரைப் பார்ப்பதற்கு வசுந்தராவைத்தவிர எவரும் கண்டிப்பாக அனுமதிக்கப்படவில்லை.

வசுந்தரா, உயர்ந்த செல்வாக்குப் படைத்தவள் என்று மட்டும் அல்ல; அந்தத் தனியார் மருத்துவமனை, கட்டப்படும் போது, அவளது தந்தையின் பெயரில் கணிசமான தொகை நன்கொடையாக அளிக்கப்பட்டிருந்ததுதான் அத்தகைய தனிச் சலுகையின் காரணம் என்பது பலருக்குத் தெரிந்திராது.

இரவு, பகல் ஓயாமல் டாக்டர்களும், நர்சுகளுமாக பூபதியைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.



கடந்த நான்கு நாட்களாக நர்சிங்ஹோம் அமளிதுமளிப் பட்டுக் கொண்டிருந்தது. வரவேற்பில் அமர்ந்திருந்த அந்த அழகான ரிசப்ஷனிஸ்ட் பெண், வந்தவர்களுக்குப் பதில் சொல்லி ஓய்ந்து போயிருந்தாள். தொலைபேசியில் நாள் முழுவதும் பேசி, வாயெல்லாம் வலிகண்டு விட்ட பிரமை அவளுக்கு.

ஒருநாள், தள்ளு நாற்காலியில் ஒரு தாடிக்காரரை தள்ளியபடி உள்ளே கொணர்ந்தபோது அந்தப் பெண் அலட்சியமாக இருந்தாள்.

ஆனால் தலைவர் டாக்டர் சபரி, வழக்கம்போல் மூக்கைத் தூக்கிக் கொண்டு, கர்வமாக மிடுக்குநடை போடாமல், அவசரமாக ஓடிவந்ததைப் பார்த்து அவளுக்கு அதிசயமாக இருந்தது.

"பல பொடிக டாக்டர்கள் புடைசூழ, தலைவர் பவனி வருவது போக, இதென்ன இப்படி தலைவிரி கோலமாக அவரே ஓடி வருகிறார்!" மனதினுள் வியந்தபடி நின்றாள்.

சிறிது நேரத்திற்குள், அங்கு பதட்டமான சூழ்நிலை உருவாகி இருந்தது. தள்ளுவண்டியைத் தொடர்ந்து உள்ளே செல்ல முடியாமல் நின்ற பெண்மணியை உற்று நோக்கினாள் அந்தப் பெண்.

கனகச்சிதமான தோற்றமும், கம்பீரமுமான பெண்மணி, பார்த்தால் பெரிய பதவியில் இருப்பவளைப் போலத் தெரிகிறது. மனதிற்குள் கணக்கிட்டபடி தன் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டாள் அவள்.

அவள் அருகில் நின்ற நர்ஸ் கிசுகிசுக்கும் குரலில், "அவங்க யார் தெரியுமா? பார்வதி எலக்ட்ரிகல்ஸ் முதலாளி அம்மா!" என்றதும் தூக்கிவாரிப்போட்டது அவளுக்கு.

"உருக்குலைந்து போன ஒரு தாடிக்கார மனுஷனை எடுத்துக்கொண்டு அந்தப் பிரபலமான நர்சிங்ஹோமிற்கு எதற்காக இவ்வளவு பெரிய மனுஷி வர வேண்டும்?"

Vennila

அவளது பலவிதமான சந்தேகங்கள் அடுத்த மூன்று நாட்களுக்குள் தெளிவாகி விட்டிருந்தது.

"அந்தம்மாளின் கணவராம். தேசாந்திரம் சென்றவர் இத்தனை காலம் கழிந்துத் திரும்பி இருக்கிறாராம். வந்த இடத்தில் மனிதருக்குத் திடுதிப்பென்று மாரடைப்பு வந்து இங்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்" கசமுச வென இதர சிப்பந்திகள் பேசிக் கொண்டனர்.

வசுந்தரா கவலை தோய்ந்த முகத்துடன் காலை முதல் மாலை வரை நர்சிங் ஹோமில், ஒரு தனி அறைக்குள் அமர்ந்திருந்தாள். செயலாளர் சாம்பசிவம், அலுவலகத்தின் முக்கியமான ஃபைல்களை, அங்கே கொணர்ந்து சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தார்.

"இவங்க என்ன, நர்சிங்ஹோமில் ஆபீஸ் நடத்தறாங்களா?" ரிஸப்ஷனிஸ்ட் இளம் பெண், அருகில் இருந்த நர்ஸிடம் எரிச்சலுடன் கேட்டாள்.

"ஸ்! வாயைத் திறக்காதே. இந்த நர்ஸிங்ஹோம் கட்டடத்திலே அந்தம்மாவோட பணம் ஏராளமா உதவி இருக்கு. அவங்களுக்குன்னா நம்ம தலைவர் ஒரு தனி வார்டையே ஒழிச்சுக் குடுப்பாரு" என்றாள் அடிக் குரலில்.

"மிஸஸ் லோகநாதன் இருக்காங்களா, அவங்க கணவர் எப்படி இருக்காங்க?" இப்படிப் பல தொலைபேசி விசாரிப்புகள் தொல்லை கொடுத்த வண்ணம் இருந்தன. ரிஸப்ஷனிஸ்ட் பெண்ணுக்கு வசுந்தரா விஷயத்தில் ஒரே பயம் ஆரம்பத்தில், "உங்களுக்குப் 'போன்' வந்திருக்கு மேடம்" என்று கூப்பிட்டு அனுப்பி இருந்தாள்.

வசுந்தரா போனைக் கையில் எடுத்ததும் கோபத்தால் முகம் சிவந்து போனாள். வீண் வம்புக்கென்று அலைகிற கும்பலில் யாரோ ஒருத்திக்கு விஷயம் எட்டி விட்டிருக்கிறது!



"உங்கள் கணவருக்கு எப்படி இருக்கிறது மிஸஸ் லோகநாதன்?" நெருப்பை வாரி முகத்தில் வீசி விட்ட உணர்வில் அவள் தவித்துப் போனாள்.

அன்று லோகநாதன் மயங்கி விழுந்ததும் ஒரு
நிமிடம் செயலற்று அதிர்ச்சியில் நின்று விட்டாள்
வசுந்தரா. மறுநிமிடம் அறைக்கதவைத் திறந்து
செயலாளரை அழைத்து வர ஏவினாள். அடுத்த அரை
மணிக்குள் அவளது அந்தரங்கத்தில் காப்பாற்றப்
பட்டிருந்த ரகசியம் அத்தனை பேருக்கும் அம்பலமான
தில் வியப்பில்லையே!

வசுந்தரா கோபம் கொள்வதற்கு அது சமயம் நேரம் இல்லாமல் போய்விட்டிருந்தது. ஆபத்தான நிலையில் வீழ்ந்து, மயக்கமாகி இருக்கும் கணவரை உடனடியாகக் கவனிக்க வேண்டிய நெருக்கடி நிலை. தன்னைப் பற்றி நினைக்கவே நேரமின்றிப் பறந்து கொண்டிருந்தாள். இப்போது...? யாவரும் விசாரிக்கும்போது ஏனோ அவளுக்கு ஆத்திரம் வந்து கொண்டிருந்தது.

இது நாள் வரை, சுய முயற்சியால் முன்னுக்கு வந்து கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த வசுந்தரா என்ற பெண்மணியைப் பற்றி எவருக்குமே அக்கறை இல்லை. ஆனால் திருமதி. லோகநாதன் என்ற பட்டப் பெயர் கொடுத்து தொலைபேசியில் வம்பு விசாரிக்கிறார்களா? எரிச்சல் மண்ட, "அப்போ எதையும் சொல்வதுக்கில்லே"! என்று வைத்து விட்டாள். அதே சமயம் ரிஸப்ஷன் பெண்மீது கடுங்கோபம் வந்தது அவளுக்கு.

"இதபாரு, 'இனிமே யார் என்னைக் கூப்பிட்டாலும், என்னைத் தொந்திரவு செய்யாதே! எவர் பாக்க விரும்பினாலும், அவரைப் பாக்க முடியாதுன்னு நீயே சொல்லி அனுப்பிடு." கடுமையுடன் உத்தரவிட்டாள். சகல அங்கமும் அச்சத்தால் ஒடுங்கிப் போய் அமர்ந்தாள் அந்த ரிஸப்ஷனிஸ்ட் பெண்.

Vennila

கீறல் விழுந்த இசைத்தட்டைப்போல, "பார்க்க முடியாது அபாயக் கட்டம் தாண்டவில்லை" என்று சொல்லி அலுத்துப் போயிருந்தாள் அவள்.

"இனி எவரும் வர மாட்டாங்கப்பா. சாப்பாட்டை முடிச்சிடலாம்" என்று எண்ணியபடி இடத்தைவிட்டு எழுந்தாள் அந்தப் பெண்.

"சாப்பிட வரலே?" பில் எழுதும் பகுதியிலிருந்து வேறு ஒருத்தி அழைப்பு விடுத்தாள். அருகிலிருந்த தன் தோள் பையைத் திறந்து அதிலிருந்த டிபன் டப்பாவை எடுத்துக் கொண்டாள், அவள்.

நர்ஸிங் ஹோமின், சுத்தத்தைக் கருதி, பணி புரிவோருக்குத் தனியாக ஒரு சாப்பிடும் அறை தரப்பட்டிருந்தது. அதற்கு அடுத்த அறையில்தான் வசுந்தரா தங்கி இருந்ததால் சாப்பாட்டு அறைக்குள் உரத்து வம்பு பேசி அலச முடியாமல் அவதிப்பட்டார்கள் அனைவரும்.

டிபன் டப்பாவை, மேசைமீது வைத்துத் திறந்து, ஒரு வாய் அள்ளிப் போட முனைந்தாள் அந்தப் பெண். அதற்குள் அவசரமாக, வாயிற் காப்போன், உள்ளே ஓடிவந்தான்.

"அம்மா! வாசல்ல ஒரு அம்மா, உள்ளாற வரணும்னு தகரார் செய்யறாங்கம்மா. நீங்க யாராச்சும் வந்து சொல்லுங்க!" என்றான்.

"விஸிட்டர் நேரம் இனிமே மாலை நாலு மணிக்குன்னு சொல்லிடறதுதானே?" என்றாள் ஒருத்தி.

"ஏன்? வாசல்ல 'போர்டு' மாட்டி இருக்கே கண் இருக்கில்ல படிக்கச் சொல்லு."

"பிரைவேட் நர்ஸிங் ஹோம்னா, இவங்க இஷ்டத்துக்கு வரலாம்னு எண்ணமா?"



பலவிதமான பொருமல்களையும் மீறி வாயிற் காப்போன் கூறினான். "நான் எல்லாத்தையும் சொல்லி யாச்சம்மா. யாரோ பூபதிங்கறவர் சம்சாரம். அவங்க, இந்த வசுந்தரா அம்மாவைப் பார்க்கணும்னு பிடிவாதமா இருக்காங்க."

ரிஸப்ஷனிஸ்ட் பதற்றத்துடன் எழுந்தாள்.

"அந்தம்மா,யாரையும் உள்ளார விடக் கூடாதுன்னு கடுமையா சொல்லி இருக்காங்கப்பா. பிறகு கண்டபடி கோவிப்பாங்க!" வேகமாகக் கையைக் கழுவித் துடைத்தபடி வெளியே வந்தாள்.

வாயிற்காப்போனைப் பின் தொடர்ந்து இலேசாகத் திறந்திருந்த கண்ணாடிக் கதவின் வழியே வெளியே வந்த ரிஸப்ஷனிஸ்ட் பெண், அந்தப் பெண்மணியைப் பார்த்து மனம் உருகிப் போனாள்.

எளிமையும், அழகும் கலந்த உருவம். அழுது சிவந்த கண்களுடன், நின்று கொண்டிருந்த அந்தப் பெண்மணி, மிக்க ஒய்ச்சலாகக் காணப்பட்டாள்.

"வீணாகத் தொல்லை குடுக்கறதுக்கு மன்னிச்சுக் கோங்கோ. எனக்கு இப்பத்தான் தகவல் கிடைச்சுது. மிஸ்டர் லோகநாதனைப் பார்க்கணும்" பணிவுடன், கவலை தோய்ந்த குரலில் கூறினாள் அவள். உணர்ச்சி வேகத்தால் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

"இப்ப அவரை யாரும் பார்க்கக் கூடாதுன்னு டாக்டர் உத்தரவு. அவங்க சம்சாரம் வசுந்தரா அம்மாவும் அதைத்தான் விரும்பறாங்க" தயங்கினாள் அந்தப் பெண்.

"என் பேர் தாரா பூபதி. தயவு செஞ்சு அந்தம்மாவை யாவது நான் பாத்து ஒரு நிமிஷம் பேச அனுமதி வாங்கிகிட்டு வரமுடியுமா?" அவளது கெஞ்சலான பேச்சுக்களை மறுக்க இயலாமல் உள்ளே சென்றாள், ரிஸப்ஷனிஸ்ட் பெண்.

Vennila

தாராபூபதி என்ற பெயரைக் கேட்டதும் வசுந்தரா புலி போல் வெகுண்டு எழுந்தாள். "உன்னை எத்தனை முறை சொல்றது? எனக்கு மனசு சரி இல்லே. இப்ப யாரையும் பாக்க முடியாதுன்னா முடியாது!" சீறினாள்.

ரிசப்ஷனிஸ்ட் பெண் கிலியுடன் வெளியே ஓடி வந்தாள். "நல்ல வெய்யில்ல வந்திருக்கீங்கம்மா. ரொம்ப ஸாரி! அந்த வசுந்தரா அம்மா, உங்களைப் பார்த்துப் பேச மறுத்திட்டாங்க. நீங்க திரும்பிடறதுதான் நல்லது."

தொண்டைக்குள் துயரம் பந்துபோல் அடைக்க தாரா கடுமையான வெம்மையின் கொடுமை கூடத் தெரியாமல் நின்றாள். 'கிளிக்'கென்ற ஓசையுடன் நர்ஸிங்ஹோமின் கண்ணாடிக் கதவுகள் முழுமையாக மூடிக் கொண்டபோது, அவள் விசும்பலானாள்.

அவளது கணவரை, அவளுடன் அன்பாக வாழ்ந்த உறுதுணையை, பலவந்தமாகப் பிடுங்கி எடுத்து அந்த கண்ணாடிக் கதவிற்கப்பால் வைத்து நிரந்தரமாகப் பூட்டி விட்டார்களே! இனி அவரைப் பார்ப்போமா?

அடிவயிற்றிலிருந்து சுருண்டு எழுந்த வேதனையின் வலியைத் தாளாமல், 'அம்மா' என்று அரற்றினாள் தாரா. கண்களில் இருந்து தாரை, தாரையாக நீர் பெருகியவாறு தள்ளாடி நடக்கலானாள்.

# 41

வாழ்க்கையில் எதிர்பாராமல் நடந்து விடுகிற சந்தர்ப்பங்களை விதி என்று கூறிவிடுகிறோம். அதிலும் துயரமான நிகழ்ச்சி நடைபெறும் பொழுது, விதியின் பேரில் பழியைப் போட்டு சமாளிக்க நினைப்பது மனித இயல்பு. உண்மைதான், யாருமே எதிர்பாராத விதமாக லோகநாத பூபதி, மீளாத் துயிலில் ஆழ்ந்து போனார்.

அன்று காலை அவரது உடலை, தனது பங்களாவிற்கு எடுத்துவந்து ஆடம்பரமாகக் கிடத்தி விட்டிருந்தாள் வசுந்தரா. லோகநாதன் என்ற மனிதன் உயிருடன் நடமாடியபோது கிடைக்காத மரியாதை அவரது உயிரற்ற உடலுக்குக் கிடைத்திருந்தது. மாலைகள், உயர்ரக ஸெண்ட் போட்ட அலங்காரத்துடன் அன்னாரது பூத உடல், அவரது மனைவியின் பங்களாவின் முன்னறையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

அவரது மரணச் செய்தி அறிந்ததுமே குப்புசாமி ஆடிப் போனார். "ஐயோ! பாழும் விதியே என்ன கொடூரமான காரியத்தைச் செய்து விட்டாய்? அந்தப் பெண் தாரா எப்படித் துடித்துப் போவாள்? அந்தக் குடும்பத்தின் தலையில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டாயே!" அவர் அலறித் துடித்தார்.

பூபதியின் உடல் நர்ஸிங்ஹோமிலிருந்து வரப் போகும் செய்தியைத் தாராவிற்குத் தெரிவித்தாக வேணுமே! பதைப்புடன் விரைவாக செயலாற்றினார். அப்போதைக்கு அவருக்குத் தெரிந்த ஒரேவழி, அரு

Vennila

ணிடம் தெரிவிப்பதுதான். ஏனெனில் தாராவின் கபட மற்ற முகத்தைப் பார்த்து இந்தத் துயரமான செய்தியை வெளியிட அவருக்குத் துணிவில்லை.

இருட்டு நேரத்தில், வாயிற்பக்கம் வந்து நின்ற வரைக் கண்டு மருண்டு போனாள் கோதையம்மாள்.

''அருண் தம்பிகிட்ட சொல்லிவிடுங்க. ரொம்ப துக்கமான சேதி'' என்றவர் சற்றுத் தயங்கி, ''பூபதி ஐயா காலமாயிட்டாரு'' என்றார் அழுகை பொங்க.

கோதையம்மாள் அதிர்ந்து போய் நின்றாள். ''என்ன சொல்றீங்க?''

''விளக்கம் சொல்றதுக்கு நேரமில்லே. அவரது மனைவிகிட்ட பக்குவமாகச் சொல்லி கூட்டிவரச் சொல்லுங்க.''

''எங்கே? எதுக்கு?'' கலவரத்துடன் கோதை வினவினாள்.

''அவரோட சடலத்தை பார்வதி எலக்ட்ரிகல்ஸ் முதலாளி அம்மா வீட்டுக்குக் கொண்டு போறாங்க!'' அழுகை அவருக்கு.

''அங்கே ஏன்...'' கோதையம்மாள் முடிக்குமுன், ''பிறகு விவரம் சொல்றேன். தாரா அம்மாவையும், குழந்தையையும் அங்கே அனுப்புங்க!'' அவர் விம்மலுடன் கூறி முடித்து விட்டுத் தெருவில் வேகமாக இறங்கி மறைந்து விட்டார். அடிவயிறெல்லாம் வேதனையால கருட்ட, கோதையம்மாள் அப்படியே உட்கார்ந்து போனாள்.

வசுந்தரா, சம்யுக்தாவைக் கூப்பிட்டு விட்டிருந்தாள் தாயும், மகளும் ஒருவருக்கொருவர் சரிவரப் பேசி நெடு நாட்களாகி விட்ட பிரமை.

''ரத்னா சொல்லியது... கூப்பிட்டிங்களாமே?'' சிறிது சிற்றமாக உள்ளே வந்த மகள், தாயின் முகத்தைப்



பார்த்துத் துணுக்குற்றாள். எதற்கும் கலங்காத கடின மான அம்மாவின் முகம், இன்று வீங்கி சிவந்து போயிருக்கிறதே! எதனால்?

''சம்யுக்தா! உங்கப்பா இன்னைக்கு அதிகாலையில காலமாயிட்டார்'' அவளது குரல் கரகரத்தது துயரினால். சம்யுக்தா இடியால் தாக்குண்டவளைப்போல துடி துடித்தாள்.

''ஐ ஆம் ஸாரி, உங்கப்பாவைக் கூட்டிவந்து உன்னிடம் ஒப்படைக்கணும்னு நினைச்சேன். ஆனா... அவரோட சடலத்தைத்தான் இந்த நேரத்தில் வீட்டுக்குள்ளார கொண்டார முடிஞ்சிட்டுது!'' இன்னும் சிறிது வசுந்தராவின் கடுமையான முகத்திலும் அழுகை பீறிட்டது.

அழுவதால் ஆறுதல் கிடைக்கிறது. கண்ணீரால் துயரைக் கழுவ முடிகிறது என்றான் ஒரு அறிஞன். ஆனால் இங்கே, சம்யுக்தா, 'ஓ'வென்று அலறி அழ, அழ, துயரின் சுமை அதிகமாயிற்று. தாயும், மகளும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்தபடி கதறி அழலானார்கள்.

பிரபலமானவர் வீட்டு விஷயம் என்பதால், செய்தி காட்டுத் தீ போலப் பரவி இருந்தது. குப்புசாமி முன்னறைப் பக்கம் வந்து நின்றவர், மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்ட பூபதியைக் கண்டு, அழ ஆரம்பித்தார்.

''இந்த வீட்டில் சகல வசதிகளோடு வாழ வேணும் என்று ஆசைப்பட்டேன். உங்களை இப்படியா, இந்த வீட்டில வரவேற்கணும்?'' தோள் மேல் போட்டிருந்த துண்டை எடுத்து வாய்க்குள் அடைத்தபடி தமது துயருக்கு அணைபோட முயன்றார்.

''தாத்தா! அப்பா போய்ட்டாரு தாத்தா! இனிமே எங்கிட்ட பேச மாட்டாராம்!'' சம்யுக்தா அவரது கரங்களைப் பிடித்தபடி உரக்க அழுதாள்.

இ—25

Vennila

"பாப்பா! உங்கப்பா உயிரோட இந்த வீட்டுக்குள்ளர காலடி எடுத்து வைக்க விரும்பலே. அதனால தான் இப்படி உயிரற்றுப்போன உடம்பைக்கொண்டு வந்து போட்டிருக்கு" குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்தவர் ஒரு நிமிடம் சட்டென நின்றார்.

கார்களும், இதர வாகனங்களுமாக, வசுந்தராவின் மாளிகைக்குள் வந்து கொண்டிருந்தன. துக்கம் விசாரிக்கும் பெரிய மனிதக் கும்பலிடையே ஆ...தா...கையில் கார்த்திக்கைப் பிடித்தபடி...தாராவேதான்... துயரமே உருவாய் கைப்பொருளை யாரிடமோ பறிகொடுத்து விட்டுத் தவிக்கும் நிலையில், பயந்தபடி உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

குப்புசாமியின் மனதில் திடீரென ஒரு துணிவு. சட்டென வசுந்தராவின் அருகில் சென்று, "அம்மா! தாரா அம்மா, குழந்தையோட வந்திட்டிருக்காங்க... உள்ளர கூப்பிடுங்க" என்றார் துக்கம் தாளாதவராய்.

'தாரா' என்ற பெயரைக் கேட்டதும், ஆத்திரத்துடன், "அவளை உள்ளே வரவிடாதீங்க... நேரா என் அறைக்குக் கூட்டிக்கிட்டுப் போங்க" என்றாள் வசுந்தரா.

மின்னலைப் போல, யாரும் அறியாமல் குப்புசாமி தாராவையும், கார்த்திக்கையும், வசுந்தராவின் அறைக்குப் பின்புறவாயில் வழியாக அழைத்து வந்தார்.

குப்புசாமியைக் கண்டதும் தாரா 'ஓ' வென்று அழத் துவங்கினாள். "இதெல்லாம் என்னங்க? எதுக்காக இந்தம்மா வீட்ல என் கணவரைக் கொண்டு வந்து போட்டிருக்காங்க?" விம்மலினூடே அவள் கேட்டதற்கு அவரால் பதில் கூற இயலவில்லை.

"எங்கப்பாவைப் பார்க்கணும், அவர் பேசவே மாட்டாரா தாத்தா? எனக்கு சோறு ஊட்டி, பாடம் சொல்லிக் குடுத்து எதுவுமே செய்யமாட்டாரா?" கார்த்திக் அழுதபடி கேட்ட போது குப்புசாமியின் கண்களில் நீர் பெருகிற்று.



புயலைப் போல அறைக்குள் வந்து நின்றாள் வசுந்தரா. குப்புசாமியை விழித்துப் பார்த்ததும் அவர் சகல நாடிகளும் ஒடுங்கியவராய், வெளிப்பக்கம் சென்று நின்றுகொண்டார்.

"நீதான் தாராவா? எதுக்காக இங்கே வந்தே?" வசுந்தரா சீறினாள்.

"கணவர் இறந்துட்டார்னா, எந்த மனைவியும் என்ன செய்வாளோ அதைத்தான் நான் செய்தேன்?" சிறிது துணிவாகப் பதிலிறுத்தாள் தாரா.

"கணவர்?" ஏளனத்துடன் அவளைப் பார்த்தபடி கேட்டாள் வசுந்தரா. "அவர் உனக்கு ஊரறியத் தாலி கட்டினாரா? முறைப்படி, சட்டப்படி நீதான் உரிமை மனைவி என்பதற்கு என்ன சாட்சி?"

தாரா கோபமாகப் பதிலிறுத்தாள். "சம்பிரதாயப்படிதான் எனக்குத் தாலி கட்டினார்."

"ஹும்! சட்டப்படி முதல் மனைவி நான் இருக்க, உன்னை எப்படி அவர் மனைவியாக்க முடியும்? நீ வெறும் ஆசைநாயகி, ரொம்ப பச்சையாகக் கூறப்போனா, 'வைப்பு'! எந்த உரிமையில் இங்க சொந்தம் கொண்டாடிக் கொண்டு, பிள்ளையை இழுத்துக்கிட்டு ஓடி வந்திருக்கே? வெக்கமாயில்லே?"

கூரிய அம்புகளால் தாக்குண்டதைப்போல பதைத்துப் போனவளாய் நின்றாள் தாரா. மனதினுள் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் பொங்கி எழுந்தன. அவளுடன் அவள் கணவர் நல்லபடியாகத்தான் வாழ்க்கை நடத்தினார். ஆசை நாயகி என்ற அவகேடான முறையில் அவளை அவமானப்படுத்தியதில்லை. சரிசமமாக, மரியாதையாய் நடத்தி, மதிப்புடன் வாழ்ந்தார். ஒரு உத்தமமான கணவரை, தனக்குத் தாலி கட்டி சட்டப்படி மனைவி என்ற நிலையில் இருப்பவள் ஏசிக் காட்டியதை அவளால் பொறுக்க முடியவில்லை.

Vennila

"நிறுத்துங்க! வெட்கம் எனக்கு இல்லே உங்களுக்குத்தான். ஏன்னா, தாலி கட்டிய புருஷனை என்ன காரணத்தாலோ பிரிஞ்சு வாழ்ந்திருக்கீங்க. இப்ப என் கூட அவர் வாழ்ந்ததுக்கு சட்டம் பேசறீங்க. இத்தனை நாள் நீங்க வாழாம இருந்தபோது அந்த சட்டம் என்ன செய்தது?"

"நீ ரொம்பப் பேசறே? மரியாதையா இந்த இடத்தை விட்டு வெளியே போய்டு இல்லே" ஆவேசமாகக் கூறினாள் வசுந்தரா.

"அவர் முகத்தைக் கடைசியா ஒரு முறை பாத்திட்டுப் போயிடறேன். எனக்காக இல்லாட்டியும் அவரது மகனுக்காக அனுமதியுங்க!" அவளது குரலில் தடுமாற்றம்.

வசுந்தரா கல்லைப் போல் நின்றிருந்தாள். "கொள்ளி போடப் பிள்ளையை அழைச்சிட்டு வந்திருக்கியா? ஹூம்! என் கணவரது சடலத்துக்கு என் மகனே அந்த வேலையைச் செய்வான். பிள்ளைதான் கொள்ளி வச்சு எரியணும்கிறது என்ன சாத்திரம்? பெத்த பெண்ணும் செய்யலாம்னு நிரூபிச்சுக் காட்டப் போறேன். நீ போகலாம்" என்றாள் ஆணவமான குரலில்.

"அம்மா! அப்பாவைக் காட்டறேன்னீங்களே? இந்த ஆன்ட்டி ஏன் கோவிக்கிறாங்க?" குழந்தை கார்த்திக் அடம்பிடித்து அழத் துவங்கினான்.

தாரா கண்களைத் துடைத்துக் கொண்டாள். "அப்பாவை வீட்ல பூஜை ரூம்ல பாக்கலாம், வாடா கண்ணு!" என்றபடி மகனைத் தேற்றினாள்.

"இப்படியே பின்பக்கமாகவே வெளியே போகலாம்" ஏகத்தாளமாகக் கூறிவிட்டு வெளியே செல்லத் திரும்பினாள் வசுந்தரா.

"சின்ன வயசுல ஒரு மனைவி எஜமானியாத்தான் இருக்க முடியும்னு நிரூபிச்சுட்டீங்க. நான் வயசான



வரைக் கட்டிக்கிட்டேன். ஆனா, அவரோட நல்ல வாழ்க்கைத் துணைவியா வாழ்ந்திட்டேன். அதனாலே அந்த ஆத்ம திருப்தியோட திரும்பிப் போறேன். நீங்க வெறும் சடலத்தைக் கட்டிக்கிட்டு அழுங்க" பீறிட்டு வரும் துயரை அடக்கியபடி, மகனுடன் வெளியேறினாள் தாரா. வெளியே வந்த வசுந்தரா, அங்கு நின்றிருந்த குப்புசாமியிடம் வெடித்தாள்.

"பூனை போல இருந்து கொண்டு, இத்தனையும் உம்மோட வேலையா? இருங்க, உங்களைப் பிறகு கவனிக்கிறேன்!" உறுமியபடி சென்றாள்.

அடுத்து சில மணி நேரத்திற்குள் லோகநாத பூபதியின் சரித்திரம் முடிவுற்றது. வசுந்தராவின் பணமும், பதவியும், சாதிக்காதது உண்டா? சம்யுக்தாவைக் கொண்டு, சிதைக்கு எரியூட்டச் செய்தாள் அவள். சுற்றி நின்றவர்கள் வாயடைத்துப் போய் நின்றனர்.

"அப்பா! நீங்க வருவீங்க. உங்க கூட மகிழ்ச்சியா, பழைய சம்பவங்களை நினைவுகூர்ந்து பேசி ஆனந்தப் படலாம்னு நினைச்சேனே. உங்க மார்மேலேயும், தோள் மேலேயும் என்னை எத்தனை முறை தூக்கி சுமந்தீங் கன்னு கேக்க ஆசைப்பட்டேன்! இப்ப அதே மார்மேல என்னால நெருப்பைத்தான் வைக்க முடிஞ்சுது. அப்பா! அப்பா! என்னை, மன்னிச்சுடுங்கப்பா. நான் குடுத்து வைக்காத பாவி!"

—தகப்பனின் நெஞ்சில் தீயைக் கொட்டியபடி கதறினாள் சம்யுக்தா.

Vennila

அன்று காலையும், வாயிற்புரம் யாரோ வரும் ஒலியைக் கேட்டுத்தான் சிறிது சினத்துடன் கதவைத் திறந்தாள்.

"மன்னிக்கணும்! ரங்கம்மாள் என்கிறது நீங்கதானே?" உயரமான ஒரு மனிதர் அவளை வினவினார்.

வியப்பினால் ஒரு விநாடி பிரமித்தவள் சமாளித்தபடி, "நாந்தான். நீங்க யாரு? எதுக்காக என்னைத் தேடிக்கிட்டு..." என்று கேள்விகளை சந்தேகத்துடன் தொடுத்தாள்.

"நான் 'பார்வதி எலக்ட்ரிகல்ஸ்' முதலாளியம்மாவோட குடும்ப வக்கீல். என் பேர் கோதண்டம்..."

ரங்கம்மாளின் புருவங்கள் கேள்விக்குறியாக நெருங்கின.

"நான் உள்ளே வந்து உட்கார்ந்து பேசலாமா?" கேட்டபடி அவராகவே உள்பக்கம் வந்தார். ரங்கம்மாள் கலவரத்துடன் அங்கிருந்த நாற்காலியைக் காட்டினாள்.

"எதுக்காக என்னைத் தேடி வரணும்! பின்னால் அவுட்ஹவுஸிலதான் அந்தம்மாளோட..." ரங்கம்மாள் முடிக்குமுன் "சகல புள்ளி விவரங்களோடத்தான் இங்கே வந்திருக்கேன்" என்றார் சுருக்கமாக.

"என்னைத் தேடிக்கிட்டு...?"

"நீங்களும் கொஞ்சம் பொறுமையா விவரமா கேக்கணும். லோகநாத பூபதி திடீர்னு காலமாயிட்டார்னு நான் சென்னைக்கு வந்தேன். மேற்கொண்டு சில சிக்கல்களைத் தீர்த்துட்டு திரும்பி திருச்சிக்கு புறப்படணும்னு வசுந்தரா அம்மா உத்தரவு. அதனால—" தயங்கியபடி நிறுத்தினார், கோதண்டம்.

"சொல்லுங்க." புரியாதவளாய் ரங்கம்மாள் எதிரே இருந்த பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டாள்.

வக்கீல், வீட்டை ஒருமுறை கண்களால் அளந்தார். வண்ணம் பூசப்படாத சுவர்களில் காரைகள்



தெரிந்து கொண்டிருந்தன. மேற்பக்கத்து தளத்தில் மூலையில் விரிசல்கள். ஜன்னல் கம்பிகளில் இலேசான துரு ஏறியிருந்தது. ஒரு பக்கத்து ஜன்னல் கதவுகள் விழுந்து விடுவோம் என்பதைப் போல ஆடிக் கொண்டிருந்தன.

"உங்க சொந்த வீடாம்மா?"

"பாத்தா தெரியலே" சிறிது கோபத்துடன் கேட்டாள் ரங்கம்மாள்.

"அதுக்காக கேக்கலே. உங்க ரெண்டு மகன்களும் இதில உரிமை கொண்டாட வருவாங்களான்னு கேட்டேன்" பீடிகையுடன் ஆரம்பித்தார் கோதண்டம்.

ரங்கம்மாளுக்கு கடுமையான கோபம் வந்தது. என்ன இந்த மனிதர், வீட்டுக்குள்ளே நுழைந்து விட்டு அதை வாங்கப் போகிற மதிரி கேள்விமேல் கேள்வியாகக் கேட்கிறாரே?

"வீட்ல ஏகப்பட்ட ரிப்பேர் வேலை இருக்கும் போல இருக்கு? கையை வச்சா எக்கச்சக்கமா செலவு இழுக்குமே! பாவம்! உங்களைப் பார்க்க ரொம்ப முடியாம இருக்கீங்க! உங்க பிள்ளைகளை உதவிக்கு வைத்துக்கொள்ளக்கூடாது? வீட்டுப் பொறுப்பையும் அவங்களே கவனிப்பாங்களே!" என்றார் பக்குவமாக.

"என் உயிர் போறவரை இந்த வீட்டை விக்கறதா இல்லே!" ரங்கம்மாள் முகத்திலடித்தாற்போல் பதிலிறுத்தாள்.

கோதண்டம் புன்னகை மாறாதவராய், "எதுக்காக உயிர் போகணும்? நல்லபடியே, இதே வீட்டை வித்துப் பணமாக்கி வங்கியில் வட்டிக்குப் போடுங்க. உங்களுக்கும் இருக்க இடம், பணவசதி எல்லாமே கிடைக்குமே!" என்றார் இதமான குரலில்.

Vennila

''என்னது? வீட்டை விக்கறதா?''

''அ! அவசரப் படாதீங்க! வசுந்தரா அம்மா நீங்க எத்தனை லட்சம் கேட்டாலும் குடுத்து இதை வாங்கத் தயாராக இருக்காங்க!''

''என் வீட்டையா? எதுக்கு'' கிழவி சிறிது ஆத்திரத்துடன் கேட்டாள்.

''அவங்க வீட்டுக்காரர் வாழ்ந்த இடம் இல்லையா? அந்த நினைப்புக்காக'' இனிமையுடன் கூறி விட்டுத் தொடர்ந்தார் வக்கீல்.

''உங்களுக்கு வசதியான ஃபிளாட் ஒண்ணை நாங்களே வாங்கிக் குடுத்து, ஏற்பாடு செய்திடறோம். இந்த வீட்டை மட்டும் நீங்க வித்துட்டா அந்தப் பணத்தின் வட்டிக்கும் வகை செய்யறோம். என்ன சொல்றீங்க? நல்லா யோசிச்சு முடிவு எடுங்க!'' என்றார் கோதண்டம்.

ரங்கம்மாளின் தன்னாமை ஒரு விநாடி சிந்திக்க வைத்தது. 'ரங்கம்மா! வலிய வருகிற சீதேவியை உதறாதே. இடிந்து போய்க் கொண்டிருக்கிற இந்த வீட்டை வித்துத் தலை முழுகு. ரிப்பேர், தண்ணி வரலே, வரிப்பணம் கட்டலேன்னு பலான தொல்லைகளுக்கு ஆளாகாதே!' மனசாட்சி இடித்தது.

ரங்கம்மாளின் மவுனத்தை சாதகமாக்கிக் கொண்டவராய், ''உங்க பிள்ளைங்க விலாசத்தைக் குடுங்க. நான் தொலைபேசியில் அவங்ககிட்ட பேசி சரி செய்திடறேன்'' என்றார் திடமான குரலில்.

''எனக்கு கொஞ்சம் யோசிக்க அவகாசம் தேவை.''

''நல்லா யோசிங்க. ஆனா, வேற சிக்கல்கள் இல்லாமல், இந்த வீட்டை வித்துக்கொடுக்கறது என்னுடைய பொறுப்பு. நீங்க கேக்கற தொகையை



வசுந்தரா அம்மா உடனே குடுத்திடுவாங்க. செக்கா
வேணுமானாலும் சரி, பணமா வேணுமானாலும் சரி.''
மாம்பலம் ரங்கநாதன் தெருவில் பல ஆண்டுகளுக்கு
முன் ஒரு சில ஆயிரம் ரூபாய்களில் கட்டப்பெற்ற
பழைய கட்டிடத்திற்குப் பல லட்ச ரூபாய்களா மதிப்பு!
''கவலைப் படாதீங்க? உங்களுக்கு நர்ஸிங்ஹோம்,
மார்க்கெட், கடைன்னு பக்கத்தில இருக்கிற இடமா
பாத்து ஒரு சின்ன ஃப்ளாட் வாங்கி குடியேத்திடறோம்.
அது எங்க பொறுப்பு''.

வக்கீல் சாமர்த்தியமாகப் பேசப் பேச ரங்கம்மாள், புதிய இன்பமான எதிர்காலக் கற்பனையில் மூழ்கிப் போனாள்.

''யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க'' என்று பிள்ளைகளை நறுக்கென்று நாலுவார்த்தை கேட்கலாம். வங்கியில் பணத்தைப் போட்டு அதன் மூலம் வரும் வட்டியில் பணமுடையின்றி வாழலாம். இத்தனை பெரிய வீட்டைக் கட்டிக் கொண்டு, தோட்டம், செடி என்று உயிரை விடாமல் வாழலாம்.''

''என்னம்மா பதிலே பேசலே?'' கோதண்டம் கேட்டதும், திடுக்கிட்டவளாய் அவரை நோக்கினாள், கிழவி.

''திடும்னு கேட்டா எப்படிங்க? மகன்களைக் கேக்கணும். வெளியில விலைவாசிபத்தி விசாரிக்கணும்''

''நான்தான் சொல்லிட்டேனே. உங்க பிள்ளைகளை சரி செய்து, எல்லா பிரச்சினைகளையும் தீத்துடறோம். நீங்க சம்மதம்னு சொல்லுங்க. பத்து நாளைக்குள்ள எல்லாம் முடிச்சு, ரிஜிஸ்தர் செய்துடலாம்'' வக்கீல் பலமாக ஓதினார்.

ரங்கம்மாள், பல லட்சங்களுக்காக, தன் லட்சியங்களைத் தூக்கி எறிந்து விட்டு எழுந்தாள். பணம் வரப்

Vennila

போகும் பலத்தில் மிக்க வேகமாக மகன்களின் விலாசங்களைக் கொண்டு வந்தாள்.

வெற்றிப் புன்னகையுடன் கோதண்டம் எழுந்தார். ''நீங்க ரொம்பப் பெரியவங்க. இல்லாட்டி இத்தனை சடுதியில் என்னோட கோரிக்கையை ஒப்புக்கொள்ளுவீங்களா?'' என்றார் புகழ்ச்சியாக.

''கொஞ்சம் காப்பி கொண்டு வர்ரேன்'' ரங்கம்மாள் குதூகலமாக எழுந்தாள்.

''வேணாம்மா. நான் போய் மேற்கொண்டு செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்குது. சட்டப்படி இந்த வீட்டு விவகாரத்தை விரைவாக முடிச்சாகணும்னு வசுந்தரா அம்மா உத்திரவு'' என்றபடி வாயிற் பக்கம் திரும்பினார்.

'சொல்ல மறந்திட்டேனே' எதையோ விட்டவரைப் போல மீண்டும் உள்ளே வந்தார் கோதண்டம். ரங்கம்மாள் வியப்புடன் அவரைப் பார்த்தாள்.

''உங்க அவுட் ஹவுஸ்ல குடி வச்சிருக்கிறவங்களை உடனடியாக காலி செய்யச் சொல்லணும். ஏன்னா வீட்டை வாங்கறவங்களுக்கு வில்லங்கம் ஏதும் இருக்கக் கூடாது பாருங்க'' என்றார் இனிமையாக.

''அதுக்கென்ன இப்பவே சொல்லிடறேன்'' அவரை வழியனுப்பிய கையோடு அவுட்ஹவுசினுள் நுழைந்தாள் ரங்கம்மாள்.

சோகமே உருவாக முன்புற வாயிலில் நின்றிருந்த தாரா, ரங்கம்மாவைக் கண்டதும் பயத்துடன் எழுந்து பார்த்தாள்.

''வாங்கம்மா.''

வழக்கம்போல் ரங்கம்மாள் அவளைப் பார்த்து இணக்கமான முகம் காட்டவில்லை.



''உங்கிட்ட நேரடியா சொல்லிட்டு போகணும்னு வந்தேன். என் பிள்ளைங்க இந்த வீட்டை விக்கணும்னு கடுதாசி போட்டிருக்காங்க. அதனால நீ வேற எடம் பார்த்துக் கொள்றது நல்லதும்மா தாரா'' என்றாள் கடுமையுடன்.

காலடியில் இருந்த பூமியே நழுவுவது போன்ற பிரமையில் தவித்துப் போனாள் தாரா. பதைப்புடன் ''காலி பண்ணனுமா, இப்பவா? ஐயோ அது எப்படிம்மா முடியும்?'' என்றாள்.

''அது எனக்குத் தெரியாதும்மா. நீ நல்ல வாக்குக்கு கட்டுப்பட்டவளானா பத்து நாளைக்குள்ளர இந்த இடத்தை காலி பண்ணிடணும். அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்?''

—கண்டிப்பாகக் கூறிவிட்டு ரங்கம்மாள் தன் வீட்டை நோக்கி நடக்கலுற்றாள்.

கணவனது உடலின் மீது விழுந்து அழக் கூட உரிமையற்றுப் போனவளாய், உள்ளூர மருகிக் கொண்டிருக்கும் தாரா மேலும் கண்ணீர் சிந்தலானாள்.

இதென்ன சோதனை? நிற்க நிழலின்றி அவள் எங்கே செல்வாள்?

Vennila

## 43

இதுநாள்வரை குப்புசாமி தம் கடமையைச் சரிவரச் செய்வது கடவுள் வழிபாட்டிற்குச் சமம் என்றே கருதி வந்தார்.

ஆனால், அவ்வாறு செயலாற்றும்போது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைப் பற்றி அவர் அறியவில்லை. நல்லது செய்கிறோம் என்று எண்ணித்தான், லோகநாத பூபதி வீட்டு விஷயங்களில் தலையிட்டு விட்டிருந்தார். இப்போது கிணறு வெட்ட பூதம் கிளம்பின கதையாகி விட்டதே!

அன்று காலையிலிருந்தே ஒரு நிலையில் இல்லாமல் மனம் சஞ்சலத்திற்குள்ளானார் குப்புசாமி. ஏனெனில் எஜமானி அம்மாளின் கோபம் அவர்மீது வீசத் துவங்கி இருந்தது.

லோகநாத பூபதியின் சரித்திரம் முடிந்து மோட்ச விளக்கும் போட்ட பிறகு ஒரு நாள் வசுந்தரா குப்புசாமியைக் கூப்பிட்டனுப்பினாள்.

முன்னறை சோபாவில் சொகுசாக சாய்ந்திருந்த வசுந்தராவின் முன், பணிவும் பயமுமாக ஓடி வந்து நின்றார் அவர்.

"உங்களுக்கு இந்த வீட்ல சமையல் அறையில் மட்டும்தானே வேலை?"

எஜமானியம்மாளின் சூடான வார்த்தைகளால் ஒரு கணம் தடுமாறிப் போனார் குப்புசாமி.



"கேட்கிறேனே? பதில்...?" வசுந்தரா அவரை உறுத்துப் பார்த்தாள்.

"ஆமாம்" சிறிது அச்சத்துடன் பதிலிறுத்தார்.

"சமையல் கட்டை விட்டுட்டு, வீட்டு விவகாரத்துல அதிகமாகத் தலையிட்டுக் குழப்பி இருக்கீங்க?"

"மன்னிக்கணும், நான் அப்படி ஏதும்..." அவர் மறுக்கு முன் வசுந்தரா சீறினாள்.

"இவ்வளவு பெரிய வயது? அனுபவம் எல்லாத்தையும் மறந்துட்டுப் போய் பேசுறீங்க, உங்களுக்கே இது கேவலமா இல்லே?"

குப்புசாமி விழித்தார். எஜமானி அம்மாள் எதற்காகக் கோபிக்கிறாள்?

"இங்க நடக்கிறதையெல்லாம், மஞ்சுநாதன் தெருவில போய் முடிஞ்சு குடுத்திட்டு வந்திருக்கீங்க. தின்கறது இந்த வீட்டு சோறு, செய்றதெல்லாம் எனக்குத் துரோகம்!" வசுந்தராவின் குரல் உயர்ந்து கொண்டே போயிற்று.

துரோகமா? அவரா? அந்த வீட்டு உப்பைத் தின்று வளர்ந்த உடம்பு. லோகநாதபூபதியின் குடும்பத்தின்பால், மட்டற்ற பாசம் வைத்தவர். அதற்காகத்தானே அத்தனை பாடுபட்டார்? அந்தக் குடும்பம் ஒன்று சேர வேண்டும் என்று ஆசைப்பட்டவராயிற்றே!

"வாயைத் திறக்க மாட்டீங்களே, நடந்ததெல்லாம் போகட்டும். உங்களை எச்சரிக்கை செய்யத்தான் கூப்பிட்டு அனுப்பினேன். உங்களோட தூது நடக்கற வேலையெல்லாம் இத்தோட நிறுத்திக் கொள்ளுங்கள்!" அடிக்குரலில் உறுமிவிட்டு, எழுந்து கொண்டாள்.

குப்புசாமிக்குத் துயரம் தொண்டையைக் கவ்விக் கொண்டது. அதன் பிறகு எவரிடமும் பேசப் பிடிக்காத

Vennila

வராய் வீட்டினுள் வளைய வந்தார். ஆனாலும் மனதினுள் தாரா என்ன செய்கிறாளோ? குழந்தை கார்த்திக் அப்பாவை எண்ணி ஏங்கிப் போயிருப்பானோ? பலவாறு மனம் கலங்கிப் போனார்.

சம்யுக்தாவிடம் கூட அவரால் மனம் விட்டுப் பேச இயலவில்லை. அப்பாவைப் பார்க்க வேண்டும், அவருடன் பேச வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த அவள், 'திடும்' என எதிர்பாராத நிலையில், தந்தையின் உயிரற்ற சடலத்தைக் காண நேர்ந்த துயரில் ஊமையாகிவிட்டிருந்தாள்.

இது சமயம் அவளிடம் எதுவும் பேச இயலாது. தந்தையின் இரண்டாவது மனைவி, மகள் ஆகியவற்றைப் பற்றி எத்தனை எடுத்துக் கூறினாலும், அவளது துன்பம் தோய்ந்த மனதினுள் பதியாது என்பதை அவரும் புரிந்து கொண்டிருந்தார்.

லோகநாத பூபதியின் மரணத்திற்குப் பிறகு வீட்டினுள், பின்னும் ஒரு பயங்கர அமைதி நிலவியது. ஒருவர்க்கொருவர் பேசக்கூட அஞ்சியவர்களைப் போல வீட்டு வேலையாட்கள் நடமாடினர். ரத்னாவின் கடுமையான காவலும், பார்வையும்கூட சற்றுக் குறைந்து இருந்தன. இருப்பினும் குப்புசாமி மிக்க மனச்சுமையுடன் இருந்ததால் எதையும் கவனிக்காமல் அசட்டையாக இருக்கலானார்.

வசுந்தரா மீண்டும் அலுவலக வேலைகளைக் கவனிக்கத் துவங்கி இருந்தாள். அன்று காலை, அவள் வழக்கம்போல் அலுவலகத்திற்குப் புறப்பட்டு விட்டிருந்த சமயம், முன்புற வாயிலில் கார் வந்து நின்றது.

காரின் கதவைத் திறந்து கொண்டு இறங்கிய வக்கீல் கோதண்டத்தை, அது சமயம் தற்செயலாக வெளியே எட்டிப் பார்த்த குப்புசாமி, பார்த்து விட்டார்.



'எதுக்காக திருச்சியில் இருந்து வக்கீல் ஐயா புறப்பட்டு வரணும்? அதுதான், எஜமானர் இறந்தபோது துக்கம் விசாரிக்க வந்திட்டுப் போனாரே?''

—சந்தேகத்துடன் காதுகளைக் கூர்மையாக்கினார். கண்களை மட்டும், கவனியாதவரைப் போல வேறு எங்கோ படர விட்டார்.

முன்னறை சோபாவில் அமர்ந்தபடி வசுந்தரா அவரிடம் பேசியதை அவரால் கேட்க முடியாவிட்டாலும் ஓரளவு ஊகிக்க முடிந்தது. காப்பி, பலகாரம் கொண்டு வைக்கும் சாக்கில், இலேசாக விஷயத்தைப் புரிந்து கொள்ள முயன்றவர் திடுக்கிட்டுப் போனார்.

''மஞ்சுநாதன் தெருவிலுள்ள வீடு ரங்கம்மாள் என்கிற கிழவியோடது. அதை வாங்கிடறது ரொம்ப எளிது. பிள்ளைங்களுக்குக் கொஞ்சம் பணத்தை வர்சா, எல்லாம் முடிஞ்சிடும்!'' வக்கீல் அடித்துக் கூறினார்.

''முக்கியமா, அவுட்ஹவுசும் காலியாகணும்!'' வசுந்தரா பற்களைக் கடித்தாள்.

காப்பித் தட்டைக் கையில் எடுக்கப்போன குப்புசாமியின் உடல் முழுதும் ஒரு விநாடி பயத்தால் வியர்த்தது. நெஞ்சும் மார்பும் படபடக்க, ''என்ன அநியாயம். வீட்டைவிட்டு தாராவைத் துரத்தற அளவுக்கு இந்தம்மாவுக்குக் கல்நெஞ்சா?'' மெய்விதிர்த்துப் போனார்.

'தாரா என்ன செய்வாங்க? ஐயோ! கணவனை இழந்து பரிதவிக்கிற நிலையில, இப்படியும் நேரணுமா?' கொதித்துப் போனார். கூடவே ஒரு தீர்மானம் உருவாகியது அவர் நெஞ்சில்.

ரங்கம்மாள் வீட்டை விற்க ஒப்புக் கொண்டதும், மேற்கொண்டு பரபரப்பாக வக்கீல் செயலாற்றியதை



Vennila

யும் குப்புசாமி கண்காணித்து வந்தார். "இனி தாமதிப்
பது நல்லதல்ல'' என்றது அவரது உள் உணர்வு.

அருணிடம் கூறி தாராவிற்கு ஒரு ஏற்பாடு செய்யச்
சொல்லலாம். ஆனால் எப்படி? வீட்டைவிட்டு வெளியே
செல்லக் கூட வசுந்தரா அம்மாளிடம் அனுமதி பெற
வேண்டி இருந்தது.

மாம்பலம் மஞ்சுநாதன் தெருவிற்குப் போய் தாரா
விடம் பேசலாம் என்றால்...அந்தக் கிழவி ரங்கம்மாளே
மூட்டிக் கொடுத்தாலும் கொடுப்பாள்.

அருண் வீட்டிற்கே போகலாம் என்றால், நந்தி
போல குறுக்கே நிற்பார்கள் குமாரும், நீலகண்டனும்,
என்ன செய்யலாம்?

சட்டென ஒரு யோசனை. பிற்பகல் நேரம்
சம்யுக்தா தன் அறையில் இருப்பாள். ரத்னா அவளுக்குக்
காவல் பூதமாக அங்கே சுற்றிக் கொண்டிருப்பாள்.
தொலைபேசியில் அருணுடன் தொடர்பு கொண்டால்...

மனதில் ஒருவித குற்ற உணர்வு. திக், திக்கென்று
மார்பு அடித்துக் கொள்ள, முன்னறையில் உள்ள
தொலைபேசியருகில் வந்தார். சுற்றுமுற்றும் ஒருமுறை
பார்த்து விட்டு அங்கிருந்த தொலைபேசிக் குறிப்புப்
புத்தகத்தை எடுத்தார்.

அவருக்கு ஆங்கிலம் தெரியாது. எனினும், எஜமானி
அம்மாளின் அலுவலக எண்கள், அந்தப் புத்தகத்தின்
முன் பக்கத்தில் வரிசையாக எழுதப்பட்டிருப்பதை
அறிந்து வைத்திருந்தார். தட்டுத்தடுமாறி நுங்கம்
பாக்கம் அலுவலக எண்ணைக் கண்டுபிடித்து, மெள்ள
தொலைபேசி எண்களைச் சுழற்றினார். அவரது
மூச்சே, அவருக்கு சிரமமாக இருந்தது. பயத்தால் நாக்கு
குளறியது.

மறுமுனையிலிருந்து அருணின் குரலைக் கேட்டதும்
சிறிது தெம்பு. "அருண் தம்பியா? நாந்தான் குப்புசாமி



பேசறேன். ரொம்ப அவசரம். ஒரு உதவிதேவை''
என்றார் படபடப்புடன்.

"சொல்லுங்க நிச்சயம் செய்து முடிக்கிறேன்''
அருணின் திடமான பேச்சில், குப்புசாமி விவரமாகக்
கூறினார்.

"தம்பி! உங்க வீட்ல இல்லாவிட்டாலும் வேற எங்க
யாச்சும் அவங்களை உடனடியாக குடி வைக்க ஏற்பாடு
செய்யுங்க. இல்லாட்டி அந்தக் குடும்பம் தவிச்சுப்
போகும்'' தழதழத்தக் குரலில் கூறினார்.

"கவலைப்படாதீங்க நான் இன்னைக்கு சாயங்
காலமே போய், தாராவையும், கார்த்திக்கையும் பார்த்துக்
கூட்டிவரேன்.''

"நீங்க நல்லா இருக்கணும். நான் பிறகு நேரில்
பேசறேன்'' தொலைபேசியை வைத்துவிட்டு, திரும்பி
யவர் பேயறைந்தது போல் நின்றார்.

இடுப்பில் கை வைத்தபடி ரத்னாவும், அவள்
அருகில் வசுந்தராவும் நின்று கொண்டிருந்தார்கள்.
எஜமானியம்மாள் எப்போது வந்தார்கள்? ஐயையோ!
ஒரு நாளுமில்லாத திருநாளாக, அவர் தொலைபேசியை
உபயோகிக்கப் போக விபரீதமல்லவா நிகழப்
போகிறது?'' மேனியெங்கும் வியர்வை பொடிப் பொடி
யாகப் பூத்து நிற்கக் கூனிக் குறுகிப்போய் நின்றார்
குப்புசாமி.

எத்தனை நாளா இந்த வேலை நடக்குது?''
வசுந்தரா ஆத்திரமாகக் கேட்டாள்.

குப்புசாமி பதில் பேசாதவராய், மேல் துண்டால்
கழுத்தைத் துடைத்தபடி நின்றார்.

"குப்புசாமி!'' இனி அரை நிமிஷம் கூட இந்த
வீட்ல உங்களுக்கு வேலை இல்லே. என் வீட்ல இருந்து
கொண்டு எனக்கு எதிராவே சதி செய்யறீங்க. இதை

Vennila

என்னால பொறுக்க முடியாது. ம்! மூட்டையைத் தூக்கிட்டு என் கண் முன்னால நிக்காம போயிடுங்க'' கூச்சலிட்டாள் வசந்தரா.

ஆபத்து நேரும் சமயம், கேவலம் ஒரு புழுவுக்குக் கூடத் துணிவு பிறக்குமாம். குப்புசாமிக்கும் ஒரு வித துணிச்சல் வந்தது. எப்படியும் எஜமானி அம்மாள் அவரை வீட்டை விட்டுத் துரத்துவாள். பின் ஏன் மனதிற்குள் அத்தனை எண்ணங்களையும் அடக்கிப் போட்டுப் பூட்டி வைக்க வேணும்?

குப்புசாமி தலையைத் தூக்கி அலட்சியமாகப் பார்த்தார்.

"நானும் இந்த வீட்லவேலை செய்யறதா இல்லை."

"என்ன சொன்னீங்க? நன்றிகெட்டத்தனமா பேசறீங்க."

"நன்றி நிறைய இருக்கறதாலதானம்மா இத்தனை காலமா ஒட்டிக்கிட்டிருந்தேன். நன்றி வேறே மனிதத் தன்மை வேறே. மனிதத்தன்மையே இல்லாத வீட்டில நன்றி மட்டும் எப்படி நடமாட முடியும். உங்க மனசில இருக்கற கோபத்தை அந்த அபலைப் பொண்ணு தாரா மேலே காட்டினா, அதைப் பார்த்துக்கிட்டு நிக்கற நன்றி எனக்கு இல்லைம்மா. நான் சாதாரண மனுஷன். எனக்கு மனுஷத் தன்மைதான் ரொம்பத் தேவை. நான் வரேன்'' துண்டை உதறித் தோளில் போட்டபடி, வெளியே இறங்கி நடந்துவிட்டார் அவர்.

# 44

**கோ**தையம்மாள் மெத்த அதிர்ச்சிக்கு உள்ளாகி விட்டிருந்தது என்னவோ உண்மைதான். எதிர்பாராத பூபதியின் முடிவு அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த போராட்டங்கள் யாவற்றையும் கொஞ்சம்கொஞ்சமாக அறிய வந்தபோது அவள் மனம் கரைந்து போனாள்.

கூடத்துப் பாயின்மீது உறங்கிக் கொண்டிருந்த குழந்தை கார்த்திக்கின் மூக்கும், சாயலும் அச்சாக பூபதியே உறங்குவது போன்ற பிரமிப்பு. அருகில் அமர்ந்திருந்த தாராவைப்பார்த்தவளது நெஞ்சை யாரோ கசக்கிப் பிழிவது போன்ற ஒரு வேதனை.

"இந்தப் பெண்ணுக்கு ஏன் இப்படி ஒரு துயரம் சம்பவிக்க வேண்டும்? அத்துடன் மட்டுமா? வீட்டை விட்டு வெளியே துரத்தும் அளவிற்கு, இந்தப் பெண் செய்த பாவம் என்ன? பூபதி போன்ற நல்லதொரு பண்பாளரின் மனைவியாக வாழ்ந்ததற்காகவா!'' பலவாறு எண்ணி மனம் குமுறினாள்.

அருண் மிக்க அவசரமாக அன்று ஒருநாள் தாராவுடனும் கார்த்திக்குடனும் வந்து நின்ற காட்சி நினைப்புக்கு வந்தது.

மாலை நான்கு மணியளவில் வாயில் பக்கம் ஆட்டோ ஒலி கேட்ட கோதை எட்டிப் பார்த்தாள் வியப்புடன். தாரா, குழந்தை சகிதம் இறங்கிக் கொண்டிருந்தான் அருண்.

வியப்புடன் நின்றாள் கோதை

Vennila

"அம்மா! இவங்களுக்கு ஒரு இடம் தேடறவரை, இவங்க நம்ம கூட இருக்கட்டும்னு அழைச்சிட்டு வந்திட்டேன்" அவனது குரலில் மன்னிப்பு கேட்கும் தோரணை இருந்தது.

உள்ளே வரத் தயங்கியபடி நின்ற தாராவை ஆதரவுடன் தோளைப் பற்றி "வாம்மா இது உன் வீடுன்னு நினைச்சுக் கொள்ளு" என்றாள் கோதை.

அதுகாறும் அடக்கி வைத்திருந்த துயரம் வெடிக்க, "என்னை அனாதையாக்கிட்டு அவர் போயட்டாரும்மா. எனக்கு ஏன் இந்த சோதனை?" துயருடன் அரற்றினாள் தாரா.

"நீ அனாதைன்னு யார் சொன்னது? அருண் தம்பி இருக்கான். நான் உன் அம்மான்னு நினைச்சுக்க!" அவளது கண்களைத் துடைத்தாள் அன்புடன். கார்த்திக்கை ஆசையுடன் அணைத்துக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள்.

நீலகண்டனும், குமாரும் சாப்பாட்டிற்கு வந்துவிடுவார்கள் என்ற அவசரத்தைவிட, தாராவும், கார்த்திக்கும் பசியாலும், மனச் சோர்வாலும் வாடுவார்களே என்ற அனுதாபம் அவளை உந்தியது. சமையலில் தாராவும் உதவ சமையலை முடித்து வெளியே வந்தாள் கோதை.

இதற்குள் கைவண்டி ஒன்றில் சாமான்களை எடுத்துவந்து விட்டிருந்தான் அருண். "அம்மா! தற்போதைக்கு நம்ம வீட்டில இவங்க சாமான்களை வச்சுக் கொள்ளணும்" என்றவன் தாராவின் நிலையை எடுத்துரைத்தான்.

"என்ன அநியாயம்? நல்ல குணம் படைத்த மனிதரை அந்தம்மாள் பிடுங்கிக் கொள்ளப் பார்த்தாங்க. ஆனால், ஆண்டவன் அவர் உயிரையே எடுத்துக்கிட்டார். இதில் தண்டனை யாருக்கு? பாவம் தாராவுக்குத்



தானே? அந்த உத்தமமான மனிதரோட முகத்தைக் கடைசியா பார்க்கக் கூட விடலையே அந்தம்மாள். குப்புசாமி போல நல்ல மனசுள்ளவங்க சொல்லாட்டி, இப்ப நடுத்தெருவில நிக்கும் படியாகிப் போயிருக்குமே! நினைக்கவே உடம்பு நடுங்குதே, நல்லகாலம் நீ கூட்டிக்கிட்டு வந்தே. இங்கேயே இருக்கட்டும் பிறகு நல்ல இடமாகப் பாத்து பக்கத்திலயே குடி வச்சிடலாம் என்றாள் படபடப்புடன்.

குழந்தை கார்த்திக்கின் மனதில் தந்தையைப் பிரிந்த ஏக்கம் நிறையவே இருந்தது. "இந்தக் குழந்தையைக் கடவுள் ஏன் அதன் தந்தையிடமிருந்து குரூரமாகப் பிரிக்க வேண்டும்?" மனதினுள் எண்ணமிட்டவளாய் கோதை கார்த்திக்குக்குச் சோறு ஊட்டினாள்.

தாரா கொணர்ந்திருந்த வீட்டு சாமான்கள், இரு பெரிய பெட்டிகளில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. கூடத்தின் ஒரு மூலையில் அவற்றை ஒதுக்கினாள் கோதை.

அடுத்த அரை மணிக்குள் கார்த்திக்கை தூங்கச் செய்துவிட்டு, கூடத்தில் இரவுச் சாப்பாட்டிற்கு ஆயத்தம் செய்யலானாள்.

அருண் வழக்கம் போல் குளித்து, மாற்றுடை அணிந்தான் கூடத்து அலமாரிக்குள்ளிருந்த தந்தையின் புகைப் படத்தை வணங்கியவன் மனதில் ஒரு குமுறல்.

பலவான் கைகளை மட்டும்தான் உபயோகிக்கிறான். அறிவாளி மூளையை உபயோகிக்கிறான். பலமும், அறிவும் மட்டும் இருந்துவிட்டால் போதுமா? வசுந்தரா அம்மாள் பணபலமும், அறிவுத் திறமையும் கொண்டவர் தான். இருப்பினும் கருணையற்ற கடினமான இதயம் படைத்தவர். குறிப்பாக, நிக்[illegible] நிற்தும் தா[illegible]ன்

Vennila

மீது விஷத்தைக் கக்கும் கொடிய நாகம் போன்று சீறுபவர் என உணர்ந்தபோது பதைத்துப் போனாள்.

கணவனை இழந்து கைம்மை அடைந்தபோதும் கூட மனம் தளராத தாரா, அவனைப் பார்த்ததும் எப்படி உடைந்து போனாள்?

''தம்பி! என் நிலையைப் பார்த்தீங்களா?'' என்ற படி விம்மி அழ ஆரம்பித்தாள்.

''கவலைப்படாதீங்க. முதல்ல ரங்கம்மாளோட வாடகைக் கணக்கை தீர்த்துட்டு, சாமான்களைக் கட்டிக்கிட்டு புறப்படுங்க.''

தாரா திகைத்துப் போனாள். ''எங்கே?''

''நம்ம வீட்டுக்கு. உங்களைப் பாத்தா அம்மா, சமாதானமா இருப்பாங்க. பூபதி ஐயா திடீர்னு இறந்தது முதல் ஒரு நல்ல மனுஷரை இழந்துட்டோம்னு புலம்பிட் டிருக்காங்க.'' அவன் முடிக்கு முன் தாரா கூறினாள் நிதானமாக.

''தம்பி நான் அவரை இழக்கவே இல்லை. அவரை என் நெஞ்சுக்குள்ளர சொந்தமாக்கிட்டேன். பிறகு எப்படி என் இதயம் அவரை இழக்க முடியும்?'' கண்ணீர் வழிந்து அவள் கன்னங்களை நனைத்தது.

மிக்க மதிப்புடன் தாராவைப் பார்த்தான் அவன். தாரா ஒரு உயர்ந்த பெண்மணி. பூபதிக்கு ஏற்ற உத்தம மனைவியாக மட்டுமல்ல, உறுதி நிறைந்த பெண்மணி யும் கூட. அதனால்தான் இத்தனை துயர்களையும் தாங்கும் இதயத்தை அவளுக்கு இறைவன் அளித்திருக் கிறான் போலும்!

ரங்கம்மாளின் தொல்லையைவிட, அருணின் வீட் டில் தங்கியபடி வேறு இடம் பார்ப்பது நல்லது என்று முடிவு செய்தாள் தாரா. எனவே, மறுபேச்சின்றி,



சாமான்களை இரு பெரிய பெட்டிகளில் நிரப்பினாள். ரங்கம்மாளுக்குத் தரவேண்டிய வீட்டு வாடகை, மின் கட்டணம் ஆகியவற்றைக் கணக்குத் தீர்த்து, வீட்டை ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டு விட்டாள்.

உள்ளூர ஒரு சிறு தயக்கம் அருணின் தாயார் என்ன சொல்வார்களோ என்ற அச்சம். ஆனால் கோதை யம்மாள் இரட்டிப்பு சந்தோஷத்துடன் கரம் நீட்டி வர வேற்றபோது அவள் நிம்மதியடைந்தாள்.

''சாப்பிட வரலையா அருண், பசிக்குமே?'' கோதை மகனை அழைத்தாள்.

அருண் வேகமாக வந்து தாயின் அருகில் அமர்ந்த வன் அவளையே பாத்தான்.

''நீ என்ன சொல்லப் போகிறேன்னு எனக்குப் புரியுது'' மெல்லச் சிரித்தாள் கோதை.

''என்னோட அம்மாவுக்கு என்னைப் பத்தித் தெரியாம இருக்குமா? சொல்லுங்க'' மகன் கொஞ்ச லாகக் கூறினான்.

''தாராவும், கார்த்திக்கும் நம்ம கூட இருக்கட்டும். நீலகண்டன் அண்ணனும் குமாரும் வேற எடம் பார்த்துக்கட்டும்''னு சொல்ல வரே!''

விக்கித்துப் போனான் அருண். 'அம்மா!' மேலே பேச முடியாதபடி அவன் தடுமாறினான்.

''எதுக்கும் கவலைப்படாதே. நானே பக்குவமா எடுத்துச் சொல்லி அவங்களுக்கு வேற எடம் பார்க்கச் சொல்றேன். குமாருக்கு வேலை கிடைக்கும் போல இருக்குன்னாரு உங்க அண்ணன். அதனால எல்லாம் நல்லபடியா முடியும்!'' என்றாள் கோதை.

மகனின் மனமறிந்து நடக்கும் தாய் அவள். அவனது உயர்ந்த நல்லெண்ணங்களுக்கு மதிப்புத் தராமல் இருப்பாளா?

Vennila

தாரா அலுவலகத்திற்குப் புறப்படு முன் மகனை அவனது பள்ளி செல்லும் பஸ்சில் ஏற்றி விடுவாள். பிறகு அலுவலகம் செல்வதை வழக்கப்படுத்தி இருந்தாள். மாலை வீடு திரும்பியதும், குழந்தையிடம் பள்ளிப் பாடங்களைப் பற்றிக் கேட்பாள். உதவி செய்வாள். பொழுதும் அமைதியாகப் போயிற்று.

இதே போல அன்றும் கூடத்துப் பாயின்மீது சுருண்டு கொண்டிருந்தான் குழந்தை கார்த்திக். சிறிது நேர இருட்டிற்குப் பின்னர், வீடு திரும்பிய நீலகண்டன் வியப்புடன் கார்த்திக்கைப் பார்த்தார்.

"யார் பையன்?" அறியும் ஆவல் உந்த அவர் கேட்டார்.

கோதையம்மாள் சட்டெனப் பதிலிறுத்தாள். அவனும் அவன் அம்மாவும் நம்மளோட இருக்கப் போறாங்க. புருஷனை இழந்த பொண்ணு. வேற எங்க போவா? என்னைப் போல அவளும் தவிச்சுப் போகாம இருக்கட்டும்னு இங்கே அழைச்சிட்டு வந்திட்டான் அருண்!"

நீலகண்டனுக்கு நிலைமையை நாசூக்காக உணர்த்தி விட்டாள் கோதை அம்மாள். மகனுடன் அன்று என்ன பேசினாரோ தெரியாது. மறுநாளே அவர்கள் வேறு லாட்ஜில் இடம் பார்த்துக் கொண்டு போய் விட்டார்கள்.

"என்னாலதான் அவங்களுக்குக் கஷ்டம். தாரா வருந்தியபோது, "அவங்க புறப்பட்டுப் போனது எனக்கு இஷ்டம்" என்றான் அருண்.

கூடத்து சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் மணி ஆறு காட்டியது. கோதை சட்டென எழுந்தாள்.

"அருண் தம்பி ஏன் இவ்வளவு நேரமாகுது இன்னும் வரலே?" கவலையுடன் வாயிற் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள் கோதை.



அருண் வேகமாக வருவதைக் கண்டதும் சிறிது நிம்மதி அடைந்தவளாய் திரும்பினாள். கையில் பிஸ்கட் பொட்டலத்தைத் தாங்கியபடி உள்ளே வந்தான். இன்னைக்கி ஆபீஸ்ல நேரமாயிட்டுது. குழந்தை அதுக்குள்ளார தூங்கிட்டானா" கேட்டபடி, தாயிடம் பிஸ்கட் பொட்டலத்தைக் கொடுத்தான்.

"ஆமாம் தம்பி. அலுப்பா தூங்கிட்டுது. ஆபீஸ்ல வேலை அதிகமா உனக்கு?"

"வேலைன்னு இல்லே. எங்க முதலாளி அம்மாவை அகில உலக வியாபார மாநாட்டுக்கு அழைச்சிருக்காங்க. அடுத்த மாசம் போகணுமாம். ஆபீசே அமர்க்களப்படுது. அதான் நேரமாயிட்டுது!" அவன் வேகமாகக் குளியலறைப் பக்கம் சென்றான்.

என்ன வேடிக்கையான உலகம்? ஒருத்திக்கு இடி மேல் இடி! மற்றொருத்திக்கு வாழ்வுக்கு மேல் வாழ்வு! கசப்பும் வெறுப்புமாகக் கோதை உள்பக்கம் சென்றாள்.

சிறிது நேரத்தில் சாப்பிட அமர்ந்த மூவரும் எதுவும் பேசாமல் அவரவர் நினைப்பிலேயே இருந்தனர். திடும்மென அங்கு நிலவிய அமைதி, நெஞ்சை இறுக்குவது போல உணர்ந்தான் அருண்.

தொண்டையைச் செருமியபடி, "பூபதி ஐயா புகைப் படம் இருந்தா குடுங்க. அதை பெரிசாக்கி மாட்டி வைக்கணும். என்னோட சின்ன கோரிக்கை" என்றான் தாராவை நோக்கி.

"நிச்சயமா தரேன். அதே போல எனக்கும் ஒரு வேண்டுகோள்" தயக்கமாக ஆரம்பித்தாள் தாரா.

"நீங்க சொல்லுங்க, கட்டாயம் நிறைவேத்தி வைக்கிறேன்" உணர்ச்சியினால் கரகரத்தது அவன் குரல்.

Vennila

"எனக்குன்னு தனியா ஒரு சின்னக் குடிசை வேணும். அதைத் தேடிக் குடுத்திட்டா..." விம்மலை அடக்க முயன்று தலையைக்குனிந்து கொண்டாள் தாரா.

"தயவு செஞ்சு இனி கண்ணீர் சிந்தாதீங்க. நீங்க பட்ட துயரமெல்லாம் போதும். இனிமேல் கார்த்திக்கின் நல்வாழ்விற்காக நீங்களும் நல்லபடியா இருக்க வேணாமா?" அருண் உருக்கமாகக் கேட்டான்.

"தாரா! நானும் கஷ்டப்பட்டு முன்னேறினவள். இத்தனைக்கும் எனக்கு உன்னைப் போல படிப்பு, அறிவு எதுவுமே இருக்கலே. உழைக்க இரண்டு கைகள் உடம்பில் ஒரு பலம் இதுதான் துணையா இருந்திச்சு. அதனால, இது போல சந்தர்ப்பங்கள்லே, பெண்கள் மனசை இழக்கக் கூடாது. அழுதாலும் அரிசிப் பானையில் கை இடணுமே என்பாங்க. அதனால, நீ துணிவோட வாழணும்மா" என்றாள், கோதை பரிவுடன்.

தாரா கண்களைத் துடைத்துக் கொண்டாள். அது சமயம் வேகமாக யாரோ வாயிற் கதவைத் தட்டும் ஒலி கேட்டது. அருண் பாதி சாப்பாட்டில் எழுந்து சென்று கதவைத் திறந்தவன் திடுக்கிட்டுப் போனான்.

குப்புசாமி சம்யுக்தாவுடன் நின்றிருந்தார்.

"முதல்ல பாப்பாவை உள்ளே கூட்டிக்கிட்டுப் போங்க தம்பி, பிறகு விவரம் பேசுவோம்" என்று படபடத்தார்.

## 45

காலைக் கதிரவனின் ஒளி மெல்லப் படர்ந்து முன்னறை ஜன்னல் அருகே விழுந்து கொண்டிருந்தது. வசுந்தரா அலங்கிய கூந்தலும், கசங்கிய சேலையுமாக சோபாவின் மீது சாய்ந்திருந்தாள். அவளது நிழலாகத் தொடர்ந்து கொண்டே நிற்கும் ரத்னாவிற்கே மிக்க அதிசயமாக இருந்தது எஜமானியின் தோற்றம்.

—குழப்பத்துடன் உள்பக்கம் சென்றாள்.

பங்களா முழுதும் நிசப்தமாக இருந்தது. தனிமை இனிமை தரும் என்று சொன்னானமே எவனோ ஒருத்தன்? தனிமை கொடுமையாகவல்லவா இருக்கிறது. வசுந்தரா, சோர்வுடன் கையிலிருந்த கடிதத்தை மீண்டும் உற்றுப் பார்த்தாள்.

அம்மா!

உங்கள் அந்தஸ்து, அதிகாரம் இவற்றிற்கு ஏற்ற மகளாக என்னால் வாழ இயலவில்லை. என் மனத்திற்குப் பிடித்தமானவரை, நானே தேடிச் சென்று மணந்து கொள்வதாக முடிவு எடுத்துவிட்டேன், மன்னிக்கவும்.

உங்கள் மகள்,

சம்யுக்தா.

வசுந்தராவின் கண்களிலிருந்து நீர் பெருகியது. எந்த மகளுக்காக அவள் வாழ்க்கையில் போராடி வெற்றி கண்டாளோ, அதே மகள் அவளை உதறிவிட்டு

Vennila

வீட்டை விட்டு வெளியேறி விட்டாள். அதிலும், சொல்லாமல் கொள்ளாமல்?

ஏன்? எதனால் இப்படி நிகழ்ந்தது? அவள் எங்கே தவறு செய்தாள்? முதன் முறையாக வசுந்தரா தான் செய்த தவறுகளைப் பற்றிச் சிந்திக்கத் துவங்கினாள்.

பெரிய வியாபார நிபுணர். அந்தத் துறையில் பிரபலமாக வேண்டும் என்ற புகழ். அத்தகைய புகழுக்குப் பேராசைப்பட்டதில், அவள் தாய் என்ற தகுதியில் ஏழையாகி விட்டாளா?

முதல் நாள் சம்பவம் நினைப்புக்கு வந்தது. அலுவலகத்திலும், தொழிற்சாலையிலும் அன்று வசுந்தராவிற்கு நிறைய வேலைகள் இருந்தன. அவளை அகில உலக வியாபாரிகள் மகாநாட்டிற்கு, வெளிநாட்டிலிருந்து அழைப்பு வந்தது குறித்து ஏகப்பட்ட புகழ் உரைகள், தொலைபேசி பாராட்டுக்கள்.

வக்கீலைக் கூப்பிட்டு, சட்டப்படி சொத்து விவகாரங்களை, சம்யுக்தாவின் பெயருக்கு மாற்றும்படி கேட்டுக் கொண்டாள். ரங்கம்மாளின் வீட்டை கிரயம் செய்த ஆனந்தம் கோதண்டத்திற்கு. அந்த வெற்றி மிதப்பில் அதிலும் தாராவை வெளியேற்றம் செய்த எக்களிப்பில் அவர் தலையை ஆட்டிக் கொண்டிருந்தார்.

காரியதரிசி, அவள் வெளிநாடு செல்ல வேண்டிய விவரங்களை மடமடவெனக் கவனிக்கத் துவங்கினார். பாஸ்போர்ட், விசா, அவள் செல்ல வேண்டிய இடங்கள், சந்திக்க வேண்டிய மனிதர்கள் ஆகிய பல விஷயங்களைத் தயாரித்தார்.

சம்யுக்தாவை இது சமயம் தனியே விடுவது நல்லதல்ல என்று வசுந்தராவின் மனத்தின் ஒரு மூலையில் சிறு உறுத்தல்.



'கூடவே அவளையும் அழைத்துப் போய்விட்டால்? வீட்டைக் கவனிக்க ரத்னா இருக்கவே இருக்கிறாள்'— வசுந்தராவிற்கு யோசனை பளிச்சிட்டது.

சம்யுக்தாவின் பாஸ்போர்ட், விசா ஆகியவற்றைத் தயார் செய்யும்படி உத்திரவிட்டு விட்டு, காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

நுங்கம்பாக்கம் அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டு சிறிது தூரம் சென்றவளது கண்களில் அந்தக் காட்சி தென்பட்டது.

பஸ் நிலையம் ஒன்றின் அருகே, குப்புசாமியும் சம்யுக்தாவும் பேசிக் கொண்டு நிற்பதைப் பார்த்தவளது முகம் கோபத்தால் சூடேறியது.

"என்ன தைரியம்? வேலையைத் தூக்கி எறிந்து விட்டுப் போன இந்தக் கிழவன் மீண்டும், அவள் மகளை வளைத்துப் போட முனைகிறாரா? சதா பாப்பா, பாப்பா என்று பேசி, சம்யுக்தாவை சிறு குழந்தையாகவே ஆக்கிவிட்டாரா?"

கோபத்துடன் பற்களைக் கடித்தாள்.

'வழியில் இறங்கி அதட்டினால், நாலு பேரின் நகைப்பிற்கு இடமாகிவிடும். வீட்டுக்கு வரட்டும், சம்யுக்தாவை விசாரிப்போம்' மனதிற்குக் கடிவாளம் இட்டபடி வீடுபோய்ச் சேர்ந்தாள்.

குப்புசாமி இல்லாததால் ரத்னாவே அவரது வேலையை ஏற்றுக்கொண்டிருந்தாள். வழியில் கண்ட சம்பவத்தின் பாதிப்பினால், வசுந்தராவிற்கு அவள் தந்த காப்பி கூட ரசிக்கவில்லை.

"சம்யுக்தா வந்தா என் அறைக்கு வரச்சொல்லு!" கடுமையாகக் கூறிவிட்டுத் தன் அறைக்குள் புலிபோல் உலவிக் கொண்டிருந்தாள்.

Vennila

இலேசா கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த மகளை முறைத்துப் பார்த்தாள் வசுந்தரா.

"நான் ஐரோப்பா 'டூர்' போறேன்னு தெரிஞ்சிருக்கும்"

மகள் தலையை அசைத்தாள்.

"உன்னையும் கூடக் கூட்டிக்கிட்டுப் போகணும்னு தீர்மானிச்சிட்டேன், அதனால, நீயும் தயாராகிடு."

மகள் திடுக்கிட்டு "நானா? ஊஹூம். நான் வரலே" என்றதும், வசுந்தராவின் பொறுமை எகிறிப்போயிற்று.

"ஏன் வரமாட்டேன்னு எனக்குத் தெரியும். நீ அந்த குப்புசாமிக் கிழவனைப் பிடிச்சு, அந்த அருண் வீட்டைத் தேடிப் போகப் பாக்கறே. அதுக்கு நான் விடமாட்டேன்" உறுமினாள் சினத்துடன்.

"நான் மேஜரான பெண். என்னையோ என் விருப்பத்தையோ நீங்கள் பலவந்தப்படுத்த முடியாது. குப்புசாமித் தாத்தாவிடம் நான் குழந்தை முதல் பழகினவ. அவரைத் தற்செயலா பஸ் நிலையத்துல பார்த்துப் பேசினேன்" என்றவள், வசுந்தராவை நெருங்கி வந்தாள்.

"அம்மா! எனக்கு ஒரு தம்பி இருக்கான் என்றோ, எங்க சித்தியை நீங்க அவமானப் படுத்தி, அல்லல் படுத்தி ஒரு வீட்டை விட்டே விரட்டனீங்கன்னோ தெரியாமப் போயிடுச்சு. நீங்க பெரிய வியாபார மேதையா இருக்கலாம். ஆனா, மனுஷத் தன்மையோட இல்லைன்னு நினைக்கும் போது" சம்யுக்தாவின் குரல் தழுதழுத்தது.

"நிறுத்து! நீ ரொம்பவே பேசக் கத்துக்கிட்டிருக்கே. எது செய்தாலும், அதெல்லாம் உன் நன்மைக்காகத்



தான். உன் வாழ்வுக்காகத்தான் செய்தேன்னு உனக்குப் புரியுமா?" வசுந்தரா சீறினாள்.

"எது நன்மை? அப்பாவை பத்தி மூடி மறைச்சு, உங்க அதிகாரத்திலேயே என்னை வளர்த்தீங்களே அதுவா? தாரா சித்தியை, அப்பாவோட முகத்தைக் கூடப் பார்க்க விடாம துரத்தியடிச்சீங்களே அதுவா? கடைசியா அந்த சித்தியையும், தம்பியையும் அவங்க இருந்த வீட்டை விட்டே துரத்த ஏற்பாடு செய்தீங்களே அதுவா? அம்மா! என் வாழ்வுக்காக ஒரு நிராதரவான பெண்மணியோட வாழ்வை அழிச்சா, எனக்கு வாழ்வு கிடைக்காதும்மா. நரகம்தான் கிடைக்கும்."

"சம்யுக்தா!" உரக்கக் கத்தினாள் வசுந்தரா.

"நான் சொன்னபடி என்னுடன் நீ புறப்படறே. டிக்கட் வாங்க ஏற்பாடு செய்யத்தான் போறேன். எனக்கு உன்னோட உபதேசம் தேவையே இல்லை. இனி அந்த குப்புசாமி தாத்தா விலாசம் தேடிப் போனே...?"

சம்யுக்தாவின் குரல் உயர்ந்தது.

"நிறுத்துங்க! குப்புசாமி தாத்தா ஏழை. சமையல் செய்பவர். ஆனால் என்ன? அவர் மனசாலே பணக்காரர். என்னோட அருணும் உயர்ந்தவர்தான். குப்புசாமித் தாத்தாவைக் கூட்டிக்கிட்டு அருண் வீட்டுக்குப் போய் அவங்கம்மா சம்மதத்தோட கல்யாணம் செய்துக்கப்போறேன். நான் பொய் சொல்ல விரும்பல. அவ்வளவுதான்."

"அப்பா என் சம்மதம் உனக்குத் துச்சம். அப்படித் தானே?' ஆத்திரப்பட்டாள் தாய்.

"உங்க சம்மதம் கிடைக்காதுன்னு தெரிஞ்ச பிறகு அதை வீணிலே முயல்வானேன்?"



Vennila

சம்யுக்தா சட்டெனக் கீழே இறங்கிப் போனாள். வசுந்தரா மனம் உடைந்து போனவளாய் வாய்விட்டு அழலானாள்.

சிறிது நேரத்தில் கண்களைத் துடைத்துக் கொண்டு முகத்தைக் கழுவி சீர்திருத்தியபடி, வெளியே வந்தாள் வசுந்தரா.

"அம்மா! இந்தக் கடுதாசியை உங்ககிட்டக் குடுக்கச் சொல்லிட்டு, என்ன சொல்லியும் கேக்காம சம்யுக்தா வெளியே போயிருக்காங்கம்மா" ரத்னா பதட்டமாகக் கையில் ஒரு சிறு கடிதத் துண்டுடன் ஓடி வந்தாள்.

வசுந்தராவின் மனதில் எரிமலை வெடித்துச் சிதறியது. அவள் அரும்பாடுபட்டு வளர்த்து ஆளாக்கிய மகள் அவளுக்கே எதிரியாக மாறியது ஏன்? ஏன்? இரவு முழுதும் அழுதபடி படுக்கையில் புரண்டாள். அவள் மனதினுள் ஒருவித இரைச்சல் ஒலங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அவளைப் பூதம் போல் பயமுறுத்திய தனிமையில் அவள் பொடிப்பொடியாகிக் கொண்டிருந்தாள்.

"இனி உனக்கு யார் இருக்கிறார்கள்? யார்?"

"ஆபீசுக்கு நேரமாகுதேம்மா. ஒண்ணுமே சாப்பிடலீங்க!" ரத்னா மெல்ல உபசரித்தாள்.

வசுந்தரா அவளை உறுத்துப் பார்த்துவிட்டு, "எனக்கு பசியில்லே. நீ சாப்பிட்டுக்க" என்றபடி எழுந்தாள். இனி அவள் செய்யவேண்டியது என்ன?

வசுந்தரா தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். பெரிய வீடு, சோபா போன்ற ஆடம்பர அலங்கார வாழ்க்கை இத்தனையும் யாருக்காக?



'ஒ'வென்று தலை விரித்து ஆடும் பேயைப் போல, வெறுமை அவளை அச்சுறுத்தியது.

"உனக்குத் தேவை பணம், புகழ், பதவிதானே எடுத்துக்கொள். பிறரைக் கேவலப்படுத்து! அடிமைப் படுத்து!"—மனதில் ஏதோ ஒன்று கூக்குரல் இட்டது. வசுந்தரா பொறிகலங்கிப் போனாள்.

சூன்யமாகத் தென்பட்ட பங்களா, களையிழந்து போன அறைகள். 'சம்யுக்தா" அவள் மனதினுள் அரற்றலானாள். அவளது அலங்காரம், மமதை யாவும் மகளின் அன்பிற்கு முன் சிதைந்து உருக்குலைந்து போகத் துவங்கின. புதிய சிந்தனைகள் முளை விட்டன.

பாவம் செய்துவிட்டேனே? என் மகள்மீது அன்பிற்குப் பதில் அதிகாரத்தை செலுத்தி அவளது பாசத்தை இழந்து விட்டேனே? மகளை நினைத்துக் குமுறினாள்.

வசுந்தரா மன உளைச்சலுடன் அலுவலகத்திற்குத் தயாரானாள். அவளது மனப் போராட்டங்களை அடக்கிக் கொண்டு, அன்றைய வேலைகளை அவள் செய்தே ஆக வேண்டுமே! புறப்படுமுன் அவள் ஒரு விதமான முடிவிற்கு வந்திருந்தாள்.

அன்று மாலை படகு போன்ற கார் ஒன்று மிகுந்த சிரமத்துடன் வாயிலில் வந்து நிற்பதைக் கண்ணுற்ற கோதை அரண்டு போனாள்.

தாராவிற்கு வீடு தேடித் தரும் பொருட்டு அருண் விடுப்பு எடுத்திருந்தான். அத்துடன் சம்யுக்தாவும், குப்புசாமியும் அங்கே வந்து சேர்ந்திருந்தனர்.

குப்புசாமி, சற்றுத் தள்ளி ஒரு லாட்ஜ் அறையில் தங்கி இருந்தார்.

Vennila

"தம்பி! பாப்பா ஒரே பிடிவாதமாக உங்களை நாடி வந்திருக்கு. என்ன எதிர்ப்பு வந்தாலும் கைவிட மாட்டேன்னு சத்தியம் செய்யுங்க" என்று உறுதிமொழி வாங்கிய பிறகே, அவளை உள்ளே அழைத்துச் சென்றார் குப்புசாமி. கோதையம்மாள் அதற்குமேல் மறுத்துப் பேச இயலாமல் போயிற்று.

"திருமணம் பேசி முடிக்கிற வரை சம்யுக்தா என்னோடு இருக்கட்டும்" என்று தாரா பரிந்து பேசினாள். அருணுக்கு வீடு பார்க்கும் வேலை தீவிரமாகியது.

அன்று அலைந்து திரிந்து களைப்புடன் வீடு திரும்பிய அருணும் அவசரமாக எட்டிப் பார்த்தான். கூடத்தில் பேசிக் கொண்டிருந்த தாரா, சம்யுக்தா, குப்புசாமி யாவரும் கூடவே பின்னால் வந்தவர்கள் அனைவரும் பிரமித்துப் போனார்கள்.

வசுந்தரா நிதானமாக காரினின்றும் இறங்கி வீட்டை ஒருமுறை நோட்டம் விட்டாள். பிறகு சரியான வீடு என்ற கணிப்புடன் உள்ளே படி ஏறி வந்தாள். முகத்தில் ஒருவித தீர்மானம் குடி கொண்டிருந்தது.

"என்னை அனுப்பிடாதீங்க அருண்!" நடுக்கத்துடன் அவன் கைகளை அவளையும் அறியாமல் பற்றிக் கொண்டாள் சம்யுக்தா. அவள் உடல் அச்சத்தால் குலுங்கியது.

"இவள் இங்கேயும் வந்து விட்டாளே" பீதியுடன் கோதையிடம் ஒண்டிக் கொண்டாள் தாரா.

"ஏன் அப்படியே நின்னுட்டீங்க. எல்லாரும் என்னை உள்ளே கூப்பிட மாட்டீங்களா என்ன?" கேட்டபடியே வசுந்தரா உள்ளே வந்தாள். கூடத்துச் சுவரில் அப்போதுதான் மாட்டப்பட்டிருந்த பூபதியின் பெரிய



புகைப்படத்தைப் பார்த்ததும் அவள் கண்களில் நீர் சுரிந்தது.

"தவறுகளிலேயே வாழ்ந்து பேயாக மாறிப் போனேன். இப்ப நான் செய்த பாவங்களுக்கு மன்னிப்புக் கேக்க வந்திருக்கேன். தயவு செஞ்சு எனக்குப் பரிகாரம் செய்து ஆசி கூறுங்க" அவள் மனம் பச்சாதாபத்தால் உருகியது.

"யாரும்மா இவங்க? அன்னைக்கி ஒரு நாள் பாத்தமே" குழந்தை கார்த்திக், உள்ளே ஓடிவந்தவன் கேட்டான்.

பயத்தினால் உறைந்து போனவர்களுக்கு ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது. குழந்தையை வாரி எடுத்த வசுந்தரா "நான்தாண்டா உன் பெரியம்மா. நான் வெளியூர் போறேன்னு சொல்லிட்டுப் போக வந்தேன்" என்றவள் அவனை மார்போடு அணைத்து, இருகன்னங்களிலும் முத்தமிட்டாள்.

வசுந்தரா என்ற ஆணவம் மிகுந்த பெண்மணிக்குள்ளும், ஒரு அன்பான தாயின் இதயம் இருக்கிறது என்பதை சம்யுக்தா உணர்ந்தாள்.

"அம்மா!" என்று கேவியபடி, தாயைக் கட்டிக் கொண்டு அழத் துவங்கினாள்.

"சம்யுக்தா அழாதே! அன்புக்கு முன்னால் நான் தோத்துப் போய்ட்டேன். எல்லாமே உன் விருப்பப்படி நடக்கும். நீ வா" என்றவள் "தம்பி அருண் இங்கே வா" என்றாள். கூச்சத்துடன் அவன் அருகில் வந்ததும், "என் மகளை மட்டுமல்ல, என் தொழில் நிர்வாகத்தையும் உன் கையில ஒப்படைக்கத் தீர்மானம் செய்திட்டேன்" என்றாள், கண்களில் நீர் துளிர்க்க.

Vennila

தாரா மிகுந்த கவலையுடன் யாவரையும் பார்த்தாள். வசுந்தரா கார்த்திக்கை அணைத்தபடி அவளிடம் சென்றாள்.

"தாரா! நடந்ததையெல்லாம் மறந்துவிடு. ரங்கம்மாளின் வீட்டை நான் வாங்கியது, சம்யுக்தா திருமணமாகி குடும்பம் நடத்த. நீயும், நானும் நமது வீட்டில் இருப்போம். சம்மதமா?"

"தன் காதுகளையே நம்ப முடியாதவளாய் "என்ன சொல்றீங்க?" என்று தடுமாறினாள்.

"நான் இனி அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போக நேரும். வீட்டை நிர்வகிக்கறது உன் பொறுப்பு. என்ன நினைக்கிறே? நான் எப்படி மனசு மாறிப் போனேன் என்றா? இதோ இவனைப் பார்த்துத்தான். அப்படியே அப்பா சாயல். அதே மூக்கு, சாயல் எல்லாமே... அச்சு... அவரே என் எதிரே வந்து நிக்கறது போல இருந்திச்சு.

"சம்யுக்தாவை, குழந்தையா கையில நான் ஏந்தின போது ஒரு மலரைச் சுமந்த மகிழ்ச்சி இருந்தது. அதே உணர்ச்சி, அவரோட மகனைச் சுமந்தபோது என் உள்ளத்திலே ஏற்பட்டுது. இந்த இரண்டாவது மலரை, வச்சு வாடாம காப்பாத்த வேண்டியது என் கடமைன்னு தீர்மானிச்சேன். நற்குணம் படைச்ச அவரோட எனக்கு வாழத் தெரியலே. இப்ப அவரது சாயலை உரிச்சுகிட்டு வந்திருக்கிற இந்தக் குழந்தையோட வாழற பாக்கியத்தையாவது எனக்குத் தருவியா தாரா?" வசுந்தரா விம்மியபடி கேட்டாள்.



"அவருக்காக நான் எதையும் செய்வேன் அக்கா. நீங்க மனதைத் தளர விடாதீங்கோ" என்ற தாரா மன நெகிழ்வுடன் வசுந்தராவின் தோளைப் பற்றிக் கொண்டாள்.

"திருஷ்டி சுத்திப் போடுங்கோ, போடுங்கோ" குப்புசாமி உற்சாகமாகக் கத்தினார். சிரிப்பு ஒலி அங்கு படர்ந்தது.

முற்றும்

Vennila